சமூக அறிவியல் வகுப்பு-IX











State Council for Educational Research and Training, Telangana, Hyderabad






தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு

சமூக அறிவியல் IX

# Social Studies


## CLASS IX

## சமூக அறிவியல்

வகுப்பு -IX

(TAMIL MEDIUM)

Free



வெளியீடு

தெலங்கானா மாநில அரசு, ஐதராபாத்



தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு



# Our National Flag

The Indian National Flag is the symbol of the land and people of India. Our National Flag is a tricolour panel made up of three rectangular panels or sub-panels of equal widths. The colour of the top panel is India saffron (*Kesaria*) and that of the bottom is India green. The middle panel is white, bearing at its centre the design of the Ashoka Chakra in navy blue colour with 24 equally spaced spokes. The Ashoka Chakra is visible on both sides of the Flag in the centre of the white panel. The Flag is rectangular in shape with the ratio of the length to the height (width) being 3:2.

Dr. S. Radhakrishnan explained about the National Flag in the Constituent Assembly which adopted it, "Bhagwa or the saffron colour denotes renunciation or disinterestedness. The white in the centre is light, the path of truth to guide our conduct. The green shows our relation to the soil, our relation to the plant life here on which all other life depends. The Ashoka Wheel is the wheel of the law of dharma. Truth or *satya*, dharma or virtue ought to be the controlling principles of those who work under this flag. Again, the wheel denotes motion. There is life in movement. India must move and go forward."

If done properly, there is no restriction on the display of the National Flag by common people, private organizations or educational institutions. Consistent with the dignity and honour of the Flag as detailed in the Flag Code of India, anyone may hoist/ display the National Flag on all days and occasions, ceremonial or otherwise.

Where the practice is to fly the Flag on any public building, it must be flown on the building on all days including Sundays and holidays and, except as provided in the Code, it shall be flown from sunrise to sunset irrespective of weather conditions. The Flag may be flown on such a building at night also but this should be only on very special occasions.

The Flag must not be used as a drapery in any form except in State/ Military/ Central Paramilitary Forces funerals. In such cases also the Flag must not be lowered into the grave or burnt in the pyre. The Flag must not be draped over the hood, top, sides or back of a vehicle, train or boat. It must not be used or stored in such a manner as may damage or soil it. When the Flag is in a damaged or soiled condition, it must not be cast aside or disrespectfully disposed of but be destroyed as a whole in private, preferably by burning. The Flag must not be used as a covering for a building. Although the Flag can be used as a costume or uniform, it should not be used as undergarments or below the waist. It must not be embroidered or printed upon cushions, napkins, etc. Lettering of any kind must not be put upon the Flag. It must not be used in any form of advertisement. Showing disrespect or insult to the National Flag is a punishable offence.

The National Flag must not be flown from a single masthead simultaneously with any other flag. There must be separate mastheads for different flags. The flag mast should be in white colour. When a foreign dignitary travels in a car provided by Government, the National Flag is flown on the right side of the car and the Flag of the foreign countries on the left side of the car.

In the event of the death of the President, the Vice-President or the Prime Minister, the National Flag is half-masted throughout the country.

Over the last five decades, several people including members of the armed forces have laid down their lives to keep the tricolour flying in its full glory. We must salute and cherish our National Flag.


Now your bank notes in a new design

RBI issues ₹2000 & ₹500 notes in a new series





**Distinctive features of the new ₹500 and ₹2000 notes:**

**₹2000:**

**Size:** 66mm x 166 mm | **Colour:** Magenta

**Theme:** Motif of Mangalyan depicting country's first venture into interplanetary space

**For visually impaired :**

i) Horizontal rectangle with ₹2000 in raised print on the right

ii) 7 angular bleed lines on left and right side in raised print

**₹500:**

**Size:** 66mm x 150mm | **Colour:** Stone grey

**Theme:** Indian heritage site – Red Fort

**For visually impaired :**

i) Circle with ₹500 in raised print on the right

ii) 5 angular bleed lines on left and right side in raised print

**Common features of the new ₹500 and ₹2000 notes:**

**Obverse:**

1 See through register in denominational numeral
2 Latent image of the denominational numeral
3 Denominational numeral in Devnagari
4 Orientation and relative position of Mahatma Gandhi portrait changed
5 Windowed security thread changes colour from green to blue when note is tilted
6 Guarantee clause, Governor's signature with Promise Clause and RBI emblem shifted towards right
7 Portrait and electrotype watermark
8 Number panel with numerals growing from small to big on the top left side and bottom right side
9 Denomination in numerals with Rupee symbol in colour changing ink (green to blue) on bottom right
10 Ashok pillar emblem on the right

**For visually impaired**

Intaglio or raised printing of Mahatma Gandhi portrait, Ashoka pillar emblem, bleed lines and identification mark continue

**Reverse :**

11 Year of printing of the note on left
12 Swacch Bharat logo with slogan
13 Language panel towards centre
14 Denominational numeral in Devnagari on right

New design notes in other denominations will follow

For more details visit: www.paisaboltahai.rbi.org.in
email: publicquery@rbi.org.in | Call: 022-22602201/22602944

Issued in public interest by

भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
www.rbi.org.in


SCERT TELANGANA

# சமூக அறிவியல்

## ஒன்பதாம் வகுப்பு

## SOCIAL STUDIES CLASS IX

### (TAMIL MEDIUM)

### தொகுப்பாளர்கள்

**திரு,C.N. சுப்ரமணியம்,**
ஏகலவ்யா, M.P.

**பேராசிரியர். G. ஓம்கார்நாத்,**
பொருளாதாரத்துறை ,
ஐதராபாத் பல்கலைக்கழகம்,
ஐதராபாத்.

**பேராசிரியர். I.லட்சுமி**
வரலாற்றுத்துறை,
உஸ்மானியா பல்கலைக்கழகம்,
ஐதராபாத்.

**டாக்டர். K. நாராயண ரெட்டி,** உதவி பேராசிரியர்,
புவியியல் துறை, O.U, ஐதராபாத்.

**டாக்டர். M.V. சீனிவாசன்,**உதவி பேராசிரியர்,
DESSH, NCERT,புதுடெல்லி.

**திரு K. சுரேஷ்,**
சிறந்த புத்தக நிறுவனம், ஐதராபாத்.

**பேராசிரியர். S. பத்மஜா,** புவியியல் துறை,
உஸ்மானியா பல்கலைக்கழகம், ஐதராபாத்.

**பேராசிரியர். I.திருமலை** வரலாற்றுத்துறை,
டெல்லி பல்கலைக்கழகம் , புதுடெல்லி

**திரு.அரவிந்த் சர்தானா,** ஏகலவ்யா, M.P.

**பேராசிரியர். பிரபா பந்த்,** பொருளாதாரத்துறை ,
முதுகலைக் கல்லூரி, செகந்திராபாத், ஐதராபாத்.

**பேராசிரியர். K.விஜய பாபு,** வரலாற்றுத்துறை,
காகதீயா பல்கலைக்கழகம், வரங்கல்.

**திருமதி சுகண்யா போஸ்,**உதவி பேராசிரியர்
NIPFP, புதுடெல்லி

**டாக்டர்.N.சந்த்ராயுடு,** உதவி பேராசிரியர்,
புவியியல் துறை, S.V.பல்கலைக்கழகம், திருப்பதி

**திரு அலெக்ஸ். M.ஜியார்ஜ்,**
ஏகலவ்யா, M.P.

### பாடப்புத்தக வளர்ச்சிக் குழு

**திரு A. சத்திய நாராயண ரெட்டி,**
இயக்குநர்,
S.C.E.R.T. , ஐதராபாத்.

**திரு B. சுதாகர்,** இயக்குநர்,
அரசு பாடப் புத்தக பதிப்பகம்,
ஐதராபாத்.

**டாக்டர். N. உபேந்தர் ரெட்டி,**
பேராசிரியர் & Head C&T Dept.,
S.C.E.R.T., ஐதராபாத்.

**தெலங்கானா மாநில அரசு வெளியீடு, ஐதராபாத்.**

கல்வியால் முன்னேறு
பணிவாக நடந்துக்கொள்

சட்டத்தை மதித்து நட
உரிமையை பெறு

SCERT TELANGANA

© Government of Telangana, Hyderabad.

*First Published 2013*

*New Impressions 2014,2015,2016,2017,2018,2019,2020*

All rights reserved.

No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means without the prior permission in writing of the publisher, nor be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this condition being imposed on the subsequent purchaser.

The copy right holder of this book is the Director of School Education, Hyderabad,Telangana.
We have used some photographs which are under creative common licence. They are acknowledged at later (page viii).

This Book has been printed on 70 G.S.M. S.S. Maplitho, Title Page 200 G.S.M. White Art Card

தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2020-21

SCERT TELANGANA

---

*Printed in India*
at the Telangana Govt. Text Book Press,
Mint Compound, Hyderabad,
Telangana.

## எழுத்தாளர்கள்

**டாக்டர்.N.சந்திராயுடு,** உதவி பேராசிரியர்,புவியியல் துறை, S.V.பல்கலைக்கழகம், திருப்பதி
**திரு M.நரசிம்ம ரெட்டி,** GHM, ZPHS .பெத்தஜங்கம்பல்லி, Y.S.R.கடப்பா.
**திரு K. சுப்பிரமணியம்,** விரிவுரையாளர்DIET,. கர்னூல்.
**திரு T. ரவீந்தர்,** விரிவுரையாளர் DIET, வரங்கல்.
**டாக்டர். கணபதி,** S.A. ZPHS .லாடல்லா, வரங்கல்.
**திரு A.லக்ஷமன் ராவ்,** S.A. GHS .தங்கர்வாடி, கரிம்நகர்.
**திரு குமார சுவாமி,** S.A. ZPHS .தௌடேபல்லி, அதிலாபாத்.
**திரு U.ஆனந்த குமார்,** S.A. ZPHS .சுஜாதா நகர்,கம்மம்.
**டாக்டர்.B.V.N.சுவாமி,** S.A, GHS.உஜுராபாத், கரிம்நகர்.
**திரு சீனிவாச ராவ்,** S.A. MPUPS P.R.பல்லி,.டெக்கலி,.ஸ்ரீகாகுளம்.
**திரு P.V. கிருஷ்ணா ராவ்,** LFL HM, P.S.மோகல்லா, .எல்லன்டு, கம்மம்.
**திரு T.வெங்கடைய்யா,** S.A, ZPHS எகுவவேடி, .சித்தூர்,
**திரு P. சீனிவாசுலு,** S.A, ZPHS .ஹவேலி கன்பூர்,மெதக்.
**திருP.ஜகன் மோகன் ரெட்டி,** S.AZPHS பிட்சேடு,கஜ்வெல், மெதக்.
**திரு. A.ரவீந்தர்,** S.A, GHS ஒருஸ், வரங்கல்.
**திரு N. சுப்பிரமணியம்,** S.A , ZPHS டங்குடூர் , நெல்லூர்.
**திருமதி B. மரியா ராணி,** S.A. M.P.U.P.S .சிலுகாநகர், ரங்காரெட்டி

## ஒருங்கிணைப்பாளர்கள்

**திரு M. பாபையா,** விரிவுரையாளர்,SCERT, ஐதராபாத்
**திரு M.நரசிம்ம ரெட்டி,** GHM, ZPHS .பெத்தஜங்கம்பல்லி, Y.S.R.கடப்பா.
**டாக்டர். கணபதி,** S.A. ZPHS .லாடல்லா, வரங்கல்.
**திரு A.லக்ஷமன் ராவ்,** S.A. GHS .தங்கர்வாடி, கரிம்நகர்.
**திரு குமார சுவாமி,** S.A. ZPHS .தௌடேபல்லி, அதிலாபாத்.
**திரு U.ஆனந்த குமார்,** S.A. ZPHS .சுஜாதா நகர்,கம்மம்.
**திருP.ஜகன் மோகன் ரெட்டி,** S.AZPHS பிட்சேடு,கஜ்வெல், மெதக்.

## ஓவியர்

**திரு K.சீனிவாஸ்,** GHM.
ZPHS, கருமேடு,நல்கொண்டா.

## வடிவமைத்தவர்

**K.சுரேஷ் பாபு**
மன மீடியா கிராபிக்ஸ், ஐதராபாத்.

## தமிழாக்கம்

**ஒருங்கிணைப்பாளர்** திரு. **கே.சிட்டிபாபு,** முதல்வர், DIET கார்வேட்நகர், சித்தூர் மாவட்டம், ஆ.பி.
**மேற்பார்வையாளர்** திரு. **பி.எஸ். தங்கமணி,** விரிவுரையாளர், DIET கார்வேட்நகர், சித்தூர் மாவட்டம்,
**தொகுப்பாளர்** திரு. **டி. ஜான் டல்லஸ்,** SA (S.S), ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர்
**மொழிபெயர்ப்பாளர்கள்**
திரு. **ஆர்.எ.ஏழுமலை,** SA (S.S), ஓய்வு,, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி
திரு. **இ.ஜி.சதாசிவம்,** SA (ஆங்கிலம்) ZPHS, ஏகாம்பரகுப்பம், நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.
திரு. **எஸ்.என்.ஆறுமுகம்,** SA (ஆங்கிலம்) ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.
திரு. **டி. ராஜசேகரன்,** SA (S.S), ZPHS, சிந்தலபட்டடை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி

SCERT TELANGANA

# மாணவர்களுக்கு ஓர் கடிதம்

"நாள் முழுவதும் வயலிலும், வீட்டிலும் வேலை செய்த களைப்பில் ஓய்வெடுக்கும் தம் தாயைப் பார்த்து, பெண்களுக்கு ஏன் இவ்வளவு கஷ்டம் என மனம் வருந்தினேன். சமுதாயத்திலும் பல்வேறு இன மக்களைக் கண்டபோது அவர்களிடையே நிகழும் மொழி, கலாசாரம், பழக்கவழக்கங்கள் போன்ற வேறுபாடுகளைக் கண்டு வியந்தேன்."

"நம் நாட்டு விவசாயிகளின் தன்னம்பிக்கையற்ற நிலையை செய்தித்தாளில் படித்தேன். நகர் புறங்களில் பெரிய கட்டிடங்கள், சாலைகள், கோவில்களைக் கண்டு வியந்தேன். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான குடிசைப்பகுதிகளையும் கண்டேன். அழகிய கட்டிடங்கள் இருக்கின்றபோது ஏன் குடிசைகள் அதிகமாக உள்ளன?"

"பெரியோர்கள் வாக்குரிமை, தேர்தல் முறை, நம்மை ஆளும் தலைவர்கள் ஆகியவற்றைப் பற்றி கலந்துரையாடுவார்கள். இவற்றைக் கேட்டு நான் ஆச்சரியம் அடைந்தேன். அக்காலத்தில் புனிதர்களும், கடவுள்களும் அரசர்களோடும் மக்களோடும் ஒன்றாக வாழ்ந்தனர் என்பதை கேட்டு ஆச்சரியப்பட்டேன்."

"என்னுடைய மனதில் பல வினாக்கள் எழுகின்றன. என்னுடைய சந்தேகங்களுக்கு யாராவது பதில் கூறுவார்களா? நான் எவ்வாறு என்னுடைய சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வது? யார் எனக்கு உதவுவர்?"

அன்பார்ந்த நண்பர்களே,

உன்னுடைய மனதில் எழுந்த வினாக்களைப் போல் அனைவருடைய மனதிலும் பல சந்தேகங்கள் எழுகின்றன. இவ்வினாக்களுக்கும் விடை கூறுவது கடினம். இவ்வினாக்களுக்கு பல்வேறு மனிதர்கள் பல்வேறு விதமாக விடை அளிப்பர். சமூக அறிவியல் பாடத்தைப் புரிந்துகொண்டால் உன்னுடைய வினாக்களுக்கு ஓரளவு விடைக்கிட்டும். கல்லூரிகளில் பெண்கள் குறைவாக இருக்க காரணம் என்ன? எனக் கேட்டால் ஒவ்வொருவரும் ஒரு பதிலைக் கூறுவர். குடிசைப்பகுதிகள் ஏன் அசுத்தமாக உள்ளன? எனும் வினாவிற்கும் பல பதில்கள் கிடைக்கும். இவற்றிற்கு சமூக அறிவியல் பாடங்கள் பதிலளிக்கும்.

சமூக அறிவியல் பல்வேறு நிலைகளில் உள்ள வேறுபாடுகளுக்கும் வேற்றுமைகளுக்கும் பதிலளிக்கிறது. இவ்வுலகம் பல மாற்றங்களை கண்டு வருகிறது. இவற்றிற்கேற்ப மக்களும் மாறவேண்டும். கல்லூரிகளில் அக்காலத்தில் குறைவான பெண்கள் இருந்தனர். தற்போது அதிகரித்துள்ளது. பெற்றோர்கள் பெண் குழந்தைகளை கல்லூரிகளுக்கு ஏன் அனுப்புவது கிடையாது? சமூக அறிவியல் பல வினாக்களுக்கு பதிலளிக்கும்.

பதிப்பாசிரியர்



SCERT TELANGANA

இந்நூலைப் பற்றி

இந்நூல் இன்றையச் சமுதாயம் மற்றும் அதனைச் சுற்றி நடைபெறும் பல செயல்களைப் பற்றி எடுத்துரைக்கின்றது. இது கலைத்திட்டத்தின் ஒரு சிறு பகுதியே. நீ அறிந்ததை வகுப்பறையில் கலந்துரையாட இந்நூல் உதவுகிறது. சந்தை, பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி, கோயில்கள், அருங்காட்சியகங்கள் பற்றி நீயும் உனது நண்பர்களும் அறிய இந்நூல் துணைபுரிகிறது. விவசாயிகள், கடைக்காரர்கள், அலுவலர்கள், சாமியார்கள் ஆகியோரைப் பற்றியும் இந்நூல் உதவுகிறது.

இந்நூல் மூலம் ஒரு புதிய புதிரை எதிர்நோக்கி, பகுத்தாய்ந்து அதற்கு ஒரு முடிவை அறியவும் முடிகிறது. இதில் பதில்கள் நேரடியாக வழங்கப்பட்டிருக்காது. நாமே பதிலை கலந்துரையாடி அறிய வேண்டும். நீயும், உனது நண்பர்களும், ஆசிரியரும் வகுப்பறையில் கலந்துரையாடியப் பிறகு இந்நூலின் முடிவை அறிய முடியும். இந்நூலில் உள்ள பதில்கள் உனக்கு திருப்தியளிக்காவிடினும், கவலை வேண்டாம். உன்னுடைய பதிலையும் அதற்கான காரணத்தையும் வழங்கலாம். உனது நண்பர்கள் ஒத்து போகாவிடினும் அவர்கள் புரியும்படி நீ விவரிக்கவும். உனது பதில் சரியாகும் வரை, தொடர்ந்து உனது பதிலுக்காக பிறருடன் கலந்துரையாடு. சரியான பதிலை பெற, உனது நண்பர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரை அணுகவும்.

நிலத்தோற்றத்தின் வேறுபாடுகள், காலநிலைகள், சுற்றுப்புறம், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அதனை பெற மக்கள் பன்படும் வாழ்க்கைமுறை, மக்களின் தேவைகள், சமத்துவம், வழிபடும் முறைகள், உலகப் புகழ் பெற்ற புரட்சிகள், தொழிற்புரட்சிகள், பல நாடுகளில் மொழி வேற்றுமைகள், இன வேற்றுமைகள், பல கண்டங்களில் காலனி நாடுகளின் ஆக்கிரமிப்புகள், கச்சாப்பொருட்களின் சுரண்டல், பெண்கள் பாதுகாப்புச் சட்டங்கள், மக்களின் உரிமைகள், பேரிடர் குறித்த அறிவியல் நுட்பங்கள் மற்றும் போக்குவரத்து கல்வி ஆகியவற்றைப் பற்றி இந்நூல் விவரமாக எடுத்துரைக்கின்றது.

மேற்கூறியவற்றைப் பற்றி அதிகம் அறிய பிற நூல்களான பூமியின் தோற்றம், பீடபூமிகள், மலைகள், கடல்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மனித இனத்தைப் பற்றியும் நாம் அறிந்திருக்க வேண்டும். மேலும் பல்வேறுபட்ட மனித இன வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.

இந்நூலைப்பற்றி புரிந்து கொள்ள முயலும்போது, வகுப்பறையில் உனக்கு பல வினாக்கள் எழும். ஆசிரியரிடம் அவ்வினாக்களை கேட்டு உனது சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளுங்கள். மேலும் சந்தேகங்கள் தீர்க்கப்படும். பிற நண்பர்களின் பதில்கள் மூலம் உனது சந்தேகம் நிவர்த்தியாகும்.

இந்நூலின் ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்கள் செய்வதற்கான செயல்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை செய்து முடிக்க பல நாட்கள் தேவைப்படும் பாடக்கருத்தை அதிகம் அறிந்துகொள்ள இச்செயல்திட்டங்கள் பெரிதும் உதவும். இது உனது நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும்.

இந்நூலில் உள்ள பாடங்களைப் பற்றி நீ மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை. ஆனால் கருத்துக்களை ஆழமாக புரிந்து கொண்டு வினாவிற்கு பதிலளிக்கவும். உனது சொந்தக் கருத்தை விவரிக்கவும்.

இயக்குநர்,
SCERT,
ஐதராபாத்.

SCERT TELANGANA

**இந்நூலை பயன்படுத்துதலும் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு குறிப்புகளும்**

- இந்நூலை உருவாக்க கலைத்திட்ட ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றியுள்ளோம். உயர்நிலைப்பள்ளிகளில் பின்பற்றப்பட்ட வேண்டிய ஒழுக்க அணுகுமுறை மத்திய மற்றும் மாநிலக் கல்விக் கொள்கையால் வழங்கப்பட்டுள்ளது.
- பள்ளிகளில் வரலாறு, பொருளாதாரம், குடிமையியல், மற்றும் புவியியல் பற்றி கற்பிக்கப்படுகிறது. இந்நூலில் ஆறு வகை கருத்துகளில் கற்பிக்கப்படுகின்றன.
- சமூக அறிவியல் பாடநூலை வகுப்பறையில் படித்து, அதிலுள்ள பாடக்கருத்தை பிற மாணவர்களுடன் கலந்துரையாடி பாடப்பொருளை சிறப்புற கற்க முனைதல் வேண்டும்.
- **பாடநூலின் மொழுத்திறன்:** மாணவர்கள் புரிந்துக்கொள்ளும் பொருட்டு எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இருப்பினும், சில வார்த்தைகளுக்கு விளக்கம் தேவைப்படுகிறது. பாடப்பொருளை புரிந்துக்கொள்ள பல எடுத்துக்காட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் தலைப்பிற்கு ஏற்ற துணைத் தலைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.
- இந்நூல் பல வகைகளில் எழுதப்பட்டுள்ளன. பாடம் 9-ல் அமான் மற்றும் சரிதாவைப் பற்றி உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இது உண்மைச் சம்பவத்தின் எடுத்துக்காட்டுகளாகும். பாடம் 6-ல் நிலக்கரிச் சுரங்கத்தைப் பற்றிய தனி ஆய்வு அறிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளன. பாடம் 14-ல் சட்டத்தை உருவாக்குபவர்களைப் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.
- **பாடநூலின் இடையிலும் இறுதியிலும் வினாக்கள்:** பாடநூலின் இடையில் பல வினாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இது கற்பித்தல் முறைகளின் ஒருங்கிணைந்த செயலாகும். இதில் பல வேறுபட்ட வினாக்கள் உள்ளன. வினாக்களுக்கேற்ற பதிலை உருவாக்கவும், மதிப்பிடவும் பாடக்கருத்தை ஆழ்ந்து படித்தறிதல் அவசியம். பதில்களை ஆசிரியர் முழுவதுமாக கூறாமல், மாணவர்களே கூறவும் எழுதவும்.

பாடநூலில் பல்வேறு வகை வினாக்கள் உள்ளன.

1. மாணவர்களின் அனுபவத்தை எழுதக் கூறுதல்.
2. அவர்களுடைய அனுபவத்தை பாடநூலில் உள்ள அனுபவத்துடன் ஒப்பிடுதல்.
3. பாடநூலில் வழங்கப்பட்டுள்ள பல நிகழச்சிகளை ஒப்பிடுதல்.
4. பல நிகழ்ச்சிகள் மற்றும் ஆய்வுகளைப் பற்றி மாணவர்களிடம் வினா எழுப்புதல்.

( ஒவ்வொரு மாணவனையும் அவனுடைய கருத்தை கூறச்செய்தல்)

- மாணவர்கள் வினாக்களை எழுப்ப ஆசிரியர் பல முறைகளை கையாளுவார். சில பதில்கள் குறிப்பு புத்தகத்தில் எழுத வேண்டும், சிலவற்றை மாணவர் குழுவிலும், சிலவற்றை மாணவர் அனைவரிடத்திலும் கலந்துரையடவேண்டும்.மாணவன் தன்னுடைய சுய மொழி நடையில் இலக்கணப் பிழையின்றி எழுத உதவ வேண்டும். அனைவரும் ஒரே வகையில் எழுத கூற வேண்டாம்.
- ஒவ்வொரு பாடத்திலும் உனக்குத் தெரியுமா? என்றும், சில கட்டங்களில் அதிக அளவு விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி வகுப்பறையில்

SCERT TELANGANA

கலந்துரையாடவும். அவற்றைப் பற்றி செயல்களையும் வழங்குங்கள். ஆனால், தொகுப்பு மதிப்பீடு செய்ய வினாக்களை கேட்காதீர்கள்.

- **பாடநூலில் படங்கள்:** பழைய பாடநூலில் குறைந்த அளவு படங்களே இருந்தன. ஆனால், இப்பாடநூலில் மாணவர்கள் அதிகம் புரிந்துக் கொள்ள பல படங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிலப்படங்களுக்கு விளக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறே, தேசியத் தலைவர்களின் படங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில், புகைப்படங்கள், கோட்டுப்படங்கள், செய்திப்படங்கள், வரைப்படங்கள், கேலிச்சித்திரங்கள் ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன். இப்படங்கள் பல வரலாற்று நூல்களிலிருந்து எடுக்கப்பட்டதால், பல்வேறு வகைப்பட்ட படங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- **வரைப்படங்கள் அட்டவணைகள் மற்றும் கோட்டுவரை படங்கள்:** இந்நூலில் உள்ள வரைபடங்கள் புவியியல், பொருளாதாரம், அரசியல் மற்றும் வரலாறு ஆகிய பிரிவுகளுக்கு தொடர்புடையதாகும். பாடக்கருத்தை ஈடுபாடுடன் கற்க, இப்படங்கள் மாணவர்களுக்கு பெரிதும் துணைபுரியும்.
- **செயல் திட்டங்கள்:** இந்நூலில் பல செயல்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை செய்துமுடிப்பது எளிதாகும். பாடநூலை விளக்கி கூறுவது கடினம். செயல்திட்டங்கள் மூலம் விளக்குவது எளிது. செயல்திட்டத்தால் மாணவர்கள் சமூகம், மக்கள் தொடர்பான செய்திகள் மற்றும் பிற செய்திகளை சேகரித்து பாடப்பொருளை அறிய முடிகிறது. நேர்காணலுக்கான வினாக்கள் சேகரித்தல், வங்கியின் செயல்பாடு, தகவல்களை சேகரித்து வழங்குதல் போன்றவை அனைத்தும் சமூக அறிவியலின் திறனை வெளிப்படுத்த உதவும். இச்செயல்களால் மாணவர்கள் குழுவுடன் இணைந்து மகிழ்ச்சியுடனும் ஈடுபாடுடனும் பாடச் பொருளை கற்க முனைவர்.

## ஏற்றுக்கொள்ளல்

ஆந்திர மாநில மனித உரிமைகள் கல்வி, ஒருங்கிணைப்பாளர் திரு.கே. ஜோதி, மருத்துவ பயிற்சியாளர் டாக்டர். திரு. ரமணி, அத்கூரி, பெங்களூரின் திரு.வெளினா முராரி, மஞ்சி புஸ்தகம் எனும் அமைப்பின் திருமதி கே. பாக்கியலட்சுமி டில்லி, ஜே.என்.யூ.வின் பேராசிரியர் எம்.எஸ்.எஸ். பாண்டியன், பேராசிரியர் இ.சிவநாகி ரெட்டி, சதபதி, ஆந்திர மாநில தொல்பொருள் மற்றும் அருங்காட்சியகத்துறை மத்திய நூல்நிலைய இயக்குநர் ஆகியோர் இந்நூலை உருவாக்க நேரடியாகவும் மறைமுகமாகவும் துணைபுரிந்து பல தகவல்களையும் புகைப் படங்களையும் வழங்கியதற்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.

SCERT TELANGANA




## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

### முன்னுரை

இந்தியாவின் மக்களாகிய நாங்கள், இந்தியாவை முழு உரிமை கொண்ட, சோஷியலிச, மதச்சார்பற்ற, மக்களாட்சி குடியரசாக அமைக்க உள்ளார்வமுடன் அனைத்து குடிமக்களுக்கும்;

நீதி : சமூக பொருளாதார அரசியல்

சுதந்திரம் : எண்ணம், வெளிப்படுத்துதல், நம்பிக்கை வழிபாடு.

சமத்துவம் : வாய்ப்பு, நிலை மற்றும் அனைவரிடமும் ஏற்படுத்துதல்.

சகோதரத்துவம் : தனிமனிதரிடம் ஏற்படுத்துதல் மற்றும் தேச ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதலுக்காக நம்முடைய அரசியலமைப்பு சட்டத்தின் 1949 நவம்பர், 26-ஆம் நாளாகிய இன்று, இதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை ஏற்று, சட்டமியற்றி, எங்களுக்கு நாங்களே அளித்துக் கொள்கின்றோம்.

**இந்தியர்கள் அனைவரும் சமுதாய நிலையிலும் வாய்ப்பிலும் சமத்துவத்தை பெற வேண்டும் என இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.**

SCERT TELANGANA

## பொருளடக்கம்


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் | மாதம் |
|---|---|---|---|
| | **பகுதி 1 : பூமியின் இயற்கை தோற்றங்கள் மற்றும் பொருளாதாரம்** | | |
| 1. | நமது பூமி | 1-13 | ஜூன் |
| 2. | பூமியின் இயற்கை தோற்றங்கள் | 14-26 | ஜூலை |
| 3. | நீர்க் கோளம் | 27-35 | ஜூலை |
| 4. | வளி மண்டலம் | 36-50 | ஆகஸ்ட் |
| 5. | வாழ்க்கைச் சிக்கல்கள் | 51-58 | செப்டம்பர் |
| 6. | விவசாய வளர்ச்சி | 59-74 | செப்டம்பர் |
| 7. | இந்தியாவில் தொழில் வளர்ச்சி | 75-96 | நவம்பர் |
| 8. | இந்தியாவில் சேவை செயற்பாடுகள் | 97-104 | டிசம்பர் |
| 9. | நிதிஅமைப்பு முறைகளும் கடன்களும் | 105-117 | டிசம்பர் |
| 10. | விலைவாசிகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் | 118-129 | பிப்ரவரி |
| 11. | அரசாங்கத்தின் வரவுசெலவு திட்டமும் வரிவிதிப்பும் | 130-145 | பிப்ரவரி |
| | **பகுதி 2 : மத்திய காலம் முதல் நவீன காலம் வரை உலகம்** | | |
| 12. | 17,18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் மக்களாட்சிக்கான புரட்சிகளும், தேசிய புரட்சிகளும் | 146-166 | ஜூலை |
| 13. | தொழில்மயமும் சமூக மாற்றமும் | 167-180 | ஆகஸ்ட் |
| 14. | சமூதாய எதிர்ப்பு இயக்கங்கள் | 181-188 | ஆகஸ்ட் |
| 15. | இலத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் காலனி ஆதிக்கம் | 189-203 | செப்டம்பர் |
| 16. | இந்தியாவில் காலனி ஆதிக்கத்தின் தாக்கம் | 204-217 | அக்டோபர் |
| 17. | மக்களாட்சியின் பரவல் | 218-228 | நவம்பர் |
| 18. | மக்களாட்சி புதிய கருத்து | 229-239 | நவம்பர் |
| 19. | மனித உரிமைகளும், அடிப்படை உரிமைகளும் | 240-252 | டிசம்பர் |
| 20. | பெண்களின் உரிமைகள், பாதுகாப்புச் சட்டங்கள் | 253-261 | ஜனவரி |
| 21. | பேரிடர் மேலாண்மை | 262-270 | ஜனவரி |
| 22. | போக்குவரத்துக் கல்வி | 271-277 | பிப்ரவரி |
| | **திருப்புதல் மற்றும் ஆண்டுத்தேர்வு** | | மார்ச் |
| | | | |
| | | | |


SCERT TELANGANA

# தேசிய கீதம்

– இரவீந்திரநாத் தாகூர்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்த் குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

# உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள்.

என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன். விலங்குகளிடத்தில் கருணை காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலே நான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'

SCERT TELANGANA

பாடம்
1

# நமது பூமி



படம் 1.1: நமது வீடாக கருதப்படும் இச்சிறிய மஞ்சள் வட்ட வடிவத்தின் மீது மனித இன வரலாறு தோன்றியது என கார்ல்சாகன் எனும் விஞ்ஞானி குறிப்பிட்டுள்ளார்

நாம் மில்லியன் கணக்கான விலங்குகள், தாவரங்கள் மற்றும் நுண்ணுயிரிகளுடன் இணைந்து பூமியின் மீது வாழ்கிறோம். மனித இனம் பூமியில் சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. விலங்கினத்தைவிட மனித இனம், பூமியை வாழ்வதற்கு மிகச் சிறந்த ஓர் இடமாக மாற்ற முயற்சி செய்து வருகிறது. நாம் நம்மையும் நமது சுற்றுப்புறங்களையும் தொடர்ந்து மாற்ற முயற்சி செய்து வருகிறோம். இச் செயல் முறையில் பூமியிலுள்ள பிற உயிர்களுடனும் நமக்குள் நாமும் போட்டியிட்டு வருகிறோம். ஆனால், அனைத்திற்கும் மேலாக, நாம் பூமியைக் பற்றியும் நம்முடைய செம்மையான வாழ்விற்கான நம் செயற்பாடுகளைப் பற்றியும் புரிந்துகொள்ள முயன்றோம். நீண்டகாலமாக, நம் விருப்பத்திற்கேற்ப பயன்படுத்தும் வளங்களின் சேமிப்புக்கிடங்காக பூமியைக் கருதி வந்தோம். படிப்படியாக, இக்கருத்து முட்டாள் தனமானது என்பதை உணர்ந்து வருகிறோம். நாம் பூமியை அலட்சியத்துடன் பயன்படுத்துவதால், காடுகள், ஆறுகள், குன்றுகள், விலங்குகள் மற்றும் நம் மனித இனம் கூட அழிந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சுற்றுச்சூழல் சீர்கேடுகளான உலகம் வெப்பமயமாதல், மண்கள் நச்சுத்தன்மையாக மாறுதல், நீர் மற்றும் காற்று மாசடைதல் போன்றவை ஏற்பட்டுள்ளன. இன்று பூமியைப் பற்றிய ஒரு புதிய புரிந்துகொள்ளுதலை உருவாக்கிக் கொள்ள வேண்டிய அவசரநிலை ஏற்பட்டுள்ளது. அது எவ்வாறு செயல்படுகிறது. நாம் அதன் மீது என்ன செய்கிறோம், நாம் ஒருவருக்கொருவர் என்ன செய்துக்கொள்கிறோம் போன்றவற்றை அறிய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

6 முதல் 8ஆம் வகுப்புகள் வரை வேறுபட்ட காலங்களில், பல்வேறு வகையான நிலங்களில் வெவ்வேறு வகையான மக்கள் வாழ்வதைக் குறித்து படித்தீர்கள். மேலும் காடுகளையும், மண்களையும், நீரையும் மற்றும் பூமியிலுள்ள தாதுப்பொருட்களைப்பற்றியும் படித்தீர்கள். பின்வரும் மூன்று பாடங்களில் ஒரு பெரிய உள் இணைக்கப்பட்ட அமைப்பாக பூமி எவ்வாறு திகழ்கிறது என்பதைக் குறித்தும், பாறைகள், மண்கள், தாதுப்பொருட்கள், நீரோட்டங்கள், காற்று, சூரியன் ஒளிருதல், காடுகள் மற்றும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்புகொள்கின்றனர் என்றும் தொடர்ந்து ஒன்றுக்கொன்று எவ்வாறு மாறிவருகிறது என்பதையும் காண்போம்.

SCERT TELANGANA

## நமது பேரண்டம், சூரியன் மற்றும் பூமி

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, மனிதர்கள் வானத்தை உற்றுநோக்கி வருகின்றனர். அதில் ஒளிரும் பொருட்களைக் குறித்து புரிந்துகொள்ள முயன்று வருகின்றனர். வானில் நட்சத்திரங்கள் எதிரெதிரே ஒரே இடத்தில் பொருந்தியிருப்பதையும் சூரியன், சந்திரன் மற்றும் கோள்கள் வானில் சுற்றிக்கொண்டிருப்பதையும் புரிந்துக்கொள்ள முயன்று வருகின்றனர். எந்த வகையில் இவைகள் நமக்கு தொடர்பு உடையவை? அவை நம் வாழ்வில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? பலர் இவைகளை மிகவும் கவனமாக ஆராய்ந்து, வானில் நிகழும் அனைத்து இயக்கங்களையும் நிகழ்வுகளையும் குறித்துக்கொண்டு, அவற்றை எண்ணமுயன்று, அவை எவ்வாறு சுற்றுகின்றன என்பதையும், செயல்படுகின்றன என்பதையும் அறிய முயன்றனர். முதலில் மக்கள் பூமி ஒரு நிலையான பொருள் என்றும் அது நகருவதில்லை என்றும் அனைத்து கோள்களும் இதனைச் சுற்றி வருகின்றன என்றும் நினைத்தனர். வானில் கோள்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இதே போல் இருப்பதால் அவர்கள் பூமியும், விண்மீன்களும், சூரியனும் எப்போதும் இதேபோல் இருந்தன என்றும், மாற்றம் ஏதுமின்றி இதேபோல் எப்போதும் இருக்கும் என்றும் கருதினர். சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் அறிவியலறிஞர்கள் ஒரு புதிய புரிந்துகொள்ளுதலுடன் பேரண்டத்தை ஆராயத் தொடங்கினர். பூமியானது அனைத்திற்கும் நடுவில் இல்லை என்றும் அது உண்மையில் சூரியனைச் சுற்றி வருகிறது என்றும் சூரியனும் சுழல்கிறது என்றும் வானின் எண்ணற்ற விண்மீன்கள் உண்மையில் பல சூரியன்களே என்றும் புதிய சிந்தனைகளை கூறினர். கடந்த நூறாண்டுகளுக்கும் மேலான காலங்களின் போது விண்மீன்கள் பிறப்பதையும் அவை பழமையடைவதையும், மறைந்துவிடுவதையும் கூட குறிப்பிட்டு வருகின்றனர்.


அறிவியலறிஞர்கள் விண்மீன்கள் உண்மையிலேயே விண்மீன் கூட்டங்கள் என்னும் பெரிய குழுக்களின் ஒருபாகமாகும் என்பதை அறிவித்தனர். மேலும் பேரண்டத்தில் மில்லியன் கணக்கில் விண்மீன் கூட்டங்கள் இருப்பதாகவும் கூறினர். தற்போது பேரண்டமானது 13.7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரிய வெடிப்புடன் தொடங்கப்பட்டது என்றும், பல பில்லியன் ஆண்டுகளுக்குப் பின் அது முடிவுக்கு வரும் என்றும் கருதுகின்றனர்.

இதிலிருந்து முதலில் விண்மீன் கூட்டங்களும், பிறகு அவற்றிற்குள் பல விண்மீன்களும், விண்மீன்களைச் சுற்றி கோள்களும் தோன்றி, கோள்கள் விண்மீன்களைச் சுற்றி வருவதாகவும் நாம் அறிகிறோம். நம் வாழ்வில் நம்மைச் சுற்றியுள்ள பல பொருட்கள் வேகமாக இயங்குகின்றன. ஒவ்வொரு வினாடியும் அவை மாறுகின்றன. எனினும் இந்த வானியல் மாற்றங்கள் ஆயிரக்கணக்கான மற்றும் மில்லியன் கணக்கான ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

இன்று மனிதர்கள் இந்த மிகவும் சிக்கலான இயற்கையான செயல்முறைகளை ஆராய்ந்து அவற்றை புரிந்துக்கொள்ள முயன்று வருகின்றனர். இவற்றையெல்லாம் கற்றறிய பல விண்கலங்கள் விண்ணில் செலுத்தப்பட்டு வருகின்றன. மனிதர்கள் சந்திரனிலும் கூட தரை இறங்கிவிட்டனர். விண்கலங்கள் செவ்வாய் கோளிலும் தரையிறங்கி உள்ளன. சில விண்கலங்கள் நம்முடைய சூரியக் குடும்பத்தையும் தாண்டிச் சென்று உள்ளன. சுருக்கமாக, சூரியனும், பூமியும் மிகப்பெரிய பேரண்டத்தின் ஒரு சிறிய பாகமாகும். பேரண்டமானது தொடர்ந்து இயங்கிக் கொண்டும் மாறிக்கொண்டும் வருகிறது. இந்த பேரண்டத்தின் செயல் மனித வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

- மக்கள் தற்போது, தூரத்திலுள்ள விண்மீன்கள், விண்மீன்கூட்டங்கள், அண்டத்தின் தொடக்கம் போன்றவற்றைக் குறித்து தெரிந்துகொள்ள ஏன் மிகவும் ஆவலாக உள்ளனர்?
- தொடக்கத்தில் மக்கள் பூமியானது பேரண்டத்தின் மத்தியில் உள்ளது என்றும் அதில் மனிதன் ஒரு முக்கியமான படைப்பு என்றும் கருதினர். நாம் இந்த விசாலமான பேரண்டத்தின் முக்கியமற்ற ஒரு சிறுபுள்ளி என்று அறியும் போது அது எவ்விதமான வேறுபாட்டை நமக்கு உணர்த்துகிறது?
- சூரியக்குடும்பத்தையும், சூரியனைச் சுற்றிவரும் கோள்களைக்குறித்தும் மேலும் பல தகவல்களை அறிந்துகொள்ள உங்கள் எட்டாம் வகுப்பு இயற்வேதியியல் பாடநூலின் 10வது அலகை படிக்கவும்.

SCERT TELANGANA




படம். 1.2: பூமியின் வட்டப்பாதை

## பூமி ஒரு கோள்

நம் சூரியக் குடும்பத்திலுள்ள அனைத்துக் கோள்களைப் போன்று பூமியும் தன் அச்சில் தன்னையே சுற்றிக்கொண்டு ஒரு குறிப்பிட்ட பாதையில் சூரியனையும் சுற்றி வருகிறது. இது சூரியனைச் சுற்றி வரும் பூமியின் வட்டப் பாதை ஆகும். இது வட்டப் பாதையின் தளம் என்றழைக்கப்படும். இது ஒரு சீரான தளத்தின் மீது சுற்றுகிறது. பூமி, சூரியன் மற்றும் வட்டப் பாதையின் படங்களைப் பார். இவற்றில் சரியான படம் எது என நினைக்கிறாய்?

A. ஒரு வட்டமான பாதை

B. ஒரு நீள் வட்டமான பாதை

C. ஒரு அளவிடப்பட்ட முட்டை வடிவிலான பாதை (சூரியன் நடுவிலும் பூமி ஒரு பக்கத்தில் 1.4 செ.மீ, மறுபக்கத்தில் 1.5 செ.மீ)

உண்மையில், பூமியின் வட்டப்பாதை படம் C ல் உள்ளதைப் போல் ஏறக்குறைய வட்டமானதாகும். சூரியனிடமிருந்து பூமி தூரத்திலுள்ள புள்ளிக்கும் (சுமார் 152 மில்லியன் மிட்டர்) அருகிலுள்ள புள்ளிக்கும் (சுமார் 147 மில்லியன் மீட்டர்) இடையே உள்ள வேறுபாடு மிகவும் குறைவு. பூமியானது சூரியனை மணிக்கு 1,07.200கி.மீ வேகத்தில் சுற்றி வருகிறது. இந்த வேகத்தில் பூமிக்கு ஒரு முழுமையான சுழன்று சுற்றுதலை முடிக்க 365¼ நாட்கள் பிடிக்கிறது. இதை நாம் ஓர் ஆண்டு என்கிறோம். நீங்கள் எட்டாம் வகுப்பில் சூரியனிடமிருந்து பூமியின் பல்வேறு பகுதிகளால் பெறப்படும் வெப்ப ஆற்றலைக் குறித்தும் சூரியனை பூமி சுற்றிவரும் போது குளிர்காலம் மற்றும் கோடைக்காலம் போன்ற பருவ காலங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதைப் பற்றியும் படித்தீர்கள்.

பூமியின் மீது பருவ காலங்கள் ஏற்படுவதற்கான காரணிகளை (✓) செய்யவும்.

- பூமி தன் அச்சில் தானே தினமும் சுற்றிக்கொள்வது
- பூமியைச் சுற்றி சந்திரனின் மாத இயக்கம்
- சூரியன் தன் அச்சில் தானே சுற்றிக்கொள்வது
- சூரியனை பூமி சுற்றி வருதல்
- பூமியின் வட்டப்பாதை தளத்தில் அதன் சுழற்சியின் அச்சு சாய்ந்து இருத்தல்
- பூமியின் வட்ட வடிவம்
- ஓராண்டின் சுழன்று சுற்றுகையின் போது சூரியனிடமிருந்து பூமியின் தூரம்

### பூமியைக் குறிக்கும் பழைய சொற்கள்

ஆங்கிலச் சொல்லான எர்த் தின் பொருள்கள் : நிலம், மண், உலர்ந்த நிலம். இந்திய மொழிகளில் பூமியைக் குறிக்கும் பல சொற்கள் உள்ளன. வடமொழிச்சொற்களில் பூமி, பிருத்வி, தரணி போன்றவை அடங்கும். இந்தியாவின் பல மொழிகள் இந்த வட மொழிச் சொற்களின் மாறுபட்ட வடிவங்களைப் பயன்படுத்துகின்றன.

SCERT TELANGANA

## பூமியின் பரிணாம வளர்ச்சி

நம் பூமி எவ்வாறு தோன்றியது என்பதைக் குறித்து அறிவியல் அறிஞர்கள் இன்னும் விவாதித்து வருகின்றனர். பூமியானது 41/2 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றத் தொடங்கியது என்று பெரும்பாலான அறிவியலறிஞர்கள் கருதுகின்றனர். பூமி தன்னுடைய தற்போதைய வடிவத்தை பல நிலைகளில் அடைந்தது. சுழலும் தூசுக்கூட்டம் ஒன்று சேர்ந்து ஒரு பந்து போன்று உருவாகி வெப்பத்தால் உருகி ஒரு நிலையைக் கடந்து உருவானது. அப்போது பூமி மிகவும் வெப்பமாக இருந்தது. தொடர்ந்து வானிலுள்ள அதிக நிறையுள்ள பாறைகளாலும் பிற பொருட்களாலும் மோதப்பட்டு வந்தது. இந்த முறையில் பூமியின் அளவு வளர்ந்தது. பூமி, மிகவும் வெப்பமாக இருந்ததால் அது உருகிய திரவ நிலையில் காணப்பட்டது. பல பொருட்களைக் கொண்டு குழம்பினை வெப்பப்படுத்தும் போது பளுவான பொருட்கள் அடிபாகத்திற்குச் செல்வதையும், லேசான பொருட்கள் மேல்நோக்கி எழுவதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். மேலே உள்ள இந்த லேசான பொருட்கள், ஒரு மேல் அடுக்கினை உருவாக்கும் (பாலின் நுரைபோல்). அதேபோன்று பளுவான பொருட்கள் உருகிய உள் அடுக்கினை உருவாக்கும். லேசான பொருட்கள் புறப்பரப்பிற்கு வந்து குளிர்ச்சியடைந்தன. மெதுவாக, உருகிய உள்ளுறை பொருளுக்கு மேலே அதை மூடுவதைப் போல லேசான, குளிர்ந்த பொருட்களால் ஒரு புற அடுக்கு உருவாகின.


பூமியின் உட்பாகம் தொடர்ந்து குளிர்ச்சியடைவதால் அது சுருங்கியது. புற அடுக்கு மடிந்து முகடுகளையும் (மலை) நதிப்படுகைகளையும் (பிற்காலத்தில்) பெருங்கடல்களாக மாறிய தாழ்வான பகுதிகள் உருவானது. பூமியின் காற்று மண்டலத்தில் நீராவி உள்ளிட்ட பல வகையான வாயுக்கள் அடங்கியுள்ளன. இந்த வாயுக்கள் இல்லையெனில் பூமியின் மீது நாம் இன்று போல் உயிர் வாழ முடியாது. ஒரு காலத்தில் பூமியின் மீது ஆக்ஸிஜன் இல்லை. நாம் சுவாசிக்கும் இக்காற்று உருவாக நீண்டகாலம் பிடித்தது. பூமியின் புற அடுக்கில் உள்ள பெரிய நதிப்படுகைகள் மழைநீரால் நிரப்பப்பட்டன. இவ்வாறு பெருங்கடல்கள் தோன்றின. பூமி தோன்றிய வரலாற்றின் நீண்ட கால இடைவெளியில் ஒரு பாதியின் பூமிக்கோள் உயிர்களற்ற வெற்று நிலமாக இருந்தது. பிறகு பெருங்கடல்களில் உயிரினங்கள் தோன்றின. அது பல மில்லியன் ஆண்டுகளில் மெல்ல மனிதர்களையும் பல்வேறு தாவரங்களையும் மற்றும் விலங்குகளையும் கொண்ட பூமியாக வளர்ச்சியடைந்தது.

- பூமி திடீரென உருவாக்கப்பட்டது என்று நீ நினைக்கிறாயா? அல்லது அது நீண்ட காலமாக சிக்கலான செயல்முறையில் உருவானது என நினைக்கிறாயா?
- பூமியின் மீது நம் தோற்றம் எதிர்பாராத நிகழ்வுகளின் விளைவு என்று சில மக்கள் நம்புகின்றனர். பூமியின் மீது எந்த ஒரு உயிரும் தோன்றாமல் போயிருக்கவும் வாய்ப்புகள் இருந்தன. நீ இதை ஏற்றுக்கொள்கிறாயா? உன் காரணங்களைக் கூறு.

## பூமியின் உள் அமைப்பு

நாம் வாழும் பூமியின் உள்ளமைப்பைப் பார்ப்போம். நாம் பூமியின் ஆழத்தினை ஆராய முயன்றால் பூமி தோன்றிய பழைய காலத்தின் தொடர்ச்சியை நாம் காணலாம். அது அறிவியல் ஆராய்ச்சியை மேற்கொண்ட நாட்களுக்கு நம்மை அழைத்துச்செல்லும். பூமியின் உட்பகுதியை புரிந்துகொண்டு புள்ளி விவரங்களை கண்டறிந்த நாட்களை நமக்கு நினைவூட்டும். இதற்கு முக்கிய காரணம் பூமியில் தோண்டப்பட்ட மிக ஆழமான சுரங்கங்கள் கூட ஒரு சில கிலோமீட்டர் ஆழத்தை தாண்டிச் செல்லவில்லை. ஆனால் பூமியின் ஆரம் அல்லது பூமியின் புறப்பரப்பிலிருந்து அதன் மையத்திற்கிடையே உள்ள தூரம் 6000 கிலோ மீட்டர்களுக்கும் அதிகம்.

SCERT TELANGANA



படம். 1.3: பூமியின் உட்புறத் தோற்றம்

பூமியானது மூன்று முக்கிய அடுக்குகளால் ஆனது.

1. பூமி ஓடு (மேல்பாகம்) (Crust)
2. இடை மண்டலம் (நடுப்பகுதி) (Mantlw)
3. பூமிக்கரு (உள்பாகம்) (Core)

**1. பூமி ஓடு : நாம் பூமியின் புறப்பகுதியான மேல்பாகத்தில் வாழ்கிறோம். இப்பாடத்தின் முற்பகுதியில் இந்த அடுக்கு எவ்வாறு உருவானது என்பதைக் கண்டோம். இவ்வடுக்கு 30 முதல் 100கி.மீ ஆழம் வரை செல்லும். மேல்பாகமானது பெரும்பாலும் பல வகையான பாறைகளைக் கொண்டுள்ளது.**

**2. இடை மண்டலம்: இது 1000 முதல் 2900 கி.மீ வரை பருமன் கொண்டது. நடுப்பகுதியின் மேல் பாகம் வளையும் தன்மை கொண்ட ஒரு அடுக்கு ஆகும். இதன் மேல் பூமியின் புறப்பகுதியான மேல்பாகம் மிதக்கிறது. இது சிலிக்கேட்டுகள் என்னும் வேதிப்பொருட்களைக் கொண்டுள்ளது.**

**3. பூமிக் கரு : உள்பாகம்** 2,900 முதல் 6376 கி.மீ வரை பருமன் கொண்டது. இதில் அடர்த்தி மற்றும் பளு நிறைந்த பொருட்களான இரும்பும் நிக்கலும் உள்ளன. இதை இரண்டு துணை அடுக்குகளாக பிரிக்கலாம்.

**புற அடுக்கு :** இது 2,900 முதல் 5,100கி.மீ வரை பருமன் கொண்டது. இதில் நிக்கலும் இரும்பும் உருகிய நிலையில் இருக்கும்.

**அக அடுக்கு : இந்த அடுக்கு திடமானது. இது 5100 முதல் 6376 கி.மீ வரை பருமன் கொண்டது பூமியின் இந்த அடுக்கு இரும்புக் கூட்டுப்பொருட்களாலும் பளு நிறைந்த உலோகங்களான தங்கத்தாலும் ஆனது.**

**இடை மண்டலத்தின் ஆழத்தில் உள்ள பொருள் பெருங்கடல் தரைகளின் மீதுள்ள வெடிப்புகளிலிருந்தும் எரிமலைகளிலிருந்தும் வெளியேறுகிறது. அதன் பிறகு குளிர்ந்து பூமியின் ஓடாக மாறுகிறது. பூமியின் பல பகுதிகளில் பூமியின் மேல்பாகத்தின் சிறு பகுதி நடுப்பகுதிக்குள் நுழைந்து மறுபடியும் உருகிய வடிவத்தை அடையும். மேல் பாகத்தின் இந்த உருவாக்கம் மற்றும் அழிவுகளின் நிலையான செயல்முறை பூமியானது இன்னும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிவருகிறது என்னும் உண்மையை நமக்கு விளக்குகிறது. நாம் வாழும் இந்த மேல் பாகமானது நில நடுக்கங்கள், எரிமலைகள், நிலக்கழிவு, மலைகள் தோன்றுதல் போன்றவற்றால் இன்னும் மாறிக்கொண்டே வருகிறது. இந்த மாற்றங்கள் பூமியின் ஆழத்தில் நிகழும் செயல்முறைகளால் ஏற்படுகின்றன.**

**உங்களுக்குத் தெரியுமா?**


பூமியின் ஓடு பூமியின் கனஅளவில் 1% மட்டுமே. இடை மண்டலம் 16%. மற்றும் பூமிக் கரு 83% ஆகும். நாம் பூமியை முட்டையின் அளவாக எடுத்துக்கொண்டால் முட்டையின் மேல் ஓட்டின் அளவு தான் பூமியின் மேல்பாகம்.

- பூமியின் நடுப்பகுதிக்குள் சென்று நம்மால் அதை ஆராய முடியாது. ஆனால் நம்மால் அதில் உள்ள பொருட்களைப் பற்றி ஆராய முடியும். இந்த பொருட்கள் யாவை, அவற்றை நாம் எவ்வாறு பெறலாம் என்பதை உன்னால் கூறமுடியுமா?





கண்டங்களின் வடிவங்களும் இருப்பிடங்களும் மனித அனுபவத்தால் அறியப்பட்டது. எனினும் பூமி எவ்வளவு பழமை வாய்ந்தது என்று பார்க்கும் போது கண்டங்கள் நகர்ந்திருப்பதாகவும், ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டதாகவும், ஒன்றில் மற்றொன்று கலந்துவிட்டதாகவும் தெரிகிறது. மலைகள் மேலே உயர்ந்தும், தரைமட்டமாகியும், பெருங்கடல்கள் உருவாகி உலர்ந்துவிட்டதாகவும் பள்ளத்தாக்குகள் உருவானதாகவும் வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது.

20ஆம் நூற்றாண்டில் ஒரு ஜெர்மன் வானிலை ஆராய்ச்சியாளரும் புவி இயற்பியலாளருமான 'ஆல்பிரட் வேக்னர்', 'கண்ட வெடிப்புக் கொள்கையை' அறிமுகப்படுத்தினார். கண்டங்கள் மற்றும் பெருங்கடல் படுகைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை விளக்குவதற்காக அவர் இக்கோட்பாட்டை அறிமுகம் செய்தார்.





பாஞ்சியா (கிரேக்க மொழியில் முழுமையான நிலம்) என்னும் ஓர் அதிக பரப்பளவு கொண்ட பெரிய கண்டம்

- உலகப் படத்தை கவனமாகப் பார். சில கண்டங்கள் வெட்டி ஒட்டும் புதிர் விளையாட்டில் உள்ள துண்டுகளைப் போல் இருப்பதைக் காண்கிறீர்களா? அவற்றின் பெயர்களை எழுது.




225 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இருந்ததாகவும், பின்னர் அது பல பெரிய பகுதிகளாக பிரிந்து விலகியதாகவும் ஆல்பிரட் வேக்னர் கூறினார். இப்பகுதிகள் ஒன்றிடமிருந்து மற்றொன்று நகர்ந்துவிட்டது என்றும் அவர் கூறினார். மில்லியன் கணக்கான ஆண்டுகளில் சில கண்டங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன. அவை, இன்னும் நகர்ந்துக்கொண்டே இருக்கின்றன.




படம். 1.4: கண்ட வெடிப்பின் நிலைகள்

SCERT TELANGANA

பாஞ்சியா என்பது பெரிய பரப்பளவு கொண்ட ஒரு கண்டமாகும். அக்கண்டத்திலிருந்து கண்ட வெடிப்பு மூலம் நடு உயிரிகள் காலத்திலிருந்து தற்காலம் வரை தற்கால கண்டங்கள் தோன்றின. பாஞ்சியா என்னும் மிகப்பெரிய கண்டம் உடைந்து கீழ்கண்ட நிலங்கள் ஏற்பட்டதாக வேக்னர் கருதுகோள் கூறுகிறது.

1. **லாரேசியா** (தற்போது உள்ள வட அமெரிக்கா, கிரீன்லாந்து, இந்திய துணைக்கண்டத்தின் வடக்கிலுள்ள யூரேசியாவின் அனைத்துப் பகுதிகளும்) மற்றும்

2. **கோண்ட்வானா நிலம்** (தற்போது உள்ள தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா, மடகாஸ்கர், இந்தியா, அரேபியா, மலேசியா, கிழக்கிந்தியத்தீவுகள், ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா)

இந்த இரண்டு நிலத் தொகுதிகளும் டெத்திஸ் கடல் என்றழைக்கப்படும் ஒரு நீளமான ஆழம் குறைந்த உள்நாட்டுக் கடலால் பிரிக்கப்பட்டன. பூமியின் மீது கண்டங்கள் தற்போதுள்ள வடிவங்களையும் இருப்பிடங்களையும் அடைய மில்லியன் கணக்கான ஆண்டுகள் பிடித்தன.


- ஆஸ்திரேலியா எந்த திசை நோக்கி நகர்கிறது?
- இந்தியா எந்த திசை நோக்கி நகர்கின்றது?

## பூமியின் சட்ட அமைப்பு

நாம் இதுவரை பூமியும் அதன் உள் அமைப்புகளும் உருவான செய்முறையைக் கண்டோம். நாம் தற்போது அவற்றை வரைபடங்களிலும் பூமி உருண்டைகளிலும் எவ்வாறு காட்டுவது என்பதைப் பார்ப்போம்.

**அட்ச ரேகைகளையும், தீர்க்க ரேகைகளையும் தெரிந்துகொள்ள வரைபட புத்தகத்தை பயன்படுத்துதல்:**

ஓர் அட்லாஸ் புத்தகத்திலும் அல்லது கூகுல் எர்த்தை பயன்படுத்தி வலை தளத்திலும் அட்ச ரேகைகளைப் பற்றிய தகவலை நீங்கள் அறியலாம். கூகுல் எர்த்தில் அது மிகவும் எளிது. உங்களிடம் கூகுல் எர்த் வலைதள வசதி இல்லாவிட்டால், அட்சரேகை மற்றும் தீர்க்க ரேகை பற்றிய தகவலை அறிய இங்கு ஓர் எடுத்துக்காட்டு தரப்பட்டுள்ளது. அகராதியில் சொற்களை அமைத்துள்ளதைப் போல அட்லாஸ் புத்தகத்தின் கடைசியில் இடங்களின் தகவல்களை அகரவரிசைப்படி தரப்பட்டுள்ளதை நீங்கள் காணலாம்.





நீங்கள் பயன்படுத்தும் அட்லாஸ் புத்தகத்தில் தகவல்கள் சற்று வேறுபட்டுக் காணப்படலாம். ஆனால் இக்கூறுகள் அனைத்தும் அதில் அடங்கியிருக்கும்.

SCERT TELANGANA

அட்லாஸ் புத்தகத்தில் அனைத்து இடங்களும் பட்டியலிடப்பட்டிருக்காது என்பதை நினைவில் கொள். தெரிவு செய்யப்பட்ட முக்கியமான இடங்கள் மட்டும் பட்டியலிடப்பட்டிருக்கும். அட்லாஸ் புத்தகத்தை வெளியிடுவோர் பட்டியலில் எந்த இடங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்கின்றனர்.

இப்பொழுது எரிமலை மற்றும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களின் அட்சரேகை மற்றும் தீர்க்க ரேகைகளின் மதிப்புகளைக் கண்டறி. உலகப்படத்தில் அவற்றைக் குறி. இது பசுபிக் நெருப்பு வளையத்தையும் அதனுடைய நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களையும் புரிந்துகொள்ள உங்களுக்குப் பயன்படும்.

உலக உருண்டையின் மீது அட்ச ரேகைகள் மற்றும் தீர்க்க ரேகைகளின் ஒரு வலைப் பின்னல் வரையப்பட்டுள்ளது. இதையே நாம் **சட்டம் (Grid)** என்று அழைக்கிறோம். இச்சட்டத்தின் உதவியால் நாம் இடங்களை அடையாளம் காணலாம். அவற்றை குறித்து அதிகமாகத் தெரிந்து கொள்ளலாம். அங்கு எவ்வளவு வெப்பம் அல்லது குளிர் உள்ளது என்பதையும், அதை அடைய நாம் எந்த திசையில் செல்ல வேண்டும் என்பதையும், அங்கு என்ன நேரமாக இருக்கும் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.




மேலே உள்ள வரைபடங்களை கவனித்து கீழே உள்ள அட்டவணையில் எந்தெந்த கண்டங்கள் எந்த அரைக்கோளத்தில் உள்ளன எனக் குறிப்பிடுக.


| அரைக்கோளம் | கண்டங்கள் |
|---|---|
| வடக்கு அரைக்கோளம் | |
| மேற்கு அரைக்கோளம் | |
| தெற்கு அரைக்கோளம் | |
| கிழக்கு அரைக்கோளம் | |

### வரைபடங்களின் 'அகலம்' அட்சரேகைகள்

பூமியின் வடக்கு மற்றும் தெற்கு துருவங்களிலிருந்து சமமான தூரத்தில் துல்லியமாக அதன் மையத்தில் கிழக்கு, மேற்காகச் செல்லும் குறுக்கு கோட்டை 'பூமத்திய ரேகை' என்பர். ஏனெனில் இது பூமியை இரண்டு சரிசம பாகங்களாக பிரிக்கின்றது. இந்த வளையத்தை $0^0$ அட்சரேகை என்பர். திரிகோணமிதியில் கோணங்களை வடிவமைக்கப்பட்ட முறையை பின்பற்றி, அட்சரேகைகள் டிகிரிகள் ($^0$), நிமிடங்கள் ('), மற்றும் விநாடிகள் (") என வெளிப்படுத்தப்படுகிறது. பல அட்லாஸ் புத்தகங்களில் நிமிடங்களையும், விநாடிகளையும் உங்களால் காண முடியாது. படத்தை பார்.

SCERT TELANGANA

பூமத்திய ரேகையிலிருந்து துருவங்களை நோக்கிச் செல்லச் செல்ல வட்ட இணை வளையங்களை நாம் காணலாம். ஒவ்வொரு வளையத்தையும் ஓர் அட்சரேகை என்கிறோம். அட்சரேகை என்னும் சொல் ‘இலத்தீன்’ மொழிச் சொல்லான ‘லேட்டிடியூடோ’(Latitudo) என்னும் சொல்லிலிருந்து பிறந்தது.




படம் 1.5: அட்ச ரேகைகள்

அதன் பொருள் அகலமானது’ என்பதாகும். இக்கோடுகள் வரைபடத்தின் அகலத்தை நமக்குக் காட்டுகின்றன. அட்சரேகைகளின் மதிப்புகளின் வீச்சு $0^0$ (பூமத்திய ரேகை) முதல் $90^0$ வடக்கு அட்ச ரேகை (வடதுருவம்) மற்றும் $90^0$ தெற்கு அட்சரேகை (தென்துருவம்) வரை உள்ளது. ஒவ்வொரு அட்ச ரேகையையும் திசையில் குறிக்கப்பட வேண்டும் வடக்கு திசைக்கு வ மற்றும் தெற்கு திசைக்கு தெ என்றும் குறிப்பிட வேண்டும். பூமத்திய ரேகைக்கு எந்த திசைக் குறியீடும் இல்லை.

சில அட்ச ரேகைகளுக்கு சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை பூமியின் மீது சூரிய ஒளி படும் அமைப்புடன் தொடர்புடையன. இதைப் பற்றி பருவ காலங்கள் மற்றும் சூரியனை பூமி சுழன்று சுற்றுதலைக் குறித்து கற்றபோது நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த அட்ச ரேகைகளின் பெயர்களும் அவற்றின் மதிப்புகளும் இங்கு தரப்பட்டுள்ளன. அனைத்து அட்சரேகைகளிலும் மிக நீளமானது பூமத்திய ரேகை. மற்ற அனைத்து அட்சரேகைகளும் துருவங்களை நோக்கிச் செல்லும் போது ஒவ்வொரு புறமும் படிப்படியாக நீளம் குறைந்து விடுகின்றது. துருவங்களில் உள்ள $90^0$ வ மற்றும் $90^0$ தெ உண்மையில் வளையங்கள் அல்ல. அவைவெறும் புள்ளிகள். பூமத்திய ரேகையிலிருந்து வட துருவம் வரை உள்ள பூமியின் பாதிபாகம் வடக்கு அரைக்கோளம் எனப்படும். அரைக்கோளம் என்றால் வட்டத்தில் பாதி என்று பொருள். பூமத்திய ரேகையிலிருந்து தென் துருவம் வரை உள்ள பாதி பாகத்தை தெற்கு அரைக்கோளம் என்பர். ஒரு துருவத்திலிருந்து மற்றொரு துருவம் வரை எண்ணினால் 180 அட்சரேகைகள் (பூமத்திய ரேகையை தவிர்த்து) உள்ளன.

**வரைபடங்களின் ‘நீளம்’ தீர்க்க ரேகைகள் :**

லத்தீன் மொழிச் சொல்லான லாங்கிடியூடோவின் பொருள் நீளம் ஆகும். நாம் நீள்வாட்டில் ஒரு துருவத்திலிருந்து மறுதுருவத்திற்குச் செல்வதைப் போன்ற நீளமாகும். ஒரு வரைபடத்தின் நீளம் அல்லது உயரத்தை தீர்க்க ரேகைகள் காட்டுகின்றன. தீர்க்க

SCERT TELANGANA


ரேகைகள் நிலையான வட்டங்களல்ல. அவை வட துருவத்தையும் தென் துருவத்தையும் இணைக்கும் அரைவட்டங்கள். ஒவ்வொரு தீர்க்க ரேகையும் அனைத்து அட்சரேகைகளையும் குறுக்காக வெட்டுகிறது.

இங்கிலாந்தின் கிர்னிச் என்னுமிடத்தில் உள்ள வானிலை ஆய்வகத்தின் வழியாக கடந்து செல்லும் தீர்க்க ரேகையை $0^0$ தீர்க்க ரேகை என்றும் **முதன்மை தீர்க்கரேகை** என்றும் அல்லது **கிரீனிச் தீர்க்க ரேகை** என்றும் அழைப்பர். அது கிரீனிச் என்று உச்சரிக்கப்பட வேண்டும். கிரீன் என்னும் வார்த்தையை உயர்த்தி உச்சரிக்க வேண்டும்.

பல நாடுகள் தங்களுடைய சொந்த மாகாணத்தின் வழியாகச் செல்லும் தீர்க்க ரேகையை $0^0$ தீர்க்க ரேகை என்று பொருத்த முயன்றன. எனினும் இங்கிலாந்து கிரீனிச் தீர்க்க ரேகையை $0^0$ தீர்க்க ரேகை என முடிவு செய்தது. இங்கிலாந்து நாட்டினர் அப்போது உலகின் பெரும்பகுதியை ஆண்டனர். எனவே ஒவ்வொரு நாட்டினரும் அவர்களுடைய முறையை பின்பற்றும்படி முடிவானது.

மொத்த தீர்க்க ரேகைகளின் எண்ணிக்கை 360. முக்கியமாக, தீர்க்க ரேகைகளை இரண்டு குழுக்களாக பிரிக்கலாம். $0^0$ யிலிருந்து கிழக்கு திசையை நோக்கிய $180^0$ தீர்க்க ரேகைகளை கிழக்கு தீர்க்க ரேகைகள் என்றும் $0^0$ முதல் $180^0$ வரை மேற்கு திசையை நோக்கிய தீர்க்க ரேகைகளை மேற்கு தீர்க்க ரேகைகள் என்றும் பிரிக்கலாம். $0^0$ மற்றும் $180^0$ தீர்க்க ரேகைகளுக்கு திசை குறிகாட்டிகள் இல்லை. மற்ற தீர்க்க ரேகைகளுக்கு திசை குறிகாட்டிகள் உண்டு. எடுத்துக்காட்டாக $28^0$ கி என்பது $28^0$ கிழக்கு தீர்க்கரேகையையும் $127^0$ மே என்பது $127^0$ மேற்கு தீர்க்க ரேகையையும் குறிக்கும். பிறவற்றையும் இதேபோல் குறிக்கலாம். ஒவ்வொரு டிகிரி போலவே டிகிரி $(^0)$ களாகவும், நிமிடங்களாகவும் (’), வினாடிகளாகவும் (”) பிரிக்கப்படும். $0^0$ தீர்க்க ரேகைக்கு நேர் எதிராக இருக்கும் தீர்க்க ரேகையை **எதிர்தீர்க்க ரேகை** (Anti meridian) என்பர் (எதிர் என்றால் நேர் எதிராக இருப்பது). கிழக்கு தீர்க்க ரேகைகள் கிழக்கு அரைக்கோளதையும், மேற்கு தீர்க்க ரேகைகள் மேற்கு அரைக்கோளத்தையும் உருவாக்குகின்றன.

அனைத்திற்கும் மேலாக ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். அட்ச ரேகைகளும் தீர்க்க ரேகைகளும் கற்பனைக் கோடுகளே.




படம் 1.6: தீர்க்க ரேகைகள்

தீர்க்கரேகையையும் அட்சரேகையைப்

## பிற பெயர்கள்

அட்ச ரேகைகள் **இணைக்கோடுகள்** என்று அழைக்கப்படுகின்றன. ஏனெனில் அவை ஒன்றுக்கொன்று இணையாக உள்ளன. தீர்க்க ரேகைகளை **நண்பகல் ரேகைகள்** என்பர். மெரிடியன் என்னும் சொல் இலத்தீன் மொழியின் மெரிடியான்ஸ் என்னும் சொல்லிலிருந்து தோன்றியது. இதன் பொருள் நண்பகல் அதாவது தரப்பட்ட தீர்க்க ரேகையில் நம் தலைக்கு மேல் நேராக சூரியன் இருக்கும் நேரமாகும். எனவே தீர்க்க ரேகைகள் நேரத்துடன் தொடர்பு உடையவை.

SCERT TELANGANA

**தீர்க்க ரேகைகளும் நேரத்தைப் பற்றிய வினாவும்**

சூரியனின் ஒளிக்கதிரை நோக்கி பூமி ஒரு தீர்க்க ரேகையிலிருந்து மற்றொரு தீர்க்க ரேகைக்கு நகர்வதற்கு 4 நிமிடங்கள் ஆகின்றன. இதன் பொருள் என்னவெனில் ஒவ்வொரு தீர்க்கரேகைக்கும் வேறுபட்ட நேரம் இருக்கும். எடுத்தக்காட்டாக, சூரியன் $10^0$ கி தீர்க்க ரேகையில் தலைக்கு மேலே நேராக இருக்கும் போது உள்ளூர் நேரம் 12.00 மணி (நண்பகல்). ஆனால் $9^0$ கி. தீர்க்க ரேகையில் அது 11:56 மணியும் (காலை), $11^0$ கி.தீர்க்க ரேகையில் 12:04மணி (நண்பகல்)யாகவும் இருக்கும். இது நமக்கு பெருங்குழப்பத்தை ஏற்படுத்துகிறது என்பதை தெளிவாகிறது.

எனவே உலகமானது கிரீனிச் தீர்க்கரேகையிலிருந்து தொடங்கி கிழக்கு மற்றும் மேற்கு நோக்கிச் செல்லும் போது 24மணி நேரப் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மணி நேரப்பகுதியும் $15^0$ தீர்க்க ரேகைகளைக் கொண்டது. இதன் பொருள் ஒரு நேரப்பகுதிக்கும் அடுத்த நேரப்பகுதிக்கும் இடைப்பட்ட நேர வேறுபாடு 1 மணி. ($15^0$ தீர்க்க ரேகை x $1^0$ தீர்க்க ரேகைக்கு 4 நிமிடங்கள் = 60 நிமிடங்கள்). கிரீனிச்சிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் போது நேரத்தை கூட்டிக்கொள்ள வேண்டும். கிரீனிச்சிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் போது நேரத்தை கழித்து விட வேண்டும்.

திங்கட்கிழமையில் $0^0$ தீர்க்கரேகையில் நண்பகலாக (பகல் 12 மணி) இருக்கும் போது எதிரே உள்ள தீர்க்க ரேகையில் நள்ளிரவாக இருக்கும் (இரவு 12மணி). $180^0$ மேற்கில், செவ்வாய்கிழமை தொடங்கும். அதன் கிழக்கில் திங்கட்கிழமை அப்பொழுதுதான் முடிந்திருக்கும். கணக்கிடப்பட்ட நேரப்பகுதிகளின் எல்லைகளை நீங்கள் பின்தொடர்ந்தால், சில நாடுகள் ஒன்றிற்கும் மேலான நேரப்பகுதிகளை 1 மணி நேரப்பிரிவுக்கு குறைவாகக் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக இந்தியாவிற்கு இரண்டு அரை மணிநேர காலப்பகுதிகள் இருக்கும். அதாவது இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கிடையே இரண்டு மணிநேர வேறுபாடு இருக்கும். வடகிழக்கின் மிகவும் தூரத்திலுள்ள பகுதியில் இந்த வேறுபாடு மிகவும் அதிகமாக இருக்கும். இது எவ்வளவு சிக்கல் நிறைந்ததாக உள்ளதோ அவ்வளவு பயனுள்ளதாகக் கருதப்படுகிறது.

இது போன்ற சூழ்நிலைகளில், சில நாடுகள் தங்களுடைய மாகாணத்தின் வழியாகச் செல்லும் தீர்க்க ரேகைகளில் ஒன்றின் நேரத்தை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன. அந்த முழு நாட்டிற்கும் அந்த தீர்க்க ரேகையின் நேரத்தை பின்பற்றுகின்றனர். இந்த நேரத்தை திட்டநேரம் என்பர். ஒவ்வொரு நாடும் அதன் நேரப் பகுதிக்கு அந்நாட்டின் பெயரை தருகின்றது. இந்தியாவிற்கு, இது இந்திய திட்டநேரம் (IST) எனவும் பாகிஸ்தானுக்கு பாகிஸ்தான் திட்ட நேரம் (PST) எனவும், இதே போல் பிற நாடுகளுக்கும் வழங்கப்படுகிறது.

இதனால் நன்மை என்னவெனில் இந்தியாவில், எடுத்துக்காட்டாக, நீங்கள் எங்கிருந்தாலும் ஒரே நேரமாக இருக்கும். அதிக எண்ணிக்கையில் தீர்க்க ரேகைகளைக் கொண்ட நாடுகளுக்கு நேரத்தை கணக்கிடுவது மிகவும் சிக்கலானது. அவர்கள் தங்களுடைய நாட்டை மிகவும் வசதியான நேரப்பகுதிகளாக, பொதுவாக ஒரு நேரப்பகுதிக்கும் அடுத்த நேரப்பகுதிக்கும் இடையே உள்ள ஒரு மணிநேர வேறுபாட்டினைக் கொண்டு பிரித்துக்கொள்வர்.

**நேரமும் பயணமும்**

பூமியானது தன் அச்சில் தன்னைதானே சுற்றுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் தீர்க்க ரேகைகள் என்பது நாம் உருவாக்கிய கற்பனைக் கோடுகளே. எனவே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கியோ அல்லது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியோ நாம் பயணம் செய்தால் நேரத்தில் வேறுபாடு இருக்கும். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நீங்கள் பயணம் செய்யும் போது ஒவ்வொரு தீர்க்கரேகையையும் கடக்கும் போது 4 நிமிட நேரத்தை நீங்கள் பெறுகிறீர்கள். ஆனால் நீங்கள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பயணம் செய்யும் போது 4 நிமிட நேரத்தை இழக்கிறீர்கள். இதை EGA(East Gain Add) மற்றும் WLS(West Last Substract) என்று குறிப்பிடுவர்.

**உனக்குத் தெரியுமா?**

இந்தியா முழுவதும் ஒரு நேரத்தை குறிப்பிட, குழப்பத்தை தவிர்க, இந்தியாவின் மத்தியில் செல்லும் $82\frac{1}{2}^O$ கிழக்கு தீர்க்க ரேகையை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவின் திட்ட நேரம் (IST) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்திய திட்டநேரத்திற்கும் கிரீனிட்ஜ் திட்ட நேரத்திற்கும் இடையே உள்ள தூர வித்தியாசம் 5½ மணி நேரமாகும்.



SCERT TELANGANA

- உங்களுடைய அட்லாஸ் புத்தகத்தைப் பயன்படுத்தி கீழ்கண்ட நாடுகள் எத்தனை திட்ட நேரப் பகுதிகளைக் கொண்டுள்ளன என்று கண்டறியவும்.

  அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ரஷ்யா, ஜப்பான், ஜிம்பாப்வே மற்றும் சிலி

- சுனிதா, ஐதராபாத்தில் உள்ள ஓர் கணினி அழைப்பு மையத்தில் பணிபுரிகிறார். அவளுடைய வாடிக்கையாளர்கள் அமெரிக்க நாட்டில் உள்ளனர். அவர்தன் வாடிக்கையாளர்களின் கணினி குறைப்பாடுகளைப் பற்றிய வினாக்களுக்கு பதில் அளிக்கிறார். அவர் எப்போதும் இரவு நேரங்களில் பணிபுரிகிறார். இது ஏன்? இதைக் கண்டறிய குளோபை பயன்படுத்துங்கள்!

  உங்களுடைய மூளைக்கு வேலை !

கிரீனிச்சில் (0°) நண்பகல் 12 மணியாக இருக்கும் போது கீழ்கண்ட நகரங்களின் இட நேரம் என்ன என்பதைக் கண்டறியுங்கள்:

(அ) மும்பை (73° கி)

(ஆ) சிகாகோ (87°30' மே)

(இ) சிட்னி (151° கி)

## முக்கியச் சொற்கள்

1. பெரும் வெடிப்பு 2.சட்டம் 3.கோண்ட்வானா 4. முதன்மை தீர்க்க ரேகை 5.நேரப் பகுதிகள் 6.திட்ட நேரம்.

## உனது கற்றலை மேம்படுத்துக

1. அட்லாஸ் புத்தகத்தில் இந்தியப் படத்தில் கீழ்காணும் இடங்களின் மீதுச் செல்லும் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகையை கண்டறியவும்.(AS5)

   கன்னியாகுமரி ____________ மற்றும் ____________

   இம்பால் ____________ மற்றும் ____________

   ஜெய்சல்மார் ____________ மற்றும் ____________

   புனே ____________ மற்றும் ____________

   பாட்னா ____________ மற்றும் ____________
2. தீர்க்க ரேகைகள் மற்றும் அட்சரேகைகளுடன் தொடர்புடைய பத்துச் சொற்களை கண்டறியவும். (இணைக் கோடுகள், செங்குத்துக் கோடுகள், குறுக்குக் கோடுகள் போன்றவை)(AS1)
3. நேரப் பகுதிகளைக் காட்டும் உலகப் படத்தை பார்த்து, விஜயவாடாவிலிருந்து பாரிஸ் நகரத்திற்கு நீ பயணம் செய்தால் எந்த நேரப் பகுதியிலிருந்து எந்த நேரப் பகுதிக்கு நீங்கள் நகர்வீர்கள் என்பதைக் கண்டறியவும். டோக்கியோவிற்கு நீங்கள் பயணம் செய்தால் எந்த நேரப் பகுதியை நோக்கி நகர்வீர்கள். (விடைக்கு பக்கம் 13ல் உள்ள உலகப்படத்தை பயன்படுத்துக)(AS5)
4. "பூமியின் தோற்றத்தையும் அதன் அமைப்பினையும் ஆராய்வது மிகவும் கடினம்." ஏன்?(AS1)
5. பூமியின் உள் அமைப்பு எனும் பாடப்பகுதியை படித்து பின்வரும் வினாவிற்கு விடையளி. பூமி சுறுசுறுப்பாக இயங்குகிறது என்று எவ்வாறு கூறுவாய்?(AS2)
6. பூமியின் 'சட்ட அமைப்பு', என்றால் என்ன? அது எவ்வகையில் நமக்கு உதவுகிறது?(AS1)
7. (அ) உள்ளூர் நேரம் – திட்டநேரம், (ஆ) பூமத்திய ரேகை – முதன்மை தீர்க்க ரேகை, இவைகளுக்கிடையே உள்ள வேற்றுமைகள் யாவை?(AS1)
8. ஒவ்வொரு மாநிலத் தலைநகரத்தின் தீர்க்க ரேகையின் உள்ளூர் நேரத்தை ஆதாரமாக ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியாக நேரத்தை குறிப்பிட்டால், என்ன பிரச்சனைகள் ஏற்படும்?(AS4)
9. பின்வரும் நாடுகளின் திட்ட நேரத்தை குறிப்பிடும் முதன்மை தீர்க்க ரேகைகளை உனது ஆசிரியரின் உதவியுடன் குறிப்பிடுக.(AS5)

   1. நேபால் 2. பாகிஸ்தான் 3. பங்களாதேஷ் 4. மலேஷியா 5. இங்கிலாந்து 6. ஜப்பான்
10. பூமியை பாதுகாத்தல் குறித்து சிந்தனையை தூண்டும் சுவரொட்டியை தயாரிக்கவும்.(AS6)

SCERT TELANGANA

# உலகம் - நேரப் பகுதிகள்




வரைபடம் 1 உலக நேரப் பகுதிகள்

பாடம் 2

# பூமியின் இயற்கை தோற்றங்கள்

பூமியைப் பற்றி ஆராயும் விஞ்ஞானிகளாகிய புவி அறிவியலாளர்கள் பொதுவாக பூமியின் மீது இயற்கை தோற்றங்கள் நான்கு இருப்பதாகக் கூறுகின்றனர். இயற்கைத் தோற்றங்கள் என்பவை சில பொதுவான குணங்களைக் கொண்ட பகுதிகளாகும். புவி அறிவியலாளர்கள், 1. கற்கோளம், 2. நீர்க்கோளம், 3. வளிமண்டலம் மற்றும் 4. உயிர்க்கோளங்களைக் குறித்துப் பேசுகின்றனர்.

நீங்கள் முன் வகுப்புகளில் இவற்றில் பலவற்றைக் குறித்து படித்திருக்கிறீர்கள். ஆனால் இங்கு நாம் இந்த கோளங்கள் அல்லது இயற்கை அமைப்பின் சில பரந்த தன்மைகளைப் பற்றி பார்ப்போம். மேலும் அவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளது என்பதையும் அவற்றுடன் மனிதர்கள் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளனர் என்பதையும் நாம் இந்தப் பாடத்தில் பார்ப்போம்.

**1. கற்கோளம் :** இது பூமியின் திடமான மேல்பாகம் அல்லது கடினமான மேற்பகுதியாகும். இது பாறைகளாலும் தாதுப்பொருட்களாலும் தாது உப்புக்களாலும் மண்ணின் அடர்த்தியான அடுக்காலும் மூடப்பட்டுள்ளது. (கிரேக்க மொழியில் 'லித்தோ' (Litho) என்னும் சொல்லுக்கு 'கல்' அல்லது 'பாறை' என்று பொருள்) நீங்கள் உலக உருண்டையில் பார்ப்பது போல் அது மென்மையான புறப்பரப்பு அல்ல. ஆனால் அது உயர்ந்த மலைகளையும், பீடபூமிகள் அல்லது மேட்டு நிலங்களையும், தாழ்வான சமவெளிகளையும், ஆழமான பள்ளத்தாக்குகளையும் மிகவும் ஆழமான நீரால் நிரம்பிய பெருங்கடல் படுகைகளையும் கொண்டுள்ளது. இவற்றில் பல தன்மைகள் காற்றாலும் நீராலும் வடிவமைக்கப்பட்டவை. மேல்பாகத்தின் பகுதிகள் தூசு போன்றவற்றின் வடிவில் காற்றுடன் கலந்து விடுகின்றன. கற்கோளமானது சூரியக் கதிர்களால் வெப்பமாக்கப்படும் போது அல்லது குளிர்ச்சியடையும் போது அது காற்றையும் நீரையும் கூட பாதிக்கிறது. நாமும் பிற உயிரினங்களும் இந்த அடுக்கின் மேல் வாழ்கிறோம் (அதன் உள்பக்கத்திலோ அல்லது அதன் கீழோ அல்ல). நாம் இந்த கடினமான மேல் பாகத்தில் காணப்படும் பாறைகளையும் மண்களையும் பிறபொருட்களையும் பல வழிகளில் பயன்படுத்துகிறோம்.

**2. நீர்க்கோளம் :** நீரின் இயற்கை அமைப்பை நீர்க்கோளம் என்பர். இது நீரின் பல்வேறுபட்ட வள ஆதாரங்களையும் பல்வேறு வகையான நீர்நிலைகளான ஆறுகள், ஏரிகள், கடல்கள், பெருங்கடல் போன்றவற்றைக் கொண்டுள்ளது. (இது ஹுடோர் (Hudor) என்னும் கிரேக்க சொல்லிலிருந்து தோன்றியது. ஹுடோர் என்றால் 'நீர்' என்று பொருள்). சில நீர்ப்பகுதிகள் பூமிக்கடியில் மற்றும் பாறைகளுக்கிடையே ஆழத்தில் காணப்படும். (நிலத்தடி நீர் அல்லது தாது உப்பு நீர்). வளிமண்டலத்தில் நீராவி மற்றும் மேகங்கள் வடிவில் நீர் காணப்படும். பெருங்கடல்களின் நீரை கண்டங்களுக்கு வளிமண்டலக் காற்றுகள் அலைகளாகக் கொண்டு செல்கின்றன. நீரின்றி உலகில் உயிர்கள் வாழ முடியாது. நாம் உயிர்வாழ காற்றில் உள்ள ஆக்ஸிஜன் தேவை. ஆனால் அது நீரில் கரைந்துள்ள போது நீர்வாழ்வன அதை பயன்படுத்த முடியும். நாம் நீரை பலவழிகளில் பயன்படுத்துகிறோம். குடிக்கவும், நீர்ப்பாசனம் செய்யவும், துணி துவைக்கவும், தூய்மை செய்யவும், மின்சாரத்தை உருவாக்கவும், போக்குவரத்திற்கும் நாம் நீரை பயன்படுத்துகிறோம்.

**3. வளிமண்டலம் :** (காற்று மண்டலம்) பூமியை சூழ்ந்துள்ள காற்றின் மென்மையான அடுக்கினை நாம் வளிமண்டலம் என்கிறோம். இது இரண்டு கிரேக்க சொற்களாலானது. அட்மாஸ் (Atmos) என்றால் நீராவி ஸ்பைரா (Sphaira) என்றால் பந்து). இது ஆக்ஸிஜன், நைட்ரஜன், கார்பன்-டை-

- நீங்கள் நிலக்கரி அல்லது சுண்ணாம்புக்கல் போன்ற கனிச்செல்வங்களை சுரங்கங்களிலிருந்து தோண்டுவதைக் குறித்து படித்திருக்கிறீர்கள். இது கற்கோளத்தையும், நீர்க்கோளத்தையும், வளிமண்டலத்தையும் எவ்வழிகளில் பாதிக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
- உடல் நலக்குறைவை குணப்படுத்த மனிதர்கள் நோய் எதிர்ப்பு சக்தியுள்ள பல மருந்துகளை உட்கொள்கின்றனர். இதை தயாரிக்கும் தொழிற்சாலைகளால் நீர்க்கோளம் மற்றும் உயிர்க்கோளங்கள் எவ்வாறு பாதிப்படைகின்றன என்று நீ கருதுகிறாய்?
- பல அறிவியல் சொற்கள் கிரேக்க மொழிச் சொற்களாக இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். அது ஏன் என நீங்கள் கருதுகிறீர்கள்? உங்களுடைய ஆசிரியருடன் கலந்துரையாடவும்.

SCERT TELANGANA

ஆக்ஸைடு போன்ற பல வாயுக்களையும் நீராவி மற்றும் தூசுப் பொருட்களையும் கொண்டுள்ளது. பூமியின் புவியீர்ப்பு விசையால் அதைச் சுற்றிலும் காற்றின் போர்வையைப் பெற்றுள்ளது. எனவே பூமியுடன் இணைந்து வளிமண்டலமும் சுற்றுகிறது. சூரியனையும் பூமியுடன் சுற்றி வருகிறது. அது சூரியனின் வெப்பத்தை வெப்பமான பகுதிகளிலிருந்து காற்றின் வாயிலாக குளிர்ந்த பகுதிகளுக்கு எடுத்துச்செல்கிறது. அது பெருங்கடல்களில் உள்ள நீரை மேகங்கள் வடிவில் கண்டங்களின் உட்பகுதிகளுக்கு மழையாக கொண்டு சேர்க்கிறது. மேலும், நாம் சுவாசிக்க காற்று இல்லாவிட்டால் நம்மால் உயிர்வாழ முடியாது. ஆனால் வளிமண்டலம் பல்வேறு பிறகாரணங்களாலும் உயிர் வாழ்க்கையை சாத்தியமாக்குகிறது. எடுத்துக்காட்டாக, அது சூரியனிடமிருந்து வரும் தீங்கு செய்யும் கதிர்கள் (புற ஊதாக் கதிர்கள்) நம்மை அடைவதிலிருந்து தடுக்கிறது

**4. உயிர்க்கோளம் :** வளிமண்டலத்தின் மிக உயர்ந்த பாகத்திலும் ஆழமான பெருங்கடல்களிலும் வாழும் பாக்டீரியா உள்ளிட்ட அனைத்து விதமான உயிரினங்களும் சேர்ந்ததே உயிர்க்கோளம் எனப்படும். உயிர்க்கோளம் என்பது உயிர் என்று பொருள்படும் 'பயோஸ்'(Bios) என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து இது தோன்றியது. நீங்கள் மேலே கண்ட மூன்று இயற்கை அமைப்பை உள்ளடக்கிய நிலம், நீர், காற்று ஆகியவை எங்கு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்கிறதோ அங்குதான் உயிர்கோளம் வளர்ச்சிபெறும். ஆகவே, இம்மூன்று இயற்கையான அமைப்புகளின் உள்பாகத்தில் உயிர்கள் வாழ்கின்றன.

மேற்கூறிய விவாதத்திலிருந்து இவற்றை தனித்தனி இயற்கை அமைப்பாக நாம் கற்றாலும் அவை உண்மையிலேயே ஒன்றுடன் ஒன்று ஆழ்ந்த தொடர்பு கொண்டவையாகவும், ஒன்றை ஒன்று சார்ந்திருப்பவையாகவும் உள்ளன. நாம் ஓர் இயற்கை அமைப்பை மற்றொன்றின் முக்கிய பங்கு இல்லாமல் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. எனவே தான், பூமி ஓர் ஆழ்ந்த உள்தொடர்பு கொண்ட அமைப்பாகக் கருதப்படுகிறது. நாம் நம்மைச் சுற்றியுள்ள அனைத்துப் பொருட்களையும், நம்மையும் சேர்த்து மற்றொன்றை பாதிக்காமல் பிரித்து பார்க்க முடியாது. பின்வரும் பிரிவுகளில் இயற்கை தோற்றங்களில் சிலவற்றை விரிவாகக் கற்போம்.

## கற்கோளம் :

**இப்பாடத்தைப் பயன்படுத்தி கீழே உள்ள எவ்வகையான வினாக்களுக்கு உங்களால் பதிலளிக்க முடியும் கீழே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து சரியானவற்றை (✓) செய்யவும்.**

- டெல்டாக்கள் எவ்வாறு உருவாகின்றன?
- எரிமலை வெடித்தல் மற்றும் நிலநடுக்கங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன?
- மலைகள் ஏன் உள்ளன?
- நதிகளுக்கிடையில் பள்ளத்தாக்குகளும் மலை இடுக்குகளும் எவ்வாறு ஏற்படுகின்றன?

## நிலவடிவங்கள்

கற்கோளம் நாம் வாழும் நிலப்பகுதியுடன் தொடர்புடையது. நீங்கள் சென்ற பாடத்தில் கண்டது போல், பூமியின் மேல்பாகம் சமமற்று காணப்படுகிறது. மிகவும் ஆழமான படுகைகள் தற்போது பெருங்கடல்களால் நிரப்பப்பட்டுள்ளன. மேலும் பல கண்டங்களும் காணப்படுகின்றன. இவற்றை புவியியலாளர் முதல் தர நிலவடிவங்கள் அல்லது பெருங்கடல்கள் மற்றும் கண்டங்களாக பிரிக்கப்பட்ட பூமியின் மேல்பாகத்தின் முதன்மை பிரிவு என்று அழைக்கின்றனர்.

கண்டங்களின் மேற்பரப்பு சமமாக இல்லை. சமவெளி தாழ்வு நிலங்கள், பீடபூமிகள், உயரமான மலைகள் போன்றவற்றை கொண்டுள்ளன. இவை பூமயின் உட்பகுதியில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவே ஆகும். மலைகள், சமவெளிகள், பீடபூமிகள் முத-யவை இரண்டாம் தர நில வடிவங்கள் ஆகும்.

இந்த காலியான உலகப்படத்தில் கண்டங்களின் பெயர்களையும் பெருங்கடல்களின் பெயர்களையும் எழுதி, கண்டங்களுக்கு பழுப்பு நிறமும் பெருங்கடல்களுக்கு நீல வண்ணமும் தீட்டுக.




*வரைபடம் -1 : உலக வரைபடம் கண்டங்களும் பெருங்கடல்களும்*

## வெட்டி ஒட்டும் புதிரும் தட்டுக்களின் நகர்வும்

முன் பாடத்தில் எத்தனை கண்டங்கள் வெட்டி ஒட்டும் புதிரின் துண்டுகளைப் போல் உள்ளன என்பதையும், அறிவியலாளர்கள் நினைப்பது போல் தொடக்கத்தில் அனைத்துக் கண்டங்களும் எவ்வாறு ஒட்டியிருந்தன என்பதையும் பிறகு அவை எவ்வாறு பிரிந்து, படிப்படியாக நகர்ந்தது என்றும் தற்போதுள்ள இடங்களுக்கு வந்தன என்பதையும் கண்டோம். புவியியலாளர்கள் பல வருடங்கள் கவனமாக ஆராய்ந்த பின்னர் அனைத்துக் கண்டங்களும் பெருங்கடல்களும் தட்டுகள் என்றழைக்கப்படும் நிறையுள்ள பாறைகளின் அடித்தளத்தின் மீது அமைந்துள்ளன என்ற முடிவுக்கு வந்தனர். பூமியின் மீது ஏழு முக்கிய தட்டுகளும் பல சிறிய தட்டுகளும் உள்ளன. (பெரிய தட்டுகள்: வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆப்பரிக்கா, ஆஸ்திரேலியா, அண்டார்க்டிக், யூரேசிய மற்றும் பசுபிக் தட்டுகள். சிறிய தட்டுகளில் இந்தியா, அரேபிய தட்டுகள் அடங்கும். இந்த தட்டுகளின் சிறப்பு என்ன? இந்த தட்டுகள் உண்மையில் பூமியின் நடுப்பகுதியின் மேல் மிதக்கின்றன. அவை தொடர்ந்து தள்ளப்பட்டுக்கொண்டே இருப்பதால் அவை மெல்ல நகர்ந்த வண்ணம் உள்ளன. அவை மிகவும் நிதானமாக நகர்வதால் அவற்றின் இயக்கத்தை நம்மால் உணர முடியாது. இந்த இயக்கத்தின் விளைவால் ஒரு தட்டு அதன் அருகிலுள்ள மற்றொரு தட்டினைத் தள்ளுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

டெக்டானிக் என்னும் சொல் Tekton எனும் கிரேக்க மொழியிலிருந்து தோன்றியது. இதன் பொருள் தச்சர் அல்லது உருவாக்குபவர். இது மீண்டும் தச்சன் என்று பொருள்படும் தக்ஷன் என்னும் சமஸ்கிருத மொழிச் சொல்லுடன் தொடர்புடையதாக உள்ளது.




படம் 2: உலக தட்டுகளின் வரைபடம்


இரண்டு தட்டுகளும் சந்திக்கக்கூடிய, ஒன்றையொன்று தள்ளக்கூடிய பகுதியில் அவற்றால் ஒன்றின் மீது மற்றொன்று அதிக அழுத்தத்தை செலுத்துகிறது. ஒரு தட்டு நடுப்பகுதியின் கீழேயும் மற்றொன்று மலைகளின் தொடர் போன்று மேலேயும் தள்ளப்படுகின்றன. இந்த தட்டுகளின் இயக்கத்தை கண்ட நகர்வு தட்டு (டெக்டானிக் பிளேட்(Tectonic plates)) என்பர். இச்செயல் முறையால் நில நடுக்கங்கள் போன்றவை ஏற்படுகின்றன.

தற்போது இத்தட்டுகள் ஏன் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன? அவற்றை தள்ளுவது யார்?


**கடல்தரை விரிதல்** : கடலின் கீழ்ப்பகுதியிலுள்ள மேல்பாகத்தை ஆராயும் புவியியலாளர்கள் பசுபிக் பெருங்கடல் போன்ற சில பெருங்கடல்களின் கீழ் நடுப்பெருங்கடல் முகடுகள் அல்லது மலைத்தொடர்கள் உள்ளன என்பதைக் கண்டறிந்துள்ளனர். இவை பூமியின் நடுப்பகுதியிலிருந்து லாவா மேல் எழும்புவதால் உருவாக்கப்பட்டவை. முகடுகளின் மீது இந்த வெடிப்புகள் பசால்ட் பாறைகளால் ஆன புதிய பெருங்கடல் தரையை உருவாக்குகின்றன. இப்பாறைகள் பின்னர் முகடுகளின் பக்கவாட்டில் பரவுகின்றன. இவ்வாறு நடுப்பெருங்கடல் முகடுகள் பூமியின் மேல்

SCERT TELANGANA


படம் 2.1 : பெருங்கடல்களின் அடிபாகம்





*நிலை-1*
*வெப்பச்சலன நீரோட்டங்களின் அழுத்தத்தால் ஏற்படும் கண்டவெடிப்பு*



*நிலை-2 பூமியின் மேல்பாகத்தில் வெடிந்த பகுதி பிளவுபள்ளத்தாக்கு, அழுத்ததை ஏற்படுவதை சிதைக்கிறது*



*நிலை-3*
*அழுத்தபகுதிகளில் பெருங்கடல் தங்கி, ஓரப்பகுதிகளில் வெடிப்பு மற்றும் பிளவுகளை ஏற்படச் செய்கிறது*



*நிலை-4 தற்கால பெருங்கடல்*

புதிய மேல்பாகத்தை கொண்டு விளங்குகின்றன. இந்த புதிய மேல்பாகம் தட்டினை மெல்ல முகட்டிலிருந்து புறத்தே தள்ளுகிறது. இது பெருங்கடல்தரை விரிவடைதலுக்கு வழிவகுக்கிறது.

**ஓரங்களில் செயற்பாடுகள் : தட்டுகளின் ஓரங்களில் அல்லது தட்டுகள் சந்திக்கும் எல்லைகளில் புவியியல் செயல்பாடு உயர்ந்த அளவில் காணப்படுகிறது. புதிய மேல்பாகம் எவ்வாறு உருவாகிறது என்பதையும் அது நடுப்பெருங்கடல் முகடுகளில் பரவி பெருங்கடல் தரை விரிவடைய எவ்வாறு வழிவகுக்கிறது என்பதையும் பார்த்தோம். அதேபோல் ஒரு தட்டு, மற்றொரு தட்டை சந்திக்கும் தட்டுகளின் ஓரங்களில் நிலையாக உள்ள தட்டின் கீழ் நுழைந்து விடுகிறது. உண்மையில் இந்த உள்வரும் தட்டு பூமியின் நடுப்பகுதிக்குச் சென்று நடுப்பகுதியின் வெப்பத்தால் உருகிவிடுகிறது. இவ்வாறு செல்லும் தட்டு, அதனுடன் தட்டின் மற்ற பகுதியையும் இழுத்துக் கொள்கிறது. இது மீண்டும் பெருங்கடல் முகடுகளின் அருகில் புதியதாய் உருவான பெருங்கடல் தரையை இழுத்துவிடுகிறது. எடுத்துக்காட்டாக இந்திய தட்டு (தென்னிந்தியாவின் தக்காணப்பீடபூமி இதன் மீது நிலைகொண்டுள்ளது) யூரேஷியன் தட்டினைத் தள்ளுவதால் அது இமயமலைகளின் கீழ்பகுதிக்குச் செல்கிறது. சற்று கற்பனை செய்துப் பாருங்கள் - உங்கள் எதிர்காலத்தில் ஒரு நாள் நீங்கள் நிற்கும் இடம் இமயமலையின் கீழ் சென்று பூமியின் நடுப்பகுதியில் இணைந்து விடுகிறது. உண்மையில் இமயமலைகள் இந்த செயல்முறையில் தான் உருவாக்கப்பட்டன. அதாவது இந்திய தட்டு, யூரேஷியன் தட்டிற்குள் தள்ளப்படுதல் ஒரு மேசையின் மீது துணியை விரித்து அதை ஒரு பக்கத்திலிருந்து தள்ளினால் அது மடிந்து மலைகள் போன்ற வடிவத்தினை**

- இமயமலைகள், ஆண்டீஸ், ராக்கி மலைத்தொடர்களை உலக வரைபடத்தில் குறி. அவை அவ்விடங்களில் ஏன் தோன்றின? காரணங்களைக் கூறு.
- பூமியின் மீதுள்ள அனைத்துப் பாறைகளும் நடுப்பெருங்கடல் முகடுகளில் தோன்றியனவா?
- புவியியலாளர்கள் இமயமலைகளில் கடல் விலங்குகளின் படிமங்களைக் கண்டறிந்தனர். இவற்றில் சிலவற்றை பல வீடுகளில் ‘சால கிராமங்கள்,’ என்று வழிபடப்படுகின்றன. இமய மலைகளில் இந்த படிமங்கள் எவ்வாறு உருவாகி இருக்கும் என்று நினைக்கிறாய்?
- நில நடுக்கங்கள் மற்றும் சரிமலைகளைப் பற்றி விளக்கும் செய்தித்தாள்கள் அல்லது இதழ்களில் வரும் கட்டுரைகள், செய்திகள் போன்றவற்றை சேகரி. இவற்றின் மீது ஒரு விளக்கப்படக் கோப்பினைத் தயாரி. அவை எவ்வாறு ஏற்பட்டன, மனித வாழ்க்கையை அவை எவ்வாறு பாதிக்கின்றன போன்ற கருத்துகள் அடங்கியிருத்தல் வேண்டும்.

SCERT TELANGANA

ஏற்படுத்தும்). இத்தட்டுகளின் பல எல்லைப் பகுதிகள், எரிமலை வெடிப்புகள், நில நடுக்கங்கள் போன்ற தன்மைகளைக் கொண்டிருக்கும். அவை பெரும்பாலும் நிலநடுக்கத்தாலும் எரிமலைகளாலும் அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதிகளாக இருக்கும்.

## குறைவேக இயக்கங்கள் மற்றும் திடீர் இயக்கங்கள்


மேலே உள்ள பாடப்பிரிவில் கற்கோளத்தின் இரண்டு வகையான மாற்றங்களைக் கண்டோம். முதலில் மிகக் குறைந்த வேக இயக்கங்கள் பூமியின் மேல்பாகம், கண்டத் தட்டுகளின் இயக்கங்கள் மற்றும் அவை பூமியின் நடுப்பகுதிக்குத் திரும்புதல் போன்றவை ஏற்படுகிறது. இரண்டாவது, திடீரெனச் செயல்படும் எரிமலை வெடிப்புகள் மற்றும் நிலநடுக்கங்கள். திடீர் இயக்கங்கள் அழிவுத்தன்மை கொண்டது. அதிக அழிவினை ஏற்படுத்தும், அதே சமயம், நிலவடிவத்தின் மாற்றங்களுக்கும் அவை வழிவகுக்கும்.

**எரிமலைகள் :** எரிமலையின் படத்தைப் பார். எரிமலைகள் என்பவை பூமியின் நடுப்பகுதியில் இருக்கும் உருகிய பாறைப் பொருள் வெடித்து பூமியின் புறப்பரப்பை அடைந்து திடமாகிறது. இந்த உருகிய பொருளுடன் நீராவி, புகை மற்றும் பல்வேறு வாயுக்களின் வடிவங்களும் பூமியின் ஆழத்திலிருந்து வெளியே வருகின்றன. புகை, சாம்பல் மற்றும் தூசு போன்றவை வளிமண்டலத்தில் பரவிவிடுகிறது. உருகிய பாறைப்பொருள் குளிர்ந்து கடினமான பாறைகளான அனற் பாறைகளை (Igneous Rocks) உருவாக்குகின்றன.



படம் 2.2: ஸ்ட்ராம்பொலி எரிமலை (உலகின் மிகவும் சுறுசுறுப்பான எரிமலை அல்லது மத்திய தரைகடலின் களங்கரை விளக்கம் எனப்படுகிறது.

லாவாவின் சிறுபாகம் புறப்பரப்பிற்கு வராமல் பூமிக்குள்ளேயே குளிர்ந்து பாறைகளாக மாறுகின்றன. இவற்றை குறுக்கீட்டு நிலவடிவங்கள்(Intrusive landforms) என்பர். அவை சாதாரணமாக பழைய பாறைகளால் மூடப்பட்டிருக்கும். மூடப்பட்டிருக்கும் பாறைகளின் அரிப்பினால் சில சமயங்களில் அவை வெளிப்படையாக காணப்படும். லாவாவின் ஒரு பாகம் பூமியின் புறப்பரப்பின் மீது ஊற்றப்படும் வெளிப்படையான நிலவடிவங்களால் உருவாகின்றன. அவை அனைத்தும் எரிமலைகளிலிருந்து வருவதில்லை. அவற்றில் சில வெடிப்புகளிலிருந்து வெளியேறி புறப்பரப்பில் ஊற்றப்பட்டு




படம். 2.3: எரிமலையின் அமைப்பு

**உலகின் முக்கியமான எரிமலைகள்**

மௌண்ட் எட்னா, ஸ்ட்ராம்பொலி – சிசிலி
மௌண்ட் பெலீ – மேற்கிந்தியதீவுகள்
மௌண்ட் விசுவியஸ் – இத்தாலி
பியூஜியாமா – ஜப்பான்
கோடோபாக்ஸி – ஈக்வடார்
மாயன் – பிலிப்பைன்ஸ்
பேரன் நார்கொண்டம் – இந்தியா
கிளிமாஞ்சாரோ – கென்யா
கிரகடோவா – இத்தோனேஷியா
மௌண்ட் மௌனாலோ – ஹவாய்த்தீவு

SCERT TELANGANA

- எரிமலை வெடிப்புகளால் ஏற்படும் இழப்புகளைக் குறிப்பிடுக.


**பரவப்படுகிறது. இதுபோல் லாவா பாய்தல் தக்காணத்தில் பலமுறை நிகழ்ந்து விரிவான லாவா பீடபூமி ஏற்பட வழிவகுத்தது.**

### உள் மற்றும் வெளிச் செயல்முறைகள் :

இதுவரை நாம் பூமியின் ஆழத்திலிருந்து தோன்றும் செயல் முறைகளால் கற்கோளம் உருவாகிறது என்பதைக் குறித்து கற்றோம். இவை பூமியின் உள் செயல்முறைகளாகும். அவை மில்லியன் கணக்கான ஆண்டுகளாய் செயல்பட்டு

### பசுபிக் நெருப்பு வளையம்

பல பத்தாண்டுகளாக, புவியியலாளர்கள் பசுபிக் பெருங்கடலின் ஓரங்களைச் சுற்றி அதிக எண்ணிக்கையில் நில நடுக்கங்களும், எரிமலை வெடிப்புகளும் நடந்து வருவதை கவனித்துள்ளனர். உலகிலுள்ள அனைத்து சுறுசுறுப்பாக இயங்கும் எரிமலைகளில் நான்கில் மூன்று பாகம் பசுபிக் பெருங்கடல் ஓரத்திலேயே அமைந்துள்ளன. கண்டத்தட்டு நகர்வுக் கோட்பாடு இந்த அமைப்பிற்கான விளக்கத்தை தருகிறது. பசுபிக் படுகையைச் சுற்றிலும் தட்டின் எல்லைகள் காணப்படுகின்றன. இந்தத் தட்டு எல்லைகளின் வழியில் பல எரிமலைகளும் நிலநடுக்கங்களும் ஏற்படுவதால், இப்பகுதிக்கு ‘பசுபிக் நெருப்பு வளையம்’ என்னும் பெயர் வழங்கலாயிற்று.




*படம் 2.4: பசுபிக் நெருப்பு வளையம்*

இன்றும் தொடர்ந்து வருகின்றது. ஆனால் நம் உலகை இந்த செயல்முறைகள் மட்டும் வடிவமைக்கவில்லை. நீர்க்கோளம், வளிமண்டலம் போன்றவையும் (அதாவது நீர் மற்றும் காற்று) பூமியின் புறப்பரப்பை வடிவமைப்பதில் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. நாம் அவற்றின் பக்கம் திரும்புவோமாக.

உள் செயல்முறைகளால் பாறைகளும் மலைகளும் எவ்வாறு தோன்றின என்பதை நாம் கண்டோம். வெளி ஆற்றல்களான நீரும் காற்றும் தீவிரமாக செயல்பட்டு பூமியின் புறப்பரப்பை பாதிக்கச் செய்கின்றன. இந்த ஆக்க மற்றும் அழிவுச் சக்திகளின் கலப்பால் தற்கால நிலவடிவங்களில் பெரிய வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளன. இந்த வெளிச் செயற்பாடுகளால் ஒருபுறம் பாறைகள் மற்றும் மலைகளின் மேற்பரப்பு தேய்ந்து விடுகின்றன.

பிறகு இந்த தேய்ந்து போன துகள்கள் தாழ்வான நிலங்களிலும் நதிப் படுகைகளிலும் படிந்துவிடுகின்றன. தேய்ந்து தூளாக்கப்பட்டு வேறிடத்தில் விடப்படும் செயல்முறைகள் பூமியின் புறப்பரப்பை சாதாரணமாக சமன்படுத்துகின்றன.

**காற்று மற்றும் நீரால் வடிவமைக்கப்படும் நிலவடிவங்களை புவியியலாளர்கள் மூன்றாந்தர நில வடிவங்கள் என்பர். இந்த நிலவடிவங்களில் சிறப்புத் தன்மைகளான வளைந்த மலைகள், பள்ளத்தாக்குகள், டெல்டாக்கள், மணற்குன்றுகள் போன்றவை அடங்கும். சில செயல்முறைகளான சிதைத்தல், அரித்தல், எடுத்துச்செல்லுதல், வண்டல்படிவம் போன்றவை இந்த நில வடிவங்கள் ஏற்பட மிகவும் பொறுப்பு வகிக்கின்றன..**

SCERT TELANGANA

இது நிலத்தேய்வு முறை (Denuddion) எனப்படுகின்றது. நிலத்தேய்வு என்பது தொடர்ச்சியான செயல்முறையாகும். இன்று நாம் காணும் தாழ் நிலங்கள் ஒரு காலத்தில் மலைகளாகவும் பீடபூமிகளாகவும் இருந்தன. நிலத்தேய்வு செயல் முறைகளால் நிலவடிவங்கள் தொடர்ந்து மாற்றமடைந்து வருகின்றன. ஆனால் இந்த மாற்றங்கள் மிகவும் குறைவான வேகத்தில் நடைபெறுகின்றன. மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் போன்றவற்றின் வடிவங்கள் மண் அரிப்பு சுழற்சி அல்லது புவி புறவடிவச் சுழற்சி என்னும் முறை வாயிலாக மாற்றமடைந்த வண்ணம் உள்ளன.

### காற்றும் நீரும் பூமியின் புறப்பரப்பை எவ்வாறு மாற்றுகிறது?

மேற்கூறிய பிரிவுகளில் நாம் கண்டது போல், பூமியின் நடுப்பகுதியிலிருந்து வரும் உருகிய பாறைப் பொருட்களால் பாறைகள் உருவாகின்றன. இப்பாறைகள் மில்லியன் கணக்கான ஆண்டுகளில் பள்ளத்தாக்குகளாகவும் இளகிய மண்ணைக் கொண்ட சமவெளிகளாகவும் உருமாறின. நதிப்பள்ளத்தாக்குகள் மலைகளையும், பீடபூமிகளையும் இரு கூறுகளாக வெட்டின. இவை எவ்வாறு நிகழ்ந்தன? இவை அனைத்திற்கும் பொறுப்பு எவை? இவற்றில் சிலவினாக்களுக்கு உன்னால் விடையை கூற முடியுமா? உன்னைச் சுற்றியுள்ளவற்றைப் பார்த்ததிலிருந்து சில எடுத்துக்காட்டுகளை தர உன்னால் முடியுமா?

உண்மையில் உறுதியான முதன்மைப் பாறைகள் சிறுசிறு துண்டுகளாக உடைக்கப்படுகின்றன. இந்த சிறுதுண்டுகள் அதன் மூலப் பாறையிலிருந்து வெட்டப்பட்டு மற்ற தாழ்வான இடங்களுக்கு அரித்துச் செல்லப்பட்டு அங்கே படிகின்றன. இந்த செயல்முறை முறையாக கீழ்கண்டவாறு விளக்கப்படுகிறது.

**i) சிதைத்தல் (Weathering) :** வளிமண்டல அல்லது வானிலை விசைகளால் பாறைகள் படிப்படியாக தூளாக்கப்படுவதை சிதைத்தல் என்கிறோம். பாறைகள் மீது வெப்பம் வெளிப்படையாக படும்போது விரிவடைந்தும் குளிர்ச்சியடையும்போது சுருங்கவும் செய்கிறது. இது ஒவ்வொரு நாளிலும் இரவும் பகலும், கோடை மற்றும் குளிர் காலங்களிலும் ஓராண்டிற்குப் பிறகு மற்றோர் ஆண்டிலும் தொடர்ந்து நிகழ்கிறது. புறப்பரப்பில் உள்ள பாறை விரிவடைந்தும், சுருங்கியும் மறுபடியும் விரிவடைந்தும் சுருங்குவதால் அது மெல்ல சுலபமாக உடையத் தொடங்குகிறது. இந்த செயல் முறைக்கு காற்றில் உள்ள நீரும் ஈரப்பதமும் காரணமாகிறது. பாறையிலுள்ள வேதிப் பொருட்களுடன் நீர் வினைபுரிவதால் பாறை மேலும் வலுவிழக்கிறது. பாறைகள் வலுவிழக்கப்படும் மற்றும் உடையும். இந்த முறைகளை சிதைத்தல் என்பர். ஒரு பெரிய பிளவுப்பட்ட பாறையைப் பார்த்தால் பாறையின் உள்பாகத்தில் உள்ள நிறமானது வெளி அடுக்கில் உள்ள நிறத்திற்கு வேறுபட்டு காணப்படுவதை நீங்கள் கண்டறியலாம். வெளிப் புறத்தில் உள்ள நிறம் இந்த சிதைத்தல் செயல் முறையால் மாற்றமடைந்துள்ளது. வெளிப் புறத்திலுள்ள பாறையின் சிறு துண்டுகளை உடைப்பது பாறையின் உள்பாகத்தில் உள்ளவற்றை உடைப்பதைக் காட்டிலும் எளிதாக இருப்பதை நீங்கள் அறியலாம். பாறைகள் வெளிபுறத்தைக் காட்டிலும் உள்புறத்தில் கடினமடைந்துள்ளன என நீ ஏன் நினைக்கிறாய்?

- பாறைகளின் மேல் பாகத்தை விட உள்பாகம் ஏன் கடினமாக உள்ளது?

**ii) அரிப்பு (Erosion) :** பாயும் நீருக்கும் வீசும் காற்றுக்கும் அதிக ஆற்றல் உண்டு. அவை உயரமான இடங்களில் உள்ள பாறைகளை மற்றும் மண் போன்றவைகளை மெல்ல பழுதடையச் செய்து அல்லது வெட்டிவிடச் செய்கிறது. மழை, ஆறு, நிலத்தடி நீர் பாய்தல், கடல் அலைகள், பனியாறுகள் போன்ற பல வழிகளில் நீர் செயல்படுகிறது. வீசும் காற்று, புயல்கள், திடீர் காற்றுகள், நிலையான காற்றுகள் போன்ற பல வடிவங்களையும் எடுக்கிறது. இந்த சிதைத்தல் காரணிகளால் பூமியின் புறப்பரப்பு சுறுசுறுப்பாக பெயர்க்கப்படுவதை அரிப்பு என்கிறோம்.

**iii) வண்டல் நகர்த்தல் (Transportation) :** சிறு பாறைகள், கப்பி, மண், வழவழப்பான மண் வடிவத்திலுள்ள அரிக்கப்பட்ட பொருட்கள் காற்றாலும், நீராலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கொண்டு செல்லப்படுவதை வண்டல் நகர்த்தல் என்பர். ஆறுகளும் காற்றுகளும் அலைகளும் கூட ஓரிடத்திலுள்ள மண்களையும் பாறைகளையும் பெயர்த்து தூரத்திலுள்ள இடங்களுக்கு சில சமயங்களில் 100கி.மீ தூரத்திலுள்ள இடங்களுக்கும் எடுத்துச் செல்கின்றன.

**iv) படிதல் (Deposition) :** ஆறுகள் மற்றும் காற்றுகளின் வேகம் குறையும் போது அவை அரிக்கப்பட்ட பொருட்களை மேற்கொண்டு எடுத்துச் செல்லும் ஆற்றலை இழந்துவிடுவதால், அவற்றை அங்கேயே குவித்துவிடுகின்றன. இந்த குவிக்கப்பட்ட கூளங்கள், சமளிகள் மற்றும் நதிப்படுகைகள் உருவாக துணைபுரிகின்றது. இவற்றின் பெரும்பாகம் உண்மையில் ஆறுகளால் கடலுக்கு கொண்டு செல்லப்படுகிறது. அவை கடலின் அடிப்பகுதியில் அடுக்கு மேல் அடுக்குகளாக திரட்டப்பட்டு படிவுப் பாறைகளாக உருமாற்றமடைகின்றன.

இந்த செயல்முறையின் அனைத்து நான்கு கூறுகளும் உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு விகிதங்களில் மலைச்சரிவு, பாறைகளின் அமைப்பு, உள்ளூர் வானிலை மனிதர்களின் குறுக்கீடு போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு ஒரே மாதிரியாக நடைபெறுகின்றது.

**நீரின் பணிகள்**

ஒரு நதியின் பிறப்பிடத்திலிருந்து அது இறுதியாக சேரும் இடம் வரை அதன் போக்கினை உன்னால் கணக்கிட முடியுமா? அது எவ்வாறு பாறைப் பொருட்களை அரித்து, எடுத்துச் சென்று, பதிவு செய்கிறது என்பதை ஊகிக்க முடியுமா?



படம் 2.4: V வடிவ பள்ளத்தாக்கு

ஒரு நதியின் பணியானது உயரமான மலைகளில் அது தோன்றும் இடத்திலிருந்து ஆரம்பமாகிறது. ஒரு நதியின் பாய்ச்சல் மிகவும் வேகமானது. அது செங்குத்துச் சரிவுகளில் இறங்கும் போது மலையை நீள்வாட்டில் வெட்டுவதில் பேராற்றலை வெளிப்படுத்துகிறது. அதன் விளைவால் ஓர் ஆழமான பள்ளத்தாக்கு உருவாகிறது. அப்பள்ளத்தாக்கு அடிப்பகுதியில் குறுகலாகவும் மேல் பகுதியில் அகன்றும் காணப்படுகிறது. இதை பொதுவாக V வடிவ பள்ளத்தாக்கு என்பர். இந்த நிலையில் அது பேராற்றலைப் பெற்றும் மிகவும் பளுவான, உறுதியான பாறைகளின் மீது நகர்ந்து செல்லும்.

படம் 2.5: ஆற்றுப்பள்ளத்தாக்கு (கிராண்ட் கேன்யான்)



**உங்களுக்குத் தெரியுமா?**

உலகின் மிகப்பெரிய ஆற்றுப் பள்ளத்தாக்கு கொலராடோ நதியின் மீது உள்ளது. இது 466 கி.மீ பரப்பினை உடையது. இதன் ஆழம் 1.6கி.மீ, அகலம் 188மீ முதல் 29கி.மீ வரை. இந்த மலை இடுக்குகள் அணைகள் கட்ட ஏற்றவையாகும். இது ஏன் என்று உங்களால் கூற இயலுமா?

சிலவற்றில், பாறைகள் உறுதியாக இருக்கும் இடங்களில் நதியானது மிகவும் குறுகலான பள்ளத்தை வெட்டும் போது அதன் பக்கங்கள் மிகவும் செங்குத்தாக இருப்பதால் மலை இடுக்குகள் (Gorges) ஏற்படுகின்றன. ஆந்திரப்பிரதேசத்தில் கோதாவரி நதியின் மீதுள்ள பைசன் மலை இடுக்கு, காஷ்மீரின் சிந்து மலை இடுக்கு ஆகியவை இதற்கு உதாரணங்களாகும்.



படம் 2.6: இண்டஸ் கோர்ஜ்

அரிப்பின் முக்கியமான மற்றொரு வடிவம் ஆற்றுப்பள்ளத்தாக்கு (Canyan) செங்குத்தான ஒரேவிதமானப் பக்கச்சரிவுகள், மலை இடுக்குகளைப் போல் ஆழம் கொண்டதாக இருக்கும். மலை இடுக்கு பகுதிகளின் அகலம் கீழ்பாகத்திலும் மேல் பாகத்திலும் சற்று ஏறக்குறைய சமமாகவே இருக்கும். அதற்கு மாறாக ஒரு ஆற்றுப் பள்ளத்தாக்கு கீழ்பாகத்தினைவிட மேல்பாகத்தில் அகன்று காணப்படும். மலைப் பகுதிகளில் சரிவுகள் மிகவும் செங்குத்தாக உள்ளப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் நீர் வீழ்ச்சிகள் உள்ளது.

பேராற்றல் வாய்ந்த நீர் வீழ்ச்சிகள் பாறைகளை அடிப்பகுதியைத் தோண்டி எடுத்து மூழ்கடிக்கும் குளத்தை ஏற்படுத்துகின்றன.

நதியானது சமவெளியில் நுழையும் போது அதன் சரிவு மென்மையானதாக இருப்பதால் நதியின் வேகம் குறைகிறது. தற்போது அது பளுவான பொருட்களை எடுத்துச் செல்லும் ஆற்றலைப் பெற்றிருப்பதில்லை. நதிகளின் கரைகளில் அல்லது படுகையில் அவற்றை பதியச் செய்கின்றன. சில சமயங்களில் ஆற்றில் வெள்ளம் ஓடும்போது அது பேராற்றல் பெற்று மண்ணை வெட்டுகிறது. (வண்டல்) வெள்ளம் பாயாத நேரத்தில் வண்டலை பதியச் செய்கிறது. இது போலவே பரந்த வெள்ளச் சமவெளிகளான கங்கை சமவெளி அல்லது கிருஷ்ணா, கோதாவரி சமவெளிகள் ஏற்பட்டன. வெள்ளநீர் மீண்டும் வரும்போது நதிப்படுகை படிவுகளின் விளைவால் உயரமாக மாறுகிறது. பிறகு அதன் போக்கினை மாற்றிக்கொண்டு புதிய வழியில் வெட்டிவிடப்படுகிறது. இதன் விளைவால் ஒரு சமவெளியில் நதியின் போக்கு தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கும். வெள்ளச் சமவெளிகளில் நதியானது அவ்வப்போது வளைவுகளையும் உடைய குருட்டாறுகள்(Meanders) எனும் பாம்பு போன்ற மென்மையான திருப்பங்களை ஏற்படுத்தும் 2.8வது படத்தைபார். வளைவுகளின் ஓரங்களில் உள்ள படிவுகளால் வளைவுகளின் சுருக்குப் பாதையின் மடிப்புகள் மிகவும் அருகருகே வரும். காலப்போக்கில் வளைவுகளின் சுருக்குப் பாதை நதிகளிலிருந்து வெட்டி விடப்பட்டு ஒரு வெட்டிவிடப்பட்ட ஏரியை உருவாக்கும். இதை குளம்பு வடிவ ஏரிகள் (Ox-bow) என்பர். ஒரு நதி கடலை அடையும் போது இதுவரை கடலில் கலக்காத நுண்பொருட்கள் அதன் முகத்துவாரத்தில் படியச் செய்து ஒரு டெல்டாவை உருவாக்குகிறது.


- நீர் வீழ்ச்சிகள் எவ்வவாறு பயன்மிக்கவையாக உள்ளன என்பதை விளக்கு.
- நம் மாநிலத்தில் உள்ள நீர்விழ்ச்சிகளைப் பற்றிய தகவலைச் சேகரி.
- நீர்வீழ்ச்சிகளின் படங்கள் சிலவற்றைச் சேகரித்து சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் ஒட்டவும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

1. உலகின் உயரமான நீர்வீழ்ச்சி ஏஞ்சல் நீர்வீழ்ச்சி. உயரம் 979மீ வெனிசுலாவில் உள்ள சுருன் நதியிலிருந்து பாய்கிறது
2. உலகத்தில் உள்ள நீர்வீழ்ச்சிகளில் இரண்டாவது மிக உயரமான நீர்வீழ்ச்சி துகலா நீர்வீழ்ச்சி உயரம் 947மீ தென் ஆப்பிரிக்காவின் துகலா ஆற்றிலிருந்து பாய்கிறது
3. இந்தியாவின் மிக உயரமான நீர்வீழ்ச்சி ஜோக் நீர்வீழ்ச்சி அல்லது ஜெரோசப்பா நீர்வீழ்ச்சி. உயரம் 253மீ. கர்னாடக மாநிலத்தில் உள்ள சாராவதி நதியின் மீது உள்ளது.




படம். 2.8: குருட்டாறுகள்




படம்.. 2.7: பள்ளச்சமவெளி உருவாதல்

டெல்டா என்னும் சொல் கிரேக்க எழுத்தான Δ (டெல்டா) என்னும் எழுத்திலிருந்து தோன்றியது. இது முக்கோண வடிவத்துடன் மிகவும் ஒத்துள்ளது.

SCERT TELANGANA

- மனிதன் வாழ்வதற்கு மலைகளுடன் ஒப்பிடும் போது வெள்ளச் சமவெளிகள் மிகவும் ஏற்ற இடமாக ஏன் உள்ளது?
- வெள்ளச் சமவெளிகளில் வாழ்வதால் ஏற்படும் ஆபத்துகள் யாவை?
- மலைகளில் அல்லது வெள்ளச் சமவெளிகளில் மக்களின் வாழ்க்கையைப் பற்றி நீ படித்ததை நினைவு கூர்க?

## பனியாறுகளின் பணிகள் :

மிகவும் குளிர்ந்த பகுதிகளான இமயமலைகள் அல்லது ஆல்ப்ஸ் மலைகளில் பனி அதிக அளவில் பொழிகிறது. அங்கு மழை பெய்வதற்கு பதில் பனிப்பொழிவு இருக்கும். இப்பனி திரண்டு பனிக்கட்டியாக உறுதியாகிறது. அது திரளும்போது வெப்பமான பகுதியை அடையும் வரை மிகவும் குறைவான வேகத்தில் உருகி நகரும். அவ்விடத்தில் பனிகட்டி உருகி ஒரு சிறு நதி தொடங்கும். இது போல்தான் இமயமலைகளில் உள்ள 'கங்கோத்ரி' பனியாறுலிருந்து கங்கை நதி தோன்றுகிறது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> உலகின் மிகப்பெரிய டெல்டா 'சுந்தர்பன் டெல்டா,' ஆகும். இது கங்கை பிரம்மபுத்திரா நதிகளின் முகத்துவாரத்தில் உருவாகிறது. கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிகளும் நமது மாநிலத்தில் டெல்டாக்களை உருவாக்குகின்றன. இவைகளை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

பனிக்கட்டி அதிக நிறையுடன் மெல்ல நகர்வதை 'பனியாறு' (Glacier) என்பர். பாயும் நீரைப் போல் அல்லாமல் பனியாற்றின் இயக்கம் மிகவும் குறைந்த வேகம் கொண்டது. ஒரு நாளில் அதன் இயக்கம் ஒரு சில சென்டிமீடடர்கள் அல்லது அதைவிடக் குறைவாக அல்லது அதிகமாக இருக்கும்.பனியாறுகள் ஈர்ப்பு விசையால் நிதானமாக நகருகின்றன.இழுத்தல் என்னும் செயல்முறையால் ஒரு பனிப்பாறை அரிக்கப்படுகிறது. இம்முறையில் பாறைத்துண்டுகள் மேல்நோக்கி தூக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த பாறைத் துண்டுகளும் நகரும் பனிக்கட்டியும் அது பாயும் பாறைப் பரப்பின் மீது மணல்தாளைப் போன்று செயல்படுகின்றன. கட்டையின் மீதுள்ள சிறு துகள்களை மணல்தாள் நீக்குவதைப் போல் பனியாறுகள் அரிப்பானாக செயல்பட்டு வண்டல் நிறைந்த பாறையை அரிக்கிறது. இழுத்தல் மற்றும் தேய்த்தல் என்னும் இரட்டைச் செயல் முறைகளால் பனியாறுகள் ஒரு U வடிவ பள்ளத்தாக்கினை உருவாக்குகிறது.

பனிப்பாறை உருகி நீராக மாறும்போது, அது பெரிய பாறைகளை எடுத்துச் செல்லும் ஆற்றலைப் பெற்றிருப்பதில்லை. அப்போது அவை மிகப்பெரிய ஒழுங்கற்ற கற்பாளங்களை விட்டுச்செல்கின்றன. பனியாறுகளின் அடிப்பகுதியில் சிறு துகள்களும் கற்களும் விடப்படுகின்றன. பனியாறு தன்னுடன் சிறு கூழாங்கற்கள், வழவழுப்பான ஆற்றுப் படுகைக் கற்கள், மணல் போன்றவற்றைக் கொண்டு வருகிறது. இந்த அனைத்து பொருட்களும் மலைப்பாங்கானச் சரிவுகளில் இருந்தும், பள்ளத்தாக்கின் பக்கங்களின் தரைகளிலிருந்தும் பனிப்பாறையால் பெறப்படுகின்றன. பனிப்பாறையால் எடுத்துச் செல்ல முடியாத பொருள் பனியாற்றின் பல்வேறு பதிவுகளில் தேங்குகிறது. இந்த பொருள் படிவுகளை 'பனியாற்று முறம்பு'(Moraines) என்பர்.


படம் 2.9 பனியாறு

பனியாறு உருகுதல்

SCERT TELANGANA

## அலைகளின் பணி

கடல் அலைகளின் அரிப்பு மற்றும் படிவுகளால் கடலோர நில வடிவங்கள் ஏற்படுகின்றன. கடலலைகள் தொடர்ந்து பாறைகளில் மோதும் போது காலப்போக்கில் அவற்றில் பிளவுகள் ஏற்படுகின்றன. படிப்படியாக பள்ளம் போன்ற குகைகள் அப்பாறைகளில் உருவாகின்றன. இந்த பள்ளங்கள் பெரியதாக மாறும் போது குகைகளின் கூரை மட்டும் எஞ்சியிருக்கும். இவ்வாறு 'கடல் வளைவுகள்'(Sea Arch) தோன்றுகின்றன. மேலும் அரிப்பினால் கூரைகள் உடைந்து சுவர்கள் மட்டும் எஞ்சியிருக்கும். இந்த சுவர் போன்ற அமைப்புகளை 'பாறைக்கூம்பு'(Stacks) என்பர்.



படம். 2.10: கடற்கரை நிலவடிவங்கள்

கடல் நீருக்கு மேல் பெரும்பாலும் செங்குத்தாகத் தோன்றும் செங்குத்து பாறைப்பாங்கான கடலோரத்தை 'கடல் செங்குத்துப்பாறை'(Sea cliff) என்பர். கடல் செங்குத்துப் பாறைகள் சிதைக்கப்படும் போது அவை மேலும் கரடு முரடான நில முனைகளையும் வளை குடாக்களையும் உருவாக்குகின்றன. கடலை பின்தள்ளி கடலுக்குள் நீண்டிருக்கும் நிலத்தின் முனைப்பகுதியை 'நிலமுனை'(Cape) என்பர்.


## வீசும் காற்றின் செயல்

முன் பிரிவில் கற்கோளத்தின் மீது நீரின் செயல்பாட்டைக் குறித்து கற்றோம். இப்பிரிவில் வளிமண்டலத்தின் செயல்பாட்டைக் குறித்து, குறிப்பாக காற்றுகளின் செயல்பாட்டைக் குறித்து கற்போம். காற்று வெப்பப் பாலைவனங்களில் மேலாண்மை கொண்டதாக உள்ளது. உலக நிலபாகத்தில் சுமார் 1/5 பாகம், பாலைவனங்களால் ஆனது. சில பகுதிகள் பாறைகளைக் கொண்டதாகவும், சில கற்பாங்கான பகுதிகளாகவும், மற்றவை மணற்பாங்கானதாகவும் உள்ளன. பலத்த காற்றுகள் மணல் மற்றும் வண்டல் மண்ணையும் அடித்துச் சென்று பெரிய பாறைகளில் மோதச் செய்கின்றன. இவையும்



படம் 2.11: காளான் பாறை

காளான் பாறை (Mushroom Rock) : காற்றுகள் பாறையின் மேல்பாகத்தைவிட அடிபாகத்தை அதிகமாக அரித்துவிடுகின்றன. அது போன்ற பாறைகள் குறுகிய அடிப்பாகத்தையும் அகன்ற மேல்பாகத்தையும் கொண்டுள்ளன. இது பார்ப்பதற்கு காளான் (நாய்க் குடைகளை) போல் உள்ளது. எனவே அவற்றை 'காளான் பாறைகள்' என்பர்.



படம் 2.12: செங்குத்து பெருமலை

செங்குத்து பெருமலை (Inselberg) : நிலத்திலிருந்து திடீரென செங்குத்தாகத் தோன்றும் எஞ்சிய குன்றுகளை செங்குத்து பெருமலை என்பர். அவை செங்குத்தான சரிவுகளையும் வட்டமான மேல்பாகங்களையும் கொண்டிருக்கும்.

தேய்க்கும் மணற்தாளை போன்று செயல்பட்டு கடினப் பாறைகளை அரிக்கின்றன. காற்றின் செயல்பாடு, பாலைவனத்தில் எண்ணற்ற அரிப்பு மற்றும் படிவுகளை உருவாக்குகிறது.

**மணற் குன்றுகள் (Sand Dunes) :** சிதைக்கக்கூடிய மற்றும் நீடித்த காற்றின் செயல்பாட்டால் பல பாலைவனங்களில் நுண்மணல் பெரிய அளவில் திரள்கிறது. இவை மணற் குன்றுகளை உருவாக்கும். இவை பலத்த காற்றுகள் வீசும் போது நகர்ந்து விடக்கூடிய உறுதியற்ற மணல் குன்றுகள். அவை நகரும்போதும் ஓரிடத்தில் படியும்போதும் எண்ணற்ற வடிவங்களை உருவாக்கும். நுண்ணிய தூசு பாலைவன எல்லையைக் கடந்து வீசும் போது அண்டை நிலங்களில் பதிகின்றது. பொதுவாக இவை மஞ்சள் நிறத்திலும் வளம் நிறைந்ததாகவும் இருக்கும். இந்த மண்ணை ‘காற்றடி வண்டல்’(Loess) என்பர். காற்றடி வண்டல் உண்மையிலேயே வளம் நிறைந்த மண்ணாகவும், சுண்ணாம்புச் சத்தினை அதிக அளவில் உடையதாகவும், மிகவும் ஒட்டுத்தன்மை உடையதாகவும் அதிக அளவில் நீரில் ஊறும் தன்மை உடையதாகவும் உள்ளது. காற்றடி வண்டல் படிவுகளால் உருவாக்கப்படும் சமவெளிகளை காற்றடி வண்டல் சமவெளிகள் என்பர்.



படம் 2.13: மணல் குன்றுகளின் பல்வேறு வகைகள்

- காற்றடி வண்டல் சமவெளிகளை டெல்டாவுடன் ஒப்பிடு. அவற்றிடையே நீ காணும் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் யாவை?

### தாவரம் மற்றும் மனிதர்களின் செயல்

இப்பிரிவில் நாம் கற்கோளத்தின் மீது உயிர்கோளத்தின் தாக்கத்தை சுருக்கமாக ஆராய்வோம். மரங்கள், செடிகள், புல்ளிகள் ஆகியவற்றில் எந்த வகைதாவரம் பாறையை தாக்குகின்றன என்று நீ கருதுகிறாய்? அவை பாறைகளில் உள்ள நுண்மையான பிளவுகளிலும் அல்லது ஓட்டைகளிலும் தங்கள் வேலை நுழைப்பதன் மூலம் பாறைகளின் சிதைவிற்கு உதவிபுரிகின்றன. அவை பாறைகளுக்குள் நீரையும் ஈரப்பதத்தையும் கூட நுழைக்கும் தன்மை வாய்ந்ததாக இருப்பதால் பாறைகள் மேலும் சிதைவுறக் காரணமாகின்றன.

மறுபுறத்தில் மண்களின் மேல் உள்ள தாவரம் அல்லது புல்போர்வை மண்ணை எளிதாக தேய்த்தல் அல்லது காற்று அல்லது நீரால் எடுத்துச் செல்லுதலைத் தடுக்கின்றன.

தொழிற்புரட்சிக்குப்பின் மனிதர்கள் நாம் வாழும் பூமியின் மேல்பாகத்தை மாற்றியமைப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றனர்.

- நாம் வாழும் பூமியின் புறப்பரப்பை, தொழிற்புரட்சியால் மனிதர்கள் மாற்றியுள்ளனர். பின்வரும் அம்சங்கள் பூமியின் புறப்பரப்பை எவ்வாறு மாற்றியது என கலந்துரையாடு.

i சுரங்கம் தோண்டுதல்.

ii செங்கல், சிமெண்ட் கற்களால் கட்டிடம் கட்டுதல்.

iii விவசாயம். iv அணைக்கட்டுகள்

SCERT TELANGANA

## முக்கியச் சொற்கள்

1.கண்ட நகர்வு தட்டு 2. அனற்பாறைகள் 3.படிவுப் பாறைகள்
4. காற்றடிச் சமவெளி 5. 'U' வடிவ பள்ளத்தாக்கு 6. பனியாற்று அரிமானம்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. வரைபடம் 2ஐ உற்றுநோக்கி உலகத்தட்டுக்களின் வரைபடத்தை வரை.(AS5)
2. கீழ்கண்டவற்றில் கற்கோளத்திற்கு தொடர்பில்லாத ஒன்றை கண்டறி.(AS1)
   (அ) பைசன்மலை இடுக்கு (ஆ) கிராண்ட் கானியன் (இ) தார்பாலைவனம் (ஈ) ஓசோன்
3. கற்கோளம் எவ்வாறு உருவானது?(AS1)
4. கண்டத் தட்டுகள் எவ்வாறு உருவாகின்றன? அவை படிப்படியாக எவ்வாறு அழிக்கப்படுகின்றன?(AS1)
5. ஆற்றின் பணியால் உருவாகும் நில வடிவங்களை பட்டியலிடு. ஆற்றுப் படிவுகள் மனிதனுக்கு எவ்வாறு உதவுகின்றன?(AS1)
6. கீழ்காணும் அட்டவணையை உருவாக்கி அதில் தகவல்களை நிரப்புக பூமியின் வெளிப்புற மாற்றங்களில் உங்களுக்குக் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை விவரித்து ஒரு சிறுகுறிப்பு வரைக. (பாடத்தில் இதுபற்றி தகவல்களை இல்லையெனில் அக்கட்டங்களை கா-யாக விடவும்)(AS3)

| | வீசும் காற்று | நீர் | பனியாறு |
|---|---|---|---|
| நிலவடிவம் | | | |
| உருவாகும்முறை | | | |

7. பக்கம் 20ல் உள்ள அரிப்பு என்னும் தலைப்பில் உள்ள பத்தியை படித்து உன்ன கருத்தை கூறு..(AS4)
8. உங்கள் சுற்றுப்புறத்தில் பனியாறுகள் ஏன் காணப்படுவதில்லை?(AS1)
9. கடற்கரைகள் எவ்வாறு உருவாகின்றன? சில கடற்கரைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.(AS1)
10. பாலைவனப் பகுதிகள் அதிகரிக்க மனிதனின் வாழ்க்கை முறை எவ்வாறு காரணமாகின்றது?(AS4)
11. கீழ்கண்டவற்றிலிருந்து நில வடிவங்களின் தரவரிசையைக் கண்டறி(AS1)

| வ.எண். | நில வடிவம் | நில வடிவத்தின் தரவரிசை |
|---|---|---|
| 1 | இமயமலைகள் | இரண்டாந்தர நில வடிவம் |
| 2 | பசுபிக் பெருங்கடல் | |
| 3 | ஆசியா கண்டம் | |
| 4 | பைசன் மலை இடுக்கு | |
| 5 | ஜோக் நீர்வீழ்ச்சி | |
| 6 | ராக்கி மலைகள் | |
| 7 | இந்தியப் பெருங்கடல் | |
| 8 | பெரும் பிளவுப் பள்ளத்தாக்கு | |

## செயல்திட்டம்

நில அதிர்வு மற்றும் எரிமலை வெடிப்பு பற்றிய செய்திகள் மற்றும் செய்திப்படங்களை நாளிதழிலிருந்து சேகரித்து சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் ஒட்டவும்.

SCERT TELANGANA

பாடம்
3

# நீர்க்கோளம்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும் மேலாக மழைபெய்து கொண்டே இருக்கிறது. கடல்களிலும் பெருங்கடல்களிலும் உள்ள நீர் எப்போதாவது வற்றிவிடுமா என்று உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டதா? துங்கபத்திரா ஆற்றிலிருந்து வரும் நீர், வயல்களுக்கு நீரை வழங்கிய பின், ஐரோப்பாவில் உள்ள ரைன் ஆற்றில் கலக்குமா? இல்லை, கிருஷ்ணா நதியுடன் இணைகிறது. பூமியிலுள்ள அனைத்து நீர் வளங்களிலிருந்தும் மனிதனுக்கு 1% நீர் மட்டுமே பயன்படுகிறது. பின், இது அனைத்து உயிரினங்களுக்கும் தேவையான நீரை வழங்க இயலுமா? இந்த வினாக்களுக்கு விடைகளைத் தெரிந்துகொள்ள நீர் சுழற்சியைப் பற்றி நீங்கள் படிக்கலாம்.

## நீர் சுழற்சி :

நீர் ஒரு சுழற்சி வளமாகும். அது ஒருமுறை பயன்படுத்தப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. நீர் ஒரு சுழற்சியையும் அடைகிறது. அதுவே நீர் சுழற்சி. பெருங்கடல்களிலிருந்து நிலத்திற்கும், பின்னர் நிலத்திலிருந்து பெருங்கடல்களுக்கும் நீர் சுழல்கிறது. பூமியின் மேலேயும், உள்ளேயும், உயரத்திலும் நீர் நகருவதை நீர் சுழற்சி என்பர். பில்லியன் கணக்கான ஆண்டுகளாக நீர்சுழற்சி இயங்கி வருகிறது. பூமியின் மீதுள்ள அனைத்து உயிர்களும் அதன் மீது ஆதாரப்பட்டுள்ளன. நீர் சுழற்சி என்பது பல்வேறு வடிவங்களில் அதாவது திரவ, திட மற்றும் வாயு நிலைகளில் நீரானது மாறுவதைக் குறிக்கும். பெருங்கடல்கள், வளிமண்டலம், நிலப்புறப்பரப்பு, உள்பரப்பு மற்றும் அனைத்து உயிர்களுக்கிடையே தொடர்ச்சியான நீர் பரிமாற்றத்தையும் நீர்சுழற்சி குறிக்கிறது.

நீர்சுழற்சி, சில சமயங்களில் கணித முறைப்படியும் கீழ்கண்டவாறு வெளிப்படுத்தப்படுகிறது.

RF = RO + ET

RF என்பது அனைத்து வகையான ஈரம் வடிதலையும் உள்ளடக்கியது.

RO என்பது ஓடிய நீரைக் குறிப்பிடும்.

ET என்பது நீராவிப் போக்கினைக் குறிக்கும்.

**நீர் சுழற்சி ஆறு நிலைகளைக் கொண்டது.**


**1. நீராவியாதல், 2.நகர்தல், 3.சுருக்குதல், 4.ஈரம் வடிதல், 5.நிலத்தடி நீர், 6.பாயும் நீர்**

**1.நீராவியாதல்[Evaporation] : நீரானது பூமியின் புறப்பரப்பிலிருந்து வளிமண்டலத்திற்கு நீராவியாதல் மூலம் மாற்றம் செய்யப்படுகிறது. இச்செயல் முறையில் நீரானது திரவ நிலையிலிருந்து வாயு நிலைக்கு மாற்றப்படுகிறது. பூமியின் புறப்பரப்பிலுள்ள நீர், நீராவியாக மாறுவதற்கு சூரியனின் வெப்பம் ஆற்றலை வழங்குகிறது அல்லது சூரிய வெப்பத்தால் பூமியின் புறப்பரப்பிலுள்ள நீர், நீராவியாகிறது. நிலம், ஏரிகள், ஆறுகள் மற்றும் பெருங்கடல்கள் நீராவியின் ஒரு நிலையான ஓடையை மேலே அனுப்புகின்றன. தாவரங்களும் நீராவிப்போக்கின் மூலம் நீரை காற்றில் இழக்கின்றன.**

**2.நகர்தல்[Transportion] : வளிமண்டலத்தின் மூலமாக, முக்கியமாக பெருங்கடல்களிலிருந்து நிலத்திற்கு நீர் மேகங்கள் வடிவில் வருவதை நகர்தல் என்பர். மேகங்கள் வாயுஓட்டம், புறப்பரப்பை ஆதாரமாகக் கொண்ட சுழற்சிகளான நிலம் மற்றும் கடற்காற்றுகளால் அல்லது பிற செய்கைகளால் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு உந்தப்படுகின்றன.**

**3.சுருங்குதல் [Condensation] : கடத்தப்பட்ட நீராவி படிப்படியாக திரவமாகி (சுருங்கி) மிகச்சிறு நீர்த்துளிகளாகவும் மேகங்களாகவும் மாறுகின்றன.**

SCERT TELANGANA




*படம் 3.1: நீர் சுழற்சி*

**4.ஈரம் வடிதல்**[Preciptation] : வளி மண்டலத்திலிருந்து பூமியின் புறப்பரப்பிற்கு நீரை எடுத்துச்செல்லும் முதன்மையான செயற்பாட்டினை ஈரம் வடிதல் என்பர். வளிமண்டலத்தில் உள்ள குளிர்ந்த காற்றை மேகங்கள் சந்திக்கும் போது ஈரம் வடிதல், மழை, பனிமழை பெய்து நிலம் அல்லது கடலுக்கு நீர் திரும்புகிறது.

**5.பாயும் நீர்**[Run off] : பூமிக்கு திரும்பி வரும் நீரின் பெரும் பாகம் மலைகளிலிருந்து கீழ் நோக்கிப் பாய்ந்து ஓடும். அதில் சிறுபாகம் ஊடுருவி நிலத்தடி நீருடன் கலக்கிறது. மீதமுள்ள நீர்ப்பாகம் நதிகளாகப் பாய்ந்து பெருங்கடலுக்குத் திரும்பி அங்கு அவை நீராவியாக மாறுகின்றன.

**6.நிலத்தடி நீர்**[Ground water] : சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நிலத்தடி நீர், ஊற்றுக் கிணறுகளிலிருந்து மேல்நோக்கி பாயும். நிலத்தடிநீர் பாய்ச்சல் வேகம் ஓடும் நீரைவிட மிகக்குறைவாக இருக்கும்.

நீர் சுழற்சி என்பது பெருங்கடலுக்கும் வளிமண்டலம் மற்றும் நிலத்திற்கும் இடையிலான நீரின் ஓர் எளிய சுற்றுகை அல்ல. அதனுள் எண்ணற்ற துணை சுழற்சிகள் அடங்கியுள்ளன.

| நீர்தேக்கங்கள் | மொத்த நீரின் சதவீதம் |
|---|---|
| பெருங்கடல்கள் | 97 .25 % |
| பனியுறைகள் மற்றும் பனியாறு | 2.05 % |
| நிலத்தடி நீர் | 0.68 % |
| ஏரிகள் | 0.01 % |
| மண் ஈரப்பதம் | 0.005 % |
| வளி மண்டலம் | 0.001 % |
| ஆறுகள் | 0.0001 % |
| உயிர்க்கோளம் | 0.00004 % |

## நீர் வளங்கள் :

உலகிலுள்ள நீரில் 97.25% உவர்ப்பான பெருங்கடல் நீரும் 2.75% மட்டும் தூய்மையான நீரும் உள்ளன. தூய நீரின் பெரும்பாகம்

(69.56%) பனிக்கட்டி வடிவில் உள்ளது. அண்டார்க்டிகாவின் நிலையான பனிப்போர்வை, ஆர்க்டிக் மற்றும் மலைப்பகுதிகளிலும், 30.1% நிலத்தடி நீரும், தூய நீரின் மொத்த அளவில் 0.34% மட்டும் பூமியின் மீதுள்ள ஏரிகளிலும் நீர்த்தேக்கங்களிலும் ஆறுகளிலும் காணப்படுகிறது. இது நம் பொருளாதாரத் தேவைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. நீர் சூழ்நிலையியலுக்கு மிகச் சிறந்ததாகவும் உள்ளது.

## பெருங்கடல்கள் :

கண்டங்களும் பெருங்கடல்களும் பூமியின் முதல் தர நிலத்தோற்ற அமைப்புகளாகும். மிகப்பெரிய நீர் பகுதிகளை பெருங்கடல்கள் என்கிறோம். புவியியலாளர்கள் பூமியின் பெருங்கடல் பகுதியை ஐந்து பெருங்கடல்களாக பிரித்துள்ளனர். அவை பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென் பெருங்கடல் (அண்டார்க்டிக் பெருங்கடல்) மற்றும் ஆர்க்டிக் பெருங்கடல்.

கடலையும் பெருங்கடலையும் நாம் அவ்வப்போது ஒன்றிற்குப் பதில் மற்றொன்றாக மாற்றி மாற்றி பயன்படுத்துகிறோம். ஆனால் சரியாகக் கூறினால், நிலத்தால் பகுதியாகவோ முழுமையாக சூழப்பட்ட உவர்ப்புநீர் பகுதியை கடல் என்பர்.

பெரிய பெருங்கடல் பிரிவுகள் கண்டங்கள், பல்வேறு தீவுக்கூட்டங்கள் மற்றும் பிற வகைகளால் சூழப்பட்ட பகுதிகள் என விவரிக்கப்படுகின்றன. மேலும் தகவலைப் பெற கீழே உள்ள அட்டவணையைப் பார். அவற்றின் அளவைப் பொருத்து அட்டவணையில் இறங்குவரிசையில் தரப்பட்டுள்ளது.

| தரம் | பெருங்கடல் | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | பசுபிப் பெருங்கடல் | ஆசியா மற்றும் ஓசியானியாவை (ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பாபுவா நியுகினியா) அமெரிக்காவிடமிருந்து பிரிக்கிறது. |
| 2 | அட்லாண்டிக் பெருங்கடல் | அமெரிக்காவை ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்காவிடமிருந்து பிரிக்கிறது. |
| 3 | இந்தியப் பெருங்கடல் | தெற்கு ஆசியாவை ஆப்ரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவிடமிருந்து பிரிக்கிறது. |
| 4 | அண்டார்டிக் பெருங்கடல் | இது பசுபிக், அட்லாண்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடலின் தெற்கு பாகங்களாக கருதப்படுகிறது. |
| 5 | ஆர்க்டிக் பெருங்கடல் | சில சமயங்களில் அட்லாண்டிக் கடலாகப் கருதப்படுகிறது. வட அமெரிக்கா மற்றும் யூரேசியாவை தொடுகிறது. |

### உங்களுக்குத் தெரியுமா

மேற்கூறிய அனைத்துப் பெருங்கடல்களும் ஒன்றாக இணைந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? மில்லியன் கணக்கான ஆண்டுகளுக்கு முன் இவை அவ்வாறே இருந்தன. இந்த ஒற்றைப் பெரிய பெருங்கடல் **பந்தலசா** என்று அழைக்கப்பட்டது.

பெருங்கடல் பற்றி பிரிட்டீஷ் சாலஞ்சர் ஆய்வுக் கூடத்தால் முறைசார்ந்த உலகளாவிய ஆழ்கடல் ஆராய்ச்சி வெற்றிகரமாக தொடங்கப்பட்டது.

## பெருங்கடல் நிலத் தோற்றங்கள்

பெருங்கடல் படுகைகள் நிலத்தின் புறப்பரப்பை பலவகையில் ஒத்துள்ளது. கடலுக்கடியிலுள்ள மலைமுகடுகள், பீடபூமிகள், பள்ளத்தாக்குகள் மற்றும் கடல் மேல் தளங்கள் போன்றவை பெருங்கடலில் காணப்படும் நிலத் தோற்றங்களாகும். பெருங்கடல் தரை சாதாரணமாக நான்கு அடுக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது.


**1. கண்டத் திட்டு** [Continental Shelf] : கண்டத்திற்கு 200மீ ஆழத்துடன் பெருங்கடல்களின் பரப்பளவில் சுமார் 7.6% பரப்பளவினை ஆக்கிரமித்துள்ளது. இது நிலத்திற்கும் கடலுக்கும் இடையே உள்ள எல்லைப்பகுதியாகும். உலகிலேயே மிகப்பெரிய கண்டத்திட்டு 1500கி.மீ அகலம் கொண்ட சைபீரியன் கண்டத்திட்டு ஆகும்.



SCERT TELANGANA

கண்டத்திட்டு மனிதனுக்கு மிகவும் இன்றியமையாதது.

- இப்பகுதியில் மீன் வளம் அதிகம்.
- கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயுவும் இங்கு அதிக அளவில் காணப்படுகின்றன.
- இங்கு கடல் துறைமுகத்தை கட்டுவது சாத்தியமாக உள்ளது.




*படம் 3.2: பெருங்கடல் தரை*

**2. கண்டச் சரிவு**[Continental Slope] : **கண்டச் சரிவு 200 மீ முதல் 3000 மீ வரை பரவியுள்ளது. இது சிக்கலான நிலத்தோற்றத்தைக் கொண்டது. இது பெருங்கடல் பரப்பில் 15% பெற்றுள்ளது. கண்டச்சரிவு எல்லை கண்டங்களை குறிப்பிடும். இப்பகுதியில் நீர்மூழ்கிப் பள்ளத்தாக்குகள் காணப்படும். இவை பனிப்பாறை மற்றும் ஆறுகளின் அரிப்புச் செயற்பாட்டால் உருவாகின்றன.**

**3. ஆழ்கடல் சமவெளி**[Deep sea Plain] **அல்லது பாதாளச் சமவெளி** [Abyssal Plain] : **ஆழ்கடல் சமவெளிகள் பெருங்கடல் படுகைகளின் மென்மையான சரிவுகளைக்கொண்ட பகுதிகளாகும். இவை உலகின் மிகவும் தட்டையான மற்றும் மிருதுவான பகுதிகளாகும். இவற்றின் ஆழம் 3000 மீ முதல் 6000 மீ களுக்கிடையே மாறுபட்டிருக்கும். இது பெருங்கடல் படுகையின் பரப்பில் 76.2% கொண்டிருக்கும்.**

**4. பெருங்கடலின் ஆழம்** [Oceanic Deeps] **அல்லது அகழிகள்** [Trenches] : **இவை மிகப்பெரிய குறுகலான அகழிகள் ஆகும். அவை மிகப்பெரிய பெருங்கடல் ஆழத்தில் சுமார் 6000மீ வரை இருக்கும். நம் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, பெரும்பாலான ஆழமான அகழிகள் பெருங்கடல்களின் மையப்பகுதியில் அமைந்திருப்பதில்லை. அவற்றில் பெரும்பாலானவை, கண்டங்களுக்கு மிக அருகிலேயே அமைந்துள்ளன. எனவே அவை பூமியின் தட்டு இயக்கங்களைக் குறித்து ஆராய்வதில் மிகவும் முக்கியமானவைகளாக உள்ளன. இதுவரை 57 பெருங்கடல் அகழிகள் ஆராயப்பட்டுள்ளன.**

**உங்களுக்குத் தெரியுமா?**

சம ஆழக்கோடுகள் (Isobath) கடலின் புறப்பரப்பிற்குக் கீழ் கடல் தரையில் சமமான செங்குத்து தூரங்களின் புள்ளிகளை இணைக்கும் கற்பனைக் கோட்டினை சம ஆழக் கோடுகள் என்பர். சில சமயங்களில் கடல் ஆழங்களின் சமஉயரக் கோடுகள் எனவும் வழங்கப்படுகிறது.

**முக்கியமான பெருங்கடல் அகழிகள் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?**

| வ.எண் | அகழியின் பெயர் | பெருங்கடல் | ஆழம் (மீட்டரில்) |
|---|---|---|---|
| 1 | சாலஞ்சர் அல்லது மரியானா | பசுபிக் பெருங்கடல் | 11,022 |
| 2 | போர்ட்டோரிகோ அல்லது நாவஸ் | அட்லாண்டிக் பெருங்கடல் | 10,475 |
| 3 | ஜாவா | இந்தியப் பெருங்கடல் | 7,450 |

SCERT TELANGANA


## பெருங்கடலின் உப்புத் தன்மை :

நீங்கள் எப்போதாவது உணவில் உப்பில்லாமல் உட்கொண்டீர்களா? அது சுவையாக இருந்ததா? ஆதிகால மனிதன் தன் உணவில் உப்பை பயன்படுத்தினானா? கடலைத் தவிர வேறு எங்கு உப்பு கிடைக்கும்? சுவைக்காக மட்டும் உப்பு பயன்படுத்தப்படுகிறதா அல்லது பிற காரணங்கள் ஏதேனும் உள்ளனவா? உங்கள் கிராமத்தில் உள்ள ஏரி நீர் உப்பாக உள்ளதா? பின், பெருங்கடல் நீர் ஏன் உவர்ப்பாக உள்ளது? உப்பு நமக்கு அடிப்படைத் தேவை என்பது உங்களுக்குத் தெரியுமா? மகாத்மா காந்தி உப்பு சத்தியாகிரகத்தை வழி நடத்தினார். அதனை தண்டியாத்திரை என்றும் அழைப்பர். அது மிகப்பெரிய விடுதலை இயக்கத்தின் ஒன்றாக விளங்கியது.

பெருங்கடல்களில் தூய நீருக்குப்பதில் உப்பு நீர் நிரப்பப்பட்டுள்ளதைக் கண்டு நீ எப்பொழுதாவது வியப்படைந்தது உண்டா? உப்பு எங்கிருந்து வந்தது என்றும் அது உன் உணவு உண்ணும் மேஜை மீது உள்ள அதே உப்புதானா என்பதை நினைத்துப் பார்த்ததுண்டா? பெருங்கடல்களில் உள்ள பெருமளவிலான உப்பு நிலத்திலிருந்தே வருகின்றன. மில்லியன் கணக்கான ஆண்டுகளாகப் பெய்து வரும் மழையால் ஆறுகளும் நீரோடைகளும் நிலம் மற்றும் பாறைகளின் மீது பாய்ந்து அவற்றின் மீதுள்ள கூட்டுப்பொருளான சோடியம் குளோரைடு (NaCl) அடித்துச்செல்லப்பட்டு கடலில் கொண்டுபோய் சேர்க்கப்படுகிறது.

சோடியம் குளோரைடு என்பது சாதாரண உப்பின் பெயர் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். பெருங்கடலில் உள்ள சிறிது உப்பு கடல் எரிமலைகளின் கீழிருந்தும் நீர் அணுமின் திறப்புகளிலிருந்தும் வருகின்றது. பெருங்கடல் பரப்பின் மீதிருந்து நீரானது நீராவியாக மாறும் போது உப்பு பின்தங்குகிறது.

மில்லியன் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு பெருங்கடல்களில் குறிப்பிடத்தக்க ஓர் உவர்ப்பான சுவையைப் பெறுகின்றன.



படம் 3.3: உப்பு நீர்

உப்புத் தன்மை என்னும் சொல் கடல் நீரில் கரைந்துள்ள உப்பின் மொத்த அளவை வரையறுக்கப் பயன்படுத்தப்படுகிறது. 1000 கிராம் கடல் நீரில் கரைந்துள்ள உப்பின் அளவாக (கிராம்களில்) இது கணக்கிடப்படுகிறது. இதை சாதாரணமாக ஓராயிரத்திற்கு இத்தனை பாகம் எனக் கூறப்படுகிறது. 0/00 அல்லது PPT (Parts per Thousand) பொதுவாகக் கூறினால் கடல்களின் சராசரி உப்புத் தன்மை 35 0/00 அதாவது 1000 பாகம் நீரில் 35 பாகம் உப்பு இருக்கும். மொத்த கடல் நீரில் அதிக அளவில் தாதுப்பொருள் கரைந்துள்ளது. இதில் சோடியம் குளோரைடு அல்லது சாதாரண உப்பு மட்டும் 77.8% ஆக உள்ளது.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆற்று நீரில் 2% சோடியம் குளோரைடு உள்ளது.

SCERT TELANGANA

### பெருங்கடலின் உப்புத் தன்மையை பாதிக்கும் காரணிகள் :

1. பெருங்கடல்களின் புறப்பரப்பு அடுக்கில் உள்ள நீரின் உப்புத்தன்மை முக்கியமாக நீராவியாதல் மற்றும் ஈரம் வடிதல் மீது ஆதாரப்பட்டுள்ளது.
2. கடல் நீரின் புறப்பரப்பு உப்புத் தன்மை கடலோரப்பகுதிகளில் ஆறுகளிலிருந்து பாயும் தூய நீராலும், துருவப் பகுதிகளில் நீர் உறைவதாலும் பனி உருகுவதாலும் பெரிதும் பாதிக்கப்படுகிறது.
3. வீசும் காற்றுகளும் ஒருபகுதியின் உப்புத்தன்மையை, நீரை பிற பகுதிகளுக்கு மாற்றுவதன் மூலமாகவும் பாதிக்கச் செய்கிறது.
4. பெருங்கடல் நீரோட்டங்கள் உப்புத்தன்மையில் வேறுபாடுகள் ஏற்பட துணைபுரிகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

| நீர் நிலைகளில் உயர்ந்த உப்புத்தன்மை | நீர் நிலைகளில் குறைந்த உப்புத்தன்மை |
|---|---|
| 1) வேன் ஏரி-துருக்கி - 330‰ | 1) பால்டிக் கடல் - 3-15‰ |
| 2) சாக் கடல் - இஸ்ரேல்-238‰ | 2) ஹட்சன் வளைகுடா-3-15‰ |
| 3) பெரும் உப்பு ஏரி-அமெரிக்கா-220‰ | |

**சம உவர்ப்புக் கோடுகள்**[Ishohaline] : கடலில் உப்புத்தன்மை ஒரே அளவிலுள்ள இரண்டு பகுதிகளை இணைக்கும் கோடுகள்

- பால்டிக் கடலில் குறைந்த உப்புத்தன்மை இருப்பதற்கான காரணங்களை எழுது.

### பெருங்கடல் வெப்பநிலை

நிலத்துடன் ஒப்பிடுகையில் பெருங்கடல்களின் வெப்பநிலையில் அதிக மாற்றங்கள் இல்லை. ஆனால் இந்த சிறு மாற்றங்கள் பெரிய அளவில் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. எடுத்துக்காட்டு: இந்தியாவின் தென் மேற்குப் பருவக் காற்றுகளின் சுறுசுறுப்பான இயக்கம் எல்நினோ, லாநினோக்களால் பாதிக்கப்படுகிறது. இவை பசுபிக் பெருங்கடலின் வெப்பநிலை மாற்றங்களால் ஏற்படுகின்றன.

**பெருங்கடல் வெப்பநிலையை பாதிக்கும் காரணிகள் :** பெருங்கடல் வெப்ப நிலை அட்சரேகைகள், காற்றுகள், பெருங்கடல் நீரோட்டங்கள், நிலத்தின் சமமற்றப் பகிர்வு மற்றும் பருவகாலங்களின் மாற்றம் போன்றவற்றால் பாதிக்கப்படுகிறது.

சாதாரணமாக பெருங்கடல்களின் வெப்பநிலை $-2^0C$ முதல் $29^0C$ வரை மாறுபடுகிறது. பெரும்பாலானவற்றில் வெப்பநிலை வரையறையையும் தாண்டி ஏன் உள்ளது என்பதை உன்னால் ஊகிக்க முடியுமா?

**உங்களுக்குத் தெரியுமா?**

உயர் வெப்பநிலை உள்நாட்டுக்கடல்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. செங்கடலில் வெப்பநிலை $38^0C$ என மிக உயர்ந்ததாக காணப்படுகிறது.

**வெப்பநிலையின் செங்குத்துப் பகிர்வு :** பெருங்கடலின் ஆழத்தில் ஒருவர் செல்லும்போது வெப்பநிலை ஒவ்வொரு கி.மீக்கும் வேகமாக குறைகிறது. பிறகு அது மாறாமல் இருக்கும். அது பெருங்கடலின் அடியில் $1.8^0C$ வெப்பநிலையைக் நிலையாகக் கொண்டு மாறாமல் இருக்கும்.

### பெருங்கடல் நீரோட்டங்கள்

பெருங்கடல் நீரோட்டம் என்பது பெருங்கடல் நீரானது ஒரு குறிப்பிட்ட திசையில் மிக நீண்ட தூரம் வரை ஓடையைப் போல் பாய்வதைக் குறிக்கும். பெருங்கடல் நீரோட்டங்கள் சில சமயங்களில் பெருங்கடல் ஆறுகள் என்றும் அழைக்கப்படும். பெருங்கடல் நீரோட்டங்கள் வெப்பநிலையை ஆதாரமாகக் கொண்டு **குளிர் நீரோட்டம்** என்றும் **வெப்ப நீரோட்டம்** என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

SCERT TELANGANA

பொதுவாக வெப்ப நீரோட்டங்கள் துருவங்களை நோக்கிப் பாய்கின்றன. குளிர் நீரோட்டங்கள் பூமத்திய ரேகையை நோக்கிப் பாய்கின்றன.

பெருங்கடல் நீரோட்டங்கள் அவற்றின் வேகத்தின் அடிப்படையில் ஓடைகள் எனவும் காற்றிழுப்பு நீரோட்டம் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பெருங்கடல் நீரோட்டங்கள் வேகமாகப் பாய்ந்தால் அவற்றை நீரோடை எனவும், நிதானமாகப் பாய்ந்தால் அவற்றை காற்றிழுப்பு நீரோட்டம் **[Drift]** எனவும் அழைப்பர்.

## பெருங்கடல் நீரோட்டங்களின் காரணங்கள்

**1. மைய விலக்கு விசை : பூமத்திய ரேகையில் துருவங்களை விட மையவிலக்கு விசை அதிகமாக இருக்கும். ஏனெனில் சுழன்று சுற்றுதலின்போது பெரும் வளையங்கள் பூமத்திய ரேகையுடன் ஒத்திருக்கும். இந்த திசைகளின் மாறுபாட்டால் பூமத்திய ரேகையின் நீர் துருவங்களை நோக்கி நகரும்.**

**2. வீசும் காற்றுகளின் விளைவு : காற்று மற்றும் காற்று இயக்கத்தின் அழுத்தங்களினால் நீரோட்டங்களின் திசைகள் மாற்றமடைகின்றன. காற்றுகளின் உராய்வுகளால் நீரானது காற்று வீசும் திசையில் இழுக்கப்படுகின்றது. இவ்வாறு மணிக்கு 50 மைல் வேகத்தில் வீசும் காற்றுகள் மணிக்கு 0.75 மைல்கள் திசை வேகம் கொண்ட ஒரு நீரோட்டத்தினை உருவாக்கும்.**

**3. ஈரம் வடித×ன் விளைவு : பூமத்திய ரேகைப் பகுதிகள் அதிக அளவு மழையை பெறுவதால் கடல் மட்டம் உயர்ந்து காணப்படும். அதன் விளைவால் நீரானது பூமத்திய ரேகையிலிருந்து வடக்கு மற்றும் தெற்கு நோக்கி நகர்கிறது.**

**4. சூரிய ஆற்ற×ன் விளைவு : சூரிய ஆற்றலால் வெப்பமடைதல் நீரை விரிவடையச் செய்கிறது. எனவே பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள நீர் 8 செ.மீ உயர்ந்த மட்டத்தில் இருக்கும். இது ஒரு மென்மையான மேல்நோக்கிய சரிவினை ஏற்படுத்துவதால் நீரானது சரிவுக்கு கீழ் நோக்கிப்பாய ஏதுவாக உள்ளது. பெருங்கடல் நீரோட்டங்கள் கடலின் உப்புத்தன்மை, அடர்த்தி வேறுபாடு, பனி உருகுதல் போன்ற பிற காரணங்களாலும் ஏற்படுகின்றன.**

## பெருங்கடல் ஒரு வளம்

1. பெருங்கடல்கள் மீன்களின் உணவுக் கிடங்குகளாகும்.
2. பண்டைய காலத்திலிருந்தே மனிதன் உணவிற்காக பெருங்கடல்களின் மீது ஆதாரப்பட்டுள்ளான்.
3. டாக்கர் கரை, வட கடல், கிராண்ட் கரை, நியூ பௌண்ட்லாந்து போன்றவை புகழ்மிக்க மீன்பிடிக்கும் பகுதிகளாகும்.
4. குளோரின், ப்ளோரின், புரோமின் மற்றும் அயோடின் ஆகியவை பெருங்கடல்களில் காணப்படுகின்றன
5. ஏற்ற இறக்கங்களும் அலைகளும் புதுப்பிக்க முடியாத ஆற்றல் வளங்களாகும்.
6. பெருங்கடல்கள் மழைப்பொழிவிற்கு ஆதாரங்களாகும்
7. பெருங்கடல்கள் சர்வதேச கப்பல் பயண வழிகளாக செயல்படுகின்றன.
8. **நாகரிகங்களுக்கு பிறப்பிடம் : கிரேக்க நாகரிகம், ரோம நாகரிகம், போன்ற அனைத்து நாகரிகங்களும்**



*படம் 3.4: பாம்பே ஹை பகுதியில் பெட்ரோல் எடுத்தல்*

SCERT TELANGANA

**ஆறுகள் மற்றும் பெருங்கடல்களின் கரைகளிலேயே செழித்து வளர்ந்தன.**

9. பெருங்கடல்களின் அடிப்பகுதிகளிலிருந்து பாறைப் பெட்ரோலியம், இயற்கை எரிவாயு போன்றவை தோண்டி எடுக்கப்படுகின்றன.
10. பெருங்கடல்களிலிருந்து உப்பு, மணல், சரளைக் கற்கள், மாங்கனீஸ், செம்பு, நிக்கல் போன்ற கனிப்பொருட்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன.

**முக்கியச் சொற்கள்**

1. **காற்றிழுப்பு நீரோட்டம்**
2. **பெருங்கடல் நீரோட்டம்**
3. **நீராவி–நீராவிபோக்கு**
4. **ஓடைகள்**

| தூய நீரின் பரவல் | |
|---|---|
| 69.56% | ஐஸ் மற்றும் பனிக்கட்டி |
| 30.10% | நிலத்தடி நீர் |
| 0.34% | நதிகள், ஏரிகள் மற்றும் அணைக்கட்டுகள் |
| 100.0% | மொத்தம் |

## உனது கற்றலை மேம்படுத்துக


1. கீழ்கண்டவற்றில் பொருந்தாத ஒன்றை கண்டறியவும். அதற்கான விளக்கத்தை தரவும்.(AS1)
   (i) (அ) நீராவியாதல் (ஆ) சுருங்குதல் (இ) உப்புத்தன்மை (ஈ) ஈரம் வடிதல்
   (ii) (அ) தட்டுகள் (ஆ) மை விலக்குவிசை (இ) சூரிய ஆற்றல் (ஈ) ஈரம் வடிதல்
2. தவறான கூற்றுகளை திருத்தி அமைக்கவும்(AS1)
   (அ) பெருங்கடல் அகழிகள் கண்டங்களின் அருகில் அமைந்திருக்கும்.
   (ஆ) பெருங்கடல்களின் புறப்பரப்பு வடிவங்கள் சமவெளிகளைப் போன்று இருக்கும்.
   (இ) பல நூற்றாண்டுகளாக, நிலப்பகுதியின் மீதிருந்து மண்ணின் மேற்பரப்பு அடித்துச் செல்லப்பட்டு கடல்களில் கலந்ததால் உப்புத்தன்மை அதிகரித்தது.
   (ஈ) உலகம் முழுவதும் பெருங்கடல்களின் நீர் ஒரே விதமான வெப்பநிலையை கொண்டிருக்கும்.
3. நீங்கள் வசிக்கும் பகுதியின் மீது கடல் நீரோட்டங்கள் ஏற்படுத்தும் ஏதேனும் ஒரு தாக்கத்தை பற்றிவிவரி.(AS1)
4. பக்கம் 33ல் உள்ள பெருங்கடல் ஒரு வளம் என்ற பததியை படித்து உன் கருத்துகளை எழுது.(AS2)
5. பெருங்கடல்ளின் உப்புத்தன்மையில் வேறுபாடு ஏன் ஏற்படுகிறது?(AS2)
6. மனிதனின் நிலைப்பாடு பெருங்கடல்களுடன் எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளது.(AS6)
7. பக்கம் 35ல் உள்ள பெருங்கடல் நீரோட்டங்களின் வரைபடத்தை உற்றுநோக்கி சில வெப்ப குளிர், நீரோட்டங்களின் பெயர்களை எழுதுக. (AS5)

## செயல் திட்டம்

1. **பல்வேறு பெருங்கடல்களில் உள்ள குளிர் நீரோட்டங்களை குறிப்பிடு.**
2. **பசிபிக், அட்லாண்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களில் உள்ள கடல் நீரோட்டங்களைக் கொண்ட ஒரு பட்டியலைத் தயாரி.**

| **பசிபிக் பெருங்கடல்** | | **அட்லாண்டிக் பெருங்கடல்** | | **இந்தியப் பெருங்கடல்** | |
|---|---|---|---|---|---|
| வெப்ப நீரோட்டங்கள் | குளிர் நீரோட்டங்கள் | வெப்ப நீரோட்டங்கள் | குளிர் நீரோட்டங்கள் | வெப்ப நீரோட்டங்கள் | குளிர் நீரோட்டங்கள் |
| | | | | | |

SCERT TELANGANA




வரைபடம் : 1 பெருங்கடல் நீரோட்டங்கள்

பாடம்

4

# வளிமண்டலம்

முந்தைய பாடப்பிரிவில் பூமியின் அடுக்குகளைப் பற்றியும் கற்கோளத்தைப் பற்றியும் கற்றறிந்தீர்கள். இப்பாடப்பிரிவில் வளிமண்டலத்தைப் பற்றி நாம் கற்போம்.

நாம் ஆக்ஸிஜனை சுவாசிக்கிறோம். அது இல்லாமல் நம்மால் உயிர்வாழ முடியாது. நாம் சுவாசிக்கும் போது கார்பன்-டை-ஆக்ஸைடை வெளியிடுகிறோம். பச்சைத் தாவரங்கள் கார்பன்-டை-ஆக்ஸைடை எடுத்துக்கொண்டு சூரிய ஒளியையும் நீரையும் ஒளிச்சேர்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்கின்றன. நாம் அவற்றிலிருந்து சுவையான கனிகளையும், காய்கறிகளையும் தானியங்கள் போன்றவற்றையும் பெறுகிறோம். இவை நமக்கு நாம் உயிர் வாழத் தேவையான புரதச் சத்துக்களையும், கார்போ ஹைட்ரேட்டுகளையும், சர்க்கரையையும், கொழுப்புகளையும் தாதுப் பொருட்களையும், பிற சத்துணவுகளையும் வழங்குகின்றன. பெருங்கடலில் உள்ள நீர் மழை வடிவில் கண்டங்களின் மீது பொழிகிறது. மழை இல்லாவிட்டால் பெரும்பாலான பாறைகள் அரிக்கப்படாது. அதாவது நமக்கு பல வகையான மண்கள் கிடைக்காது என்பது இதன் பொருள். எனவே நம்மால் பல்வேறு வகையான பயிர்களை வளர்க்க முடியாது.

வளிமண்டலத்தின் உதவியின்றி, நாம் குளிர்ந்த பருவக்காற்று மழைகளையும், நறுமணம் வீசும் மலர்களின் வாசனையையும், இசையின் ஒலியையும் நம்மால் அனுபவித்து மகிழ முடியாது. நம்மால் அழகான பட்டங்களையும் பறக்க விடமுடியாது. பறவைகள் வானில் பறக்கவோ அல்லது மிதக்கவோ முடியாது. வண்ணக்கொடிகள் பட்டொளி வீசிப் பறக்காது. எனவே, வளிமண்டலம் என்று அழைக்கப்படும் இந்த அதிசயமான ஆவல் மிகுந்த பொருள் எது?

வளிமண்டலம் என்பது பூமியை கடலெனச் சூழ்ந்துள்ள காற்றுகளின் கலவை ஆகும். ஒரு விதத்தில் நாம் வாயுக்களின் கடலில் நீந்திக்கொண்டிருக்கிறோம். (கடலில் மீன்கள் நீந்துவதைப் போல). பூமியின் அளவுடன் ஒப்பிடுகையில், வளிமண்டலம்



*படம் 4.1: பூமியிலிருந்து 322கி.மீ உயரத்தில் எடுக்கப்பட்ட பூமியின் புகைப்படம். வளிமண்டலம் விண்வெளியின் கரிய நிறத்திற்கும் பூமிக்கும் இடையில் உள்ள மெல்லிய நீல வண்ணப் பகுதியாகும்.*



SCERT TELANGANA

பூமியை சூழ்ந்துள்ள ஒரு மிக மென்மையான கம்பளம் போன்று உள்ளது. வளிமண்டலம் 10,000கி.மீ அடர்த்தியானது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விண்வெளி மையமான 'தேசிய விண்வெளி ஆய்வுக் கழகம்' (NASA) இந்த வர்ணனையைத் தருகிறது. பூமி ஒரு கூடைப்பந்து அளவிற்கு உள்ளது எனக்கொள்வோமானால், வளிமண்டலம் அதைச்சுற்றியுள்ள மெல்லிய பிளாஸ்டிக் உறையைப் போன்றதாகும்.

வளிமண்டலம் பல வாயுக்களைக் கொண்டுள்ளதால் அனைத்து வாயுக்களின் குணங்களையும் காட்டுகிறது. அது சுருங்கவும் விரிவடையவும் செய்கிறது. அதற்கு வடிவமும் இருப்பதில்லை. வாயுவை உன் சைக்கிள் டியூபில் திணிப்பதைப்போல் ஒரு சிறிய இடைவெளியில் அளவுக்கதிகமான வாயு திணிக்கப்படுகிறது. இதுவே வாயுத்திணிப்பு ஆகும். வளி மண்டலத்தில் பல வாயுக்கள் உள்ளன. ஆனால் ஆக்ஸிஜன் (அதன் கொள்ளளவில் 21%) மற்றும் நைட்ரஜன் (அதன் கொள்ளளவில் 78%) மேலாண்மை செலுத்துகின்றன. மற்ற வாயுக்கள் மிகச்சிறிய வீதத்திலேயே உள்ளன. அவற்றில் ஆர்கான், நியான், கார்பன்-டை-ஆக்ஸைடு (அதன் கொள்ளளவு 0.04%) மீதேன், அமோனியா, ஓசோன் போன்றவை அடங்கும்.

- காற்றில் நீராவி இல்லாவிடில், என்ன நிகழும்? குளிர்காலத்தில், நமது தோல் வறண்டுவிடுவது ஏன்

வளிமண்டலம் முழுவதிலும் நீராவி 0.4% கொள்ளளவைக் கொண்டுள்ளது. ஆனால் அதன் பெரும்பாகம் பூமியின் புறப்பரப்பிற்கு அருகிலேயே உள்ளது (பூமியின் 6 கி.மீ உயரத்திற்குள்ளாக). ஆமாம் நீராவியும் ஒரு வாயுவே, நீங்கள் வானில் பார்க்கும் மேகங்கள் நீராவியால் உருவாக்கப்படுவதாகும். அவை, குளிர்ந்த காற்று பட்டவுடன் மழையாய் பொழிகிறது.

இந்த வாயுக்களுடன் சேர்ந்து, வளிமண்டலத்தில் நுண்ணிய தூசுப் பொருட்களும் உள்ளன. அவற்றை நுண்பொருட்கள் என்பர். நுண்பொருட்கள் இயற்கையான செயல் முறைகளால் ஏற்படுகின்றன. (எடுத்துக்காட்டாக: பாலைவனங்களில் வீசும் மணல் புயல்கள் மற்றும் இயற்கையான காட்டுத்தீ) மேலும் மனிதனின் செயல்பாடு (எடுத்துக்காட்டாக : காடுகளை எரித்தல், பெட்ரோலியம் கிணறுகளை எரித்தல், தொழிற்சாலைக் கழிவுகள்)

இந்த நுண்துகள்கள் வளிமண்டல நிலைகளை மாற்றி பூமியில் வாழ்வதற்கு நன்மை பயப்பதாக மாற்றியமைக்கும். நீங்கள் எப்போதாவது அழகான ஆரஞ்சு நிற சூரிய உதயத்தை அல்லது சூரிய மறைவினை பார்த்ததுண்டா? வளிமண்டலத்தில் உள்ள நுண்துகள்கள் ஆரஞ்சு நிறத்தை ஏற்படுத்துகின்றன.

மழையில் விளையாட நீங்கள் விரும்புகிறீர்களா? ஆலங்கட்டிகளை சேகரித்து அவற்றை விரும்பி உண்பீர்களா?

நுண்துகள்கள் வெப்பநிலை மற்றும் மழைபொழியும் முறைகளையும் மாற்றி சிக்கல்களை உருவாக்குகின்றன. எடுத்துக்காட்டாக: அவை மக்கள் சுவாசிப்பதில் சிரமத்தை ஏற்படுதிதுகின்றன. அவை இலைகளின் மேலமர்ந்து தாவரங்கள் சுவாசிப்பதையும், ஒளிச்சேர்க்கை செய்வதையும் சிரமாக்கிவிடுகின்றன.

- வளிமண்டலத்தில் உள்ள நுண்துகள்கள் எவ்வழிகளில் நமக்கு நன்மை தருவனவாகவும், தீமைதருவனவாகவும் உள்ளன என்பதைப் பட்டியலிடு.
- வளிமண்டலம் நமக்கு ஏன் முக்கியம்?
- சந்திரன் மீது மனிதனால் ஏன் வாழ முடியாது?



SCERT TELANGANA

## வளிமண்டலத்தின் அமைப்பு :

பூமியின் உட்பகுதி பல அடுக்குகளால் பிரிக்கப்பட்டிருப்பது போல், வளிமண்டலமும் பல அடுக்குகளால் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வடுக்குகளில் பல வாயுக்களின் கலவைகள் அடங்கியுள்ளன. அவ்வடுக்குகளை நீ அறிவாயா?

அதிக அளவு பரந்து விரிந்து காணப்படும் வளிமண்டல அமைப்பை அறிதல் மிகவும் எளிதல்ல. அறிவியல் அறிஞர்கள் காற்றடைக்கப்பட்ட வானிலை பலூன் மற்றும் செயற்கை கோள்கள் மூலம் ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.


வேதியியல் அடிப்படையாக, வளிமண்டலத்தை இரண்டு பெரும் பகுதிகளாக பிரிக்கலாம்.

1) ஹோமோ மண்டலம் 2) ஹெடிரோ மண்டலம்

**ஹோமோ மண்டலம் : ஹோமோ மண்டலம் 90கி.மீ உயரம் வரை பரவியுள்ளது. இது மூன்று வெப்ப அடுக்குகளை உடையது. அவை, ட்ரோபோ மண்டலம், ஸ்டிரேடோ மண்டலம் மற்றும் மெசோ மண்டலம். இதில் நைட்ரஜன், ஆக்ஸிஜன், ஆர்கான் மற்றும் கார்பன்-டை-ஆக்ஸைட் போன்ற வாயுக்கள் கலந்துள்ளன.**

**ஹெடிரோ மண்டலம் : வளிமண்டலத்தில் 90கி.மீக்கு மேலே உள்ள மண்டலம் ஹெடிரோ மண்டலம் எனப்படுகிறது. பலதரப்பட்ட கலவைகள் கலந்திருப்பதால், இதை ஹெடிரோ மண்டலம் என்பர். இதில் இரண்டு வெப்ப அடுக்குகள் உள்ளன. அவை தெர்மோ மண்டலம் மற்றும் எக்சோ மண்டலம் ஆகியவை.**

SCERT TELANGANA




*படம் 4.2: வளிமண்டல அமைப்பு*

வாயுக்களின் அடர்த்தி மற்றும் வெப்பநிலையை ஆதாரமாகக் கொண்டு, வளிமண்டலம் ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1) ட்ரோபோ மண்டலம் 2) ஸ்ட்ரேடோ மண்டலம் 3) மெசோ மண்டலம்
4) தெர்மோ மண்டலம் 5) எக்சோ மண்டலம்

**ட்ரோபோ மண்டலம் :** ட்ரோபோ மண்டலம் என்பது வளிமண்டலத்தின் மிகவும் கீழே உள்ள அடுக்காகும். இது சராசரியாக 13 கி.மீ உயரம் வரை பரவியுள்ளது. துருவப் பகுதிகளில் 8 கி.மீ உயரம் வரையும் பூமத்திய ரேகைப் பகுதியில் 18 கி.மீ உயரம் வரையும் பரவியுள்ளது. மிகவும் வலிமையான வெப்பச் சலன ஓட்டத்தால் வெப்பம் அதிகமான உயரத்திற்கு பரவுவதால், பூமத்தியரேகைப் பகுதியில் இது அதிக அளவு பரவியுள்ளது.

வளிமண்டலத்தில் 75% வாயுக்களை இம்மண்டலம் பெற்றுள்ளது. இதனுடன் ஈரம் மற்றும் தூசுத் துகள்களும் உள்ளன. அனைத்து வகை வானிலை மாற்றங்களும் இம்மண்டலத்தில் நடைபெறும். நாம் மேலேச் செல்லச் செல்ல சராசரி வெப்பநிலை குறைகிறது. சுருங்கல், நீராவி, ஈரம் வடிதல், மழைப் பொழிவு, சூறாவளி ஆகியவை இவ்வடுக்கில் நடைபெறுகின்றன.

**ஸ்ட்ரேடோ மண்டலம் :** இந்த அடுக்கு 50கி.மீ உயரம் வரை பரவியுள்ளது. இவ்வடுக்கு மேகமூட்டமின்றி இருக்கும். வானிலையுடன் தொடர்பு கொண்டு ஜெட் விமானங்கள் பறக்கும் மண்டலமாக உள்ளது. இம்மண்டலத்தில் ஓசோன் படலம் பரவி இருப்பது இதன் முக்கிய அம்சமாகும். இம்மண்டலத்தில் உயரே செல்லச் செல்ல வெப்பம் அதிகரிக்கும்.

**மெசோ மண்டலம் :** இது 80கி.மீ உயரம் வரை பரவியுள்ளது. விண்வெளியிலிருந்து, பூமியை நோக்கி விழும் எரிகற்கள், இவ்வடுக்கில் எரிந்துவிடும். இங்கிருந்து மேலே சென்றால் வெப்பம் குறையும்.

**தெர்மோ மண்டலம் :** இம்மண்டலம் 400கி.மீ உயரம் வரை பரவியுள்ளது. இங்கு மேலே செல்லச் செல்ல, வெப்பம் வேகமாக உயருகிறது. இங்கு அயனி எனப்படும் மின்னூட்டம் கொண்ட துகள்கள் உள்ளன. பூமியிலிருந்து அனுப்பப்படும் ரேடியோ அலைகள் மீண்டும் பூமிக்கு அயனி துகள்களால் பிரதிபலிக்கப்படுகிறது. இதனை 'ஐனோ மண்டலம்' எனவும் அழைப்பர்.

- எந்த மண்டலத்தில், உயிரினங்கள் வாழ்கின்றன?
- எந்த மண்டலத்தைப் பற்றி நாம் குறைவாக அறிந்துள்ளோம்?
- எம்மண்டலத்தில் ஜெட் விமானங்கள் பறக்கின்றன? ஏன்?

**எக்சோ மண்டலம் :** இது வளிமண்டலத்தின் மேல் அடுக்காகும். இது மிகவும் உயரமான அடுக்காகும். இதைப் பற்றி நாம் மிகவும் குறைவாகவே அறிந்துள்ளோம்.

இந்த நுண்துகள்கள் வளிமண்டல நிலைகளை மாற்றி பூமியில் வாழ்வதற்கு நன்மை பயப்பதாக மாற்றியமைக்கும். நீங்கள் எப்பொதாவது அழகான, ஆரஞ்சு நிற சூரிய உதயத்தை அல்லது சூரிய மறைவினை பார்த்ததுண்டா? வளிமண்டலத்தில் உள்ள நுண்துகள்கள் ஆரஞ்சு நிறத்தை ஏற்படுத்துகின்றன.

மழையில் விளையாட நீங்கள் விரும்புகிறீர்களா? ஆலங்கட்டிகளை சேகரித்து அவற்றை விரும்பி உண்பீர்களா? நுண்துகள்கள் வெப்பநிலை மற்றும் மழைபொழியும் முறைகளையும் மாற்றி சிக்கல்களை உருவாக்குகின்றன. எடுத்துக்காட்டாக : அவை மக்கள் சுவாசிப்பதில் சிரமத்தை ஏற்படுத்துகின்றன. அவை இலைகளின் மேலமர்ந்து தாவரங்கள் சுவாசிப்பதையும், ஒளிச்சேர்க்கை செய்வதையும் சிரமமாக்கி விடுகின்றன.

## அழுத்த மண்டலங்களும் கோள் காற்றுகளும்

**காற்றழுத்தம் :** நம்மைச் சுற்றியுள்ள காற்று, வாயு மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது (மிகச்சிறிய துகள்கள்). இந்த மூலக்கூறுகள் ஒன்றையொன்று தொடர்ந்து தள்ளிக்கொள்கின்றன அல்லது அதன் வழியில் வரும் எந்தவொரு பொருளையும் தள்ளுகின்றன. எந்த ஒரு பொருள் மீதும் அவை இணைந்து செயல்படுத்தும். இந்த தள்ளும் விளைவையே நாம் காற்று அழுத்தம் என்கிறோம். இவ்வாறு காற்று அழுத்தத்தை மேலிருந்து மட்டுமின்றி அடியிலிருந்து ஒருபொருளின் பக்கங்களிலிருந்தும் காற்றில் ஒரு பொருள் வெளிப்படையாக வைத்தால் அவற்றின் பக்கங்களிலும் கூட (அழுத்தத்தை) ஏற்படுத்தும்.

அதிக மூலக்கூறுகள் இருப்பின், காற்றின் அழுத்தம் அதிகரிக்கும். எனவே அவற்றின் அதிகமான மூலக்கூறுகள் தள்ளுவதை செயல்படுத்தும். இதுபொதுவாக பூமியின் புறப்பரப்பின் மீது நிகழ்கிறது. பூமியின் புவியீர்ப்பு விசையால் அதன் புறப்பரப்பில் உள்ள மூலக்கூறுகளை பூமி இழுக்கிறது.



SCERT TELANGANA

எனினும் காற்று வெப்பமடையும்போது இது மாறுகிறது. வாயு மூலக்கூறுகள் வெப்பப்படுத்தும் போது (பொதுவாக பூமியின் புறப்பரப்பு வெப்பமாவதால்) அவை அதிக ஆற்றலைப் பெறுகின்றன. மிக வேகமாக நகரத் தொடங்குகின்றன. இது முதலில் பொருளை அதிகமாக தள்ளுவதால் அழுத்தம் அதிகரிக்கிறது. இருப்பினும் ஆற்றல் பெற்ற மூலக்கூறுகள் உயர உயர பறக்கத் தொடங்குகின்றன. அவற்றிற்கு தற்போது அதிக ஆற்றல் உள்ளதால் அவை பூமியின் இழுப்பை எதிர்கொள்கின்றன. வளிமண்டலத்தில் உயரமான எல்லைகளுக்கு அதிக மூலக்கூறுகள் செல்லும் போது பூமிக்கு அருகிலுள்ள இடங்களில் அவற்றின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். அதாவது புறப்பரப்பில் குறைவான தள்ளுதல் அல்லது குறைவான அழுத்தம் இருக்கும்.

ஆகவே தான் புவியியலாளர்கள் பூமி வெப்பமடையும் போது காற்றழுத்தம் குறைவதாகவும், குளிர்ச்சியடையும் போது காற்றழுத்தம் அதிகரிப்பதாகவும் கூறுகின்றனர். எளிமையாகக் கூறுவோமாயின், ஒன்று அதிகரித்தால் மற்றொன்று குறைகிறது. இதை தலைகீழ் தொடர்பு என்பர்.

வெப்பமடைந்த காற்று மேலே உயரும்போது, அது பூமியின் புறப்பரப்பிலிருந்து பெற்ற அற்றலை இழக்கத் தொடங்குகிறது. (வெப்ப வடிவில்) ஆற்றல் குறையும் போது மூலக்கூறுகள் நகரும் வேகம் குறைந்து, மிகவும் அதிக அளவில் சுறுசுறுப்பற்றதாக மாறிவிடுகிறது. மேலும் ஒன்றுக்கொன்று நெருக்கமடைகிறது. காற்று குளிர்ச்சியாகவும் அடர்த்தியாகவும் மாறுகிறது. அடர்த்தியான காற்று புவியீர்ப்பு விசையால் பூமியின் புறப்பரப்பின் மீது திரும்பி விழத் தொடங்குகிறது. அவற்றிற்கு ஈர்ப்பு விசையுடன் மோத போதிய அளவு ஆற்றல் இருப்பதில்லை. எப்பொழுதெல்லாம் குளிர்ந்த காற்று கீழே இறங்குகிறதோ அப்போதெல்லாம் காற்றழுத்தம் அதிகரிக்கிறது.

அத்துடன் முடிவதில்லை. பூமியின் ஏதேனும் ஒரு பகுதி வெப்பப்படுத்தும் பொழுது குறைந்த அழுத்தம் ஏற்படுகிறது. அதாவது அதிகமான வெற்றிடத்தில் குறைந்த அளவு மூலக்கூறுகள் இருக்கும் என்பது இதன் பொருள். தற்போது அழுத்தம் அதிகமாக உள்ள மற்ற பகுதிகளில் உள்ள காற்று, வெற்றிடத்தை நோக்கி வீசுகிறது. அவை பூமியின் புறப்பரப்பை நோக்கியே வீச வேண்டியுள்ளதால் அவற்றிற்கு யாதொரு கடினமும் இல்லை. இவ்வாறு அவை புவியீர்ப்பை எதிர்த்து அதிகமாக செல்ல வேண்டியதில்லை. எனவேதான் காற்று உயர் அழுத்தப் பகுதிகளிலிருந்து குறைந்த அழுத்தப் பகுதிகளை நோக்கி வீசுவதாக நாம் கூறுகிறோம்.

## அழுத்த மண்டலங்கள்


பூமியின் புறப்பரப்பு ஒரே சீராக வெப்பமடையாது. நிலமானது கடலை விட வேகமாக வெப்பமடைகிறது. நிலத்தின் உள்பகுதியில் கடலருகில் உள்ள நிலங்களைவிட வேகமாக வெப்பமடையும். எனவே நிலத்தின் மீதுள்ள காற்று வேகமாக வெப்பமடைகிறது. நீர் வெப்பமடைய வெகு நேரமாகிறது. எனவே நீருக்கு மேல் உள்ள காற்று மிகவும் குறைவான வேகத்தில் வெப்பமடைகிறது.

எனினும், குளிர்ச்சி அடையும்போது நிலம், நீருடன் ஒப்பிடுகையில் வேகமாக குளிரடைகிறது. எனவே வெப்பமடைதலும், குளிர்ச்சியடைதலும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விகிதங்களில் நிகழ்கின்றன. எனவே, அழுத்தங்களும் இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கும்.

நீங்கள் கற்க வேண்டியவை இன்னும் அதிகமாக உள்ளன. அட்ச ரேகைகளுக்கும் பருவ காலங்களுக்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றி நீங்கள் கற்றீர்கள். வெப்ப மண்டல அட்ச ரேகைப் பகுதிகள் மிக அதிக அளவில் சூரிய வெப்பத்தைப் பெறுவதால் மிதவெப்ப அல்லது துருவ அட்ச ரேகைகளைவிட அதிக வெப்பமாக இருக்கும். ஏனெனில் மிதவெப்ப அல்லது துருவ அட்ச ரேகைப் பகுதிகள் குறைவான சூரிய வெப்பத்தையே பெறுகின்றன. எனவே வெப்ப மண்டலங்கள் உலகின் பிற பகுதிகளைவிட வெப்பமாக இருக்கும். ஆகவே உலகைச் சுற்றிலும் வெப்பநிலை மாறுபட்டால் அழுத்தமும் மாறுபடும்.

நீரானது உயரமான பகுதியிலிருந்து தாழ்வான பகுதிக்குச் செல்வதைப் போல வெப்பமும் வெப்பமான பொருட்களிலிருந்து குளிர்ச்சியான பொருட்களுக்கு பரவும். காற்றானது உயர் அழுத்தப் பகுதிகளிலிருந்து குறை அழுத்தப் பகுதிகளுக்குச் செல்லும். உண்மையில், காற்று உயர்ந்த அழுத்தம் கொண்ட பகுதிகளிலிருந்து குறைந்த அழுத்தம் கொண்ட பகுதிகளுக்குச் செல்கிறது என்று நாம் கூறவேண்டும். காற்று அவ்வாறு நகரும்போது அதை நாம் 'வீசும் காற்று'(wind) என்கிறோம்.

அது குறைவான வேகத்தில் வீசும்போது நாம் அதில் இன்பமடைகிறோம். அதை நாம் 'தென்றல்'(Breeze) என்கிறோம். காற்றானது குறுகிய அளவிலும் வேகமாகவும் வீசினால் நாம் அதை 'திடீர் காற்று'(Gust) என்கிறோம். அது மிகவேகமாகவும் சுற்றிலும் உள்ள பொருட்களை வேகமாக தள்ளுமாயின் அதை நாம் 'புயல்'(Storm) என்கிறோம். ஆந்திரப் பிரதேசக் கடலோரத்தில் மிகவும் உயர் வேக காற்றுகளும் பல நாட்களுக்குத் தொடர்ந்து வீசுவதுமான புயல்களை நாம் காண்கிறோம். பலவகை காற்றுகள் உலகம் முழுவதும் வீசுகின்றன. பூமத்திய ரேகையில், வளிமண்டலத்தை உயர் வெப்பநிலை வெப்பப்படுத்துகிறது. அப்போது வெப்பமடைந்த காற்று மேலெழும்பி பூமத்திய ரேகையைச் சுற்றிலும் பூமியின் புறப்பரப்பில் தாழ்ந்த அழுத்தத்தை உருவாக்குகிறது. இந்த தாழ்ந்த அழுத்த மண்டலத்தை 'உள் வெப்ப மண்டல குறுகியப் பகுதி' (சுருக்கமாக Inter Tropical Covergence Zone -ITCZ) என்பர். இந்தக் காற்று மேலே எழும்போது அது குளிர்ந்து குறையத் தொடங்கும். ஆனால் அது மேலே செல்லும் அதே வழியில் திரும்ப வராது. அது வளிமண்டலத்தின் மிக அதிக உயரத்தை அடையும்போது. காற்று பூமத்திய ரேகைப் பகுதியிலிருந்து வடக்கு மற்றும் தெற்கு அரைக் கோளத்தை நோக்கிப் பரவுகிறது. அது பரவுவதால், குறையவும் தொடங்குகிறது. அது குளிர்ச்சியாகவும், அடர்த்தியாகவும் மாறி பூமிக்கே மீண்டும் திரும்புகிறது. அது குறையுமிடத்தில் அழுத்தம் அதிகரிப்பதை நாம் காணலாம்.




*படம் 4.3: அழுத்த மண்டலங்களும் கோள் காற்றுகளும்*


SCERT TELANGANA

கீழே வரும்போது, காற்று பூமியின் புறப்பரப்பில் மோதுவதால் அது இரண்டு பகுதிகளாக பிளவுபடுகிறது. ஒரு பகுதி மீண்டும் பூமத்திய ரேகை குறைந்த அழுத்த பகுதியை நோக்கி விரைகிறது. அவை அந்த இடத்தை அடையும்போது அவை மீண்டும் வெப்பமடைந்து மேலே உயர்கிறது. இவ்வாறு பூமத்திய ரேகையில் காற்றின் சுழற்சி தொடர்கிறது.


மற்றொரு பகுதி அழுத்தம் குறைவாக உள்ள அடுத்த உயர் அட்சரேகைகளை நோக்கி தள்ளப்படுகிறது. குறிப்பிற்காக இவற்றை நாம் 'A' காற்றுகள் எனக்கொள்வோம். (இது இந்த காற்றுகளுக்கான அதிகாரப்பூர்வமான பெயரல்ல. இது நமது வசதிக்காக வைத்துக்கொள்வதாகும்) வட, தென் துருவப் பகுதிகளில் உள்ள காற்று மிகவும் குளிராக இருப்பதால் அங்குள்ள காற்றின் அழுத்தம் ஆர்க்டிக் வளையம் (வடக்கில்) மற்றும் அண்டார்க்டிக் வளையம் (தெற்கில்) போன்ற அட்சரேகைப் பகுதிகளில் உள்ள அழுத்தத்தை விட அதிகமாக இருக்கும். எனவே துருவக் காற்றுகள் இந்த குறைந்த அழுத்தப் பகுதிகளை நோக்கி விரைகின்றன. அங்கு, இவை 'A' காற்றுகளை சந்திக்கின்றன.

பொதுவாக, காற்று வடக்கிலிருந்து தெற்கு அல்லது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஒரே நேர்க்கோட்டில் வீசும் என்று நாம் எதிர்பார்த்திருப்போம். அல்லது மிதவெப்ப மண்டலத்திலிருந்து வெப்ப மண்டலத்திற்கு, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வீசும் என எதிர்பார்த்திருப்போம் (மித வெப்ப மண்டலம் என்பது பூமத்திய ரேகைக்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ள இரண்டு மிதவெப்ப மண்டலப்பகுதிகளையும் குறிக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்). ஆனால் உண்மையில் இந்த காற்றுகள் வடக்கு அரைக்கோளத்தில் சற்று வலப்புறமாக (கிழக்கு நோக்கி) வீசும், தெற்கு அரைக்கோளத்தில் இடப்புறமாக (மேற்கு நோக்கி) வீசும். இது பூமி தன்னைத்தானே தன் அச்சில் சுற்றுவதன் தாக்கத்தால் நிகழ்கிறது. இந்த விளைவை 'கொரியாலிஸ் விளைவு' என்பர். இது பூமத்திய ரேகை அருகே 0 விளைவையும், துருவப் பகுதிகளில் உயர்ந்த விளைவையும் கொண்டிருக்கும்.

இவ்வாறு வளிமண்டலமானது உலகைச் சுற்றி எப்போதும் சுழன்றுக் கொண்டிருக்கும். காற்றுகள் வெப்பநிலை மற்றும் காலநிலை அமைப்புகளில் மிக முக்கியப் பங்கினை வகிக்கின்றன. அவை வரலாற்றிலும் மிக முக்கிய பங்கு வகித்தன.




A வடக்கு நோக்கி விசையுடன் நகரும் காற்று




B தெற்கு நோக்கி விசையுடன் நகரும் காற்று

படம் 4.4: கொரியாலிஸ் விளைவைக் காட்டும் வரைபடம்



SCERT TELANGANA

எடுத்துக்காட்டாக, வாஸ்கோடாகாமா இந்தியாவிற்கு கடல்வழி கண்டுபிடிப்பதில் தன் படகுகளுக்கு ஆற்றல் வழங்குவதில் இந்த காற்றை பயன்படுத்தினார். இந்த காற்றுகளாலேயே அவரால் இந்தியாவிலிருந்து போர்ச்சுகல் நாட்டிற்கு அதிக அளவில் மிளகு, இலவங்கப்பட்டை போன்றவற்றை ஏற்றுமதி செய்ய முடிந்தது. இந்த வகையில் கோவாவில் போர்ச்சுகீசியரின் ஆட்சியை அமைப்பதிலும் இக்காற்றுகள் மிகவும் முக்கிய பங்கினை வகித்தன. காற்றுகள் வீசும் முறையில் பல சிறிய உள்ளூர் மாற்றங்கள் இருப்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

## காற்றுகளின் வகைப்பாடு

காற்றுகளின் வேகம், தன்மைகள், திசைகள், ஏற்படும் முறைகளை ஆதாரமாகக் கொண்டு, காற்றுகளை மூன்று வகைகளாக வகைப்படுத்தலாம்.

அ. கோள் காற்றுகள் – பூமியின் மீது வருடம் முழுவதும் வீசும் காற்று.

ஆ. பருவகால காற்றுகள் – குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் வீசும்காற்று

இ. தலக்காற்றுகள் – சில குறிப்பிட்ட இடங்களில் வீசும் காற்று.

**கோள் காற்றுகள்(Planetary Winds) :** உலகின் காற்றழுத்த மண்டலங்களில் நிலையாகவும், தொடர்ந்தும் சீராகவும் வீசும் வளிகளை கோள் காற்றுகள் என்பர். இவை மூன்று வகைப்படும் வியாபார காற்றுகள், மேற்குக் காற்றுகள் மற்றும் துருவக் காற்றுகள். வெப்ப மண்டலப் பகுதிகளில் வியாபாரக் காற்றுகள், மித வெப்பப் பகுதிகளில் மேற்கு காற்றுகள், துருவக் காற்றுகள் துருவப் பகுதிகளில் வீசுகின்றன. வியாபாரக் காற்றுகள் கீழ்காற்றுகளாகும். இவை கிழக்கிலிருந்து மேற்கு திசை நோக்கி வீசும். ஆனால் இவைகள், வட அரைகோளத்தில், வட கிழக்கு வியாபார காற்றுகள் என்றும், தெற்கு அரைகோளத்தில் தென் கிழக்கு வியாபாரக் காற்றுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. மேற்குக் காற்றுகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வீசுவதால், அவைகள் மேல்காற்றுகள் எனப்படுகின்றன. அவைகள், வட அரைகோளத்தில் தெற்கிலிருந்து வடக்காகவும், தெற்கு அரைகோளத்தில் வடக்கிலிருந்து மேற்காகவும் விசுகின்றன. துருவக் காற்றுகள் கீழ்காற்றுகளாக உள்ளன.

- மேல் காற்றுகளும் கீழ்காற்றுகளும் எந்த அழுத்த மண்டலங்களிலிருந்து எந்த அழுத்த மண்டலம் நோக்கி வீசுகின்றன என விவரி.

**கோள் காற்றுகளின் விளைவுகள் :** காற்றழுத்தமும் காற்று வீசும் முறைகளும் வளிமண்டலத்தின் மீது கற்கோளம் மற்றும் நீர்க்கோளங்களின் தாக்கத்தால் அமைகின்றன என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இந்த காற்றுகள் வெப்பத்தையும் ஈரப்பதத்தையும் உலகம் முழுவதும் எடுத்துச் செல்வதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனாலேயே உலகில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்றாற்போல உலகின் எந்த பகுதியும் அதிக குளிரையோ அல்லது அதிக வெப்பத்தையோ அடைவதில்லை. வளிமண்டலம் இல்லையேல் (சந்திரனைப்போன்று) பகல் வேலையில் அல்லது வெப்பமண்டலங்களில் தீவிர வெப்பமும், இரவு வேளையில் அல்லது துருவப் பகுதிகளில் தீவிர குளிரும் இருக்கும். இருப்பினும் இந்த காற்றுகள் வெப்பத்தையும் ஈரத்தையும் சமமாக சீராக பங்கிடுவதில்லை. எனவே தான் உலகின் சில பகுதிகளில் வெப்பமாகவும், சில பகுதிகளில் குளிராகவும், சில பகுதிகளில் அதிக மழைப்பொழிவும் மேலும் சில பகுதிகளில் பாலைவனங்களையும் பெற்றுள்ளது.

நிலமும் கடலும் குளிர்வதில் உள்ள வேறுபாட்டால் பருவ காற்றுகள் ஏற்படுகின்றன. வடமேற்கு இந்தியாவில் கோடைப் பருவகாற்று உருவாகும்போது தென்கிழக்கு வியாபாரக் காற்றுகள் பூமத்திய ரேகையை கடக்கின்றன. கொரியாலிஸ் விளைவின்படி பூமியின் சுழற்சியியால் ஏற்படும் விசை வடஅரைகோளத்தில் வடக்காகவும், தென் அரைகோளத்தில் தெற்காகவும் காற்றை திருப்பும். இதன் காரணமாக அது தீபகற்ப இந்தியாவிலும் அதனுடைய அண்டை நாடுகளிலும் தென்மேற்குப் பருவக்காற்றாக மாறுகிறது. குளிர்காலத்தில் காற்றழுத்த தலைகீழ் மண்டலங்கள் அதாவது வடகிழக்கு வியாபார காற்று பூமத்திய ரேகையைக் கடக்கின்றன. கொரியாலிஸ் விளைவின் காரணமாக வட இந்தியாவிலும் வடகிழக்கு ஆஸ்திரேலியாவிலும் அது வடமேற்குப் பருவக்காற்றாக மாறுகிறது.




SCERT TELANGANA

**தலக் காற்றுகள் :** உள்ளூர் வெப்பநிலை மற்றும் காற்றழுத்தத்தில் உள்ள மாறுபாட்டால் உள்ளூர் காற்றுகள் வீசுகின்றன. அவை மிகச்சிறிய பகுதிகளின் மேல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வெப்பமான தலக்காற்றுகள் அப்பகுதியின் வெப்பநிலையை உயர்த்துகின்றன. குளிர்ச்சியான உள்ளூர் காற்றுகள் சில சமயங்களில் பாதிக்கப்பட்ட பகுதியின் வெப்பநிலையை உறைநிலைப் புள்ளிகளுக்கும் கீழே கொண்டுவரும். இந்த தலக் காற்றுகள் ட்ரோபோ மண்டலத்தின் கீழ்ப்பகுதியில் வீசும். மலைகள், பள்ளத்தாக்குகள், கடல் மற்றும் நிலங்களில் வீசும் தென்றல் காற்றுகள் ஒரு வகையான தலக்காற்றுகளே ஆகும். இந்த காற்றுகள் தாழ்வு வளிமண்டலம் வெப்பமடைவதாலும் அல்லது குளிர்ச்சியடைவதாலும் உருவாக்கப்படும். தலக் காற்றழுத்த ஏற்ற இறக்கங்களுக்குத் தக்கவாறு இயங்கும்.

**வெப்பதலக் காற்றுகள் :**

**1. சினூக் :** இந்தக் காற்றுகள் வட அமெரிக்க கண்டத்தின் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் கனடா பகுதிகளில் உள்ள ராக்கி மலைத்தொடரின் கீழ் வீசும். எனவே இதை சினூக் என்று அழைப்பர். பெரும்பாலான மக்கள் சினூக் என்னும் சொல்லுக்கு 'பனியை உண்பவர்' என்று பொருள் என நினைக்கின்றனர். உண்மையில் இது இப்பகுதியில் வாழ்ந்த சினூக் மக்கள் என்று அழைக்கப்படும் உள்ளூர் அமெரிக்க பழங்குடியின மக்களைக் குறிக்கும். அவர்கள் முதலில் இக்காற்றைப் பற்றி அறிந்ததால் இக்காற்றுகளுக்கு சினூக் என்னும் பெயர் ஏற்பட்டது). இக்காற்றுகள் குளிர்காலத்தின்போது




*படம் 4.5: சினூக்*

பனியினின்று புல்தரைகளை தெளிவாக தெரியும்படி காக்கும். ஐரோப்பாவில் இதே போன்று வீசும் காற்றுகளை ஃபோன் என்றழைப்பர். அவை ஆல்ப்ஸ் மலைகளின் வடக்குச் சரிவுகளில் வீசும். அவை பனியை உருகச்செய்து காலநிலையை இதமானதாக்கி திராட்சைப் பழங்களை முதிர்ச்சியடைய உதவுகின்றன.

2. லூ : இவை வெப்பமான வறண்ட காற்றுகள். இவை வட இந்தியாவின் சமவெளிகளில் மே மற்றும் ஜூன் மாதங்களில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வீசுகின்றன. இவை உயர்ந்த வெப்பநிலையை கொண்டிருப்பதால் மக்களுக்கு வெப்பத்தாக்கத்தினை ஏற்படுத்தும்.

அரேபியா பாலைவனத்தில் 'சிம்மன்', ஜப்பானில் 'யோமா', நியூசிலாந்தில் 'நார்வெஸ்டர்' போன்றவை வெப்பக் காற்றுகளுக்கு சில எடுத்துக்காட்டுகளாகும்.

SCERT TELANGANA

**குளிர்ந்த காற்றுகள் :**

1. **மிஸ்ட்ரல் :** மிகவும் பிரபலமான மிஸ்ட்ரல் என்னும் இக்காற்று பிரான்சில் ஆல்ப்ஸ் மலைகளிலிருந்து மத்திய தரைகடலை நோக்கி வீசுகிறது. இது ரோம் பள்ளத்தாக்கு வழியாக வீசுகிறது. இது மிகவும் குளிரான மற்றும் வறட்சியான காற்று.
2. **புனா :** இது ஆண்டிஸ் மலைப்பகுதியில் வீசும் குளிர்ந்த தலக்காற்று.
3. **பம்பரோ :** இது தென் அமெரிக்காவின் பம்பா புல்வெளிப் பிரதேசத்தில் மிக வேகமாக வீசும் குளிர்ச்சியான துருவக்காற்று.

## வானிலையும் காலநிலையும்

மோசமான வானிலை (மழை) காரணமாக கிரிக்கெட் ஆட்டம் தள்ளிப்போடப்படுவதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். மழை அல்லது அதிகமான வெப்பத்தின் காரணமாக உங்களுடைய சொந்த விளையாட்டுகளை வானிலை ஏற்றதாக இல்லை என்று கூறி நீங்களும் அவற்றை தள்ளிப்போட்டிருக்கலாம்.

இந்த ஆண்டு பருவமழை சரியான நேரத்தில் வந்துவிட்டது என்று மக்கள் கூறுவதையும் நீங்கள் கேட்டிருக்கலாம். உரிய பருவத்தில் காய்க்காத பழங்களின் விலை உயர்ந்துவிடும். ஆனால் அவற்றிற்குரிய காலத்தில் அவற்றின் விலை குறைந்து விடும். வட இந்தியாவின் வெப்பநிலை எனக்கு ஏற்றதாக இல்லை என்று சிலர் கூறுவதையும் நீங்கள் கேட்டிருக்கலாம்.

வானிலை மற்றும் காலநிலை என்னும் இவ்விருசொற்களும் புவியியலில் மிக முக்கியமான கருத்துகளாகும். அவை நம் வாழ்க்கை முறைகளை பல வழிகளில் வடிவமைக்கின்றன. மக்கள் இந்த இரண்டு சொற்களை பயன்படுத்தும் போது காலநிலையை வானிலை என்றும் வானிலையை காலநிலை என்றும் மாற்றி மாற்றி பயன்படுத்தி குழப்பமடைகின்றனர். ஆனால் நீங்கள் அப்படியல்ல சரிதானே? இப்பிரிவின் இறுதிக்குள் இவ்வேற்றுமையை நீங்கள் அறிந்துக்கொள்வீர்.

வளி மண்டலம் என்று நாம் வழங்கும், வாயுக்கள் மற்றும் நுண்பொருட்களின் கலவையானது, அசையாமல் அமர்ந்திருப்பதில்லை. அது மிகவும் இயங்கும் தன்மை உடையது. அது மேலும் கீழும் மற்றும் கிடையாகவும் அனைத்து திசைகளிலும் நகரக்கூடியது. அது இவ்வாறு இயங்கும் போது அதன் குணநலன்கள் மாறும். அது வெப்பமாக அல்லது குளிராகவும், ஈரமாக அல்லது வறட்சியாகவும் மாறும்.

நாம் ஒரு சிறு கால இடைவேளைக்காக (பொதுவாக பெரும்பாலும் 10 நாட்களுக்கு) வளிமண்டலத்தின் நிலையை விவரிக்கும்போது, நாம் ஓரிடத்தின் வானிலையை விவரிக்கின்றோம். வானிலை தினமும் மாறும், ஒரு நாளிலும் மாறும்.

வளிமண்டலத்தை நாம் எவ்வாறு விவரிக்கிறோம்? (அ) வெப்பநிலை (ஆ) காற்றழுத்தம் (இ) வீசும் காற்று (ஈ) ஈரப்பதம் (உ) ஈரம் வடிதல் இவை வானிலையின் கூறுகள் என அழைக்கப்படுகின்றன. நாம் இவற்றை விரைவில் கற்கவிருக்கும் காலநிலையை விவரிக்கவும் பயன்படுத்துகிறோம். எனவே இவையும் காலநிலையின் கூறுகளே. நீங்கள் சற்று முன் காற்றழுத்தங்களைப் பற்றியும் காற்றுகளைப் பற்றியும் படித்தீர்கள். பிற கூறுகளைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை தற்போது காண்போம்.

வெப்பநிலை : எட்டாம் வகுப்பில் வளிமண்டலத்தின் வெப்பநிலையைப் பற்றி நீங்கள் படித்தீர்கள். அப்போது, நீங்கள் பனாஜி, சிம்லா மற்றும் புதுடில்லி நகரங்களின் வெப்பநிலைகளை ஒப்பிட்டீர்கள். சிம்லா நகரம் பனாஜி மற்றும் டில்லியை விட அதிகமான உயரத்தில் இருந்தாலும் குளிர்ந்த வெப்பநிலையைக் கொண்டுள்ளது என்பதையும் நீங்கள் கற்றறிந்தீர்கள். பூமியின் புறப்பரப்பின் மீது, அதிக உயரத்திற்கு செல்லச் செல்ல வெப்ப நிலைகள் குறையும்.

காலநிலை என்பது நீண்ட கால இடைவெளியில் பல பகுதிகளின் சராசரி வளிமண்டல நிலைகளைக் குறித்து அறிவது. காலநிலை விவரங்கள் பத்தாண்டு கால வளிமண்டலப் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் சராசரிகளைக் கண்டறிவதாகும். காலநிலை விவரங்க்ள ஒரு கொடுக்கப்பட்ட ஆண்டில் என்ன நிலைகள் உள்ளன என்பதை நமக்குக் கூறுகின்றன. ஆனால் அவை குறிப்பிட்ட நாளின் காலநிலைகளைப் பற்றி தெரிவிக்காது.

## ஈரப்பதமும் ஈரம் வடிதலும்(Humidity and Precipitation)

இப்பாடப் பிரிவில் வளிமண்டலத்தில் நீர் சுழற்சி எவ்வாறு வேலை செய்கிறது என்பதை பார்ப்போம். நீர்க்கோளம் மற்றும் வளிமண்டலம் ஆகிய இவ்விரண்டு கோளங்களும் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு தொடர்புகொண்டுள்ளன என்பதையும் நீங்கள் பார்க்கலாம். நீராவி என்பது வளிமண்டலத்தில் உள்ள ஒரு முக்கிய அங்கமாகும். பெரும்பாலான இடங்களில் வளிமண்டலத்திலுள்ள நீராவியின் அளவு பருவ காலத்தால் மாறுபடுகின்றன. மாறிவரும் காலநிலை அமைப்புகளின் ஒரு பாகமாகவும் உள்ளன. பல இடங்களில், குளிர் காலத்தில் வறட்சியும் குளிரும் இருக்கும். அது போன்ற இடங்களில் நம் தோலில் அரிக்கக்கூடியதாகவும், உலர்ந்தும், வெடிப்புகளும் காணப்படும். உதடுகள் வெடிப்பதையும் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அவற்றிற்கு உதட்டுத்தைலம், வேசலின் அல்லது சிலவகையான எண்ணெய் போன்றவற்றையும் பூசி இருப்பீர்கள். ஆகவே வளிமண்டலத்திலுள்ள நீராவியின் அளவு இடத்திற்கு இடமும் காலத்திற்கு காலமும் மாறுபடும்.

உயர்ந்த வெப்பநிலையுடன் இணைந்து நீராவி புழுக்கத்தையும் வியர்வையும் ஏற்படுத்துவதை நீங்கள் உணரலாம். இது நிகழும் போது மிகவும் ஈரமாகவுள்ளது அல்லது ஈரப்பதம் அதிகமாக உள்ளது என்று நாம் கூறுகிறோம். ஆனால் இந்த விஷயத்தில் எல்லா இடங்களும் ஒரே மாதிரியாக இருக்காது. சில இடங்களில் வறட்சியாக காணப்படும் (எடுத்துக்காட்டு : பாலைவனங்கள்). வளிமண்டலத்திலுள்ள ஈரப்பதம் (நீராவி) நீராவியாதல் மூலம் நீர் நிலைகளிலிருந்தும் நீராவிப்போக்கு மூலம் தாவரங்களிலிருந்தும் பெறப்படுகிறது. ஈரப்பதம் என்பது காற்றிலுள்ள நீராவியின் அளவாகும். உயர்ந்த ஈரப்பதத்தில் நம் வியர்வை நம்மை குளிர வைக்காது. ஏனெனில் அது நீராவி ஆவதில்லை. குறைந்த ஈரப்பதத்தில் நமக்கு தாகம் அதிக அளவில் எடுக்கிறது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> காற்றிலுள்ள ஈரப்பதத்தை அளக்கப்பயன்படும் கருவி ஹைக்ரோமீட்டர் (Hygrometer).

நீங்கள் முன்பு படித்த நுண் பொருட்களைப் பற்றி நினைவு கூருங்கள். அவை மழைபொழிவின் போது எவ்வாறு உதவுகின்றன என்பதையும் நினைவு கூருங்கள்.

நாம் ஈரப்பதத்தை நேரடியாக வெளிப்படுத்த முடியாது. ஆனால் ஒப்பு ஈரப்பதம் என்னும் கருத்தைப் பயன்படுத்தி வெளிப்படுத்தலாம். ஒப்பு ஈரப்பதம் என்பது இரண்டு பொருட்களுக்கு இடையேயான விகிதத்தை தெரிவிக்கிறது.

1. கொடுக்கப்பட்ட வெப்பநிலை மற்றும் காற்றழுத்தத்தில் காற்றால் தாங்கிப்பிடிக்கப்படும் அதிகபட்ச நீராவி.
2. எந்தவொரு நேரத்திலும் அது தாங்கிப்பிடிக்கும் நீராவியின் உண்மையான அளவு.

எடுத்துக்காட்டாக, $20^oC$ வெப்பநிலையில் காற்று ஒரு கன மீட்டருக்கு 80 கிராம் நீராவியைப் பெற்றிருக்கும். உண்மையான நீராவி 40கிராம் மட்டுமே இருந்தால் ஒப்பு ஈரப்பதம் அல்லது ஈரப்பத விகிதம் 50% ஆக இருக்கும். ஈரப்பத விகிதம் வெப்பநிலை குறையும் போதும் அல்லது நீராவியை சேர்க்கும் போதும் அதிகரிக்கும். ஈரப்பத விகிதம் வெப்பநிலை அதிகரிக்கும் போதும் நீராவி குறையும் போதும் குறையும். வெப்பநிலையானது உறைநிலையை அடைந்தால் அதை பனிநிலை என்பர். பனித்துளியை நீங்கள் பார்த்ததுண்டா? அவை? எங்கு காணப்படுகின்றன? வளிமண்டலத்தில் 100% ஒப்பு ஈரப்பத விகிதம் இருந்தால் அதை 'உறைநிலை' என்பர்.

SCERT TELANGANA

## சுருங்கல்(Condensation)

சுருங்கல் நீராவியாதலுக்கு எதிரானது. இதில் நீராவியானது நீர்த் திவலைகளாக அல்லது பனிக்கட்டிகளாக மாறுகிறது. ஒப்பு ஈரப்பத விகிதம் 100%த்தை தாண்டும் போது வளிமண்டலம், மேகக்கூட்டங்களில் அதிகமாக உள்ள நீராவி மிகச்சிறிய நீர்த்துளிகளாக சுருங்குகிறது. எடுத்துக்காட்டாக, காற்றானது $20^{o}C$ வெப்பநிலையில் கன மீட்டருக்கு 49 கிராம் நீராவியைப் பெற்றிருந்தால் மற்றும் $10^{o}C$க்கு குளிர்ச்சி அடைந்தால் அது உறை நிலையில் 40 கிராம் நீராவியை மட்டுமே தாங்கிப்பிடிக்கும். அதிகமாக உள்ள 9கிராம் நீராவி சுருங்கிவிடும். வளிமண்டலத்தில் மிகச்சிறிய திடப்பொருட்கள் இருக்கும் போது மட்டுமே திரவமாதல் அல்லது சுருங்கல் ஏற்படும். கண்ணாடி டம்ளரில் உள்ள குளிர்ந்த நீரால், வெளிப்புறக்காற்று குளிர்ந்து நீர்த்துளிகள் ஏற்படுவதும் சுருங்கல் ஏற்படுவதால் தான். தாவரங்களின் இலைகளிலிருந்து நீராவி வெளிப்பட்டு, பின் சுருங்குவதால் ஏற்படும் நீர்த்துளி பனித்துளி எனப்படும்.

தூசுத் துகள்கள் வளிமண்டலத்திலுள்ள நீராவியிலிருந்து வரும் நீர் மூலக்கூறுகளை கவர்கின்றன. இதனால் நீராவி நீர்த்துளிகளாக சுருங்தல் (சுருங்குதல் என்றால் அடர்த்தியாக மாறுதல் என்று பொருள்) ஏற்படுகிறது. மில்லியன் கணக்கான நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்து பலவகையான மேகங்களாக காணப்படுகின்றன. மேகங்கள் குளிர்ச்சியாக இருந்தால் அவை சிறு பனிக்கட்டிகளைக் கொண்டிருக்கும். மேகங்கள் அவற்றின் வடிவங்களைப் பொருத்தும் அவற்றின் உயரத்தைப் பொருத்தும் பலவகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டு 'கீற்று மேகங்கள்'(Cirrus Clouds) 5000மீ உயரத்தில் இருக்கும், திறள் மேகங்கள்(Cumulus Clouds) 12,000 மீ உயரம் வரை இருக்கும், படைமேகம் (Stratus Clouds), கார்படை மேகம்(Nimbus Clouds) ஆகும். சுருங்கல் முறையால் நீர்த்துளிகள் பளுவாகி பூமியின் மீது ஈரம் வடிதலாய் விழுகிறது. Precipitation என்னும் சொல் Praecipitatio எனும் இலத்தீன் மொழியிலிருந்து தோன்றியது. அதன் பொருள் ஊசலின் குண்டு விழுதல் ஆகும். ஈரம் வடிதலின் வடிவங்கள் மழை, பனி, ஆலங்கட்டி போன்றவை. இந்த துளிகள் பூமியின் புறப்பரப்பிற்கு மிக அருகில் திரவமாகி விழும் போது இத்துளிகள் லேசாக இருக்கும். நாம் மூடுபனியைப் பெறுவோம். நீராவி திரவமாகி தாவரங்கள் போன்றவற்றின் மீது விழும்போது நாம் பனித்துளிகளைப் பெறுகிறோம்.

## ஈரம் வடிதலின் வடிவங்கள்

மழைப்பொழிவு ஈரம் வடிதலின் மிகவும் சாதாரணமான வடிவமாகும். உறைநிலைக்கும் கீழே உள்ள வெப்பநிலையில் சுருங்கல் ஏற்படும் போது நீராவி நேரடியாக பனிப்படிகங்களாக சுருங்குகிறது. இவை பூமியின் மீது பனித்துகள்களாக விழும். ஈரம் வடிதலின் இந்த வடிவத்தை பனிப்பொழிவு என்பர். பனிப்பொழிவு நடு மற்றும் உயர் அட்சரேகைகளிலும் மலைப்பகுதிகளிலும் மிகச் சாதாரணமாக இருக்கும்.

பூமியின் புறப்பரப்பின் அருகில் காற்று மண்டலத்தின் ஒரு குளிர்ந்த அடுக்கின் வழியாக மழைபெய்யும்போது மழையாக உருகுவதற்கு முன்பே பனிக்கட்டிகளாக உறைந்து கீழே விழும். சாலைகள் பனிப் படலமாக காட்சியளிக்கும். ஈரம் வடிதலின் இந்த வடிவத்தை sleet என்பர்.


வளிமண்டலத்தில் பலமான செங்குத்தான காற்றோட்டங்கள் இருக்கும் போது அதிகமான உயரத்தில் குறைவான வெப்பநிலையில் சுருங்கல் ஏற்படுகிறது. படிப்படியாக பனிப் படிகங்கள், அளவில் பெரியதாகும் போதும் உயரமான காற்று ஓட்டங்களால் கீழே விழுவதில்லை. படிப்படியாக இவை பல சென்டி மீட்டர் விட்ட அளவில் ஐஸ்கட்டிகளாக கீழே விழும். ஈரம் வடிதலின் இந்த வடிவத்தை 'கல்மழை' அல்லது 'ஆலங்கட்டி மழை'( Hail stone) என்பர். கல்மழை பயிர்களையும் கட்டிடங்களையும் பாதிக்கும்.

SCERT TELANGANA

## மழைப்பொழிவின் வகைகள்

தோற்றத்தின் அடிப்படையில் மழைப்பொழிவு மூன்று முக்கிய வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1) வெப்பச் சலன மழை(Conventional Rainfall)
2) மலைத் தடை மழை(Orographic Rainfall)
3) புயல் மழை(Cyclonic Rainfall)





படம் 4.6: வெப்பச்சலன மழை

**வெப்பச் சலன மழை :** இவ்வகையானது வெப்பமடைந்த நிலத்தின் மீது ஈரமான காற்று சுற்றியுள்ள காற்றை மேலெழும்பும்படி உந்தப்பட்டு விரிவடைந்து மேலே செல்லச் செல்ல குளிர்ந்து அதன் ஈரப்பதத்தால் மழைப்பொழிவு ஏற்படுகிறது. வெப்பச் சலன மழை தாழ்ந்த அட்சரேகைகளிலும் கண்டங்களின் உட்பகுதிகளில் கோடை நாட்களிலும் சாதாரணமாக பெய்யும். பகல் பொழுதின் வெப்பமான நேரத்திற்குப் பின் மாலை நேரத்தில் குறுகிய கால பலத்த மழை வடிவில் இது சாதாரணமாக பெய்கிறது. சில சமயங்களில் இடியும் மின்னலும் இணைந்து ஏற்படும்.

**மலைத் தடை மழை :** இதை சில சமயங்களில் ஆரோஜெனிக்(Orogenic) மழைபொழிவு என்றும் அழைப்பர். நாம் இதை கிரேக்கச் சொல்லான Oros லிருந்து பெற்றோம். இதன் பொருள் 'மலை' என்பதாகும். இது ஈரமான காற்று வீசும்போது தன் பாதையில் மலையோ அல்லது வேறு ஏதேனும் ஒரு நிலத்தோற்றத்தாலோ மோதப்பட்டு மேலெழுவதால் அப்பகுதியில் மழைப் பெய்கிறது. இவ்வாறு பல மலைத் தொடர்களின் காற்று வீசும் பகுதிகள் பலத்த மழைப்பொழிவை (ஈரம் வடிதலை) பெறுகின்றன. காற்று வீசாத மலைகளின் மறுபுறம் காற்று கீழே இறங்குவதால் சிறிய அளவிலேயே அவை மழையைப் பெறுகின்றன. அது போன்ற சூழ்நிலை இந்தியாவின் மேற்கு கடலோரப் பகுதிகளில் அதிக அளவில் காணப்படுகிறது.

அரபிக்கடலில் இருந்து வரும் ஈரமான காற்று மேற்குத்தொடர்ச்சி மலைகளால் மோதப்பட்டு மேலெழும்பி விரிவடைந்து, குளிர்ந்து, மழையாக பெய்கிறது. மேற்கு




படம் 4.7: மலைத்தடை மழை

தொடர்ச்சி மலைகளின் மறுபுறம் இறங்கும் காற்று ஈரத்தைப் பெற்றிருக்காததால் தக்காணப் பீடபூமியின் மையப் பகுதியில் மழையைத் தருவதில்லை. எனவே இப்பகுதி வறண்டு காணப்படுகிறது. இப்பகுதியையே மழை நிழல் பிரதேசம் என்பர்.

**புயல் மழை :** இவ்வகையான மழை புயல் அல்லது காற்றழுத்த தாழ்வு மண்டலம் கடலில் உருவாதலுடன் தொடர்புடையது. இரண்டு வகையான புயல்கள் உள்ளன. வெப்பமண்டலப் புயல், மிதவெப்ப மண்டலப் புயல். புயல் என்று பொருள்படும் cyclone என்னும் ஆங்கிலச் சொல் கிரேக்கச் சொல்லான kyklon என்னும் சொல்லிருந்து தோன்றியது. அதன் பொருள் 'சுழலுதல்' என்பதாகும்.

வெப்பமண்டலப் புயல்கள் வெப்ப மண்டலங்களில் தோன்றுகின்றன. இது சுழன்று சுற்றுவதால் எல்லாப் பொருட்களையும் அதன் மையத்தில் உள்ள வெற்றிடத்திற்கு இழுத்துக்கொள்ளும் தன்மை வாய்ந்த வெப்பமான காற்றாகும். இது சற்றேறக்குறைய வட்டமான வடிவில் இருப்பதால் இதன் விட்டம் சில நூறு கிலோமீட்டர்கள் இருக்கும். குறைந்தபட்ச புறப்பரப்பு அழுத்தம் 900mbஐ விடக் குறைவாக இருக்கும். வினாடிக்கு 33மீ வேகத்தில் தொடர்ந்து வீசும் காற்று வெதுவெதுப்பான கடல் பரப்பின்மீது $26^0C$ முதல் $27^0C$ உருவாகின்றன. அவை நிலத்தை நோக்கி வீசுகின்றன.



படம் 4.8: வெப்ப மண்டல புயல்

SCERT TELANGANA

**இக்காற்றுகள் வீசும் புயல்களால் மேலெழுப்பப்படுகின்றன. மேலெழுப்பப்பட்ட காற்று, பலத்த மழைப்பொழிவைத் தருகிறது. மிதவெப்பமண்டலப் புயல்கள் குளிர்ந்த, வறண்ட, அடர்த்தியான காற்றும் வெப்பமான ஈரமான, லேசான காற்றுகளுடன் சந்திக்கும் போது ஏற்படுகின்றன. வெப்பமான காற்று லேசாக இருப்பதால் குளிர்ந்த காற்றால் மேலே எழுப்பப்பட்டு மழைப்பொழிவை உண்டாக்குகிறது.**

**உலகின் மழைப்பொழிவு :**

1. பூமத்திய ரேகைக்கு $10^{\circ}$ மற்றும் $30^{\circ}$ வடக்கு மற்றும் தெற்கு அட்சரேகைகளுக்கு இடையில் வியாபாரக் காற்றுகளால் கிழக்குக் கடலோரங்களில் பலத்த மழை பெய்யும். மேற்கு நோக்கிச் செல்லச் செல்ல மழைப்பொழிவு குறைந்துவிடும்.
2. பூமத்திய ரேகைக்கு $40^{\circ}$ மற்றும் $60^{\circ}$ வடக்கு மற்றும் தெற்கு அட்சரேகைகளுக்கு இடையில் மேற்குக் காற்றுகளால் மேற்கு கடலோரங்களில் பலத்த மழை பெய்யும். கிழக்கு நோக்கிச் செல்லச் செல்ல மழைப்பொழிவு குறைந்துவிடும்.
3. முக்கியமாக பூமத்திய ரேகையைச் சுற்றியுள்ள தாழ்ந்த காற்றழுத்தப் பகுதிகள் உயர்ந்த காற்றழுத்தப் பகுதிகளை விட அதிக அளவு மழைப்பொழிவை பெறுகின்றன.
4. கண்டங்களை விட பெருங்கடல்களில் மழை அதிகமாக பெய்யும்.

## முக்கியச் சொற்கள்

1. வெப்பச் சலன நீரோட்டங்கள்
2. உள்வெப்பமண்டல குறுகியப் பகுதி
3. கொரியாலிசிஸ் விளைவுகள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. வளிமண்டலத்தில் உள்ள வாயுச் கலவைகள் யாவை?(AS1)
2. வளிமண்டலத்தின் அமைப்பை படத்துடன் விவரி(AS1)
3. வானிலைக்கும் காலநிலைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?(AS1)
4. வெப்பச் சலன மழைக்கும் மலைத் தடை மழைக்கும் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை எழுதுக.(AS1)
5. உலக மழைப்பொழிவை விவரி.(AS1)
6. காலநிலை மாற்றங்கள் மனித வாழ்வின் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?(AS1)
7. ஒப்பு ஈரப்பதத்தை விவரி?(AS1)
8. நீராவியின் அளவு உயரத்தைப் பொறுத்து ஏன் வேகமாக குறைகிறது?(AS1)
9. கோரியாலிசிஸ் விசை என்றால் என்ன? அதனுடைய விளைவு யாது?(AS1)
10. பின்வரும் தலக்காற்றுகளை உலக வரைபடத்தில் குறிப்பிடுக.(AS5)

    a) சினூக் b) லூ c) சிம்மன் d) யோமா
    e) நார்வெஸ்டர் f) மிஸ்ட்ரல் g) பூமா h) பாம்பெரோ
11. பக்கம் 43ல் உள்ள கோள் காற்றுகளின் விளைவுகள் என்னும் தலைப்பின் கீழ்உள்ள பத்தியைப் படித்து உன் கருத்தைக்கூறு.(AS2)

## செயல்திட்டம்

வானிலை மாற்றங்களை அறிய ஊடகங்களான செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் காட்டப்படும் வானிலைச் செய்திகளை அறிக. செய்திப்படங்களை சேகரித்து சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் ஒட்டவும்.

ஜுலை முதல் டிசம்பர் வரை நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்யும் மழை அளவை செய்தித்தாளிலிருந்து சேகரித்து எழுதுக.

SCERT TELANGANA

பாடம் 5

# உயிர்க்கோளம்

## உயிர்க்கோளம்

அனைத்துவகை உயிரினங்களும் செழித்து வாழக்கூடிய ஒரே கிரகம் பூமியாகும். இதில் கணக்கிலடங்காத நுண்ணிய உயிரினங்கள் முதல் ஆலமரம் போன்ற தாவரங்களும், யானை, புலி, நீலத்திமிங்கலம் முதல் மனித இனம் வரையிலான அனைத்து உயிரினங்களும் வாழ்கின்றன. இதில் நிலம், நீர், காற்று, மிதவெப்பநிலை ஆகியவை கலந்து இருப்பதால் உயிரினங்கள் வாழமுடிகிறது. கற்கோளம், வளிமண்டலம் மற்றும் நீர்கோளம் ஆகிய மூன்று அடுக்குகளின் மூலம் உயிரினங்கள் பூமியில் வாழமுடிகிறது என முன் வகுப்புகளின் பாடங்களில் கற்றோம். உயிரினங்கள் மட்டும் வாழும் கோளம் உயிர்க்கோளம் எனப்படுகிறது என புவியியலாளர்கள் கூறுகின்றனர்.

- தாவரங்கள் காற்றையும் நீரையும் எவ்வாறு சார்ந்துள்ளது என்றும், இவை இரண்டும் தாவரத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தையும் உன்னால் கூற முடியுமா?
- கொசு, பட்டாம்பூச்சி போன்ற பூச்சிகள் எவ்வழியில் பாறைகள் மற்றும் நிலத்தை சார்ந்துள்ளது? பாறைகள் மற்றும் நிலம் பூச்சிகள் மீது ஏற்படுத்தும் தாக்கம் என்ன?

அனைத்து உயிரினங்களும் நிலம், காற்று, நீர் மற்றும் சூரிய ஒளியுடன் நெருங்கியச் தொடர்பைக் கொண்டுள்ளன. உயிரினங்கள் தனக்கு தேவையான உணவுப் பொருட்களை அவைகளிடமிருந்து பெற்று அவைகளின் மீது பல முக்கிய வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

பல்வேறு உயிரினங்களும் மூன்று அடுக்குகளுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. அவைகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. இவ்வுயிரினங்கள் ஒன்றை ஒன்று உணவுக்காக சார்ந்துள்ளன. இதை உணவுச்சங்கிலி என்பர். ஒரு உயிரினம் மற்றொரு உயிரினத்தை உணவாக உட்கொள்கின்றது. பல உயிரினங்கள் கூட்டு உயிரினங்களாக, பொருட்களை பரிமாற்றம் செய்தும் வாழ்கின்றன. சில எடுத்துக் காட்டுகளைக் காணலாம்.

சூரிய ஒளியின் துணையுடன் தாவரங்கள் உணவை தயாரிக்கின்றன. இது முதல்தர உணவு உற்பத்தியாளர் எனப்படுகிறது. தாவரங்கள் நிலங்களிலிருந்தும் பிறத்தாவரங்கள் மற்றும் விலங்குகளின் அழிவுகளிலிருந்தும் தனக்குத் தேவையான உணவை உறிஞ்சுகின்றன. பேக்டீரியாவால் நிலத்தில் உருவாக்கப்படும் நைட்ரஜனையும் தாவரங்கள் சார்ந்து வாழ்கின்றன. தாவரங்களால் உருவாக்கப்படும் உணவுப் பொருட்களை தாவர உண்ணிகளான யானை, மான், ஆடு போன்ற கால்நடைகள் உட்கொள்கின்றன. மாமிசத்தை சார்ந்துள்ள மாமிச உண்ணிகளான நாய், பூனை, மீன்கள், பறவைகள், புலி ஆகியவை தாவர உண்ணி விலங்குகளை உண்டு வாழ்கின்றன. இவைகள் மறைமுகமாக தாவரங்களை ஆதாரப்படுகின்றன. பேட்டீரியாக்களும் பூஞ்சைகளும் தாவரம் மற்றும் விலங்குகளோடு மண்ணோடு இரண்டறக் கலந்து தாவரங்கள் வளர பயன்படுகின்றன. இவ்வாறு உயிரினங்களின் வாழ்க்கைச் சக்கரம் தொடர்கிறது.

SCERT TELANGANA

இந்த வாழ்க்கைச் சக்கரத்திற்கு இடையூறு ஏற்பட்டால் உயிர்ச்சூழல் ஆபத்து ஏற்படும். உதாரணத்திற்கு ஒரு குறிப்பிட்ட தாவரத்தின் மீது ஆதாரப்பட்டுள்ள ஒரு உயிரினம் அழிந்துவிட்டால், அந்த குறிப்பிட்டத் தாவரத்தின் வளர்ச்சி பெரிய விளைவை ஏற்படுத்தும். இதன் வளர்ச்சி மற்றப் பகுதிகளுக்கும் பரவி, பிற தாவரங்களின் வளர்ச்சியை தடைச்செய்யும்.

இதன் விளைவால் சில நச்சுப்பொருட்கள் நீர், காற்று அல்லது நிலத்தில் கலக்க வாய்ப்புள்ளது.

ஓடைகளிலும், நதிகளிலும் மிதக்கக்கூடிய வேதியியல் உலோகங்களை பலத்தொழிற்சாலைகள் பயன்படுத்துகின்றன. அபரிமித வேதியியல் பயன்பாட்டால், நீரில் வேதியியல் பொருட்களின் நச்சுத்தன்மை அதிகரிக்கிறது. பாதரசம் போன்ற உலோகங்களை நீரில் உள்ள நுண்ணுயிர்கள் உட்கொள்கின்றன. இவைகள் மீன்களுக்கு உணவாகின்றன. மீனை உட்கொள்ளும் மனிதன் மறைமுகமாக பாதரசத்தையும் உட்கொண்டு உடல் நலத்தையும் இழக்கின்றான்.

மற்றொரு உதாரணம், கழுகுகள் இறந்த எலி மற்றும் கால்நடைகளின் மாமிசத்தை உட்கொள்கின்றன. கிராமங்களிலும், நகரங்களிலும் கழுகுகள் இறந்த உடல்களை தின்பதை 20–ஆண்டுகளுக்கு முன்பு பார்த்திருப்பீர்கள். தற்போது கழுகுகள் காணப்படுவது கிடையாது. இதற்கு காரணம், விவசாயிகள் பயிர்களை வளர்க்கவும் பூச்சிகளை அழிக்கவும் டைக்ளோபினாக் என்னும் வேதியியல் மருந்தை பூச்சுக்கொல்லியில் பயன்படுத்துகின்றனர். இத்தாவரங்களை உட்கொண்டு இறக்கும் எலிகளை தின்னும் கழுகுகளும் இறக்கின்றன. இறந்த எலிகளின் உடலில் டைக்ளோபினாக் எனும் வேதியியல் மருந்து எஞ்சியிருப்பதால், அதை தின்னும் கழுகுகள் சிறுநீரக செயலிழப்பால் ஒரு வாரத்திற்குள் இறக்கின்றன என ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. இவ்வாறு கழுகுகள் முழுமையாக இறக்க நேர்ந்தன.

இவ்வாறு அனைத்து உயிரினங்களும் ஒன்றையொன்றுச் சார்ந்து வாழ்வதால், இவைகளின் பாதிப்பு முழுமையாகவோ அல்லது குறைவாகவோ ஏற்படுகின்றன.


### இயற்கைத் தாவரம்

இயற்கைத் தாவரம் மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை போதுமான மழைப்பொழிவு மற்றும் சூரியஒளியுடைய பகுதிகளில் உள்ளக் காடுகள், சராசரி மழைப்பொழிவையுடைய பகுதிகளில் உள்ள புல்வெளிகள், குறைந்த மழைப்பொழிவுயுடைய வறண்டப்பகுதியில் உள்ள புதர்கள் எனபிரிக்கப்பட்டள்ளது. அதிக பனிப்பொழிவுடைய தூந்திரப்பகுதிகளில் குட்டைத் தாவரங்களும், பாசி, பூஞ்சைகளும் வளர்கின்றன. இவற்றை விவரமாக கற்போம்.

காலநிலைகளை ஆதாரமாகக்கொண்டு பலவகைக் காடுகளைப் பற்றி கடந்த வகுப்புகளில் படித்திருப்பீர்கள்.

### வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகள் :

**இக்காடுகள் வெப்பமண்டல மழைக்காடுகள் எனவும் அழைக்கப்படுகிறது. அந்த அடர்ந்த காடுகள் பூமத்திய ரேகைப்பகுதிகளில் அதிகம் வளர்கின்றன. இப்பகுதிகள், ஆண்டுமுழுவதும் அதிக வெப்பத்தையும் அதிக மழைப்பொழிவையும் பெறுகின்றன. வறண்ட காலநிலை இல்லாததால், மரங்கள் இலைகளை மொத்தமாக ஒரே நேரத்தில் உதிர்ப்பதில்லை. ஆகவே, இக்காடுகள் பசுமைமாறாக் காடுகள் எனப்படுகின்றன.**



படம் 5.1: வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகள்

SCERT TELANGANA

உயரமாக மற்றும் நெருக்கமாக உள்ள மரங்கள் மற்றும் அதன் இலைகள் பகல்நேரத்திலும் சூரியஒளி காடுகளின் தரையில் படாதவாறு தடுக்கின்றன. கடின மரங்களான ரோஸ்வுட், எபோனி, மஹோகனி போன்ற மரங்கள் இக்காடுகளில் அதிகம் காணப்படுகின்றன.



படம் 5.2: வெப்பமண்டல இலையுதிர்காடுகள்

## வெப்பமண்டல இலையுதிர்காடுகள்


வெப்பமண்டல இலையுதிர் காடுகள் என்பது இந்தியாவின் பலப்பகுதிகள், வடக்கு ஆஸ்திரேலியா மற்றும் மத்திய அமெரிக்காவில் (படம் 6.4) காணப்படும் பருவக்காற்றுக் காடுகளாகும். இப்பகுதிகளில் பருவக்கால மாற்றங்கள் நிகழும். மரங்கள் வறண்ட காலங்களில் நீரை சேமிப்பதற்காக இலைகளை உதிர்க்கின்றன. இப்பகுதிகளில் வளரும் முக்கிய கடினமரங்கள் சால், தேக்கு, வேம்பு மற்றும் கீசம் ஆகும். இவ்வகை கடின மரங்கள் வீட்டு உபயோக மரச்சாமான்கள், வாகனம் தயாரிக்கும் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. புலி, சிங்கம், யானை, லங்கூர் விலங்கு மற்றும் குரங்கு ஆகியவை இக்காடுகளில் காணப்படும் முக்கிய விலங்குகளாகும்.

## மிதவெப்ப பசுமைமாறாக் காடுகள் :

மத்திய அட்சரேகைகளின் பகுதிகளின் கடற்கரை பகுதிகளில் மிதவெப்ப பசுமை மாறாக் காடுகள் அமைந்துள்ளன. இவ்வகைக்காடுகள், சிலக் கண்டங்களின் கிழக்கு பகுதிகளில் காணப்படுகின்றன. உதாரணம் : தென்கிழக்கு அமெரிக்கா, தென்சீனா, மற்றும் தென்கிழக்கு பிரேசில், இக்காடுகளில் ஓக் பைன், தைலம் போன்ற கடின மற்றும் மென் மரங்கள் வளர்கின்றன.



படம் 5.3: மிதவெப்ப பசுமைமாறாக் காடுகள்



படம் 5.4: மிதவெப்ப இலையுதிர்க் காடுகள்

## மிதவெப்ப இலையுதிர் காடுகள்

உயர்ந்த அட்சரேகைப் பகுதிகளில், மிதவெப்ப இலையுதிர்க் காடுகளை காணலாம். அமெரிக்காவின் வடகிழக்கு பகுதி, சீனா, நியூசிலாந்து, சிலி மற்றும் மேற்கு ஐரோப்பாவின் கடற்கரைப் பகுதிகளில் இக்காடுகள் வளர்கின்றன. மான், நரி, ஓநாய் போன்ற விலங்குகள் இக்காடுகளில் வாழ்கின்றன. பீசன்டஸ், மோனல்ஸ் போன்ற விலங்குகள் இக்காடுகளில் வாழ்கின்றன.

## மத்தியதரைக்கடல் பகுதி தாவரங்கள்



படம் 5.5: மத்தியத் தரைக்கடல் பகுதி தாவரங்கள்

பலக்கண்டங்களின் கிழக்கு மற்றும் வடகிழக்கு ஓரப்பகுதிகள் மிதவெப்ப பசுமைமாராக் காடுகள் மற்றும் இலையுதிர்க் காடுகளால் பரவியுள்ளதை நீங்கள் அறிந்தீர்கள். ஆனால், கண்டங்களின் மேற்கு மற்றும் தென் மேற்கு ஓரப்பகுதிகள் வேறுபட்டதாகும். இப்பகுதிகளில் மத்தியத்தரைகடல் பகுதியின் தாவரங்கள் காணப்படும். (படம் Aல் மத்தியத் தரைக்கடல் பகுதியின் திராட்சைத் தோட்டங்கள்) மத்தியத்தரைக்கடல் பகுதிகளின் மரங்கள், நீராவியாதலை குறைக்க தடிப்பான மரப்பட்டைகள் மற்றும் இலைகளை கோடைகாலத்தின் வறட்சியை குறைக்க பயன்படுத்துகின்றன. இக்காடுகள் மத்தியத்தரைக் கடலைச் சுற்றியுள்ள ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியக் கண்டங்களின் பகுதிகளில் காணப்படுவதால், இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. இப்பகுதிகளில் மட்டுமல்லாமல், இதே காலநிலையை உடைய அமெரிக்காவின் கலிபோர்னியாப் பகுதி, தென்மேற்கு ஆப்பிரிக்கா, தென்மேற்கு தென் அமெரிக்கா, தென்மேற்கு ஆஸ்திரேலியப் பகுதிகளிலும் இத்தாவரங்கள் வளர்கின்றன. இப்பகுதிகள் வறண்ட வெப்ப கோடைகாலத்திற்கும் குறைந்த மழையுடைய குளிர்காலத்திற்கும் பெயர்பெற்றன. சிட்ரிக் அமிலம் உடைய பழங்களான ஆரஞ்ச், அத்தி, ஆலிவ் மற்றும் திராட்சைப் பழங்கள் விவசாயிகளால் பயிரிடப்படுகின்றன. இங்கு காட்டுவிலங்குகள் அதிகம் காணப்படுவதில்லை.

## ஊசியிலைக் காடுகள் :



படம் 5.6: ஊசியிலைக் காடுகள்

வடஅரை கோளத்தின் உயர்ந்த அட்சரேகைப் பகுதிகளில் $(50° – 70°)$ உயரமான ஊசியிலைக் காடுகள் காணப்படுகின்றன. (படம் : ஊசியிலைக் காடுகள் மற்றும் பனி படர்ந்த ஊசியிலைக் காடுகள்) இப்பகுதி ‘டைகாப் பகுதி’ எனவும் அழைக்கப்படும். இக்காடுகள், உயர்வான நிலப்பகுதிகளில் வளர்கின்றன. இக்காடுகள் இமயமலைப் பகுதிகளில் அதிகம் வளர்கின்றன. இவைகள் உயரமான, மென்மரங்களாலான பசுமை மாராக்காடுகளாகும். காகிதம் தயாரிக்க பயன்படும் மரக்கூழ், இம்மரங்களிலிருந்து தயாராகிறது. தீப்பெட்டி மற்றும் அட்டை பெட்டிகள் மென்மரங்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சிர், பைன், சிடர் போன்ற மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன. வெள்ளை நரி, மிங்க், பனிக்கரடி போன்ற விலங்குகள் இங்கு வாழ்கின்றன.



படம் 5.7: வெப்ப மண்டல புல்வெளி நிலங்கள்

## புல்வெளி நிலங்கள் வெப்பமண்டல புல்வெளி நிலங்கள்

பூமத்திய ரேகையின் இருபுறமும், வெப்ப மண்டல பகுதி முழுவதும் இப்புல்வெளி பரவியுள்ளது. சராசரி மற்றும் குறைவான மழையுடையப் பகுதிகளில் இப்புற்கள் வளர்கின்றன இப்புற்கள் 3 முதல் 4மீ உயரம் வளரும். ஆப்பிரிக்காவில் உள்ள 'சவான்னா புல்வெளிகள்' இப்பிரிவைச் சார்ந்ததாகும். யானை, ஒட்டகச்சிவிங்கி, வரிக்குதிரை, மான், சிறுத்தை போன்ற விலங்குகள் இங்கு வாழ்கின்றன.

- உனது வீடு மற்றும் பள்ளி போன்ற சுற்றுப்புறங்களில் கடின மற்றும் மென் மரங்களாலானப் பொருட்களின் பெயர்களை பட்டியலிடு.
- உனது பகுதியில் உள்ள மரங்களின் பெயர்களை பட்டியலிடு.



படம் : 5.8 மிதவெப்ப புல்வெளி நிலங்கள்

### மித வெப்ப புல்வெளி நிலங்கள் :

இது மத்திய அட்சரேகைப் பகுதிகளின் கண்டங்களின் உட்பகுதிகளில் வளர்கின்றன. இப்புற்கள் உயரம் குறைவாகவும் சத்துமிக்கதாகவும் உள்ளன. காட்டு எருமைகள், பைசான்கள், கருப்பு மான்கள் போன்றவை இங்கு காணப்படும் முக்கிய விலங்குகளாகும்.

**முட்புதற் காடுகள் :** இக்காடுகள் பாலைவனம் போன்ற வறண்ட நிலப்பகுதிகளில் காணப்படுகின்றன. வெப்பமண்டல பாலைவனங்கள், பல கண்டங்களின் மேற்கு புறங்களில் காணப்டுகின்றன. அதிக வெப்பமும் குறைந்த மழைப்பொழிவும் இருப்பதால் இப்பகுதிகளில் தாவரங்கள் குறைவாக வளர்கின்றன.

- உலக வரைபடத்தில் பாலைவனங்களின் இருப்பிடத்தையும் பெயர்களையும் குறிப்பிடுக.
- இந்தியாவில் உள்ள பாலைவனத்தின் பெயரென்ன? நீ அறிந்த பாலைவன விலங்குகளின் பெயர்களை பட்டியலிடுக.

SCERT TELANGANA

**தூந்திரப்பகுதி :** தூந்திரப்பகுதிகளுக்கு சென்றால், அதிக குளிரை உணரலாம். இயற்கைத் தாவரங்களின் வளர்ச்சி மிகவும் குறைவு. கடற்பாசிகள், பூஞ்சைகள் மற்றும் சிறிய புதர்கள் வளர்கின்றன. இவைகள் கோடை காலத்தில் மட்டும் வளரும் இது தூந்திர வகைத் தாவரம் என அழைக்கப்படுகிறது. ஐரோப்பா, ஆசியா மற்றும் வடமெரிக்கா கண்டங்களின் வடக்கு பகுதிகளில் இத்தாவரங்கள் வளர்கின்றன. இங்கு வாழக்கூடிய விலங்குகளுக்கு அடர்ந்த ரோமங்களும் தடிமன் தோலும் உள்ளன. இவைகள் குளிர்ந்த சீதோஷண நிலையிலிருந்து விலங்குகளை காக்கின்றன. சீல், வால்ரஸ், கஸ்தூரி எருதுகள், ஆர்க்டிக் ஆந்தை, பனிக்கரடி மற்றும் பனி நரிகள் இங்க வாழும் முக்கிய விலங்குகளாகும்.

**மனித சமூகமும் சுற்றுப்புறமும் :** பல ஆண்டுகாலமாக, மனிதன் தன் சுற்றுப்புறத்துடன் அதன் மாற்றத்திற்கு தக்கவாறும் வாழ்கின்றான். வேட்டைக்காரர்களும், உணவு சேகரிப்போரும் கற்கருவிகள் மற்றும் மரக்கருவிகளைப் பயன்படுத்தி கிழங்குகளையும் பழங்களையும் சேகரித்து, விலங்குகளையும் வேட்டையாடினான். நெருப்பை கண்டறிந்து குச்சிகளையும் புற்களையும் தீயிட்டு முதல் ஒளி ஆற்றலை பயன்படுத்தினான். இவ்வாறு மனிதன் தன்னுடைய சுற்றுப்புறத்தை பயன்படுத்தி, தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்துக்கொண்டான். மனிதன் சுற்றுப்புறத்தைப்பற்றி தீவிரமாக ஆராய்ந்து, அதை தன் நோக்கத்திற்காக பயன்படுத்திக்கொண்டான். அவ்வாறு, அறிவை பெறுக்கி, மனிதன் தன்னுடைய சுற்றுப்புறத்தைப் பற்றியும் உலகைப்பற்றியும் அதிகத்தொடர்பை ஏற்படுத்திக்கொண்டான்.

- விவசாயத்தின் போதும், கால்நடை வளர்ப்பின் போதும் மனிதன் எவ்வாறு நிலம், நீர், தாவரம் மற்றும் விலங்குகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தினான் என கலந்துரையாடுக.

மனிதன் விவசாயத்தின்போதும் கால்நடை வளர்ப்பின்போதும், சுற்றுப்புறத்தை அதிகம் மாற்ற முனைந்தான். நகர்புறங்களில் கட்டிடம் கட்டவும், வெண்கலம், இரும்பு போன்ற உலோகங்களை பயன்படுத்தும் போதும் சுற்றுப்புறத்தை மனிதன் அதிகம் மாற்றினான். மனிதன் முற்காலத்தில், நீரை சேமிக்க ஏரிகளை அமைத்தான், கால்வாய்களை கட்டினான், நதிகளின் குறுக்கே அணைகளை கட்டினான். மனிதர்கள் வெகுதூரத்தில் உள்ள நகரங்களை இணைக்க சாலைகளை அமைத்தான், கப்பல் மற்றும் படகுகளை பயன்படுத்தினான். இவ்வாறு அனைத்து கண்டங்களை (அண்டார்க்டிகா தவிர) மட்டுமின்றி கடல்களையும் பயன்படுத்தி மனிதசமூகத்தை மனிதன் ஏற்படுத்தினான்.

- மனிதன் எவ்வகையான ஆற்றல் வளங்களை பயன்படுத்தினான்? அவற்றை எவ்வாறு பெற்றான்?
- நகரங்களில் கட்டிடம் கட்டுவதால், நிலம் மற்றும் நீரில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன?
- கைவினைப் பொருட்களை உருவாக்க உலோகங்களை உலைக்களங்களில் பயன்படுத்துவதால் ஏற்படும் சுற்றுப்புற பாதிப்பு என்ன?

இவ்வாறு மக்கள்தொகை பெருகி, பூமியில் தோன்றிய உயிரினங்களில் மனித இனம் முக்கியமானதாக மாறியது. கி.மு. 10,000ஆம் ஆண்டில் மனிதன் விவசாயம் செய்ய துவங்கிய போது, பூமியில் மக்கள் தொகையின் எண்ணிக்கை 40லட்சம் மட்டுமே.

- மனித சமூகம் நிலத்தோற்றத்தையும் நீர்சுழற்சியையும் எவ்வாறு பாதித்தது?

இது மேலும் உயர்ந்து 1750–ஆம் ஆண்டு 50 கோடியாகவும், 17ஆம் நூற்றாண்டில்

SCERT TELANGANA

100 கோடியாகவும், 1950ல் 250கோடியாகவும், 2010-ல் 7பில்லியனாகவும் (700 கோடி) ஆனது. இம்மக்கள் தொகை பெருக்கம் பூமியின் மீது அதிக அழுத்தத்தையும், பூமியின் வளத்தட்டுப்பாட்டையும் ஏற்படுத்துகிறது. இதனால், பூமி தன்னுடைய செயலை மனிதனின் தேவைக்கேற்ப மாற்றவேண்டிய சூழ்நிலையில் உள்ளது.

பூமி தன்னுடையச் செயலை, தொழிற் புரட்சியாலும் காலனி நாடுகளாலும் மாற்றவேண்டியச் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளின் உற்பத்திக்கு அதிக கச்சாப் பொருட்கள் தேவைப்பட்டன. ஆகையால், தொழில் நாடுகள் கச்சாப் பொருட்களுக்காகவும் ஆற்றல் வளத்திற்காகவும் உலகம் முழுவதும் தேடிச்சென்றனர். எனவே, உலக நாடுகள் கண்டுபிடிப்புகளில் இறங்கின. பூமியைத் தோண்டியும், காற்றுமண்டலத்திற்கு மேலேயும் உள்ளவற்றை கண்டறிந்தனர். இதன் பலனாய், சுரங்கம் தோண்டுதல், காடுகளை அழித்தல், தொழிற்சாலைகளை அமைத்தல், சாலை அமைத்தல் ஆகியவை உலகம் முழுவதும் நவீன முறைகளுடன் நிகழ்ந்தன. சில நாடுகளில் கிடைக்கும் இயற்கை வளங்களுக்காக, பெரிய நாடுகள் சண்டையிட்டுக்கொண்டன.

- நிலக்கரி, பெட்ரோலியம் போன்ற தாதுப்பொருட்களை அதிகம் பயன்படுத்தவதால் கற்கோளத்தின் மீது ஏற்படும் தாக்கம் என்ன?
- நகரங்களில் செங்கற்கள், சிமெண்ட் கொண்டு கட்டிடங்களை கட்டுவதால் கற்கோளத்தின் மீது ஏற்படும் தாக்கம் என்ன?
- பெரிய அணைகளைக் கட்டுவதால் நீர்சுழற்சியின் மீது ஏற்படும் தாக்கம் என்ன?

அதிக அளவு தொழிற்சாலைகள் ஏற்பட்டதால்,காற்று, நீர் மற்றும் நிலத்தின் மீது இதன் தாக்கம் அதிகமாய் இருந்தது. இதன் விளைவுகள் சிலவற்றை தற்போது காணலாம்.

### தொழிற்சாலைகள் - நச்சுப் பொருட்களும் நச்சு திரவங்களும்

நிலக்கரி மற்றும் பெட்ரோலியத்திலிருந்து பெறப்படும் ஆற்றலை நவீன தொழிற்சாலைகளும் போக்குவரத்து வாகனங்களும் பயன்படுத்துகின்றன. (இவைகள் பல லட்சம் வருடங்களுக்கு முன் பூமிக்குள் புதையுண்ட எஞ்சியப் பொருட்களாகும். இதை படிவ எரிபொருட்கள் என்பர்). இந்த எரிப்பொருட்கள் எரிக்கப்படுவதால், கார்பன்-டை-ஆக்சைட், மற்றும் வேதியியல் பொருட்களான நைட்ரஜன் ஆக்சைட், சல்பர்-டை-ஆக்சைட் விரைவாக நீராவியாகும் கரிமச் சேர்மங்கள் மற்றும் பெரிய உலோகக் கலவைகள் ஆகியவற்றை வெளியிடுகின்றன. இவைகள் சல்ப்யூரிக், கார்பானிக் மற்றும் நைட்ரிக் ஆசிட் ஆகியவற்றை வெளியிட்டு 'அமில மழைப்பொழிவிற்கு' வழிவகுத்தன. காற்று மண்டலத்தில் அமிலப் பொருட்கள் அதிகரிப்பதால் 'அமிலமழை,' பொழிகிறது. இந்த படிவ எரிப்பொருட்களை எரியிடுவதால் எண்ணிலடங்கா அளவில் கழிவுப்பொருட்கள் திடமாகவும், திரவமாகவும் மற்றும் வாயுவாகவும் வெளியிடப்பட்டு, காற்று, நீர் (நிலத்தடிநீர் மற்றும் புறப்பரப்பு நீர்) மற்றும் நிலம் மாசடைந்தது. இவ்வாறு தொடர்ந்து வெளியிடப்படும் கழிவுகளால், நமது சுற்றுப்புறம் நச்சுத்தன்மையுடையதாய் ஆயிற்று. உலகம் முழுவதும் ஏற்பட்ட ஒரு முக்கிய தாக்கம் என்னவெனில், உலக வெப்பமயமாதலாகும். இதைப்பற்றி விரிவாகக் கற்கலாம்.

#### க்யோடோ அறிக்கை

1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பான் நாட்டு நகரம் க்யோடோவில் ஐக்கிய நாடுகள் சார்பில் நமது பூமியை உலக வெப்பமயமாதலிலிருந்து காக்க ஒரு மாநாடு நடந்தது. இதில் கலந்துகொண்ட நாடுகள், பூமியின் வெப்பத்தை உணர்ந்து பசுமை இல்ல வாயுக்களுக்கு எதிராக க்யோடோ அறிக்கை எனும் பிரகடனத்தில் கையொப்பமிட்டன. 1990க்குள் பசுமை இல்லவாயுக்கள் குறைப்பது இதன் நோக்கமாக அறிவிக்கப்பட்டது. அதாவது 1997-க்குள் 5.2% குறைக்கப்படவேண்டும். இந்த நோக்கத்தை 2008-2012க்குள் அடைய வேண்டும் என அறிக்கை கூறுகிறது.

SCERT TELANGANA

### உனக்குத் தெரியுமா?

- தினமும் 13-15 டன் எடையுள்ள திரவ நச்சு மற்றும் கழிவுநீர் அருகாமையிலுள்ள நகரங்களிலிருந்து கொல்லேறு ஏரியை சேர்கின்றன.
- கைபேசி கோபுரங்களிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சால், தேனீ போன்ற சிறிய பூச்சிகள் இறக்கின்றன. இதனால் தேன் பற்றாக்குறை மட்டுமின்றி, பயிர்களில் மகரந்த சேர்க்கையும் தடைப்பட்டு உயிரிவேற்றுமை ஏற்பட்டு, பயிர்விளைச்சலும் குறைகின்றது.

தொழில் மயம், மக்கள்தொகை பெருக்கம் மற்றும் நகரமயமாதல் ஆகியவற்றால், இயற்கை வளங்களான தாதுப்பொருட்கள், காடுகள், மண், நீர் மற்றும் காற்று ஆகியவற்றிற்கு பெருத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் இயற்கை ஆற்றல் வளங்களான நிலக்கரி மற்றும் பெட்ரோலால் இன்னும் சில ஆண்டுகளுக்கு மட்டுமே கிடைக்கும். இவைகள் காடுகள் அழிப்பிற்கும், தாதுப்பொருட்கள், எண்ணெய் மற்றும் நிலத்தடி நீர் இருப்பும் குறையை காரணமாயின. மனிதன் தன் வாழ்வை தற்போது உள்ளவாறே தொடர்ந்தால், அவனுடைய குழந்தைகள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு இயற்கை வளங்கள் எதுவும் மிஞ்சாது என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

அனைத்து உயிரினங்களும் இயற்கையை சார்ந்து வாழ்வதால் இயற்கையோடு ஒன்றித்து வாழவேண்டும். ஆனால், மனிதன் தன்னுடைய மகிழ்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இயற்கையை அழிக்கின்றான். இப்பிரச்சனைகள் மேலும் வளர்ந்தால், மனிதனால் அவைகளை கட்டுப்படுத்த முடியாது. வியாபார நோக்கத்தோடு மனிதன் செய்யும் அனைத்துச் செயல்களாலும் பூமியின் செயல்கள் பாதிப்பிற்கு உள்ளாகின்றன. இப்பிரச்சனைகள் தொடர்ந்தால், இது விலங்குகளுக்கு மட்டுமின்றி, மனிதர்களுக்கும் அபாயகரமானதாக மாறும்.

### முக்கியச் சொற்கள்

1. உணவுச்சங்கிலி 2. கடின மரங்கள் 3. அமில மழை 4. பசுமை இல்ல விளைவு 5. தூந்திரம்

### உனது கற்றலை மேம்படுத்துக

1. **“வாழ்கையை அமைத்துக்கொள்ளும் ஒரு தனிஅடுக்கு உயிர்க்கோளம்,” அது எவ்வாறு?**(AS1)
2 நவீனக் காலத்தில் சுற்றுச்சூழல் அபாயம் ஏன் ஏற்படுகின்றன? இவற்றின் விளைவுகள் யாவை?(AS4)
3. இயற்கைத் தாவரங்கள் ஒரு பகுதியின் காலநிலையை சார்ந்துள்ளது. பல்வேறு வகை காடுகளையும் அவைகள் உள்ள பகுதிகளின் கால நிலையையும் குறிப்பிடுக?(AS1)
4. இயற்கை வளங்களை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?(AS6)
5. பாடத்தைப் படித்து கீழ்காணும் அட்டவணையை நிரப்புக.(AS3)

| வ.எண் | காடுகளின் வகைகள் | பரவியுள்ள நாடுகள் | வளரும் மரங்கள் | விலங்குகள் |
|---|---|---|---|---|
| | | | | |

6. உலக புறவரிப் படத்தில் கீழ்காணும் நாடுகளைக் குறிக்கவும் (அ) நியூசிலாந்து(AS5) (ஆ) பிரேசில் (இ) ஆஸ்திரே-யா (ஈ) வட அமெரிக்கா. (உ) சீனா (ஊ) இந்தியா
7. பக்கம் 58ல் உள்ள வளங்கள் அழிதல் என்னும் பகுதியைப் படித்து அதன் மீது உன் கருத்தினைக் கூறு(AS2).

**கலந்துரையாடல் :** அழியும் நிலையில் உள்ள பறவை/விலங்குகளின் விவரங்களை அட்டவணையில் உள்ளவாறு சேகரித்து உன் வகுப்பறையில் விவாதி.

| வ.எண் | பறவை/ விலங்கினம் | அழிந்துவிட்டதா? அழியும் நிலையில் உள்ளதா? | காரணம் | தடுப்பு நடவடிக்கைகள் மேலும் நமது கடமைகள் |
|---|---|---|---|---|

### செயல் திட்டம்

- உங்கள் பகுதியில் உள்ள தொழிற்பேட்டைக்குச் சென்று அங்கு வெளியேற்றப்படும் நச்சு வாயு, திரவ மற்றும் திடக்கழிவுகளைப் பற்றி அறிக. இவற்றால் வீடுகள், தாவரங்கள் மற்றும் விலங்குகள் மீது ஏற்படும் தாக்கத்தை அறிக. இவற்றைப்பற்றிய தகவல்களை சேகரித்து, ஒரு அறிக்கையை தயாரித்து வகுப்பறையில் காட்டவும்.



SCERT TELANGANA

பாடம்
6

# விவசாய வளர்ச்சி

## பகுதி - I

### விவசாயத்தின் வகைகள்

விவசாயம் நம் நாட்டின் பண்டைய பொருளாதார நடவடிக்கை ஆகும். இவ்வாண்டுகளில் விவசாயம் செய்யும் முறைகள் இயற்கை, சுற்றுப்புறம், தொழில் நுட்ப அறிவு மற்றும் சமூக கலாச்சார நடவடிக்கைகள் போன்றவற்றின் தன்மைகளின் மீது முக்கியமாக ஆதாரப்பட்டுள்ளது. விவசாயம் வாழ்வாதார முறையிலிருந்து வர்த்தக முறைக்கு மாறியுள்ளது. தற்போது இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கீழ்காணும் விவசாய முறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**வாழ்வாதார விவசாயம் : இது இரண்டு வடிவங்களில் உள்ளது. 1. எளிய வாழ்வாதார விவசாயம் மற்றும் 2. தீவிர வாழ்வாதார முறை.**

**1.எளிய வாழ்வாதாரம் : விவசாயமானது பண்டைய கால கருவிகளான சிறுமண்வெட்டி, தாவோ, தோண்டும் குச்சிகள், மற்றும் குடும்ப/சமூக உழைப்பாளிகளின் துணையுடன் சிறிய நிலப்பரப்பில் மேற்கொள்வது ஆகும். இவ்வகையான விவசாயம் பருவக் காற்று, மண்ணின் இயற்கையான வளம், வளர்க்கப்படும் பயிர்களின் தகுந்த பிற சுற்றுச்சூழல் நிலைகள் போன்றவற்றின் மீது ஆதாரப்பட்டுள்ளது. இது ஒரு வெட்டி எரித்தல் விவசாயமாகும். நீங்கள் இதைக்குறித்து முன்வகுப்பில் படித்திருப்பீர்கள்.**



படம் 6.1 விவசாயத்திற்கு நிலத்தை ஆயத்தப்படுத்துதல்

**2. தீவிர வாழ்வாதார விவசாயம் : இது அதிக மக்கள் தொகை உள்ள நிலப்பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது உழைப்புச் செறிவு விவசாயம். அதிக உற்பத்தியைப் பெற உயிர்வேதி உள்ளீடுகளை அதிக அளவிலும், நீர்ப்பாசனமும் உள்ள இடங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.**

- அதுபோன்ற விவசாயம் நடைமுறைப்படுத்தப்படும் இந்தியாவின் சில மாநிலங்களின் பெயர்களை உன்னால் கூறஇயலுமா?

**வர்த்தக விவசாயம் : இவ்வகை விவசாயத்தின் முக்கிய தன்மை, நவீன உள்ளீடுகளை அதிக அளவில் பயன்படுத்துதல், எடுத்துக்காட்டாக, உயர் வீரிய வகை (HYV) விதைகள், வேதி உரங்கள், பூச்சிக்கொல்லி, நுண்ணுயிர்க் கொல்லிகளை பயன்படுத்தி உயர்ந்த உற்பத்தித் திறனைப் பெறுதல். விவசாயத்தை வர்த்தகமயமாக்கலின் அளவு ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, ஹரியானாவிலும், பஞ்சாபிலும் அரிசி ஒரு வாணிபபயிராகும். ஆனால் ஒடிசாவில் இது ஒரு வாழ்வாதாரப் பயிர். தோட்டபயிரிடுதல் என்பதும் ஒரு வகையான வர்த்தக விவசாயம் ஆகும். இவ்வகையான விவசாயத்தில் ஒரு பெரிய நிலப்பரப்பில் ஒரு ஒற்றைப் பயிர் வளர்க்கப்படுகிறது. இந்தியாவில் தேநீர், காப்பி, இரப்பர், கரும்பு,**

SCERT TELANGANA

வாழைப்பழம் போன்றவை முக்கிய தோட்டப் பயிர்களாகும். அஸ்ஸாம் மற்றும் வடக்கு வங்காளத்தில் தேநீரும், கர்நாடகத்தில் காப்பியும் இந்திய மாநிலங்களில் வளரும் முக்கிய தோட்டப் பயிர்களாகும்.

- ஒரு பகுதியில் வர்த்தகமாகவும் மற்றொரு பகுதியில் வாழ்வாதாரத்தை வழங்குவதாகவும் உள்ள பயிர்களின் சில எடுத்துக்காட்டுகளை உன்னால் கூற இயலுமா?

### பயிரிடு முறை

விவசாயப் பயிர்கள் பருவகாலங்கள் மற்றும் இயற்கை வளங்களான மண், நீர் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான சூரியஒளி போன்றவற்றின் மீது ஆதாரப்பட்டுள்ளன. வெப்பநிலை மற்றும் ஈரப்பதநிலைகள் மிகவும் முக்கியமானவை. சில பயிர்கள் சில குறிப்பிட்ட பருவகாலங்களில் மட்டும் பயிரிட முடியும். இவை நீர் மற்றும் பிற உள்ளீடுகள் கிடைத்தாலும் மற்ற பருவகாலங்களில் வளராது. எனவே எந்த ஒரு பகுதியிலும் பல்வேறு பருவகாலங்களில் பல்வேறு பயிர்கள் வளர்க்கப்படுகின்றன.

இந்தியாவில் மூன்று பயிர்ப்பருவங்கள் உள்ளன. அவை ரபி, கரீப் மற்றும் ஜயத் ஆகும். ரபிப் பயிர்கள் அக்டோபர் முதல் டிசம்பர் வரை குளிர்காலத்தில் விதைக்கப்பட்டு ஏப்ரல் முதல் ஜூன் வரை கோடையில் அறுவடை செய்யப்படுகிறது.

கோதுமை, பார்லி, பட்டாணி, கொள்ளு மற்றும் கடுகு போன்றவை முக்கிய ரபிப் பயிர்களாகும். குளிர்கால மாதங்களில் மேற்கு மிதவெப்பப் புயல்களால் மழை பொழிவு இருப்பதால் இப்பயிர்கள் நன்கு வளர துணைபுரிகின்றது. இருப்பினும் பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்திரப்பிரதேசம், இராஜஸ்தானின் சில பகுதிகளில் பசுமைப் புரட்சியின் வெற்றியும் மேலே குறிப்பிட்ட ரபிபயிர்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக இருந்து வருகிறது.

கரீப் பயிர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பருவகாற்று தொடங்கும் போது வளர்க்கப்படுகின்றன. இவை செப்டம்பர், அக்டோபரில் அறுவடை செய்யப்படுகின்றன. இப்பருவகாலத்தில் நெல், மக்காச்சோளம், ஜோவார், துவரை, பயறு, கொள்ளு, உரத், பருத்தி, சணல், வேர்க்கடலை மற்றும் சோயா, அவரை போன்ற முக்கிய பயிர்கள் விளைகின்றன.

ரபி மற்றும் கரீப் பருவகாலங்களுக்கிடையே கோடை மாதங்களின் போது ஜயத் என்னும் ஒரு சிறிய பருவகாலம் உள்ளது. ஜயத் பருவத்தில் தர்ப்பூசணி, தோசைப்பழம், வெள்ளரிக்காய், காய்கறிகள் மற்றும் தீவனப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

### முக்கியப் பயிர்கள்

உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் வகைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மண், வானிலை மற்றும் பயிரிடு நடைமுறைகளை ஆதாரமாகக் கொண்டு வளர்க்கப்படுகின்றன. அரிசி, கோதுமை, கம்பு, பருப்பு வகைகள், தேநீர், காப்பி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள், பருத்தி, சணல் போன்றவை இந்தியாவில் வளர்க்கப்படும் முக்கிய பயிர்களாகும்.




**அரிசி :** இது இந்தியாவில் பெரும்பாலான மக்களின் முக்கிய உணவுப்பயிர் ஆகும். இந்தியா அரிசி உற்பத்தியில் உலகிலேயே சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய உற்பத்தியாளராக விளங்குகிறது. இது ஒரு கரீப் பயிர் ஆகும். இதற்கு உயர்ந்த வெப்பநிலை ($25^{0}C$ க்கு மேல்)யும்

SCERT TELANGANA

ஆண்டுக்கு 100செ.மீக்கு மேலாக மழை பொழிவுடன் கூடிய அதிக ஈரப்பதமும் தேவைப்டுகிறது. குறைவான மழைபொழிவு உள்ள பகுதிகளில் அது நீர்ப்பாசன உதவியுடன் வளர்கிறது. வடக்கு மற்றும் வட கிழக்கு இந்தியாவின் சமவெளிகளிலும், கடலோரப்பகுதிகளிலும், டெல்டா பகுதிகளிலும் அரிசி விளைவிக்கப்படுகிறது. கால்வாய் நீர்ப்பாசனம் மற்றும் குழாய்கிணறுகள் நன்கு வளர்ச்சியடைந்து குறைவான மழைபொழிவு உள்ள பகுதிகளான பஞ்சாப், ஹரியானா மற்றும் மேற்கு உத்திரப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தானின் சில பகுதிகளிலும் அரிசி வளர்ப்பது சாத்தியமாக்கப்பட்டுள்ளது.

**கோதுமை :** இது இரண்டாது மிக முக்கியமான பருப்பு வகைப்பயிர். நாட்டின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகளில் இது முக்கியபயிராகும். இந்த ரபிப் பயிருக்கு குளிர்ந்த வளமும், பருவகாலமும், முதிரும் காலத்தில் அதிக சூரிய ஒளியும் தேவை. இதற்கு 50 முதல் 75செ.மீ ஆண்டு மழைபொழிவு வளரும் பருவத்தில் சமமாக பகிர்வு செய்யப்படவேண்டும். நம் நாட்டில் இரண்டு முக்கிய கோதுமை வளரும் மண்டலங்கள் உள்ளன. வடமேற்கில் உள்ள கங்கை-சட்லெஜ் சமவெளிகள் மற்றும் தக்காணத்தின் கரிசல் மண் பகுதி. கோதுமையை அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்கள் பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம், பீகார், இராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசத்தின் பகுதிகளாகும்.

**மக்காச்சோளம் :** இது உணவாகவும், தீவனமாகவும் பயன்படுத்தப்படும் ஒரு பயிர் ஆகும். இது ஒரு கரீப் பயிர். இதற்கு $21^0C$ முதல் $27^0C$ வரை வெப்பநிலை தேவைப்படுகிறது. இது பழைய வண்டல் மண்ணில் நன்றாக விளையும். பீகார் போன்ற சில மாநிலங்களில் ரபி பருவகாலத்திலும் மக்காச்சோளம் விளைவிக்கப்படுகிறது. நவீன உள்ளீடுகளான உயர்வீரிய வகை விதைகள், உரங்கள் மற்றும் நீர்ப்பாசனம் போன்றவை பயன்படுத்தப்பட்டதால் மக்காச்சோளம் உற்பத்தி அதிகரித்தது. கர்நாடகம், உத்திரப்பிரதேசம், பீகார், ஆந்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசம் போன்றவை மக்காச்சோளம் அதிக அளவில் விளைவிக்கும் மாநிலங்களாகும்.

**உயர் வீரிய வகைகள் :**

**உயர் வீரிய வகை விதைகள், வேதி உரங்கள், பூச்சிக்கொல்-, நுண்ணுயிர்க் கொல்-களை பயன்படுத்தி உயர்ந்த உற்பத்தித் தீவனைப் பெறுதல் விவசாயத்தை வர்த்தகமயமாக்க-ன் அளவு ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் மாறுபடுகிறது. குறைந்த கால பயிர்கள் இரண்டு முறை வருமானம் கிடைக்க வகை செய்கிறது.**

**இத்திட்டத்திற்கு உதாரணம் பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்திர பிரதேசம், ஆந்திரா, தெலுங்கானா மாவட்டங்களில் செயல்படுகிறது. இந்த முறைக்கு அதிக அளவு நீர் தேவைப்படுகிறது. இப்புது வகையான கோதுமை, பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்திர பிரதேசம், பகுதியிலும் தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு இவற்றில் அரிசி விளைவிக்கின்றனர்.**

**தினைகள் :** ஜோவார், பாஜ்ரா, மற்றும் கேழ்வரகு போன்றவை இந்தியாவில் வளரும் முக்கிய தினைகளாகும். இவை எளிய தானியங்கள் என்று அழைக்கப்பட்டாலும் அவற்றில் அதிக அளவில் சத்துணவு மதிப்பு உள்ளது. எடுத்துக்காட்டாக, கேழ்வரகில் அதிக அளவில் இரும்புச் சத்தும், கால்சியமும் பிற நுண்ணிய சத்துப் பொருட்களும் உள்ளன. பயிரிடப்படும் பரப்பு மற்றும் உற்பத்தியைக் கொண்டு மூன்றாவது முக்கியப் பயிராக விளங்குவது ஜோவார் பயிராகும். இது ஒரு மழையூட்டுப் பயிராகும். இது நீர்ப்பாசனம் தேவைப்படாத ஈரமான பகுதிகளில் பெரும்பாலும் விளைவிக்கப்படுகின்றன. ஜோவாரை அதிகளவில் உற்பத்தி செய்யும் மாநிலம் மகாராஷ்டிரா ஆகும். அதையடுத்து இப்பயிரை பயிர்செய்யும் மாநிலங்கள் கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகும். பாஜ்ரா மணற்பாங்கான மணணிலும், ஆழம் குறைந்த இடங்களில் உள்ள கரிசல் மண்ணிலும் நன்கு விளைகின்றது. பாஜ்ராவை இராஜஸ்தான் பெருமளவில் உற்பத்தி செய்கிறது. இதை அடுத்து உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், குஜராத் மற்றும் ஹரியானா மாநிலங்கள் இப்பயிரை அதிக அளவில் பயிரிடுகின்றன. கேழ்வரகு வறட்சியான பகுதியில் வளரும் பயிராகும். அது செம்மண், கரிசல் மண், மணற்பாங்கான மண், சேற்று மண் (மட்கிய தாவரப்பொருள் நிறைந்த மண்), ஆழம் குறைந்த இடங்களில் காணப்படும் கருப்பு மணகள் போன்றவற்றில் நன்கு வளரும். கர்நாடகத்தில் கேழ்வரகு அதிக அளவில் பயிரிடப்படுகிறது. அதை அடுத்து தமிழ்நாடு இப்பயிரை அதிகஅளவில் பயிரிடுகிறது.

- இந்த பருப்பு வகைகளில் எவை கரீப் பருவத்திலும் எவை ரபிபருவத்திலும் பயிரிடப்படுகின்றன என்பதை உன்னால் வேறுபடுத்திக் காட்ட முடியுமா?

**பருப்பு வகைகள் :** இந்தியா உலகிலேயே இவற்றை உற்பத்தி செய்வதிலும், வாங்குவதிலும் முதலிடம் வகிக்கிறது. சைவ உணவில் புரதச்சத்து அதிகமாக உள்ள உணவாக இவை உள்ளன. இந்தியாவில் வளர்க்கப்படும் முக்கிய பருப்பு வகைகளாக துவரை, உளுந்து, பச்சைபயிறு, கொள்ளு, பட்டாணி போன்றவை உள்ளன. பருப்பு வகைகளுக்கு குறைந்த ஈரப்பதம் தேவை. அவை வறட்சியான நிலைகளிலும் வாழும் தன்மை கொண்டவை. இருபுற வெடிகனிப்பயிர்களாக உள்ளதால் இவை அனைத்துப் பயிர்களும் அர்ஹர் எனும பயிரைத் தவிர காற்றிலிருந்து நைட்ரஜனை நிலைநிறுத்துவதன் மூலம் மண்வளத்தை புதுப்பிப்பதில் உதவிபுரிகின்றன. எனவே இவை அனைத்தும் மற்ற பயிர்களுடன் பெரும்பாலும் சுழற்சி முறையில் பயிரிடப்படுகின்றன. இந்தியாவில் முக்கியமாக பருப்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களாக மத்தியப் பிரதேசம், உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், மகாராஷ்டிரம் மற்றும் கர்நாடகம் ஆகியவை உள்ளன.

SCERT TELANGANA

**தானியமல்லாத பிற உணவுப் பயிர்கள் :**

**கரும்பு :** இது வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டலப் பயிராகும். இது வெப்பமான மற்றும் ஈரமான காலநிலைகளில் $21^0C$ முதல் $27^0C$ வெப்பநிலையிலும் 75செ.மீ மற்றும் 100செ.மீ வரை ஆண்டு மழைபொழிவிலும் நன்றாக வளரும். மழைபொழிவு குறைவாக உள்ள பகுதிகளில் நீர்ப்பாசனம் தேவைப்படுகிறது. இதை பல்வேறு வகையான மண்களிலும் வளர்க்க முடியும். விதைப்பதிலிருந்து அறுவடைவரை இதற்கு மனித உழைப்பு தேவைப்படுகிறது. பிரேசிலுக்கு அடுத்தபடியாக கரும்பு உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடம் வகிக்கிறது. இது சர்க்கரை, வெல்லம், கற்கண்டு மற்றும் குழம்பு போன்ற கழிவுப் பொருள் போன்றவற்றிற்கு ஆதாரமாக உள்ளது. உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், பீகார், பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் அதிக அளவில் கரும்பு பயிரிடப்படுகிறது.

**எண்ணெய் வித்துக்கள் :** உலகிலேயே எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. நாட்டிலுள்ள மொத்த விளைநிலத்தில் 12% நிலத்தில் பல்வேறு வகையான எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை சாப்பிடக்கூடியதாக இருப்பதால் சமையல் ஊடகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும் இவற்றில் சில சோப்பு, அழகு சாதனங்கள் மற்றும் தைலங்கள் தயாரிப்பதிலும் கச்சாப் பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன.

**வேர்கடலை:** ஒரு கரீப் பயிர். நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்களில் பாதிக்கு மேல் வேர்க்கடலையே ஆகும். வேர்க்கடலை உற்பத்தியில் ஆந்திரப்பிரதேசம் முதலிடம் வகிக்கிறது. அதை அடுத்த வேர்க்கடலையை அதிகமாக விளைவிக்கும் மாநிலங்கள், தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத் மற்றும் மகாராஷ்டிரம் ஆகும். ஆ-வ் விதையும் கடுகு ரபிப் பயிர்கள் ஆகும். எள்ளு வடக்கில் கரீப் பயிராகவும் தென்னிந்தியாவில் ரபிப் பயிராகவும் உள்ளது. ஆமணக்கு விதை ரபிப் பயிராகவும் கரீப் பயிராகவும் வளர்க்கப்படுகின்றது.

**தேயிலை :** தேயிலை சாகுபடி தோட்ட விவசாயத்திற்கு ஒரு எடுத்தக்காட்டு. அது ஆங்கிலேயரால் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட குடிபானப்பயிராக முதலில் விளங்கியது. இன்று பெரும்பாலான தேயிலைத் தோட்டங்களுக்கு இந்தியர்களே உரிமையாளர்களாக உள்ளனர். தேயிலைச் செடி வெப்ப மற்றம் துணை வெப்ப மண்டல வானிலையில் ஆழ்ந்த, வளமான நன்கு வடிகாலோடிய மண்ணில் வண்டல் அதிகமாக உள்ள மற்றும் அங்கப் நவீன இயற்கை பொருள் உள்ள சூழலில் நன்கு வளரும். தேயிலைப் பயிருக்கு ஆண்டு முழுவதும் வெதுவெதுப்பான மற்றும் ஈரமான மூடுபனியற்ற வானிலை தேவைப்படுகிறது. ஆண்டு முழுவதும் அடிக்கடி மழைசமமான அளவில் பெய்யும் இடங்களில் துளிர் இலைகள் தொடர்ந்து வளரும். தேயிலை உழைப்புச் செறிவு நிறைந்த தொழிலாகும். இதற்கு எண்ணற்ற திறமைமிகு தொழிலாளர்கள் தேவை. தேயிலை தோட்டத்திற்குள்ளேயே அதன் தூய்மையை புதுப்பிக்க பதப்படுத்தப்படுகிறது.



*படம் 6.3 தேயிலைத் தோட்டம்*

அஸ்ஸாம், மேற்குவங்காள டார்ஜிலிங் குன்றுகள் மற்றும் ஜல்பைகுரி மாவட்டங்கள், தமிழ்நாடு மற்றும் கேரளத்திலும் தேயிலையை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றனர். உலகிலேயே இந்தியா தேயிலையை உற்பத்தி செய்வதிலும் ஏற்றுமதி செய்வதிலும் முதன்மை நிலையில் உள்ளது.

SCERT TELANGANA



படம் 6.3 காஃபி செடி

**காஃபி :** உலகின் காஃபி உற்பத்தியில் 4% இந்தியா உற்பத்தி செய்கிறது. இந்தியாவின் காஃபி உலகில் அதன் நல்லதரத்திற்கு பெயர்போனது. அராபிகா என்னும் பயிர்வகை ஏமன் நாட்டிலிருந்து முதலில் கொண்டுவரப்பட்டது. இது தற்போது இந்தியாவில் பெருமளவில் விளைவிக்கப்படுகிறது. இவ்வகை காபிக்கு உலகில் பெரிய அளவில் தேவை உள்ளது. முதலில் இதை பாபாபூடான் குன்றுகளில் பயிரிடப்பட்டது. இதன் சாகுபடி இன்னும் கர்நாடகத்தில், நீலகிரி மலைகளிலும், கேரளா மற்றும் தமிழ்நாடுகளுக்கே உரித்தான பயிராக உள்ளது.

**பழத்தோட்டப் பயிர்கள் :** பழங்களையும், காய்கறிகளையும் உலகிலேயே அதிக அளவில் உற்பத்தி செய்வது இந்தியா தான். வெப்பமண்டல மற்றும் மிதவெப்பமண்டல பழவகைகளை உற்பத்தி செய்கிறது. மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களின் மாம்பழங்களுக்கும், நாக்பூர் மற்றும் சிரப்புஞ்சியின் (மேகாலயா) ஆரஞ்சுப்பழங்களுக்கும், கேரளம், மிசோரம், மகாராஷ்டிரம் மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் வாழைப்பழங்களுக்கும், உத்திரப்பிரதேசம் மற்றும் பீகாரின் லிச்சி மற்றும் கொய்யாப் பழங்களுக்கும், மேகாலாயாவின் அன்னாச்சிப்பழங்களுக்கும், ஆந்திரப்பிரதேசம் மற்றும் மகாராட்டிரத்தின் திராட்சைப் பழங்களுக்கும் ஜம்முகாஷ்மீர் மற்றும் ஹிமாச்சலப் பிரதேச மாநிலங்களின் ஆப்பிள், பேரி, இலந்தை வகைப்பழம் மற்றும் ஆக்ரோட்டுப் பழங்களுக்கும் உலக அளவில் நல்ல தேவை உள்ளது.

இந்தியா உலகின் காய்கறிகளில் 13% உற்பத்தி செய்கிறது. இந்தியா பட்டாணி, முட்டை கோஸ், வெங்காயம், கோஸ், தக்காளி, கத்தரிக்காய் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றை பெருமளவில் உற்பத்தி செய்கிறது.

**உணவல்லாத பயிர்கள் :**

**ரப்பர் :** இது ஒரு பூமத்திய ரேகைப் பகுதியில் விளையும் பயிர். ஆனால் சிறப்பான சூழ்நிலைகளில் இது வெப்ப மண்டலம் மற்றும் துணை வெப்ப மண்டலங்களிலும் வளர்க்கப்படுகின்றன. இங்கு ஈரமான மற்றும் ஈரப்பதவானிலையுடன் 200செ.மீக்கு மேல் மழைபொழிவும் $25^0C$ வெப்பநிலைக்கு மேல் தேவைப்படுகின்றது. இது இரப்பர் தொழிற்சாலையின் முக்கிய கச்சாப்பொருளாகும். இது முக்கியமாக கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் மேகாலயாவின் காரோ குன்றுகளிலும் வளர்க்கப்படுகிறது. உலகின் இயற்கையான இரப்பர் உற்பத்தியாளர்களில் இந்தியா ஐந்தாம் இடம் வகிக்கிறது.

**நார் பயிர்கள் :** பருத்தி, சணல், ஹெம்ப் (சணல் போன்ற மற்றொருவகை) மற்றும் இயற்கைப்பட்டு ஆகியவை இந்தியாவில் வளர்க்கப்படும் நான்கு முக்கிய நார்ப்பயிர்கள் ஆகும். முதல் மூன்றும் மண்ணில் வளரும் பயிர்களிலிருந்து பெறப்பட்டது. அடுத்தது மல்பரி இலைகளைத் தின்று வளரும் பட்டுப்புழுக்களின் கூடுகளிலிருந்து கிடைக்கிறது. பட்டு இழையை உற்பத்தி செய்ய பட்டுப்புழுக்களை வளர்ப்பதை பட்டுப்புழு வளர்பு என்பர்.

**பருத்தி :** பருத்திப் பயிரின் தாயகம் இந்தியா என்று நம்பப்படுகிறது. பருத்தி ஆடைத் தொழிலின் முக்கிய கச்சாப் பொருட்களில் ஒன்றாக பருத்தி உள்ளது. உலகிலேயே பருத்தி உற்பத்தியில் இந்தியா மூன்றாம் இடத்தை வகிக்கிறது. பருத்தி தக்காண பீடபூமியின் கருப்பு பருத்தி மண் உள்ள வறண்ட பகுதிகளில் நன்றாக விளைகிறது. உயர்ந்த வெப்பநிலை, லேசான மழைபொழிவு அல்லது நீர்ப்பாசனம், 210 மூடுபனியற்ற நாட்கள் மற்றும் பிரகாசமான சூரிய ஒளி போன்றவை இது வளர தேவைப்படுகின்றன. இது ஒரு கரீப் பயிராகும். இது முதிர 6 முதல் 8 மாதங்களாகின்றன. மகாராஷ்டிரா, குஜராத், மத்தியப்பிரதேசம், கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் அதிகம் வளர்கிறது.



SCERT TELANGANA

**சணல் :** இது தங்க இழை என அழைக்கப்படுகிறது. சணல் நன்கு வடிகால் ஓடும் வளமான ஒவ்வோராண்டும் புதுப்பிக்கப்படும் வெள்ளச் சமவெளி மண்களில் நன்கு விளைகின்றது. இது வளரும் காலத்தில் உயர்ந்த வெப்பநிலை தேவைப்படுகிறது. மேற்கு வங்காளம், பீகார், அஸ்ஸாம், ஒடிசா, மேகாலயா போன்ற மாநிலங்கள் சணல் பயிரை அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும்.

இது கோணிப்பைகள், பாய்கள், கயிறுகள், இழைகள், தரை விரிப்புகள் மற்றும் பிற கலைப்பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகின்றது. இதன் விலை உயர்ந்து விட்டதால் இதன் சந்தை மறைந்து இதற்கு பதில் செயற்கை இழைகள், மூட்டை கட்டும் பிற பொருட்கள், குறிப்பாக நைலான் போன்றவற்றிற்கு சந்தை அதிகரித்து விட்டது.

## செயல்முறைகள்

1. கீழ்காணும் அட்டவணை பயிர்கள் மற்றும் அவற்றை அதிகஅளவில் உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களின் விவரங்களைக் காட்டுகிறது. அனைத்துத் தகவல்களும் தரப்படவில்லை. அட்லாஸ் புத்தகத்தைப் பார்த்து அட்டவணையில் உள்ள தகவல்களை உன் ஆசிரியரின் உதவியுடன் நிரப்பு.

2. ஒவ்வொரு பயிருக்கும் (•,❍, ◆,■) போன்ற ஒரு குறிப்பிட்ட குறியீடுகளை பயன்படுத்தி, இந்திய அரசியல் புறவரிப்படத்தில் குறி. குறிப்பிட்ட பயிர்களின் உற்பத்தியில் சில மாநிலங்கள் மட்டும் ஏன் அதிக பங்களிப்பினை தருகின்றன என்பதை உன் வகுப்பறையில் கலந்துரையாடு.

| வ.எண் | பயிர் | 2011ல் அதிக அளவு உற்பத்தி செய்யும் மாநிலங்கள் மற்றும் மொத்த தானிய உற்பத்தியில் அவற்றின் பங்களிப்பு மொத்தத்தில் இவற்றின் % | அதிக பங்களிப்பிற்கான இயற்கை மற்றும் பிற காரணங்கள் |
|---|---|---|---|
| 1 | நெல் | மேற்கு வங்காளம்(16%), பஞ்சாப் (13%), உத்திரப்பிரதேசம் (12%), ஆந்திரப்பிரதேசம் (12%) ஒடிசா (8%) | |
| 2 | கோதுமை | உத்திரபிரதேசம் (34%), பஞ்சாப் (19), ஹரியானா (13), மத்தியப்பிரதேசம் (10) இராஜஸ்தான்(9) | |
| 3 | தினைகள் மற்றும் பிற பருப்பு வகைகள் | மகாராஷ்டிரா (19), கர்நாடகா (18), இராஜஸ்தான் (12), ஆந்திரப்பிரதேசம் (10), உத்திரப்பிரதேசம் (9) | |
| 4 | மக்காச்சோளம் | கர்நாடகா (18.0), ஆந்திரப்பிரதேசம்(17), மகாராஷ்டிரம் (11), பீகார் (9) | |
| 5 | பருப்பு வகைகள் | மத்தியப்பிரதேசம்(29.4), மகாராஷ்டிரம்(16.2), உத்திரப்பிரதேசம் (13.0), ஆந்திரப்பிரதேசம் (9.8), கர்நாடகா (7.6) | |
| 6 | கரும்பு | உத்திரப்பிரதேசம் (40.1), மகாராஷ்டிரா (22.0), கர்நாடகா (10.4), தமிழ்நாடு (10.2) | |
| 7 | எண்ணெய் வித்துக்கள் | மத்தியபிரதேசம் (30.7), இராஜஸ்தான் (17.7), குஜராத் (12.5), மகாராஷ்டிரா (11.3) ஆந்திரப்பிரதேசம் (6.0) | |
| 8 | பருத்தி | குஜராத் (33.3), மகாராஷ்டிரா (24.4), ஆந்திரப்பிரதேசம் (13.4), பஞ்சாப் (8.4) ஹரியானா (8.0) | |


SCERT TELANGANA

# பாகம் – II

இந்த பாடப்பகுதியில் நாட்டின் மொத்த கண்ணோட்டத்திலிருந்து விவசாயத்தைப் பற்றி கற்க முயல்வோம். இந்தியா விடுதலைப் பெற்ற காலத்திலிருந்து இன்றுவரை விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றியும் இன்று நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பற்றியும் புரிந்துக்கொள்ள முயல்வோம்.

**விசாயத்தின் முக்கியத்துவம்**

ஒரு நாட்டின் உணவுப் பாதுகாப்பு, விவசாயத்தின் மீது ஆதாரப்பட்டுள்ளது. இத்துறை நாட்டிற்கு உணவுப் பாதுகாப்பை உறுதியளிக்கிறது. தொழிற்சாலைகளுக்குத் தேவையான பல்வேறு கச்சாப் பொருட்கள் விவசாய பண்ணைகளில் பயிரிடப்படுகின்றன. கோதுமை, அரிசி மற்றும் பிற உணவு தானியங்கள் விவசாயிகளால் பயிரிடப்படுகின்றன. விவசாயம் மில்லியன் கணக்கான மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கும் முக்கிய வளமாகவும், பெரும்பாலான மக்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்குகிறது.




பயிர் செய்வோர் விவசாய கூலிகள்

இந்தியாவின் உழைப்பாளர்களின் பாதிக்கும் மேலாக விவசாயத்திலும், அது தொடர்பான நடவடிக்கைகளிலும் பணியாற்றுகின்றனர். ஆண் மற்றும் பெண்களிடையே, விவசாயத்தில் பெண்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. பெண் உழைப்பாளர்களில் சுமார் 70% விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இரண்டு வகை மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டள்ளனர். விவசாயக் கூலிகள் மற்றும் பயிர்செய்பவர்கள். சொந்தமாக சிறிதளவு நிலத்தை வைத்துக் கொண்டும் பயிர்செய்ய பிறருக்குரிய நிலத்தைப் பயன்படுத்தபவரையும் நாம் பயிர்செய்பவர்கள் என்கிறோம். விவசாயக் கூலிகள் என்பவர்கள் பிறருக்குரிய நிலங்களில் உழைக்கும் நிலமற்ற கூலியாட்களாவர். பயிர்செய்பவர்கள் சுயமாக வேலை செய்பவர்கள். ஆனால் விவசாயக் கூலிகள் வாழ்வாதாரத்திற்காக மற்ற மக்களின் வயல்களில் பணியாற்றி, அவற்றின் மீது ஆதாரப்படுபவர்கள், அல்லது வேறு சில வேலை வாய்ப்புகளை மேற்கொண்டு பணியாற்றுபவர்கள்.

1950களில் விவசாயத்தில் வேலை செய்துவந்த 70% மக்கள் பயிர்செய்பவர்களாக இருந்தனர். 50 ஆண்டுகளுக்குப் பிறகு பயிர் செய்பவர்களின் எண்ணிக்கை 55% குறைந்துவிட்டது. விவசாயக் கூலிகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. காலத்துடன் மக்கள் தொகையும் அதிகரிப்பதால் விவசாயத்தின் பணிபுரியும் மக்களின் எண்ணிக்கையையும் நாம் பார்க்கிறோம். 1951ல் 97மில்லியன் மக்களும் 2001ல் 234 மில்லியன் மக்களும் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். அதாவது கிராமப் புறங்களில் வாழ்வாதாரத்தை தேடிவந்த விவசாயக் கூலிகளின் எண்ணிக்கை அதிகரித்து. உண்மையை சொல்லப்போனால் அவர்களுக்கு பயிர்செய்யமிகக்குறைந்த நிலம் அல்லது நிலம் இல்லாமலும் இருந்தது அவர்களுக்கு கிடைத்த வேலைவாய்ப்புகள் என்ன? இது மிகவும் தீவிரமான ஒரு சவாலாக உள்ளது.

SCERT TELANGANA

## இந்திய விவசாயிகள் பெரும்பாலும் சிறுநில விவசாயிகளே

இந்திய விவசாயத்தின் ஒரு சிறப்பு அம்சம் சிறுநில உரிமையாகும். பெருமளவிலான விவசாயிகள் ஒரு சிறு அளவு நிலத்தில் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

கீழ்காணும் அட்டவணையைப் பார் அட்டவணை 1 : விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் இந்தியாவில் அவர்கள் பெற்றிருக்கும் நிலத்தின் அளவு (2010-2011)

| விவசாயிகளின் வகைகள் | எத்தனை பேர்? | | அவர்கள் பயிரிடும் நிலம் அளவு | | விவசாயிகள் பெற்றுள்ள சராசரி நிலஅளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|
| | லட்சத்தில் எண்ணிக்கை | சதவிதம் | ஏக்கர் நிலம் (லட்சம்) | சதவிதம் | |
| இறுதிநிலை விவசாயி 2.5 ஏக்கருக்கு குறைவாக | 924 | ? | 875 | ? | ? |
| சிறுவிவசாயி 2.6 முதல் 5 ஏக்கர் | 247 | ? | 868 | ? | ? |
| பாதி-இடைநிலை விவசாயி 5.1 முதல் 10 ஏக்கர் | 138 | 10.0 | 927 | ? | 6.7 |
| இடைநிலை விவசாயி 10.1 முதல் 25 ஏக்கர் | 59 | 4.3 | 833 | ? | 14.2 |
| பெரிய விவசாயி 25 ஏக்கருக்கு மேல் | 10 | ? | 429 | ? | ? |
| **மொத்தம்** | **1378** | **100.00** | **3932** | **?** | **?** |

- அட்டவணையில் புள்ளி விவரங்களையும் கீழ்காணும் பத்தியில் தேவையான விவரங்களையும் நிரப்பு

பெரும்பாலான விவசாயிகள் சிறு அளவிலான நிலங்களிலேயே பணியாற்றுகின்றனர். ஒரு குறிப்பிட்ட இந்திய இறுதிநிலை விவசாயி பயிரிடுவதற்கு .......... ஏக்கர் நிலத்தை மொத்த விவசாயிகளில் ....% இறுதிநிலையாக உள்ளனர். நாம் இறுதிநிலை விவசாயிகளுடன் சிறுநில விவசாயிகளை சேர்த்துக்கொண்டால் அவர்கள் மொத்த விவசாயிகளில் ...% இருப்பர். இடைநிலை மற்றும் பெருநில விவசாயிகளின் சதவீதம் குறைவான எண்ணிக்கையில் இருப்பினும் அந்த எண்ணிக்கையை உண்மையாக கூறப்போனால் அதிகமாகும். ....... லட்சம் விவசாயிகள் இக்குழுவில் இருப்பதாகக் கருதப்படுகிறது. கிராமப் புறங்களில் அவர்களுக்கு செல்வாக்கு மிகவும் அதிகம். பெருநில மற்றும் இடைநிலை விவசாயிகள் இணைந்து ........% நிலத்தை இயக்குகின்றனர். ஒவ்வொரு பெருநில விவசாயியும் எடுத்தக்காட்டாக சராசரியாக ............ ஏக்கர் நிலத்தை இயக்குகின்றனர். ஒவ்வொரு இறுதிநிலை விவசாயி இயக்கும் ............. ஏக்கர் நிலத்துடன் பெருநில விவசாயி இயக்கும் நிலத்துடன் ஒப்பிடு. நிலப்பகிர்வில் உள்ள இந்த சமமின்மை வாய்ப்புகளில் சமமின்மையையும், ஏழ்மை மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளில் சமமின்மையை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.

- உன் கருத்துப்படி, ஒரு விவசாயிக்கு நல்ல வருமானத்தைத் தரக்கூடிய மாறிவரும் சூழ்நிலைகளிலும் விளையக்கூடிய பயிரிடுகைக்குத் தேவையான குறைந்தபட்ச நிலத்தின் அளவு என்ன? மேற்கண்ட அட்டவணையில் எத்தனை பேர் மாறிவரும் சூழ்நிலைகளிலும் விளையக்கூடிய பயிரிடுகையைச் செய்கின்றனர்.
- விவசாயிகளில் சில பிரிவினருக்கு மட்டுமே அதிகாரம் இருப்பது ஏன்?

SCERT TELANGANA

### இயற்கைக் காரணிகள் மீது ஆதாரப்பட்டுள்ள விவசாய உற்பத்தி

விவசாயப் பயிர்கள் பருவகாலங்களின் மீதும் இயற்கை வளங்களான மண் மற்றும் நீர் மீதும் ஆதாரப்பட்டுள்ளன. பயிரிடுவதற்கு சூரிய வெப்பமும் அவசியம். வெப்பநிலை மற்றும் ஈரப்பத நிலைகளும் அவசியம். சில பயிர்கள் சில குறிப்பிட்ட பருவ காலங்களில் மட்டுமே பயிர்செய்ய முடியும். நீரும் பிற உள்ளீட்டு பொருட்கள் கிடைத்தாலும் கூட அவற்றை வேறு பருவகாலங்களில் விளைவிக்க முடியாது. எனவே பல்வேறு பருவகாலங்களில் பல்வேறு பயிர்களை எந்த பகுதியிலும் வளர்க்கப்படுகிறது. நீங்கள் உணவு, பழம் அல்லது காய்கறிச் சந்தைக்கு சென்றால் நீங்கள் இந்த வேறுபாடுகளை கவனிக்கலாம்.

நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளிடையே இயற்கை நிலைகளிலும் பலவேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆந்திரபிரதேசத்தின் மூன்று வேறுபட்ட பகுதிகளான இராயலசீமை, தெலங்காணா மற்றும் கடலோர ஆந்திரப்பகுதிகளுக்கிடையேயும் உள்ள வேறுபாடுகளை நீங்கள் கண்டிருக்கலாம். இவை பகுதிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளாகும்.

நில சீர்திருத்தங்களுடன் சேர்ந்து, புதியதாக அமைக்கப்பட்ட இந்திய அரசாங்கமும் பிற முக்கிய கொள்கை மாற்றங்களையும் செய்தது. இவற்றை நாம் மூன்று படிநிலைகளில் காணலாம் 1950-1965, 1966-1990 மற்றும் 1991ஆம் ஆண்டுக்குப் பின். ஒவ்வொரு படிநிலையும் இந்திய விவசாயத்தின் பல்வேறு அம்சங்களைக் குறிப்பிடுகிறது.

### முதல்காலக்கட்டம்-(1950-1965)நீர்ப்பாசன அதிகரிப்பு மற்றும் அணைகளைக் கட்டுதல்

1950 மற்றும் 1965 ஆண்டுகளுக்கிடையில் இந்திய அரசாங்கம் நீர்ப்பாசனம் மற்றும் மின் திட்டங்களில் அதிக அளவு முதலீடு செய்தது. அதனால் பயிர் உற்பத்தி அதிகரிக்கும் எனவும் உணவுப் பற்றாக்குறை பிரச்சனை தீரும் எனவும் நம்பியது. நீர்ப்பாசன மற்றும் மின்சார உற்பத்திக்காக பெரிய அணைகளான பக்ரா-நங்கல் (பஞ்சாப்), தாமோதர் பள்ளத்தாக்கு (மேற்கு வங்காளம்), ஹிராகுட் (ஒடிசா), நாகார்ஜுனசாகர் (ஆந்திரப் பிரதேசம்), காந்தி சாகர் (மத்தியப்பிரதேசம்) போன்ற வற்றைக் கட்டியது. விளைநிலப் பகுதிகளும், நீர்ப்பாசனம் பெறும் பகுதிகளும் அதிகரித்தன. பயிர் விளைச்சல் உற்பத்தியும் அதிகரித்தது. இந்த காலகட்டத்தில் அரசாங்கம் விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்க விவசாய விரிவாக்க அலுவலர்களையும் நியமித்தது. சிறு விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக மண்டல மற்றும் மாவட்ட நிலையில் சமூக வளர்ச்சி திட்டங்களின் மூலமாக பல புதிய திட்டங்களை வகுத்தது.

- இந்திய வரைபட புத்தகத்தை பயன்படுத்தி மேலே கூறப்பட்ட அணைகள், அமைந்துள்ள நதிகள் ஆகியவற்றை இந்திய நதிகள் வரைபடத்தில் குறிக்கவும்.

இருப்பினும், இந்த முன்னேற்றங்கள் மேற்கொண்டபோதிலும் உணவுப்பற்றாக்குறை தொடர்ந்து நீடித்தது. உணவுத் தேவைகளுக்காக வெளி நாடுகளின் மீது ஆதாரப்படும் இந்த நிலைமை இந்தியத் தலைவர்களை வேதனைப்பட வைத்தது. இந்திய அரசாங்கம் விவசாயத்தின் மீதான தனது கொள்கை திட்டங்களை மாற்றத் தொடங்கியது. அதையே நாம் ‘பசுமைப்புரட்சி’ என்கிறோம்.



SCERT TELANGANA

### இரண்டாம் காலகட்டம் (1966-1990) பசுமைப் புரட்சியும் அதன் பரவுதலும்.

அரசாங்கம் இந்திய மண்ணில் புதுவகையான விதைகளை அறிமுகப்படுத்தியது. அவை இந்தியாவிலுள்ள பல்வேறு விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களிலும் பிற நாடுகளிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டவை. இது விவசாய வளர்ச்சியின் இரண்டாம் காலகட்டத்தைக் குறிக்கிறது. இந்த புதிய விதைகள் 'உயர் வீரிய வகைகள்' (HYV) என்று அழைக்கப்படுகின்றன. இதனுடன் வேதி உரங்களும், இயந்திரங்களான டிராக்டர்களும் மற்றவையும் பயன்படுத்தப்பட்டு நீர்ப்பாசன வசதிகளும் செய்யப்பட்டன. கிராமப்புறங்களில் விவசாயிகளுக்குக் கடன் வழங்கினால் விவசாய கச்சாப் பொருட்களான விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், நவீன விவசாயத்திற்கு தேவையான இயந்திரங்களையும் வாங்க முடியும் என்பதற்காக பல்வேறு கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்பட்டன. கீழ்காணும் படத்தைப்பார்.

### வறட்சி நில விவசாயம்

இந்தியாவிலுள்ள மொத்த விளைநிலங்களில் 40%க்கு சற்று அதிகமாக நீர்ப்பாசன வசதி பெற்றுள்ளன. இந்த சதவீதம் அதிகபட்சமாக 55% ஆக உயரலாம். மீதமுள்ள 45% எளிதில் நீர்ப்பாசனம் செய்ய முடியாதவை. நீர்ப்பாசனம் செய்வது கடினமாகவும் அதிக செலவு கொண்டதாகவும் உள்ளது. இப்பகுதிகள் முழுவதும் மழைபொழிவின் மீது ஆதாரப்பட்டுள்ளன. இவை நம் நாட்டின் வறண்ட நிலங்களாகும்.

இப்பகுதிகளில் ஜோவார், பாஜ்ரா, வேர்க்கடலை, கேழ்வரகு, பருத்தி, சோயா, அவரை மற்றும் கொள்ளு போன்ற முக்கியப் பயிர்கள் விளைகின்றன.

வறண்ட நிலப்பகுதிகள் சில குறிப்பிட்ட பயிர்களுக்கு மிகவும் ஏற்றதாக உள்ளன. எடுத்துக்காட்டாக நம் நாட்டில் விளையும் 84% பருப்பு வகைகள் இப்பகுதியிலேயே விளைவிக்கப்படுகின்றன. இருப்பினும் பருப்பு வகைகளின் உற்பத்தி அதிகரிக்கவில்லை. அவற்றின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

- நம் நாட்டின் உணவைக் குறித்து சிந்திக்கவும். இந்த விஷயத்தில் மேற்கண்ட நிலைமை அச்சுறுத்தலாக உள்ளது. எவ்வாறு? உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடவும்

வறண்ட நிலப்பகுதிகளில் உற்பத்தியைப் பெருக்க என்ன செய்யப்பட வேண்டும்? நீர்ப்பாசன வசதி பெறும் நிலங்களில் உயர் வீரிய வகை பயிர்களை பயிரிடுது போலன்றி வறண்ட நிலத்து விவசாயம் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதை சமாளிக்க இப்பகுதியில் பெய்யும் மழைநீரை முதலில் சேமிக்க வேண்டும். மழைநீர் வழிந்தோடி விடாமல் தடுத்து நிறுத்த பல வழிமுறைகள் உள்ளன. மழைநீர் சேமிக்கப்படும்போது அது பூமிக்குள் ஊறி நிலத்தடி நீரை புதுப்பிக்கிறது. இதை நீர்தேக்க வளர்ச்சி திட்டங்களான காடுகள் வளர்ப்பு, கரை அமைத்தல், தடுப்பு அணைகள் மற்றும் ஏரிகளை உருவாக்குதல் போன்ற பணிகள் மூலம் செய்யலாம். மேலும் மண்வளத்தை நவீன விவசாயம் எனப்படும் அங்கக பொருட்களை(Organic Material) உரமிடுதல் மற்றும் கலத்தல் மூலம் அதிகரிக்கலாம்.

- புதிய விவசாய முறைகள் முதலில் எப்பகுதியில் பயிர் செய்யப்பட்டன? முழு நாட்டிற்கும் இம்முறை ஏன் பயன்படுத்த முடியவில்லை?
- வறண்ட நிலப்பகுதிகளுக்கு பல்வேறு விவசாய முறைகள் ஏன் தேவைப்படுகின்றன?
- மேற்கண்ட பத்திகளில் வறண்ட நிலப்பகுதியில் உற்பத்தியைப் பெருக்க பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகளில் கீழ் அடிக்கோடு இடவும்.


SCERT TELANGANA

கோதுமை மற்றும் அரிசிக்கு அரசாங்கம் தந்த ஆதரவை நினைவுகூர். கொள்ளு, துவரை, ஜோவார், கேழ்வரகு, சோயா, அவரை, வேர்க்கடலை மற்றும் பருத்தி போன்ற பயிர்களை விளைவிக்கும் விவசாயிகளுக்கும் ஆதரவு தேவை. அவர்களுக்கு பல்வேறு பகுதிகளுக்கு ஏற்ற புதிய வகை விதைகள் தேவைப்படலாம். ஒரே நிலத்தில் கலப்படமான பயிர்களை விளைவிக்கும் புதிய விவசாய தொழில் நுட்ப அறிவும், உள்ளீட்டுப் பொருட்களை வாங்க கடன் பணம் தேவைப்படலாம். இந்த பயிர்களுக்கு ஆதரவு விலையும் தேவைப்படலாம். உயர் வீரிய வகை விதைகளைக் கொண்டு விவசாயம் செய்யும் நடைமுறை தற்போது வறண்ட நிலப்பகுதிகளிலும் கையாளப்பட்டுவருகிறது.

**பசுமைப் புரட்சியின் விளைவுகள்**

**உற்பத்திப்பெருக்கம் :**


நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு உயர்வீரிய வகைகளை பரப்பியதாலும் அவற்றை புதிய பயிர் வகைகளுக்குப் பயன்படுத்தியதாலும் நாட்டில் பயிர் உற்பத்தி கணிசமான அளவில் அதிகரிக்க வழிவகுத்தது. உணவு தானிய உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு கொண்டதாக மாறியது.




உணவு உற்பத்திப் பெருக்கத்தால் வெளிநாடுகளிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்யும் அவசியம் இல்லாமல் போனது. கீழ்காணும் படங்களைப்பார். 1960ல் நம் இறக்குமதிகளில் ஐந்தில் ஒரு பாகம் உணவுப் பொருட்களாகவே இருந்தது. இன்று இந்தியாவின் இறக்குமதிகளில் சுமார் 3% மட்டுமே உணவுப் பொருட்கள் உள்ளன. கடந்த ஐந்து பத்தாண்டுகளில் உணவு தானியங்களின் உற்பத்தி நான்கு மடங்கு அதாவது 51 மில்லியன் டன்களிலிருந்து 242 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது.

SCERT TELANGANA

மேலும் உணவு தானியங்களின் அதிகளவிலான கையிருப்பினை 'இந்திய உணவுக் கழகத்தின்' (Food Corporation of India) மூலம் அரசாங்கம் உருவாக்கியதால் அது உணவுப் பற்றாக்குறை எற்படும் போது பயன்படுத்தப்பட்டு நாட்டில் வறட்சி அல்லது பஞ்சம் போன்ற சூழ்நிலைகளை தவிர்க்க முடிந்தது. உணவு தானியக் கையிருப்பு அவற்றை வசதியற்ற பகுதிகளுக்கு அளிக்கவும் பயன்படுத்தப்பட்டது. 1967ஆம் ஆண்டில் மொத்த உணவு தானிய இருப்பு அரசாங்கத்திடம் 19 லட்சம் டன்கள் மட்டுமே இருந்தது. 2010-2011 ஆண்டிற்குள் இது 220 லட்சம் டன்களாக அதிகரிக்கப்பட்டது. அது இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த உணவு தானிய உற்பத்தியில் சுமார் பத்தில் ஒரு பாகமாகும். அரசாங்கத்தின் பல்வேறு அமைப்புகள் மூலமாக அரசாங்கம் அரிசி, கோதுமை, எண்ணெய் வித்துக்கள், பருத்தி, சணல், பருப்பு வகைகள், வெங்காயம் மற்றும் கரும்பு போன்றவற்றை கையிருப்பாக வைத்திருந்தது. அரசாங்கமும் விவசாயப் பொருட்களின் கையிருப்பை பயன்படுத்தி விவசாய சந்தைகளில் விலைவாசிகளை சீரமைத்தது.




பசுமைப் புரட்சி உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு மிகவும் உதவியது. அவர்கள் வைத்திருந்த அதே நிலத்தில உணவு தானியங்கள் அல்லாத பயிர்களையும் விளைவிக்க பசுமைப் புரட்சி அவர்களுக்கு பயன்பட்டது. விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்ட நிலத்தின் அளவு அதிகரிக்கவில்லை. கீழ்காணும் படத்தைப் பார். 1960ல் ஒரு விவசாயியால் தன் ஒரு ஏக்கர் விளை நிலத்தில் உணவு தானியங்களான நெல் அல்லது கோதுமை போன்றவற்றை சராசரியாக 287 கிலோ கிராம்கள் மட்டுமே உற்பத்தி செய்ய முடிந்தது. இன்று அதே விவசாயி தன் ஒரு ஏக்கர் நிலத்தில் சுமார் 800 கி.கி. உணவு தானியங்களை உற்பத்தி செய்கிறார்.

**சுற்றுச் சூழல் விளைவுகள் :**

பசுமைப் புரட்சி பல்வேறு சுற்றுச்சூழல் சமனின்மைகளை ஏற்படுத்தியது. இதற்கு முன் குறிப்பிட்டபடி, இத்திட்டம் முத-ல் வடக்கு மாநிலங்களான பஞ்சாப், ஹரியானா, உத்திரபிரேதேசத்தின் சில பகுதிகளில் அறிமுகபடுத்தப்பட்டது. இப்பகுதிகளில் ஏற்பட்ட சுற்றுச் சூழல் பிரச்சனைகள் குறித்து நாம் ஆராய்வோம். இம் மாநிலங்களைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள் உயர்வீரிய வகைகளைச் சேர்ந்த நெல் மற்றும் கோதுமை பயிர்களை பயிரிட மாறினர். இப்பயிர்களின் விளைச்சலுக்கு அதிகப்படியான நீர் தேவைபட்டது.

**நீர்பிரச்சனைகள் :**

ஆழ்துளை கிணறுகள் நிலத்தடி நீர்வளத்தை பயன்படுத்தும் முக்கியமான நீர்பாசன மூலமாகும். ஒவ்வொருஆண்டும் ஆழ்துளை கிணறுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் விரைவாக குறைந்து வருகிறது. நாம் பயன்படுத்தும் நீரின் அளவு, நிலத்தடியில் புதுக்கப்படும் நீரை விட குறைவாக இருந்தால், நிலத்தடி நீர் பரமாரிக்கப்படும். நிலத்தடிநீரானது, ஒவ்வொரு ஆண்டும் பொழியும் மழை, நீர் கால்வாய்கள், நீரோடைகள் மற்றும் நதிகள் முத-யவற்றின் மூலம் புதுப்பிக்கப்படுகிறது. இவற்றின் மூலம் பெறப்படும் நீர் மெதுவாக மண்ணின் பல்வேறு அடுக்குகளின் வழியாக ஊடுருவிச் சென்று நிலத்தடி நீராக சேருகிறது. ஆழ்துளை கிணறுகளால் பயன்படுத்தப்படும் நீரின் அளவு, புதுப்பிக்கப்படும் நீரைக் காட்டிலும் அதிகமாகும் போது பிரச்சனை எழுகிறது. அதாவது, பயன்படுத்தப்படும் நீர், புதுப்பிக்கப்படும் நீரைவிட அதிகமாக உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள நிலத்தடி நீர் மட்டம் குறைகிறது. நிலத்தடி நீரின் மட்டம் குறைவதால், எதிர்கால பயன்பாட்டிற்கு கிடைக்கப்போகும் நிலத்தடி நீர் குறையும் என்பதை காட்டுகிறது.

**நிலவளம் :**

**நிலவளம் என்பது சரியான விகிதத்தில் நீர், கனிம வளம், காற்று போன்றவை வேருக்கு செல்லுமாறு அமைய வேண்டும். இதனையே நிலவளம் என்பவர். இதனைப் போன்ற சுற்றுச்சூழல் சமனன்மைகள் உயர் வீரிய வகை பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. அதனால் நிலவளம் பாதிப்படைகிறது. நீர் அதிக அளவில் தேவைப்படுகிறது.**

SCERT TELANGANA

பஞ்சாப் மாநிலத்தில் ஒவ்வொரு 12 மாவட்டங்களில் 10 மாவட்டங்களிலும், அரியானாவில் ஒவ்வொரு 12 மாவட்டங்களில் 9 மாவட்டங்களிலும் நிலத்தடி நீர்மட்டம் குறையும் பிரச்சனை எதிர்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த முப்பது ஆண்டுகளாக சுற்றுச் சூழல் பாதிப்பால் பஞ்சாப் விவசாயம் ஆபத்தாக உள்ளது என நிபுணர்கள் அஞ்சுகின்றனர்.

- உணவு தானியக் கையிருப்பின் அதிகரிப்பு வறட்சி மற்றும் பஞ்ச நிலைமைகளை தவிர்க்க எவ்வாறு உதவியாய் இருந்தது?
- அண்மை காலங்களில் விவசாயிகளால் ஒரே நிலத்தில் உணவு தானிய உற்பத்தியை எவ்வாறு பெருக்க முடிந்தது?
- உணவு தானிய விளைச்சல் எந்த ஆண்டில் வேகமாக வளர்ந்தது? இதற்கான உண்மையான காரணங்கள் என்ன?

**உரப்பிரச்சனைகள்**

இயற்கை உரம் மற்றும் கூட்டு உரம் போன்றவற்றில் இலை மட்கும், நுண்ணயிரிகளும் சிதைவுறும் போது படிப்படியாக தாதுக்களை வெளியேற்றும். இரசாயண உரங்கள் வழக்கமாக நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் முத-ய தாதுக்களை அளிக்கும். இவை நீரில் உடனடியாக கரைந்து, தாவரங்களுக்கு தருகின்றன. ஆனால், அவை மண்ணில் இருந்து அடித்துச் செல்லப்பட்டு, நிலத்தடிநீர், நதிகள் மற்றும் ஏரிகள் போன்றவற்றை மாசுபடுத்துகின்றன. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்-கள் மண்ணில் உள்ள பாக்டீரியாக்கள் மற்றும் இதர நுண்ணுயிரிகள் போன்றவற்றையும் கொல்லக்கூடியவை. இதன் பொருள் இவற்றின் பயன்பாட்டிற்குப் பிறகு, மண்வளம் முன்பு இருந்ததை விட குறைந்துவிடும் என்பதாகும். மண்ணில் நுண்ணுயிரிகள் இல்லாவிட்டால், அடிக்கடி இரசாயன உரங்களை சேர்க்க வேண்டி உள்ளது. நுண்ணுயிரிகளால் உற்பத்தியாகும் ஊட்டச்சத்துகளும் குறைந்துவிடும். இவ்வாறாக, பசுமைப்புரட்சி, பின்பற்றப்பட்ட பகுதிகளில் மண்ணின் உற்பத்தி திறனை குறைந்துவிட்டது மட்டுமின்றி, விவசாயிகளுக்கு தொடர்ந்து செலவுகளும் அதிகரித்து விட்டது.

- பசுமைப்புரட்சி காலத்தில் விவசாயிகள் உணவு தானியங்களை ஏற்றுமதி செய்ய இந்திய அரசாங்கம் அனுமதிக்காதது ஏன்?
- அரசாங்கம் ஏற்றுமதிகளை/இறக்குமதிகளை ஏன் தடைசெய்யவேண்டும்? இக்கொள்கையால் இந்திய விவசாயிகளுக்கு ஏற்பட்ட நன்மை என்ன?

மண்வளம் மற்றும் நிலத்தடிநீர் வளம் முத-யவை உருவாக பல்வேறு ஆண்டுகளாகின்றன. இவ்வளங்கள் ஒரு முறை அழிந்துவிட்டால் மீண்டும் கொண்டு வருதல் மிகவும் கடினம். இதைப் போன்ற சுற்றுச் சூழல் சமனின்மைகள் உயர் வீரிய வகை விதைகளை பெருமளவில் பயன்படுத்தும் பகுதிகளில் எதிர் கொள்ளப்படுகிறது. விவசாயம் வெகுவாக இயற்கை வளங்களைச் சார்ந்துள்ளது. விவசாயத்தின் எதிர்கால மேம்பாட்டை உறுதி செய்திட நாம் எவ்வாறு அக்கறை எடுத்தக் கொள்ள முடியும்? என்பது தற்போது விவாதிக்கப்பட்டுவரும் சர்ச்சைக்குரிய கேள்வியாக உள்ளது.

**மூன்றாம் கால கட்டம் (1990கள் முதல் தற்காலம் வரை) விவசாய சீர்திருத்தத்திற்குப் பின்னர்.**

நாம் முன்பு கண்டதைப் போல் 1967 முதல் 1991 வரையிலான காலத்தில் இந்திய விவசாயிகள் தங்கள் உற்பத்தியை நாட்டிலுள்ள சந்தைகளிலேயே விற்றனர். அவற்றை இந்திய உணவுக் கழகம் மூலமாக அரசாங்கத்திற்கு விற்றனர். மேலும் மக்கள் தங்களுக்குத் தேவையான உணவினை வாங்க நம் நாட்டிலேயே உள்ள சந்தைகளின் மீது ஆதாரப்பட்டனர். பண்ணை உற்பத்திகளில்

**இயற்கை விவசாயம் – ஒடிசாவில் ஒரு விவசாயி**

**பசுமை புரட்சிக்கு பின்னர் விவசாயத்தில் பல்வேறு விதமான யுத்திகளை கையாண்டு விவசாயத்தை மேம்படுத்தினர். ஆனால் மனிதனுக்கும், நிலத்திற்கும் பல்வேறு விதமான பாதிப்புகள் ஏற்பட்டன. விவசாயத் துறையை மேம்படுத்திய இந்தியருக்கு ஓர் உதாரணம் 80 வயதுடைய நட்வர்பாய் என்பவர் நரைசு என்ற கிராம் நீ-யில் உள்ள கட்டாக் மாவட்டத்யையும் ஒரிசாவை சேர்ந்தவர் ஆவார். அவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் அவர் இயற்கை முறையில் விவசாயத்தை மேற்கொண்டார் அதாவது உயர் வீரிய வகை உரங்களையோ, தானியங்களையே பயன்படுத்தாமல் சாணம் மற்றும் இயற்கை உரங்களான இலை, தளைகளையும், குடும்ப உறுப்பினர்களை கொண்டு தேவையான அளவு உற்பத்தி செய்தார். ஒரு நாள் நட்வர்பாய் ஒரு விவசாயம் உயர் வீரிய உர (கார்போபர்ரன்) மருந்தை தெளித்து கொண்டு இருந்தார். அப்பொழுது நட்வர்பாய் இதனை பயன்படுத்துவதால் பல்வேறு விதமான விளைவுகள் ஏற்படுகின்றன என்று கூறிக்கொண்டு இருந்தார். அப்பொழுது அந்த விவசாயி மூச்சு விட முடியவில்லை எனவும், தலை சுற்றுவதாகவும் கூறினார். உடனே நட்வர்பாய் அவரிடம் கேட்டார். தேள் ஏதுவும் கடிக்க விட்டதா (அ) பாம்பு கடித்து விட்டதா எனவும், அல்லது தவளை விழுந்த நீரை எதுவும் குடித்து விட்டீர்களா? என கேட்டு, மீதம் இருந்த அந்த மருந்தை தரையில் ஊற்றினார். அதில் நத்தை, பாம்பு போன்றவை செத்துவிட்டன. நீரில் ஊற்றியபோது தவளை செத்துவிட்டது. இதனை விவசாயியை பார்க்க சொன்னார். பின்னர் இயற்கை உர விவசாயத்தையும், மண்புழு உரம் பற்றியும் கூறி பண்ணை அழியாமல் காக்கும் படி கூறினார்.**

**நட்வர்பாய் ஆரம்பித்த இயற்கை உர விவசாயம், நுண்ணிய இயற்கை உர விவசாயத்தை அவரது மகன் ராஜேந்திரன் பல்வேறு வகையான விவசாயததை மேற்கொண்டு சிறப்புற செய்து வருகிறார்.**

SCERT TELANGANA

**1999-யில் ஆரம்பித்து செயல்பட செய்து செயல் இப்பொழுது நாடு முழுவதும் உலகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**
**ஆதாரம் ; ஆக்ஸை கோத்தாரி புதிய உணவு தினந்தோறும் தி இந்து டிசம்பர் 9, 2012**
**இயற்கை விவசாயத்தின் மூலம் அனைவருக்கும் உணவு கிடைக்குமா?**
**இயற்கை உரமா? அல்லது செயற்கை உரமா? உரையாடுக.**

அயல்நாட்டு வியாபாரத்தை அனுமதிக்கவில்லை. பெரும்பாலான பண்ணை உற்பத்திகளின் ஏற்றுமதி குறிப்பாக உணவு தானிய ஏற்றுமதி தடைசெய்யப்பட்டது. இறக்குமதிகளும் அனுமதிக்கப்படவில்லை. பற்றாக்குறை ஏற்பட்ட சமயங்களில் இறக்குமதி செய்யும் உரிமை அரசாங்கத்திற்கு மட்டுமே இருந்தது.

அரசாங்கம் மலிவான பண்ணை உள்ளீட்டுப் பொருட்களை வழங்கி விவசாயிகளுக்கு ஆதரவு அளித்ததையும், பண்ணைப் பொருட்களை குறைந்தபட்ச அளவு விலைக்கு வாங்க உதவி செய்ததைப் பற்றியும் நாம் ஏற்கனவே படித்தோம். இவ்வாறு இந்திய விவசாயி, விவசாய பொருட்களை உள்நாட்டுச் சந்தைகளுக்காக உற்பத்தி செய்தார். விவசாயம் செய்வதன் மூலம் ஒரு கணிசமான வருமானத்தை ஈட்ட அரசாங்கத்தின் ஆதரவின் மீது ஆதாரப்பட்டிருந்தார்.

### பண்ணை உற்பத்திகளில் அயல்நாட்டு வாணிகம்

நாம் முன்பு சுட்டிக் காட்டியதைப் போல, அரசாங்கம் 1991க்கு முன் விவசாயத்தில் பல பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்தியாவின் விவசாயக் கொள்கையில் ஒரு குறிப்பிட்ட மாற்றம் ஏற்பட்டுள்ளது. பண்ணை உற்பத்திப் பொருட்கள் கடந்த காலத்தைவிட அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டும் இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்டும் வருகின்றன. இது முக்கியமாக வளர்ச்சி அடைந்த நாடுகளின் வலியுறுத்தலால் நடைபெறுகிறது.

பண்ணை வியாபாரக் கொள்கைகளில் மாற்றங்கள் இந்தியாவில் மட்டும் மேற்கொள்ளப்படுவது அல்ல. ஆசியா, ஆப்ரிக்கா மற்றும் தென் அமெரிக்காவின் பல குறைந்த வருமான நாடுகளிலும் இது போன்ற கொள்கைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஏனெனில் இது வளர்ச்சி அடைந்த நாடுகள் அயல்நாட்டு வாணிகத்தை அனுமதிக்கும்படி அந்த நாடுகளை வலியுறுத்துகிறது. இந்த வளர்ச்சி அடைந்த நாடுகள் தங்களுடைய மிகுதியான பண்ணைப் பொருட்களை குறைந்த வருவாய் கொண்ட நாடுகளில் விற்க விரும்புகிறது. ஏனெனில் அந்த நாடுகளில் அதிக அளவில் வாங்குபவர்கள் உள்ளனர்.

அயல்நாட்டு வாணிகக் கொள்கை மாற்றங்களால் பல பயிர்களின் விளைச்சல்கள் தற்போது வாணிகம் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, விவசாயிகள் தற்போது காய்கறிகள், மற்றும் கனிகள், சர்க்கரை மற்றும் வெல்லம் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதே போன்று பருத்தி, இரப்பர், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்களின் இறக்குமதியும் சுதந்திரமாக அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் விவசாயிகள் உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யமுடியவில்லை. உணவு தானியங்கள் முக்கியமான உணவுப் பொருளாக இருப்பதால் இந்திய அரசாங்கம் உணவு தானிய வாணிகத்தை அனுமதிப்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்து வருகின்றது. இதை அரசாங்கம் விரும்பினால் அதனால் மட்டுமே இவ்வாறு செய்ய

**அரசாங்கம் ஏன் உணவு தானியங்களை வாங்கி சேமிக்கின்றது?**

அறுவடை நேரத்தின் போது அதிக தானியங்கள விற்பனைக்காக சந்தைகளுக்கு வருகின்றன. இந்நேரத்தில் தானியங்களின் விலை வீழ்ச்சி, விவசாயிகளுக்கு கவலையளிக்கின்றது. விலை வீழ்ச்சியால், அதிக விலைக்கு தானியங்களை விற்கமுடியாமல், கடன் கொடுத்தவர்களுக்கு கடனை திருப்பி செலுத்த முடியாமலும், புதிய விவசாய முறைக்கு செலவு செய்ய முடியாமலும் தவிக்கின்றனர். குறைந்த விலைக்கு தானியங்களை வாங்க முயலும், வியாபாரிகளிடமிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்படவேண்டும்.

ஆகையால் அரசாங்கம் விவசாயிகளின் தானியங்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) நிர்ணயித்தது. குறைந்தபட்ச ஆதரவு விலை என்பது விவசாயிகள் தங்கள் தானியங்களை விற்க விரும்பும் விலையாகும். அரசு தானியங்களுக்கு நல்ல விலையை நிர்ணயிப்பதால், விவசாயிகளுக்கு பயிர் செலவும் சிறிதளவு லாபமும் கிடைக்க வழிஏற்பட்டது. குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டதால், வியாபாரிகளுக்கு குறைந்த விலையில் தானியங்களை விற்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இந்த உணவுக் கழகம் (Food corporation of India-FCI) இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்டு, விவசாயிகளிடமிருந்து தானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டு உணவுக் கிடங்குகளில் சேமிக்கப்பட்டன. இங்கிருந்து நியாய விலைக் கடைகள், பளளிகளின் மதிய உணவுத்திட்டம் ஆகியவற்றிற்கு நேரடியாக அனுப்பப்படுகிறது.



SCERT TELANGANA

முடியும்.இருப்பினும் வளர்ச்சியடைந்த நாடுகள், தங்கள் நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பயிர்களை அதிக அளவில் இறக்குமதி செய்து கொள்ளும்படி இந்தியாவை தொடர்ந்து வலியுறுத்திவருகின்றன.

அயல் நாட்டு வாணிகத்தால் விவசாயிகளின் வருமானம் அதிக ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டுள்ளது. சில குறிப்பிட்ட ஆண்டுகளில் குறிப்பிட்ட பயிர்களுக்கு ஏற்றுமதிகளிலிருந்து லாபமடைவர். மற்ற ஆண்டுகளில் விவசாயிகள் மலிவான ஏற்றுமதிகளாலும் பண்ணைப் பொருட்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்படுவதாலும் நஷ்டமடைவர். சிறு விவசாயிகள் அதிக சேமிப்புகள் இல்லாததால் இந்த நஷ்டத்தை அவர்களால் தாங்க முடியாது. அவர்கள் கடன் வலையில் சிக்கி ஏழைகளாவர். எனவே அரசாங்கம் பண்ணைப் பொருட்களை வாணிகம் செய்ய அனுமதிக்கும் போது மிகவும் கவனத்துடன் செயல்படவேண்டும்.

## முக்கியச் சொற்கள்

1. அங்கக வேதிப்பொருட்கள் 2. வறண்ட நில விவசாயம் 3. நவீன விவசாயமுறைகள் 4.வெளிநாட்டு வாணிகக் கொள்கை 5.வெப்ப மண்டலம் 6. பசுமை புரட்சி

## உனது கற்றலை மேம்படுத்துக

1. ஏதேனும் ஒரு தோட்ட பயிரை குறிப்பிட்டு, அதற்கு தேவையான பூகோள அம்சத்தைக் குறிப்பிடு.(AS1)
2. விவசாய நிலங்கள் குறைந்துவருவதற்கான காரணத்தை அறிக.(AS4)
3. திணைகள் பயிரிடப்படும் மாநிலங்கள் யாவை? அவற்றை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.(AS5)
4. குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) என்றால் என்ன? குறைந்தபட்ச ஆதரவு விலை ஏன் தேவை?(AS4)
5. பசுமைப் புரட்சியை இந்திய அரசாங்கம் எவ்வழிகளில் ஆதரித்தது என்பதை விளக்குக.(AS1)
6. இந்தியா, உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவை அடைவது மிகமுக்கியமானது என்று நீ கருதுகிறாயா? கலந்துரையாடவும்.(AS6)
7. வறண்ட நில விவசாய முறை மற்ற பகுதிகளின் விவசாய முறைகளிலிருந்து எவ்வாறு வேறுபட்டதாக உள்ளது?(AS1)
8. அண்மைக் காலத்தில் குளிர்பானங்களில் நுண்ணுயிர்க்கொல்லிகள் காணப்பட்ட நிகழ்வுகளை உன்னால் நினைத்துப் பார்க்க முடியுமா? இது விவசாயத்தில் நுண்ணுயிர்க்க கொல்லிகளை பயன்படுத்தவதுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதை கலந்துரையாடு.(AS4)
9. புதிய விவசாய முறைகளில் வேதி உரங்களை ஏன் பயன்படுத்துகின்றனர்? இவ்வுரங்களை பயன்படுத்தவதால் மண் எவ்வாறு வளம் குன்றுகிறது? மண் வளத்தைப் பெருக்க உதவும் மாற்று வழிகள் என்ன?(AS1)
10. சில பகுதிகளில் பசுமை புரட்சியை பயன்படுத்தியதால் விவசாயிகளுக்கு குறுகிய கால லாபமும், ஆனால் நீண்ட கால இழப்புகளும் எவ்வாறு ஏற்பட்டன.(AS1)
11. விவசாயிகளின் வருமானத்தின் மீது அயல்நாட்டு வாணிகத்தின் விளைவுகள் யாவை?(AS1)
12. முந்தைய வகுப்புகளில் நிலப்பங்கீடு பற்றி நாம் கற்றோம். பக்கம் 65ல் உள்ள படம் இக்கருத்தை எவ்வாறு பிரதிப-க்கிறது? இந்திய விவசாயத்தை விவரிக்கும் ஒரு பத்தியை எழுது.(AS1)
13. இந்தியப் புறவரிப் படத்தில் நெற்பயிர் விளையும் இடங்களைக் குறிக்கவும்.(AS5)
14. பக்கம் 71ல் உள்ள உரப்பிரச்சனைகள் குறித்து படித்து உன் கருத்தை எழுது.(AS2)



**கலந்துரையாடல் :** பயிரிடும் விவசாயி நிம்மதியாக இருக்கிறார் என நீ நினைக்கிறாயா? இல்லை எனில் காரணம் என்ன? விவசாயத்தை பாதிக்கும் காரணிகள் யாவை?

**விவாதி :** விவசாயத்தில் உயிர்ம/வேதி உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்-களை பயன்படுத்தலாமா? மக்கள் தொகை வளர்ச்சியை மனதில் கொண்டு இதன் மீது விவாதிக்கவும்.

## செயல்திட்டம்


**உனது பகுதியில் பயிரிடப்படும் பயிர்கள் யாவை? அவற்றில் வீரிய விதைகள் மற்றும் மரபுவழி விதைகளால் பயிரிடப்படுபவை எவை? பின்வரும் அம்சங்களை வீரிய விதைகள் மற்றும் மரபுவழி விதைகளின் பயிர்களுடன் ஒப்பிட்டு எழுதுக.**

**1. பயிர் காலம் 2. எண்ணிக்கை 3. உற்பத்தி 4. உரம் 5. பயிருக்கு ஏற்படும் நோய்கள்**



SCERT TELANGANA

**படம் 1: நெற்பயிரை உற்பத்தி செய்யும் மாநிலங்கள்**




SCERT TELANGANA

பாடம்
7

# இந்தியாவில் தொழில் வளர்ச்சி

முதல் பாகம்

## உற்பத்தித் தொழில்கள்

தீபாவளித் திருநாளில் தாய் தந்தையருடன் ஜெனித் சந்தைக்குச் சென்றான். அவனுக்காக ஆடைகளையும், காலணிகளையும் வாங்கினர். அவனுடைய தாய் சில சமையல் பாத்திரங்கள், சர்க்கரை, தேயிலைத் தூள், விளக்குகளை வாங்கினார். கடைகள் அனைத்திலும் விற்பனைக்காக பொருட்கள் நிறைந்திருப்பதை ஜெனித் கவனித்தான். இவ்வளவு எண்ணிக்கையில் அனைத்துப் பொருட்களும் எவ்வாறு தயாராகின்றன என்று அவன் வியப்படைந்தான். காலணிகள், ஆடைகள், சர்க்கரை போன்றவற்றை பெரிய தொழிற்சாலைகளில் இயந்திரங்களின் உதவியுடன் தயாரிக்கின்றனர் என்றும், சில பாத்திரங்களை சிறிய தொழிற்சாலைகளில் தயாரிக்கின்றனர் என்றும் தீபாவளி விளக்குகள் போன்றவற்றை வீட்டில் கைவினைக் கலைஞர்கள் செய்வர் என்றும் அவனுடைய தந்தை கூறினார்.

கச்சாப் பொருட்களைப் பயன்படுத்தி மதிப்புமிக்க, விலையுயர்ந்த பொருட்களை பேரளவில் தயாரிப்பதை உற்பத்தி என்பர். மரக்கூழிலிருந்து காகிதத்தையும், கரும்பிலிருந்து சர்க்கரையும், இரும்புத் தாதுவிலிருந்து இரும்பும், எஃகும், பாக்சைட்டிலிருந்து அலுமினியமும் தாயரிக்கின்றனர் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? சில வகையான ஆடைகளை நூலிலிருந்து தயாரிக்கின்றனர் என்றும், இந்த நூலும் தொழிற்சாலையில் தயாரான உற்பத்தியே என்பது உங்களுக்குத் தெரியுமா?

இந்த முதன்மை உற்பத்திகளைப் பயன்படுத்தி இரண்டாம் துறையில் பணிபுரியும் நபர்கள் நுகர்வுப் பொருட்களை தயாரிக்கின்றனர். எஃகு ஆலைகள், நெசவுத் தொழில்கள், ரொட்டி தயாரித்தல் போன்றவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் இந்த வகைப்பாட்டின் கீழ் வருவர். சிலர் சேவைகளை வழங்கி வேலையைப் பெறுவர். இப்பாடத்தில் இரண்டாம் துறையான உற்பத்தித் தொழில்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

ஒரு நாட்டின் பொருளாதார நிலையை அந்நாட்டின் உற்பத்தித் தொழில்களைக் கொண்டு கணிப்பர். முன்னேற்றத்திற்கு, குறிப்பாக பொருளாதார முன்னேற்றத்திற்கு உற்பத்தித் துறையை முதுகெலும்பாகக் கருதுவர். ஏனெனில்,

- நாட்டின் போருளாதார நிலைக்கு முதுகெலும்பாக உள்ள விவசாயத்தை நவீனமயமாக்குவதோடு மட்டுமின்றி இரண்டாம், மூன்றாம் துறைகளில் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலமாக மக்கள் விவசாய வருமானத்தின் மீது ஆதாரப்படுவதைக் குறைக்கிறது.
- நாட்டில் வறுமை, வேலைவாய்ப்பின்மைகளை நீக்க வேண்டுமெனில் நாடு தொழிற்துறையில் முன்னேற்றம் அடைய வேண்டும். இந்தியாவில் அரசுத் துறையில், அரசு தனியார் துறைகளில் கூட்டு முயற்சியுடன் தொழிற்சாலைகள் அமைப்பதன் நோக்கம் இதுவே. பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைத்தல் வாயிலாக வட்டார சமமின்மைகளை குறைப்பதும் ஒரு நோக்கமாக உள்ளது.
- உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் வாயிலாக வாணிகம், வியாபாரங்கள் விரிவடைகின்றன. நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணியை அவை அளிக்கின்றன.
- தம் கச்சாப் பொருட்களை விலையுயர்ந்த பொருட்களாக மாற்றக்கூடிய நாடுகள் செல்வந்த நாடுகளாக மாறுகின்றன. உற்பத்தித் தொழில்களை இயன்ற அளவு விரைவாக பல்வேறு துறைகளுக்கு விரிவுபடுத்தி, முன்னேற்றம் அடைதலின் மீது இந்திய செல்வந்த நாடாக மாறுதல் ஆதாரப்பட்டுள்ளது.


SCERT TELANGANA

- இடைப்பட்ட பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருட்களின் பட்டியலை தயார்செய்க?
- பெருமளவு பொருட்களை உற்பத்திசெய்யும் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு, இரும்பு அடிப்படை தேவையாக உள்ளது. உன்னை சுற்றியுள்ளவற்றை எடுத்துக்காட்டாக கொண்டு இதனை விளக்குக.
- தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் இயந்திரங்களை பார்த்ததுண்டா? அவற்றின் படங்களை சேகரிக்கவும்.
- அதிக எண்ணிக்கையிலான பொருட்களின் உற்பத்திக்கு பெட்ரோலியம் எவ்வாறு அடிப்படை தேவையான பொருளாக உள்ளது?
- அடிப்படை என்னும் சொல்லின் பொருள் என்ன என்பதை கலந்துரையாடு தொழிற்சாலைகள் இயங்க அடிப்படை தேவைகள் யாவை?
- நாடு சுதந்திரம் பெற்ற சமயத்தில், தொழில்மயமாதல் வாயிலாக சாதிக்க விரும்பிய நோக்கங்கள் யாவை?

- விவசாயம், தொழில்கள் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற துறைகள் இல்லை. அவை ஒன்றுடன் ஒன்று கைகோர்த்து வளர்கின்றன. எடுத்துக்காட்டாக இந்தியாவின் விவசாயம் சார்ந்த தொழில்கள் விவசாய உற்பத்தியை அதிகரித்து அவற்றின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. தம் கச்சாப் பொருட்களுக்காக விவசாயத்தின் மீது ஆதாரப்படுவதோடு மட்டுமின்றி நீரிறைக்கும் பம்புகள், வேதி உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், களைக் கொல்லிகள், பிளாஸ்டிக், பி.வி.சி. குழாய்கள், இயந்திரங்கள், கருவிகள் போன்ற தம் உற்பத்திப் பொருட்களை விவசாயிகளுக்கு விற்கின்றனர். இவ்வாறு உற்பத்தி தொழில்களின் முன்னேற்றம், போட்டி எண்ணங்களால் விவசாயிகள் தம் உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதோடு மட்டுமின்றி மேலும் திறமையாகவும், போட்டியை எதிர்கொள்ளும்படியும் இருக்க வேண்டும். தற்சார்பு அடைதல் மட்டும் போதாது. நம் தொழிற்சாலைப் பொருட்கள் சர்வதேச சந்தையிலுள்ள பொருட்களின் தரத்திற்கு எந்தவகையிலும் குறைந்துவிடக்கூடாது. இவ்வாறு தரமான பொருட்களை நாம் பெற்றிருந்தால்தான் சர்வதேச சந்தையில் போட்டியிட முடியும்.

## தொழிற்சாலைகளை அமைக்கும் இடம்

தொழிற்சாலைகளை எங்கு அமைப்பது என்பது சிக்கலான அம்சங்களின் மீது ஆதாரப்பட்டுள்ளது. கச்சாப் பொருட்கள் கிடைத்தல், கூலியாட்கள் கிடைத்தல், முதலீடு, மின்சாரம், சந்தை போன்ற அம்சங்களின் மீது இது ஆதாரப்பட்டுள்ளது. ஆனால் இவை அனைத்தும் ஒரே இடத்தில் கிடைத்தல் என்பது அரிது. எனவேதான் தொழிற்சாலைகள் அனைத்து அம்சங்களும் தகுந்த அளவில் கிடைக்குமிடங்களில்




SCERT TELANGANA

அல்லது குறைவான செலவில் பெறக்கூடிய இடங்களில் அமைகின்றன. தொழிற்சாலை நடவடிக்கைகள் தொடங்கினால் நகரமயமாதல் தொடங்குகிறது. சில சமயங்களில் நகரங்களில் அல்லது நகரங்களுக்கு அருகில் தொழிற்சாலைகளை அமைக்கின்றனர். எனவே தொழில்மயமாக்கலும், நகரமயமாக்கலும் இணையான வளர்ச்சியடைகின்றன. நகரங்கள் பொருட்களுக்கு சந்தையாக இருப்பதோடு மட்டுமின்றி, வங்கியியல், ஆயுள் காப்பீடு, போக்குவரத்து, உழைப்பாளர்கள், அறிவுரையாளர்கள், பொருளாதார ஆலோசனைகள் போன்ற சேவைகளையும் வழங்குகின்றன. நகர மையங்கள் ஏற்படுத்தும் பல்வேறு சேவைகளை பயன்படுத்திகொள்வதற்கு பல்வேறு தொழிற்சாலைகள் அங்கு குவிவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இவற்றை மிகப்பெரிய தொழிலமைப்புகள் என்பர். படிப்படியாக ஒரு பெரிய தொழிற்சாலை மையம் ஏற்படுகின்றது. சுதந்திரத்திற்கு முன் பல தொழிற்சாலைகள் அயல்நாட்டு வியாபார நோக்குடன் மும்பை, கோல்கத்தா, சென்னை போன்ற துறைமுகப்பட்டிணங்களில் ஏற்பட்டன. அதன் விளைவாக சுற்றிலும் பரந்த விவசாய கிராமப்புறங்களுடன் கூடிய தொழில் ரீதியாக முன்னேற்றமடைந்த நகரங்கள் ஏற்பட்டன.

## தொழிற்சாலைகளின் வகைப்பாடு

நீங்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் வானொலி, மின்சார விளக்கு, எண்ணெய், சிமெண்ட், கண்ணாடிப் பொருட்கள், பெட்ரோல், தீப்பெட்டிகள், ஸ்கூட்டர், வாகனங்கள், மருந்துகள் போன்றவற்றின் பட்டியலை தயாரியுங்கள். ஏதோ ஒருஅம்சத்தின் அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்தினால் அப்போது அவற்றை நன்றாக புரிந்துகொள்ளமுடியும். தொழிற்சாலைகளை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. **உபயோகப்படுத்தும் கச்சாப் பொருட்களின் அடிப்படையிலானவை:**

* **விவசாயம் சார்ந்தவை :**

அ. ஆடை தொழிற்சாலைகள் (நூல், கம்பளி, பட்டு, சணல்)

ஆ. ரப்பர் சார்ந்த தொழிற்சாலைகள் (இ) சர்க்கரை தயாரித்தல்

ஈ. தேயிலைத் தூள் தயாரித்தல் (உ) காப்பித்தூள் தயாரித்தல்

ஊ. தாதுப் பொருள் சார்ந்தவை : இரும்பு, சிமெண்ட், அலுமினியம், இயந்திரக் கருவிகள், பெட்ரோ-ய வேதிப் பொருட்கள், மருந்துகள் போன்றவை.

2. **அவற்றின் முக்கிய பங்கு அளவு அடிப்படையிலானவை**

* **கனரக அல்லது முக்கிய தொழில்கள் :** இவை பிற பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருட்களான தம் உற்பத்திப் பொருட்களை வழங்குகின்றன.

  எ.டு.: இரும்பு, எஃகு, தாமிர சுத்திகரிப்பு, அலுமினிய சுத்திகரிப்பு போன்றவை இவற்றை பயன்படுத்தி பிற பொருட்களை தயாரிப்பர்.

* நுகர்வுப் பொருள் தொழிற்சாலைகள், நுகர்வோர் நேரடியாகப் பயன்படுத்தும் பொருட்களை இவை தயாரிக்கின்றன. எ-டு : சர்க்கரை, பற்பசை, தையல் இயந்திரங்கள், மின்விசிறிகள் போன்றவை.

3. **முதலீட்டு அடிப்படையிலானவை :**

ஒரு தொழிற்பட்டறையில் முதலீட்டின் மீது விதித்த வரையறையைக் கொண்டு சிறிய அளவு தொழிற்சாலைகளை விளக்குகின்றனர். காலப்போக்கில் இந்த வரையறை மாறிக்கொண்டே வந்தது. தற்போது கோடி ரூபாய் முதலீட்டுக்கு மிகாதவற்றை சிறிய அளவு தொழிற்சாலைகள் என்பர். இந்த வரையறையைத் தாண்டினால் அது பேரளவுத் தொழிற்சாலையாக மாறும்.


4. **தலைமை அடிப்படையிலானவை :**

* அரசுத்துறை அரசு நிறுவனங்களின் தலைமையில் இயங்கபவை BHEL-SAIL போன்றவை.
* தனியார் துறை : தனிநபர்கள் அல்லது தனியார் குழு தலைமை வகித்து, அவர்கள் மூலம் இயக்கப்படுபவை-TISCO, பாஜாஜ் ஆட்டோ லிமிடெட், டாபர் தொழிற்சாலைகள் போன்றவை.

கலப்புத் துறை : அரசுத்துறையும், தனியார் துறையும் இணைந்து இயங்குபவை, ஆயில் இந்தியா லிமிடெட் கம்பெனிக்கு அரசு, தனியார் துறைகள் இணைந்து தலைமை வகிக்கின்றன.

கூட்டுறவுத்துறை : உற்பத்தியாளர்கள், கச்சாப் பொருட்களை விநியோகிப்பவர்கள், தொழிலாளர்கள் அல்லது இவர்கள் இணைந்து தலைமை ஏற்று நடத்தும் தொழிற்சாலைகள் இவர்கள் தம் அனைவரின் வன ஆதாரங்களை ஒன்றுதிரட்டுவர். தம்முடைய பங்கினைப் பொருத்து இலாபங்கள் அல்லது இழப்புகளை பகிர்ந்து கொள்வர். எ-டு : மகாராஸ்டிராவின் சர்க்கரை ஆலை, கேரளாவின் தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை.

கச்சாப் பொருட்கள், தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் எடை, கனஅளவு அடிப்படையிலானவை :





*நெசவுத் தொழில் விலை அதிகரிப்பு*

* இரும்பு, எஃகு போன்ற கனரகத் தொழிற்சாலைகள்.
* மென்பொருட்களைப் பயன்படுத்தி மெல்லிய உற்பத்திப் பொருட்களை தயாரிக்கும் மின்சாரப் பொருட்கள் தொழிற்சாலைகள் போன்றவை.

**விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகள்**

விவசாய உற்பத்திகளின் மீது ஆதாரப்பட்ட தொழிற்சாலைகளை விவசாயம் சார் தொழிற்சாலைகள் என்பர்.

* ஆடைத் தொழிற்சாலை : இந்தியப் பொருளாதார அமைப்பில் ஆடைத் தொழிற்சாலைக்கு முக்கிய இடம் உள்ளது. தொழிற்சாலை உற்பத்தியில் இதன் பங்கு 14% விவசாயத்தினை அடுத்து அதிகமான வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் (நேரடியாக 3.5கோடி பேர்) தொழிற்சாலை இதுவே. அந்நியச்செலாவணி வருவாயில் 24.6% இத்துறையிலிருந்தே




பாடத்தின் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ள இந்திய நெசவு தொழிற்சாலைகளின் வரைபடத்தை பார்த்து வண்ணம் தீட்டுக.

படம் 1 : இந்திய மாநிலங்கள்

SCERT TELANGANA

- முதல் நெசவு ஆலையை மும்பையில் 1854ல் நிறுவினர்.
- இரண்டு உலகப் போர்கள் நடைபெற்ற காலத்தில் இந்தியா, இங்கிலாந்தின் குடியேற்றப் பகுதியாக இருந்தது. இங்கிலாந்தில் அச்சமயத்தில் ஆடைகளுக்கு மிகுந்த தேவை இருந்ததால் இந்தியாவில் நெசவுத் தொழில் நன்கு வளர்ச்சி அடைந்தது.

வருகின்றது. மொத்த தேசிய ஆக்கத் (GDP)தில் 4% இந்த தொழிற்சாலையிலிருந்து கிடைக்கின்றது. தற்சார்பு உடையதாக இருந்து விலையை அதிகரிக்கும் கச்சாப் பொருட்களிலிருந்து மிக அதிக விலைமதிப்பை உடைய உற்பத்திப் பொருட்கள் வரை உள்ள ஒரே ஒரு தொழில் இதுவே ஆகும்.

நூலாடைகள் : பண்டைய இந்தியாவில் கையால் நூல் நூற்று கைத்தறி மூலம் ஆடைகளை நெய்தனர். 18ஆம் நூற்றாண்டிற்குப் பின் விசைத்தறிகள் பயன்பாட்டிற்கு வந்தன. குடியேற்ற ஆட்சியில் இங்கிலாந்தில் ஆலைகளில் தயாரிக்கப்பட்ட துணியுடன் போட்டியிட முடியாத காரணத்தால் நம் மரபுவழித் தொழில்கள் அடிப்பட்டுப்போயின.

தற்போது நம் நாட்டில் 1600 நூல் ஆலைகள் உள்ளன. இவற்றில் 80% தனியார் துறையிலும், மீதமிருப்பவை அரசு, கூட்டுறவுத் துறைகளிலும் உள்ளன. இவை தவிர நான்கு முதல் பத்து வரையிலான தறிகள் உள்ள சிறிய தொழிற்பட்டறைகள் ஆயிரக் கணக்கான எண்ணிக்கையில் உள்ளன.

தொடக்க ஆண்டுகளில் பருத்தி நன்றாக விளையும் குஜராத், மகாராஷ்டிரத்தில் நெசவுத் தொழிற்சாலைகள் குவிந்தி ருந்தன. இங்கு தொழிற்சாலைகள் அமைக் கப்படுவதற்கு கச்சாப் பொருட்கள் கிடைத்தல், சந்தைத் துறை முகவசதிகளுடன் போக்குவரத்து, உழைப்பாளர்கள் கிடைத்தல், ஈரமான வானிலை போன்றவை துணைபுரிந்தன. இத்தொழிலுக்கும் விவசாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இது விவசாயிகளுக்கும் எடுப்பவர்களுக்கும் கொட்டையிலிருந்து பருத்தியை பிரித்தெடுத்தல், நூற்றல், நெய்தல், வண்ணமிடுதல், ஆடை வடிவமைத்தல், மூட்டை போடுதல், துணி தைத்தல் போன்ற பணிகளால் தொழில்களுக்கும் ஊக்கம் அளிக்கிறது.

- நூல் நூற்பு, கதராடை நெய்வதற்கு மகாத்மா காந்தியடிகள் ஏன் முக்கியத்துவம் அளித்தார்?

நூல் நூற்பு இப்பொழுதும் மகாராட்டிரம், குஜராத், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் குவிந்திருக்கின்றன. ஆனால் துணி நெய்தல் நன்றாக விரிவடைந்ததால் மரபுவழித் திறன்களான நூல், பட்டு, ஜரிகை அழகு வேலைப்பாடு போன்றவற்றிற்கு வாய்ப்புகள் கிடைத்தன. நூல் நூற்றலில் இந்தியாவிற்கு உலக அளவில் மதிப்பு உள்ளது. இந்த நேர்த்தியான நூலை பயன்படுத்திக் கொள்ளவும் திறமை இல்லாததால் செய்த ஆடைகளுக்கு சிறந்த நேர்த்தி இருப்பதில்லை. கைத்தறி, விசைத்தறி, நெசவாலைகளில் துணிகளை நெய்கின்றனர். கையால் நூற்கும் கதரால் (குடிசைத் தொழில்) பலருக்கு வீட்டிலேயே வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

இந்தியா ஜப்பானுக்கு நூலை ஏற்றமதி செய்கின்றது. இந்தியாவிலிருந்து நூலாடைகளை அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், நேபாளம், சிங்கப்பூர், இலங்கை, ஆப்பிரிக்க நாடுகள் இறக்குமதி செய்து கொள்கின்றன.

**சணல் தொழிற்சாலை :** சணல் பொருட்களின் உற்பத்தியில் உலகில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. ஏற்றுமதியில் வங்காள தேசத்தினை அடுத்து இந்தியா இரண்டாமிடம் வகிக்கிறது. இந்தியாவில் சுமார் 70 சணல் ஆலைகள் உள்ளன. இவற்றில் பல மேற்கு வங்காளத்தில், ஹுக்ளி நதிக்கரைக்குப் பின்னால் 98கி.மீ நீளம், 3கி.மீ அகல பரப்பில் செயல்படுகின்றன.

### உங்களுக்குத் தெரியுமா?

முதல் சணல் தொழிற்சாலை கொல்கத்தா அருகில் ரிஷ்ராவில் 1859ல் நிறுவினர். 1947ல் நாட்டின் பிரிவினைக்குப் பின்னர் சணல் தொழிற்சாலைகள் இந்தியாவில் இருந்துவிட்டாலும் சணல் உற்பத்தியில் நான்கில் மூன்று பாக இடம் வங்காள தேசத் (ஒரு காலத்தில் கிழக்கு பாகிஸ்தான்)தில் இருந்தன.

இத்தொழிற்சாலைகள் ஹுக்ளி நதிக்கரையில் அமைந்திருப்பதற்கான காரணங்கள் : சணலை உற்பத்தி

SCERT TELANGANA


செய்யும் இடங்கள் அருகில் அமைந்திருத்தல், நீர் வழிகளும் இருத்தல், மேற்கு வங்காளம், அண்டை மாநிலங்களான பீகார், ஒரிசா, உத்திரப் பிரதேசங்களிலிருந்து உழைப்பாளர்கள் குறைந்த ஊதியங்களுக்கு வேலை செய்தல், பெரிய நகரமையமான கொல்கத்தா சணல் ஏற்றுமதிக்கு, வங்கிகள், காப்பீடும், துறைமுகவசதிகளையும் வழங்குகின்றது.

சணல் தொழில் 2.61 லட்சம் உழைப்பாளர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பினை வழங்குகின்றது. மறைமுகமாக கீரைகளை பயிரிடும் 40லட்சம் சிறிய, எளிய விவசாயிகளுக்கு ஆதரவு தருகிறது. மறைமுகமாக மேலும் பலர் இத்தொழிலின் மீது ஆதாரப்பட்டுள்ளனர். சணலுக்குப பதிலாக வேதியியல் முறையில் தயாரிக்கப்பட்ட பொருட்களிலிருந்து சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள போட்டியால் வங்காள தேசம், பிரேசில், பிலிப்பைன்ஸ், எகிப்து, தாய்லாந்து போன்ற சில ஏற்றுமதியாளர்களிடமிருந்து போட்டி போன்ற சவால்களை இத்தொழில் எதிர்கொண்டு வருகின்றது. சணலை பயன்படுத்தி மூட்டையிடுதல் கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும் என்னும் அரசின் முறையால் நாட்டில் இவற்றின் உற்பத்திகளுக்கு தேவை அதிகரிக்கிறது. விற்பனையை உயர்த்திக்கொள்வதற்கு இன்னும் பல விதமான பொருட்களின் தயாரிப்பினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. 2005ல் உற்பத்தி தரத்தை உயர்த்துதல் சணல் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்குமாறு செய்தல், ஹெக்டேருக்கு மகசூலை உயர்த்துதல் போன்ற நோக்கங்களுடன் தேசிய சணல் கொள்கையை வடிவமைத்தனர். அமெரிக்கா, கனடா, ரஷ்யா, ஐக்கிய அரபுக் குடியரசு, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்றவை முக்கிய சந்தைகளாக விளங்குகின்றன. சுற்றுப்புறத்திற்கு தீங்கு விளைவிக்காத, இறுதியில் மறைந்து விடக்கூடிய (இயற்கையுடன் கலந்துவிடக்கூடிய) பொருட்களுக்கு உலக அளவில் முக்கியத்துவம் அதிகரித்ததால் சணல் உற்பத்திப் பொருட்களுக்கு மிகுந்த தேவை ஏற்பட்டுள்ளன.

- சர்க்கரை மற்றும் வெல்லத் தொழிற்சாலைகளை எங்கு நிறுவ வேண்டும்?

### சர்க்கரை தொழிற்சாலை :

உலகின் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா இரண்டாமிடம் வகிக்கின்றது. வெல்லம், கற்கண்டு உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இத்தொழிலுக்குத் தேவையான கச்சாப் பொருட்கள் (கரும்பு) மிக அதிக அளவில் உள்ளன. போக்குவரத்தின் போது கரும்புகளில் உள்ள 'சுக்ரோஸ்' சதவீதம் குறைகிறது. நம் நாட்டில் உத்திரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் 460 சர்க்கரை ஆலைகள் உள்ளன. 60% ஆலைகள் உத்திரப் பிரதேசம், பீகார் மாநிலங்களில் உள்ளன. இத்தொழிலுக்கு ஆண்டின் சில மாதங்கள் மட்டுமே வேலை இருப்பதால் இது கூட்டுறவுத்துறைக்கு ஏற்றதாக உள்ளது. ஏன் என்று விளக்குங்கள்.




படம் 2 : இரும்பு தாதுக்கள் கிடைக்குமிடங்களை வண்ணமிடவும்

அண்மைக் காலத்தில் சர்க்கரைத் தொழிற்சாலைகள் தெற்கு, மேற்கு மாநிலங்களுக்கு குறிப்பாக மகாராஷ்டிரத்திற்கு மாறி அங்கு மையப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் உற்பத்தியாகும் கரும்பில்

SCERT TELANGANA

சுக்ரோஸ் சதவீதம் அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம். வானிலை மிகவும் குளிர்ச்சியாக இருப்பதால் கரும்பு வெட்டப்படும் காலத்தை நீட்டிக்கலாம். அதோடு மட்டுமின்றி, இந்த மாநிலங்களில் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் நன்கு இயங்கிவருகின்றன.

ஆண்டில் சில மாதங்களுக்கு மட்டுமே வேலை இருத்தல், பழைய, திறனற்ற உற்பத்தி முறைகள், கரும்புகளை தொழிற்சாலைக்கு அனுப்புவதில் கால தாமதம், கரும்பின் செக்கைகளின் பயன்களை அதிகரித்தல் போன்றவை இத்தொழில் மேற்கொண்டு வரும் சவால்களாகும்.



*படம் 3: இந்தியாவில் நிலக்கரி கிடைக்கும் இடங்களை வண்ணமிடவும்*

- இந்தியாவில் தலைசரி எஃகு நுகர்வு ஏன் குறைவாக உள்ளது.

## தாதுப் பொருள் சார்ந்த தொழில்கள்

தாதுப் பொருட்கள் மற்றும் உலோகங்களை கச்சாப் பொருட்களாக பயன்படுத்தும் தொழில்களை தாதுப்பொருள் சார்ந்த தொழில்கள் என்பர். தாதுப்பொருட்கள் மீது ஆதாரப்படும் சில தொழில்களின் பெயர்களை எழுது.

இந்திய துணைக் கண்ட புவியியல் அமைப்பையொட்டி தாதுப் பொருட்கள் பல்வேறு பகுதிகளில் கிடைக்கின்றன. இரும்பு, எஃகு ஆலைகளுக்குத் தேவையான தாதுப் பொருட்கள் முக்கியமாக இந்திய தீபகற்பப் பகுதியில் உள்ளன.

எனவே இந்த தாதுப்பொருட்கள் உள்ள இடங்களிலேயே இரும்பு, எஃகு ஆலைகளும் உள்ளன. ஆலைகள் இயங்குவதற்குத் தேவையான எரிபொருள் வளங்களின் மீதும் இத்தொழிற்சாலைகள் ஆதாரப்பட்டுள்ளன. மரபுவழி எரிபொருட்களான நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு போன்றவையும் இதே பகுதிகளில் கிடைப்பதால் இத்தொழிற்சாலைகள் இங்கு அமைக்கப்படுவதற்கு ஒரு காரணமாக விளங்குகின்றன.

இரும்பு எஃகு தொழிற்சாலைகள்: இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் முக்கிய தொழிற்சாலைகள் பிற கணரக, இடைத்தர, எளிய வகை தொழிற்சாலைகள் அனைத்தும் தமக்கு தேவையான இயந்திரங்களுக்கு இவற்றின் மீது ஆதாரப்பட்டுள்ளன. பலவகையான பொறியியல் பொருட்கள், கட்டட அமைப்பு பொருட்கள் பாதுகாப்பு, மருத்துவம், வானொலி, அறிவியல் பொருட்கள், பல்வேறு நுகர்வோர் பொருட்கள் போன்றவற்றிற்கு எஃகு மிகவும் தேவை.

எஃகு உலோகத்தால் தயாரிக்கப்படும் இதுபோன்ற பொருட்களின் பட்டியலைத் தயாரி. எஃகு உற்பத்தி, நுகர்வினை தொடர்ந்து நாட்டின் வளர்ச்சிக்குறியீடாக பயன்படுத்துவர். எஃகு, இரும்பு போன்றவை கனரகத் தொழில்கள் இவற்றிற்குத் தேவையான கச்சாப் பொருட்கள், இவை உற்பத்தி செய்யும் பொருட்கள் அதிகமாக இருப்பதால் போக்குவரத்து செலவுகள் அதிகமாக உள்ளன. இருப்புத் தாது, கற்கரி, நிலக்கரி, சுண்ணாம்புக்கல் சுமாராக 4:2:1 விகிதத்தில் தேவைப்படுகிறது. எஃகு உறுதியாக இருப்பதற்கு சிறிதளவு மாங்கனீசும் தேவைப்படுகிறது. எஃகு தொழிற்சாலைகளை எங்கு


SCERT TELANGANA

நிறுவினால் நன்றாக இருக்கும்? சந்தைகளுக்கும், வினியோகதாரர்களுக்கும் அளிப்பதற்கு நல்ல போக்குவரத்து வசதிகள் இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தற்போது இந்தியா ஆண்டிற்கு 32.8மில்லியன் டன் எஃகு உற்பத்தியுடன் உலகின் கச்சா எஃகு உற்பத்தியாளர்களில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. தேனிரும்பு உற்பத்தியாளர்களில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. பேரளவில் எஃகு உற்பத்தி செய்தபோதிலும் தலைசரி ஆண்டு நுகர்வு 32 கிலோவாகவே உள்ளது.

### அலுமினிய சுத்திகரிப்பு :

இந்திய உலோகத் தொழிற்சாலையில் அலுமினியம் சுத்திகரிப்பு இரண்டாமிடம் வகிக்கிறது. அலுமினியம் லேசானது. துருப்பிடிக்காது. வெப்பத்தை நன்றாகக் கடத்தும். தேவையானபடி வளைந்துக்கொள்ள முடியும். பிற உலோகங்களுடன் இணைக்கும் போது மிகவும் உறுதியாகிறது. இதை விமானங்கள், பாத்திரங்கள், மின்கம்பி தயாரித்தல் போன்றவற்றில் பயன்படுத்துவர். பல்வேறு தொழிற்சாலைகளில் எஃகு, தாமிரம், துத்தநாகம், ஈயம் போன்றவற்றிற்கு மாற்றுப் பொருளாக அலுமினியம் ஆதரவு பெற்றுள்ளது.

இந்தியாவில் எட்டு அலுமினியம் சுத்திகரிப்பு ஆலைகள் உள்ளன. இவை ஒடிசா (நால்கோ, பல்கோ), மேற்கு வங்காளம், கேரளா, உத்திரப்பிரதேசம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உள்ளன. 2004ல் இந்தியா 600 மில்லியன் டன்களுக்கும் மேலாக அலுமினியத்தை உற்பத்தி செய்தது.

அலுமினியம் சுத்திகரிப்பு ஆலையில் பயன்படுத்தும் பாக்சைட் கருஞ்சிவப்பு நிறத்தில் உள்ள கல் ஆகும். இது பேரளவில் தேவைப்படுகிறது. இத்தொழிற்சாலையை அமைப்பதற்கு ஏற்ற இடத்தை தேர்வு செய்வதில் இடைவிடாத மின்சார அளிப்பு, குறைந்த விலைக்கு கச்சாப் பொருட்கள் அளிப்பு ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

### வேதிப் பொருட்கள் தொழிற்சாலை :

இந்தியாவில் வேதிப் பொருட்கள் தொழிற்சாலை வேகமாக வளர்ந்து வருகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியில் சுமார் 3% இத்துறையிலிருந்து வருகின்றது. அளவில் ஆசியாவிலேயே மூன்றாம் இடத்தையும் உலகிலேயே 12வது இடத்தையும் வகிக்கிறது. இதில் கனரக மற்றும் சிறிய தொழிற்சாலைகள் உள்ளன. அங்கக வேதி(Organic), அனங்கக(Inorganic) வேதித்துறைகள் இரண்டும் வேகமாக வளர்ந்து வருகின்றன. தனிம வேதிப்பொருட்களில் கந்தக அமிலம் (வேதி உரங்கள், செயற்கை இழைகள், பிளாஸ்டிக், கோந்து, வண்ணங்கள், அச்சடிப்பு வண்ணங்கள் போன்றவற்றில் பயன்படுத்துவர்), நைட்ரிக் அமிலம், காரங்கள், சோடியச் சாம்பல் (கண்ணாடி, சோப்பு, வெளுப்பான்கள், காகிதம் தயாரிப்பு ஆகியவற்றில் பயன்படுத்துவர்), காஸ்டிக் சோடா முக்கியமானவை. இந்த தொழிற்சாலைகள் நாடெங்கிலும் விரிவாக பரவியுள்ளன. இதன் காரணங்கள் என்ன?

கயிறுகள், செயற்கை ரப்பர், பிளாஸ்டிக், அச்சடிக்கும் வண்ணங்கள், மருந்துகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் பெட்ரோ-ய வேதிப் பொருட்கள் போன்றவை யாவும் அங்கக வேதிப் பொருட்களின் பாகங்களேயாகும். இவை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் அல்லது பெட்ரோ வேதிப் பொருட்கள் தொழிற்சாலைகளின் அருகில் அமைந்திருக்கும்.

வேதிப் பொருள் தொழிற்சாலை உற்பத்திகளை மீண்டும் அந்த தொழிற்சாலையே பேரளவில் பயன்படுத்துகின்றது. முக்கிய வேதிப் பொருட்களை பயன்படுத்தி தொழிற்சாலை, விவசாயத் தேவைகளுக்கு அல்லது நேரடியாக நுகர்வுப் பொருட்களை தயாரிப்பர். உங்களுக்குத் தெரிந்த இதுபோன்ற உற்பத்திகளின் பெயர்களைக் கொண்டு ஒரு பட்டியலை தயாரியுங்கள்.

SCERT TELANGANA

## வேதி உரங்களின் தொழிற்சாலை :

வேதி உரங்களின் தொழிற்சாலை நைட்ரஜன் உரங்கள் (குறிப்பாக யூரியா), பாஸ்பர உரங்கள், அம்மோனியம் பாஸ்பேட் (DAP), நைட்ரஜன் (N), பாஸ்பரம்(P), பெட்டாசியம் (K) ஆகியவை உள்ள கலப்பு உரங்களைச் சுற்றி மையம் கொண்டுள்ளன. இந்தியாவில் வர்த்தக அளவில் பயன்படுத்தக் கூடிய வடிவில் பொட்டாஷ் அல்லது பொட்டாசிய படிவங்கள் இல்லாததால் இதை அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. நைட்ரஜன் உரங்களின் உற்பத்தியில் இந்தியா மூன்றாமிடத்தில் உள்ளது. நைட்ரஜன், நைட்ரஜனுடன் கலவை உரங்கள் தயாரிப்பிற்கு இந்தியாவில் 57 உரத் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் 29 தொழிற்சாலைகள் யூரியாவையும் 9 தொழிற்சாலைகள் துணை உற்பத்தியாக அம்மோனியம் சல்பேட்டையும் உற்பத்தி செய்கின்றன.

மற்ற 68 சிறிய தொழிற்சாலைகள் ஒன்றை சூப்பர் பாஸ்பேட் (SSP) டை உற்பத்தி செய்கின்றன. தற்போது அரசுத் துறையில் 10 உரத்தொழிற்சாலைகள் உள்ளன. குஜராத்திலுள்ள **ஹஜீரா** அருகில் **இந்திய உரக் கழகத்தின்,** கட்டுப்பாட்டின் கூட்டுறவுத் துறையில் ஒரு உரத் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

பசுமைப் புரட்சிக்குப் பிறகு இந்த தொழிற்சாலைகள் நாட்டின் பல்வேறு இடங்களில் விரிவுபடுத்தப்பட்டன. குஜராத், தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், பஞ்சாப், கேரள மாநிலங்களில் வேதி உரங்களில் பாதி அளவு உற்பத்தி செய்யப்படுகிறது.

## சிமெண்ட் தொழிற்சாலை :

வீடுகள், தொழிற்சாலைகள், சாலைகள், பாலங்கள், விமான நிலையங்கள், அணைக்கட்டுகள், வணிக மையங்கள் போன்றவற்றை அமைக்கும் பணிகளுக்கு சிமெண்ட் தேவைப்படுகிறது. இத்தொழிற்சாலைக்கு சுண்ணாம்புக்கல், சிலிகா, அலுமினியம், துத்தநாகம் போன்ற கச்சாப் பொருட்கள் பேரளவில் தேவைப்படுகின்றன. இரயில் போக்குவரத்துடன் இத்தொழிற்சாலைக்கு நிலக்கரி மற்றும் மின்சார அளிப்பும் தேவை.

- சிமெண்ட் உற்பத்தித் தொழிற்சாலைகளை எங்கு அமைத்தால் பொருளாதார ரீதியாக இலாபகரமாக இருக்கும்?
- நாட்டின் பிற மாநிலங்களில் சிமெண்ட் தொழிற்சாலைகள் எங்கு அமைந்துள்ளன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அவற்றின் பெயர்களை தெரிந்துகொள்ளுங்கள்.

முதல் சிமெண்ட் தொழிற்சாலையை 1904ல் சென்னையில் அமைத்தனர். விடுதலைக்குப் பின் இத்தொழிற்சாலை அதிக அளவில் விரிவடைந்தது. 1986ல் விலை, விநியோகங்களின் கட்டுப்பாடுகளை, தளர்த்தல், பிற கொள்கைகளில் சீர்திருத்தங்களால் திறன் செயல்பாடு, தொழில்நுட்ப அறிவு, உற்பத்தி ஆகியவற்றில் இந்த தொழிற்சாலை கனிசமான அளவில் முன்னேற்றம் கண்டது. நம் நாட்டில் 128 பெரிய 332 சிறிய சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ளன.


சிமெண்ட் தரம் உயர்வதால் கிழக்கு ஆசியா, வளைகுடா நாடுகள், ஆப்ரிக்கா, தெற்கு ஆசியா நாடுகளில் நம் நாட்டின் சிமெண்டிற்கு தேவை அதிகரித்தது. நம் நாட்டில் உள்நாட்டுத் தேவையும் அதிகரித்துள்ளது. உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவற்றில் இத்தொழிற்சாலையின் வேலை செய்யும் விதம் நன்றாக உள்ளது. இத்தொழிற்சாலையின்

SCERT TELANGANA

நிலைப்பாட்டிற்கு நாட்டின் போதியளவு தேவை, அளிப்பு இருக்கும்படி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### வாகனங்களின் தொழிற்சாலை

தானியங்கு வாகனங்கள் சரக்குகளையும், பிரயாணிகளுக்கு போக்குவரத்து வசதிகளையும் வழங்குகின்றன. சுமை வண்டிகள், பேருந்துகள், கார்கள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மூன்று சக்கர வாகனங்கள், பல்நோக்கு வாகனங்கள் நம் நாட்டின் பல்வேறு மையங்களில் உற்பத்தியாகின்றன. நாட்டின் தாராளமய பொருளாதாரக் கொள்கைகள் கடைபிடிக்கப்பட்ட பிறகு, புதிய தற்கால மாதிரிகள் வந்துவிட்டதால் சந்தையில் வாகனங்களுக்கு தேவை அதிகரித்துவிட்டது. இதனால் கார்கள், இருசக்கர, மூன்று சக்கர வாகனங்களின் தொழிற்சாலைகளின் வளர்ச்சி நல்லமுறையில் உள்ளது. 15 ஆண்டுகளுக்குள்ளாகவே இத்தொழிற்சாலை நான்கு மடங்கு முன்னேற்றமடைந்தது. வெளிநாட்டு நேரடி முதலீட்டால் புதிய தொழில் நுட்பம் வருகையால் உலகளாவிய அளவில் தொழிற்சாலைகள் இணைந்து இயங்கும் வாகன உற்பத்தி மையங்கள் ஒன்பது, இரண்டு, மூன்று சக்கர வாகன உற்பத்தி மையங்கள் 14ம் உள்ளன. இந்த தொழிற்சாலைகள், டில்லி, குர்காவ், மும்பை, பூனா, சென்னை, கொல்கத்தா, லக்னோ, இந்தூர், ஐதராபாத், ஜெம்ஷெட்பூர், பெங்களூர் போன்ற இடங்களின் சுற்றுப்புறங்களில் உள்ளன.



படம் 5 : இந்திய தொழில் பூங்க நகரங்களை வண்ணமிடவும்

அட்டவணையிலுள்ள கா-யிடங்களை நிரப்புக. உனக்கு தெரியாததை குறித்து ஆசிரியரிடம் கலந்துரையாடு.

| தொழிற்சாலை | அதிகளவில் காணப்படும் மாநிலங்கள் | அம்மாநிலங்களில் அதிகளவில் இருக்க காரணம் |
|---|---|---|
| வேதி தொழிற்சாலை | | |
| உர தொழிற்சாலை | | |
| சிமெண்ட் தொழிற்சாலை | | |
| வாகன தொழிற்சாலை | | |

SCERT TELANGANA

**தகவல் தொழில் நுட்ப அறிவு(IT), மின்னணுப் பொருட்கள் தொழிற்சாலை**

# பாகம் 2

## துவக்க ஆண்டுகளில் அரசாங்கமும் தொழிற்சாலை வளர்ச்சியும்

இந்தியாவில் சில பெரிய தொழிற்சாலைகள் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன. வேறு பல தொழிற்சாலைகள் தனியார் துறையால் நடத்தப்படுகின்றன. இந்தியப் பாராளுமன்றத்தின் கொள்கை முடிவின்படி, இவ்வகையான அரசாங்கத்துறை மற்றும் தனியார்துறை தொழிற்சாலைகள் உற்பத்தி செயலில் ஈடுபட்டு வருகின்றன.


சுதந்திரம் அடைந்த சமயத்தில், இவ்வகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பெரிய தொழிற்சாலைகள் துவங்க பெரும் தொகைகள் முதலீடு செய்ய தேவைப்பட்டதால், அரசாங்கமே அவற்றை நிறுவி, இயக்கியது. தொழிற்சாலைகள் அதிக எண்ணிக்கையில் துவங்கிட, அவற்றிற்கு அடிப்படை உள்ளீடுகள் தேவைபடுகிறது என்பதை நாம் முன்பே அறிந்துள்ளோம். எனவே, அடிப்படை தொழிற்சாலைகளில் அரசாங்கம் முதலீடு செய்து உற்பத்தியில் ஈடுபடுவதால், தனியார் துறை தொழிற்சாலைகளின் விரிவாக்கத்திற்கு துணைபுரியும் என்று கருதபட்டது. மேலும் அடிப்படைத் தொழிற்சாலைகளை நிறுவ அதிக முதலீடு மட்டுமல்ல, நீண்ட காலமும் தேவைப்படுகின்றது. எனவே, தனியார் தொழிற்துறைகள் இத்தொழிற்சாலைகளை நிறுவ விரும்புவதில்லை. எடுத்துக்காட்டாக, மின் உற்பத்தி நிலையத்தை அமைத்திட, ஐந்து முதல் பத்தாண்டுகள் தேவைப்படும். இவ்வகை தொழிற்சாலைகளை அமைத்திடும் பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும்.

- தொழிற்சாலைகளை நிறுவுவதின் அடிப்படை தேவைகள் யாவை?

அதைப்போலவே, அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து தரும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுள்ளது. சாலைமார்கம்,ரயில்மார்கம், ஆகாயமார்கம், குடிநீர் விநியோகம், சாலைகள் அமைத்தல், இயற்கை எரிவாயு உற்பத்தி, கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் போன்றவற்றை நிர்வகித்தல் போன்ற பணிகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

சிறிய தொழிற்சாலைகளுக்கு உதவிடும் வகையில் அரசாங்கம் பல்வேறு சட்டதிட்டங்களை அறிமுகபடுத்தியுள்ளது. பல்வேறு தொழிற்சாலை செயல்பாடுகளை சிறிய தொழிற்சாலைகளில் மட்டும் துவங்க அனுமதிகள் தரப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட வகை துணி உற்பத்தி கைத்தறி தொழிற்சாலைகளால் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. பல்வேறு கைவினை பொருட்களின் உற்பத்தி அல்லது சிறிதளவு உற்பத்தியாக வீடுகளில் மக்களால் செய்யப்படுவன அல்லது பணிமனைகளில் செய்யப்படும் உற்பத்திகளை பெரிய தொழிற்சாலைகளில் செய்திட அனுமதிக்கபடவில்லை.

பெரிய தொழிற்சாலைகள் நிறுவ, அவற்றின் முதலாளிகள் முன் அனுமதி மற்றும் உரிமம் பெற வேண்டும் என்பது போன்ற சட்டங்களை அரசாங்கம் இயற்றியது.



SCERT TELANGANA

## நடைமுறையில் உள்ள பிரச்சனைகள்

காலப்போக்கில், இந்த தொழிற்சாலை கொள்கைகளின் பல அம்சங்கள் தொழிற்துறை வளர்ச்சிக்கு தடையாகிவிட்டன. ஒரு தொழிற்சாலையை நிறுவ விருப்பமுடையவர், பல்வேறு நடைமுறைகளை பின்பற்றி, அரசாங்கத்திடம் இருந்து அனுமதி பெறுவதற்கு, பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. விண்ணப்ப மனுவை பரிசீலிப்பதில் தாமதம் போன்ற நிர்வாகத்தடைகள் காரணமாக, லஞ்சம் போன்ற தவறான செயல்கள் அதிகரித்தது.

தொழிற்சாலை துவங்க தேவையான உரிமம் வழங்குவதில், அதிகாரத்தை தவறாக பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரமாக பல நடந்தன. மிகவும் திறமை வாய்ந்த தொழிலதிபர்களுக்கு எல்லா சமயங்களிலும் உரிமங்கள் தரப்படவில்லை. தொழிற்சாலைகளின் உரிமம் வழங்க தேர்ந்தெடுப்பதில் அரசியல் தொடர்புகள் மற்றும் பொருளாதார ரீதியாக சக்தி வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரும் பாரபட்ச போக்கு இருந்தது. இவ்வாறாக பெரிய செல்வந்தர்கள் மற்றும் செல்வாக்கு படைத்தவர்கள் ஒன்றல்ல, பல்வேறு தொழிற்சாலை உரிமங்களை கைப்பற்றிக் கொண்டனர். இவ்வாறு பெற்றவற்றில் மிகவும் வேறுபட்ட சம்பந்தமில்லாத பொருட்களின் உற்பத்திக்கான உரிமங்களாக இருந்தன. எடுத்தக்காட்டாக துணி தயாரிப்பு தொழிற்சாலை உரிமையாளர் சிமெண்ட் தொழிற்சாலைக்கான உரிமம் பெற்று, சிமெண்ட் தொழிற்சாலை தொடங்குவர். சிமெண்ட் தயாரிப்பு துறையில் அவருடைய நிறுவனத்திற்கு போதிய சிறப்பு திறன் இல்லாவிட்டாலும், உரிமம் பெறமுடிந்தது. இந்தியாவில் இருந்த தொழிற்சாலை குடும்பங்கள் 1970 மற்றும் 1980களில் ஏறக்குறைய எல்லாவிதமான பெரிய தொழிற்சாலை பொருட்களை தயாரிக்கும் உரிமங்களை பெற்றன. புதிய தொழில் முனைவோர்கள் சிலர் மட்டுமே தொழிற்சாலை துவங்கும் உரிமம் பெற முடிந்தது.

ஆகையால், தொழிற்சாலை உற்பத்தியில் முதலீடு செய்ய விருப்பமும், துணிவும், மிகவும் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் தயாராக இருந்த புதிய தொழில்முனைவோர். அரசாங்கம் சில பொருட்களின் விலைகள் மீது கட்டுபாடுவிதித்தபோது, அவற்றின் உற்பத்தியாளர்கள் பொருட்களின் விலைகள் மீது விதித்த கட்டுபாடுகளால், அவற்றின் உற்பத்தி குறைந்து பற்றாக்குறையை ஏற்படுத்தியது. எடுத்துக்காட்டாக : ஸ்கூட்டர் வாங்க விரும்புபவர், அதற்காக பெயரை பதிவு செய்து, பல ஆண்டுகள் காத்திருந்து பெற வேண்டியிருந்தது. ஸ்கூட்டருக்கான சந்தை தேவை எப்பொழுதும் அதிகமாகவும். அளிப்பு குறைவாகவும் இருந்தது. இப்படிப்பட்ட, பறறாக்குறை முக்கிய அடிப்படை பொருட்களான நிலக்கரி மற்றும் சிமெண்ட் போன்றவற்றிலும் பொதுவாக காணப்பட்டது. இதனால் இதர பொருட்களின் உற்பத்தியிலும் அதிக தாமதம் ஏற்பட்டது. பொருட்களின் பற்றாக்குறைக்கு, அரசாங்கத்தின் உரிமம் வழங்கும் கொள்கை மற்றும் தொழிற்சாலைகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் காரணம் என்று குறை கூறப்பட்டது. இவ்வகையான கட்டுபாடுகள் நீக்கப்பட்டால் தான், பொருட்களின் உற்பத்தி அதிகரித்து பற்றாகுறை நீங்கும் என்று தொழிலதிபர்கள் முறையிட்டனர்.சிறிய உற்பத்தியாளர்களை பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகளும் சிறிதளவே சாதகமாக பலனை தந்தன. பெரிய தொழிற்சாலை உற்பத்தியாளர்கள், மறைமுகமாக சிறு தொழிலதிபர்கள் என்ற பெயரில், சிறிய தொழில் துறைக்கு ஒதுக்கப்பட்ட உற்பத்திகளில் ஈடுபட்டனர். அதிக பலனை பெற்றனர்.

இந்த தொழிற்சாலை துறையில் காணப்படும் பொதுவான மற்றொரு பிரச்சனை சில பொருட்களின் தரக்குறைபாடு, எடுத்துக்காட்டாக, இந்தியாவில் மிகவும் உயர்ந்ததரமான கார் என்று தயாரிக்கப்பபடட கார்களை காட்டிலும், உலகின் வேறு நாடுகளில் தயாரிக்கப்பட்டவை உயர்ந்த தரமாகவும், மலிவான விலையிலும் கிடைத்தன. இந்திய தொழில் துறையிலுள்ள பல்வேறு உற்பத்தியாளர்களிடையே போட்டியின்மையும், பொருட்களின் தரக்குறைபாட்டிற்கு மற்றொரு காரணம் என்றும் கருதப்படுகிறது. தனியார்

SCERT TELANGANA

உற்பத்தியாளர்கள் நடத்திடும் தொழிற்சாலைகளிடையேயும், அரசாங்கத்தின் கட்டுபாடுகளால் குறைந்த அளவே போட்டித்தன்மை காணப்பட்டது. புதிய தொழிற்சாலைகள் நிறுவவும், புதிய இயந்திரங்கள் வாங்கவும், தொழிற்சாலைப்பொருட்களை இறக்குமதி, ஏற்றுமதி செய்யவும் (இயந்திரங்கள் மற்றும் கச்சாப்பொருட்கள்), கட்டுபாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. மேற்குறிப்பிட்ட செயல்களை செய்திட தனியார் துறைகள், அரசாங்கம் அனுமதிதரும் உரிமங்களை பெற வேண்டியிருந்தது. முக்கியமான தொழிற்சாலை பொருட்களின் விலைகள் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டன. அவற்றின் உற்பத்தியாளர்கள், அரசாங்கம் குறிப்பிட்ட விலைகளில் மட்டும் தான் விற்பனை செய்ய வேண்டியிருந்தது. பலருடைய கருத்துப்படி, அரசாங்க கட்டுபாடுகளால் இந்திய தொழிற்துறை, விரைவாக நவீன மயமாக முடியவில்லை. மேலும் அதிக செலவு செய்து பொருட்களை உற்பத்தி செய்து கொண்டிருந்தது எனவும் தொழில் நுட்ப மேம்பாட்டை அடையவில்லை என்றும் கூறப்பட்டது.

அரசுத்துறை நிர்வகித்து வந்த தொழிற்சாலைகளின் விஷயத்தில், ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட நிதியை ஒதுக்கி, உற்பத்தி செயலில் ஈடுபடசெய்தது. நீண்ட காலத்திற்கு பிறகு, இத்தொழிற்சாலைகள், சுதந்திரமாக இயங்கி, அரசாங்கத்திற்கு வருவாயை ஈட்டித் தரும் என எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், இத்தொழிற்சாலைகள் தொடர்ந்து, அரசாங்கத்தின் உதவியை சார்ந்திருந்தன. இவற்றை நடத்துவதிலும் அரசின் தலையீடு இருந்து வந்தது. அவற்றின் செயல்பாடுக்ள எதிர்பார்த்ததை விட மிகவும் குறைவாகவே இருந்தன.

## தொழிற்சாலைகளுக்கான புதிய கொள்கை

1990ஆம் ஆண்டில், நமது இந்திய அரசாங்கம், அதுவரை நடைமுறையில் இருந்த தொழிற் கொள்கையை மாற்றியமைத்திட பரிசீலிக்கத் தொடங்கியது. தொழிற்சாலைகளுக்கான புதிய கொள்கை அறிவிக்கப்பட்டது. அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்த பல்வேறு உற்பத்தி செயல்பாடுகளில் தனியார் துறை தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன.

வெளிநாடுகளில் இருந்து, தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களை இறக்குமதி செய்திட வழிவகுக்கும் அளவிற்கு அரசாங்கம் சட்டங்களை தளர்த்தியது. பல்வேறு அரசாங்க விதிமுறைகள் எளிமையாக்கப்பட்டன. புதிய தொழில் முனைவோருக்கும், மொத்தத்தில் தொழிற்சாலை செயல்பாடுகளுக்கும், ஊக்கமளிக்கப்பட்டன.

அரசாங்கத்துறையால் நடத்தப்பட்ட தொழிற்சாலைகளின் திறனை மேம்படுத்த, அரசாங்கம் சில தொழிற்சாலைகளை விற்பனை செய்தது. பொதுத் துறை தொழிற்சாலைகளுக்கு, அரசு அளித்து வந்த நிதியுதவியையும் குறைத்தது. இத்தொழிற்சாலைகள் அரசாங்கத்தின் தலையீடு இன்றி, முடிவுகள் எடுக்கவும் அனுமதிக்கப்பட்டன.


வெளிநாடுகளைச்சேர்ந்த தனியார் அல்லது அரசுத்துறை தொழில்நிறுவனங்கள், இந்தியாவில் தொழிற்சாலைகள் நிறுவிட ஊக்கமளிக்கப்பட்டது. அவ்வாறு செய்வதால் புதிய தொழில் நுட்பங்கள் பொதுவானதாகி, அதிகமான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, நாட்டிலிருந்து அயல் நாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.


## தொழிமயமாக்கல் கொள்கைகளின் விளைவு

தற்போது இந்தியாவில் 2 லட்சம் பெரிய தொழிற்சாலைகள் அமைப்புச்சார்ந்தத் துறையின் கீழும் 3 கோடி சிறிய தொழிற்சாலைகள் அமைப்புச்சாராத் துறையின் கீழும் இயங்கி வருகின்றன. இப்பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகள், 460 மில்லியன் தொழிலாளர்களுக்கு, அதாவது ஐந்தில் ஒரு பங்கு மக்களுக்கு, வேலை வாய்ப்புகளை கொடுத்து வருகின்றன.

SCERT TELANGANA

கீழ்கண்ட வட்டப்படங்களை கவனித்துப் பாருங்கள். இவை விவசாயம் தொழிற்துறை மற்றும் சேவைத் துறை போன்ற மூன்று பொருளாதார செயல்பாடுகளில் உள்ள வேலை வாய்ப்புகளை காட்டுகின்றன.




புதிய தொழிற் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் ஏற்பட்ட தொழில் துறையில் ஒரு முக்கியமான மேம்பாடு என்னவென்றால், சிறிய தொழிற்சாலைகளின் பங்கு குறைந்தது. பெரிய தொழிற்சாலைகள் தோன்றி வளர்ச்சி அடைந்து ஆலைகளை சார்ந்த பொருட்களின் உற்பத்தி அதிகரித்தது.


இந்தியாவின் தொழில் கொள்கைகளின் மற்றொரு முக்கிய நோக்கம் தொழிற்சாலை செயல்களில், வேலை வாய்ப்புகளை உருவாக்குதலாகும். ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டின், முக்கிய குறிப்பானாக, தொழிற்சாலை செயல்களில் ஈடுபடும் மக்களின் விகிதாச்சாரத்தின் அதிகரிப்பும் கருதப்படுகிறது. தொழிற்சாலை செயல்களை ஒழுங்குபடுத்த, பல சட்டங்கள் இந்தியாவில் இயற்றப்பட்டன. இவற்றின்படி ஊழியர்களுக்கு மேம்பட்ட ஊதியம், வேலை செய்யும் இடங்களில் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் மருத்துவ வசதிகள் செய்துதர தொழிற்சாலைகளின் நிர்வாகங்கள் போதுமான ஏற்பாடுகள் செய்தன. புதிய தொழிற்கொள்கைகளால் அதிகமான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, பெரும்பாலான ஊழியர்கள் மேம்பட வழிவகுத்தது.


இந்தியாவை தொழில் மயமாக்க, இந்திய தலைவர்கள் எடுத்துக்கொண்ட முதல் நடவடிக்கை, அடிப்படை தொழிற்சாலைகளை நிறுவியது என்பதை நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அத்தொழிற்சாலைகளை நிறுவியதால், அவ்வகை பொருட்களின் உற்பத்தி அதிகரித்தது. கீழ்கண்ட படங்களை கவனித்து பாருங்கள்.


## தொழிற்சாலை சார்ந்த பொருட்களின் உற்பத்தி காலப்போக்கில் அதிகரித்தது


**கடந்த அறுபது ஆண்டுகளில் நிலக்கரி, உருக்கு இரும்பு, மற்றும் முக்கியமான** கச்சாப் பொருட்களின் உற்பத்தி பிரம்மாண்டமான அளவில் அதிகரித்தது. இது போன்று பல இடைபட்ட பொருட்கள் மற்றும் நுகர்வோர் பொருட்கள் உற்பத்தியிலும் விளைவை ஏற்படுத்தியது. இந்தியாவில் உருவாக்கப்பட்ட பல்வேறு போக்குவரத்து வாகனங்கள், பம்புசெட்டுகள் போன்றவற்றின் உற்பத்தியை காட்டும் கீழ்காணும் அட்டணையை கவனியுங்கள். ஒவ்வொரு பொருளும், வெவ்வேறான பயன்களை நீங்கள் காணலாம். பட்டியலுக்கு ஏற்ற நான்கு தனித்தனி கோட்டு வரைபடங்களை வரைந்து, ஒவ்வொரு பொருளின் உற்பத்தி.

SCERT TELANGANA




SCERT TELANGANA

ஒரு நாட்டின் வளர்ச்சியில் தொழிற்சாலைகள் மிகவும் அடிப்படையான அம்சங்களாகும். பல்வேறு வகையான பொருட்களின் தயாரிப்பு முறைகள் குறித்து, நீங்கள் ஏழாவது வகுப்பில் படித்தறிந்தவற்றை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். வீடுகள், சிறு தொழில் கூடங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பொருட்களை தயாரிக்கும் முறைகள் குறித்து கவனித்திருப்பீர்கள். இப்பாடத்தில் நாம் தொழிற்சாலைகளின் முக்கியத்துவம் குறித்து பொதுவாகவும், இந்தியாபல வருடங்களாக தொழில் துறையில் எவ்வாறு வளர்ச்சி அடைந்தது என்பதை குறித்தும் படித்தறியப்போகிறோம். அதிகரிப்பால் ஏற்பட்ட விளைவுகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுங்கள்.

அட்டவணை 3 : போக்குவரத்து சாதனங்கள், 1950 முதல் 2011 வரை **செய்யப்பட்ட பம்புசெட்டுகளின் உற்பத்தி**

| ஆண்டு | வர்த்தக வாகனங்கள் (மில்லியன்களில்) | மோட்டார் வாகனங்கள் (மில்லியன்களில்) | பம்புசெட்டுகள் (மின்சாரத்தால் இயங்குவன) (மில்லியன்களில்) | டிராக்டர்கள் (மில்லியன்களில்) |
|---|---|---|---|---|
| 1950-51 | 9 | - | 35 | - |
| 1960-61 | 28 | 1 | 105 | - |
| 1970-71 | 41 | 97 | 259 | - |
| 1980-81 | 72 | 447 | 431 | 71 |
| 1990-91 | 146 | 1843 | 19 | 142 |
| 2000-01 | 152 | 3756 | 482 | 284 |
| 2010-11 | 753 | 10527 | 3139 | 465 |

## சுற்றுப்புறப் பிரச்சனைகள், அதிகரிக்கும் மாசு:

தொழிற்சாலைகளில் பொருட்களை உற்பத்தி செய்ய மின்சாரம் வெவ்வேறு வகையான இரசாயனப் பொருட்கள் தேவைப்படுகின்றன. பொருட்களை உற்பத்தி செய்யும் போது இத்தொழிற்சாலைகள் பல்வேறு வகையான கழிவுகளை வெளியேற்றுகின்றன. அதைச் சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகளில் இவை மாசு ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றன. அதுப்போன்ற ஒரு எடுத்துக்காட்டை நமது உயிரிய-ல் பத்தாம் பாடத்தில் கற்ப்போம்.

1. பல்வேறு பொருட்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் கச்சாப் பொருட்களையும், உற்பத்தியை அதிகரிக்க உதவும் பொருட்களின் எடுத்துக்காட்டுகளையும் குறிப்பிட்டு சொல்ல முடியுமா?
2. துணி உற்பத்தியில் கடந்த முப்பது ஆண்டுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது? இதன் விளைவு என்ன? உங்கள் சுற்றுப்புறங்களில் உள்ள மக்களோடு இதுகுறித்து கலந்துரையாடுக.
3. சிமெண்ட் மற்றும் உருக்குஇரும்பு உற்பத்தியை காட்டும் படத்தை கவனித்து, 1980-81 முதல் தற்போது வரை ஏற்பட்ட அதிகரிப்பை காட்டும் அட்டவணையை உருவாக்கி, உற்பத்தி அதிகரிப்பால் உருவான சில சாதகமான மற்றும் எதிர்மாறான விளைவுகள் குறித்து விவாதியுங்கள்.



SCERT TELANGANA

## முக்கியச் சொற்கள்

1. குடியேற்ற விதிகள்  2. வெளிநாட்டு பரிமாற்றம்  3. நுகர்வுப் பொருட்கள்
4. கட்டமைப்பு வசதிகள்  5. அடிப்படை பொருள் தொழிற்சாலைகள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. அரசாங்கம் அடிப்படை பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அமைத்திடும் பொறுப்பை ஏன் ஏற்றுக்கொண்டது?(AS1)
2. தொழிற்சாலைகள் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் ஏன் அமைந்துள்ளன?(AS1)
3. அடிப்படை பொருட்களின் தொழிற்சாலைகள் என்றால் என்ன? நுகர்வோர் பொருள் தொழிற்சாலைகளில் இருந்து அடிப்படை பொருள் தொழிற்சாலைகள் எவ்வாறு வேறுபட்டவை?(AS1)
4. தாதுப்பொருள் வளங்கள் காணப்படும் நகரங்கள் அல்லது பகுதிகளின் பட்டியலை தயாரிக்கவும்.(AS1)


| வ.எண் | தொழிற்துறை/ தொழிற்சாலை | இத்தாதுக்கள்/ கச்சாபொருட்கள் கிடைத்திடும் நகரங்கள்/ பகுதிகள் | இப்பகுதியில் நிறுவ தகுந்த தொழிற்சாலைகள் பட்டியலிடுக |
|---|---|---|---|
| 1 | இரும்புத்தாது | | |
| 2 | நிலக்கரி | | |
| 3 | சணல் | | |
| 4 | எண்ணெய் | | |
| 5 | இயற்கை வாயு | | |
| 6 | காடுகள் | | |
| 7 | மாங்கனீஸ் | | |
| 8 | பாக்ஸைட் | | |

5. இதற்கு முன் அரசுத்துறைகளில் மட்டுமே இயங்கி வந்த தொழிற்சாலைகளுடன் 1990களில் தனியார் துறை தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம் ஏன் அனுமதி வழங்கியது(AS1)
6. தொழில் வளர்ச்சி வேலைவாய்ப்பின் தலைமுறையின் மீது ஏற்படுத்தும் தாக்கம் என்ன?(AS4)
7. தொழில் வளர்ச்சி சுற்றுச்சுழல் பிரச்சனைகளை அதிகரிக்கிறது, எவ்வாறு என விவாதி.
8. சுற்றுப்புறம் மாசடைவதைத் தடுக்க சில முழக்கங்களை எழுது.(AS6)
9. பக்கம் 82ல் உள்ள இரண்டாவது பத்தியைப் படித்து அதன் மீது உன் கருத்தினை தெரிவிக்கவும்.(AS2)
10. பக்கம் 96ல் உள்ள இந்திய வரைபடத்தை உற்றுநோக்கி இரும்பு எஃகு தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்களை இந்தியப்புறவரிப் படத்தில் குறிக்கவும்.(AS5)

## செயல் திட்டம்

உங்கள் சுற்றுப்புறப் பகுதிகளிலுள்ள விவசாய ஆதார தொழிற்சாலை ஒன்றையும், கனிம ஆதார தொழிற்சாலை ஒன்றையும் தேர்ந்தெடுத்துக் கொள்.
(i) அவற்றில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் யாவை?
(ii) உற்பத்திக்கு தேவையான மற்ற உற்பத்திக் காரணிகளில் எவற்றிற்கு போக்குவரத்து செலவு தேவைப்படுகிறது?
(iii) இத்தகைய நடைமுறைகள் சுற்றுப்புற விதிகளை பின்பற்றுகின்றனவா?

SCERT TELANGANA







SCERT TELANGANA




SCERT TELANGANA




SCERT TELANGANA



SCERT TELANGANA

பாடம்

8

# இந்தியாவில் சேவை செயற்பாடுகள்

முந்தைய பாடங்களில் உற்பத்தி செயற்பாடுகள் இரண்டினை, அதாவது விவசாயம் மற்றும் தொழில் துறை குறித்து நீங்கள் கற்றீர்கள். சேவை செயற்பாடுகள் இன்னொரு பெரிய அரங்கத்தை உண்டாக்கியுள்ளது. சேவை செயற்பாடு என்பது என்ன? இந்தியாவில் சேவை செயற்பாடுகளின் தன்மை யாது? அவைகள் நாட்டிற்கு எந்த வகைகளில் முக்கியமானவை? மேலும் அதனால் நாம் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

## சேவை செயற்பாடு என்பது என்ன?

1. சரோஜினி என்பவர் மருத்தவமனையில் பணிபுரியும் ஒரு மருத்துவர். அவர் வார்டுகளை சுற்றிவந்து, நோயாளிகளை பரிசோதித்து, மருந்துகளை அளித்து, அவர்களின் முன்னேற்றத்தை சீராய்வு செய்து வருகிறார். உண்மையில் டாக்டர் சரோஜினி அவர்கள் எதை உற்பத்தி செய்கிறார்? பொருட்கள் என்ற வகையில் பார்த்தால் எதுவிமில்லை. சேவை என்ற வகையில், அவர் நோயாளிகள் குணமடையவும், நல்ல ஆராக்கியத்தை அடையவும் உதவிபுரிகிறார்.
2. சௌந்தர்யா என்பவர் மளிகைப்பொருட்களை விற்கிறார். அவருடைய வீட்டின் முன்பகுதியில் இக்கடை அமைந்துள்ளது. தனது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி வைத்தபிறகு அவர் இக்கடையைத் திறந்து இரவு வரை அதை நிர்வகிக்கிறார். நகரிலுள்ள மொத்த விற்பனைக் கடைகளிலிருந்து மளிகைப் பொருட்களை வாங்கி வருவதற்கு அந்த அம்மையாருக்கு அவர் கணவர் உதவிபுரிகிறார். வியாபாரி என்ற முறையில் பொருட்கள் நுகர்வோரை சென்றடைவதற்கான வேலையை அல்லது சேவையை அந்த அம்மையார் செய்கிறார்.
3. ரமேஷ் என்பவர் ஒரு வியாபார நிறுவனத்தில் கணக்காளராக இருக்கிறார். கணக்கை தணிக்கைச் செய்வதும், கொடுக்கல் வாங்கல்களை சரிபார்ப்பதும், கணக்குடன் ரசீதுகள் ஒத்துபோகின்றதா என்பதை உறுதி செய்வதும் அவருடைய வேலை. கணக்குகளை எழுதுவதும், நிர்வகிப்பதும் ஒரு சேவை அல்லது வேலையாகும். இவற்றையே எல்லா வியாபார நிறுவனங்களும் வேண்டுகின்றன.
4. சம்பத் என்பவர் ஒரு சிறிய வேனை வைத்திருக்கிறார். ஒவ்வொரு காலைப் பொழுதும் அவர் மீன் மார்க்கெட்டுக்குச் செல்கிறார். பல பெண்கள் மீன் மார்க்கெட்டிலிருந்து மீனை வாங்கிக்கொண்டு தங்களுடைய இருப்பிடங்களுக்கு செல்வதற்காக சம்பத்தின் சிறிய வேனை பயன்படுத்திக் கொள்கின்றனர். அவர் மீனை சந்தையிலிருந்து எடுத்துச் செல்ல சிறியத் தொகையை வசூலிக்கிறார்.

   சரோஜினி, சௌந்தர்யா, இரமேஷ், சம்பத் ஆகியோர் சேவை செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடைய செயல்பாடானது விவசாயிகள், விவசாயக் கூலியாட்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள் ஆகியவர்களிடமிருந்து வேறுபட்டது. (6ஆம் வகுப்பு புத்தகத்தில் வெங்கடாபுரம் என்ற பாடம், 7ஆம் வகுப்பு புத்தகத்தில் காகித ஆலை மற்றும் தொழிற்சாலை பணியாளர்கள் என்ற பாடம் ஆகியவற்றை தொடர்புபடுத்திக்கொள்)

இவர்கள் நெல், துணி போன்ற தொட்டுணரக்கூடிய பொருட்களை தயாரிப்பவர்கள் அல்ல. மக்களுக்கும், வியாபாரத்திற்கும் தேவைப்படும் பிரத்யேகமான சேவை என்ற வடிவில் அவர்கள் வேலை செய்கின்றனர். சேவை என்பது இங்கு வேலையின் தன்மையைக் குறிக்கிறது. ஒரு பொருளை உற்பத்தி செய்தல் என்பதினின்று இது வித்தியாசமானது அல்லது வேறுபட்டது. அன்பு மற்றும் பக்தியின் காரணமாக அல்லது இலவசமாக செய்யப்படும் வேலை என்ற பொருளில் சேவை என்பது இங்கு குறிப்பிடப்படவில்லை. மேற்கூறிய அனைத்து மக்களும் இத்தகைய வேலை மூலம் ஈட்டுகின்றனர். இதுவே அவர்களுடைய ஜீவாதாரம் ஆகும்.

SCERT TELANGANA

வேளாண்மை மற்றும் தொழிற்சாலை செயற்பாடுகளுக்கு சேவை செயற்பாடுகள் தேவைப்படுகின்றன. மாட்டுவண்டிகள், சரக்கு வண்டிகள் மற்றும் பேருந்துகள் போன்றவை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்லாவிட்டால் நெல், காய்கறிகள் போன்றவை என்னவாகும்? சிமெண்ட்டு பைகளை தொழிற்சாலைகளிலிருந்து நகரங்களிலுள்ள விற்பனைக் கூடங்களுக்கு எடுத்துச் செல்ல ரயில் போக்குவரத்து இல்லையாயின் ஒருவன் கட்டிடங்களை எவ்வாறு கட்டமுடியும்? இப்பொருட்கள் விற்பனையாகும் இடங்களை சென்றடைந்தாலும், இவற்றை வாங்கி அப்படியே நேரடியாக நுகர்வோருக்கோ அல்லது அரிசி ஆலை, எண்ணெய் ஆலை போன்ற இதர உற்பத்தியாளர்களுக்கோ விற்கக் கூடிய மக்கள் அங்கே இருக்கவேண்டும். இதன் பொருள் வணிகச் செயல்பாடு ஆகும். மேலும் ஒரு முக்கிய அங்கமான சேவை செயற்பாடுகளை உருவாக்குகிறது என்பதாகும்.

வேளாண்மையில் அல்லது தொழிற்சாலையில் உற்பத்தியாதல் போல சேவை செயல்பாடுகள் பொருள் எதையும் உற்பத்தி செய்வதில்லை. அவை சிறப்பு வகையான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. அச்செயற்பாடுகள் வேளாண்மைக்கும் தொழிற்சாலைக்கும் உதவிபுகின்றன. மேலும் அவை மக்களுக்குத் தேவையான பெரும் சேவையை அளிக்கின்றன. இன்னொரு எடுத்துக்காட்டு, மக்களுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் தேவைப்படுகின்ற வங்கி மற்றும் நிதிநிறுவனங்கள் சார்ந்த சேவை செயற்பாடுகள் ஆகும். நீங்கள் இதைக்குறித்து எட்டாம் வகுப்பு பாடத்தில் படித்துள்ளீர்கள் (பணமும் வங்கியும்). அதேபோன்று கைப்பேசி, இணையதளம் மற்றும் பல்வேறு வகையான அனைத்து தொலைத் தொடர்புகளும் சேவையை அளிப்பவையே.

மக்கள் செய்துவரும் சேவை செயற்பாடுகளை கீழ்காணும் விதமாக பிரிக்கலாம்:

1. **கல்வி : நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்றவை இந்த வகையைச் சார்ந்தவை. இந்நிறுவனங்களில் பணியாற்றுபவர்களான ஆசிரியர்கள், நிர்வாக அலுவலர்கள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் ஆகியவை சேவைகளை உருவாக்குகின்றன என்பதே இதன் பொருளாகும்.**
2. **சுகாதாரம் மற்றும் மருத்தவ சேவைகள் : (உன் ஆசிரியருடன் கலந்தாலோசித்தப்பின் நிரப்புக):**

   ______________________________________________
3. **வாணிகம் : சுற்றிலும் நாம் காணுகின்ற மொத்த விற்பனை மற்றும் சில்லரை விற்பனை ஆகியவற்றின் பல்வகையான வணிக செயற்பாடுகள் (உன் ஆசிரியரை கலந்தாலோசித்து நிரப்புக)** ________________
4. **பொது நிர்வாகம் : கிராம மற்றும் நகர பஞ்சாயத்துகள், மாநில மற்றும் மத்திய அரசுகள் ஆகியவைகளின் பொது சேவைகள் இவ்வகையைச் சேர்ந்தவை. எடுத்துக்காட்டுகளாக காவல் நிலையங்களில் பணிபுரிவோர், பல்வேறு இதர அரசுத் துறைகளில் பணியாற்றுவோரான கிராம நிர்வாக அதிகாரிகள், வருவாய் ஆய்வாளர்கள், வட்டாட்சியர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், அனைத்துவகை நீதிமன்றங்களிலும் பணிபுரிவோர், உதவியாளர்கள், எழுத்தர்கள், கணக்காளர்கள், தட்டச்சர், கடைநிலை ஊழியர்கள், ஓட்டுனர்கள் முதலானோரின் பணிகள் ஆகும்.**
5. **பாதுகாப்பு : தரைப்படை, கப்பல் படை, விமானப்படை போன்ற அனைத்துப் படைகளிலும் பணிபுரிவோர் மற்றும் அவர்களின் செயற்பாடுகள்.**
6. **நிதிசார்ந்த செயற்பாடுகள் : (வங்கி மற்றும் .................. உன் ஆசிரியரைக் கலந்தாலோசித்தப்பிறகு நிரப்புக)....................**
7. **தனிப்பட்ட சேவைகள் : வீட்டுவேலை, சலவை, சுத்தம் செய்தல், சாயமிடுதல்,**

முடி அலங்காரம், அழகு நிறுவனங்களை நடத்துதல், தையல் கடைகள், புகைப்படம் மற்றும் படக்காட்சி நிறுவனங்கள் ஆகிய பணிகளில் ஈடுபடுவோர்.

8. பல்வகையான இதர செயற்பாடுகள் : பொழுதுபோக்கு மற்றும் தகவல் தொழில்நுட்ப தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள், சினிமா, தொலைக்காட்சித் தொடர்கள் தயாரிப்பு, செய்தித்தாள்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் போன்ற ஊடகங்களில் பணிபுரிவோர் மற்றும் விளம்பரதாரர்கள் போன்றோரும் சேவைகளில் அடங்குவர்.


## சேவைத் துறையின் முக்கியத்துவம் மற்றும் சில சவால்கள்

இந்தியா போன்ற வளரும் நாடுகளில், வளர்ச்சியின் தொடக்கமானது பலநிறுவனங்களை உருவாக்கி நடத்துவதில் சம்பந்தப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு வசதிகளும் மற்றும் இதர சேவைகளும் இதில் அடங்கியுள்ளன. போக்குவரத்து, செய்தித் தொடர்புகள், வங்கிகள் முதலிய சேவைகளின் முக்கியத்துவம் அதிகரிக்க வேண்டுமென்று எதிர்ப்பார்ப்பது இயல்பே.

முன் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வேலை வாய்ப்பு பட்டியல்களை மீண்டும் கவனி. இந்தியாவில் மக்கள் செய்யும் அனைத்து வேலைகளில் நான்கில் ஒரு பங்கினை சேவை செயற்பாடுகள் உருவாக்கித் தந்துள்ளன. சேவை சம்பந்தமான வேலைகள் எவ்வாறு அதிகரிக்கின்றன? மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பொதுவான முன்னேற்றமே இதற்கு ஒரு தகுந்த காரணமாக இருக்க முடியும். மக்கள் அதிக வருவாயை ஈட்டும்போது, அவர்கள் செலவழிக்கும், முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கல்வி, பொழுதுபோக்கு, வெளியிடங்களில் உணவருந்துதல் சுற்றுலா போன்ற சேவை சம்பந்தமான செயற்பாடுகளில் அவர்கள் அதிகம் செலவழிக்க முனைகின்றனர். சேவைத்துறையின் முக்கியத்துவம் அதிகரிப்பதற்கான சில காரணிகளை நாம் ஆராய்வோம்.

## தொழில்நுட்பத்தில் மாறுதல்களும், சேவைகளின் ஏற்றுமதியும்

தொடர்ந்து மாறிவரும் தொழில் நுட்பம் கூட சேவைத் துறையின் உந்து சக்திகளில் ஒன்றாக உள்ளது. 1990 ஆண்டுகளின் துவக்கத்திலிருந்து, தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுவந்துள்ளது, அதைக் குறித்து எட்டாம் வகுப்பில் நீ படித்திருக்கிறாய்.



வெளிமூலாதார வியாபார முறை (Business Process Outsourcing -BPO)யானது புதுவகையான வேலைவாய்ப்புகளை பல இளைஞர்களுக்கு கொண்டுவந்து சேர்த்துள்ளது. இந்த BPO க்கள் இங்குள்ளவர்களை வேலையில் அமர்த்திக்கொண்டு, தொலைத்தொடர்பு பரிமாற்றதைப் பயன்படுத்தி உலகம் முழுவதுமுள்ள மக்களுக்கு சேவையை அளித்துவருகின்றன. பெருநகரங்களில் நிறுவப்பட்டுள்ள

SCERT TELANGANA

பல தகவல்தொழில்நுட்ப வியாபார நிறுவனங்கள் மிகத்தேர்ந்த பொறியாளர்களை வேலையில் அமர்த்திக்கொண்டு, உலகம் முழுவதுமுள்ள வியாபார நிறுவனங்களுக்கு சிறப்புவாய்ந்த மென்பொருள் சேவையை அளித்துவருகின்றன. இந்த வெளிநாட்டு வியாபார நிறுவனங்களிடமிருந்து பொருட்களை உற்பத்தி செய்ய திட்டங்களை அவை பெற்றுக்கொள்கின்றன.

பொழுதுபோக்கு தொழில் துறையானது பல்வேறு பத்திரிக்கை நிறுவனங்களிலும், கேபிள், டெலிவிஷன் சேனல்களிலும் வேலை வாய்ப்புகளை தோற்றுவித்துள்ளது. பெரும்பாலான நகரங்களிலும், பெருநகரங்களிலும் இணையதள விடுதிகளையும் பொதுத் தொலைத் பேசியகங்களையும் சாதாரணமாகக் காணலாம். விளம்பரத் தொழில்துறையும் கூட புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. வங்கி மற்றும் காப்பீட்டுத் துறைகளில் பலபுதிய செயற்பாடுகளைக் காணமுடிகிறது. இவையெல்லாம் சாத்தியமாவதற்குக் காரணம் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமே.

இவையாவற்றுக்கும் தேவை கணினிகள் போன்ற அதிநவீன தொழில்நுட்பக்கருவிகள் மட்டுமின்றி, மிகத்தேர்ந்த வேலையாட்களும் ஆகும். அதாவது சேவைத்துறையில் உற்பத்தியாளர்கள் தேர்ந்த அனுபவமிக்க பயிற்சியாளர்கள் ஒருசிலரை வேலையில் அமர்த்திக்கொண்டு, இயந்திரங்களையும், கருவிகளையும் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். இவ்வாறாக சேவைத்துறை வளர்ந்து வருவதானது நாட்டிலுள்ள வேலையின்மையைக் குறைப்பதற்கு உதவாமல் போகலாம்.

அடுத்துள்ள புகைப்படத்தைக் கவனி. இது பெங்களூரிலுள்ள ஒரு கணிதத் தொடர்பு மையத்தின் காட்சியாகும். லண்டனில் வசிக்கும் ஒருவர் அவரது வங்கிவைப்புகளை அல்லது அவரது மருத்துவப் பதிவுகளைக் குறித்து தகவலறிய விரும்பினால் அவர் அதை ஏதேனும் ஒரு இந்திய நகரத்தில் அமைந்துள்ள அத்தகைய கணிதத் தொடர்பு மையத்திலிருந்து கூட பெற்றுக்கொள்ளலாம்.

எனது பெயர் ராஜ். நான் கடந்த மூன்றாண்டுகளாக மென்பொருள் பொறியாளராக பணிபுரிந்து வருகின்றேன். எனது கம்பெனி தனது சம்பளப்பட்டியலில் 120 பணியாளர்களைக் கொண்டுள்ளது. மற்றும் அது சுமார் ரூ.50 கோடி அளவுக்கு விற்பனையைக் கொண்டுள்ளது. நான்கு நண்பர்கள் சேர்ந்து ஏழு வருடங்களுக்கு முன்பு இதை ஆரம்பித்தனர். பல்வேறு ஆதரவு சேவைகள் மற்றும் ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகளை அளிப்பதற்கு எமது உடன் பணியோற்றுவோர் பலர் வழக்கமாக வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். எனக்கு அதிக சம்பளம் வழங்குகின்றனர். ஆயின் அதே நேரத்தில் நான் அதிக நேரம் வேலை செய்யவேண்டுமென எதிர்ப்பார்கிறார்கள்.

## சேவை செயற்பாடுகளை மற்றவர்களுக்கு மாற்றுதலில் வெளிமூலாதாரம்

தொழிற்துறையில் நிலவும் கடினமான போட்டிகள் மற்றும் தொழில் நுட்பங்களில் மாற்றங்கள் ஆகிய காரணங்களுக்காக பல தொழிற்சாலைகள் தங்களின் செயற்பாடுகளில் ஒரு பெரும் பகுதியை சேவைத்துறைக்கு மாற்றிவிடுகின்றன. அவை அதனை தாமே செய்துக்கொள்ளாமல், வெளியிலிருந்து, அவற்றை செய்துக் கொள்கின்றன. உதாரணமாக, சில ஆண்டுகள் முன்புவரை, ஏதேனும் ஒரு கம்பெனி பாதுகாப்பு பணியாட்களை பணியில் அமர்த்திக் கொள்ள நேர்ந்தால், அவர்களே அப்பணியாட்களை நியமித்துக்கொண்டு அவர்களுடைய ஊதியத்தை கம்பெனியின் சம்பளப் பட்டியிலிருந்து வழங்கி வந்தனர். தற்காலத்தில், செலவைக் குறைப்பதற்காகவும், சமூக பாதுகாப்பு கடமைகளை வெளிப்படுத்தவும் பெரும்பாலான தொழிற்சாலைகள் பாதுகாப்பு காவலர்களை வெளியிலிருந்து நியமிக்கின்றன.



SCERT TELANGANA

உற்பத்தியில் ஈடுபடும் பல கம்பெனிகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, கணக்குபதியுதல், சட்டச்சேவைகள், வாடிக்கையாளர் சேவை, மக்கள் தொடர்பு முதலிய தங்களது வேலைகளை ளெியாட்களுக்கு விட்டுவிடுகின்றன. அவர்களுக்கு மாதச்சம்பளம் தவிர வேறு நிதிச் சலுகைகள் வழங்கப்படாது.

**வேலை வாய்ப்புகள் இன்மை, எனவே குறைந்த வருவாயுடைய வேலையில் சேர்தல்**

பலதொழிற்சாலைகள் குறிப்பாக ஜவுளி ஆலைகள் மற்றும் இதர தொழிற்சாலைகள் மூடப்பட்டதால், இத்தொழிற்சாலைகளில் வேலை செய்தோர் சிறிய விற்பனையாளராகவும், ரிக்ஷா இழுப்பவராகவும் மற்றும் குறைவான வருவாயுடைய இதர தொழில்களைச் செய்பவராகவும் வேலை செய்யும் நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். இத்தொழில் மாற்றம் நகரப்பகுதிகளில் வேலையின்மையைக் கூட உருவாக்கியுள்ளது எனலாம். கிராமப்புறங்களிலிருந்து மக்கள் நகரங்களில் வேலை செய்ய வருகின்றனர். ஆயின் நகர்புறங்களில் போதிய வேலை வாய்ப்புகள் இருப்பதில்லை. எனவே அவர்கள் மீண்டும் விவசாயத்துறைக்கே திரும்ப வேண்டியவர்களாக உள்ளனர். அல்லது சேவைத்துறையில் குறை வருவாயுடைய அனுபவமற்ற வேலை வாய்ப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டியவராயுள்ளனர்.



என் பெயர் அசீம். பத்தாண்டுகளுக்கு முன்பு டில்லிக்கு வந்தேன். பகற்பொழுதில் நான் ரிக்ஷா ஓட்டுகிறேன். இரவில் பாதையோரமாக தங்குகிறேன். ஒவ்வொரு நாள் மாலையிலும் எனது முதலாளிக்கு வாடகையைச் செலுத்த வேண்டும். சைக்கிள் ரிக்ஷாவிலிருந்து கிடைக்கும் எனது வருமானம் நிரந்தரமானது அல்ல. சில நாட்களில் நான் ரூ.150 கூட சம்பாதிப்பேன், மற்ற நாட்களில் 50-70ரூபாய் கிடைப்பதே அரிது. இன்றைய நாட்களில் சைக்கிள் ரிக்ஷாக்களின் எண்ணிக்கையும் பெருகிவருகிறது. மேலும் போட்டியும் அதிகரித்துள்ளது.

- கீழ்கண்ட அட்டவணையானது 1991 மற்றும் 2010 ஆண்டுகளில் பேரளவு தொழில்களில் வெவ்வேறு சேவை செயற்பாடுகளில் பணியாற்றிய தொழிலாளர்களின் எண்ணிக்கையை (இலட்சங்களில்) தெரிவிக்கிறது. அட்டவணையை கவனமாக கவனித்து அதன்கீழே உள்ள வினாக்களுக்கு விடையளி.

| சேவைத்துறை செயற்பாடுகள் | அரசு வேலைகள் | | தனியார் வேலைகள் | |
|---|---|---|---|---|
| | 1991 | 2010 | 1991 | 2010 |
| மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் | 1.5 | 1.7 | 3 | 5.1 |
| போக்குவரத்து, சேமித்துவைத்தல் தகவல் பரிமாற்றம் | 30.3 | 25.3 | 0.5 | 1.7 |
| நிதியம், காப்பீடு, வீடு-நிலம் வாங்குதல், விற்றல் முதலியவை | 11.9 | 14.1 | 2.5 | 15.5 |
| சமுதாய, சமூக மற்றும் தனிப்பட்ட சேவைகள் | 92.3 | 90.5 | 14.9 | 21.4 |



SCERT TELANGANA

- எந்தசேவை செயற்பாடு 2010ல் மிக அதிகமான வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது?
- இத்தனை ஆண்டுகளில் அரசாங்க வேலைகளில் எண்ணிக்கை அதிகரித்ததா அல்லது குறைந்ததா இக்காலக்கட்டத்தில் எந்த வகையான வேலைகளை அரசாங்கம் அதிகம் தோற்றுவித்தது?
- எந்த வகையான வேலைகளை மக்கள் தனியார் சேவை செயற்பாடுகளில் பெற முடிந்தது?
- அரசாங்கம் வழங்கிய வேலைகளுக்கும், தனிப்பட்ட முதலாளிகள் வழங்கிய வேலைகளுக்கும் ஏதேனும் வித்தியாசங்கள் காணப்படுகின்றனவா? விவாதி.

## தகவல் தொழில் நுட்ப வேலைகளின் மன அழுத்தம்



**இன்றைய நாட்களில், மென்பொருள் பொறியாளராக உருவாக வேண்டுமென்பதே இளைஞர்களின் கனவாக உள்ளது. இத்தகைய சேவைத் துறை வேலைகள் குடும்பங்களுக்கு அதிக வருவாயை பெற்றுத் தருகிறது என்றாலும், அதேநேரத்தில் அவர்கள் செய்யும் புதிய வேலைகள் மன அழுத்தத்தையும் கொண்டுவந்து சேர்க்கின்றன. தகவல் தொழில்நுட்ப பணியாளர் ஒருவரின் கீழ்கண்ட கூற்றை படியுங்கள்.**

**தகவல் தொழில் நுட்பத்தால் எனது வாழ்க்கை முறையானது மேம்பட்டது. கல்லூரி நாட்களில் எனக்கு கால்சட்டைகள் இரண்டும் மேல் சட்டைகள் இரண்டும் மட்டுமே இருந்தன. இப்பொழுது எனக்கு எத்தனை சட்டைகள் இருக்கின்றன என்பது எனக்கேத் தெரியாது. நான் எண்ணியதே இல்லை. நான் தரமான ஆடைகளை வாங்கிக் கொள்கிறேன். மற்றும் நான் என்ன செலவுசெய்கிறேன் என்பதைக் கூட நான் கணக்குப் பார்ப்பதில்லை. ஆகவே, நிச்சயமாக மென்பொருள் துறையில் வேலை செய்வதென்பது எனது வாழ்க்கைக்கு வளத்தைக் கூட்டியுள்ளது. முன்பெல்லாம் எனது குடும்பத்தில் பணப்பிரச்சனைகள் அதிகமாய் இருந்தன. இதன் காரணமாகவே எனது சகோதரர்களும், சகோதரிகளும் சரிவர படிக்க இயலவில்லை. இப்பொழுது நான் இப்பிரச்சனையை தீர்த்துவைக்க முடிந்துள்ளது என்பதில் நான் மகிழ்ச்சியுடன் உள்ளேன். ஆயின் இது ஒரு மன அழுத்தம் நிறைந்த, இயந்திர வாழ்க்கை, சமூகத்துடன் கூடி வாழும் வாழ்க்கை என்பது இங்கே இல்லை. எனது சொந்த ஊரில் மக்கள் எப்பொழுதும் உற்றார் உறவினர்களுடன் கூடி இருப்பர். எப்பொழுதும் மனம்திறந்து பேசக்கூடியவர்கள் அங்கே இருந்தனர். ஆனால், இங்கு அவ்வாறில்லை**

சுருங்கக் கூறினால், இந்த பாடத்தில் சேவைச் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தையும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவை எவ்விதம் துணைபுரிகின்றன என்பதையும் நாம் கவனித்தோம். விவசாயத்தில் வேலை செய்யும் மக்களை தொழிற்சாலை மற்றும் சேவை சார்ந்த வேலைகளுக்கு மாற்ற வேண்டியது என்பது இந்தியாவிற்கு தேவைப்படுகின்றது. அதாவது போதிய எண்ணிக்கையிலான வேலைகளை அத்துறைகளில் உருவாக்க வேண்டும். மேன்மேலும் அதிகமான தொழிற்சாலைகள் நிறுவப்படவேண்டும், மற்றும் சாலைகள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தியாக வேண்டும். நல்லதரமான சாலைகள் மற்றும் இதர போக்குவரத்து வசதிகளும், சேமிப்புகிடங்கு வசதிகளும், கடன்பெறும் வசதிகளும் நமக்குத் தேவைப்படுகின்றன. தொழிற்போட்டியை எதிர்க்கொள்ள வேண்டிய பல தொழிற்துறைச்சார்ந்த செயற்பாடுகள் இப்போதெல்லாம் சேவைச் செயற்பாடுகளைச் சார்ந்துநிற்கிறது. இந்தியாவின் புதிய பொருளாதார கொள்கைகள் கூட சேவைச் செயற்பாடுகளின் விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றன.

### முக்கியச் சொற்கள்

1. கணினித்தொடர்பு மையங்கள் 2. சேவை செயற்பாடுகள் 3. வெளி மூலாதாரம்
4. பன்னாட்டு நிறுவனங்கள் 5. தகவல் தொழில் நுட்பம் 6. பொருளாதார மேம்பாடு
7. சில்லரை வர்த்தகம்

SCERT TELANGANA

## உனது கற்றலை மேம்படுத்துக

1. சேவைச்செயற்பாடுகள் என்பதன் பொருள் யாது?
2. ஐந்து சேவைச் செயற்பாடுகளை பட்டியலிடு. எதற்காக அவைகளை விவசாயம் சார்ந்த செயல்களாகவோ அல்லது தொழிற்சார்ந்த செயல்களாகவோ கருதமுடியாது என்பதற்கு உனது காரணங்களைத் தெரிவி.
3. ஒரு நாட்டின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு சேவை செயற்பாடுகள் எவ்வாறு துணைபுரிகின்றன?
4. வேளாண்மை மற்றும் தொழிற்சாலை சார்ந்த செயற்பாடுகள் சேவைகளுடன் எவ்வாறு சம்மந்தப்பட்டுள்ளன?
5. ‘சேவைத்துறையின் வளர்ச்சி நிலையானது. அது இந்தியாவை ஒரு செல்வ செழிப்பான நாடாக உருவாக்கும்’. இந்த கூற்றை நீ ஒப்புக்கொள்கிறாயா? விவரி.
6. சேவைத்துறை செயற்பாடுகள் ஏன் முக்கியத்துவம் பெற்று வருகின்றன?
7. விவசாயமும், தொழிற்துறையும் இல்லாவிடில் சேவைச் செயற்பாடுகள் ஓரளவுக்கு மேல் விரிவடையாது எனும் கூற்றுக்கு காரணத்தை விளக்குக.
8. இந்தியாவில் கல்வி கற்றவர்களிடையே நிலவும் வேலையின்மையை சேவைத்துறை எவ்வாறு குறைக்கும்?
9. உனது பகுதியிலிருந்து கூலித்தொழிலாளர்கள் இடம் பெயர்ந்து செல்கின்றனரா? அவ்வாறு இடம் பெயர்வதற்கான காரணங்களைக் கண்டறி.
10. இந்தப் பாடத்தின் பக்கம் 102ல் உள்ள சில்லரை வணிகத்தில் நேரடி அன்னிய முதலீடு, எனத் தொடங்கும் பத்தியை படித்து, கீழ்காணும் வினாவிற்கு பதிலளி.

    சில்லரை வணிகத்தில் அன்னிய முதலீட்டை அனுமதிப்பதால் சிறு வியாபாரிகளுக்கு ஏற்படும் இழப்புகள் யாவை?
11. பக்கம் 82ல் உள்ள வரைபடத்தை உற்றுநோக்கி இந்திய புறவரிப்படத்தில் தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள் அமைந்துள்ள நகரங்களை குறிக்கவும்.

## செயல் திட்டம்

உங்கள் பகுதியிலுள்ள யாரேனும் ஏழு நபர்களை சந்தித்துப் பேசுங்கள். அவர்கள் எந்தத் துறையில் பணியாற்றுகின்றனர் என்பதைக் கேட்டறியவும். அவர்கள் செய்யும் பணிகளைக் காட்டும் சுவரொட்டியைத் தயாரிக்கவும் அவர்கள் வசிக்கும் இடங்களுக்கும் அவர்களின் பணிக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை தெரிந்துகொள்ளவும்.

| வ.எண் | நாரின் பெயர் | பணியாற்றும் துறை | விவசாயம்/தொழிற்சாலை/சேவைதுறை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

உன்னுடைய வகைப்படுத்தலுக்கான காரணத்தை கூறு.

SCERT TELANGANA




SCERT TELANGANA

பாடம்

9

# நிதி அமைப்பு முறைகளும் கடன்களும்

நீங்கள் எட்டாவது வகுப்பில் பணம் மற்றும் பல்வேறு வகைப்பட்ட வங்கி கணக்குகள் குறித்து படித்தீர்கள். மக்கள் அவர்களுடைய நண்பர்கள், உறவினர்கள், வட்டி வியாபாரிகள், வங்கிகள் போன்றவை மூலம் பணத்தை கடனாக பெறுகின்றனர் என்று நீங்கள் அறிவீர்கள். விவசாய தொழிலாளிகள் அவர்களுடைய முதலாளிகளிடம் இருந்து பணத்தை கடனாக பெறுகின்றனர். சந்தையில் நிலவும் கூலியை விட மிகக்குறைவான கூலிக்கு அவர்களிடம் வேலை செய்கின்றனர். பல்வேறு வகையான கடன் ஏற்பாடுகள், ஒரு நாட்டின் நிதி அமைப்பு முறையின் முக்கியமான அம்சம் ஆகும். இவை மிகவும் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இப்பாடத்தில் நாம் கடன் அமைப்பு முறைகள் குறித்து படித்தறியப்போகிறோம்.

## வங்கிகளின் பண வைப்புகள்

பணத்தின் நவீன வடிவங்களாக காகித பணம் மற்றும் நாணயங்கள் மற்றும் வங்கி வைப்புகள் விளங்குகின்றன. இவை குறித்து நீங்கள் எட்டாவது வகுப்பில் படித்தீர்கள். வங்கிகள் பணத்தை வைப்புகளாக பெற்றுக் கொள்கின்றன. அவற்றிற்கு வட்டிகளையும் வழங்குகின்றன. இவ்வாறாக, மக்களின் பணம் வங்கிகளில் பத்திரமாக இருக்கின்றன. அவை வட்டியையும் சம்பாதிக்கின்றன. மக்கள் தங்கள் பணத்தை, தேவைப்படும் போதெல்லாம் திரும்பப்பெறும் உரிமையை கொண்டிருக்கின்றனர். வங்கிக் கணக்குகளில் வரவு செய்யப்படும் பண வைப்புகள், தேவைப்படும் போதெல்லாம் திரும்ப பெறப்படுவதால், இவற்றை தேவை பணவைப்புகள் என்றழைக்கின்றனர்.

தேவை பணவைப்புகள் மற்றொரு சுவாரசியமான வசதியையும் வழங்குகின்றன. பணத்தின் அடிப்படை குணமான பரிமாற்றத்தின் சாதனமாக, இப்பணவைப்புகள் பயன்படுகின்றன. காசோலை அல்லது மின்னனு சாதனங்கள் மூலம் பணம் வழங்கப்படுகின்றன. ரொக்கமாக பணத்தை தருவதற்கு பதிலாக அவை பயன்படுத்தப்படுகின்றன என்று நீங்கள் படித்தீர்கள். பணத்தை ஒருவர் ரொக்கமாக திரும்ப பெறமுடிதல் அல்லது பணம் செலுத்துதலை காசோலை மூலம் செய்தல் போன்றவற்றால் இப்பண வைப்புகள பணத்தைப் போல் செயல்படுகின்றன. தேவை பண வைப்புகள், செலுத்துத-ன் சாதனமாக பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. நவீனகால பொருளாதாரத்தில் செலாவணி பணத்தோடு, தேவை பண வைப்புகள் செலுத்துகைகளுக்கு பரவலாக பயன்படுத்துவதால், அவை பணத்தை போல் செயலாற்றுகின்றன.

இவ்விஷயத்தில் வங்கிகளின் பங்கு குறித்து நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் வங்கிகளுக்கு இத்தேவை பண வைப்புகள் கிடையாது. நவீன பண வடிவங்களான செலாவணி பணம் மற்றும் பணவைப்புகள் நவீன வங்கி முறையுடன் நெருங்கிய இணைப்பை கொண்டுள்ளன.

நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளின் செயல்முறைகளை, மத்திய அரசின் இந்திய ரிசர்வ் வங்கியால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. அதனால் பணத்தை திரும்ப பெறுதல்களையும், காசோலை மூலம் செய்யப்படும் செலுத்துதலையும், ஏற்று உடனடியாக தரப்படும் என்ற வங்கிகளின் வாக்குறுதி எல்லா சமயங்களிலும் காக்கப்படுகிறது.

மக்கள் தங்களுடைய பணத்தை தேவை பண வைப்புகள் மற்றும் நிலையான வைப்புகளாக சேமித்து


- தேவை பணவைப்புகள் ஏன் பணமாக கருதப்படுகின்றன?
- வங்கியில் சேமிக்கப்படும் பண வைப்புகள் அரசாங்கத்தால் காப்பீடு செய்யப்படுகின்றன என்ற விவரங்களை கண்டறியுங்கள்.
- மக்கள் வங்கிகளில் சேமித்து வைக்கும் நிலையான வைப்புகள் சுலபமாக பணத்தை போல் செயல்படும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? கலந்துரையாடுக

SCERT TELANGANA

வைத்திடும் பணத்திற்கு பாதுகாப்பு தன்மை உள்ளது என்ற நம்பிக்கையை அரசாங்கம் உறுதிபடுத்த வேண்டிய பொறுப்பு கொண்டுள்ளது. பொது மக்கள் நம்பிக்கையை அனைத்து சமயங்களிலும் பராமரிக்க வேண்டும். அவர்களுடைய பணம் பயன்பாட்டுக்கு கிடைப்பதாகவும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளபடுவதாகவும் இருக்க வேண்டும். இதற்காக இந்திய ரிசர்வ் வங்கி, வழி காட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளது. அவை பின்பற்றப்படும் முறைகள் குறித்து ஆய்வு செய்கிறது. இதனால் மக்களுக்கு வங்கிகள் மீதுள்ள நம்பிக்கையை தொடர்ந்து பராமரிக்கிறது. அதுபோலவே, காகிதப்பணம் மற்றும் நாணயங்களின் அளிப்பு போதுமானதாகவும், நல்ல நிலைகளிலும் இருக்குமாறு அரசாங்கம் ஊர்ஜிதப்படுத்த வேண்டும். அவ்வாறு, செய்வதன் மூலம், செலவாணிக்கு தட்டுப்பாடு இருக்காது. அவர்கள் பயன்படுத்தும் காகிதப் பணம் மற்றும் நாணயங்கள் குறித்து எந்தவித பிரச்சனைகளையும், எதிர் கொள்ளத் தேவையில்லை.

## வங்கிகளின் கடன் தரும் செயல்கள்

பொதுமக்களிடம் இருந்து பெறும் பணவைப்புகளை வங்கிகள் என்ன செய்கின்றன? வங்கிகளின் செயல்பாடுகளில் முக்கிய இயங்கு முறைகள் உள்ளன. மக்களிடம் இருந்து பெறப்படும் பண வைப்புகளில் சிறு விகிதாச்சார அளவு பணத்தை மட்டும்




*படம் 9.1 : பணசுழற்சி–வங்கியின் செயல்பாடுகள்*

தங்களிடம் வைத்துக்கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, தற்போது இந்தியாவிலுள்ள வங்கிகள், அவற்றிடம் பண வைப்புகளின் தொகையில் 15% பணமாக வைத்துள்ளன. இப்பணம், வங்கிகளில் பண வைப்புகள் வைத்திருப்போர், பணத்தை திரும்ப பெறவந்தால், அவர்களுக்கு வழங்க முன்னேற்பாடாக வைக்கப்படுகின்றன. பணவைப்பு வைத்திருப்பவர்களில் சிலர் திரும்ப பெற அணுகும் நாட்களில், முன்னேற்பாடாக வைத்திருக்கும் பதினைந்து சதவீதபணத்தில் இருந்து செலுத்திட, வங்கிகள் பயன்படுத்திக்கொள்கின்றன. இவ்வாறுதான், வங்கி முறை துவங்கியது. உலகிலுள்ள எல்லா வங்கிகளும், தங்களிடம் சிறு விகிதாச்சார அளவில் பணத்தை, முன்னேற்பாடாக வைத்திருந்தது, பணத்தை வங்கியில் வைப்பு வைத்திருப்போர், கேட்ட உடனேயே வழங்கி, அதற்காக வழங்கும் வாக்குறுதியை காப்பாற்றி வருகின்றன. வங்கிகள் தங்களுக்கு கிடைக்கும் பண வைப்புகளில் பெரும் பகுதியை கடன்கள் தருவதற்கு பயன்படுத்துகின்றன. பல்வேறு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடன்களின் தேவை பெருமளவில் உள்ளது. இது குறித்து நாம் பின்வரும் பிரிவுகளில் படிக்க போகிறோம். வங்கிகள் அவற்றிடம் சேமிக்கப்படும் பண வைப்புகளை மக்களின் கடன் தேவைகளை தீர்த்து வைக்க பயன்படுத்திக் கொள்கின்றன. இவ்வாறாக, வங்கிகள் அதிகப்படியான பணம் வைத்திருப்போருக்கும் பண வைப்புகள் செய்வோருக்கும் பணத் தேவை உடையோருக்கும் (கடன் பெறுவோருக்கும்) இடையே மத்தியஸ்தர் போல ஒரு பாலமாக செயல்படுகின்றன. வங்கிகள் பணத்தேவை உடையோருக்கு வழங்கும் கடன்களுக்கு வசூலிக்கும் வட்டிவீதம் அதிகமாகவும், பண வைப்புகளுக்காக அவை தந்திடும் வட்டிவீதம் அதைவிட குறைவாகவும் இருக்கின்றன. கடன் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கும் வட்டிக்கும், பண வைப்புகள் செய்வோருக்கு வழங்கும் வட்டிக்கும் இடையே உள்ள வித்தியாசத் தொகை, வங்கிகளின் அடிப்படை வருவாய்க்கு ஆதாரமாகும்.

SCERT TELANGANA

## மக்களுக்கு கடன்கள் ஏன் தேவைப்படுகின்றன?

கடந்த காலத்தோடு ஒப்பிடும் போது, மக்களின் கடன் தேவைகள் அதிகரித்துள்ளன. இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. விவசாயத்திற்கு தேவையான உள்ளீட்டுப் பொருட்கள் விவசாயிகளாலேயே தயாரித்துக் கொள்ளப்பட்டன. நிலத்தை உழுவதற்கு அவர்களின் கால்நடைகளை பயன்படுத்தினர். வயல் வேலைகளுக்கு குடும்ப உறுப்பினர்களே தொழிலாளிகளாக செயல்பட்டனர். விதைகள் மற்றும் உரங்கள் போன்றவற்றை அவர்களின் விவசாய பண்ணைகளில் இருந்து பெற்றனர். நவீன வேளாண்மை செயல்களுக்கு கணிசமான அளவு பணம் தேவைப்படுகிறது. விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் வாங்கவும், நிலத்தை உழுவதற்கும், அறுவடை செய்வதற்கும், கதிரடிக்கவும், வேலையாட்களுக்கு கூலிகள் செலுத்தவும், பணம் தேவைப்படுகிறது. சந்தையில் நுகர்வோர் பொருட்கள் கிடைக்கும் அளவும், நிதி ஏற்பாடுகளும் அதிகரித்து உள்ளதால், பலவகையான கடனுதவி ஏற்பாடுகள் அதிகரித்துள்ளன. அத்தியாவசிய பொருட்களான உணவு தானியங்கள் முதல் பாத்திரங்கள், வீட்டு சாதனங்கள், மேஜை, நாற்காலிகள் வரை கடனுக்கு கிடைக்கின்றன. இவ்வகை பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், அவற்றை வாங்குமாறு மக்களை ஊக்குவிக்கின்றனர். குறிப்பாக நிரந்தர மாத வருவாய் மற்றும் வங்கி கணக்குகள் உடையோரை வாங்கச் செய்து மாத தவணைகளில் செலுத்துமாறு ஏற்பாடு செய்கின்றனர். எடுத்துக்காட்டாக, நீ ஒரு தொலைக்காட்சி பெட்டியை ரூ.20,000க்கு வாங்கினால், துவக்கத்தில் ரூ.5000 செலுத்தி மீதமுள்ள பாக்கி பணத்தை மாதந்தோறும் ஓரிரு ஆண்டுகளில் செலுத்தலாம், மக்கள் பள்ளி அல்லது கல்லூரி கட்டணங்கள் செலுத்த, மருத்துவ சிகிச்சை பெற கடனை வாங்குகின்றனர். கடன் பெறுவதற்கு மிகவும் முக்கியமான காரணம் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக என்று தெரிகிறது.

- வங்கிகளில் பண வைப்புகளை சேமித்து வைத்திருப்போர் அனைவரும் ஒரே சமயத்தில் சென்று பணத்தை திரும்ப தரச் சொல்லி கேட்டால், என்ன நடக்கும்?
- வங்கியில் கடன் வாங்கியவரிடம் பேசுங்கள். கடன் எந்த நோக்கத்திற்காக வாங்கப்பட்டது? வங்கியை எவ்வாறு அணுகினார்? என்பவற்றை கேட்டறியுங்கள்.
- வங்கி மேலாளரை நேர்க்காணல் காணுங்கள். வங்கி என்னென்ன கடன்களை வழங்கியிருக்கிறது? எந்த செயல்களுக்காக கடன் வழங்குவதில்லை? என்பவை குறித்து கேட்டறியுங்கள்.
- மக்கள் தங்கள் பணத்தை, வங்கிகள் தவிர வீட்டு கூட்டுறவு சங்கங்கள், தொழிற்சாலைகள், அஞ்சல் துறையின் சேமிப்பு திட்டங்கள் போன்றவற்றிலும் பண வைப்புகளாக சேமிக்கின்றனர். இவை வங்கியில் சேமித்து வைக்கப்படும் பண வைப்புகளிடம் இருந்து வேறுபட்டவை? என்பதை குறித்து கலந்துரையாடுக.

வணிகம் அதிகரிப்பதால், அவற்றின் கடன் தேவைகளும் அதிகரிக்கின்றன. கணிசமான பணத்தொகை, பல்வேறு மூலாதாரங்கள் வாயிலாக கடன்களாக பெறப்பட்டு முதலீடு செய்யப்படுகின்றன. இதன் முக்கிய நோக்கம், அவர் வட்டியாக செலுத்தும் பணத் தொகையை விட, அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதாகும்.

## இரண்டு வேறுபட்ட கடன் முறைகள்

இது பண்டிகை காலம், இப்போதிலிருந்து இரண்டு மாதங்கள் இருக்கும். அலிஷா ஒரு செருப்பு தயாரிக்கும் தொழில் செய்பவர். நகரத்திலுள்ள ஒரு பெரிய வணிகரிடம் இருந்து 3000 ஜதைகள் செருப்புகள் தயாரிக்கும் பணி ஆணை பெற்றார். அவற்றை ஒரு மாத காலத்தில் வணிகருக்கு பட்டுவாடா செய்ய வேண்டும். இந்த வேலையை குறித்த நாட்களுக்குள் செய்து முடிக்க, கூடுதலாக பணியாட்கள் தைக்கவும், பசை ஒட்டவும், தேவைப்படுகின்றனர். இதற்காக தேவையான கச்சாப் பொருட்களை வாங்க வேண்டியுள்ளது. இத்தயாரிப்புக்கான செலவுகளுக்காக அலிஷா, இரண்டு முறைகளில் கடன் வாங்கினார். கச்சாப்பொருளான தோலை வினியோகம் செய்பவரிடமிருந்து, தேவையான தோலை வினியோகம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கான பணத்தை பிறகு செலுத்துவதாக உறுதியளித்தார். இரண்டாவதாக, நகரத்து பெரிய வணிகரிடம் முன்பணமாக 1000 ஜதைகள் செருப்புகளுக்கான பணத்தை முன்கூட்டியே பெற்றார். பணி ஆணையாக தரப்பட்ட செருப்புகளை தயாரித்து மாத இறுதிக்குள் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்.

SCERT TELANGANA

அலிஷா மாத இறுதிக்குள், மூவாயிரம் ஜதைகள் செருப்புகளை தயாரித்து வணிகரிடம் ஒப்படைத்தார். கணிசமான அளவு லாபம் சம்பாதித்தார். வணிகரிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்தினார்.

நம் அன்றாட வாழ்வின் செயல்பாடுகளில் நடக்கும் அதிக எண்ணிக்கையிலான பரிமாற்றங்களில் கடன்கள் ஏதாவதொரு வடிவில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கடன் எனப்படுவது ஒரு ஒப்பந்தம் போன்றது. இதில் கடன் வழங்குபவர், கடன் வாங்குபவருக்கு பணம் அல்லது பொருட்கள் அல்லது தேவைகளை அளிக்கிறார். அவற்றுக்கான தொகையை பிறகு செலுத்துவதாக கடனாளி வாக்குறுதி தருகிறார். அலிஷா, பணி ஆணையாக பெற்ற செருப்புகளை உற்பத்தி செய்திட செயல் முதலீட்டுக்காக கடன் வாங்கினார். அவர் பெற்ற கடன் தொகை உற்பத்திக்கான செலவுகளை செய்திட பயன்பட்டது. மேலும் குறித்த நேரத்தில் செய்து முடிக்க உதவியது. இதனால் அவருடைய வருவாய் பெருகுகிறது. இச்சூழ்நிலையில் கடன் முக்கியமானதும், சாதகமானதுமான பங்கை வகித்தது.

ஸ்வப்னா, ஒரு சிறு விவசாயி தன்னுடைய மூன்று ஏக்கர் நிலத்தில் வேர்க்கடலை பயிரிடுகிறார். பயிர் செலவுக்காக வட்டி வியாபாரியிடம் கடன் பெறுகிறார். பயிர் அறுவடை நன்றாக இருந்தால், வாங்கிய கடனை திரும்ப செலுத்த முடியும் என்று நம்பியிருந்தார். பயிர் விளைச்சல் நடுவே பயிர் பூச்சிகளால் தாக்குண்டது. பயிர் விளைச்சல் பொய்த்தது, ஸ்வப்னா, விலையுயர்ந்த பூச்சிக் கொல்லி மருந்தை, பூச்சிகளுக்கு தெளித்தாலும், சிறிதளவே மாற்றத்தை கொடுத்தது, ஸ்வப்னா வட்டி வியாபாரியிடம் வாங்கிய கடனை திரும்ப செலுத்த இயலவில்லை. கடன் தொகை ஒரு வருட காலத்தில் அதிகமாகியது. அடுத்த ஆண்டும், ஸ்வப்னா பயிர் விளைச்சல் செய்திட கடன் வாங்கினார். அந்த ஆண்டில் விளைச்சல் சாதாரணமாக இருந்தது. ஆனால், கிடைத்த வருவாய் பழைய கடனை தீர்க்க போதுமானதாக இல்லை. அவர் கடன் வலையில் சிக்கிக் கொண்டார். ஸ்வப்னா, தன் நிலத்தின் ஒரு பகுதியை விற்று, பழைய கடனை அடைக்க வேண்டியதாயிற்று.

கிராமப்புறங்களில், கடனுக்கான தேவை, பயிர் விளைச்சல் செய்வதற்காக உண்டாகிறது. பயிர்களின் உற்பத்திக்காக விதைகள், உரங்கள், பூச்சிகொல்லி மருந்துகள் வாங்கவும், நீருக்காகவும், மின்சாரம், கருவிகளை பழுதுபார்க்கவும் செலவு செய்யப்படுகின்றன. கிராம விவசாயிகள் இந்த உள்ளீட்டு பொருட்களை வாங்கும் காலத்திற்கும், அவர்களுடைய பயிர்களை விற்கும் காலத்திற்கும் இடையே மூன்று அல்லது நான்கு மாத இடைவெளி நீடிக்கிறது. விவசாயிகள் வழக்கமாக பயிர் பருவத்தின் துவக்கத்தில் கடனை பெறுகின்றனர். அறுவடைக்கு பிறகு கடனை திரும்ப செலுத்துகின்றனர். கடனை திரும்ப செலுத்துவது, பயிர் விளைச்சலால் கிடைக்கும் வருவாய் மீது முக்கியமாக சார்ந்துள்ளது.

ஸ்வப்னாவின் விஷயத்தில், பயிர் விளைச்சல் பொய்த்ததால், கடனை திருப்பி செலுத்த

- கீழ்காணும் பட்டியலை நிரப்புக :

| வினாக்கள் | அலிஷா | ஸ்வப்னா |
|---|---|---|
| அவர்களுக்கு கடன் ஏன் தேவைப்பட்டது? | | |
| இவர்கள் எதிர்கொண்ட பிரச்சனை என்ன? | | |
| இவர்களின் செயலில் ஏற்பட்ட வெளிப்பாடு என்ன? | | |

- அலிஷாவிற்கு வணிகர்களிடம் இருந்து தொடர்ந்து பணி ஆணை கிடைத்தால் ஆறு மாதங்கள் கழித்து அவருடைய நிலை எவ்வாறு இருக்கும்?
- ஸ்வப்னாவின் நிலை மிகவும் சிக்கலாக உருவானதற்கான காரணங்கள் யாவை? கீழ்காணும் காரணிகள் குறித்து கலந்துரையாடு (1) பூச்சிக்கொல்லி மருந்துகள் (2) வட்டி வியாபாரிகள் (3) காலநிலை.

SCERT TELANGANA

இயலாமல் போனது. கடனை திருப்பி செலுத்த அவருக்கு சொந்தமான நிலத்தின் ஒரு பகுதியை விற்க வேண்டியிருந்தது. வங்கி கடன் அவளுக்கு உதவி செய்து, வருமானத்தை அதிகரிப்பதற்கு பதிலாக, மோசமான நிலையை ஏற்படுத்தி விட்டது. இது பொதுவாக அழைக்கப்படும் கடன் தொல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகும். இப்படிப்பட்ட கடன் விஷயத்தில், கடன் வாங்கியவர் கடுமையான வறுமை நிலைக்கு தள்ளிவிடப்படுகிறார். இந்நிலையில் இருந்து மீள்வது மிகவும் கடினமானது.

ஒரு சூழ்நிலையில் கடன் பெறுவதால், கடனாளியின் வருவாயைப் பெருக்கி, அவருடைய பொருளாதார நிலையை மேம்படுத்திவிடுகின்றன. மற்றொரு சூழ்நிலையில், பயிர் விளைச்சல் பொய்த்ததால், கடன் சுமை கடனாளியை கடன் தொல்லையில் தள்ளிவிடுகிறது. அவர் தன்னுடைய கடனை திரும்ப செலுத்த, நிலத்தின் ஒருபகுதியை விற்றதை கண்டோம். அவருடைய நிலைமை தெளிவாக முன்பைவிட மோசமானதை காட்டுகிறது. கடன் வாங்குதல் பயனுள்ளதா? அல்லது பயன் இல்லாததா?

- மக்களுக்கு நுகர்வு பொருட்களை வாங்கவும், பல்வேறு சமூக கலாச்சார தேவைகளுக்கும் கடன்கள் தேவைப்படுகின்றன. திருமணங்கள் நடத்திட, மணமகன் மற்றும் மணமகள் குடும்பத்தாருக்கு பெருமளவு செலவாகிறது. எனவே, கடன் வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். உங்கள் பகுதியில் மக்கள் கடன் வாங்குவதற்கான வேறு காரணங்கள் இருக்கின்றன என நீங்கள் கருதுகிறீர்களா? உங்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள மூலம் கண்டறியவும். வகுப்பறையில் அவை குறித்து விவாதிக்கவும்.

## கடன்களின் நிபந்தனைகள்

ஒவ்வொரு கடன் ஒப்பந்தமும், கடன் வாங்குபவர் செலுத்த வேண்டிய வட்டிவீதத்தை குறிப்பிடும். கடன் வாங்கிய அசல் பணமும், வட்டியையும் கடனாளி செலுத்த வேண்டியிருக்கும். கடன் வாங்குபவர் பணத்தை திரும்ப செலுத்தவில்லை என்றால், கடன் வழங்கியவர் அவருடைய சொத்தை அல்லது ஈடுகளை விற்கும் உரிமை பெற்றுள்ளார். அவ்வாறு கிடைக்கும் பணம் கடனுக்கு தரவேண்டிய பணத்திற்கு வரவு செய்யப்படுகிறது.

**ஈடுகள்**

ஈடு என்பது கடன் வாங்குபவருக்கு சொந்தமான நிலம், கட்டிடம், வாகனம், கால்நடைகள், வங்கியில் சேமித்துள்ள வைப்புகள் முதலிய சொத்துகள் ஆகும். இவை கடன் வழங்குபவருக்கு உத்திரவாதமாக தரப்படும். கடன் முழுவதும் திரும்ப செலுத்தும் வரை ஈடாக வைக்கப்பட்டிருக்கும்



படம்9.2 ஈடுகளாக கருதப்படும் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள்

SCERT TELANGANA

நிலத்தின் பத்திரங்கள், வங்கியில் சேமித்துள்ள பண வைப்புகள், உயிரினங்கள், போன்றவை கடன் வாங்க பயன்படுத்தும் பொதுவான ஈடுகளின் எடுத்துகாட்டுகளாகும்.

சிவகாமி என்பவர் ஒரு ஆசிரியை. ஒரு வீடு வாங்கிட, வங்கியிடமிருந்து ஐந்து லட்ச ரூபாயை கடனாக பெற்றார். கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டிவீதம் ஆண்டுக்கு 12% கடனை பத்தாண்டுகளில் மாத தவணைகளில் திரும்பி செலுத்த வேண்டும். அந்த ஆசிரியை, வேலை சம்பந்தபட்ட பதிவேடுகள் மற்றும் ஊதிய சான்றிதழ் போன்றவற்றை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். கடன் அங்கீகாரம் பெறுவதற்கு முன் இவற்றை வங்கிக்கு தரவேண்டும். வங்கி அவருக்கு கடனை அளித்தது. புதியதாய் வாங்கப்பட்ட வீட்டின் உரிமைப் பத்திரங்களை, வங்கி தன்னிடமே வைத்துக்கொண்டது. அவை சிவகாமி முழுக்கடனை, வட்டியுடன் சேர்த்து திரும்ப செலுத்திய பிறகு மட்டுமே ஒப்படைக்கப்படும். வட்டிவீதம், ஈடுகள் மற்றும் பத்திரங்கள் நிரப்பி தருதல் மற்றும் கடனை திரும்ப செலுத்தும் முறை போன்றவை அனைத்தையும் ஒன்று சேர்த்து கடனின் நிபந்தனைகள் என்பர். கடன் நிபந்தனைகள் கணிசமான அளவில் ஒரு கடன் ஏற்பாட்டுக்கும், மற்றொரு கடன் ஏற்பாட்டுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படும். கடன் தருபவர் மற்றும் கடன் வாங்குபவரின் தன்மையை பொறுத்து கடனின் நிபந்தனைகள் மாறுபடும். இதற்கு அடுத்து வரும் பிரிவு, வேறுபட்ட கடன் ஏற்பாடுகளில் உள்ள வேறுபட்ட கடன் நிபந்தனைகள் பற்றி எடுத்துக்காட்டுகளை எடுத்துரைக்கின்றன.

- வட்டி வியாபாரிகள் கடன் தரும்போது ஈடுகளை ஏன் கேட்கின்றனர்?
- ஈடுகளை கேட்பதால் ஏழை மக்களின் கடன் வாங்கும் திறனை எவ்வாறு பாதிக்கிறது?
- அடைப்பில் உள்ளவற்றில் சரியான விடையை தேர்ந்தெடுத்து, கோடிட்ட இடங்களை நிரப்புக:

  கடன் பெறும்போது, கடன் வாங்குபவர்கள் சுலபமான நிபந்தனைகள் குறித்து எதிர்பார்ப்பர். இதன் பொருள் ______ (குறைந்த/அதிகமான) வட்டிவீதம், ______ (சுலபமான/கடினமான) திரும்ப செலுத்துவதற்கான நிபந்தனைகள், ______ (குறைவான/அதிகமான) ஈடுகள் மற்றும் பத்திரங்கள் தேவைப்படுதல்.

## பலவகைப்பட்ட கடன் ஏற்பாடுகள் : கிராமத்தில் ஒரு எடுத்துக்காட்டு

**வாசு ஒரு சிறிய விவசாயி, அவர் தன்னுடைய 1.5 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்திட பணம் தேவைப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக, தன்னுடைய கிராமத்திலுள்ள விவசாய வணிகரிடம் இருந்து கடன் வாங்கி வருகிறார். கடன் தொகைக்கு வருடத்திற்கு 36% வட்டியாகும். பயிர்ப்பருவத்தின் துவக்கத்தில், வணிகர் விவசாய உள்ளீடுகளை கடனாக அளித்திடுவார். அக்கடன் தொகையை, அறுவடைக்கு பின் திரும்ப செலுத்த வேண்டும்.**

**கடன் தொகைக்கான வட்டியுடன், வணிகர் தன்னிடம் கடன் பெறும் விவசாயிகள், அவர்களில் பயிர்தானியங்களை, தன்னிடமே விற்றிட வாக்குறுதியையும் பெறுகிறார். இவ்வாறாக, வணிகர் தான் அளித்த கடன் தொகை உரிய நேரத்தில் செலுத்தப்படுமாறு ஏற்படுத்திக்கொள்கிறார். அறுவடைக்கு பிறகு, தானியங்களின் விலைகள் குறைவாக காணப்படும். வணிகர் அத்தானியங்களை குறைவான விலையில் கொள்முதல் செய்து லாபம் அடைகிறார். அவற்றை இருப்புவைத்து, விலைகள் உயரும் போது விற்பனை செய்கிறார்.**

**அருண் ஒரு விவசாயி. இவருக்கு சொந்தமாக 7 ஏக்கர்கள் நிலம் உள்ளது. விவசாயத்திற்காக வங்கிக் கடனை பெறும் ஒரு சில விவசாயிகளில் இவரும் ஒருவர். இவர் வாங்கும் வங்கிக் கடனுக்கு, ஆண்டுக்கு 10% வட்டி செலுத்த வேண்டும். கடன் தொகை மூன்று ஆண்டுகளுக்குள் எப்போது வேண்டுமானாலும் திரும்ப செலுத்தலாம். அருண் தன்னுடைய பயிர்களின் அறுவடைக்குப்பிறகு, அதில் ஒரு பாகத்தை விற்று, வங்கிக் கடனை திரும்ப செலுத்த திட்டமிட்டுள்ளார். மீதமுள்ள உருளைக்கிழங்குகளை, அருகிலுள்ள நகரில் உள்ள கிடங்குகளில் இருப்பு வைத்திட எண்ணியுள்ளார். குளிர்பான கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதற்கான ரசீதை கொண்டு, புதிய கடனுக்காக விண்ணப்பிக்க உள்ளார். வங்கிகள் தங்களிடம் கடன் பெற்றுள்ள விவசாயிகளுக்கு இவ்வசதியை அளிக்கின்றன.**



SCERT TELANGANA

- மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில், கடன்கள் எந்தெந்த அமைப்புகளிடமிருந்து பெறப்பட்டன என்பதை பட்டியலிடுக.
- முன்பக்கத்தில் குறிப்பிட்டுள்ள கடன்களின் பயன்களை கோடிட்டு காட்டுக.
- அனைவரும் மலிவான வட்டிவீதத்தில் கடனைப் பெற முடியுமா? எவ்வகுப்பு மக்கள் குறைந்த வட்டிக்கு கடனை பெற முடிகிறது?
- சரியான விடைக்கான வாக்கியத்திற்கு குறியிட்டு காட்டுக (✓):

(அ) வருடங்கள் செல்லச்செல்ல, ரமாதேவியின் கடனும்........
- அதிகரிக்கும்.
- நிலையாக அப்படியே இருக்கும்.
- குறையத்தொடங்கும்.

(ஆ) வங்கி கடனை பெற்ற சில நபர்களில் அருண் ஒருவர். இதற்கான ஒரு காரணம்
- அவர் ஒரு கல்விகற்ற நபர்.
- வங்கிகள் ஈடுகளை கோருகிறது. அனைவரும் தரஇயலாது.
- வங்கி கடனுக்கான வட்டிவீதமும், வட்டி வியாபாரிகள் வசூலிக்கும் வட்டி வீதமும் சமமானவை.
- வங்கி கடன் பெறுவதற்கு பத்திரங்கள் நிரப்பிதரும் வேலை கிடையாது

- உங்கள் பகுதியில் கடன் வசதி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள விவரங்கள் குறித்து, சில உள்ளூர் மக்களுடன் கலந்துரையாடி சேகரியுங்கள். உங்கள் கலந்துரையாடலை பதிவு செய்யுங்கள். கடன் பெறுவதற்கான நிபந்தனைகளில் ஏதேனும் வித்தியாசங்கள் உள்ளனவா?


**ரமாதேவி பக்கத்து ஊரில் உள்ள வயலில் வேலை செய்துபிழைக்கும் விவசாய தொழிலாளி. ஓராண்டின், பல மாதங்களில் ரமாதேவி வேலையின்றி இருந்தாள். அன்றாட செலவுகளுக்காக கடன் தேவைப்பட்டது. திடீரென ஏற்படும் உடல்நலக்குறைவு, குடும்பத்தின் விழாக்கள் போன்றவற்றின் செலவுகளுக்கு கடன்கள் பெறப்பட்டன. ரமாதேவி கடனுக்காக, நிலக்கிழாராகிய முதலாளியை சார்ந்திருந்தார். அவர் கடன் தொகைக்கு மாதத்திற்கு 5% வட்டியை வசூலித்தார். முதலாளியின் வீட்டு வேலைகள் செய்து கடனை செலுத்தி வந்தார். பெரும்பாலும், பழைய கடனை திரும்ப செலுத்துவதற்கு முன்பாகவே, புதிய கடனை வாங்கிவிடுவார். தற்போது, ரமாதேவி நிலக்கிழாருக்கு 500 ரூபாய் கடன்பட்டுள்ளார். தன்னுடைய முதலாளி சரியான முறையில் மதிக்காவிட்டாலும், தேவைப்படும் போது, கடன் கிடைக்கின்ற காரணத்தால், அவரிடமே தொடர்ந்து வேலை செய்து வருகிறார். நிலமற்ற ஏழை மக்களுக்கு கடன் பெறும் ஒரே ஆதாரம், நிலக்கிழார்களாகிய முதலாளிகள் தான் என்று ரமாதேவி கூறுகிறாள்.**

- சிவகாமி, அருண், ரமாதேவி, வாசு ஆகியோர் குறித்த விவரங்களை பட்டியலில் நிரப்புக

| கடன் தொகை விவரம் | சிவகாமி | அருண் | ரமாதேவி | வாசு |
|---|---|---|---|---|
| கடன் திரும்ப செலுத்தும் கால வரையறை | | | | |
| தேவைப்படும் பத்திரங்கள் | | | | |
| வட்டிவீதம் | | | | |
| திரும்ப செலுத்தும் முறை | | | | |
| ஈடுகள் | | | | |

SCERT TELANGANA

## இந்தியாவில் முறை சார்ந்த மற்றும் முறைசாரா கடன்களின் மூலாதாரங்கள்




இதற்கு முன்பு தரப்பட்ட எடுத்துக்காட்டுகள் மூலம், மக்கள் பல்வேறுபட்ட வழிகளில் கடன்களை பெறுகின்றனர் என்பதை அறிந்து கொண்டோம். பல்வேறுபட்ட கடன் மூலங்களை நம் வசதிக்காக முறை சார்ந்த அமைப்பு முறை கடன்கள் என்றும். முறைசாரா அமைப்பு முறை கடன்கள் என்றும் வகைப்படுத்தலாம். வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கிடைக்கும் கடன்களை முறைசார் கடன்கள் என்பர். வட்டிவியாபாரிகள், வியாபாரிகள், முதலாளிகள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மூலம் கிடைக்கும் கடன்களை முறைசாராத கடன்கள் என்று அழைப்பர். இங்கு தரப்பட்டுள்ள வட்டப் படத்தில், இந்தியாவில் கிராமப்புற குடும்பங்களுக்கு கிடைத்திடும் பல்வேறு கடன் மூலங்களை நீங்கள் காணலாம். கிராமப் புற மக்களுக்கு தேவைப்படும், ஒவ்வொரு 100 ரூபாய் கடனில் 25% வணிக வங்கிகளிடம் இருந்து கிடைக்கின்றன. இவையின்றி, மலிவான வட்டிக்கு கிராமப்புறங்களில் கடனைத் தரும் அமைப்புகள் கூட்டுறவு சங்கங்களாகும். விவசாய கூட்டுறவு சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் போன்ற பல்வேறு வகைப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. நம் இந்தியாவில் முறைசாரா கடன் வழங்குவதில் வட்டி வியாபாரிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்பதை நீங்கள் கவனிக்கலாம்.

மேற்கண்ட படத்தின் தகவல்களை கொண்டு, கீழ்காணும் பட்டியலை நிரப்புக. இப்பட்டியல் மூலம் 1961ல் இருந்து 2003 வரையிலான ஆண்டுகளில் கிராமப்புற மக்களின் கடன் மூலங்கள் குறித்து அறியமுடிகிறது.

அட்டவணை 1

| கடன் தரும் அமைப்புகள் | கடன் வசதி தரும் மூலாதாரங்கள் (%) | | | |
|---|---|---|---|---|
| | 1961 | 1971 | 1981 | 2003 |
| கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வணிக வங்கிகள் | 10.3 | 24.4 | 58.6 | ? |
| அரசாங்கம் மற்றும் இதர முறை சார்ந்த அமைப்புகள் | 5.5 | 7.3 | 4.6 | ? |
| முறைசார் அமைப்பு முறைகள் மொத்தம் | ? | ? | ? | ? |
| வட்டி வியாபாரிகள் | 62.0 | 36.1 | 16.1 | ? |
| வணிகர்கள் | 7.2 | 8.4 | 3.1 | ? |
| நிலச்சுவாந்தர்கள் | 7.6 | 8.6 | 4.0 | ? |
| உறவினர்கள் மற்றும் நண்பர்கள் | 6.4 | 13.1 | 11.2 | ? |
| இதர மூலாதாரங்கள் | 0.8 | 2.1 | 2.4 | ? |
| முறைசாரா அமைப்புமுறைகள் மொத்தம் | ? | ? | ? | ? |
| மொத்த சதவீதம் | 100 | 100 | 100 | 100 |

SCERT TELANGANA

வங்கிகள், லாபம் ஈட்டும் வியாபாரங்களுக்கும், வணிகர்களுக்கும் கடன் தருவது மட்டுமின்றி, சிறு விவசாயிகளுக்கும், சிறு தொழிற்சாலைகளுக்கும், சிறு கடன்கள் வாங்குவோருக்கும் கடனுதவி அளிக்குமாறு இந்திய ரிசர்வ் வங்கி வலியுறுத்துகிறது.

தற்போது கிராமப்புற இந்தியாவில் ரிசர்வ் வங்கிமட்டுமன்றி, தேசிய விவசாய மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி என்னும் அமைப்பும் முறை சார் கடன் நிறுவனங்களை நிர்வகித்து கடனுதவி வழங்கி வருகின்றன.

சமீப ஆண்டுகளாக, விவசாயத்திற்கு வழங்கப்படும் கடன்களின் மதிப்பளவு அதிகரித்து வந்தாலும், இன்னமும் கணிசமான விவசாயிகள் வங்கி கடனை பெற முடியாத நிலையில் உள்ளனர். இதற்கு முன் நீங்கள் விவசாயம் குறித்து படித்தவற்றை நினைவு படுத்திக்கொள்ளுங்கள். 2011ஆம் ஆண்டில் நாட்டில் 14 கோடி விவசாயிகள் இருந்தனர். அவர்களில் 5.3கோடி விவசாயிகள் மட்டும் விவசாய கடன் கணக்குகளை பெற்றிருந்தனர். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது யாதெனில் மூன்றில் இரண்டு பங்கு விவசாயிகள் வங்கி கடனுதவி வசதிகளை பெறாமல் இருக்கின்றனர். ஏறத்தாழ ஒன்பது கோடி விவசாயிகள் முறைசாரா கடனுதவியை சார்ந்திருக்கின்றனர். வட்டிவியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் இவர்களுக்கு கடன் அளித்து மிக அதிக அளவு வட்டியை வசூலித்தனர். இதற்கு முந்தைய எடுத்துக்காட்டுகளில் இது குறித்து நீங்கள் அறிந்தீர்கள்.

## புதிய திட்டங்கள்

தற்போது இந்திய ரிசர்வ் வங்கி, கிராமப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு கிடைத்திடும் கடனுதவி வசதிகளை மேம்படுத்த புதுமுறைகளை எல்லா வங்கிகளும் மேற்கொண்டுள்ளது. வாணிப வசதிகளை ஏற்படுத்தி தருவோர் மற்றும் வாணிப தொடர்பாளர்களை பயன்படுத்தி கிராமப்புறங்களில் வங்கி கணக்குகளை துவங்கின. மேற்குறிப்பிட்ட முகவர்கள், கிராமப்புறங்களில் உள்ள மக்கள் தங்கள் பெயர்களில் வங்கி கணக்குகளை துவங்க ஊக்கப்படுத்துவர். அதனால் மக்கள் தங்கள் பணத்தை வங்களில் சேமிக்கவும், கடனுதவிகளை பயன்படுத்தி கொள்ளவும் முடியும். இம்முகவர்கள் மக்களை உள்ளூர் கிளை வங்கிகளுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ள உதவுவர். மின்னனு அடையாள அமைப்பு முறைகளை பயன்படுத்தி இக்கணக்குகள் துவக்கப்படுகின்றன.

சமீப காலத்தில், அரசாங்கம் தனித்தன்மை கொண்ட அடையாள எண்ணை ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் வழங்கி வருகிறது. தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்ட அனைவருக்கும் ஆதார் அட்டைகள் வழங்கப்படுகின்றன. ஆதார் அட்டை எண் கொண்டவர்கள் எளிதில் வங்கி கணக்கு துவங்கிகொள்ள முடியும். அத்துடன் அரசாங்கத்தால் வழங்கப்படும் பயன்களையும், சேவைகளையும் பெற முடியும். இதற்கு முன்பு வங்கிகள், புதிய வங்கி கணக்கு துவங்கிட குறைந்தபட்ச பணத்தை சேமிக்க வேண்டும் என்று விதிமுறை விதித்தன. ஆனால், தற்போது எந்த பணத்தையும் சேமிக்காது புதுவங்கி கணக்கை துவங்க வங்கிகள் சம்மதிக்கின்றன. குறைந்தபட்ச தொகை இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இது கட்டாயம் இல்லா கணக்கு ஆகும்.

### முறை சார்ந்த மற்றும் முறை சாரா கடன்: யார் எதை பெறுகின்றனர்?

முறைசாரா துறையை சேர்ந்த கடன் வழங்குவோரை மேற்பார்வை செய்திட கட்டுப்படுத்த எந்த ஒரு அமைப்பும் இல்லை. முறை சார்ந்த கடன் வழங்குவோர், ரிசர்வ் வங்கி மற்றும் அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுகின்றன. முறை சாரா கடன் வழங்குவோர் அப்படிப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுவதில்லை. அவர்கள் தங்களுக்கென்று சொந்தமான முறைகளை உருவாக்கி கொண்டுள்ளனர். முறை சார் கடன் வழங்குவோர் அரசாங்கத்தின் சில எதிர்பார்ப்புகளை பின்பற்ற வேண்டியிருக்கும். ஆனால் முறை சாரா கடன் வழங்குவோர் அவற்றை பின்பற்றத் தேவையில்லை. கடன் வாங்கியவர்கள், ஒத்துக்கொண்ட நிபந்தனைகளின் படி திருப்பி தரமுடியாத போது, முறை சார்ந்த கடன் வழங்குவோர், கடனை திரும்பப்பெற சட்டத்திற்கு எதிரான எந்த முறைகளையும் பின்பற்றுவதில்லை. ஆனால், முறைசாரா கடன் வழங்குவோர் பல்வேறு கட்டாயப்படுத்தும், சட்டத்திற்கு எதிரான வழிமுறைகளை பின்பற்றுகின்றனர். சில சமயங்களில் கடன் வாங்கியவர்கள் தற்கொலை செய்து

SCERT TELANGANA

கொள்ளும் அளவிற்கு துன்புறுத்தப்படுகின்றனர்.

முறை சார்ந்த கடன் வழங்குவோரோடு ஒப்பிடுகையில், பெரும்பாலான முறைசாராத கடன் வழங்குவோர், மிகவும் அதிக அளவு வட்டியை வசூலிக்கின்றனர். இதன் பொருள் யாதெனில், முறை சாரா கடன் வழங்குவோரிடம், கடனை பெறுபவருக்கு அதிக செலவு ஆகிறது என்பதாகும். பல்வேறு மாநிலங்கள், மக்களை அதிக வட்டி வசூலிக்கும் வட்டி வியாபாரிகள் போன்ற முறைசாரா கடன் வழங்குவோரிடம் இருந்து காத்திட சட்டம் இயற்றினாலும், வட்டி வியாபாரிகள் குறைவான வட்டிக்கு கடனளிக்குமாறு செய்ய இயலவில்லை. இன்னமும் திறம்பட அமுலாக்கப்பட வேண்டியுள்ளது.

கடன் வாங்குவோர் சம்பாதிக்கும் பணத்தில் பெருமளவு, கடனை திரும்ப செலுத்தவே பயன்படுத்துகின்றனர். இதனால், கடன் வாங்குபவருக்கு மிகக் குறைந்த வருவாய் மீதமாகிறது, சில சமயங்களில், அதிக வட்டிவீதத்தால், திரும்ப செலுத்தப்படும் பணம், கடன் வாங்கியவரின் வருவாயைவிட அதிகமாக இருக்கின்றன. இது கடன்தொகையை அதிகரித்து விடுகிறது. கடனை பெற்று ஒரு தொழிலை துவக்க வேண்டும் என்று நினைப்பவர்கள், கடன் வட்டிவீதம் அதிகமாக இருப்பதால் செய்யமுடியாமல் தவிக்கின்றனர்.

இக்காரணங்களால், வங்கிகளும், கூட்டுறவு சங்கங்களும் அதிக அளவு கடன் வழங்க வேண்டியுள்ளது. இதனால், அதிக வருவாய்கள் கிடைக்கும். ஏனெனில், அதிக மக்கள், மலிவான வட்டிக்கு, அதிகளவில் பல்வேறு தேவைகளுக்காக கடன் வாங்க முடியும். பயிர்கள் விளைவிக்க முடியும். வியாபாரம் செய்ய முடியும். சிறு தொழிற்சாலைகள் நிறுவிட முடியும். அவர்கள் புதிய தொழிற்சாலைகளை துவக்க முடியும். மக்கள் அனைவருக்கும் மலிவான மற்றும் செலுத்தக்கூடிய கடன் வசதிகள் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். 2003ஆம் ஆண்டில் இந்தியாவின் நகர்புற பகுதிகளில், முறைசார்ந்த மற்றும் முறைசாராத அமைப்புகள் மூலம் கடன்பட்டிருந்த மக்களின் கடன்களின் சதவீதம்.

முன் பக்கத்தில் தரப்பட்டுள்ள அட்டவணை -2, நகர்புற மக்கள் முறை சார்ந்த, முறை சாராத அமைப்புகள் மூலம் பெற்ற கடன்களின் சதவீதத்தை காட்டுகிறது. மக்களில் பணக்காரர்களும், ஏழை குடும்பங்களும் சேர்ந்துள்ளன. ஏழைக் குடும்பங்களின் கடன் தேவைகள் முறைசாராத அமைப்புகளின் மூலம் அதிக சதவீதம்(85) இருப்பதை காண முடிகிறது. முறை சார்ந்த கடன் அமைப்புகள் மூலம் 15 சதவீதம் மட்டுமே உள்ளது. இதை பணக்கார குடும்பங்களோடு ஒப்பிடுக. நீங்கள் எதை கண்டறிந்தீர்கள்.10. சதவீத கடன்கள் மட்டும் முறை சாராத அமைப்புகள் மூலம் பெற்றதை காணமுடிகிறது. அதே சமயத்தில் முறை சார்ந்த அமைப்புகள் மூலம் 90 சதவீதம் கடன் பெற்றுள்ளனர். இது போன்ற பணக்கார குடும்பங்கள் முறைசார்ந்த அமைப்புகளிடம் இருந்து மலிவான வட்டி வீதத்திற்கு பெருமளவு கடன் வசதிகளை பெறுகின்றனர். ஆனால் ஏழைக் குடும்பங்கள் முறைசாராத அமைப்புகளிடம் இருந்து

**அட்டவணை 2:**

| கடன் பெற்றுக்கொண்ட குடும்பங்களின் விவரங்கள் | முறைசார் அமைப்பு கடன்கள் | முறைசாராத அமைப்பு கடன்கள் | மொத்த கடன் |
|---|---|---|---|
| ஏழைக்குடும்பங்கள் | 15 | 85 | 100 |
| சிறிதளவு சொத்துகள் உடைய குடும்பங்கள் | 47 | 53 | 100 |
| ஓரளவு வசதியுடைய குடும்பங்கள் | 72 | 28 | 100 |
| பணக்கார குடும்பங்கள் | 90 | 10 | 100 |

ஆதாரம் : அகில இந்திய கடன் மற்றும் முதலீடு கணிப்பு – 2003. இது தேசிய மாதிரி கணிப்பு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. அறிக்கை எண் : 501. டிசம்பர், 2005.

SCERT TELANGANA

அதிக வட்டிவீதத்திற்கு கடனை பெறவேண்டியுள்ளது.

முன் பக்கத்தில் தரப்பட்டுள்ள வட்டப்படத்தை கவனத்துடன் பாருங்கள். அப்படம் நமக்கு அறிவுறுத்துவது என்ன? முதலாவதாக, முறைசார் அமைப்புகள் இன்னமும் கிராமப்புற மக்களின் கடன் தேவைகளில் பாதியளவு தான் பூர்த்தி செய்கின்றன. மீதமுள்ள கடன் தேவைகள் முறைசாராத அமைப்புகள் மூலம் பெறுகின்றனர். முறை சாராத அமைப்புகள் மூலம் பெறப்படும் பெரும்பாலான கடன்கள் மிகவும் அதிகமான வட்டிவீதம் கொண்டிருப்பதால், கடன் பெறுவோரின் வருவாயை அதிகரிக்கச் செய்வதில்லை. எனவே, வங்கிகளும், கூட்டுறவு சங்கங்களும் கிராமப்புறங்களில் அவற்றின் கடனளிக்கும் அளவை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதால், முறைசாரா அமைப்புகள் மூலம் பெறுகின்ற கடன்களை சார்ந்திருத்தல் குறையும்.

- முறை சார்ந்த மற்றும் முறைசாராத கடன் மூலாதாரத்தின் வேறுபாடுகள் யாவை?
- அனைவரிடமும் நியாயமான வட்டி வீதம் வசூலிக்கப்படுகிறதா?
- முறைசாரா கடன்களின் செயல்களை கண்காணிக்க, ரிசர்வ் வங்கி போன்ற அமைப்பு உள்ளதா? இவைகளை கண்காணிப்பது என்பது ஏன் மிகவும் கடினம்?
- ஏழை விவசாயிகளுக்கு முறைசார்ந்த கடன்கள் மிகவும் குறைவாக கொடுப்பதே ஆந்திரப்பிரதேச விவசாயிகளின் கஷ்டங்களுக்கு காரணம் என நீ நினைக்கின்றாயா?

இரண்டாவதாக, முறைசார் அமைப்புகள் மூலம் பெறும் கடன் அளவு அதிகரிப்பதுடன், எல்லா மக்களும் கடன் வசதிகளை பெறுமாறு செய்வது அவசியமாகும். தற்போது, பணக்கார குடும்பங்கள் முறை சார்ந்த அமைப்புகள் மூலம் கடன்களை பெறுவதும், ஏழைக் குடும்பங்கள் முறை சாராத அமைப்புகளிடம் இருந்து கடன் பெற சார்ந்திருப்பதுமான நிலைமை உள்ளது. முறைசார்ந்த அமைப்புகள் மூலம் கடன்கள் பெருமளவு சமமாக பகிர்ந்தளிக்க பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறு செய்வதால் ஏழைகள் மிகவும் குறைந்த வட்டியில் கடனுதவி பெற்று பயன்பெறமுடியும்.

## ஏழைகளுக்கான சுயஉதவி குழுக்கள்

இப்பாடத்தின் முந்தைய பிரிவில், ஏழைக் குடும்பங்கள் கடனுக்காக இன்னமும் முறை சாரா அமைப்புகள் மீது சார்ந்துள்ளனர் என்பதை பார்த்தோம். வங்கியிடம் இருந்து கடனைப் பெறுவது, முறை சாராத அமைப்புகளிடம் கடன் பெறுவதைக் காட்டிலும் மிகவும் கடினமாக உள்ளது.

வங்கிக்கடனை பெற முறையான பத்திர ஈடுகள் தேவைப்படுகின்றன. ஏழை மக்கள் வங்கி கடன் பெறுவதில் பெரும் தடையாக இருப்பவை ஈடுகளே ஆகும். ஏழைகள் தங்களுடைய மிகக்குறைவான சொத்துகளை ஈடுகளாக வைத்துள்ளனர்.

வட்டி வியாபாரிகள் போன்ற முறைசாரா அமைப்பினர், கடன் வாங்குவோர் குறித்து தனிப்பட்ட முறையில் நன்கு தெரிந்து வைத்திருப்பர். எனவே, பல சமயங்களில் ஈடுகள் இல்லாமலேயே கடன் தர சம்மதிக்கின்றனர். கடன் வாங்குவோர் தேவைப்படும் போது, பழையக்கடனை திரும்ப செலுத்தாமலேயே, புதுக்கடன்களை பெற வட்டி வியாபாரிகளை அணுகுகின்றனர். வட்டி வியாபாரிகள் கடனாளிகளுக்கு தரும் கடனுக்கு மிக அதிக வட்டியை வசூலிப்பதுடன், கொடுக்கல், வாங்கல்களை ரகசியமாக வைத்திருப்பர். ஏழை கடனாளிகளை துன்புறுத்துவர். அவர்கள் வாங்கிய கடனை திரும்ப வசூலிக்க, உற்பத்திப் பொருட்களை மலிவான விலைக்கு வாங்குதல் அல்லது கட்டாயப்படுத்தி வேலை செய்வித்துக் கொள்ளுதல் போன்ற வழிமுறைகளை பின்பற்றுவர்.

சமீப ஆண்டுகளாக, ஏழை மக்களுக்கு கடன் வழங்குவதில் புதியமுறைகள் பின்பற்றப்படுகின்றன. கிராமப் புற ஏழை மக்களை, குறிப்பாக பெண்களை சிறு சுயஉதவிகுழுக்களாக ஒன்று சேர்ந்து, அவர்களிடம் இருந்து சேமிப்புகளை சேகரித்தல் என்பது ஒரு புதுமுறையாகும். ஒவ்வொரு சுயஉதவி குழுவிலும் 15 முதல் 20வரை உறுப்பினர்கள் இருப்பர். பொதுவாக இவர்கள் ஒரே பகுதியை சேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் தொடர்ந்து சந்திப்பவர்களாகவும், சேமிப்பவர்களாகவும் இருப்பர். சேமிக்கும் பணத்தின் தொகை உறுப்பினர்களின் சேமிக்கும் திறனைப் பொருத்து, ரூ.25 முதல்



SCERT TELANGANA

**ரூ.100வரை அல்லது அதற்கு மேற்பட்டும் இருக்கும். குழு உறுப்பினர்கள் தங்கள் தேவைக்காக சிறு கடன்களை குழுவிடம் இருந்தே பெற்றுக்கொள்ளலாம். இக் கடன்களுக்காக, சுயஉதவிக் குழு வட்டியை வசூலிக்கும். ஆனால், அது வட்டிவியாபாரிகள் வசூலிக்கும் வட்டியைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது.**

**ஓரிரு வருடங்கள் கழித்து, குழுவின் சேமிப்பு நிரந்தரமாக தொடர்ந்து இருந்தால், அக்குழு வங்கியிடம் இருந்து கடனைப் பெறும் தகுதியை பெறும். இவ்வாறான வங்கி இணைப்பு மூலம் எல்லா உறுப்பினர்களுக்கும் கடனுதவி வழங்கப்படுகிறது. வங்கிகள் குழுவின் பெயரில் கடன்களை அங்கீகரித்து வழங்குகின்றன. இதனால் வாங்கப்பட்ட கடன்களை, திரும்ப செலுத்துவதை உறுதிப்படுத்துகின்றன. குழு உறுப்பினர்களின் வற்புறுத்தல் மற்றும் நற்பெயர் இதை சாத்தியமாக்குகின்றன. பண சேமிப்பு மற்றும் கடன் வழங்குதல் போன்ற முக்கிய முடிவுகளை குழு உறுப்பினர்கள் எடுக்கின்றனர்.**

- சுய உதவிக்குழு உறுப்பினர் பெறும் கடன், வங்கியில் இருந்து பெறும் கடனை விட எவ்வாறு வேறுபடுகிறது?
- சில சுய உதவி குழுக்கள், தன் உறுப்பினர்கள் பெறும் கடன்களுக்கு மிகவும் அதிகவட்டி வசூலிக்கின்றன. இது சரியானதா? கலந்துரையாடு.
- சுய உதவி குழுக்களின் கூட்டமைப்பின் பங்கு யாது? கண்டறியவும்?

**கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசத்தையும் தீர்மானிக்கிறது. உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக கடனை திரும்ப செலுத்தும் பொறுப்பை ஏற்கின்றனர். குழு உறுப்பினர் யாராவது கடனை திரும்ப செலுத்தாவிட்டால், பிற உறுப்பினர்கள் அதை குறித்து தீவிரமாக நடவடிக்கை எடுத்து வசூலிப்பர். இக்காரணத்தினால், ஏழை பெண்களால் நிர்வகிக்கப்படும் சுய உதவி குழுக்களுக்கு, அவர்களிடம் ஈடு வைக்க எந்த சொத்துகளும் இல்லையென்றாலும், வங்கிகள் கடனளிக்க முன்வருகின்றன.**

## நிதி சம்பந்தபட்ட தகவலறிவு

நிதிநிலை சம்பந்தப்பட்ட தகவலறிவு என்பது, ஒருவரை நிதிநிலை குறித்து அறிந்து புரிந்துக்கொள்ளச் செய்து தயார்படுத்துவதாகும். இதனால் நிதி சம்பந்த அறிவில் உள்ள குறைபாடு சரிசெய்யப்பட்டு அது குறித்து முடிவுகளில் தகவல்களை அறியும்படி செய்வதால் நிதிநிலையில் நம்பிக்கை உண்டாகிறது. சுருங்கக்கூறின், நிதிநிலை சம்பந்தப்பட்ட தகவலறிவு என்பது ஒருவர் தன்னைத் தானே நிதிநிலை சம்பந்தப்பட்ட அறிவு மற்றும் தகவல்களை நன்கு பெற்று தயாராக்கி கொள்ளுதல் ஆகும். நிதிசம்பந்தப்பட்ட தகவலறிவு குறித்து ஆர்வம் கொண்டிருந்தல் ஒருவருக்கு நிதி சம்பந்த மேம்பட்ட திட்டமிடுதலுக்கு உதவுகிறது. நிதிநிலை குறித்த அறிவு, ஒருவரை மேம்பட்ட நிலையில் வைத்து, நிதிசம்பந்தபட்ட இலட்சியங்களை சாதித்திட உதவும். மோசடிகள் மற்றும் கடன் வலைகளில் இருந்து தன்னைத்தானே காத்துக்கொள்ளும் திறனை தருகிறது. இந்த அறிவு மக்களிடையே சேமிப்பு பழக்கங்களை வளர்க்கவும், நிதி சம்பந்தப்பட்ட பொருட்களை குறித்து புரிந்துக்கொள்ளவும், நிதி நிறுவனங்களின் சேவைகளை திறம்பட பயன்படுத்திக் கொள்ளவும், இலட்சியமாக கொண்டுள்ளது. இதனால் பணத்தை நிர்வகிக்கும் மேலாண்மை வளர்கிறது. மேலும், நிதி சம்பந்தப்பட்ட தகவலறிவு, நிதிநிறுவனங்களின் சேவைகளை எளிதாக பெற்றுக்கொள்ள உதவுகிறது.

இந்திய ரிசர்வ் வங்கியின் www.rbi.org.in என்னும் வலை தளத்தில் நிதிநிலை சம்பந்தப்பட்ட தகவலறிவு கிடைக்கிறது. நிதிநிலை சம்பந்தப்பட்ட தகவலறிவின் பாடப்பொருளில் உண்மையான வங்கி பணத்தின் குணங்கள், உங்கள் ரிசர்வ் வங்கியை குறித்து தெரிந்துக்கொள்ளுங்கள், பொதுமக்கள் வாழ்கையில் இந்திய ரிசர்வ் வங்கி இணைந்துள்ளது, மின்அஞ்சல், குறுஞ்செய்தி மூலம் பெருமளவு பணம் வெளிநாடுகளில் இருந்து பரிசாக தருவதாக வரும் அறிவிப்புகள் குறித்த எச்சரிக்கை இணையதளம் மூலம் வங்கி கணக்குகள் குறித்த தகவல்களை தருதல் குறித்து எச்சரிக்கை, வங்கிகளிடமிருந்து கிடைத்திடும் கடன் வசதிகள், வங்கிகளில் ஏன் சேமிக்க வேண்டும்? குறைகளை தீர்க்கும் இயங்குமுறை, வங்கியில் விசாரணை அதிகாரி அங்கீகரிக்கப்படாத நிதி நிறுவனங்களில் பண வைப்புகள் வைப்பது குறித்து எச்சரிக்கைகள், உரிமம் பெறாத நிறுவனங்களில் வைப்புகள் சேமித்தல், பண வைப்புகள் காப்பீடு (என்னுடைய பண வைப்புகள் பாதுகாப்பாக உள்ளனவா? பண

SCERT TELANGANA

வைப்பு காப்பீடு என்றால் என்ன? கடன் உத்தரவாத திட்டம்)... போன்றவை குறித்து விவரங்கள் தரப்பட்டுள்ளன. நிதிநிலை சம்பந்த தகவலறிவு தொடர்பான தகவல்களை சிறுபுத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகள் மூலம் கிடைக்கின்றன. இவற்றை ரிசர்வ் வங்கி மற்றும் இதரவங்கிகள் தயாரித்து வழங்குகின்றன. மேலும், பள்ளிக் குழந்தைகளின் நன்மைக்காக, ரிசர்வ் வங்கி நிதிநிலை சம்பந்தப்பட்ட தகவலறிவு குறித்து பாடங்களை தயாரித்துள்ளது.

ராஜுவும் பணமரமும், போன்ற நகைச்சுவை படங்களை இந்திய ரிசர்வ் வங்கியின் வலைதளத்தில் இப்படங்களின் பதிவை படிவிறக்கம் செய்துக்கொள்ளவும். மேற்குறிப்பிட்டவையுடன், கிராமம், நகரம் மற்றும் தொலைதூர முடுக்குகளில் வாழும் எழுத்தறிவற்ற மக்களின் நன்மைக்காக, ஆந்திரப்பிரதேச மாநில அளவிலான வங்கியாளர்களின் குழு வங்கிகளில் சேமிப்பதின் நன்மைகள் குறித்து விளக்கிடும் ஒலிகுறுந்தகடு ஒன்றை தயாரித்தள்ளது.

நிதிநிலை சம்பந்தப்பட்ட தகவலறிவு, நிதிசேர்ப்பு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் இறுதியாக நிதிநிலைத்தன்மை போன்றவற்றோடு இணைந்து உள்ளது. நிதி சேர்ப்பு மற்றும் நிதிநிலை சம்பந்த தகவலறிவு இரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்து செல்ல வேண்டியுள்ளது. இதனால் சாதாரண பொதுமக்களும் முறைசார் நிதிநிறுவனங்கள் வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தேவை மற்றும் நன்மைகள் குறித்து புரிந்துக்கொள்ள முடிகிறது.

## முக்கியச் சொற்கள்

1. தேவை பண வைப்புகள்
2. பொருளாதார செயல்பாடுகள்
3. கூட்டுறவு சங்கங்கள்
4. வணிக வங்கிகள்
5. முறைசாராத கடன் மூலாதாரங்கள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. ஏழைக் குடும்பங்களின் பெரும்பகுதி கடன் தேவைகள், முறைசாராத மூலாதாரங்களில் இருந்து பெறப்படுகிறது. பணக்கார குடும்பங்கள் முறை சாராத அமைப்புகளில் மீது சார்ந்திருக்கும் அளவு மிகவும் குறைவு. இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? அட்டவணை 1ல் உள்ள தகவல்களை உங்கள் விடைக்கு சாதகமாக பயன்படுத்தி கொள்ளுதல்.(AS3)
2. கடனுக்காக அதிக அளவு வட்டிவீதம் எவ்வாறு பாதகமானது?(AS1)
3. ஏழைகளுக்கான சுயஉதவி குழுக்களின் அடிப்படை நோக்கம் என்ன? சொந்த வாக்கியங்களில் விவரியுங்கள்.(AS4)
4. நகர்புறங்களில் உள்ள மக்கள் எந்த நோக்கங்களுக்காக பொதுவாக கடன்களை பெறுகின்றனர் என்பதை ஒரு வட்டிவியாபாரியுடன் பேசி கண்டறியுங்கள்.(AS4)
5. வங்கி கடனுக்கும், சுய உதவி குழுக்கள் மூலம் பெறும் கடனுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?(AS1)
6. ஏழைகளுக்கான சுய உதவி குழு - தலைப்பில் உள்ள மூன்றாம் பத்தியை படியுங்கள். கீழ்காணும் கேள்விக்கு விடையளி?(AS2)

   உங்கள் பகுதியில் சுய உதவி குழுக்கள் எவ்வாறு பணியாற்றுகின்றன?(AS1)
7. விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்வதில் வங்கிகள் ஆற்றும் சேவைகள் யாவை?(AS6)

## செயல்திட்டம்

உங்கள் பகுதியில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட நிகழ்ச்சிகள் நடந்தனவா? அவ்வாறு நடந்திருந்தால், அவற்றிக்கான காரணங்களை கண்டறிந்து, ஒரு அறிக்கையை தயாரித்து, இது தொடர்பான செய்தித்தாள் படங்கள், செய்திகளை வகுப்பறையில் கலந்துரையாடுங்கள்.

SCERT TELANGANA

பாடம்

# 10 விலைவாசிகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள்

மக்கள் விலைவாசிகள் ஏற்றம் குறித்தும், அதனால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்தும் பேசிக்கொள்வதை நீங்கள் கேள்விபட்டிருப்பீர்கள். விலைவாசி ஏற்றங்களால் மக்கள் ஏன் கவலையும் பதற்றம் அடைகின்றனர். இவ்விலையேற்றங்கள் பெரும்பாலான பொருட்களில் ஏற்படுகின்றனவா? அல்லது ஒரு சில பொருட்களில் மட்டும் ஏற்படுகின்றனவா? விலையேற்றம் எல்லோரையும் ஒரே விதமாக பாதிக்கின்றனவா? இப்பாடத்தில், விலைவாசி ஏற்றத்தின் சில பிரச்சனைகள் குறித்து, விவாதிக்கவும்.

## குடும்ப வரவு செலவு திட்டம் :

உங்கள் பெற்றோர் ஏதாவதொரு வேலை செய்து, வருவாய் சம்பாதிக்கின்றனர். அதுவிவசாய வேலையாகவோ, கட்டிட வேலையாகவோ, காய்கறி விற்பனையாகவோ, அலுவலக வேலையாகவோ, கடை வேலையாகவோ, தொழிற்சாலை வேலையாகவோ இருக்கலாம். அவர்கள் வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்குவர், இதர தேவைகளுக்காக செலவு செய்கின்றனர். சில சமயங்களில் யாரிடமாவது கடன் வாங்கியும் செலவுகளை செய்கின்றனர். அவர்கள் தங்களிடம் இருக்கும் பணத்தை கொண்டு, தேவையான பொருட்களை வாங்கிட எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்பது குறித்து எப்பொழுதும் திட்டமிட்டுக் கொண்டே இருப்பர். இவ்வாறு செலவுகளை வருவாயோடு சமன்படுத்துவதை வரவு-செலவு திட்டம் (பட்ஜெட்) என்பர்.

ஒவ்வொரு குடும்பமும், வரவு செலவு திட்டத்தை தயாரித்துக் கொள்கின்றன. அது எழுதப்பட்டிருக்கலாம் அல்லது மனதிலேயே கணக்கிடப்படலாம். காய்கதறிச் சந்தையில், காய்கறிகளை விற்கும் ஒரு குடும்பத்தின் வரவு-செலவு திட்டத்தை எடுத்தக்கொள்வோம்.

**சத்திய நாராயணாவின் ஜனவரி 2013ன் வரவு செலவு திட்டம்**

| வருவாய்கள் | | செலவுகள் | |
|---|---|---|---|
| ஒரு மாத வருவாய் | ரூ.10,000 | உணவுப்பொருட்கள் | ரூ.3000 |
| உறவினரிடம் இருந்து கடனாக பெற்றது | ரூ. 2,500 | வீட்டு வாடகை<br>பள்ளிகட்டணம்<br>மருத்துவசெலவுகள் | ரூ.2,000<br>ரூ.1,500<br>ரூ.2,500 |
| | | போக்குவரத்து செலவுகள் | ரூ.1,500 |
| | | மின்சாரம், கைபேசி மற்றும் இதர தினசரி தேவை செலவுகள் | ரூ.2,000 |
| **மொத்த வரவுகள்** | **ரூ.12,500** | **மொத்த செலவுகள்** | **ரூ.12,500** |

மேற்கண்ட அட்டவணையில் சத்திய நாராயணாவின் குடும்பம் பெறுகின்ற வருமானத்தை, இடதுபுறத்தில் வருவாயாக காட்டப்பட்டுள்ளதை காணலாம். அவர் குடும்பத்தின் செலவுகளை வலது புறத்தில் இருப்பதையும் காணலாம். அக்குடும்பத்தின் செலவுகளை கூட்டினால் மொத்தம் ரூ.12,500ஆக உள்ளதை காணலாம். அது அவரது வருவாயான ரூ.10,000ஐ விட அதிகம் எனவே அவர்களுடைய உறவினரிடம் கடனாக பெற்று அதிகப்படியான செலவுகளை ஈடுகட்டினர். அவர்களுடைய மகளுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்ட போது, மருந்து வாங்குவதற்கான செலவு ஈடுகட்ட கடன் வாங்கினார் என்பது தெரிகிறது.



SCERT TELANGANA

இது வலது புறத்தில் காட்டப்பட்டுள்ளது. இதைப்போலவே, ஆயிரக்கணக்கான குடும்பங்கள், அவர்களுடைய வரவு, செலவு திட்டத்தை தயாரிக்கின்றனர். தங்களின் வருவாயின் அடிப்படையில், பொருட்களின் நுகர்வுகளை சரிசெய்து கொள்கின்றனர்.

### விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் எவ்வாறு குடும்ப பட்ஜெட்டை பாதிக்கிறது?

சத்திய நாராயணாவின் குடும்ப பட்ஜெட்டை மீண்டும் கவனிப்போம். அடுத்த மாதம், அவருடைய வீட்டு முதலாளி, வாடகையை ரூ.2500ஆக உயர்த்துகிறார் என்று வைத்துக்கொள்வோம். அதே சமயத்தில் பேருந்து கட்டணம் மற்றும் பெட்ரோல் விலையும் உயர்ந்தால், அவருடைய குடும்பம் போக்குவரத்திற்கான மாதந்தோறும் ரூ.2000செலவு செய்கிறது. புது விலைகளால், அவர் குடும்பத்தின் செலவு ரூ.1000 அதிகமாகிறது. அவருடைய வருவாயில் அதிகரிப்பு இல்லையென்றால், செலவுகளை எவ்வாறு சமாளிப்பார்? அவர்களிடம் சேமிப்புப் பணம் இருந்தால் அதை பயன்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறு இல்லையென்றால், நண்பர்கள் (அ) உறவினர்களிடம் கடன் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். ஆனால், அவ்வாறு வாங்கப்படும் கடனை வட்டியோடு திருப்பி செலுத்த வேண்டும்.

சத்தியநாராயணா தன் உறவினரிடம் கடன் வாங்கினால், அதற்கு வட்டி செலுத்த வேண்டியதில்லை. வட்டி வியாபாரியிடம் கடன் வாங்கினால், வாங்கிய பணத்தோடு சிறிதளவு வட்டியையும் சேர்த்து திருப்பி செலுத்த வேண்டும். நூறு ரூபாய்க்கு, மூன்று ரூபாய் வட்டி வீதம், ஒவ்வொரு மாதமும் ரூ.75 வட்டிப்பணமாக சேர்க்கப்படும். தோராயமாக சத்யநாரயணாவின் குடும்பம், ஆறுமாதங்கள் கழித்து, கடனை திரும்ப செலுத்த முடிந்தால், அவர்கள் ரூ.2500 உடன் 600ரூபாய்களையும் சேர்த்து ரூ.3100 செலுத்த வேண்டியிருக்கும்.

அவர்களுடைய செலவுகளை குறைத்துக்கொண்டு, பட்ஜெட்டை சரிசெய்து கொள்ளலாம். ஆட்டோவில் பயணம் செய்யும் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வது அல்லது சில உணவுப் பொருட்களின் அளவை குறித்துக் கொள்வது, கைப்பேசிக்கான செலவு செய்யும் தொகையை குறைத்துக் கொள்வது போன்றவை மூலம், அவர்களுடைய செலவை வருவாய்க்கேற்றவாறு சமன்படுத்திக் கொள்ளலாம். ஏனெனில், அவர்கள் பல்வேறு பொருட்கள் மீது தங்களுடைய செலவை குறைத்துக் கொண்டனர். அவர்களின் வாழ்க்கைத் தரம் குறைந்து விடும். வாழ்விற்கான செலவுகள் உயர்வதால் இது நிகழ்கிறது.

ஓய்வூதியம் பெறுவோர், தினசரி கூலிவேலை செய்வோர், சிறுவியாபாரம் செய்வோர், தனியாரிடம் வேலை செய்வோர், ஒரு குறிப்பிட்ட காலத்தில் தொடர்ந்து விலைவாசி ஏற்றத்தால், மோசமாக பாதிக்கப்படுகின்றனர். இதை பணவீக்கம் என்பர். இப்பிரிவு மக்களின் வருவாய், பணவீக்கம் ஏற்படும் பேதெல்லாம் அதிகமாகிறது. எனவே, அவர்கள் தங்களின் நுகர்வுகளை குறைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஏற்கனவே அவர்களின் வாழ்க்கைத்தரம் குறைவாக இருக்கும். அதனுடன் விலைவாசி உயர்வும் சேர்ந்தால், அவர்களுடைய நுகர்வின் அளவும் மேலும் குறையும். அது அவர்களை மேலும் வறுமையில் தள்ளிவிடும்.

மக்கள் அனைவரும், எப்பொழுதும் விலைவாசி ஏற்றத்தை குறித்து கவலைபடுகின்றனர். ஏனென்றால், விலைகள் உயரும் போது, அவர்களின் நுகர்வை குறைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள் பயன்படுத்தம் பொருட்களை சேவைகளை குறைத்து வாங்குவர். இது மக்களின் வாழ்கைத்தரத்தை பாதிக்கிறது. வாழ்க்கைத் தரம் என்பது மக்கள் வசதியான வாழ்க்கை வாழ்ந்திட பயன்படுத்தப்படும் பொருட்களின் விலை மற்றும் சேவைகளைக் குறிக்கின்றது.

SCERT TELANGANA

- நாளை ஆசிரியர்கள் தினம். உன்னுடைய வகுப்பு மாணவர்கள், உன்னிடம் ரூ.200 கொடுத்து, சந்தையில் இனிப்புகளும், பிஸ்கேட்டுகளும் வாங்கிவர அனுப்புகின்றனர். நீ கடைக்கு சென்ற போது, ஒரு இனிப்பு பொட்டலத்தின் விலை ரூ.60, பிஸ்கேட் பொட்டலத்தின் விலை ரூ.20 என்றும் தெரிகிறது. நீ இரண்டு இனிப்பு பொட்டலங்கள் வாங்கினால், மீதியுள்ள பணத்தில் எத்தனை பிஸ்கெட் பொட்டலங்களை வாங்க முடியும்?

- நீ பள்ளிக்கு திரும்பிய போது, உன் வகுப்பு மாணவர்கள், நீ சில பொட்டலங்களே ஏன் வாங்கி வந்துள்ளாய்? ஒவ்வொன்றிலும் 5 பொட்டலங்ள் வாங்கிவந்திருக்க வேண்டும் என்றனர். இனிப்பு மற்றும் பிஸ்கேட் பொட்டலங்களின் விலை குறித்து நீ கூறும் போது அவர்கள் ஆச்சரியப்படுகின்றனர். அவர்களில் ஒருவன், சென்ற வருடம் இனிப்பு பொட்டலத்திற்காக ரூ.30 மற்றும் பிஸ்கெட் பொட்டலத்திற்கு ரூ.10 கொடுத்து வாங்கினோம் என்று கூறுகிறான்.

- சென்ற ஆண்டு என்ன நடந்தது? இங்கு குறிப்பிட்ட இரண்டு பொருட்களின் விலைகள் உயர்ந்து விட்டன. சென்ற ஆண்டு செலவு செய்த அதே பணத்தில் அதாவது ரூ.200ல் இந்த ஆண்டு குறைந்த அளவே வாங்க முடிந்துள்ளது.

- உன்னுடைய ஆசிரியர் 5 பொட்டலங்கள் பிஸ்கெட்டும், 5 பொட்டலங்கள் இனிப்பும் வாங்கி வரச் சொல்கிறார். அவற்றிற்கு நீ எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்?
  - 5 இனிப்பு பொட்டலங்கள் விலை : ______________
  - 5 பிஸ்கெட் பொட்டலங்கள் விலை : ______________
  - செலுத்த வேண்டிய மொத்த பணம் : ______________
  - சென்ற ஆண்டைவிட எவ்வளவு பணம் அதிகமாக செலுத்த வேண்டும்?

- பணத்தைக் கொண்டு வாங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் எண்ணிக்கையை பணத்தின் வாங்கும் சக்தி என்பர். பணவீக்கத்தின் போது, பணத்தின் வாங்கும் சக்தி குறைந்துவிடும். மேற்கண்ட எடுத்துக்காட்டில், சென்ற ஆண்டில் ரூ.200க்கு ஒவ்வொரு பொருளிலும் ஐந்து எண்ணிக்கைகள் வாங்கப்பட்டது. ஆனால், இந்த வருடம் அதே அளவு பொருட்களை வாங்கிட அதிக அளவு செலவு செய்ய வேண்டியுள்ளது. இல்லையென்றால், குறைவான எண்ணிக்கையில் இரண்டு பொருட்களை வாங்க வேண்டியது தான். எனவே,

- கடந்த ஆண்டு = ரூ.200க்கு =5 இனிப்பு பொட்டலங்கள் + 5 பிஸ்கெட் பொட்டலங்கள்.

- இந்த ஆண்டு =ரூ.200க்கு = 2 இனிப்பு பொட்டலங்ள்+4 பிஸ்கெட் பொட்டலங்கள்.

- இதிலிருந்து நாம் தெரிந்து கொண்டது யாதெனில், 200 ரூபாய்களின் வாங்கும் சக்தி குறைந்துவிட்டது. பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் 200ரூபாய்களுக்கு வாங்க முடிகின்ற பொருட்கள் எண்ணிக்கை குறைந்து விட்டதை காணமுடிகிறது.

மக்களின் வாழ்க்கைத் தரம் என்பது குடும்பங்களின் வகைகள், செய்யும் தொழில்கள், சம்பாதிக்கின்ற வருவாய்கள் ஆகியவற்றை பொருத்து வேறுபடுகின்றன. நாடுகளிடையே வாழ்க்கைத் தரம் வேறுபட்டிருப்பதையும் காணலாம். எடுத்தக்காட்டாக நம் நாட்டில் ஒரு குடும்பம் கார், தொலைக்காட்சிப் பெட்டி, கைபேசி பெற்றிருந்தால், அக்குடும்பம் மேலான வாழ்க்கைத் தரத்தை கொண்டுள்ளது என்று கருதப்படுகிறது. ஆனால், அமெரிக்க நாட்டில் அவ்வசதிகளை கொண்டிருத்தல் மேலான வாழ்க்கை தரத்தினை குறிக்காது.

பொருட்களின் விலைகள் அதிகரிப்பால், எல்லோரும் பாதிக்கப்படுவதில்லை. நாட்டு மக்களில் சில குறிப்பிட்ட குழுவினருக்கு (அரசு ஊழியர்கள்) விலைகள் அதிகரிப்பால் ஏற்படும் பற்றாக்குறை ஈடுகட்டப்பட்டு சமன் செய்யப்படுகிறது.

SCERT TELANGANA

■ மத்திய, மாநில அரசாங்க அலுவலகங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் மற்றும் சில பெரிய தொழில் நிறுவனங்களின் தொழிலாளிகள் அகவிலைப்படி என்னும் கூடுதல் சம்பளத்தை பெறுகின்றனர். பொருட்களின் விலைகள் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தில் அதிகரிக்கும் போது, அவர்களுடைய ஊதியங்களும் உயர்கின்றன. ஏனெனில், அரசாங்கம் தன் ஊழியர்களுக்கு அதிகப்படியான அகவிலைப்படியை அளிக்கின்றது. எனவே, பணவீக்கம் அதிகரித்தால் ஊழியர்களின் வருவாயும் அதிகரிக்கிறது.

■ வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்போர், வாழ்க்கைக்கான செலவுகள் அதிகரிக்கும் போது, அவர்கள் விற்கும் பொருட்களின் விலைகளை உயர்த்தி வருவாய்களை பெருக்கிக் கொண்டு சமன் செய்து கொள்வர். எடுத்துக்காட்டாக, சர்க்கரை விலை அதிகரிக்கும் போது, இனிப்பு தயாரிக்கும் வியாபாரிகள் இனிப்பு பண்டங்களின் விலைகளை அதிகரிப்பார். தேநீர் விற்பவர், தேநீரின் விலையை அதிகரிப்பார்.

■ துணிகளுக்கு உலர்சலவை செய்வோர், முடிதிருத்தம் செய்வோர், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் போன்றோர் விலை மட்டங்கள் உயரும் போது, அவர்களுடைய சேவைகளின் கட்டணங்களை உயர்த்திடுவர். தங்களின் வாடிக்கையாளர்கள், கட்சிக்காரர்கள் மற்றும் நோயாளிகளிடம் இருந்து சேவைக்கான கட்டணங்களை அதிகமாக வசூலிப்பார்கள்.

■ மிகுந்த பணம் படைத்த செல்வந்தர்கள், பெரிய ஒருங்கிணைந்த நிறுவனங்களில் வேலை செய்வோர், விலையேற்றங்களால் பாதிக்கப்படமாட்டார்கள்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிப்பால் ஏற்படும் வருவாய் பற்றாக்குறைக்கு, ஈடுசெய்து சமன் செய்யும் அதிக வருவாயை வேலை செய்வோர் அனைவரும் சுலபமாக பெறமுடியாது. எடுத்தக்காட்டாக, விவசாயக் கூலிகள், கட்டுமானப்பணி தொழிலாளர்கள் அல்லது தொழிற்சாலை தொழிலாளிகள் போன்றோர், விலையேற்றங்கள் ஏற்படும் போது, தங்களின் ஊதியங்களை உயர்த்துமாறு கோருவதை பொதுவாக காண்கிறோம். சில சமயங்களில் அவர்களுடைய தொழிற்சங்கங்கள், ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தங்களும் செய்கின்றனர். அப்படிப்பட்ட சமயங்களில் அரசாங்கம் தலையிட்டு தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளிகள் இடையே பேச்சுவார்த்தை நடத்தி, ஊதிய உயர்வு பெறுமாறு செய்கிறது. பல்வேறு தொழில்களுக்கு, அரசாங்கமே ஊதியங்களை நிர்ணயித்து, அவ்வப்போது அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும் போது ஊதியங்களை மாற்றியமைத்து உயர்த்துகிறது. மேலும், தொழிலதிபர்கள் அரசாங்கம் நிர்ணயித்த ஊதியங்களில், தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்திகொள்ளுமாறு கண்காணிக்கிறது.

## பணவீக்கம் எவ்வாறு அளவிடப்படுகிறது

பொருட்களின் விலைகளில் தொடர்ந்து ஏற்படும் அதிகரிப்பையும் பணத்தின் மதிப்பு குறைவதையும் பணவீக்கம் என்றழைப்பர். இக்கருத்தை முன்பே படித்தறிந்திருக்கிறோம். ஆனால் சில பொருட்களின் விலைகள் உயரும் போது, வேறு பொருட்களின் விலைகள் குறைவதை நாம் காணமுடிகிறது. எடுத்தக்காட்டாக, சமீப காலங்களில் கைப்பேசிகளின் விலைகள் குறைந்து வருகின்றன. வேறு பொருட்களின் விலைகள் உயர்ந்து வருவதையும் காண்கிறோம். எனவே, ஒட்டுமொத்தமாக நாட்டில் பணவீக்கம் இருக்கிறதா? அல்லது இல்லையா? என்பதை நாம் கூறமுடியுமா?

தீப்பெட்டிகளின் விலை அதிகரிக்கிறது என்று நினைப்போம். அதன் விலை உயர்வு உண்மையில், உங்களுடைய வாழ்க்கைக்கான செலவை அதிகரிக்கிறதா? வீட்டு வாடகையின் உயர்வு, பெட்ரோல் மற்றும் அரிசி போன்றவற்றின் விலை அதிகரிப்பு போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புடன் ஒப்பிட்டு பாருங்கள். கணினிகளில் தகவல்களை பதிவு செய்ய பயன்படுத்தும் குறுந்தகடுகளின் விலை குறைந்தால் கணினியை பயன்படுத்தாத, உடலுழைப்பு செய்யும் தொழிலாளியின் வரவு–செலவு திட்டத்தை எவ்வாறு பாதிக்கும்? தொழிற்சாலை இயந்திரங்களின் விலை அதிகரித்தால், பெரும்பாலான

SCERT TELANGANA

மக்களின் வரவு-செலவு திட்டத்தை எவ்வாறு மறைமுகமாக பாதிக்கும் என்பதை கூறுங்கள்?

| உங்கள் குடும்பத்தால் தொடர்ந்து வாங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பெயர்களை எழுதுக. அப்பொருட்களின் தற்போதைய விலை மற்றும் சென்ற ஆண்டின் விலைகளை கண்டறியுங்கள். இரண்டிற்கும் இடையே வேறுபாடு யாது? உங்கள் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் உதவியை பெறலாம். | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | பொருட்கள் மற்றும் சேவைகள் | சென்ற ஆண்டில் விலை | இந்த ஆண்டில் விலை | வித்தியாசம் |
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

## விலைக் குறியீட்டு எண்கள்

விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் விலைக்குறியீடு என்னும் புள்ளியியல் முறையால் அளவிடப்படுகிறது. விலைகளில் ஏற்படும் மாற்றங்கள், எல்லா பொருட்கள் மற்றும் சேவைகளை ஒரே விதமாக பாதிக்காது. எனவே, ஒட்டுமொத்தமான பொருட்களின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை எவ்வாறு அளவிடுவது? விலைகளின் குறியீட்டு எண்ணை பயன்படுத்தி அளவிடுவது ஒருமுறையாகும். இவ்விலைக் குறியீட்டு எண் கீழ்கண்டவாறு தயாரிக்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஆண்டில் அதாவது அடிப்படை ஆண்டில், எல்லாவித பொருட்களின் சராசரி விலை குறியீட்டு எண் 100ஆக எடுத்த கொள்ளப்பட்டுள்ளது. சராசரியாக, தேர்வு செய்யபட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளின் உயர்வு, சென்ற ஆண்டை விட 25% அதிகமாக இருந்தால், இரண்டாவது ஆண்டின் விலைக்குறியீட்டு எண் 125ஆக எடுத்துக்கொள்ளப்படும். அடுத்த ஆண்டு இப்பொருட்களின் விலை 20% உயர்ந்தால், அதன் விலை குறியீட்டு எண் 150. (125ன் 20%+125=150).

இதை நாம் ஒரு எடுத்துக்காட்டின் உதவியுடன் புரிந்துகொள்வோம். கீழ்காணும் அட்டவணை அரசாங்க நிறுவனங்களால் நெல் மற்றும் பருத்திக்கு செலுத்திய குறைந்தபட்ச ஆதரவு விலைகளை காட்டுகிறது. அட்டவணையை கவனமாய் படித்து, அதன் பின்வரும் வினாக்களுக்கு விடையளி :

**அட்டவணை : பருத்தி மற்றும் நெல்லின் விலை (ஒரு குவிண்டாலுக்கு) 2005 முதல் 2011 வரை**

| பயிர்கள் | 2005-06 | 2006-07 | 2007-08 | 2008-09 | 2009-2010 | 2010-2011 |
|---|---|---|---|---|---|---|
| நெல் | ரூ.600 | ரூ.610 | ரூ.775 | ரூ.880 | ரூ.980 | ரூ.1030 |
| பருத்தி | ரூ.1980 | ரூ.1990 | ரூ.2030 | ரூ.3000 | ரூ.3000 | ரூ.3000 |

(i) 2005-06 ஆண்டை அடிப்படையாகக் கொண்டு நெல் மற்றும் பருத்தியின் விலை குறியீட்டு எண்களை கணக்கிடுக.

(ii) நெல் மற்றும் பருத்தியின் விலைக் குறியீட்டு எண்ணை காட்டும் கோட்டு வரைபடத்தை வரைக. x அச்சில் ஆண்டுகளை குறித்திடு. விலை குறியீட்டு எண்களை yஅச்சில் குறித்திடு. கோட்டு வரைப்படம் ஏன் மேல் நோக்கி செல்கிறது என்பதைக் குறித்து கலந்துரையாடுக.

(iii) நீ வரைந்த கோட்டு வரைபடத்தையும், கணக்கிட்ட விலைக்குறியீட்டு எண்களையும் இப்பாடப்பகுதியில் தரப்பட்ட வரைபடத்தோடு ஒப்பிட்டு பார்க்கவும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் (மாதம்/வருடம்) தேர்வுசெய்யப்பட்ட பொருட்களின் விலைகளில் உண்டான ஏற்றத்தையும், அதன் வித்தியாச அளவையும், விலைக் குறியீட்டு எண்கள் நமக்கு தெரிவிக்கின்றன.

SCERT TELANGANA

இவ்வாறாக, விலைக்குறியீட்டு எண், ஒரு குறிப்பிட்ட இரண்டு காலங்களுக்குள் (மாதம் அல்லது ஆண்டு) மக்களால் பயன்படுத்தப்படும் பொருட்களின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களின் வித்தியாசம் மற்றும் சதவீதத்தை காட்டுகிறது. எடுத்தக்காட்டாக, நமது வீட்டு, வரவு-செலவு திட்டத்தைக் கொண்டு நடப்பு மாதம் அல்லது வருடத்தில் உள்ள விலைகளையும், கடந்த மாதம் அல்லது வருடத்தில் இருந்த விலைகளையும் ஒப்பிட்டு மாற்றத்தை கணக்கிட்டு அறியலாம். இரண்டு ஆண்டுகள் இடையே பொதுவிலை மட்டங்களில் ஏற்பட்ட வித்தியாசம் என்பது ஓராண்டு காலத்தில் விலைகள் அதிகரித்ததின் சதவீதத்தை நமக்கு காட்டுகிறது.

விலைக்குறியீட்டு எண்ணைக் கொண்டு, இரண்டு பகுதிகளின் விலை மட்டங்களை ஒப்பிட்டு அறியலாம். நம் ஆந்திரபிரதேசத்தின் விலை மட்டத்தை, கா்நாடகா அல்லது மஹாராஷ்டிரா போன்ற இதர மாநிலங்களின் விலைமட்டங்களோடு ஒப்பிட்டு அறியமுடிகிறது.

நாட்டின் பொருளாதாரத்தில், ஆயிரக்கணக்கான பொருட்களும், சேவைகளும் உற்பத்தியாகின்றன. இவற்றில் எந்தெந்த பொருட்களின் விலைகளை ஒப்பிட்டு அறிய வேண்டும் என்பதை நாம் தோ்ந்தெடுத்து கொண்டு கனித்து அறியவேண்டும்.

பல்வேறு பொருட்களை பயன்படுத்தும் நுகா்வோா், பல குழுவினராக உள்ளனா். நுகா்வோா் குழுவினரை அடிப்படையாகக் கொண்டு, விலைக்குறியீட்டு எண்கள் பலவகைப்படும். எடுத்தக்காட்டாக : மொத்த விற்பனை விலைக்குறியீடு , நுகா்வோா் விலைக்குறியீடு போன்றவற்றை கூறலாம். முதலீட்டு மற்றும் நுகா்வோா் பொருட்களின், மொத்த விற்பனை விலைகளில் ஏற்படும் மாற்றங்களைக் குறித்து கூறுவதே மொத்த விற்பனை விலைக்குறியீடு என்பா். நுகா்வோா் பொருட்களின் சில்லறை விலைகளில் ஏற்படும் மாற்றங்களை மட்டும் கூறுவதை நுகா்வோா் விலைக்குறியீடு என்பா். நம் இந்தியாவில் பல்வேறு வகை நுகா்வோா் விலைக்குறியீடுகளை அரசாங்கம் வெளியிடுகிறது.

அ) தொழிற்சாலை தொழிலாளிகளுக்கான நுகா்வோா் விலைக்குறியீடு.

ஆ) நகா்புற தொழில்நுட்ப ஊழியா்களுக்கான நுகா்வோா் விலைக்குறியீடு.

இ) விவசாய கூலியாட்களுக்கான நுகா்வோா் விலைக்குறியீடு.

பல்வேறு வகையான விலைக்குறியீடுகள் இருப்பதற்கான காரணம், பல்வேறு வகையான குடும்பங்கள் பயன்படுத்தும் பொருட்கள், ஒரே வகையான தொகுப்பு பொருட்களாக இல்லை. வேறுபட்டு உள்ளன. எடுத்துக்காட்டாக நகரங்கள் மற்றும் மாநகரங்களில் வாழும் தொழிற்சாலை தொழிலாளிகளால் நுகா்வு செய்யப்படும் பொருட்களின் வகை மற்றும் அளவுகளையும், கிராமப் புற கூலியாட்கள் பயன்படுத்தும் பொருட்களின் வகை மற்றும் அளவுகளும் வேறுபட்டு இருக்கும்.

உடலுழைப்பு அல்லாத தொழில் நுட்ப வேலை செய்வோா் அல்லது அலுவலகங்கள், வங்கிகள், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியா்கள நுகா்வு செய்யும் பொருட்களின் தொகுப்பு, விவசாய கூலியாட்கள் நுகா்வு செய்யும் பொருட்களின் தொகுப்பை விட வேறுபட்டு இருக்கும்.

நம் இந்தியாவில் பணவீக்கம் பொதுவாக மொத்த விற்பனைவிலை குறியீட்டால் அளவிடப்படுகிறது. அரசாங்க ஊழியா்களுக்கு தரப்படும் அகவிலைப்படிகளை கணக்கிடுவதற்கு பல்வேறு நுகா்வோா் விலைக்குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்திய அரசாங்கத்தின் சட்டப்படியான ஊதிய அளவுகளை மாற்றியமைக்கவும், நாட்டிலுள்ள ஏழைகளின் எண்ணிக்கையை கணக்கிட நுகா்வோா் விலைக்குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. உணவுப் பொருட்களின் உணவுபணவீக்கம் மற்றும் எரிபொருட்களின் எரிபொருள் பணவீக்கம் கண்டறியவும், நுகா்வோா் விலைக்குறியீட்டு எண் மதிப்பீடு அறியப்படுகிறது.

### நுகா்வோா் விலைக்குறியீட்டை எவ்வாறு கண்டறிவது :

உங்கள் வீடுகளில் நுகா்வுக்காக பயன்படுத்தப்படும் சில பொருட்களின் நுகா்வோா் விலை குறியீட்டை தயாரிக்க முயற்சி செய்வோம்.

அட்டவணை 3ஐ இதற்கு பயன்படுத்திக் கொள்வோம். உங்கள் குடும்பத்தாா் கடந்த மாதம் வாங்கிய பொருட்களின் அளவுகளை எழுதுங்கள். இந்த மாதமும் அதே அளவு பொருட்களை வாங்குகின்றனா் என்று ஊகித்துக் கொள்வோம். ஆனால், இந்த மாதத்தில் அவற்றின் விலைகள் உயா்ந்துள்ளதால், அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது.



SCERT TELANGANA

இந்த அட்டவணையில் நான்கு பொருட்களின் விலைகளையும், வாங்கப்பட்ட அளவுகளையும் எடுத்தக்கொண்டுள்ளோம். அட்டணையின் 2வது பொருட்களின் விலைகளை, அவற்றின் அளவுகளால் பெருக்கி, அவற்றின் கூட்டல் மதிப்பெண் 4வது கட்டத்தில் எழுதிட வேண்டும். இது கடந்த மாதத்தின் மொத்த செலவாகும்.

அதேப் போன்றே, 5வது கட்டத்தில் சென்ற மாதத்தில் குறிப்பிட்ட அதே பொருட்களின் தற்போதைய மாதத்தின் விலைகள் மற்றும் 6வது கட்டத்தில் வாங்கப்பட்ட பொருட்களின் அளவு காட்டப்பட்டுள்ளது. இது சென்ற மாதத்தில் வாங்கப்பட்ட அளவாக இருக்கிறது. ஒவ்வொரு பொருளின் விலையை, அதன் அளவால் பெருக்கபட்டு, அதன் செலவு மதிப்பை 7வது கட்டத்தில் காட்டப்பட்டுள்ளது. 7வது கட்டத்தில் உள்ள கூட்டலின் மதிப்பு, வாங்கப்பட்ட நான்கு பொருட்களின் இந்த மாதத்தின் மொத்த செலவை காட்டுகிறது.

**நுகர்வோர் விலைக்குறியீடு**

இப்பட்டியல் நுகர்வோர் விலைக்குறியீடு (CPI) எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. உங்களுடைய குடும்பம் அரிசி, வெங்காயம், பருப்பு மற்றும் சமையல் எரிவாயு வாங்குகிறது என ஊகித்துக்கொள்.

| 1 | 2 | 3 | 4= 2 x 3 | 5 | 6 | 7 =5 x 6 |
|---|---|---|---|---|---|---|
| பொருட்கள் மற்றும் சேவைகள் | சென்ற மாதத்தின் விலை | சென்ற மாதத்தின் அளவு | சென்ற மாதத்தின் செலவு | இந்த மாதத்தின் விலை | இந்த மாதத்தின் அளவு | இந்த மாதத்தின் செலவு |
| 1. அரிசி (1கி) | ரூ.30 | 25 கிலோ | ரூ.750 | ரூ.40 | 25கிலோ | ரூ.1000 |
| 2. வெங்காயம் (1கி) | ரூ.10 | 5 கிலோ | ரூ.50 | ரூ.20 | 5கிலோ | ரூ.100 |
| 3. பருப்பு (1கி) | ரூ.75 | 4 கிலோ | ரூ.300 | ரூ.85 | 4கிலோ | ரூ.340 |
| 4. சமையல்எரி வாயு சிலிண்டர் | ரூ.400 | 1 | ரூ.400 | ரூ.410 | 1 | ரூ.410 |
| மொத்த செலவு | | | **ரூ.1500** | **மொத்த செலவு** | | **ரூ.1850** |

மேற்கண்ட அட்டவணை மூன்றில் எதை காண்கிறீர்கள். உங்களுடைய குடும்பம், சென்ற மாதத்தில், நான்கு பொருட்களை வாங்க ரூ.1500 செலவு செய்தது. ஆனால் இந்த மாதத்தில் ரூ.1850 செலவானது. எல்லா பொருட்களின் விலைகள் அதிகமானதே அதற்கான காரணமாகும். சென்ற மாதத்துடன் ஒப்பிடும் போது செலவு ரூ.350/- அதிகமானது. இதை சதவீதத்தில் பார்க்கும் போது 350/1500 x 100=23.3%.

அதாவது, ஒரு நபர் தன் குடும்பத்திற்காக ரூ.100/- செலவு செய்தார் என்று ஊகித்துக் கொள்வோம். இந்த மாதம் அவர் ரூ.123/- செலவு செய்ய வேண்டியுள்ளது. இது போன்ற நுகர்வை கொண்ட குடும்பங்களின், பட்ஜெட்டின் மீதும் பாதிப்பை உண்டாக்கும். அது போன்ற குடும்பங்கள் 23% விலை உயர்வை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இவ்வாறே, நுகர்வோர் விலைக்குறியீடு கணக்கிடப்படுகிறது. குடும்பங்களில் பயன்படுத்தும் பொருட்களின் மீது செய்யப்படும் செலவுகள் கணக்கிட்டு அறிவர். இது உங்களுடைய வாழ்க்கைக்கான செலவில் ஏற்பட்ட உயர்வை காட்டுகிறது.

பட்டியலில் காட்டப்பட்ட நான்கு பொருட்களின் சராசரி விலைகள், சென்ற மாதத்தில் ரூ.100 என்றால், அது தற்போதுள்ள மாதத்தில் ரூ123.3 ஆக உயர்ந்துள்ளது.

நாட்டில் உண்மையாக நிகழும் பொருளாதார செயல்களில், ஆயிரக்கணக்கான சேவைகள் மற்றும் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றின் விலைகளும் அதிகரிக்கின்றன. பல்வேறு கால கட்டங்களில், பெரும்பாலும் மாதத்தில் ஒருமுறை அல்லது வாரத்தில் ஒருமுறை, உயரும் விலை மட்டங்களை அரசாங்கம் மதிப்பீடு செய்வதை மேற்கொள்கிறது.


SCERT TELANGANA

## உணவுப் பணவீக்கம் :

அரசாங்கம் 2009ஆம் ஆண்டில், ஒரு புதிய குறியீட்டு முறையான உணவுப் பொருட்களின் விலைக்குறியீடு முறைப்படி மதிப்பிடுவதை துவங்கியது. இக்குறியீட்டு முறை உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்படும் உயர்வை மதிப்பிடுகிறது. உணவுப் பொருள் விலைக்குறியீடு, அரிசி, கோதுமை, பருப்புகள், காய்கறிகள், சர்க்கரை, பால், முட்டை, மாமிசம், மீன் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களான சமையல் எண்ணை, போன்றவற்றின் மொத்த விலைகளை கொண்டிருக்கும். 2011-12ஆம் நிதியாண்டில் சமையல் எண்ணெயின் விலை மிகுந்த பணவீக்கத்தை ஏற்படுத்தியது. அந்த ஆண்டில், இந்தியாவின் சமையல் எண்ணெயின் தேவையில் 50% கச்சா பாமாயில், சூரியகாந்தி எண்ணெய், சோயாபீன்ஸ் எண்ணெய், மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில், போன்றவற்றின் இறக்குமதி மூலமாக பெறப்பட்டது. உலகச் சந்தையில் எந்த நாட்டில் இருந்து பெறுகிறோமோ, இவற்றின் விலை அதிகரித்தால், இந்திய நுகர்வோரும் அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டி இருக்கும். அரசாங்கம் விலைகளை உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கையெடுக்க வேண்டியிருப்பதால், பல்வேறு ஆராய்ச்சி கணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. மக்களின் உணவு திட்ட அமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தால் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. என்றும், அதன் விளைவால் அவர்கள் உண்ணும் காய்கறிகள், முட்டை, மாமிசம், மீன் போன்றவற்றின் தற்போது உயர்ந்தள்ளது என்றும் கண்டறியப்பட்டது. பருவகாலங்களின் மாற்றத்தால் ஏற்படும் பற்றாக்குறை விலையேற்றத்தை ஏற்படுத்தும். இப்பொருட்களின் தேவை எப்பொழுதும் அதிகமாக இருப்பதால், மக்கள் இவற்றை அதிக விலையிலும் வாங்கி பயன்படுத்த விரும்புகின்றனர். அப்பொருட்கள் மக்களின் நிரந்தர உணவுமுறையின் ஒருபாகமாகிவிட்டது.

## சமீப காலத்திய விலையேற்றங்கள்

2009 முதல் 2012 வரையிலான ஆண்டுகளில் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகமாயின. இதை நீங்கள் கீழ்காணும் படங்களை கவனித்து அறியலாம். படத்தை கவனத்துடன் பார்த்து, கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடையளி:




1. 2005-06ஆம் ஆண்டில், ஒரு குடும்பம், ஒருகிலோ அரிசி ரூ.20வீதம் வாங்கினால், 2011ஆம் அண்டில் எவ்வளவு பணம் செலுத்தியிருக்கும்?
2. எந்தெந்த ஆண்டுகளில் பருப்புகளின் விலை மிகவும் அதிகமாக உயர்ந்தது?
3. பருத்தியின் விலையில் ஏற்பட்ட விலையேற்ற சதவீதம் எவ்வளவு?
4. எப்பொருளின் விலை உயர்ந்தும், தாழ்ந்தும் நிலையாகவும் உள்ளது?

பெட்ரோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் போன்ற பெட்ரோலிய பொருட்கள் கச்சா எண்ணெயில் இருந்து தயாரிக்கப்படுகின்றன என்றும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன என்றும் உங்களுக்கு தெரியும். கச்சா பெட்ரோல் விலையேற்றத்துடன், உலோகங்கள் மற்றும் இரசாயணப் பொருட்களின் விலைகள் அதிகமாகி பணவீக்கத்தை ஏற்படுத்துகின்றன. நீண்ட காலத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் பொதுவான அதிகரிப்பை பணவீக்கம் என்பர். அடிப்படையில் இவை நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும். கச்சாப்பொருட்களாக இந்தியாவில் பயன்படுத்தபடுவதால், இவற்றின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பு, நுகர்வோர் பொருட்களின் விலையேற்றத்திற்கு வழிவகுக்கும்.

## விலைகளை கட்டுப்படுத்தவதில் அரசாங்கத்தின் பங்கு

பொதுவான பணவீக்கம் ஏற்படும் போது, மொத்த விற்பனை விலை குறியீடு, விரைந்து அதிகரிக்கும். இது தொழிலதிபர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை தருவதாகும். உணவுப் பணவீக்கம் ஏற்பட்டால், பொதுமக்களின் வாழ்க்கைதரத்தை நேரடியாக பாதிக்கும். பணவீக்கத்தின் உயர் நிலைகளில், குறைந்த வருவாய் உடைய மக்கள் மட்டுமின்றி, நிலையான வருவாய்கள் உடையோரும் பாதிப்படைந்து, ஏழையாவர். இதர மக்கள் அவர்களுடைய சேமிப்பு பணத்தை நிலம் வாங்கவும், தங்கம் அல்லது வேறு சில உற்பத்தியற்ற பொருட்களுக்கு செலவு செய்ய முனைவர். மக்கள் தங்கள் பணத்தின் மதிப்பு நாளுக்குநாள் குறைந்து வருகிறது, என்று கருதும் போது மேற்சொன்னபடி செய்வதை காணமுடியும்.

இருப்பினும், மிதமான மற்றும் படிப்படியாக பொருட்களின் விலைகள் அதிகரிப்பு எந்த ஒரு நாட்டிற்கும் நல்லது என கருதப்படுவது உண்மையாகும். ஒவ்வொரு விலைகளின் உயர்வு 2 அல்லது 3சதவீதம் உயர்ந்தால், ஒரு நாட்டிற்கு உகந்தது என்று கருதப்படுகிறது. ஏனெனில் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வோர், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரித்துக்கொள்ள, தங்களுடைய பொருட்களுக்கு அதிக விலையை கோருவர். இதனால், உற்பத்திச் செலவு அதிகரித்து பொருட்களின் விலையும் உயரும். இறுதியில், நுகர்வோர் அதிக விலைகளை செலுத்த வேண்டியிருக்கும். இதன் மூலம் கிடைக்கும் பலன்கள், உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு கிடைக்கும். எனவே, இது நாட்டிற்கு நன்மை பயக்கும் என்று கருதப்படுகிறது.

சிலசமயங்களில், தொழிலதிபர்கள், சட்டத்திற்கு முரணான வழிகளில், பல்வேறு பொருட்களின் விலைகளை, குறிப்பாக அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உயர்த்தினர். தொழிலதிபர்களின் முக்கிய நோக்கம் லாபம் சம்பாதிப்பதாகவே இருந்தது.

தொழிலாளிகளின் ஊதியங்களில் அதிகரிப்பு இல்லையென்றால், அவர்களுக்கு தேவையான பொருட்களை வாங்க முடியாது. தொழிலாளர்களும் நுகர்வோர்களாக உள்ளனர். விலையேற்றங்கள் கோதுமை, அரிசி, பால் போன்றவற்றில் ஏற்பட்டால், மக்களுக்கு பிரச்சனைகள் உண்டாகும்.

இதனால், வர்த்தகர்களை கட்டுப்படுத்தவும், அரசாங்கத்தின் நெருங்கிய கண்காணிப்பு தேவைபடுகிறது என்பதை காட்டுகிறது. அரசாங்கம் இதற்கு தேவையான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. விவசாயம் தொடர்பான பாடத்தில், அரசாங்கம் நெல், கோதுமையை இந்திய உணவு நிறுவனம் மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு உதவுவதை, குறித்து நீங்கள் படித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இக்கொள்கை, விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், சந்தையில் நெல், மற்றும் கோதுமைகளின் சந்தை விலைகளை கட்டுப்படுத்தவும் உதவுகிறது. அது போலவே, மத்திய மாநில அரசுகள் கரும்பின் கொள்முதல் விலையை நிர்ணயித்து, கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அளிக்கின்றன. கரும்பின் விலையை கட்டுபடுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

நீங்கள் எட்டாவது வகுப்பில், பொது விநியோக முறை குறித்து படித்திருப்பீர்கள் ஏழை மக்களுக்கு உணவுப்பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவும், அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்தவும் அரசு மேற்கொண்ட மிக முக்கியமான நடவடிக்கை ஆகும்.

SCERT TELANGANA

பொது விநியோக முறைப்படி, கோதுமை, அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. மாநில அரசாங்கம் இத்திட்டத்தை 4.5லட்சத்திற்கும் மேற்பட்ட நியாய விலைக்கடைகள் மூலம் நடைமுறைபடுத்தி வருகிறது. பொதுவிநியோக முறை மூலம் விநியோகம் செய்யப்படும் பொருட்களின் விலை, சந்தை விலைகளை விட குறைவாக உள்ளது. இவ்விரண்டு விலைகளுக்கு இடையே உள்ள வித்தியாசத்தை அல்லது மானியத்தை ஏற்கிறது. இப்பொது விநியோக முறை, ஏழைகள் நியாய விலைகடைகளில் இருந்து பொருட்களை வாங்கிடும் சக்தியையும், அத்தியாவசிய பொருட்களின் நியாயமற்ற விலையேற்றங்களை கட்டுப்படுத்தவும், மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

பதுக்கலை தடுக்கவும், அத்தியாவசிய பொருட்களின் விலைகள் நியாயமானவைகளாகவும், அவற்றின் அளிப்பு போதுமானதாக இருக்குமாறு செய்திட, அரசாங்கம் விலைகளை நிர்ணயிக்கிறது. வர்த்தகர்கள் தங்களின் பொருட்களை அரசு நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்க வேண்டும் என்றும் சட்டபூர்வமாக்கியது. அரசு விலைகளின் படி விற்பனை செய்யாத வியாபாரிகள் அரசாங்கத்தால் பல்வேறு சட்டங்களின்படி அபராதம் விதிக்கப்படுகின்றனர். மண்ணெண்ணெய், டீசல், திரவபெட்ரோலிய வாயு, இறுக்கப்பட்ட இயற்கை வாயு மற்றும் குழாய் வழி இயற்கை வாயு போன்ற பொருட்களின் விலை பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ அரசாங்க மானியமாக தரப்பட்டு, நிர்வாக விலைநிர்ணய முறை மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் போது, நாட்டின் உச்ச வங்கியான ரிசர்வ் வங்கி, நாட்டில் பணப்புழக்கத்தை குறைத்துவிடும். வங்கிகளை அதிகமாக அல்லது குறைவாக கடனளிக்கவும், வைப்புநிதி கொண்ட வாடிக்கையாளர்களை குறைவாக அல்லது அதிகமாக திரும்ப பெற அனுமதி அளிக்கவும் வங்கிகளை ஒழுங்குமுறை படுத்தவதின் மூலமும் இதனைச் செய்கிறது. வட்டிவீதத்தை கட்டுப்படுத்துவதன் மூலம், நாட்டில் பணம் புழக்கம் குறையும். நாட்டு மக்கள் வைத்திருக்கும் பணத்தின் அளவு குறைவதால், மக்கள் குறைவாக பொருட்களை பயன்படுத்தும் மனபான்மை ஏற்படும். இதனால் பொருட்களின் தேவை குறைந்து, விலைகள் குறையும். ரிசர்வ் வங்கி மேற்கொள்ளும் இச்செயலின் விளைவை கண்கூடாக காண சிறிதுகாலம் பிடிக்கும். கச்சாப் பொருட்களின் விலையேற்றத்தால் பணவீக்கம் ஏற்பட்டால், ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகள் கடினமாகிவிடும்.

அரசாங்கம் பணப்புழக்கத்தை குறைத்திட முடிவுசெய்யும் போது, உயர்வருவாய் மீதும், பல்வேறு நுகர்வோர் பொருட்கள் மீதும் அதிக வரிகளை விதிக்கும், இதன் முக்கிய நோக்கம், மக்களின் வாங்கும் சக்தியை குறைப்பதாகும். மக்களிடம் செலவு செய்ய குறைவான பணம் இருந்தால், அவர்களின் நுகர்வும் குறையும். இது விலைகளின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த, அரசாங்கம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கையை பின்பற்றும். எடுத்துக்காட்டாக, உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கும் போது, அப்பொருட்களின் ஏற்றுமதி தடைச்செய்யப்படும். அல்லது ஏற்றுமதி செய்யப்படும் அளவு கட்டுப்படுத்தப்படும். எந்த ஒரு பொருளாவது பற்றாக்குறை ஏற்பட்டால், அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து, இறக்குமதி செய்துகொண்டு, சந்தை விலைகளைக் காட்டிலும், குறைவான விலைக்கு அரசாங்க நிறுவனங்களான இந்திய தேசிய விவசாய கூட்டறவு விற்பனை கூட்டமைப்பு (NAFED) மற்றும் இதர கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்கிறது. வர்த்தகர்கள் பொருட்களை பதுக்கி வைத்து பற்றாக்குறையை உருவாக்கும் போது சட்டமுறைகளை பின்பற்றுகிறது.



SCERT TELANGANA

## முக்கிய சொற்கள்

1. வாழ்க்கை செலவுகள் 2. பணவீக்கம் 3. நுகர்வோர் விலைக்குறியீடு
4. மொத்த விலைக்குறியீடு 5. நிர்வாக விலைநிர்ணய முறை

## உனது கற்றலை மேம்படுத்துக

1. விலைகளை கட்டுப்படுத்த வேண்டியதின் தேவை ஏன் உள்ளது?(AS1)
2. விற்பனையாளர்/உற்பத்தியாளரால் விலைகள் எவ்வாறு நிர்ணயிக்கபடுகின்றன?(AS1)
3. வாழ்க்கைக்கான செலவுகள் மற்றும் வாழ்க்கைத் தரம் இடையே உள்ள வேறுபாடு யாது.(AS1)
4. வாழ்க்கைக்கான செலவு அதிகரிப்பதால் மிகவும் பாதிக்கப்படுவது யார்?(AS4)
5. பணவீக்கம் ஏற்பட்டால் எவ்வகுப்பினர் அதிக வருவாய் பெறுவாய்?(AS4)
6. மொத்த விற்பனை விலைகுறியீடு எவ்வாறு நுகர்வோர் விலை குறியீட்டிலிருந்து வேறுபடுகிறது?(AS1)
7. உணவுப்பொருட்களின் பணவீக்கம் எவ்வாறு நுகர்வோர் பொருட்களின் குறியீட்டிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?(AS1)
8. நுகர்வோர் விலைக்குறியீட்டின் பயன்கள் யாவை?(AS1)
9. நுகர்வோர் விலைக்குறியீட்டை அளவிடுவதில் உள்ள ஐந்து பிரச்சனைகள் யாவை?(AS1)
10. ‘விலைகளை கட்டுபடுத்துவதில் அரசாங்கத்தின் பங்கு’ எனும் பத்தியை படித்து பின்வரும் வினாவிற்கு விடையளி. அரசின் வருவாயை, விலை நிர்ணய முறை எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது? விவாதி?(AS2)
11. உங்கள் குடும்பம் பயன்படுத்தும் ஏதேனும் ஐந்து பொருட்கள் (அல்லது) சேவைகளை குறிப்பிடுங்கள். அவற்றின் அடிப்படையில் நுகர்வோர் விலை குறியீட்டு பட்டியலை அமைத்துகாட்டுக.(AS3)

| 1 | 2 | 3 | 4=2x3 | 5 | 6 | 7=5x6 |
|---|---|---|---|---|---|---|
| பொருட்கள் ........................... சேவைகள் | சென்ற மாதத்தின் விலை | சென்ற மாதத்தின் அளவு | சென்ற மாதத்தின் செலவு | இந்த மாதத்தின் விலை | இந்த மாதத்தின் அளவு | இந்த மாதத்தின் செலவு. |
| 1. | ரூ. | | ரூ. | ரூ. | | ரூ. |
| 2. | ரூ. | | ரூ. | ரூ. | | ரூ. |
| 3. | ரூ. | | ரூ. | ரூ. | | ரூ. |
| 4. | ரூ. | | ரூ. | ரூ. | | ரூ. |
| 5. | Rs. | | ரூ. | ரூ. | | ரூ. |
| **மொத்த செலவு :** | | | **ரூ.1500** | **மொத்தசெலவு :** | | **ரூ.** |

நுகர்வோர் விலைக்குறியீட்டை எழுதவும்:______________________%

சென்ற மாதத்துடன் ஒப்பிடும் போது உங்களின் செலவு எவ்வளவு அதிகரித்தள்ளது? ______________

SCERT TELANGANA

12. கீழ்காணும் வாக்கியங்கள் படித்து சரி அல்லது தவறு என்று அடைப்பில் குறித்திடுக.(AS1)

(a) பணவீக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கிறது ( )

(b) பணத்தின் மதிப்பு, அதன் வாங்கும் சக்தியில் ஏற்படும் மாற்றத்தை கொண்டு, அளவிடப்படுகிறது. ( )

(c) வாழ்க்கைச் செலவுகள் மாறுவதால், ஓய்வூதியம் பெறுவோரின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படாது. ( )

(d) மத்திய அரசாங்கத்தின் ஊழியர்களுக்கு அகவிலைப்படி தருவதன் மூலம் விலைவாசி ஏற்றத்தின் பாதிப்பிற்கு ஈடு செய்யப்படுகிறது. ( )

(e) மொத்த விலைகுறியீடு (WPI) என்பது நுகர்வோர் பொருட்களின் விலைமட்டங்களில் ஏற்படும் மாற்றங்களை மட்டும் அளவிடுகிறது. ( )

13. கீழ்காணும் பட்டியல் தொழிற்சாலைப் பொருட்களின் பொருட்களின் மொத்த விலை குறியீடுகள். அதற்கான கோட்டு வரைபடத்தை வரைக. அதையடுத்துள்ள வினாக்களுக்கு விடையளி.(AS3)

| ஆண்டு | நிலக்கரி | பருத்தி துணி | உரங்கள் | சிமெண்ட் | உருக்கு இரும்பு |
|---|---|---|---|---|---|
| 2005-06 | 118 | 99 | 102 | 102 | 100 |
| 2006-07 | 118 | 97 | 104 | 119 | 105 |
| 2007-08 | 122 | 99 | 106 | 138 | 119 |
| 2008-09 | 151 | 103 | 107 | 139 | 137 |
| 2009-10 | 156 | 107 | 108 | 149 | 124 |
| 2010-11 | 165 | 115 | 117 | 151 | 136 |

(a) எந்தப் பொருளின் விலை மிகவும் அபரிதமாக உயர்ந்துள்ளது?

(b) பருத்தி துணி மற்றும் உரங்களின் விலை மிகவும் குறைவாக உயர்ந்ததின் காரணங்கள் எவையாக இருக்கும்?

14. பொது விநியோக முறையை ஒழுங்காக நிர்வகிக்கத் தேவையான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் கொண்ட ஒரு கடிதத்தை உன் தாசில்தாருக்கு எழுது.(AS6)

SCERT TELANGANA

பாடம்

# 11 அரசாங்கத்தின் வரவு செலவு திட்டமும் வரிவிதிப்பும்

## அரசாங்கத்தின் பங்கு

பெரும்பாலான நவீன சமுதாயங்களில் எண்ணற்ற முக்கியப்பணிகளுக்கு அரசாங்கம் பொறுப்பு வகிக்கிறது. இவற்றில் மிகவும் மரபுவழிப் பணிகளான நாட்டைப் பாதுகாத்தல், உள்நாட்டு சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநிறுத்துதல் போன்றவை அடங்கும்.

அதோடு மட்டுமின்றி, அரசாங்கமானது பள்ளிகள், கல்லூரிகள், நூலகங்கள், ஆரோக்கிய மையங்கள், மருத்துவமனைகள், அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் பலவிதமான பிற பொது நிறுவனங்களை அமைத்து நடத்தும் பொறுப்பையும் வகிக்கிறது. பொதுப் போக்குவரத்து அமைப்பு மற்றும் சாலை கட்டுமானப் பணி மற்றும் இரயில்வேக்களை அரசாங்கம் அமைத்து நிர்வகிக்கிறது. நீர், சுகாதாரம், மின்சாரம் போன்ற பணிகளுக்கும் அரசாங்கம் முக்கிய பங்கு வகிக்க வேண்டியுள்ளது.

ஒரு பொதுவசதியின் முக்கியத் தன்மையானது ஒருமுறை வழங்கப்படும் போது அதன் நன்மைகள் பல மக்களாலும் பகிர்ந்துகொள்ளமுடியும். நீங்கள் இதைக் குறித்து எட்டாம் வகுப்பில் படித்திருப்பீர்கள். எடுத்துக்காட்டாக, கிராமத்திலுள்ள ஒரு பள்ளி பல குழந்தைகள் கல்விபெற உதவும். அதேபோன்று, ஒரு பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டால் அது பலமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். விவசாயிகள் தங்கள் வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய பம்பு செட்டுகளை நடத்த முடியும், தொழிற்சாலைகள், கடைகள், அலுவலகங்கள் மற்றும் சந்தைகள் நடைபெறவும் நம்பகமான மின்சாரம் தேவைப்படுகிறது. மாணவர்கள் படிப்பது எளிமையாகிறது. கிராமம் அல்லது நகரத்திலுள்ள பெரும்பாலான மக்கள் ஏதோ ஒரு வகையில் நன்மையடைகின்றனர். இந்த பொது வசதிகள் அனைத்தும் அனைவருக்கும் கணிசமான விலையில் கிடைக்க வேண்டும். இதற்காக அரசாங்கம் பொறுப்பு வகிக்க வேண்டும். அது சுயமாக இப்பணியை எடுத்துக்கொள்ளலாம் அல்லது மற்றவர்களைக் கொண்டு அமைக்கப்படவேண்டும்.

பொது வசதிகளை வழங்குவதோடு வாழ்வாதாரங்களைக் காக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. கிராமப்புறங்களில் வேலை செய்யும் உரிமை மற்றும் MGNERGA வைப் பற்றியும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். தேவையின் அடிப்படையில் வேலை தருவதும் உழைப்பாளர்களுக்கு கூலிகள் வழங்குவதும் தேவைப்படும் முதலீட்டை செலுத்துவதும் அரசாங்கத்தின் பொறுப்பு என்று இச்சட்டம் கட்டளையிடுகிறது. PDS கடைகளில் நியாய விலையில் உணவு தானியங்களை வினியோகிப்பது சீரமைக்கப்பட்டு அரசாங்கத்தால் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. நாம் முன்பே கண்டது போல, இவை ஏழைகளின் உணவுப் பாதுகாப்பிற்கு மிகவும் முக்கியமானது.

கடந்த காலத்தில் இந்திய அரசாங்கமும் கனரகத் தொழில்களான பொறியியல், மின்சார உற்பத்தி, எஃகு உற்பத்தி, பெட்ரோலியம் தோண்டி எடுத்தல் மற்றும் சுத்திகரித்தல் போன்றவற்றை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்தது. மேற்கூறியவை இல்லையென்றால் தொழில்மயமாக்கப் கூட மிகவும் சிரமமாக இருந்திருக்கும். நீங்கள் அடிப்படைத் தொழில்களைக் குறித்து இந்த நூலில் கற்கலாம்.

**தொழில்மயமாக்கல்**

ஒரு பகுதியில் அல்லது நாட்டில் தொழில்களின் வளர்ச்சியையே தொழில்மயமாக்கல் என்பர்.


SCERT TELANGANA

- உங்கள் நகரம்/மாநகரம்/கிராம வளர்ச்சிக்கு அரசாங்கம் வகிக்கும் பங்கினை நீ கண்டதுண்டா? கலந்துரையாடு.
- உங்கள் பகுதியின் செய்தித்தாள்களைப் படித்து அரசின் செலவுகளைப் பற்றிய விவரங்களை சேகரித்துப் பட்டியலிடு.
- பொது வசதிகளுக்கும், பிற நடவடிக்கைகளுக்கும் அரசாங்கத்திற்கு பணம் எங்கிருந்து கிடைக்கிறது என்பதை உன்னால் ஊகிக்கமுடியுமா?

**மானியங்கள்**

விலைகளை குறைந்த அளவில் வைத்துக்கொள்ள, சேவைகளுக்கான விலையை குறைப்பதற்காக அல்லது பொருட்களின் உற்பத்திக்கு ஆகும் விலைகளை குறைப்பதற்கு ஒரு அரசாங்கத்தாலோ அல்லது ஒரு அமைப்பாலோ செலுத்தப்படும் பணத்தை மானியம் என்பர்.

கிராமப்புறங்களில் நீர்ப்பாசன திட்டத்திற்கான முதலீடுகள் விவசாய விரிவாக்கப் பணிகள் போன்றவற்றை அரசாங்கம் மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. விவசாயிகளுக்கு மற்ற தொழிற்சாலைகளை விட அரசாங்கம் உரங்களைக் குறைந்த விலைக்கு விற்று உதவிசெய்கிறது. அரசாங்கம் தொழிற்சாலைகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதால் விவசாயிகள் உரங்களுக்கு ஓர் இறுதி விலையைத்தர முடிகிறது. தொழிற்சாலைகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் இந்தப் பணத்தை உரங்களின் மானியம் என்பர். இது இல்லையென்றால் தொழிற்சாலைகள் விதிக்கும் விலைகள் மிக அதிகமான இருக்கும். இதே போன்று அரசாங்கம் உற்பத்தியாளர்களுக்கு பல பொருட்களுக்கு மானியத் தொகை வழங்கி நஷ்டத்தை ஈடுசெய்வதால் பொருட்கள் மிகவும் தேவையானவர்களுக்கு வாங்கக்கூடிய விலையில் வைக்கப்படுகின்றன. இவ்வகையில் நியாய விலைக்கடைகளில் விற்கப்படும் மண்ணெண்ணெய் மற்றும் உணவு தானியங்களுக்கு சமையல், எரிவாயுவுக்கும் அரசாங்கம் மானியத்தொகை வழங்குகிறது. இந்த மானியங்கள் எவ்வளவு பயன்மிக்கவையாக உள்ளன என்னும் அம்சங்களின் மீது தற்காலத்தில் விவாதங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவை மக்களுக்கு நன்மை தருகின்றனவா? அவற்றை சீரமைக்க வேறு ஏதேனும் சிறந்த வழிமுறைகள் உள்ளனவா இந்த அத்தியாயத்தில் இவற்றில் சில பிரச்சனைகள் குறித்து படிக்கவிருக்கிறீர்கள்.




படம் 9.1 : அரசாங்கத்தின் பணிகள்

பல்வேறு பங்கினை நிறைவேற்ற அரசுக்குப் பணம் போதிய அளவில் தேவைப்படுகின்றது. அரசாங்கத்திற்கு பல்வேறு பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் பணமானது வரிகள் வடிவில் மக்களிடமிருந்து திரட்டப்படுகின்றது. அரசாங்கம் திரட்டும் வரி வகைகளைப் பற்றி அடுத்த பிரிவுகளில் நீங்கள் கற்கப் போகிறீர்கள். இவ்வாறு திரட்டப்படும் வரிகள் அரசாங்கத்தின் வரிவருவாய் எனப்படும். அரசாங்கத்தின் செலவுகளை சந்திக்க/நிதியளிக்க வரிவருவாய் மிகவும் அவசியமாகும். வருகிற ஆண்டிற்காக பல்வேறு திட்டங்களின் மீது செய்யவேண்டிய எதிர்பார்க்கப்படும் செலவுகள் கொண்ட ஆண்டு வரவுசெலவு திட்டத்தை நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் வைக்கிறார். அது எவ்வழிமுறைகளில் பல்வேறு வரிவருவாய் திரட்டுதல் மூலம் இச்செலவுகளை செய்யவிருக்கிறது என்பதையும்

குறிப்பிடுகின்றது. இதே போன்று ஒவ்வொரு மாநில சட்டசபைகளிலும் அம்மாநிலத்திற்கான அரசின் வரவு செலவு திட்டத்தை தயாரிக்கிறது.

## அரசாங்கத்தின் செலவுகள்

இந்திய அரசாங்கத்தின் உண்மையான செலவுகள் பற்றி புரிந்துகொள்ள அது எவ்வளவு செலவு செய்கிறது என்பதைப் பார்ப்போம். 2011-2012ல் அரசாங்கம் ரூ.23,00,000 கோடிகளை (23 லட்சம் கோடி) செலவு செய்தது. இது உண்மையிலேயே ஒரு பெரிய தொகை ஆகும். இந்தியப் பொருளாதாரத்தின் மொத்த செலவு செய்தலில் சுமார் நான்கில் ஒரு பாகம் அரசாங்கத்தாலேயே செய்யப்படுகின்றது. மற்ற நான்கில் மூன்று பாகம் செலவுசெய்தல் தனியார் துறையால் செய்யப்படுகின்றது. உணவு, கல்வி, பயணம், உடை, வீடு, ஆரோக்கியம், பொழுது போக்கு போன்றவற்றின் மீது செலவிடும் குடும்பங்கள் மற்றும் சேவை அல்லது பொருள் உற்பத்திக்கு கச்சாப்பொருட்கள், இயந்திரங்கள், பிற உற்பத்திப் பொருட்கள், வேலை செய்வோருக்கு வழங்கப்படும் விற்பனை மற்றும் சந்தை மற்றும் வியாபாரத்தை நடத்த செய்யப்படும் பிற செலவுகள் போன்றவற்றை வியாபார அமைப்புகள் செய்யவேண்டியுள்ளது.




வட்ட வரைபடமானது 2011-12ஆண்டில் அதாவது ஏப்ரல் 1, 2011 முதல் மார்ச் 31, 2012வரை இந்தியாவில் அரசாங்கம் பல்வேறு பிரிவுகளுக்காக செய்த செலவுகளை எவ்வளவு பங்கு எதற்கு செலவழித்தது என்பதைக் காட்டுகிறது. இங்கு அரசாங்கம் என்பது மத்திய அரசாங்கத்தையும், அனைத்து மாநில அரசாங்கத்தையும் குறிக்கும். 2011-12ஆம் ஆண்டில் கல்விக்காகவும், கலைகலாச்சாரத்திற்காக மொத்த செலவில் 12% செலவிடப்பட்டது. இதில் ஊழியர்களின் சம்பளங்கள், பள்ளிகளை நடத்துவதற்கான செலவுகள், புதிய பள்ளிக்கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேவையான முதலீடுகள், புதிய கணினிகள் வாங்குதல், நூல்களை வாங்குதல் போன்றவை அடங்கும்.

இதே போன்று மொத்த செலவில் 4% சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் மீதும் 4% கிராமிய வளர்ச்சிக்கும் பிறவற்றிற்கும் செய்யப்படுகிறது.

நீங்கள் வட்ட வரைபடத்தைப் பார்த்தால், வளர்ச்சி நடவடிக்கைகளுக்கான செலவோடு, நிர்வாகம், ஓய்வூதியம், வட்டி மற்றும் பாதுகாப்பு போன்ற பிறசெலவுகள் இருப்பதையும் நீங்கள் காணலாம். இவை வளர்ச்சிக்கு நேரடியாக உதவிபுரியாவிட்டாலும், மற்றவற்றைப் போன்றே அவசியமானவையாகும். அரசாங்கத்தின் பல்வேறு துறைகளையும், திட்டங்களையும், மாநில அமைப்புகளையும் (சட்டசபை, செயல்துறை, நீதித்துறை) நடத்தவும், நிர்வாகச் செலவுகள் உள்ளன. அரசாங்கத்திடமிருந்து ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தையும் அரசாங்கம் வழங்குகின்றது. பின்னர், வட்டிச் செலுத்துகைகளின் மீதான செலவுகளும் உள்ளன. ஒவ்வோராண்டும் இந்திய அரசாங்கம் தன் செலவுகளை சந்திக்க சிறிதளவு பணத்தைக் கடனாக பெறவேண்டியுள்ளது. அவ்வாறு வாங்கிய கடந்தகால கடன்களுக்கும் அரசாங்கம் வட்டி செலுத்த வேண்டியுள்ளது.

ஆரோக்கியத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும் அரசாங்கம் எவ்வளவு செலவிடவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமைகளின் மீதும் மக்களின் குரல் மீதும் ஆதாரப்பட்டுள்ளது. ஒவ்வோராண்டும், வரவுசெலவு திட்டம் உருவாக்கப்படும் போதும், வரவுசெலவு திட்டத்தை முன்வைக்கும்போதும் இப்பிரச்சனைகளின் மீது ஊடகங்களின் கவனம் இருப்பதை நீங்கள் காணலாம்.

SCERT TELANGANA

- மேற்கூறிய பிரிவில் உள்ள தகவலைப் பயன்படுத்தி உணவு மானியத்தின் மீது அரசாங்கத்தின் செலவினை கணக்கிடு. இந்தப் பணம் முழுவதும் எதன்மீது எதற்காக செலவிடப்படுகின்றது என்பதைக் குறித்துக் கலந்துரையாடவும்?

- பிரிவு-1ல் விவாதிக்கப்பட்டது போல வட்ட வரைபடத்தில் அரசாங்கத்தால் சில செலவுகளைச் செய்வதில் வகிக்கப்படும் பங்கு குறித்து உன் ஆசிரியரின் உதவியுடன் விவரிக்க முயற்சியெ்.

- 1947-48ல் சுதந்திர இந்தியாவிற்கான வரவு செலவுத்திட்டம் ரூ.197 கோடிகள் மட்டுமே. அப்போது முதல் வரவுசெலவுத்திட்டத்தில் இதுபோன்ற பெரிய அளவில் அதிகரிப்பிற்கான பல்வேறு காரணங்கள் என்ன?

- பாராளுமன்றத்திற்கு அரசாங்கத்தின் வரவுசெலவு திட்டத்தின்மீது அதிகாரம் ஏன் தரப்பட்டுள்ளது என நீ நினைக்கிறாய்?

- உரமானியத்தைக் குறைக்க அரசாங்கம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் பொருள் யாதெனில் அரசாங்கத்தால் உரவிலையை கட்டுப்படுத்த முடியவில்லை என்பதாகும். விவசாயிகள் உயர்ந்த சந்தை விலைகளில் உரங்களை வாங்க வேண்டியிருந்தது. தற்போது உரத்தொழிற்சாலைகளால் இழக்கப்படும் இழப்பை அரசாங்கம் ஈடுசெய்ய வேண்டியுள்ளது. உரமானியம் ஒரு முறை நீக்கப்பட்டுவிட்டால் அரசாங்க வரவு செலவு திட்டத்தில் பிறமுக்கியச் செலவுகளைச் செய்ய இடமிருக்கும் என்று கருதப்படுகிறது. மேலும் சிலர் விவாதிப்பது யாதெனில் மானியம் வழங்கப்பட்ட உரங்கள் சிறு விவசாயிகளுக்குப்பயன்படுவதில்லை. மாறாக பெரிய விவசாயிகள் அதை அளவுக்கதிகமாக பயன்படுத்துகின்றனர்.

  விவசாயத்தில் உரங்களை பயன்படுத்தும் விவசாயியாக உன்னை கற்பனை செய்துகொள். மேலும் உரங்களுக்கு மானியம் வழங்குதல் மிகவும் அவசியம் என்று நீ உண்மையாக நம்புவதாக நினை. நீ உன் வழக்கை எவ்வாறு வாதாடுவாய்? நிதியமைச்சருக்கு நீ ஒரு கடிதம் எழுது.

வரவு செலவு திட்ட செலவிடுதல் மீதான முடிவுகள் பெரும்பாலும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டாலும் அரசாங்கத்திற்கும், தொழில் குழுக்கள், விவசாயிகளின் குழுக்கள், குடியுரிமை சமுதாய செயலாளர்கள் போன்றவர்களுக்குமிடையே ஆலோனைகள் நடத்தப்படும். மக்களில் சில பிரிவுகளை பிரதிநிதித்துவம் செய்யும் குழுக்கள் தங்கள் கருத்துக்களையும் கோரிக்கைகளையும் எழுப்புவர். சில சமயங்களில் அரசாங்கத்தின் முன் தங்கள் முரண்பாடான கருத்துகளையும் வைப்பர். மக்களின் இதுபோன்ற வலியுறுத்தல்கள் மூலம் அவர்கள் சமுதாயத்துறைகளான கல்வி, ஆரோக்கியம், உணவு மானியம் போன்றவற்றின் மீது அதிக அளவில் செலவிடும்படி அரசாங்கத்திடம் கோரி வருகின்றனர்.

வரவு செலவுதிட்டக் கருத்துக்களின் மீது அரசாங்கத்தைக் தடுக்கும் உரிமை சட்டமியற்றும் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் அதன் முன்வைக்கப்படும் வரவுசெலவுத்திட்டத்தின் பல்வேறு பிரச்சனைகள் மீது விவாதம் நடத்தி அரசாங்கத்தின் செலவு முன்மொழிதல்களை ஒப்புகொள்கின்றது. பாராளுமன்றம், அரசாங்கம் தன் செலவுகளுக்காக தேவைப்படும் பணத்தை எடுத்துக்கொள்ள அனுமதிக்கின்றது. இதேபோல் பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தின் அதிகாரமின்றி எவ்வகையான வரியும் விதிக்கப்படாது. இவ்வாறு அரசியல் சட்டத்தின் தேவையின்படி, மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு வரவுசெலவுதிட்ட முடிவு செய்தலில் ஒரு முக்கிய இடம் உண்டு.

SCERT TELANGANA

## வரிகள்

வரிகள் அரசாங்கத்திற்கு வருவாய்க்கான முக்கிய ஆதாரமாக உள்ளன. அரசாங்கத்தால் பலவகையான வரிகள் வசூலிக்கப்படுகின்றன. நீங்கள் இவற்றுள் சில வரிகளான மதிப்புக்கூட்டு வரி (VAT), சேவை வரி, உற்பத்தி தீர்வை, வருவாய் வரி, சொத்துவரி, இறக்குமதி மீதான சுங்கத்தீர்வைகள் ஆகியவற்றை அறிந்திருப்பீர்கள்.

வரிகளை இரண்டு வகைகளாக வகைப்படுத்தலாம். மறைமுக மற்றும் நேரடி வரிகள்

## நேரடி வரிகள்

நாம் வாங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மீது நாம் வரிகளை செலுத்துகிறோம். நுகர்வோர் செலுத்தவேண்டிய இறுதிநிலை விலைக்கு வரிகளை எவ்வாறு உற்பத்தியாளர் அல்லது வாணிகர் வரிகளை சேர்க்கிறார் என்பதை நாம் காண்போம். பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையின் பல்வேறு நிலைகளை கடந்து வருவதால் ஒவ்வொரு நிலையிலும் அரசாங்கத்திற்கு வரிகள் செலுத்தப்படவேண்டும். இருப்பினும் மொத்த வரியானது கடைசியாக நுகர்பவருக்குக் கடத்தப்படுகிறது. இவ்வாறு பொருட்கள் மற்றும் சேவைகளின் மீதான வரிகள் மறைமுக வரிகள் என்று அழைக்கப்படுகின்றன. அதை நுகர்வோர் மறைமுகமாக செலுத்துகின்றனர்.

இதோடு சேர்ந்து, தனிமனிதர்கள் மீதும் அவர்களின் வருவாய் மீது நேரடியாக விதிக்கப்படும் வரிகளும் உள்ளன அல்லது கம்பெனிகள் அல்லது வியாபாரத்தால் ஈட்டப்படும் இலாபங்களின் மீது நேரடியாக விதிக்கப்படும் வரிகளும் உள்ளன. தனிமனிதர்கள் அல்லது வியாபாரங்களால் நேரடியாக இந்த வரிகள் அரசாங்கத்திற்கு செலுத்தப்படுகின்றன. எனவே, அவை நேரடி வரிகள் என்று அழைக்கின்றனர்.

நேரடி வரிகளில் இரண்டு வகைகள் உள்ளன, வருவாய் வரி மற்றும் கம்பெனி வரி.

தொழிற்சாலைகளை அல்லது வியாபாரங்களை நடத்தும் கம்பெனிகள் வரி செலுத்த வேண்டும். கம்பெனிகள் அல்லது வியாபாரங்கள் அவற்றின் உற்பத்திப் பொருட்கள் அல்லது ஊழியங்களை விற்பதன் மூலம் பணத்தைப் பெறுகின்றன. அவர்களின் வருவாய்களிலிருந்து அனைத்து செலவுகளையும் (கச்சாப் பொருட்கள் மீதும், ஊதியங்கள் வழங்குவது போன்றவை) கழித்தபின் மீதமிருக்கும் பணத்தின் அளவை கம்பெனியின் அல்லது தொழிற்சாலையின் இலாபம் என்கிறோம். இந்த லாபத்தின் மீது விதிமுறைகளின்படி கம்பெனி வரி செலுத்தப்பட வேண்டும்.

தனிமனிதர்களின் சொந்த வருமானத்தின் மீது விதிக்கப்படுவது வருவாய் வரி ஆகும். தனிமனித வருமானங்களில் கூலிகள், சம்பளங்கள், ஓய்வூதியங்கள் போன்ற பலவகைகள் உள்ளன. ஒரு தனிமனிதர் தான் வங்கிகளில் இருப்பு வைத்துள்ள பணத்தின் மீது வட்டி வருவாயும் ஈட்டமுடியும். ஒரு தனிநபர் தனக்குச் சொந்தமான வீட்டின் மீது வீட்டு வாடகை போன்ற சொத்துகளின் மீது வாடகையையும் பெறலாம். இவை அனைத்தும் வருவாய் எனக்கருதப்படுவதால் இவற்றிற்கு வரி செலுத்தவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் வருவாய் ஈட்டுபவர்கள் மீது மட்டும் வருவாய் வரி விதிக்கப்படுகின்றது. ஈட்டப்பட்ட வருவாயின் சதவீதமாக இது விதிக்கப்படுகிறது. அதிக வருவாய் ஈட்டுபவர்கள் தங்கள் வருவாயின் ஒரு பெரிய விகிதத்தை வரியாகச் செலுத்த வேண்டும்.

SCERT TELANGANA

## வருமானத்திலிருந்து வரிவசூலிக்கும் சிறந்த வழிமுறை என்ன?

1. ஒவ்வொருவரும் ஒரே அளவு வரித்தொகையை செலுத்துவது நன்றாக இருக்கும் என நீ நினைத்திருக்கலாம். கீழ்காணும் மூன்று நபர்களின் வருவாய் விவரங்களைப்பார்.

| நபர் | பணி | மாதவருவாய் (ரூபாய்களில்) | மாதத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையான வரி (ரூபாயில்) |
|---|---|---|---|
| ஜோதி | தினக்கூலி உழைப்பாளி | 1500 | 50 |
| ஆசிப் | பள்ளி ஆசிரியர் | 8000 | 50 |
| நிதிஷ் | வியாபாரி | 30,000 | 50 |

மூன்று பேர்களில் ஒவ்வொருவரும் ஒரேவிதமான வரித்தொகையை செலுத்துவது உண்மையிலேயே சிறந்ததா? ஜோதியால் தன் குழந்தைகளுக்கு சரிவர உணவளிக்கக்கூட முடியாத நிலையில், அவர் ரூ.50ஐ வரியாக செலுத்துவது நல்லதா?

2. ஒவ்வொருவரும் அவர்கள் ஈட்டுவதில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை வரியாக செலுத்தச் சொன்னால் மிகவும் நன்றாக இருக்கும் எனவும் நீ நினைத்திருக்கலாம். ஒவ்வொருவரும் 10% வரியை செலுத்துகிறார்கள் எனில் ஒவ்வொருவரும் எவ்வளவு செலுத்துவார்கள் என்று கணக்கிடு.

| நபர் | மாத வருவாய் ரூபாய்களில் | மாதத்திற்கு வரியாக நிர்ணயிக்கப்பட்ட 10% தொதகை (ரூ) |
|---|---|---|
| ஜோதி | 1500 | |
| ஆசிப் | 8000 | |
| நிதீஷ் | 30,000 | |

இதுவும் நன்றாக இருக்குமா? ஜோதிக்கு தான் வாழ்வதற்குத் தேவையான அளவு வருவாய் இல்லை. ஆசிப்பிற்கு தன் வீட்டைக்கூட பழுதுபார்க்க போதிய அளவு வருவாய் இல்லை. ஆனால் நிதிஷ்க்கு தன் வருவாயில் 20% அளவினை வரியாக செலுத்தினால் கூட தனக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளை பெற அதிக அளவில் பணம் உள்ளது.

3. வரிகளை மிகவும் சிறப்புடையதாக்க மாதத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை உதாரணமாக ரூ.7000த்திற்கு அதிகமாக வருவாய் பெறுபவர்கள், மட்டும் வரி செலுத்தவேண்டும் என்று நீங்கள் கூறினால் அது மிகவும் சிறப்பாக இருக்கும். மிகவும் பணக்காரார்களாக உள்ளவர்கள் தங்களின் வருவாயில் ஒரு பெரும்பகுதியை வரிகளாக செலுத்தவேண்டும் எனவும் நீங்கள் கூறலாம் எடுத்துக்காட்டாக.

| நீங்கள் ஈட்டிய பணம் | வரியாக நீங்கள் செலுத்துவது |
|---|---|
| 7000த்திற்கு குறைவாக | 0% |
| 7001 முதல் 15000 வரை | 10% |
| 15,001 முதல் 25,000 வரை | 20% |
| 25,000த்திற்கு மேலாக | 30% |

ஒவ்வொரு நபரும் எவ்வளவு வரிசெலுத்துவர் என கணக்கிடு.

| நபர் | மாத வருவாய் (ரூபாய்களில்) | மாதத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட வரித்தொகை (ரூபாய்களில்) |
|---|---|---|
| ஜோதி | 1000 | |
| ஆசிப் | 6000 | |
| நிதீஷ் | 20,000 | |

இது நன்றாக இருக்குமா?



SCERT TELANGANA

## மறைமுக வரிகள்

மறைமுக வரிகள் பொருட்சேவைகளின் மீது விதிக்கப்படுகின்றன. பொருட்களின் மீது அனைத்து வரிகளையும் உள்ளடக்கியது என்று அச்சிடப்பட்ட அதிகபட்ச சில்லறைவிலை (MRP) யை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதேபோல், தொலைபேசி மற்றும் கைப்பேசி போன்ற பலவகையான சேவைகளுக்காக வாடிக்கையாளர்கள் செலுத்தும் விலையிலும் வரிகள் அடங்கியுள்ளன.

சில முக்கிய வரிகளை உதாரணமாக எடுத்தக்கொண்டு வரிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப்பற்றி காண்போம்.

உற்பத்தித் தீர்வை என்பது தொழிற்சாலைகளில் உருவாக்கப்படும் அல்லது தயாரிக்கப்படும் பொருட்களின் மீது விதிக்கப்படுவதாகும். ஒரு தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பொருள் அந்த தொழிற்சாலை வாயிற்படியை தாண்டுவதற்குள் அதன் மீதான உற்பத்தி வரி செலுத்தப்படவேண்டும். தொழிற்சாலையின் உரிமையாளர் அல்லது நிர்வாகி பணத்தை அரசாங்கத்திற்கு உற்பத்தி அளவைப்பொறுத்து செலுத்துவார்.


உற்பத்தித்தீர்வை தொழிற்சாலையிலிருந்தே விதிக்கப்படுகிறது. ஆனால் உண்மையில் பொருட்களை யார் வாங்குகிறார்களோ அவர்களுக்கு விதிக்கப்படுகிறது. தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்கள் பொருட்களின் விலையுடன் தாங்கள் வரியாக செலுத்தும் பணத்தையும் கூட்டி விற்கின்றனர். ஒரு தொலைக்காட்சி பெட்டியின் உற்பத்திக்கென ஆகும் செலவு ரூ.10,000 கம்பெனியானது அதன் உற்பத்தித்தீர்வை ரூ.1200ஐ அரசாங்கத்திற்கு செலுத்தும். இது தொலைக்காட்சிப் பெட்டியை இறுதியாக விற்கப்படும் போது சேர்க்கப்பட்டு அவ்வரிச்சுமையை வாடிக்கையாளர் ஏற்கிறார்.

| | |
|---|---|
| தயாரிப்பாளரின் அடக்கவிலை (இலாபம் உட்பட) | ரூ.10,000 |
| வரி | ரூ. 1,800 |
| நுகர்வோருக்கான விலை | ரூ.11,800 |

பொருட்களின் மீதான அனைத்துவரிகளும் விலையுடன் இணைக்கப்படும் போது குறிப்பிட்ட பொருட்களுக்கு வரிவிதிக்கும் போது அவற்றின் மொத்த விலை அதிகரிக்கின்றன. எடுத்துக்காட்டாக சைக்கிள்களை தயாரிக்க எஃகு குழாய்கள் தேவைப்படுகின்றன. எஃகினைத் தயாரிக்க எஃகு தொழிற்சாலைக்கு இரும்பும் நிலக்கரியும் தேவைப்படுகின்றது. இரும்பின் மீதான உற்பத்தித்தீர்வை அதிகரிக்கும் போது அதன் தாக்கம் சைக்கிள்களின் மீதும் இருக்கும். இரும்பால் தயாரிக்கப்படும் அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும். மேலும் எஃகினைத் தயாரிக்க இரும்பு பயன்படுத்தப்படுவதால் எஃகால் தயாரிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களின் விலைகள் கூட உயர்ந்துவிடும். இவ்வாறு இரும்பின் மீது வரிஉயர்ந்ததால் அது பல விளைவுகளை ஏற்படுத்துகிறது.



SCERT TELANGANA




இவ்வாறு அடிப்படை கச்சாப் பொருட்கள் மற்றும் பல பிற தொழிற்சாலைகளால் பயன்படுத்தப்படும் பொருட்களின் மீது அதிக அளவில் வரி விதிப்பதும் இடைநிலைப் பொருட்கள் ஒரு தொடர்வினையை அமைக்கிறது. இப்பொருளுடன் தொடர்புடைய அனைத்து விஷயங்களும், ஒரு வகையில் அல்லது பிற வகையில் தாக்கப்படுகின்றன.

1. தொலைக்காட்சிப் பெட்டி உதாரணத்தில் அதன் விலையில் எந்த விகிதத்தை நுகர்வோர் வரியாக செலுத்தினார்?
2. ஒரே வகையான பொருளை இருவர் தயாரித்தால் அவர்களின் ஒருவர் வரிசெலுத்தாமல் மீறினால் அவர் மற்றவரை விட எவ்விதத்தில் நன்மை அடைவார்?
3. இரும்பின் மீதான வரி அதிகரிக்கப்பட்டால் மற்ற எந்த விஷயங்களை இது பாதிக்கும்? சில உதாரணங்களை தரவும்.

## மதிப்புக் கூட்டு வரியாக சரக்கு மற்றும் சேவை வரி (GST)

இந்தியாவில் மதிப்புக் கூட்ட வரிக்கான ஏற்பாடுகள் பல ஆண்டுகளுக்கு முனன்னரே எடுக்கப்பட்டாலும், அது 2017ல் அறிமுகப்படுத்தப்பட்டது. அண்மைக்காலம் வரை பல வகையான மறைமுக வரிகள் நம் நாட்டில் நடைமுறையில் உள்ளன. சரக்குகளின் உற்பத்தி மீது சுங்கத்தீர்வை விதிக்கப்பட்டது. சரக்குகளின் விற்பனை மீது விற்பனை வரி விதிக்கப்பட்டது. சேவை வரியானது அலைபேசி சேவை, சிற்றுண்டி சேவை போன்ற சேவைகளின் விற்பனை மீது விதிக்கப்பட்டது. GST அறிமுகப்படுத்தப்பட்டதால் பல்வேறு மறைமுக வரிகள் சரக்கு மற்றும் சேவை வரி என்னும் ஒரே முறையின் கீழ் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இது உற்பத்தி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி எனும் இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.

நவீன உற்பத்தி மற்றும் விற்பனைச் செயல்முறை என்பது சிக்கலான ஒன்று மற்றும் இதில் பல படிநிலைகள் அடங்கியுள்ளது எளிமையான உற்பத்தி பொருளும் அதன் உற்பத்தியிலும், அதன்பின் விற்பனையிலும் குறைந்தபட்சம் சில படிநிலைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு படிநிலையிலும் சில மதிப்பு கூட்டப்படுகிறது. அதைக் கீழ்காணும் உதாரணத்துடன் புரிந்துகொள்வோம்.

ஒரு பிஸ்கட் உற்பத்தியாளர் தன்னுடைய மூலப்பொருட்களை முத்திரையிடப்படாத வளத்தி–ருந்து வாங்குகிறார். அவர் கோதுமைமாவு, சர்க்கரை போன்ற பொருட்களை வாங்கும்போது வரி விதிக்கப்படுவதில்லை. அவர் ரூ.450 மதிப்புமிக்க பிஸ்கட்களை தயாரிக்கிறார் எனக்கொள்வோம். அந்த எண்ணில் அவரின் அனைத்து செலவுகளும் அடங்கும் மூலப்பொருட்கள், உழைப்பாளருக்கான தொகைகள், ஊதியங்கள் அலுவலகம் மற்றும் தொழிற்சாலை வாடகை போன்றவை.

SCERT TELANGANA

அவர் தன்னுடைய லாபத் தொகையான ரூ.50ஐயும் சேர்த்தக்கொண்டால் மொத்த உற்பத்தியின் மதிப்பு ரூ.500 ஆகும். இது அவருடைய விற்பனை விலையாகும். அவர் பிஸ்கட்களை ஒரு வியாபாரிக்கு விற்கிறார். விற்பனையின்போது பிஸ்கட் உற்பத்தியாளர் குறிப்பிட்ட வரி விகிதத்தில் GSTஐயும் விதிக்க வேண்டும்.

GST விகிதம் 5% ஆகும்போது பிஸ்கட் உற்பத்தியாளர் ரூ.25ஐ வரியாக செலுத்த வேண்டும். (ரூ.500ல் 5%) பிஸ்கட்களை வாங்கும் வியாபாரிக்கு உற்பத்தியாளர் இதை விதிக்க வேண்டும். இந்த வரியை உற்பத்தியாளர் வியாபாரியிடமிருந்து வசூ-த்து அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டும் அல்லது வைப்புத் தொகையாக வைக்கவேண்டும்.

வியாபாரியின் பில் இவ்வாறு உள்ளது

| | |
|---|---|
| **பிஸ்கட்களின் மதிப்பு** | **ரூ.500** |
| GST | ரூ. 25 |
| **மொத்தம்** | **ரூ.525** |

மொத்த விற்பனை வியாபாரிக்கு வாங்கப்பட்ட சரக்குகளின் மதிப்பு ரூ.500/- வியாபாரி சரக்குகளை சேமித்து வைக்கிறார். ஒரு கடையைய நிர்வகிக்கிறார், வேலையை செய்ய பணியாட்களின் குழுவை அமர்த்துகிறார். அவர் இந்த பிஸ்கட்களை சில்லறை அங்காடிக்கு ரூ.600க்கு விற்கிறார். விற்கப்பட்ட சரக்குகளின் இந்த மதிப்பில் அவருடைய அனைத்து செலவுகளும் இலாபமும் அடங்கும். ரூ.600 என்பது அவருடைய உற்பத்தி பொருளின் மதிப்பு எனக் கருதப்படுகிறது. விற்கும்போது GST 5%ல் ரூ.30 GST என அவர் விதிக்க வேண்டும். உற்பத்தியாளர் சில்லறை வியாபாரிக்கு தரும் பில் இவ்வாறு உள்ளது.

| | |
|---|---|
| **பிஸ்கட்களின் மதிப்பு** | **ரூ.600** |
| GST | ரூ. 30 |
| **மொத்தம்** | **ரூ.630** |

மொத்த விற்பனை வியாபாரி அரசாங்கத்திற்கு எவ்வளவு வரியை செலத்துகிறார்? அவர் ரூ.25ஐ GST யாக ஏற்கனவே செலுத்தியிருப்பதை நினைவுகூர்க. அவர் பிஸ்கட் உற்பத்தியாளரிடமிருந்து பிஸ்கட் வாங்கும்போது அவர் வரியாக செலுத்திய ரூ.25ம் அடங்கும். முன்னதாக செலுத்திய ரூ.25 அரசாங்கத்திற்கு வரி செலுத்தும்போது ரூ.30-ருந்து கழிக்கப்படுகிறது. அவர் சில்லறை வியாபாரியிடமிருந்து ரூ.30ஐ வசூ-த்துவிடுவதால் தனது உள்ளீட்டிற்கு வரியைய ஏற்கனவே செலுத்தியதால் அவருக்கு ரூ.25 வரவுத் தொகையாக பெறுகிறார். இவ்வாறு அவர் அரசாங்கத்திற்கு ரூ.5ஐ மட்டும் செலுத்துகிறார்.

இதை மற்றொரு வகையில் பார்க்கலாம். மொத்த விற்பனை வியாபாரிக்கு விற்கப்பட்ட சரக்குகளின் மதிப்பு ரூ.600 மற்றும் வாங்கப்பட்ட உள்ளீடுகளின் மொத்த மதிப்பு ரூ.500, கூட்டப்பட்ட மதிப்பு என்பது சரக்குகள் மற்றும் சேவைகளின் மதிப்புகளுக்கும் (வெளியீடுகளுக்கும்) வாங்கப்பட்ட உள்ளீடுகளின் மதிப்களுக்கிடையே உள்ள வேறுபாடே ஆகும். ரூ.100க்கு 5% வரி விகிதம் ரூ.5. வியாபாரி அரசுக்கு செலுத்திய அதேதொகை தான் இது. இது கூட்டப்பட்ட மதிப்பின் மீது (ரூ.100) வியாபாரியால் செலுத்தப்பட்ட வரியே அன்றி மொத்த மதிப்பின் மீது (ரூ.600) செலுத்தப்பட்ட வரியல்ல. ஏற்கனவே உற்பத்தியின் உள்ளீடுகளின் மீது வரி விதிக்கப்பட்டு விடுவதால் மீண்டும் ஒருமுறை வரிவிதிக்கப்படமாட்டாது. உள்ளீடுகளின் மீது வரி விதிக்கப்பட்டுள்ள சான்றை வியாபாரி உற்பத்தியாளரின் பில்லைக் காட்ட வேண்டும்.



SCERT TELANGANA

சில்லறை வியாபாரி பிஸ்கட்களை ரூ.600க்கு வாங்கி ரூ.30 வரியையும் செலுத்திவிடுகிறார். அவர் தற்போது தன்னுடைய பிஸ்கட்களை அவருடைய அனைத்து விலைகள் மற்றும் லாபத்தையும் உள்ளடக்கி ரூ.700க்கு விற்கிறார். இறுதியாக நுகர்வோரின் பில் இவ்வாறு இருக்கும்.

| | |
|---|---|
| **பிஸ்கட்களின் மதிப்பு** | **ரூ.700** |
| GST | ரூ. 35 |
| **மொத்தம்** | **ரூ.735** |

இருப்பினும் சில்லறை வியாபாரியால் செலுத்தப்பட்ட வரி என்பது ரூ.35யாக வரி வசூ-க்கப்பட்டதற்கும் உள்ளீடுகளின் மீது ஏற்கனவே செலுத்தப்பட்ட வரி 30க்கும் இடையே உள்ள வேறுபாடு. சில்லறை வியாபாரியால் செலுத்தப்பட்ட வரி ரூ.5 ஆகும்.

1. உற்பத்தியாளர் அரசாங்கத்திற்கு செலுத்தியவர்...........
   வியாபாரி அரசுக்கு செலத்திய வரி..........
   சில்லறை வியாபாரி அரசுக்கு செலுத்திய வரி...........
   அரசுக்கு செலுத்தப்பட்ட மொத்த வரி.............
   இறுதி நுகர்வோரால் செலுத்தப்பட்ட வரி.............
2. உற்பத்தியாளரால் கூட்டப்பட்ட மதிப்பு..........
   வியாபாரியால் கூட்டப்பட்ட மதிப்பு.......
   சில்லறை வியாபாரியால் கூட்டப்பட்ட மதிப்பு......
   விற்கப்பட்ட சரக்குகளின் மொத்த மதிப்பு........
3. கீழே தரப்பட்ட பில்-ல் சரக்கு/சேவையின் மதிப்பையும் அதன் மீது விதிக்கப்பட்ட GSTஐயும் கண்டறியவும்.





SCERT TELANGANA

## GST யின் தாக்கம்

இங்கு மூன்று கருத்துகள் கவனிக்கத்தக்கது

- இங்கு மூன்று கருத்துகள் கவனிக்கத்தக்கது பில்கள் GST யில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. அது வாங்குபவர் தனது உள்ளீடுகளின் மீது GST செலுத்தியதை நிரூபிக்கிறது. நமது உதாரணத்தில் வியாபாரிக்கு அவர் வாங்கியதற்கு நிரூபனம் காட்டாவிட்டால் அவர் அரசுக்கு ரூ.5க்கு பதிலாக ரூ.30 கட்ட வேண்டியிருக்கும். இவ்வாறு அவர் பிஸ்கட் உற்பத்தியாளரிடம் பில் கேட்டுப்பெற நினைவில்கொள்ள வேண்டும். அதேபோன்று சில்லறை கடைக்காரர் வரி ஏற்கனவே செலுத்தியதாகிவிட்டது என்பதை காட்ட வியாபாரியிடமிருந்து ஒவ்வொரு இடைநிலையாளரும் ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் ஒரு பில்லை நிர்வகிப்பது மற்றும் வரி செலுத்துவது அவசியம். இவ்வாறு செலுத்த வேண்டிய வரியை மக்கள் செலுத்துவர் மற்றும் இதில் வரி ஏய்ப்பு குறைவாக இருக்கும்.

- உற்பத்தியாளரோ வியாபாரியோ வரி வசூ-த்தாலும் இறுதியில் நுகர்வோரே வரியை செலுத்துவார். பொருளின் விலையிலேயே வரியும் அடங்கிவிடுவதால் நுகர்வோருக்கு தான் வரி செலுத்துவது தெரியாமலேயே இருக்கும். ஏனெனில் அது அவரிடமிருந்து மறைமுகமாக வசூ-க்கப்படுகிறது. உற்பத்தியாளரும் வியாபாரிகளும் வரியை வசூ-த்து வரியை அரசாங்கத்திற்கு முன்னோக்கி செலுத்துவர். ஆனால், இறுதியாக நுகர்வோரே வரிச்சுமையை சுமப்பர்.

மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால் நாடு முழுமைக்கும் ஒரே விதமான வரியாகும். GST யின் கீழ் சரக்குகளும் சேவைகளும் ஒரேவிதமான வரி விகிதத்தை நாடு முழுவதிற்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. அது தொழிற்சாலைக்கு அருகிலேயே விற்கப்பட்டாலும் அல்லது ஆயிரம் கிலோமீட்டர்களுக்கு அப்பால் விற்கப்பட்டாலும் விதிக்கப்படும் வரி விகிதம் ஒரே மாதிரியாகவே இருக்கும். இதற்கு முன்னர் வரி விகிதங்கள் மாநிலங்களுக்கிடையே வேறுபாடு கொண்டிருந்தன. மருந்துகளும்; மோட்டார் சைக்கிள்களும் ஒரு மாநிலத்தை விட மற்றொரு மாநிலத்தில் விலை குறைவாக இருந்தன.

தொழிலும் வாணிகமும் ஒரு மாநிலத்தி-ருந்து மற்றொரு மாநிலத்திற்கு குடி பெயர்ந்ததால் மாநிலங்களுகக்கிடையே மாநிலத்திற்கு குடிபெயர்ந்ததால் தேவையற்ற போட்டி இருந்தது. செலுத்த வேண்டிய வரியை செலுத்தாமல் மக்கள் சரக்குகளை ஒரு மாநிலத்தி-ருந்து மற்றொரு மாநிலத்திற்கு கடத்திச் சென்றனர். மேலும் மாநிலங்களுக்கிடையே சரக்குகள் செல்லும்போது எல்லையில் நுழைவு வரி வசூ-க்கப்பட்டது. மாநில எல்லை பகுதிகளில் அல்லது நகரங்களின் நுழைவிடங்களில் பொதி வண்டிகளின் நீண்ட வரிசையை நீங்கள் கண்டிருக்கலாம். GST யின் கீழ் இப்பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன. இது காலத்தையும் ஆற்றலையும் சேமிக்கிறது.

இருப்பினும் GST முழுவதும் நடைமுறைக்கு வர சிலகாலம் பிடிக்கும். உதாரணமாக பெட்ரோலும், டீசலும் GST யின் கீழ் வராத முக்கியமான இரண்டு இடைநிலைப் பொருட்கள். மேலும் இப்பொருட்களுக்கு முன்னர் தொடர்ந்து வரி விதிக்கப்பட்டிருந்தது..

SCERT TELANGANA

| நவம்பர் 1, 2017 அன்று பெட்ரோல் மற்றும் டீச□ன் மீது விதிக்கப்பட்ட விற்பனை வரி விகிதம் | | |
|---|---|---|
| **மாநிலம்** | **பெட்ரோல்** | **டீசல்** |
| ஆந்திரப்பிரதேசம் | 39 | 31 |
| தெலங்கானா | 35 | 27 |
| சத்தீஷ்கர் | 29 | 27 |
| ஒடிசா | 26 | 26 |
| மகாராஷ்டிரா | 43 | 23 |

**வகுப்பில் கலந்துரையாடவும்:**

ஒற்றை GST ஐ விடுத்து பல்வேறு மறைமுக வரிகளை பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிப்பததால் ஏற்படும் தாக்கத்தை பற்றி நீ என்ன கருதுகிறாய்?

தெலங்கானவிற்கும் ஆந்திரப்பிரதேசத்திற்குமிடையே பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்பட்ட விற்பனை வரி விகிதத்திலுள்ள வேறுபாட்டின் மீது மக்களின் கருத்து என்ன?

பெட்ரோல் மற்றும் டீசல் மீது மட்டும் இன்னும் GST வரி விதிக்கப்படாதது பற்றி நீங்கள் ஆச்சரியப்படலாம். மாநிலங்களுக்கு பெட்ரோல் மற்றும் டீசல் மீதான விற்பனை வரி முக்கிய வருவாயாக இருப்பதால் மாநிலங்கள் தங்களுக்கு தகுந்த விகிதங்களில் வரி விதிக்கும் அதிகாரத்தை இழக்க விரும்பவில்லை. ஒவ்வொரு அரசும் தனக்கென வருவாயில் பெருமளவிலான பங்கை வைத்துக்கொண்டு தனக்கு விருப்பமான வழிகளில் அதை பயன்படுத்திக்கொள்ளும் GST ஐப் போல் அல்லாமல் விற்பனை வரியி-ருந்து கிடைக்கும் வருமானத்தை மத்திய அரசுடன் பகிர்ந்து கொள்ளாமல் முழுவதையும் தானே வைத்துக்கொள்ளும் இது எதிர்காலத்தில் GST எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் ஒன்றாகும்.

- கபீர் ஜெயா எலக்ட்ரிக்கல்ஸ் கடைக்குச் செல்கிறார். மின்சாரப் பொருட்களுக்கு மூன்று விதமான வரி விதிப்புகள் இருப்பதை அவர் காண்கிறார். மிக்சர், ஜூசர் மற்றும் இஸ்திரி பெட்டி மற்றும் பிற நுகர்வுப் பொருட்கள் மீது 28% GST வரியும் நீர் தூய்மையாக்கும் இயந்திரம் 18% ம் LED மின் விளக்குகள் 12% GST யும் விதிக்கப்பட்டுள்ளன. ஏன் என்று உன்னால் ஊகிக்க முடியுமா?
- இதற்கு முன் தரப்பட்டுள்ள பில்களைப் பார். GST மற்றும் SGST களின் பொருள் என்ன? என்பதைக் கண்டறி.
- சுங்கவரி இன்னமும் வசூ-க்கப்படுகிறதா? கண்டறியவும்.

## Project work

- பல்வேறு பில்களை சேகரித்து விற்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது எவ்வாறு GST விதிக்கப்படுகிறது என்பதைக் காட்டுவதற்கு பில்களின் சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்கவும். GST யி-ருந்து விலக்கு பெறும் பொருட்கள் எவையேனும் உள்ளனவா?

SCERT TELANGANA

• GST யானது 5, 12, 18 மற்றும் 28 என பல்வேறு சதவீதங்களில் விதிக்கப்படுகிறது. சந்தைக்குச் சென்று ஒவ்வொரு வரி விகிதத்தின் மீதும் இரண்டு உதாரணங்களைக் கண்டறியவும். அட்டவணை ஒன்றை வரையவும்.

• சில பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளிடம் பேசு சந்தை சூழ்நிலையை மாற்றி அதிக இணக்கத்தையும் குறைவான அளவில் வரி விலக்கினைப் பெறவேண்டும் என்று நீ கருதுகிறாயா உன் கருத்துகளை இரண்டு பத்திகளில் விவரி.

## வரிவிதிப்பில் சிறப்புத்தன்மை

நாம் எவ்வகையான வரிவிதிப்பை பின்பற்ற வேண்டும் என்பது சமுதாயம் முழுவதும் கொண்டிருக்கும் மதிப்புகளின் மீது ஆதாரப்பட்டுள்ளது. பெரும்பாலான சமுதாயங்கள் நினைப்பது என்னவென்றால் ஒரு சிலரிடம் லட்சக்கணக்கான பணமும், மற்றவர்களிடம் சாப்பிட உணவுப்பொருட்களை வாங்க போதுமான அளவு பணமும் இல்லாதது சரியில்லை என்பதாகும். அரசாங்கம் பணக்காரர்களிடமிருந்து அதிக வரியை வசூலிக்க வேண்டும். மேலும் ஏழைகளுக்கு வரியை விதிக்கக்கூடாது அல்லது குறைவாக விதிக்க வேண்டும் சமுதாய முழுமையும் விரும்பினால் வசூலிக்கப்பட்ட வரிகளைக் கொண்டு சிறந்த வாய்ப்புகள் மற்றும் வாழும் நிலைகளை வழங்குவதன் மூலம் ஏழைகளின் வருமானத்தை உயர்த்த செலவு செய்ய முடியும். ஏழைகளின் வருவாய் அதிகரித்தால் அதிக வரிகளை வசூலிக்க முடியும் என்பதை கவனி.

ஜோதி, ஆசிப் மற்றும் நிதிஷ் ஆகியோரின் உதாரணத்தில் உள்ளது போல உலகிலுள்ள பல நாடுகளில் அரசாங்கம் உயர்ந்த வருவாய் உடையவர்களுக்கு உயர்ந்த விகிதத்தில் வரியை விதிக்கிறது. வருமான வரி விதிமுறைப்படி, உயர்வருமானங்களை உடையவர்கள் வரியில் அதிக பாகத்தை செலுத்தவேண்டும். குறைந்த வசதிபடைத்தவர்கள் குறைவான வரிகளை செலுத்துவதோடு மட்டுமின்றி தங்கள் வருவாயின் ஒரு சிறு பாகத்தையே வரியாக செலுத்துகின்றனர். எனவே நேரடி வரிகள் விரும்பப்படுகின்றன ஆனால் நம் நாட்டில், நீங்கள் முற்பகுதியில் கற்றது போல வரியின் முக்கிய ஆதாரமாக மறைமுக வரி அதாவது பொருட்கள் மற்றும் சேவைகளின் மீதான வரி உள்ளது. பணக்காரரோ அல்லது ஏழையோ ஏதேனும் பொருட்களை அல்லது சேவைகளை வாங்கும் போது வரியின் ஒரே விதமான தொகையை ஒவ்வொருவரும் செலுத்த வேண்டும். ஆனால் ‘ஏழைகளிடம் பணமில்லை’ என்று கூறப்படுகிறது.

பொருட்கள் மற்றும் சேவைகளின் மீது வரிகளை விதிக்கும்போது ஏழை, பணக்காரர் என்று வேறுபடுத்துவது மிகவும் கடினம். இருப்பினும் சில பொருட்களிடையே வேற்றுமையைச் செய்யும் வழிமுறை உள்ளது. எடுத்துக்காட்டாக, தானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், துணி, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய், சமையல் எரிவாயு போன்ற பொருட்கள் முக்கியமானவை. ஏழை அல்லது பணக்காரர், ஒவ்வொருவரும் அவற்றை வாங்குகின்றனர். ஆனால் ஏழைகள் ஏறக்குறைய அவர்களின் வருமானம் முழுவதையும் இப்பொருட்களின் மீது செலவிடுகின்றனர். பணக்காரர்களால் மட்டுமே வாங்கக் கூடிய பொருட்களும், சேவைகளும் கூட உள்ளன. கார்கள், மடிக்கணினிகள், குளிர்சாதன வசதி, உணவு விடுதிகளில் உண்பது போன்றவையாகும். ஏழைகள் இந்த ஆடம்பர பொருட்களுக்கு விலை கொடுத்து வாங்குவது மிகவும் கடினம். எனவே அத்தியாவசியமான பொருட்களின் மீது வரி விதிக்காமல் ஆடம்பரமான பொருட்களின் மீது மட்டும் வரிவிதிப்பது என்னும் ஒரு வழிமுறையில் ஏழைகளையும் பணக்காரர்களையும் வேறுபடுத்தலாம் (தற்போது ஆடம்பர பொருட்கள் என்று கருதப்படுவது வாழும் நிலைகளை மேம்படுத்துவது போன்ற எதிர்காலத்தில் அத்தியாவசியமான பொருட்களாக மாறும் என்பதை நினை).

இதில் சிக்கல் என்னவென்றால் இந்த ஆடம்பர பொருட்களை பலர் விலை கொடுத்து வாங்கமாட்டார்கள் என்பதால் இது போன்ற பொருட்களின் மீது மட்டும் வரிவிதித்தால் அரசாங்கத்திற்கு அதிக வருவாய் கொண்டுவரமுடியாது. பொருட்கள் மற்றும் சேவைகளின் மீது வரிவிதிக்கும் போது அரசாங்கம் மற்றொன்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். எண்ணற்ற பொருட்சேவைகளான டீசல், எஃகு, அலுமினியம், இயந்திரங்கள், சுமை வண்டிகள், சுமை வண்டிகளின் டயர்கள் போன்றவை மக்களால் நேரடியாக பயன்படுத்தப்படுவதில்லை.



SCERT TELANGANA

அதுபோன்ற பொருட்கள் தயாரிப்புகளில் அல்லது பிறபொருட்களை போக்குவரத்து செய்வதில் பயன்படுத்தப்படுகின்றன. பல இடங்களான தொழில்மையங்கள், தொழிற்சாலைகள், வியாபார அமைப்புகள் போன்றவற்றில் இவற்றை பயன்படுத்துவர். மக்கள் தங்களின் நுகர்வுக்காக நேரடியாக இவற்றை வாங்கமாட்டார்கள்.

எஃகு, டீசல் போன்ற பொருட்களின் மீதான வரி அதிகரிக்கப்படும்போது அவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட அல்லது அவற்றின் உதவியுடன் போக்குவரத்து செய்யப்பட்ட பொருட்களின் விலைகளுடன் இந்த அதிகரிப்பு கூட்டப்படுவதை நாம் காண்கிறோம்.

இதனுடன், தானியம் அல்லது துணியை வாங்கும் ஏழையும் கூட டீசல் அல்லது இரும்பின் மீது சிறிதளவு வரியைச் செலுத்த வேண்டும். அது போன்ற பொருட்கள் வரிவிதிக்கப்படும் போது மற்ற பல பொருட்களின் விலை அதிகரிக்கும். இவ்வாறு மக்கள் கூறுவதை நாம் கேட்கிறோம்.

பெட்ரோல் மற்றும் டீசல்விலைகளின் அதிகரிப்பு அனைத்துப்பொருட்களின் விலைகளின் அதிகரிப்பிற்கும் வழிவகுக்கிறது. எடுத்துக்காட்டாக பழங்கள், காய்கறிகள், பருப்புகள் மற்றும் பிற உணவுவகைகள், போன்றவற்றின் விலைகள் உயர்ந்துவிட்டன.

இதன் காரணமாக ஒவ்வோராண்டும் ஒவ்வொருவரையும் தொந்தரவு செய்யும் வினா எதுவென்றால் எவ்வகையான வரியை அதிகமாக உயர்த்த வேண்டும்? பொருட்களின் மீதான வரிகளை மிகச் சுலபமாக வசூலித்துவிடமுடியும். ஆனால் ஆடம்பரப் பொருட்களின் விலையை வசூலிப்பது எளிதல்ல. பொருட்களின் மீது வரி விதிப்பது ஏழைகளைப் பெரிதும் பாதிக்கிறது. வரிகளை விதிப்பதும் வசூலிப்பதும் மக்களின் வாழ்க்கையில் பெரியதாக்கத்தை ஏற்படுத்துகிறது. செல்வந்தர்களின் வருவாய் மீதான வரி மிகவும் அதிகமாக உள்ளது. எனவே அது மிகவும் சிறந்ததாக கருதப்படுகிறது. ஆனால் வருவாயிலிருந்து பெறப்படும் வரிகள் மட்டும் அரசாங்கத்தின் பேரளவு செலவுகளைச் சந்திக்க போதாது. எந்தவொரு வரவு செலவு திட்டமும் இந்த எண்ணங்களை கணக்கில் எடுத்தக்கொள்ள வேண்டும். எனவே வரவு செலவுத்திட்ட காலம் ஒவ்வொருவருக்கும் மிகவும் முக்கியமானதாக உள்ளது.

- 1. அரசாங்கத்தால் வசூலிக்கப்படும் சில முக்கிய வரிகளைக் குறித்து நாம் கற்போம். கொடுக்கப்பட்ட அட்டவணையிலுள்ள தகவல்களை நிரப்பு. வருமான வரி 12%; கம்பெனி வரி 24%; இறக்குமதி சுங்கத்தீர்வைகள் 10%; உற்பத்தித்தீர்வைகள் 16%; சேவைவரிகள் 5%; விற்பனை வரி 23%; பிறமறைமுகவரிகள் 10%.

அரசாங்கத்தால் வசூலிக்கப்படும் வரிகள்

| வரிகளின் பெயர்கள் | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| **வருமானவரி** | | 36% |
| கம்பெனிவரி | | |
| இறக்குமதி சுங்கத்தீர்வை | | |
| உற்பத்தி தீர்வை | | |
| சேவை வரி | | |
| விற்பனை வரி | | |
| பிற மறைமுக வரிகள் | | |
| மொத்த வரிகள் | | 100% |

எவ்வகையான வரிகள் அரசாங்கத்திற்கு அதிக வரிவருவாயைத் தருகின்றன?

2. கிராந்திக்கு ஓராண்டு வருமானம் ரூ. 1,00,000. அவர் ரூ.3000 வருமானவரி செலுத்த வேண்டும். கமலேஷின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000 அவர் ரூ.5,500 வருமானவரி செலுத்த வேண்டும்.

- அதிக வருமான வரியை யார் செலுத்துகிறார்?
- வருமானத்தில் பெரும்பகுதியை வரியாக செலுத்துபவர் யார்?
- இது போன்ற சூழ்நிலையில் உயர்ந்த வருமானம் கொண்ட நபர் தன் வருமானத்தின் __________ (சிறிய/பெரிய/சமமான) அளவினை வரியாக செலுத்துகிறார்.

SCERT TELANGANA

வரிகளை வசூலித்தல் மற்றும் ஏமாற்றுதல்

அரசாங்கம் பல்வேறு வகையான வரிகளிலிருந்து பணத்தைப் பெறுகிறது. ஒவ்வொரு வகை வரி மூலம் எவ்வளவு பணத்தை வசூலிக்க வேண்டும் என்று அது முடிவு செய்ய வேண்டும். இதற்காக மக்கள் எவ்வளவு வரிசெலுத்த வேண்டும், இந்த வரியை எளிதில் வசூலிக்க முடியுமா? பணக்காரர்களையும், ஏழைகளையும் இது எவ்வாறு பாதிக்கும்? இதனுடன் தொடர்புள்ள ஒரு முக்கியவினா என்னவென்றால் மக்கள் அவர்களின் வரிகளை செலுத்துகிறார்களா? அல்லது ஏமாற்றுகிறார்களா? என்பதே ஆகும்.

நம் நாட்டில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் விவசாயத்தைச் சார்ந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்களின் பெரும்பாலானோர் சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள். உயர்ந்த வருமானங்களைக் கொண்ட சில பெரிய விவசாயிகளும் உள்ளனர். இருப்பினும் அனைத்து விவசாய வருமானமும் வரியிலிருந்து விலக்கப்பட்டுள்ளது. அதே போன்று நாட்டிலுள்ள மக்களின் பெரும்பாலான பிரிவினர் குறைந்த வருமானத்தையே ஈட்டுகின்றனர். வியாபாரம் அல்லது சிறிய கடைகளை நடத்துதல் அல்லது கூலிக்கு வேலை செய்தல் போன்றவற்றின் மூலம் அவர்கள் வருவாயை ஈட்டுகின்றனர். இந்த மக்களின் வருமானம் வருவாய் வரி வரம்புக்குக் கீழ் உள்ளது. இவ்வாறு வருமான வரியை செலுத்தும் மொத்த மக்களின் எண்ணிக்கையின் சதவீதம் குறைவாகவே உள்ளது.

ஒரு பெரிய மக்கள்தொகையில் இந்த சிறிய அளவு சதவீதத்திலுள்ள மக்கள் கூட குறிப்பால் உணர்த்துவது என்னவென்றால் ஒரு கணிசமான எண்ணிக்கையுள்ள மக்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட வேண்டும் என்பதை ஆகும். எடுத்துக்காட்டாக 1997ல் 114லட்சம் தனிநபர்களின் வருமானங்கள் வருமான வரிக்காக மதிப்பீடு செய்யப்பட்டன. அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். வருமான வரியை வசூலித்தல் என்பது எளிதான செயலன்று. அதில் பல தடைகள் உள்ளன. மக்களில் பலர் தங்களுடைய முழு வருமானத்தை வெளிப்படுத்துவதில்லை அல்லது உண்மையான வருமானத்தை விட குறைவாகக் காட்டுகின்றனர். மறைக்கப்பட்ட இந்த வருமானத்தையே நாம் 'கருப்புப் பணம்' என்கிறோம்.

பல தொழிற்சாலை உரிமையாளர்கள், செல்வந்தர்களான கடன்வழங்குவோர், வியாபாரிகள், தனியார் வாணிகம் செய்பவர்கள் போன்ற அனைவரும் எளிதில் குறைவான வருமானத்தைக் காட்டி விடுகின்றனர். மாதச்சம்பளம் பெறுவோரின் வருமானத்தை கணக்கிடுவது மிகவும் எளிது அவர்கள் சம்பளம் பெறும் இடங்களிலிருந்து அவர்களின் வருமானத்தின் மீதான வரி நேரடியாக கழித்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் சம்பளம் பெறும் பலர் வருமானம் பெறும் பிற ஆதாரங்களை மறைத்துவிடுகின்றனர். பணியாளர்கள், அலுவலர்கள், மந்திரிகள் அல்லது எழுத்தர்கள் போன்றோர் அவ்வப்போது தங்களின் வருமானங்களை சரியாக வெளிப்படுத்துவதில்லை. விவசாயத்தின் மூலம் பெறும் வருமானத்திற்கு வரி இல்லாததால் பலர் தங்களின் வருமானத்தை நிலத்திலிருந்து வரும் வருமானமாகக் காட்டி வரி செலுத்தாமல் அரசாங்கத்தை ஏமாற்றிவிடுகின்றனர்.

இவ்வாறு பல வரி ஏய்ப்பாளர்கள் உள்ளனர் மற்றும் வரிசெலுத்தப்படவேண்டி, ஆனால் செலுத்தப்படாத பணமான கருப்பு பணம் பெருகி குவிந்துகொண்டே செல்கின்றது. இந்த கருப்புப் பணத்தைப் பிடிப்பதற்கு வருமான வரித்துறை பல மக்களின் இருப்பிடங்களுக்குச் சென்று சோதனையிடுகிறது. அதோடுமட்டுமின்றி மக்களுக்கு தங்களின் சொந்த வரிகளைச் செலுத்த மிகவும் வசதியான வழிமுறைகளைச் செய்ய முயன்று வருகிறது. இந்த முயற்சிகளையும் மீறி மக்களின் பெரும்பாலானோர் வருமான வரியை செலுத்துவதில்லை, அல்லது அவர்கள் செலுத்த வேண்டியதை விட குறைாக செலுத்துகின்றனர். மாறாக, பொருட்களின் மீதான வரியை எளிதில் வசூலிக்கலாம். ஏனெனில் அவை வசூலிக்கப்படவேண்டிய இடங்கள் மிகக் குறைவு. தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தித்தீர்வையும், சர்வதேச விமான நிலையங்களிலிருந்து மற்றும் கடல் துறைமுகங்களிலிருந்து இறக்குமதி சுங்கத்தீர்வைகளும், வியாபாரிகள் மற்றும் கடைக்காரர்களிடமிருந்து விற்பனை வரியும் வசூலிக்கப்படுகின்றன. தனிநபர்களால் செலுத்தப்படும் வருமான வரியுடன் ஒப்பிடுகையில் இந்த தொழிற்சாலைப்பதிவேடுகள் அல்லது கடைகளின் பதிவேடுகளின் பாதையை வைத்திருப்பது அரசாங்கத்திற்கு எளிதாக உள்ளது.

உண்மையாக உற்பத்தி செய்யப்பட்டதை விட குறைவாகக்காட்டி வரி செலுத்துவதிலிருந்து தப்பித்துக் கொள்பவர்களும் இங்கு உள்ளனர். விற்பனை வரி அதிக அளவில் ஏமாற்றப்படுகிறது. சில வியாபாரிகள், தகுந்த விலைப்பட்டியல்களை வெளியிடாமலும் அல்லது தங்களின் அலுவலகப் பதிவேடுகளில் அவற்றைப் பதிவு செய்யாமலும் உண்மையாக நடந்த விற்பனையை விட மிகவும் குறைவாகக் காட்டுகின்றனர். இந்தப்பாடத்தில் நாம் கண்ட மதிப்புக் கூட்டுவரி (VAT), பொருட்கள் மற்றும் சேவைகளின் மீதானவரியை ஏமாற்றுவதைக் குறைப்பதற்காக வடிவமைக்கப்பட்டதாகும்.

## முக்கியச் சொற்கள்

1. நுகர்வோர்
2. கருப்புப்பணம்
3. ஆண்டு வரவுசெலவுதிட்டம்
4. கம்பெனி வரி
5. விற்பனையாளர் சங்கிலி
6. வரவு செலவு கணக்கு
7. வருமான வரி

## உனது கற்றலை மேம்படுத்துக

1. அரசாங்கத்திற்கு வரவு செலவுதிட்டம் ஏன் தேவை? வரவுசெலவு திட்டம் வரிகளைப்பற்றி ஏன் பேசுகிறது?(AS1)
2. வருமான வரிக்கும் உற்பத்தித்தீர்வைக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?(AS1)
3. சாதாரண உணவுப் பொருட்களான தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் போன்றவை அனைவராலும் பயன்படுத்தப்படுகின்றன. பின் அவற்றின் மீதான வரி விதிப்பு ஏழைகளின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்று ஏன் கூறப்படுகிறது?(AS4)
4. நான்கு நண்பர்கள் கொண்ட குழு ஒன்று ஒரு வீட்டின் வாடகையை பகிர்ந்து செலுத்துவதன் மூலம் ஒன்றாக தங்க முடிவு செய்தனர். மாத வாடகை ரூ.2000. (AS1)
   - அவர்களிடையே இதை எவ்வாறு பகிர்ந்து கொள்வர்?
   - அவர்களில் இருவரின் மாத வருமானம் 3000 ரூபாய் என்பது நமக்குத் தெரியும், மற்ற இருவரின் மாத வருமானம் 7000 ரூபாய். அவ்விலையை பகிர்ந்துக்கொள்ள வேறு ஏதேனும் சில வழிமுறைகள் இருந்தால் அவர்களில் ஒவ்வொருவரும் ஒரே விதமான துன்பத்தை உணர்வர் அவ்வாறு ஏதேனும் வழிமுறைகள் உள்ளனவா?
   - எவ்விதமான பகிர்ந்துகொள்ளும் முறையை நீ விரும்புகிறாய்? ஏன்?
5. வருமானத்தின் மீதான வரி அல்லது நுகர்வுப் பொருட்களின் மீதானவரி. இவற்றில் எது செல்வந்தர்களை அதிக அளவில் பாதிக்கிறது மற்றும் எது ஏழைகளை அதிக அளவில் பாதிக்கிறது? காரணங்களுடன் விளக்கு.(AS4)
6. பொருட்களின் மீதான வரியை ஏமாற்றுவதை மதிப்புகூட்டுவரி (VAT) எவ்வாறு குறைக்கிறது?(AS1)
7. உற்பத்தித் தீர்வைக்கும் இறக்குமதி சுங்கத்தீர்வைக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?(AS1)
8. பேருந்துக் கட்டணங்கள் அண்மைக்காலத்தில் ஏதேனும் உயர்ந்துள்ளனவா? அவ்வாறு உயர்ந்திருப்பின் அதற்கான காரணங்களைக் கண்டறிய முயற்சி செய்.(AS1)
9. ‘நேரடி வரிகள்’ (தனிமனிதர்களின் சொந்த வருமானத்தின் மீது ...) என்னும் தலைப்பின் கீழ் உள்ள பத்தியைப் படித்து கீழ்காணும் வினாவிற்கு விடையளி :
   அதிக வருமானம் ஈட்டுபவர்கள் அதிக வரியை ஏன் செலுத்த வேண்டும்?(AS2)
10. நம் பொருளாதார அமைப்பின் மீது கருப்புப் பணத்தின் தாக்கம் எவ்வாறு உள்ளது?(AS6)

## செயல்திட்டம்

அதிகபட்ச சில்லரை விலை (MRP)யைக் கொண்ட சோப்புகள், பற்பசைகள், மாத்திரை அட்டைகள் அல்லது வேறு ஏதேனும் பொருட்களின் மேல்உறைகளைக் கொண்டு வரவும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் மற்றும் அவை விற்கப்படும் விலைகள் குறித்தும் கலந்துரையாடு. சில்லரை விற்பனையாளர் பெறும் லாபத்தை குறித்துப்பேசு.

SCERT TELANGANA

பாடம்

# 12

# 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் மக்களாட்சிக்கான புரட்சிகளும், தேசிய புரட்சிகளும்

## நவீன உலகம் - ஓர் அறிமுகம் :

தற்போது உலகின் ஒவ்வொரு பகுதியி-ருந்தும் அனைத்து நாடுகளும் ஒன்றுக்கொன்று தொடர்ந்து தொடர்புகொள்ளும் ஓர் உலகில் நாம் வாழ்கிறோம். செய்தித்தாளின் விளையாட்டுப் பக்கத்தை பார்த்தால் இந்திய அணிகள் உலகின் எல்வேறு பகுதியின் அணிகளுடன் சில நாடுகள் அல்லது மற்றொன்றில் விளையாடி வருவதை நீங்கள் காணலாம். நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களான பற்பசை, அலைபேசி, பேருந்து அல்லது உணவு வகைகள் கூட சில தொலைதூர நாடுகளில் தயாரிக்கப்பட்டதாக இருப்பதைக் காணலாம். நாம் ஆடை அணியும் முறை, நாம் பார்க்கும் திரைப்படங்கள், நாம் உண்ணும் உணவுகளும் தற்போது உலக தரத்துடன் தாக்கத்தை பெருமளவில் ஏற்படுத்தியுள்ளது. நம் விவசாயிகள் வாங்கும் டீசல் அல்லது உரங்களின் விலை ஆகியவை தற்போது உலக சந்தை விலைகளின் மீது ஆதாரப்பட்டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுடைய தொழிற்சாலைகளையும், அலுவலகங்களையும் பிற நாட்டில் அமைத்து வருகிறது.

இவ்விதம் மிக நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ள உலகில் நாம் வாழ்கிறோம். மனித வரலாற்றில் பல்வேறு நாடுகளின் மக்கள் ஓரளவிற்கு ஒருவருக்கொருவர் தொடர்பில் இருந்துள்ளனர் என்பது உண்மை. மொத்த மக்களும் வாழ்வதற்கேற்ற சிறந்த நிலப் பகுதியைத் தேடி அல்லது பஞ்சம் அல்லது நோய்களி-ருந்து தப்பித்துக்கொள்ள குடிபெயர்ந்துள்ளனர். கடற்பயணிகள் கடல்களைக் கடந்தும் பயணிகள், புனிதப் பயணிகள் மற்றும் வியாபாரிகள் உயர்ந்த மலைகள், பாலைவனங்கள் மற்றும் நதிகளைக் கடந்து புதிய மக்களிடமும் நிலப் பகுதிகளுடனும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டனர். அரசர்களும் படைவீரர்களும் தங்களுடைய இராஜ்ஜியங்களை விரிவாக்கிக்கொள்ள புதிய நிலப் பகுதிகளைக் கைப்பற்றினர். மத குருமார்கள், கலைஞர்கள் மற்றும் பண்டிதர்களும் தங்களுடைய சிந்தனைகளை பரப்பவும் புதியவற்றை கற்கவும் பல நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டனர். இவ்வாறு பல்வேறு நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டனர். இருப்பினும் கடந்த சில நூற்றாண்டுகளில் உலகின் பல்வேறு பகுதிகளுக்கான இந்த தொடர்பு பேரளவில் வளர்ந்தது. ஆகையால் நாம் தற்போது உலக கிராமத்தில் வாழ்கிறோம். ஒரு கிராமத்தில் உள்ளவர் அனைவரிடமும் நெருங்கிய தொடர்புகொண்டு ஒருவரையொருவர் அறிந்து வைத்திருப்பர். அதேபோன்று தற்போது முழு உலக மக்களும் ஒருவரை ஒருவர் அறிந்து நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர்.

எனினும், உலக நாடுகளின் இந்த நெருங்கிய தொடர்பு எளிமையானதல்ல. மகிழ்ச்சியான பயண மற்றும் புனிதப் பயணக் கதையாக இருப்பதில்லை. இச்செயல்முறையில் போர்கள், ஆக்கிரமிப்புகள், அடிமைத்தனம் மற்றும் மில்-யன் கணக்கான மக்களின் இடப்பெயர்ச்சி, பேரளவில் காடுகளை இயற்கை வளங்களையும் அழித்தல், ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துதல் சுதந்திரத்திற்காக போராட்டங்கள் மற்றும் போர்கள் போன்றவை மிக முக்கிய கூறுகளாக உள்ளன.

SCERT TELANGANA

இந்த நவீன உலகம் எவ்வாறு தோன்றியது என்பதையும் நவீன உலகின் செயல்முறைகளின் முக்கிய சிந்தனைகள் மற்றும் உந்து சக்திகள் என்ன என்பதையும் தற்போது நாம் நம்மைச் சுற்றிக் காணும் இந்த உலகை உருவாதில் உலகின் பல்வேறு பகுதிகள் எவ்வாறு பங்குபெற்றன என்பதையும் நாம் IX மற்றும் X வகுப்புகளில் படிக்கலாம்.

## செயல் 1

நாம் ஓர் எளிமையான செயலைக்கொண்டு தொடங்கலாம். ஐந்து அல்லது ஆறு மாணவர்கள் கொண்ட குழுக்களாக வகுப்பை பிரிக்கவும். உலகின் பல்வேறு கண்டங்களையும் நாடுகளையும் காட்டும் ஓர் உலக உருண்டையை எடுத்துக்கொள். உலக உருண்டை இல்லையெனில் உலக வரைபடம் அல்லது அட்லாஸ் புத்தகத்தை பயன்படுத்தவும்.

ஒரு செய்தித்தாளை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பக்கத்தை தரவும். ஒவ்வொரு பக்கத்திலும் குறிப்பிட்டுள்ள அனைத்து செய்திகளையும் படித்து அந்நிகழ்வு நடந்த நாட்டின் பெயரை குறித்துக்கொள்ளவும். உலக உருண்டையில் அந்த நாட்டைக் குறிப்பிட்டு அது எந்த கண்டத்தைச் சேர்ந்தது என்பதை கண்டறியவும். அனைத்து விளம்பரங்களையும் பார்த்து ஏதேனும் அயல்நாட்டின் அதில் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்நாட்டின் பெயரைக் குறித்துக்கொண்டு அது எந்த கண்டத்திலுள்ள நாடு என்பதையும் குறிப்பிடவும்.

இப்பட்டியலை அனைத்து குழுக்களிடமும் பகிர்ந்துகொள். இப்போது நிகழ்வுகள் அடிக்கடி ஏற்படும் நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடவும். அந்த நாடுகளைப் பற்றி அதிகமாக தெரிந்துகொள்ள வரைபடங்கள், வலைதளங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி ஒவ்வொரு குழுவும் ஒரு நாட்டைப் பற்றி ஒரு சுவரொட்டியைத் தயாரிக்கவும்.



*வரைபடம் 1: உலக வரைபடம், முக்கிய நாடுகள்.*

SCERT TELANGANA

**நவீன உலகை உருவாக்கிய மாற்றங்கள் :**

முழு உலக நாடுகளின் ஒருங்கிணைப்பு CE 1450 ஆண்டுகளுக்குப் பின் மிக வேகமாக முன்னேற்றமடைந்தது இதனைத் தொடர்ந்து மக்கள் வேலை செய்யும் முறையிலும் சிந்தனை மற்றும் ஆட்சி புரிவதிலும் பல முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மாற்றங்களில் பல, நவீன உலகின் சில முக்கிய கூறுகள் வளர்ச்சியடைய உதவியது. எடுத்துக்காட்டாக தற்போது நாம் பயன்படுத்தும் பல பொருட்கள் பேரளவில் இயந்திரங்களைக் கொண்டு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன மற்றும் அவற்றை சந்தையி–ருந்து நாம் வாங்குகிறோம். இது 'தொழிற்புரட்சி' என்னும் மிகப்பெரிய மாற்றத்தின் விளைவாகும். இரண்டாவதாக தற்போது பல நாடுகள் அரசர்களாலும் ராணிகளாலும் ஆட்சி செய்யப்படாமல் தங்கள் நாட்டு மக்களுக்கு பொறுப்பு வகிக்கும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தால் ஆட்சி செய்யப்படுகிறது. இது ஜனநாயகப் புரட்சி என்னும் செயல்முறையின் விளைவாகும். மூன்றாவது முக்கிய கருத்து யாதெனில் மக்கள் உலகத்தை பற்றி என்ன நினைக்கிறார்கள் அதை எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் என்பதைப் பற்றியது. தற்காலத்தில் நாம் அறிவியல், பகுத்தறிவு மற்றும் சான்றுகளுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறோம். மேலும் மற்றவர்கள் கூறும் எந்த கருத்தையும் அதைப்பற்றி வினா எழுப்பாமல் ஏற்றுக்கொள்வதில்லை. அறிவியல் மற்றும் பகுத்தறிவு முறைகளைப் பயன்படுத்தி நம்மைச் சுற்றியுள்ள அனைத்தை பற்றியும் முழு அண்டத்தைப் பற்றியும், மக்கள் புரிந்துகொள்ள முயற்சித்து வருகின்றனர். இது அறிவியல் புரட்சி என்னும் ஒரு செயல் முறையின் விளைவாகும்.

எனினும், கடந்த சில நூற்றாண்டுகளில் ஒருசில நாடுகள் உலகின் பிற நாடுகளைக் கைப்பற்றி அவற்றை சுரண்ட முயற்சித்து வருகின்றனர். எடுத்துக்காட்டாக இந்தியா ஐரோப்பாவின் தூரத்து நாடாகிய கிரேட் பிரிட்டனின் குடியேற்ற நாடாக மாறியது. பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து, ஸ்பெயின் போன்ற சில ஐரோப்பிய நாடுகள். ஆப்ரிக்கா, ஆசியா, தெற்கு மற்றும் வட அமெரிக்காவின் பெரும்பாலான நாடுகளின் மீது ஆதிக்கத்தைச் செலுத்தியது. இது இந்த நாடுகளில் வகிக்கும் மக்களின் வாழ்க்கையில் ஒரு பலவந்தமான / கட்டாயமான மாற்றத்திற்கு வழிவகுத்தல். இந்த செயல்முறை குடியேற்றப்படுத்துதல் என்று அழைக்கப்படுகிறது. குடியேற்றங்களிலுள்ள மக்கள் தங்களின் சுதந்திரத்திற்காக போராடினர். நவீன உலகின் வரலாறு பெரும்பாலும் அவர்களுடைய போராட்டங்களின் கதையேயாகும். உலகின் அனைத்து நாடுகளிலும் ஏழை மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் தங்களுடைய சமமான உரிமைகளுக்காகவும், வாய்ப்புகளுக்காகவும் மனித உழைப்பால் போராடி வருகின்றனர். சுதந்திரம் சமத்துவம் மற்றும் ஒழுக்கத்திற்கான இந்த போராட்டங்கள் நவீன வரலாற்றின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும்.

பின்வரும் பாடங்களில் CE 1750க்குப் பிறகு வ–மைபெற்ற நவீன உலகின் இந்த முக்கிய கூறுகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து படிக்க உள்ளோம்.

**துவக்க நவீன காலம்**

1450 மற்றும் 1750க்கு இடைப்பட்ட காலத்தைப் பொதுவாக முந்தைய நவீன காலம் என்பர். அதற்கு முன்னதாக உலகின் பல்வேறு பகுதிகளில் முக்கிய கூறுகள் தொடங்கப்பட்டன. எடுத்துக்காட்டாக இந்தியா, சீனா, அரேபியா போன்ற நாடுகளின் வியாபாரிகள் நீண்ட காலமாக கடல்கள் மூலம் பொருட்களை ஒவ்வொருவரும் மற்ற நாடுகளுக்கு எடுத்துச் சென்றன. 1492ல் இத்தா– மாலுமியான கிறிஸ்டஃபர் கொலம்பஸ் தென்அமெரிக்காவை அடைந்தார். அதுவரை ஐரோப்பியர்களுக்குத் தெரியாத ஒரு சிறப்பு கண்டத்தை அவர் கண்டறிந்தார். இது தெற்கு மற்றும் வட அமெரிக்காவில் குடியேற்றப்படுத்துவதற்கு வழிவகுத்தது. அதேபோன்று வாஸ்கோடகாமா என்னும் போர்ச்சுகீசிய மாலுமி ஆப்ரிக்காவின் வழியாக பயணம் மேற்கொண்டு இந்தியாவிற்கு கடல் வழியை 1498ல் கண்டறிந்தார். இது ஐரோப்பிய கப்பல்கள் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வியாபாரம் செய்வதற்கு மட்டுமின்றி கடல் மூலமாக சீனா வரை செல்வதற்கும் வழியை ஏற்படுத்தியது.



SCERT TELANGANA

இந்த முன்னேற்றங்கள் மிகப்பெரிய மாற்ற நிலைகளை உருவாக்கியததோடு உலகின் அனைத்து கண்டங்களுக்கிடையே பரிமாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ளவும் வழிவகுத்தது விளைவாக பெரிய நகரங்கள் உலகம் முழுவதும் பணக்கார வியாபாரிகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. வாணிக விரிவாக்கம் விவசாயம் மற்றும் கலைப்பொருட்கள் உற்பத்திக்கான சர்வதேச சந்தைகளை தூண்டிவிட்டது.

இதுபோன்ற மற்றொரு வளர்ச்சி யாதெனில் ஒருசில மக்களின் கைகளில் அதிகாரம் குவிந்திருந்து பெரிய ராஜ்ஜியங்களும் பேரரசுகளும் தோன்றியதாகும். அவர்களிடம் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் வரி வசூ-க்கவும் இராணுவமும் அலுவலர்களும் இருந்தனர். அவர்கள் சுய அதிகாரத்தை விரும்பிய சிறிய உள்ளூர் அரசர்களையும் நிலக்கிழார்களையும், கட்டுப்பாட்டில் வைக்க முயற்சித்தனர். இது நாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் பொது நிர்வாக முறை வளர்ச்சியடையவும் வழிவகுத்தது. உதாரணமாக இந்தியாவில் முகலாயப் பேரரசு ஒரு வ-மையான மத்திய அரசையும் நிர்வாக முறையையும் மேம்படுத்தியது. இதேபோன்ற பேரரசுகள் சீனா, ஈரான், துருக்கி மற்றும் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டன.

முந்தைய நவீன காலத்தில் அறிவியல் (குறிப்பாக வானவியல்), கணிதம், தத்துவம் போன்றவற்றில் முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் சீனா, இந்தியா அரபு நாடுகள் மற்றும் ஐரோப்பாவின் அறிவியலறிஞர்களால் ஆய்வுகளும் கணிப்புகளும் மேற்கொள்ளப்பட்ட கடின உழைப்பால் பெரும் அறிவியலறிஞர்களான க--யோ சூரிய குடும்பத்தின் மையத்தில் சூரியன் இருப்பதையும் பூமி போன்ற கோள்கள் அதனை சுற்றி வருகின்றன என்னும் முடிவுக்கு வந்தனர். பெரும் கணித மேதைகளான நீலகண்ட சோமயாஜி, டெகார்டே மற்றும் நியூட்டன் ஆகியோர் கோள்கள் மற்றும் நட்சத்திரங்களின் இயக்கத்தைப் பற்றி ஆய்வு செய்ய புதிய முறைகளை மேம்படுத்தினர்.

முந்தைய நவீன காலத்தின் சிந்தனையானது மனித சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்னும் கருத்தால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. அது பல்வேறு நாடுகளில் பல்வேறு வடிவங்களை எடுத்தது. இது மதச் சிந்தனைகள் பல்வேறு வடிவங்களை எடுத்தது. இது மதச் சிந்தனைகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு மக்கள் பிடிவாதம் மதத்தலைமை, முந்தைய மதச் சிந்தனைகளின் சடங்குகள் போன்றவற்றை எதிர்த்தனர். மேலும் அனைத்து மனிதர்களும் தங்களின் பிறப்பு அல்லது சமுதாய அந்தஸ்து கணக்கில் கொள்ளாமல் அனைவரும் கடவுளை அடையலாம் என்று உறுதிபடுத்தினர். கலைத்துறையில் மனித இனத்தை உண்மையுருவில் வடிக்கவும் குறிப்பாக வண்ணம் தீட்டுவதில் ஓவியத்தில் நம்மைச் சுற்றியுள்ள உலகையும் உண்மையான உருவில் படம் பிடித்துக் காட்டியது.

முந்தைய நவீன காலத்தின் இந்த அனைத்து மாற்றங்களும் நீங்கள் தற்போது படிக்கவுள்ள நவீன காலத்தின் மிகப்பெரிய முன்னேற்றங்களுக்கும் வழிவகுத்தது.

தற்போது நாம் மக்களாட்சி முறையிலான அரசாங்கத்தின் எண்ணத்தைப் பயன்படுத்துகிறோம். அனைத்துக் குடிமக்களுக்கும் அடிப்படை உரிமைகள் உள்ளன அனைவரும் சட்டத்தால் சமமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். எனினும் முந்தைய காலங்களில் இவ்வகையான மக்களாட்சி இல்லை. நாடுகள் அரசர்களால் அல்லது பேரரசர்களால் அவர்களின் விருப்பத்திற்கேற்ப சட்டமியற்றி ஆளப்பட்டன. ஒவ்வொன்றுக்கும் சலுகைகளும் வேண்டுதல்களும் இருந்தன.

இந்த பாடத்தில் மக்களாட்சி அரசியல் முறைகளை அமைத்துக்கொள்ளவும் சமுதாய சமத்துவத்தை அடையவும் மக்கள் எவ்வாறு போராடினர் என்பதைப்பற்றி படிக்கலாம்.

ஐரோப்பாவில் இங்கிலாந்து 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டூடர் வம்ச அரசர்களால் ஆளப்பட்டது. அந்த நேரத்தில் ரோமன் கத்தோ-க்க சர்ச்சின் தலைவராக போப் விளங்கினார். ஆனால் டூடர் அரசர்கள் போப்பின் அதிகாரத்தை ஏற்க மறுத்தனர். இங்கிலாந்து போப் மற்றும் ரோமன் கத்தோ-க்க சர்ச்சிடமிருந்து சுதந்திரமாக இருக்கவேண்டும் என அவர்கள் கருதினர். விரைவில், இராஜ்ஜியத்தில் மிகவும் அதிகாரம் படைத்தவர் அரசரா அல்லது பாராளுமன்றமா என்னும் புதிய போராட்டம் தொடங்கியது. இந்த போராட்டம் பிரிட்டனில் ஒரு மக்களாட்சி அரசாங்கம் ஏற்பட எவ்வாறு வகுத்தது என்பதைப் பற்றி பார்க்கலாம். .

SCERT TELANGANA

## இங்கிலாந்தில் இரத்தமில்லா புரட்சி (Bloodless or Glorious Revolution)

17ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போல இங்கிலாந்து நாடும் மன்னர்கள் மற்றும் ராணிகளால் ஆளப்பட்டு வந்தது. பிரிட்டனின் பகுதிகளாக விளங்கிய இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, அயர்லாந்து போன்றவை **தியூடர்** வம்ச மன்னர்களால் ஒன்றாக இணைக்கப்பட்டன. ரோமன் கத்தோலிக்கப் பிரிவின் தலைவராக விளங்கிய போப்பின் அதிகாரத்தை தியூடர் மன்னர்கள் ஏற்கவில்லை. பிரிட்டிஷ் மக்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்றும், அவர்கள் போப்பின் பிடியிலிருந்தும், ரோமன் கத்தோலிக்க ஆலயத்தின் பிடியிலிருந்தும் விடுபடவேண்டும் என்ற எண்ணம் மக்களிடையேத் தோன்றியது. இந்த எண்ணமே பிரிட்டிஷ் மக்களின் தேசிய உணர்வுக்கு அடித்தளமாக அமைந்துவிட்டது. இதன் தொடர்ச்சியாக, இங்கிலாந்து மன்னருக்கும், பாராளுமன்றத்தும் இடையே உயர்அதிகாரம் பற்றிய மோதல் ஏற்பட்டது. மன்னன் வரிவிதிப்பு தொடர்பான முடிவுகளை எடுக்க, நில பிரபுக்கள், வியாபாரிகள் ஆகியோர் அங்கம் வகித்த பாராளுமன்ற அவையின் ஒப்புதல் தேவைப்பட்டது. இம்மோதல், பிரிட்டனில் மக்களாட்சி அமைய எவ்வாறு வழிவகுத்தது என்பதை இப்போது நாம் காண்போம்.

1603ஆம் ஆண்டு, ஸ்டூவர்ட் வம்சத்தைச் சேர்ந்த முதலாம் ஜேம்ஸ் என்பவர் இங்கிலாந்தின் மன்னரானார். பாராளுமன்றத்துக்கு தன்னைக் கேள்வி கேட்கும் அதிகாரம் இல்லை என்ற அவர், பாராளுமன்றத்துடன் மோதலில் ஈடுபட்டார். மன்னனின் எல்லையற்ற அதிகாரங்கள் கடவுளால் தரப்பட்டவை என்றும், அரசர்கள் தெய்வீக உரிமையால் ஆளப்படுபவர்கள் என்றும் நம்பிய அவர், அரசர்களை கேள்வி கேட்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு இல்லை என்றார். அவருக்குப் பிறகு இங்கிலாந்தை ஆண்ட முதலாம் சார்லஸ் என்ற மன்னர் பாராளுமன்றத்தை கலைத்தார். பாராளுமன்றம் இல்லாமலேயே 11 ஆண்டுகள் ஆட்சி செய்தார். ஆனால் 1640ஆம் ஆண்டு போருக்கான சிறப்பு மானியங்களைப் பெற பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. 1640ஆம் ஆண்டிலிருந்து 1660ஆம் ஆண்டுவரை தொடர்ந்து (ஆகவே இது நீண்ட பாராளுமன்றம் என்று அழைக்கப்படுகின்றது) இப்பாராளுமன்றம் மன்னர்கள் மற்றும் அமைச்சர்களின் சர்வாதிகாரத்தைக் கட்டுப்படுத்த முடிவு செய்தது, இந்தப் பாராளுமன்றம் அமைச்சர்களையும், முதலாம் சார்லஸ் மன்னரின் அதிகாரிகளையும் தண்டித்தது. மன்னர் உருவாக்கிய சிறப்பு நீதிமன்றங்களையும் பாராளுமன்றம் ரத்து செய்தது.



*முதலாம் சார்லஸ்*

**உள்நாட்டுப்போர் : ஒரு நாட்டிற்குள் நடக்கும் போர்**

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே இருந்த கருத்து வேற்றுமைகளைத் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட முதலாம் சார்லஸ் மன்னர் தன் எதிரிகளைக் கைது செய்ய முயற்சித்தார். பாராளுமன்ற ஆதரவாளர்களுக்கும், மன்னர் ஆதரவாளர்களுக்கும் இடையே உள்நாட்டுப்போர் நடந்தது. 5 ஆண்டுகள் தொடர்ந்து நடந்த இப்போரில் முதலாம் சார்லஸ் மன்னர் தோற்கடிக்கப்பட்டு, 1649ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார். இவ்வாறாக இங்கிலாந்து குடியரசு நாடு ஆனது. இக்குடியரசு ஆட்சி இங்கிலாந்தில் நீண்டநாள் நீடிக்கவில்லை. 1688ஆம் ஆண்டு ஆரஞ்சு

வில்லியமும், அவருடைய மனைவி மேரியும் அரியணை ஏற பாராளுமன்றத்தால் அழைப்பு விடுக்கப்பட்டனர். பாராளுமன்றத்திற்கு அமைச்சர்கள் பொறுப்பு வகிக்கும் ஒரு புதிய ஏற்பாடு செயல்முறைக்கு வந்தது. மன்னரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. மக்களாட்சிக்கு வழிவகுக்கும் பாராளுமன்றத்தின் மேலாதிக்கம் நிலை நாட்டப்பட்டது. தெய்வீக உரிமையாக இருந்த மன்னரின் அதிகாரங்கள் அனைத்தும் பாராளுமன்றத்தின் அறிவுரைப்படி செயல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. மன்னரின் எல்லையற்ற உயர்அதிகாரங்களை பாராளுமன்றம் தன் வசம் எடுத்துக்கொண்டது. இவை அனைத்தும் துப்பாக்கிச்சூடு நடத்தப்படாமலும், ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமலும் நிகழ்ந்தமை. ஆகவே இப்புரட்சி **இரத்தமில்லா புரட்சி** என்று அழைக்கப்படுகின்றது.

நிலங்கள் மற்றும் சொத்துக்கள் உள்ளவர்கள் மட்டுமே பாராளுமன்றத்திற்கான தேர்தலில் வாக்களிக்க முடியும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். மக்கள் தொகைக்கேற்றவாறு தொகுதிகள் வரையறுக்கப்படவில்லை. அதன் விளைவாக குறைந்த மக்கள் தொகை கொண்ட பகுதிகளுக்கு அதிக எண்ணிக்கையில் தொகுதிகளும், அதிக மக்கள் தொகை உள்ள பகுதிகளுக்கு எந்த ஒரு தொகுதியும் இல்லாமல் போனது. இந்த முறையில் உள்ள தவறுகளை நீக்கி சீர்திருத்தங்களைக் கொண்டு வரவும், வாக்களிக்கும் உரிமைகளைப் பெறவும் பொதுமக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர் 1932ஆம் ஆண்டு, தேர்தல் முறையில் இருந்த குறைகள் களையப்பட்டு, வாக்களிக்கும் உரிமை மேலும் அதிக மக்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. வெவ்வேறு தரப்பு மக்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்ட வாக்குரிமை 1928ஆம் ஆண்டு வயது வந்த அனைவருக்கும் அளிக்கப்பட்டது. இவ்வாறாக இங்கிலாந்தில் பாராளுமன்ற அமைப்பு முறை பல நிலைகளில் வளர்ச்சி பெற்றது.

- மன்னர் ஆதரவாளருக்கும், பாராளுமன்ற ஆதரவாளருக்கும் இடையே நடைபெறும் ஒரு கற்பனை உரையாடலை எழுது.
- உள்நாட்டுப் போர் இங்கிலாந்து மன்னர் மட்டும் மக்கள் மீது எவ்வகை விளைவுகளை ஏற்படுத்தின?

## அமெரிக்கச் சுதந்திரம் 1774 - 1789


*தாமஸ் ஜெபர்சன்*

வட அமெரிக்காவின் கிழக்கு கடற்கரையில் இங்கிலாந்து குடியேற்ற நாடுகளை ஏற்படுத்திக்கொண்டது. இங்கிலாந்திலிருந்து வந்த மக்கள் விவசாயம் செய்வதற்காகவும், வியாபாரம் மற்றும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காகவும் 13-குடியேற்ற பகுதிகளில் நிரந்தரமாக குடியேறினர். அமெரிக்க குடியேற்ற நாடுகளுக்கான சட்டங்களை இங்கிலாந்து நாடாளுமன்றமே இயற்றியது. ஆனால் குடியேற்ற நாடுகளுக்கு இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கு வாக்கு அளிக்கும் உரிமையோ பிரதிநிதித்துவமோ இல்லை. இங்கிலாந்து பாராளுமன்றம் குடியேற்ற மக்களின் நலன்களை கருத்தில் கொள்ளாமல், இங்கிலாந்து தொழிலதிபர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு சட்டங்களை இயற்றியது. ஆகவே அமெரிக்க குடியேற்ற நாடுகள், "பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியில்லை" என்று முழக்கமிட்டனர். 1774ஆம் ஆண்டு, ஜார்ஜியாவைத் தவிர மற்ற குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள், தங்கள் எதிர்ப்பைக் காட்ட ஃபிலடெல்பியாவில் ஒன்று கூடினர். தாங்கள் ஏற்கனவே பெற்றிருந்த உரிமைகளை மீண்டும் அளிக்குமாறு அப்பிரதிநிதிகள் மூன்றாம் ஜார்ஜ் மன்னரை கேட்டனர். குடியேற்ற நாடுகளை நசுக்க நினைத்த மன்னரின் முயற்சிகள் பிரிட்டிஷ் படைகளுக்கும், அமெரிக்கப் படைகளுக்கும் இடையே போர் நடைபெற வழிவகுத்தது. குடியேற்ற நாடுகள் கலந்துக்கொண்ட இரண்டாவது மாநாடும் அமைதித் தீர்வு எட்ட முயற்சி மேற்கொண்டது. தங்கள் ஒப்புதல் இல்லாமல் புதிய



படம்: 13.1 கொலம்பியா என்று அழைக்கப்பட்ட முதல்சிலை. இச்சிலை நீக்கப்பட்டு USAவின் அடையாளமாக சுதந்திர தேவியின் சிலை நிறுவப்பட்டது..

வரிகளை விதிக்கவேண்டாம் என்று மன்னரை வேண்டியது. இச்செயல் அரசுக்கு எதிரானது என்று நினைத்த மன்னர் 1775ஆம் ஆண்டு குடியேற்ற நாடுகளின் மீது போரை அறிவித்தார். இப்போரின் இறுதியில் 1781ஆம் அண்டு அக்டோபர் மாதம் பிரான்ஸ் நாட்டு இராணுவ உதவியுடன் அமெரிக்கர்கள் வெற்றி பெற்றனர். 1783ஆம் ஆண்டு இயற்றப்பட்ட **பாரிஸ் உடன்படிக்கையின்** மூலம் அமெரிக்க சுதந்திரப்போர் முடிவுக்கு வந்தது. இந்த உடன்படிக்கையின் மூலம் 13 குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தை இங்கிலாந்து அங்கீகரித்தது.

### அமெரிக்கச் சுதந்திர அறிவிப்பு


'1776ஆம் ஆண்டு ஜுலை 4ஆம் நாள்', ஃபிலடெல்பியாவில் நடைபெற்ற குடியேற்றங்களின் பிரதிநிதிகள் மாநாட்டில் அமெரிக்க சுதந்திரம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பின் திட்ட வரைவாளராக 'தாமஸ் ஜெபர்சன்' விளங்கினார். இறைவனால் அளிக்கப்பட்ட பறிக்க முடியாத உரிமைகளான வாழும் உரிமை, சுதந்திர உரிமை, மகிழ்ச்சிக்கான உரிமை போன்ற உரிமைகளுடன் மனிதர்கள் சமமாகப் படைக்கப்பட்டனர் என்று அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

**குடியரசு: மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் நாட்டின் தலைவராக இருப்பார், மன்னரல்ல.**

1789ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தேசிய அரசாங்கம், குடியரசு முறைக்கான அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டது. ஜெபர்சன் உதவியால் கூட்டாசிக்கான மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப்பகிர்வு அறிமுகப்படுத்தப்பட்டது. பேச்சு உரிமை, மதஉரிமை போன்று சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி போன்றவற்றிற்கான சட்டங்கள் இயற்றப்பட்டன. இதுவே, அமெரிக்க ஐக்கிய நாடுகளை நிறுவ வழிவகுத்தது.

## பிரெஞ்சுப் புரட்சி

1774ஆம் ஆண்டு 16-ஆம் லூயி பிரான்ஸ் மன்னரானார். 20 வயதில் மன்னரான அவர், மேரி அன்டாய்நெட் என்னும் ஆஸ்திரிய நாட்டு இளவரசியை திருமணம் செய்துக்கொண்டார். புதிய அரசரான அவர், கடும் நிதிப் பற்றாக்குறையை எதிர்கொண்டார். இதற்குக்காரணம், பிரான்ஸ் பல ஆண்டுகள் போரில் ஈடுபட்டதே ஆகும். பிரான்ஸ் நாட்டின் மிகப்பெரிய அரண்மனையில் இயங்கிய நீதிமன்றத்துக்கு செய்யப்பட்ட செலவு, நிதி நிலைமையை மேலும் சிக்கலாக்கியது. இதைத்தவிர தனது பொது எதிரியான பிரிட்டன் படைகளைத் தோற்கடிக்க 13 அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு உதவி செய்ததாலும் சீராக்க முடியாத அளவுக்கு நிதிநிலைமை




**பிரஞ்சு சமுதாயத்தின் எஸ்டேட்டுகள்**

*சமுதாயத்தின் மூன்றாவது எஸ்டேட்டில் அதிக ஏழைகளும், சில பணக்காரர்களும் இருப்பதை நீங்கள் அறிய வேண்டும்.*

SCERT TELANGANA

சென்றுவிட்டது. இப்போரினால் பிரான்ஸுக்கு கடன் சுமை மேலும் அதிகமானது. இராணுவம், நீதிமன்றம், அரசு நிர்வாகம், பல்கலைக்கழகம் போன்றவற்றிற்கான பொதுச்செலவுகளைச் சமாளிக்க வரிவிதிப்பை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் பிரான்ஸ் நாட்டுக்கு ஏற்பட்டது. அதிக வரி விதிப்பும் பிரான்ஸின் செலவினங்களுக்கு போதுமானதாக இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டில், மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட பிரெஞ்சு சமூகத்தின் 3வது பிரிவைச் சேர்ந்த மக்கள் மட்டுமே வரிகளைச் செலுத்தினர். பிரான்ஸின் சமுதாயப் பிரிவினை நிலபிரபுக்கள் முறையின் பிரதிபலிப்பாகவே இருந்தது.

படம் 3ஐப் பாருங்கள். பிரான்ஸ் நாட்டு சமுதாயப் பிரிவின் அமைப்பை நீங்கள் எளிதாக அறியலாம். மக்கள் தொகையில் 90% விவசாயிகளாக இருந்தனர். இவர்களில் மிகக்குறைந்தவர்களே விவசாயம் செய்ய நிலங்களைப் பெற்றிருந்தனர். மொத்தமுள்ள விவசாய நிலங்களில் 60% நிலங்கள் சமுதாய உயர்வகுப்பினர், பாதிரியார்கள், சமுதாயத்தின் மூன்றாவது பிரிவில் இருந்து பெருஞ்செல்வந்தர்கள் ஆகியோருக்குச் சொந்தமாக இருந்தது. சமுதாயத்தின் முதல் இரண்டு பிரிவினரான கிறுஸ்துவ மத பாதிரியார்கள், மன்னர் பரம்பரையினர் ஆகியோர் தங்கள் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு பல சலுகைகளைப் பெற்றனர். இவர்கள் பெற்ற சலுகைகளில் மிக முக்கியமானது வரிவிதிப்பிலிருந்து விதிவிலக்குப் பெற்றதேயாகும். இதைத்தவிர மன்னர் பரம்பரையில் வந்தவர்கள் நில பிரபுக்களாகவும், அவர்களுக்கான சலுகைகளையும் பெற்றவர்களாகவும் இருந்தனர். இவர்கள் சிறு விவசாயிகளைச் சுரண்டி நில குத்தகைத் தொகைகளை வசூலித்தனர். சிறு விவசாயிகள் நிலச்சுவாந்தார்களின் வீட்டுப்பணிகளைச் செய்வதற்கும் அவர்கள் வயல்களில் பணி செய்வதற்கும், சாலைப் பணிக்காகவும், இராணுவச் சேவைக்காகவும் பயன்படுத்தப்பட்டனர். விவசாயிகளிடமிருந்து **டைத்ஸ்**(Tiths) என்ற பெயரில் விளைச்சலில் 1/10 பாகத்தை சர்ச் தன் பங்காக வரி வசூலித்துக்கொண்டது. சமுதாயத்தின் மூன்றாவது பிரிவைச் சேர்ந்த அனைவரும் வரி கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவ்வரிகள் **டெய்ல்**(Taille) என்று அழைக்கப்படும் நேர்முக வரியாகவும், உப்பு, தேயிலை போன்ற அன்றாட பொருட்களின் மீது விதிக்கப்படும் மறைமுக வரியாகவும் இருந்தது. நாட்டின் செலவினங்களுக்கு வரி செலுத்த வேண்டிய கட்டாயம் சமுதாயத்தின் மூன்றாவது பிரிவு மக்களையே சேர்ந்தது. ஆனால் இக்காலங்களில் விவசாய விளைச்சல் இல்லாமல் போனதும், விவசாயிகள் பல்வேறு பிரச்சனைகளை சந்தித்தும், விவசாயிகளின் கோபத்தை மேலும் அதிகமாக்கியது.

**புதிய சொற்கள்**

♦ **லிவர்ஸ் : பிரான்ஸ் நாட்டு நாணயத்தின் பெயர். இது 1794ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.**

♦ கிறிஸ்துவ பாதிரியார்கள் : கிறிஸ்துவ சர்சிகளில் பணிபுரிந்து சிறப்பு சலுகைகளை பெற்றவர்கள்.

♦ டெய்ல் : நாட்டுக்கு நேரடியாக செலுத்தப்பட வேண்டிய வரி.

♦ டைத்ஸ் : கிறிஸ்துவ சர்ச்சால் விதிக்கப்படும் வரி. விளைச்ச-ல் 1/10பாகம் விவசாயிகளிடமிருந்து சர்ச் தன் பங்காக வசூலிக்கும்.

### நடுத்தர வகுப்பின் வளர்ச்சி சமுதாய முதல்பிரிவு மக்களின் சலுகைகள் பறிப்பு

அதிக வரிவிதிப்பு உணவுப் பற்றாக்குறை போன்றவற்றை எதிர்த்து விவசாயிகளும், தொழிலாளர்களும் புரட்சியில் ஈடுபட்டது தெரிந்ததே. நாட்டில் நிலவிய சமூக பொருளாதார முறைகளை மாற்ற அவர்களுக்கு வழிமுறைகளோ, செயல்திட்டங்களோ இல்லை. கல்வி, செல்வம், புதிய சிந்தனைகள் போன்றவற்றில் சிறந்து விளங்கிய சமூக மூன்றாம் வகுப்பு பிரிவினருக்கு இம்மாற்றத்தைச் செய்யும் பொறுப்பு அளிக்கப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டில் புதிய சமூக பிரிவுகள் தோன்றின அவை நடுத்தர வகுப்பு என்று அழைக்கப்படுகின்றன. அவ்வகுப்பினர் வெளிநாட்டு வர்த்தகம், கம்பளி மற்றும் பட்டு ஆடைகள் உற்பத்தி போன்றவற்றின் உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மட்டுமின்றி வழக்கறிஞர்கள், அரசின் நிர்வாக அதிகாரிகள் போன்றோரையும் உள்ளடக்கிய வகுப்பாகும். இவ்வகுப்பினர் அனைவரும் கல்வி கற்றவர்களாக விளங்கினர். பிறப்பை

அடிப்படையாகக்கொண்டு (மன்னர் அல்லது உயர்வகுப்பில் பிறந்தவர்கள்) எந்தவித சலுகைகளையும் தரக்கூடாது என்று இவர்கள் வலியுறுத்தினர். ஒருவரின் சமுதாய அந்தஸ்து என்பது அவரின் தரம் அல்லது நற்செயலைச் சார்ந்தது என்று நம்பினர். தத்துவ ஞானிகளான ஜான் லாக், ஜான் ஜாக்ஸ், ரூசோ போன்றோர் **சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்** போன்றவற்றை மக்களிடையே பரப்பினர். ஜான் லாக் தான் எழுதிய **அரசின் இரண்டு கட்டுரைகள்,** என்ற புத்தகத்தில், அரசனின் எல்லையற்ற அதிகாரங்கள், மற்றும் தெய்வீக உரிமைகள் தவறானவை என்பதைத் தெளிவாக்கினார். மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்குமான 'சமூக உடன்படிக்கை'யிலான, அரசாங்க அமைப்பை **ரூசோ** கொண்டு, வந்தார். 'மான்டெஸ்கியூ' என்ற அறிஞர் தான் எழுதிய **சட்டங்களின் உணர்வு(Spirt of laws)** என்ற புத்தகத்தில், அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளாக விளங்கக்கூடிய சட்டமன்றம், செயற்குழு, நீதிமன்றம் போன்றவற்றின் 'அதிகார வேறுபடுத்தலுக்கான' அவசியத்தை விளக்கினார். அமெரிக்க நாடு இங்கிலாந்திடமிருந்து சுதந்திரம் பெற்ற பிறகு அதிகார வேறுபடுத்துதல் முறையே செயல்படுத்தத் தொடங்கியது. அமெரிக்க அரசியல் அமைப்புச்சட்டமும், அரசியல் அமைப்பால் உறுதியளிக்கப்பட்ட உரிமைகளும் பிரெஞ்சு அரசியல் நோக்கர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது.

மேற்கூறிய தத்துவஞானிகளின் சிந்தனைகள் தேநீர் விடுதிகளிலும், முடிதிருத்தும் நிலையங்களிலும் மக்கள் அனைவராலும் விவாதிக்கப்பட்டன. இவ்விவாதங்கள் புத்தகங்கள் மூலமும், செய்தித்தாள்கள் மூலமும் வெகுவேகமாக பரப்பப்பட்டன. படிப்பறிவு அற்றவர்களுக்கும் இச்செய்திகள் படித்துக்காட்டப்பட்டன. அரசின் செலவினங்களை ஈடுகட்ட 16–ஆம் லூயிமன்னர் வரிவிதிப்பை அதிகமாக்க திட்டமிட்டுள்ளார் என்ற செய்தி மக்களிடையே கடுங்கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

### புரட்சி வெடித்தல்

மேற்கூறிய காரணங்களுக்கு 16–ஆம் லூயி வரி விதிப்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை நீங்கள் கற்றீர்கள். வரிவிதிப்பை அதிகரிக்கும் முடிவை அவர் எவ்வாறு எடுத்திருப்பார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். பிரான்ஸ் நாட்டில் இருந்த பழைய மன்னராட்சி முறையில் மன்னர் தன் விருப்பப்படி வரிகளை விதிக்க முடியாது. எஸ்டேட் ஜெனரல் என்ற பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்ற பிறகு தான் வரிவிதிக்க முடியும். எஸ்டேட் ஜெனரல் என்பது மூன்று எஸ்டேட்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டம் இயற்றும் சபையாகும். ஆனால் இச்சபையை எப்போது கூட்ட வேண்டும் என்ற முடிவு மன்னரைச் சேர்ந்ததாகும். கடைசியாக இச்சபை 1614ஆம் ஆண்டு கூட்டப்பட்டது. 175ஆண்டுகளுக்குப்பிறகு 1789ஆம் ஆண்டு, புதிய வரி விதிப்புக்கான ஒப்புதலைப்பெற 16ஆம் லூயி மன்னர் எஸ்டேட் ஜெனரலின் கூட்டத்தைக் கூட்டினார். எஸ்டேட் ஜெனரலின் பிரதிநிதிகள் பங்கேற்க வெர்சைல்ஸ் நகரத்தில் மிகப்பெரிய ஏற்பாடு செய்யப்பட்டது. முதலாம் மற்றும் இரண்டாம் எஸ்டேட்கள் இச்சபையில் கலந்துக்கொள்ள 300 பிரதிநிதிகளை அனுப்பியது. அவர்கள் பல வரிசைகளில், இரண்டு பக்கங்களில் எதிரும் புதிருமாக அமரச்செய்யப்பட்டனர்.

அதே வேளையில் மூன்றாவது எஸ்டேட்டின் 600 உறுப்பினர்கள் அவர்களுக்குப் பின்னால் நிற்க வைக்கப்பட்டனர். மிகவும் படித்த செல்வந்தர்கள்



*படம் 13.2: 1789ஆம் ஆண்டு மே 5ம் தேதி எஸ்டேட் ஜெனரலின் மாநாடு வெர்சைல்ஸ் நகரில் துவக்கம்*

SCERT TELANGANA



*படம் 13.3: டென்னிஸ் விளையாட்டுத் திடலில் உறுதிமொழி எடுக்கும் மக்கள். ஜான் லூயிடேவிட்டால் தீட்டப்பட்ட ஓவியம். இது பிரான்ஸின் தேசிய சபையில் பார்வைக்கு வைக்கப்படுவதற்காக தீட்டப்பட்டதாகும்*

மூன்றாவது எஸ்டேட்டில் பிரதிநிதித்துவம் வகித்த சிறு விவசாயிகள், கலைஞர்கள், பெண்கள் ஆகியோருக்கு சபையில் அனுமதி மறுக்கப்பட்டது. 40,000 மனுக்களில் பட்டியலிடப்பட்ட அவர்களின் குறைகளும், கோரிக்கைகளும் பிரதிநிதிகளால் சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

ஒவ்வொரு எஸ்டேட்டுக்கும் ஒரு வாக்கு என்ற வீதத்தில் கடந்த காலங்களில் இச்சபைக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இம்முறையும் அதே போன்ற நடைமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என்று மன்னர் 16ஆம் லூயி முடிவு எடுத்தார். ஆனால் மூன்றாவது எஸ்டேட்டின் உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற வீதத்தில் சபை முழுவதிற்கும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினர். **சமூக உடன்படிக்கை** என்ற தனது புத்தகத்தில் ரூசோவும் இதைப் போன்ற மக்களாட்சி நடைமுறைகளை வலியுறுத்தினார். மன்னர் 16ஆம் லூயி இக்கோரிக்கையை ஏற்க மறுத்ததால், மூன்றாம் எஸ்டேட்டின் உறுப்பினர்கள வெளிநடப்பு செய்தனர்.

### டென்னிஸ் கோர்ட்:

மூன்றாம் எஸ்டேட்டின் பிரதிநிதிகள், தங்களை ஒட்டுமொத்த பிரான்சுக்கான அதிகாரப் பிரதிநிதிகளாக கருதினர். அவர்கள் ஜுன் 20ஆம் நாள் வெர்சைல்ஸ் நகரத்திலுள்ள டென்னிஸ் விளையாட்டுத் திடலில் ஒன்று திரண்டனர். தங்களை தேசிய சபையாக அறிவித்துக்கொண்ட அவர்கள், மன்னரின் அதிகாரங்களைக் குறைக்க வழிவகைச் செய்யும் அரசியல் அமைப்பை சட்டத்தை உருவாக்காமல் அங்கிருந்து கலையக்கூடாது என்று முடிவு செய்தனர். தேசிய சபை, டென்னிஸ் விளையாட்டுத் திடலில் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் மிகத்தீவிரமாக இருந்தபோது, பிரான்ஸ் மக்களிடையே கடுங்கொந்தளிப்புக் காணப்பட்டது. நாட்டில் நிலவிய கடுங்குளிரால் விளைச்சல் பாதிக்கப்பட்டது. ரொட்டித் துண்டுகளின் விலை பெரும் விலை ஏற்றத்தைக் கண்டது. இச்சூழலைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ரொட்டி தயாரிப்பாளர்கள் உணவுப் பொருட்களைப் பதுக்கத் தொடங்கினர். ரொட்டித்துண்டுகளுக்காக மிக நீண்ட வரிசையில் காத்திருந்து வெறுப்புற்ற பெண்கள், ரொட்டிக்கடைகளைச் சூறையாடினர். அதே வேளையில் மன்னர் தம் படைகளை பாரீஸ் நகரத்திற்கு அனுப்பினார்.


**மனோர்:** பிரபுக்களின் நிலமும் மாளிகையும் உள்ளடக்கிய பண்ணை.
**சாட்டோ:** மன்னர் பரம்பரையினர் வாழும் மாளிகை.

ஜுலை மாதம் 14ஆம் நாள், கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த மக்கள், முடியாட்சியின் சின்னமாக விளங்கிய பாஸ்டைல் சிறைச்சாலையை தகர்த்து எறிந்தனர்.

நிலபிரபுக்கள் பலர், வழிப்பறி கொள்ளையர்களின் குழுக்கள் பலவற்றை கூலிக்கு அமர்த்தி, அறுவடை நிலையில் இருந்த பயிர்களை அழிக்க திட்டமிட்டனர் என்ற வதந்தி காட்டுத்தீ போல வெகுவேகமாகப் பரவியது. இதனால் கோபமுற்ற மக்கள் மன்னர் பரம்பரையினர்களின் வீடுகளை கூர்மையான கருவிகளைக் கொண்டு தகர்த்தனர். அங்கே பதுக்கி வைக்கப்பட்டிருந்த தானியங்களை கொள்ளையடித்தனர். விவசாயிகள் நிலபிரபுக்களுக்கு எழுதிக்கொடுத்திருந்த கடன் ஆவணங்களையும் தீயிட்டுக்கொளுத்தினர்; பயந்து ஓடிய மன்னர் குடும்பத்தினர் பலர், பக்கத்து நாடுகளுக்கு இடம் பெயர்ந்துச் சென்றனர். கிளர்ந்து எழுந்த மக்களின் ஆவேசத்தை அறிந்த மன்னர் 16ஆம் லூயி தேசிய சபையை ஒப்புக்கொண்டார். தன் அதிகாரங்கள் அனைத்தும் அரசியலமைப்புச் சட்டத்தால் வரையறுக்கப்படுவதை ஏற்றுக்கொண்டார். 1789ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4ஆம் நாள் நிலபிரபுக்கள் முறை, வரிகள், மதகுருக்களுக்கான சலுகைகள் போன்றவற்றை தடைசெய்து ஆணையிடப்பட்டது, டைத்ஸ் என்ற மதகுருக்களுக்காக 1/10 வீதம் செலுத்தப்படும் விவசாய வரி நீக்கப்பட்டது. அதன் விளைவாக, 2 பில்லியன் லிவர்ஸ் (பிரெஞ்சுப்பணம்) சொத்துக்களை பெறவேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது.

## பிரான்ஸ், அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்ட முடியாட்சி நாடானது

தேசிய சபை, பிரான்ஸ் நாட்டுக்கான அரசியல் அமைப்புச்சட்டத்தை 1791ஆம் ஆண்டு ஊருவாக்கியது. மன்னரின் அதிகாரங்களைக் குறைப்பதே அச்சபையின் முக்கிய நோக்கமாக இருந்தது. ஒருவரிடமே இருந்த அதிகாரங்கள் அனைத்தும் வேறுபடுத்தப்பட்ட சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்ட முடியாட்சி நாடாக பிரான்ஸ் உருவாவதற்கு இது காரணமாயிற்று.




படம் 1791 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டப்படி பிரான்ஸ் நாட்டின் அரசியல் அமைப்பு

SCERT TELANGANA

பிரான்ஸில் புதிய அரசியல் அமைப்பு எவ்வாறு செயல்பட்டது என்று மேற்கண்ட படம் தெளிவாக விளக்குகின்றது. 1791ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம், சட்டம் இயற்றும் அதிகாரங்களை மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ள தேசிய சபைக்கு அளித்தது. குடிமக்கள் ஒரு குறிப்பிட்ட வாக்காளர்களின் குழுவிற்கு வாக்களிப்பர். அக்குழுக்கள் தேசிய சபைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. குடிமக்களின் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்கள் மட்டுமே தேர்வில் பங்கேற்க முடிகின்றது. 25வயது நிரம்பிய ஒருவர், ஒரு தொழிலாளியின் மூன்று நாள் கூலியை வரியாகக் கட்டினால் மட்டுமே, ஈடுபாடுள்ள குடிமகன் என்ற அந்தஸ்து தரப்பட்டு, வாக்களிக்கும் உரிமை அரசாங்கத்தால் தரப்படுகின்றது. மீதமுள்ள ஆண்களும், பெண்களும் ஈடுபாடற்ற குடிமக்களாக தரம் பிரிக்கப்பட்டனர். வாக்காளராகத் தகுதி பெறுவதற்கும், தேசிய சபையின் உறுப்பினராவதற்கும் ஒருவர், மிக அதிகமான வரி செலுத்துபவராக இருத்தல் வேண்டும்.

குடிமக்களின் உரிமைகள் பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்புடன் அரசியலமைப்பு சட்டத்தின் விதிகள் துவங்குகின்றன. வாழும் உரிமை, பேச்சுரிமை, கருத்துரிமை, சமத்துவ உரிமை போன்ற உரிமைகள் இயற்கையான மற்றும் பறிக்க முடியாத உரிமைகள் என்று அரசியலமைப்புச் சட்டம் நிலை நாட்டியது. இதன் மூலம் மேற்கண்ட உரிமைகள் பிறப்பால் இயற்கையாக பெறப்பட்டது என்பது விளங்குகின்றது. குடிமக்களின் இயற்கையான உரிமைகளைக் காக்க வேண்டிய கடமை நாட்டைச் சேர்ந்தாகும்.

**மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகளைப்பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு**




1. மக்கள் சுதந்திரமானவர்கள், சமமான உரிமைகளைப் பெற்றவர்கள்.

2. சுதந்திரம், சொத்து, பாதுகாப்பு, அடக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பு போன்ற இயற்கையான மற்றும் பறிக்க முடியாத உரிமைகளைக் காக்க வேண்டியது அரசியல் அமைப்பின் நோக்கமாகும்.

3. இறையாண்மை மக்களிடம் உள்ளன. மக்களிடமிருந்து கிடைக்காத எந்தவித அதிகாரத்தையும் மக்களோ, தனி மனிதரோ பயன்படுத்தக்கூடாது.

4. பிறருக்கு தீங்கு விளைவிக்கா வண்ணம் தன் அதிகாரத்தைப் பயன்படுத்துவதே சுதந்திரமாகும்.

5. சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்பாடுகளைத் தடை செய்யும் உரிமை சட்டத்திற்குள்ளது.

6. பொதுமக்கள் கருத்தின் வெளிப்பாடே சட்டமாகும். சட்டம் இயற்றுவதில் ஒவ்வொரு குடிமகனும் நேர்முகமாகவோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் மூலமோ பங்கு பெறலாம். இதில் எல்லா குடிமக்களும் சமம்.

7. சட்டத்திற்கு எதிராக யாரும் கைது செய்யப்படவோ அல்லது குற்றம் சாட்டப்படவோ கூடாது.

8. ஒவ்வொரு குடிமகனும் சுதந்திரமாக எழுதலாம், பேசலாம் மற்றும் அச்சிடலாம். சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட சுதந்திரம் மீறப்படுமேயானால் அதற்கு ஒவ்வொரு குடிமகனும் பொறுப்பு வகிக்க வேண்டும்.

9. ராணுவ பராமரிப்பிற்காகவும், பொதுச் செலவினங்களுக்காகவும் வரி விதிப்பு தவிர்க்க முடியாததாகும். குடிமக்களின் வருவாய்க்கேற்றவாறு வரி விதிக்கப்பட வேண்டும்.

10. சொத்துக்கள் புனிதமான மற்றும் மதிக்கப்படவேண்டிய உரிமையாக இருப்பதால், சட்டப்படியான பொது அவசியம் ஏற்பட்டால் மட்டுமே இவ்வுரிமை பறிக்கப்படவேண்டும். அதுபோன்ற சமயங்களில் சொத்துக்கான நஷ்ட ஈட்டை முன்னதாகவே கொடுக்கப்படவேண்டும்.

(குறிப்பு : முக்கியமான உரிமைகள் தரப்பட்டுள்ளன)

SCERT TELANGANA

- 1791ஆம் ஆண்டின் அரசியல் சட்டம், குடிமக்களுக்குத் தரப்பட்டுள்ள உரிமைகளின் அறிவிப்பில் உள்ள விதி 1/2 மற்றும் 6ல் தரப்பட்டுள்ள உரிமைகளை ஒப்பிட்டுப் பாருங்கள். (பக்க எண்.24) இவ்விரண்டு விதிகளின் படி தரப்பட்டுள்ள உரிமைகள் ஒரே கருத்தைத் தெரிவிக்கின்றனவா?
- படம் 2.1ஐ நோக்குங்கள். 1791ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு சட்டத்தின்படி பிரெஞ்சு சமுதாயத்தின் எக்குழுக்கள் பயனடைந்திருக்கும்? எக்குழுக்களுக்கு அதிருப்தி அடைவதற்கான காரணங்கள் இருந்திருக்கும்?
- பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற கிளர்ச்சிகள், முடியாட்சி முறையை பின்பற்றிக்கொண்டு இருந்த அதன் பக்கத்து நாடுகளான பிரஷ்யா, ஆஸ்திரியா, ஹங்கேரி மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளின் மீது எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதைக் கற்பனைச் செய்து பாருங்கள். பிரான்ஸ் நாட்டின் கிளர்ச்சி, பக்கத்து நாடுகளின் மன்னர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், உயர் வகுப்பினர், மதகுருக்கள் போன்றோரிடம் எந்தவிதமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்?

**பிரான்ஸ் நாட்டில் கிளர்ச்சி உருவாதல்:** பிரான்ஸ் நாட்டில் அதற்கடுத்த வருடங்களில் பதற்ற நிலை நிலவியது. 16-ஆம் லூயி மன்னர் அரசியலமைப்புச் சட்டத்தை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டபோதிலும், பிரஷ்ய அரசருடன் ரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார். பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள் அதன் பக்கத்து நாடுகளையும் கவலைக்குள்ளாக்கியது. இந்நாடுகள் 1789ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்ற கிளர்ச்சிகளை அடக்க பிரான்ஸுக்கு படைகளை அனுப்பதிட்டமிட்டன. ஆனால் படைகள் அனுப்பப்படுவதற்கு முன்னரே, பிரான்ஸ் நாட்டின் தேசியசபை, பிரஷ்யா, ஆஸ்திரியா போன்ற நாடுகளின் மீது போர்த்தொடுக்க 1792ஆம் ஆண்டு வாக்களித்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இராணுவத்தில் சேர்ந்து போரிடத்தயாராயினர். மக்கள் இப்போரை, ஐரோப்பாவிலிருந்த அனைத்து மன்னர்கள் மற்றும் உயர் வகுப்பினர்களுக்கு எதிரானதாக நினைத்தனர். 1791ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசியல் சட்டம், செல்வந்தர்களுக்கு மட்டுமே அரசியல் உரிமைகளை வழங்கியதால் இப்புரட்சியை மேலும் தீவிரமாக்க வேண்டும் என மக்களில் பெரும்பாலோனர் நம்பினர். அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் விவாதிக்கும் மையங்களாக அரசியல் மன்றங்கள் விளங்கின. ஜேகோபின் மன்றம் இவ்வகையான விவாதிக்கப்பட்ட அரசியல் மன்றங்களின் வெற்றிகரமாக செயல்பட்ட மன்றமாகம். ஜேகோபின் என்பது பாரீஸ் நகரத்தில் இயங்கிய **புனித ஜேக்கப்** எனும் கிறிஸ்துவ மடத்தின் பெயராகும்.

ஜேகோபின் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களாவர். சிறுகடை வியாபாரிகள், காலணி தயாரிப்பாளர்கள், சமையல் கலைஞர்கள், அச்சுத்தொழில் செய்வோர், தினக்கூலிகள் போன்றோர் இம்மன்றத்தின் உறுப்பினர்களாக இருந்தனர். **மேக்ஸி மில்லியன் ராபெஸ்பியர்** என்பவர் இவர்களின் தலைவராக விளங்கினார்.

**மடம் : துறவிகள் வாழும் கட்டிடம்**

1792ஆம் ஆண்டு, உணவுப்பொருள் பற்றாக்குறையாலும், விலையேற்றத்தாலும் கோபமுற்ற பல்லாயிரக்கணக்கான பாரீஸ் நகர மக்கள் துணையுடன் வன்முறையின் மூலம் ஆட்சியைப் பிடிக்க ஜேகோபின்கள் திட்டமிட்டனர். ஆகஸ்டு மாதம் 10ஆம் நாள் டியூலரிஸ் என்ற அரண்மனையின் முன்பு ஒன்று திரண்ட மக்கள், மன்னரின் காவலாளிகளைக் கொன்று விட்டு, மன்னரையும் பலமணிநேரங்கள் பிணைக்கைதியாகப் பிடித்து வைத்திருந்தனர். அதன்பிறகு மன்னர் குடும்பத்தை சிறையில் அடைக்க ஆதரவாக தேசிய சபை வாக்களித்தது. தேர்தல்கள் நடத்தப்பட்டன. இத்தேர்தலில் 21 வயது நிரம்பிய அனைவருக்கும் எவ்வித பாகுபாடின்றி வாக்குரிமை அளிக்கப்பட்டது.

SCERT TELANGANA

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சபை , மரபுச்சபை (Convention) என்று அழைக்கப்பட்டது. 1792ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ஆம் நாள் இச்சபை முடியாட்சியை நீக்கி, பிரான்ஸ் நாட்டை குடியரசு நாடாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. குடியரசு நாட்டில் அரசின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள அனைவரும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பது நீங்கள் அறிந்ததே. 1793ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் நாள் 16ஆம் லூயி மன்னர் மற்றும் ராணி மேரி அண்டாய்நெட் ஆகிய இருவரும் தேசதுரோகச் செயலுக்காக **கில்லட்டின்** எனும் இயந்திரத்தால் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

## வன்முறை ஆட்சிக் காலம்

1793 முதல் 1794ஆம் ஆண்டு வரை பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற கடும் வன்செயல்களால் இக்காலம் வன்முறை ஆட்சிக்காலம் என்றழைக்கப்படுகிறது. மேக்ஸி மில்லன் , ராபிஸ்பியர் கட்டுப்பாடுகளை விதித்தல், தண்டித்தல் போன்ற கொடுங்கோள்கைகளை கடைப்பிடித்தார். குடியரசின் எதிரிகளாக யார் கருதப்படுகிறார்களோ அல்லது தன் கொள்கைகளை யார் ஏற்க மறுக்கிறார்களோ அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். (எடுத்துக்காட்டு : மன்னர் பரம்பரையினர், உயர்வகுப்பினர், மதகுருக்கள், பிற அரசியல் கட்சி உறுப்பினர்கள், தன்னை எதிர்க்கும் தன் கட்சி உறுப்பினர்கள் போன்றோர்). இவர்கள் புரட்சிக்கான சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டனர். நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்ட அனைவரின் தலைகளும் கில்லட்டின் என்ற இயந்திரத்தின் மூலம் தலை வெட்டி எடுக்கப்பட்டனர். ராபிஸ்பியரின் அரசாங்கம் கூலி மற்றும் விலைகளின் மீது கட்டுப்பாடுகளை விதித்தது. மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவை நிர்ணயித்தது. விவசாயிகள் தங்கள் பொருட்களை நகரத்துக்கு அனுப்பி அரசு நிர்ணயித்த விலைக்கு விற்க கட்டாயப்படுத்தப்பட்டனர். குடிமக்கள் அனைவரும் கோதுமையால் செய்யப்பட்ட சமத்துவ ரொட்டியை உண்ணுமாறு பணிக்கப்பட்டனர். ஆலயங்கள் மூடப்பட்டு, அலுவலகங்களாக மாற்றப்பட்டன. ராபிஸ்பியரின் கொள்கைகளால் வெறுப்படைந்த அவரது ஆதரவாளர்கள் மாற்றத்தை விரும்பினர். இறுதியாக 1794ஆம் ஆண்டு அவர் கைது செய்யப்பட்டு கில்லட்டின் இயந்திரத்தின் மூலம் தலை வெட்டி எடுக்கப்பட்டார்.

**கில்லட்டின் : தலையை வெட்டும் இயந்திரம்**



## நிர்வாகக் குழுவின் ஆட்சிக்காலம்

ஜேகோபின் ஆட்சி வீழ்ச்சிக்குப்பிறகு, நடுத்தர செல்வந்த வகுப்பினர் ஆட்சியைப் பிடித்தனர். சொத்துக்கள் இல்லாதவர்களுக்கு வாக்குரிமையை மறுக்கும் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய இரண்டு சட்ட சபைகளுக்கு வழிவகுக்கிறது. இக்குழு, ஐவர் கொண்ட நிர்வாகக்குழு ஒன்றை நியமித்து அதன் மூலம் ஆட்சி செய்தது. ஜேகோபின் ஆட்சிக் காலத்தில் அதிகாரங்கள் அனைத்தும் ஒருவரிடமே இருந்தது போலன்றி, பலரிடமும் இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இந்த ஐவர் குழு அடிக்கடி சட்டசபைகளுடன் மோதலில் ஈடுபட்டதால் இக்குழுவைக் கலைக்க சட்டமன்றங்கள் நினைத்தன. இந்த அரசியல் நிலையற்ற தன்மை நெப்போலியன் போனபார்ட் இராணுவ ஆட்சியைக் கொண்டுவர உதவியது. இறுதியாக, நெப்போலியன் போனபார்ட் ஆட்சியைப்பிடித்து, தன்னை பிரான்ஸ் நாட்டின் பேரரசராக அறிவித்துக்கொண்டார். இச்செயலை பெரும்பாலான மக்களாட்சி நோக்கர்கள் பிரெஞ்சு புரட்சியின் துரோகமாக கருதினர். பிரான்ஸ் நாடு பல்வேறு ஆட்சி முறைகள் அல்லது மாற்றங்களைக் கண்டாலும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை பிரெஞ்சு மக்களின் லட்சியமாகவே எஞ்சின. 18ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பிரான்ஸ் நாட்டிலும், ஐரோப்பாவின் பிற நாடுகளிலும் நிகழ்ந்த பல்வேறு அரசியல் போராட்டங்களுக்கு, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவையே ஊக்கமாக அமைந்தது.



SCERT TELANGANA

## பிரெஞ்சு புரட்சியில் பெண்கள்

பிரெஞ்சு புரட்சியின் துவக்கத்திலிருந்து நடைபெற்ற பல்வேறு போராட்டங்களில் பெண்கள் அதிக ஈடுபாட்டுடன் பங்கேற்றனர். இது பிரெஞ்சு சமுதாயத்தில் பல முக்கிய மாற்றங்கள் நிகழ காரணமாயிற்று. போராட்டத்தில் தங்களின் பங்களிப்பு புரட்சிகர மாற்றங்களுக்கு வித்திடும் என அவர்கள் நம்பினர். மூன்றாவது எஸ்டேட்டைச் சேர்ந்த பெண்கள் அன்றாட உணவுக்கே அல்லல்பட வேண்டியதாயிற்று. துணி தைத்தல், துணி துவைத்தல், பூக்களை விற்றல், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை சந்தைகளில் விற்றல் செல்வந்தர்களின் வீட்டுப்பணி போன்ற பல்வேறுப்பணிகளைப் பெண்கள் செய்து வந்தனர். பெண்கள் கல்வியறிவு அற்றவர்களாக விளங்கினர். மன்னர் பரம்பரையினர் மற்றும் மூன்றாம் எஸ்டேட்டின் பணக்கார குடும்பத்துப் பெண்களால் மட்டுமே கிறிஸ்துவ மடங்களில் கல்வி கற்க முடிந்தது. பின்னர் அவர்களின் குடும்பங்கள் அவர்களுக்குத் திருமண ஏற்பாடுகளைச் செய்தன. செல்வந்தர்களின் வீடுகளில் பணியாற்றிய பணிப்பெண்கள், தங்கள் குடும்பங்களில் சமையல் வேலைகள், வீட்டுக்குத் தேவையான தண்ணீர் கொண்டு வருதல், குழந்தைகளைப் பராமரித்தல், ரொட்டித்துண்டுகளுக்காக வரிசையில் நிற்றல் போன்ற பல வேலைகளைச் செய்யவேண்டியதாயிற்று. ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு குறைவாக ஊதியம் அளிக்கப்பட்டது.

பெண்கள் தங்கள் நலன்களை மேம்படுத்த அரசியல் மன்றங்களையும், செய்தித்தாள்களையும் துவக்கினர். பிரான்ஸ் நாட்டின் பல்வேறு நகரங்களில் 60 மகளிர் மன்றங்கள் துவக்கப்பட்டன. இந்த மன்றங்களில் மிகவும் புகழ்வாய்ந்தது 'புரட்சிகர குடியரசு பெண்கள்' மன்றமாகும். ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சமமான அரசியல் உரிமைகள் தரப்படவேண்டும் என்பதை மகளிர் மன்றங்களின் கோரிக்கையாக இருந்தது. 1791ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டம் பெண்களை ஈடுபாடற்ற குடிமக்களாக தரம் குறைக்கப்பட்டதால் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். அவர்கள் வாக்குரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, ஆட்சியில் பங்கேற்கும் உரிமை போன்றவற்றை வலியுறுத்தினர்.

துவக்கக் காலங்களில், பெண்களின் முன்னேற்றத்திற்காக பல சட்டங்களை புரட்சிகர அரசாங்கம் இயற்றியது. பல பள்ளிக்கூடங்கள் துவக்கப்பட்டு, பெண் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. பெற்றோர்கள், பெண்களை அவர்களின் விருப்பங்களுக்கு மாறாக திருமணம் செய்துக்கொள்ள கட்டாயப்படுத்தவில்லை. திருமணம் ஒப்பந்தமாக்கப்பட்டு, சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. விவாகரத்து சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. விவாகரத்துக்கு மனுசெய்ய ஆண்களும், பெண்களும் சமமாக அனுமதிக்கப்பட்டனர். சிறு வியாபாரங்கள் செய்வதற்கும், வேலைக்கான பயிற்சிகளைப் பெறவும் பெண்களுக்கு வாய்ப்புத்தரப்பட்டது.

சம அரசியல் உரிமைகளுக்கான பெண்களின் போராட்டம் தொடர்ந்தது. வன்முறை ஆட்சிக்காலத்தின் போது மகளிர் மன்றங்களை மூடவும், அவற்றின் அரசியல் செயல்பாடுகளைத் தடைசெய்யவும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. பெண்களின் பல முக்கியத்தலைவர்கள் கைது செய்யப்பட்டு, தூக்கிலிடப்பட்டனர். பெண்கள் வாக்குரிமைக்காவும், ஆண்களுக்கு நிகரான சம ஊதியத்திற்காகவும் 200 ஆண்டுகள் தொடர்ந்து உலகின் பல நாடுகளில் பெண்கள் போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பெண்கள் வாக்குரிமைக்காக சர்வதேச வாக்குரிமை இயக்கம் 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் போராட வேண்டியதாயிற்று, புரட்சிக்காலங்களில் பெண்களின் அரசியல் உரிமைகளுக்கானப் போராட்டம் நினைவுகூறத்தக்கவையாகும். இறுதியாக 1946ஆம் ஆண்டில்தான் பிரான்ஸ் நாட்டுப் பெண்களுக்கு மீண்டும் வாக்குரிமை அளிக்கப்பட்டது.

SCERT TELANGANA

*An Outline of the French Revolution*

| | |
|---|---|
| பிரான்ஸ் உதவியுடன் அமெரிக்கர்கள் வெற்றி பெற்றனர் | 1781 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தேசிய அரசாங்கம் | 1789 |
| மனித உரிமை அறிமுகப்படுத்தப்பட்டது | 1791 |
| வன்முறை ஆட்சிக்காலம் | 1793-94 |
| நெப்போ-யனின் முதல் கவுன்சில் | 1799-1805 |
| நெப்போ-யன் முதல் ஆட்சி | 1806-1815 |
| வியன்னா காங்கிரஸ் | 1815 |
| பிரான்ஸ் குடியரசு | 1871 |
| ஜெர்மனி ஒருங்கிணைப்பு | 1871 |
| இத்தா- ஒருங்கிணைப்பு | 1871 |

Women's movements for voting rights and equal wages continued through the next two hundred years in many countries of the world. The fight for the right to vote continued through an international suffrage movement during the late $19^{th}$ and early $20^{th}$ centuries. The example of the political activities of French women during the revolutionary years inspired many women around the world. It was finally in 1946 that women in France won the right to vote.

SCERT TELANGANA

## தேசியவாதம் – நெப்போ- யனின் சக்தி

தேசிய வாதம் உருவாக்கப்பட்டு சட்டம் செல்படலாயிற்று, இதனை அடிப்படையாக கொண்டு ஐந்து உறுப்பினர்களை கொண்டு பிரான்ஸ் ஆட்சி செய்தது. அதில் தலைவருக்கே அனைத்து பொறுப்புகளும் கொடுக்கப்பட்டு இருந்தது. அரசாங்கத்தின் கை இருப்பும், கா-யாக இருந்தது. பணத்தின் மதிப்பும் குறைவாக இருந்தது. வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்திருந்தது. மாற்று ஆட்சி அமையுமா, மறுமலர்ச்சி ஏற்படுமா? என மக்கள் அனைவரும் காத்து கொண்டு இருந்தனர். அப்பொழுது தான் நெப்போ-யன் போனோபர்ட் கைக்கு ஆட்சி வந்தது. புது ஆட்சியை உருவாக்கினார்.

(1799-1804) மீண்டும் அவரே ஆட்சி செய்தார். (1805-1815) தொடர்ந்து 10 ஆண்டுகள் அவரே ஆட்சி செய்தார். இதன் பின்னர் அரசியல் சட்டதிருத்தங்களில் மாற்றங்களை கொண்டு

**வர மோனர்ஜி என்ற குடிமகனிடம் கொடுத்தார். அதன் காரணமாக அவரது ஆட்சி பின்னடைய ஆரம்பித்தது. மக்கள் அவருடைய ஆட்சியை கவிழ்த்து வாட்டர்லோ என்பவர் 1815 ஆண்டு ஆட்சியை கைப்பற்றினார். அவரது ஆட்சியில் மக்களிடம் மதிப்பு, மரியாதையும் ஏற்பட்டது.**

**பிரெஞ்சு அப்பொழுது நெப்போலியன் ஆட்சி வீழ்ச்சியடைந்தது கண்டு அவரிடம் ஆஸ்திரியா, பிரஸ்யா, ஆகிய ஐரோப்பிய நாடுகள், மற்றும் கைப்பற்றிய ஸ்பெயின், போர்ச்சுக்கல், போன்ற நாடுகளுக்கு அரசராக்கியது. 1810-யில் இங்கிலாந்து துருக்கியை தவிர அனைத்து நாடுகளையும் நெப்போலியன் ஆடசி செய்து வந்தார். பலமுறை முயற்சி செய்தும், நெப்போலியனால் இங்கிலாந்தை கைப்பற்ற முடியவில்லை. 1815-ல் வாட்டார்லூ போரில் இங்கிலாந்து நெப்போலியனை தோற்கடித்து கைது செய்து கைப்பற்றினார்.**

**1815-ஆம் ஆண்டு வியன்னா காங்கிரஸ் ஐரோப்பாவின் ஆட்சிக்கு கீழ் மெட்டர்நிக் என்பவரால் ஆளப்பட்டது. அவர் ஆஸ்டிரியாவின் பிரதமர் ஆவார். அந்த சமயத்தில் மேனோர்ஜி பல நாடுகளை கைப்பற்றி இருந்தார். பிரான்ஸின் அரசராக 18-ம் லூயி இருந்தார். சார்லஸ் X என்பவரும் இருந்தார். சிறப்பு அதிகாரம் நேடில் கிலர்ஜிக்கு அளிக்கப்பட்டு இருந்து அப்பொழுது 1830-ல் மறுமலர்ச்சியை ஏற்படுத்த லூயி பிலிப் அரசராக நியமிக்கப்பட்டார். மக்களிடம் நல்ல பெயரை பெற முடியவில்லை. மீண்டும் புரட்சி, வன்முறை தொடங்கியது. லூயி பிலிப் பிரான்ஸை விட்டு ஓடினார். பிரான்ஸ் மறுமலர்ச்சி காரணமாக இரண்டாவது குடியரசாக உருவானது. மூன்றாவது நெப்போலியன் 1871-ல் பிரான்சின் தலைவரானார். பின்னர் பிரான்ஸ் தலைவராக லியோன் கம்பிட்டா உருவாக்கப்பட்டார்.**

முன்பாடத்தில் மக்களாட்சிக்கான புரட்சிகளைப்பற்றி நாம் படித்து அறிந்தோம். அவை அனைத்தும் தேசிய எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். அக்காலத்தில் ஐரோப்பா சிறு நாடுகளாகவும், பெரிய பேரரசுகளாகவும் பிரிக்கப்பட்டு இருந்தது. மக்களாட்சிக்கான தேசிய புரட்சிகள் பொதுவான வரலாறு, கலாச்சாரம், பொருளாதார வாழ்க்கை போன்றவற்றைப் பகிர்ந்துக்கொண்ட துடிப்பு மிக்க குடிமக்களால், வலுவான நாடுகள் நிறுவப்படவேண்டும் என்பதற்காகவே நடத்தப்பட்டதாகும். இதன் விளைவாக வம்சமுறை பேரரசுகளுக்குப்பதில் நாட்டு அரசுகள் தோன்றலாயின.



ஐரோப்பாவில், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின் மீது, அதிகார மையத்தினர் உயர் அதிகாரத்தைச் செலுத்தி ஆட்சி செய்யும் நவீன நாடு என்பது நீண்ட கால வளர்ச்சியின் தோன்றலாகும். ஆனால் நாட்டரசு என்பது ஆட்சியாளர்கள் மட்டுமின்றி, பெரும்பாலான குடிமக்களும், பொதுவான அங்கீகாரத்தை ஏற்படுத்திக்கொண்டு, வரலாறு அல்லது வழித்தோன்றல்களில் பங்கு பெறுவதாகும். இப்பொதுத்தன்மை என்பது நீண்ட காலத்திற்கு முன்பு ஏற்பட்டதல்ல. இது சாதாரண மக்கள் மற்றும் தலைவர்களால் முன்னின்று நடத்திய போராட்டங்களால் ஏற்பட்டதாகும்.


பிரெஞ்சு புரட்சியால் ஏற்பட்ட அரசியல் மற்றும் அரசியலமைப்பு மாற்றங்கள் முடியாட்சியிடமிருந்து நாட்டின் இறையாண்மை, பிரெஞ்சு குடிமக்களின் குழுவுக்கு மாறக்காரணமாக அமைந்தது. பிரெஞ்சு புரட்சி, நாடு என்றால் மக்கள் என்றும், நாட்டின் தலைவிதி மக்களாலேயே முடிவு செய்யப்படுகின்றது என்றும் அறிவித்தது. அது மட்டுமின்றி ஐரோப்பாவின் பிற நாடுகளையும் சர்வாதிகாரத்தின் பிடியிலிருந்து விடுவிப்பது என்றும் புரட்சியாளர்கள் அறிவித்தனர். ஐரோப்பாவின் பிற நாடுகளில் மக்களாட்சியை மலரச்செய்வதே இவர்களின் நோக்கமாக இருந்தது.

SCERT TELANGANA

பிரெஞ்சு புரட்சி, நாடு என்பதற்கு புதிய விளக்கத்தை அளித்தது. நாடு என்பது ஒரு நிலப்பகுதியைச் பற்றியது அல்ல, ஆனால் மக்களை மட்டுமே குறிப்பதாகும். பிரான்ஸ் என்பது வெறும் நிலப்பகுதியைக் குறிப்பதல்ல. ஆனால் பிரெஞ்சு மக்களைக் குறிப்பதாகும். இதிலிருந்து தான் இறையாண்மை என்ற சிந்தனை தோன்றியது. இறையாண்மை என்பது மக்களிடமே உள்ளது. மக்களைவிட உயர்ந்த சட்டமோ அல்லது அதிகாரமோ இல்லை. எந்த ஆட்சியாளரும் மக்களைவிட உயர்ந்தவரல்ல. குடியரசில் மட்டுமே அரசாங்கம் மக்களிடமிருந்து அதிகாரத்தைப் பெறுகின்றது. அதே போல அரசாங்கமும் மக்களுக்குப் பொறுப்பு வகிக்கின்றது. நெப்போலியன் பேரரசரான பிறகு அவர் தன்னைப் பிரெஞ்சு குடியரசின் பேரரசர் என்று அறிவித்துக்கொண்டார். இது மக்களின் உயர் அதிகாரத்திற்குச் சான்றாக விளங்குகின்றது. மக்கள் தங்களுக்கு உயர் அதிகாரம் உள்ளது என்று உணர்ந்ததால் தான், பிரான்ஸ் மிக பெரிய இராணுவச் சக்தியாக உருவெடுக்க முடிந்தது. நாட்டு மக்கள் அனைவரும் நல்லாதரவு நல்கிய இராணுவப்படையில் புரட்சிகர சிந்தனையுள்ள குடிமக்கள் இருந்தனர். பிரெஞ்சுப் படைகளுக்கு எதிராக அனைத்து ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட போரில் வெகுமதிக்காக போராடும் இராணுவப்படையை பெற்றிருக்க வேண்டிய அவசியம் பிரெஞ்சு நாட்டுக்கு இல்லை.

### ஜெர்மனி ஒருங்கிணைப்பு

1848ஆம் ஆண்டுக்குப்பிறகு, ஐரோப்பிய தேசியவாதம், மக்களாட்சி மற்றும் புரட்சிகளின் சிந்தனைகளிலிருந்து விலகிச்சென்றது. நாட்டின் பலத்தைப் பெருக்குவதற்காகவும், ஐரோப்பாவின் மீது அரசியல் ஆதிக்கம் செலுத்துவதற்காகவும் பழமைவாதிகள், மக்களின் தேசிய சிந்தனைகளை ஒன்றிணைத்தனர். இச்செயலை, ஜெர்மனி மற்றும் இத்தாலி நாடுகள், நாட்டரசுகளாக ஒன்றிணைக்கப்பட்டதன் வாயிலாக அறிந்துக்கொள்ள முடிகின்றது. ஜெர்மனியில், நடுத்தர வகுப்பு மக்களிடையே தேசிய உணர்வுகள் பரவலாக காணப்பட்ட




*படம் 1 : 1815ஆம் ஆண்டின் வியன்னா காங்கிரஸ்க்குப் பிறகு ஐரோப்பா*

SCERT TELANGANA

செய்தி நாம் அறிந்ததே. இவர்கள் 1848ஆம் ஆண்டு, ஜெர்மனி கூட்டமைப்பிலிருந்த பல்வேறு பகுதிகளை ஒன்றிணைந்து, அவற்றை தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தின் மூலம் ஆட்சி செய்யும் நாட்டரசு முறையைக் கொண்டு வர கடும் முயற்சி மேற்கொண்டனர்.



## டென்மார்குடன் போர்


தேசிய கட்டமைப்புக்கான இக்கோரிக்கை, முடியாட்சி மற்றும் ராணுவ ஆட்சிகளின் கூட்டுப்படையினரால் முன்மொழியப்பட்டது. இதை பிரஷ்யாவிலுள்ள ஜங்கர்கள் எனப்படும் நிலச்சுவாந்தர்களும் அதிகரித்தனர். அன்றைய நாள் முதல், தேசிய இணைப்புக்கான இயக்கத்திற்கு பிரஷ்யா தலைமைத்தாங்கியது. இச்செயல் திட்டத்தை பிரஷ்யப்படை மற்றும் அதிகாரிகள் துணையுடன், நாட்டின் முதல் அமைச்சரான ஒட்டோவோன் பிஸ்மார்க் செயல்படுத்தினார். இவர் ஜெர்மன் ஒருங்கிணைப்பின் சிற்பியாக வர்ணிக்கப்படுகிறார்.

## ஆஸ்திரிய-பிரஷ்யா போர்

ஆஸ்திரியா, டென்மார்க், பிரான்ஸ் போன்ற நாடுகளுடன் ஏழு ஆண்டுகள் நடைபெற்ற மூன்று பெரும்போர்கள் பிரஷ்யாவுக்கு வெற்றியைத் தேடித்தந்தது. இதன் மூலம் ஜெர்மனி ஒருங்கிணைப்பு நிறைவு பெற்றது. 1871ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் பிரஷ்ய மன்னர் முதலாம் வில்லியம், வெர்சைல்ஸ் நகரில் நடைபெற்ற விழா ஒன்றில், ஜெர்மனி பேரரசராக பிரகடனப்ப டுத்தப்பட்டார்.

ஜெர்மனியின் தேசிய கூட்டமைப்பில் பிரஷ்ய நாட்டின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்பட்டது. புதியதாக உருவான நாடு நாணயங்கள், வங்கி நடைமுறை, சட்டம் மற்றும் நீதித்துறைகள் போன்றவற்றின் செயல்பாடுகளில் புதிய உத்தியை கையாள முடிவு செய்தது. பிரஷ்யாவின் நடவடிக்கைகளும், அதன் கொள்கைகளும் ஐரோப்பாவிலுள்ள பிற நாடுகளுக்கு எடுத்தக்காட்டாக விளங்கின.

## இத்தாலிய ஒருங்கிணைப்பு



*வரைபடம் 2: ஜெர்மனி ஒருங்கிணைப்பு (1866-71).*

ஜெர்மனியைப்போல, இத்தாலியும் பலபகுதிகளாக சிதறுண்டு இருந்தது. பல்வேறு வம்சத்தை சேர்ந்த அரசர்கள் ஆண்ட பல பகுதிகளிலும், பல பகுதிகளை ஒருங்கே ஆட்சி செய்த ஹாப்ஸ்பெர்க் பேரரசிலும் பரவலாக ஆங்காங்கே வாழ்ந்து வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இத்தாலி, ஏழு நாடுகளாக பிரிக்கப்பட்டு இருந்தது. அவற்றில் ஒன்றான சார்டீனியாபிட்மான்ட் நாட்டை மட்டுமே இத்தாலி அரசர்கள் ஆட்சி செய்தனர்.

இத்தாலியின் வடபகுதி ஆஸ்திரியன ஆப்ஸ்பர்குகளின் பிடியிலும், மத்திய பகுதி போப்பின் கட்டுப்பாட்டிலும், தெற்குப் பகுதிகள் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த போர்பன் மன்னர்களின் ஆதிக்கதிலும் இருந்து வந்தது. இத்தாலிய மொழி பல நாடுகளிலும், பல பகுதிகளிலும் பல்வகை வேறுபாடுகளுடன் பேசப்பட்டுவந்தது.

1830ஆம் ஆண்டுகளில், இத்தாலியை ஒருங்கிணைக்கும் திட்டம் ஒன்று ஜோசப்

SCERT TELANGANA

மாஜினியால் உருவாக்கப்பட்டது. தன் இலக்கை எட்டுவதற்காக ‘இளைய இத்தாலி’, என்னும் ரகசிய அமைப்பை ஜோசப் மாஜினி தோற்றுவித்தார். 1831 மற்றும் 1848ஆம் ஆண்டுகளில் புரட்சிகள் தோல்வியில் முடிந்ததால் இத்தாலிய நாடுகளை போர்கள் மூலம் ஒருங்கிணைக்கும் முக்கிய பொறுப்பு சார்டீனிய பிட்மான்டை ஆண்ட அரசரான மன்னர் இரண்டாம் விக்டர் இம்மானுவேலிடம் விடப்பட்டது. இத்தாலிய ஒருங்கிணைப்பு பொருளாதார மேம்பாடு மற்றும் அரசியல் ஆதிக்கம் தமக்கு அளிக்கும் என இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் நம்பினர்.

- பிஸ்மார்க்-ஐ பற்றி தீட்டப்பட்ட ஓவியத்தைப்பற்றி விவரி. பிஸ்மார்க் அவர்களுக்கும், பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் இடையே உள்ள தொடர்பை சித்திரம் எவ்வாறு வெளிப்படுத்துகின்றது? மக்களாட்சி முறையின் எந்த கருத்தை வெளிப்படுத்த ஓவியர் முயற்சிக்கின்றார்?

இத்தாலிய ஒருங்கிணைப்புக்கான இயக்கத்தை தலைமை தாங்கி நடத்திய ‘கவுன்ட் கவோர்’, என்பவர் மக்களாட்சி விரும்பியாகவோ அல்லது புரட்சியாளராகவோ இல்லை. கவுன்ட கவோரின் திட்டமிடப்பட்ட ராஜதந்திர யுக்தியின் மூலம் பிரான்ஸ் நாட்டுடன் ஏற்படுத்தப்பட்ட கூட்டணியின் பலனாக சார்டீனிய பிட்மான்டின் படைகள் 1859ஆம் ஆண்டு ஆஸ்திரிய படைகளைத் தோற்கடித்தது.

இப்போரில் போர்ப் படைகள் மட்டுமின்றி ‘கரிபால்டியால்’ உருவாக்கப்பட்ட ‘செஞ்சட்டைப்படை’யின் தன்னார்வ வீரர்களும் பங்கு பெற்றனர். 1860ஆம் ஆண்டில் இப்படைகள் தெற்கு இத்தாலி மற்றும் இரண்டு சிசிலிகளின் நாடுகளை நோக்கிச் சென்றது. ஸ்பெயின் ஆட்சியாளர்களை அப்புறப்படுத்துவதில், இப்படைகள் உள்ளூர் விவசாயிகளின் ஆதரவைப் பெற்றன. 1861ஆம் ஆண்டில் மன்னர் இரண்டாம் விக்டர் இம்மானுவேல் ஒருங்கிணைக்கப்பட்ட இத்தாலியின் மன்னராக பிரகடனப்படுத்தப்பட்டார். ஆனால் பெரும்பாலான இத்தாலியர்கள் படிப்பறிவு அற்றவர்களாக இருந்ததால், தேசிய சுதந்திரக் கோட்பாடுகளை அறியாதவர்களாக இருந்தனர். தெற்கு இத்தாலியில் கரிபால்டியை ஆதரித்த விவசாயிகள் யாரும் அதுவரை ‘இத்தாலியா’ என்ற வார்த்தையைக் கேட்டதில்லை. அவர்கள் ‘லாடாலியா’ என்பது விக்டம் இம்மானுவேலின் மனைவி பெயர் என்று நம்பினர்.

- மன்னர் இரண்டாம் இம்மானுவேலின் கீழ் ஒன்றுபடுத்தப்பட்ட இத்தாலி உண்மையான நாட்டரசு என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? காரணங்களைக் கூறுக.




*வரைபடம் 3: 1858ஆம் ஆண்டில் இத்தாலிய ஒருங்கிணைப்புக்கு முன்பு இருந்த நாடுகள்.*

SCERT TELANGANA

## முக்கியச் சொற்கள்

1. இரத்தமில்லாப் புரட்சி
2. தெய்வீக உரிமை
3. உயர்குடி மக்களாட்சி
4. முடியாட்சி
5. நிர்வாகக்குழு
6. சகோதரத்துவம்
7. தேசிய உணர்வு
8. சுதந்திரம்
9. உரிமைகள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. சரியானவற்றை தேர்ந்தெடு (AS1)
   (அ) மக்களாட்சிக்கான தேசிய இயக்கங்கள் ஒரு நாட்டின் .......... மீது ஆதாரப்பட்டிருந்தது. (அனைவருக்கும் பொதுவான வரலாறு, அனைவருக்கும் பொதுவான கலாச்சாரம், அனைவருக்கும் பொதுவான பொருளாதாரம், மேற்கூறிய அனைத்தும், மேற்கூறியவற்றில் ஏதவுமில்லை)
   (ஆ) ஜோகோபின் மன்றங்கள் பல நாடுகளில் ..........ஆல் ஏற்படுத்தப்பட்டது. (விவசாயிகள், அரச வம்சத்தினர், நடுத்தர வகுப்பினர், ராணுவத்தினர்)
   (இ) 18ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் நிலம் ...............களுக்குச் சொந்தமானதாகவும், ஆனால் விவசாயம் ..........களால் செய்யப்பட்டு வந்தது. (நடுத்தர வகுப்பு, ராணுவம், உயர்வகுப்பினர், குத்தகைதாரர்கள்)
2. புதிய முறையிலான அரசுகளை நிறுவுவதில், தத்துவ ஞானிகளின் முக்கிய சிந்தனைகள் என்ன? அவை எவ்வாறு புகழ்பெற்றன?(AS1)
3. பிரான்ஸ் நாட்டில், புரட்சி வெடிக்க வழிவகுத்த சூழல்களை விவரி.(AS1)
4. உரிமைகள் அனைத்தும் முரண்பாடுகள் நிறைந்தவை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?(AS1)
5. “பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லையேல், வரியில்லை”, என குடியேற்ற அமெரிக்க மக்கள் முழக்கமிடக் காரணம் என்ன?(AS1)
6. பிரெஞ்சு புரட்சியின் வெற்றிக்கு பெண்களின் பங்கை எவ்வாறு அறிவாய்?(AS6)
7. ஜெர்மனி ஒருங்கிணைப்புப் பற்றி எழுதுக.(AS1)
8. பக்கம் 162ல் உள்ள வன்முறை ஆட்சிக்காலம் என்னும் பத்தியைப் படித்து அதைக் குறித்து உன் கருத்தினை தெரிவிக்கவும்.(AS2)
9. இங்கிலாந்து, பிரான்ஸ், பிரஷியா, ஸ்பெயின், ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளை ஐரோப்பா வரைபடத்தில் குறிக்கவும்.(AS5)

## செயல் திட்டம்

1815ஆம் ஆண்டின் ஐரோப்பிய வரைபடத்திற்கும், தற்போதைய ஐரோப்பிய வரைபடத்திற்கும் இடையேயான மாற்றங்களை அடையாளம் கண்டு, உங்கள் நோட்டுப்புத்தகத்தில் எழுதுங்கள்.

SCERT TELANGANA


பாடம்

13

# தொழில் மயமும் சமூக மாற்றமும்

பிரிட்டனில், 1780ஆம் ஆண்டிலிருந்து 1850ஆம் ஆண்டுவரை தொழிற்சாலை, பொருளாதாரம் போன்றவற்றில் நிகழ்ந்த மாற்றமே முதல் 'தொழிற்புரட்சி' என்று அழைக்கப்படுகின்றது. இம்மாற்றம் பிரிட்டனில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. அதன் பிறகு ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் இந்த மாற்றங்கள் நிகழ்ந்தன. இது அந்நாட்டு மக்களின் மீதும், பொருளாதாரத்தின் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமின்றி, உலக நாடுகளின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல்வேறு நாடுகளில் நிகழ்ந்த தொழிற்புரட்சி, அந்நாடுகளின் வரலாறு, சமூகம், புவியியல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வடிவங்களைப் பெற்றது.

பிரிட்டனில் நிகழ்ந்த முதற்கட்ட தொழில் முன்னேற்றம், புதிய இயந்திரங்கள் மற்றும் புதிய தொழில் நுட்பத்துடன் தொடர்புள்ளதாக உள்ளது. அதன் பயனாக, கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி தொழில்களின் உற்பத்தியை விட அதிக அளவிலான உற்பத்தி இயந்திரங்கள் மூலம் செய்யப்பட்டது. இப்பாடம், பருத்தி மற்றும் இரும்புத் தொழிற்சாலைகளில் நிகழ்ந்த மாற்றங்களைப்பற்றி நமக்குத் தெரிவிக்கின்றது. பிரிட்டிஷ் தொழிற்சாலைகளில், இயந்திரங்களின் இயக்கத்திற்கு நீராவி மாற்றங்களைப்பற்றி நமக்குத் தெரிவிக்கின்றது. பிரிட்டிஷ் தொழிற்சாலைகளில், இயந்திரங்களின் இயக்கத்திற்கு நீராவி முதன் முதலாகப் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டது. இதன் பயன்பாடு கப்பல், ரயில்கள்; போன்றவை மூலம் அதிவேக போக்குவரத்துக்கு வழிவகுத்தது. இம்மாற்றத்தைக் கொண்டு வந்தவர்களில் பலர், செல்வந்தர்களாகவோ அல்லது இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களைக் கற்றுத் தேர்ந்தெடுத்தவர்களாகவோ இல்லை.



படம் 14.1: லண்டனில் உள்ள தொழிற்சாலைகள்

தொழில்மயமாக்கம் சிலரைச் செல்வந்தர்களாக்கியது. ஆனால் துவக்கக்காலங்களில் இத்தொழிற்புரட்சி, பெண்கள், குழந்தைகள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்களை வறுமையில் வாடவைத்தது. இதனால் கோபமுற்ற மக்கள் போராட்டம் நடத்தவே, அரசாங்கம் வேலை விதிமுறைகளை ஒழுங்குபடுத்த சட்டங்களை இயற்றியது. தொழிற்புரட்சி என்ற சொல்லை ஐரோப்பிய அறிஞர்களான பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த 'ஜார்ஜ் மைக்கேலெட், ஜெர்மனி நாட்டைச்சேர்ந்த ஃபிரடெரிக் ஏஞ்சல்ஸ்' ஆகியோர் பயன்படுத்தினர்.


SCERT TELANGANA

- தொழில் புரட்சியின் போது பெண்களும் குழந்தைகளும் எதிர்கொண்ட பிரச்சனைகள் யாவை?

ஆனால் ஆங்கிலத்தில் இச்சொல்லை பொருளாதார நிபுணரும், தத்துவஞானியுமான ஆர்னால்ட் டாய்ன்பீ (1852-83) என்பவர் பயன்படுத்தினார். இவர் 1760-ஆம் ஆண்டிலிருந்து 1820ஆம் அண்டுவரை பிரிட்டனில் நிகழ்ந்த தொழிற் முன்னேற்றத்தைப் பற்றி விளக்கவே இச்சொல்லைப் பயன்படுத்தினார்.

### இங்கிலாந்து ஏன் ஒரு தொழில் புரட்சி நாடாயிற்று :

நவீன தொழிற்சாலைகளை நிறுவி, பெருமளவு உற்பத்தி பெருக்கிய முதல் நாடாக பிரிட்டன் விளங்கியது. 17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து போன்ற நாடுகள் முடியாட்சியின் கீழ் ஒன்றுபடுத்தப்பட்டு இருந்ததால் அங்கே அரசியல் பூர்வமான நிலைத்தன்மை இருந்தது.




*வரைபடம் 1: இங்கிலாந்தில் இரும்பு எஃகு தொழிற்சாலை*

பஞ்சாலைத் தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் இதமான காலநிலை இங்கிலாந்து நாட்டிற்கு ஒரு வரமாக கருதப்பட்டது. தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீர் பற்றாக்குறையாக இல்லை. கச்சாப் பொருட்களுக்கும் பஞ்சமில்லை. நிலக்கரியும் இரும்பும் அபரிமிதமாக கிடைத்தன. நிலக்கரிச் சுரங்கங்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போல் அல்லாமல், இங்கிலாந்தின் மாநகரங்களுக்கு அருகாமையிலும் துறைமுகங்களுக்கு அருகாமையிலும் அமைந்திருந்தன. இது கப்பல் மூலம் ஏற்றுமதி செய்ய ஏதுவாய் இருந்தது.

“இரும்பு, நிலக்கரி மற்றும் நெசவுத் தொழிற்சாலைகளை மையமாகக் கொண்டு, இங்கிலாந்து நாடு உருவாக்கிய ஒருவகை புதிய நாகரிகம், உலகம் முழுவதும் பின்பற்றும்படியாக இருந்தது,” என ‘ஃபிஷர்’ என்பவர் புகழுரைத்தார். அதிக அளவு தாதுப்பொருட்கள் கிடைப்பதால் இங்கிலாந்தில் முதலீடு செய்வது என்பது ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை. 17ஆம் நூற்றாண்டு முதலே இங்கிலாந்து நாடு வர்த்தகத் தொழிற்சாலைகளுக்கு முன்னோடியாகவும் அதிக லாபம் கொழிக்கும் நாடாகவும் திகழ்ந்தது.

தாதுப்பொருட்களை சரியான வகையில் பயன்படுத்தப்படாவிட்டால், எப்பயனும் இருக்காது. இங்கிலாந்தில் தொழிற்சாலைகள் வேகமாக முன்னேற, அந்நாட்டின் வங்கிகள் பேருதவியாக திகழ்ந்தன. லண்டன் செலாவணிச் சந்தை, இணைப்பு வங்கிகள் மற்றும் இணைப்புக் கழகங்கள் தொழிற்சாலைகளுக்கு கடன் கொடுப்பதை எளிமையாகவும், எளிதாகவும் ஆக்கியது.

SCERT TELANGANA

புதியதாக உருவாக்கப்பட்ட பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகளில் பணியாற்ற, இங்கிலாந்து நாட்டில் அதிகஅளவு தொழிலாளர்கள் வேலைக்கு கிடைத்தனர். இங்கிலாந்து நாட்டின் மக்கள் தொகையும் பெருகியது. பழைய மற்றும் லாபமற்ற விவசாய முறைக்கு பதில், நவீன அறிவியல் விவசாய முறைகள் பின்பற்றப்பட்டன. இம்முறை மக்கள் தொகைக்கு இணையான உணவு உற்பத்தியையும் பெருக்கியது. 18ஆம் நூற்றாண்டில், பல கண்டங்களிலிருந்து இங்கு குடியமர்த்தப்பட்ட தொழிலாளர்களால் விவசாயத்துறை மேலும் வளர்ந்தது. நவீன விவசாய முறையால், வேலைவாய்ப்பை இழந்த தொழிலாளர்கள், புதிய தொழிற்சாலைகளில் வேலைக்கு சேர்ந்தனர்.

நகரங்கள், வாணிகம் மற்றும் நிதி : பதினெட்டாம் நூற்றாண்டி-ருந்து ஐரோப்பாவில் பல நகரங்கள் பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் வளர்ந்து வந்தன. 1750 மற்றும் 1800 ஆண்டுகளுக்கிடையில் ஏறக்குறைய 11 பிரிட்டீஷ் நகரங்களின் மக்கள்தொகை இரட்டிப்பானது. அவற்றில் இலண்டன் மிகப் பெரியது. நாட்டின் அனைத்து சந்தைகளின் மையமாகத் திகழ்ந்தது. இலண்டன் உலக முக்கியத்துவம் பெற்றது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கிடையே சர்வதேச வணிக மையமாக மாறியது.

இங்கிலாந்தில் நதிகளின் சிறந்த வலைப்பின்ன-ன் உதவியாய் மற்றும் குடியிருப்புகளுடன் கூடிய விரிகுடாக்களுடன் உள்நோக்கி அமைந்த கடற்ககரைகளாலும் சந்தைகளுக்கிடையே சரக்குகள் எளிதில் நகர்த்தப்பட்டன. இரயில் பாதைகள் வளர்ச்சியடையாத வரையில் போக்குவரத்தானது நில வழிகளைவிட நீர் வழிகளே மிகவும் விலை குறைந்ததாகவும் வேகமாகவும் இருந்தது. பிரிட்டனின் பெரும்பாலான நதிகள் பயணத்திற்கு ஏற்றதாகவும் நதிப் படகுகளில் சரக்குகள் கடலோர கப்பல்களுக்கு எளிதில் மாற்றுவதற்கு ஏற்றதாகவும் இருந்தது.

1694ல் நிறுவப்பட்ட இங்கிலாந்து வங்கி நாட்டின் நிதி அமைப்பின் மையமாக விளங்கியது. 1784க்குள் இங்கிலாந்தில் மாகாண வங்கிகள் நூற்றுக்கு மேல் இருந்தன. அடுத்த 10 ஆண்டுகளில் அவற்றின் எண்ணிக்கை மும்மடங்கு அதிகரித்தது. 1820க்குள் மாகாணங்களில் 600க்கும் அதிகமான வங்கிகளும் இலண்டனில் மட்டும் 100க்கும் அதிகமான வங்கிகள் இருந்தன. இந்த வங்கிகள் மூலம் பெரிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், நிர்வகிப்பதற்கும் தேவையான நிதி வழங்கப்பட்டன.

**குடியேற்றங்கள் :** 18ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குள் பிரிட்டனுக்கு வட அமெரிக்காவில் விரிவான குடியேற்றங்கள் இருந்தன. இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது. தன் தொழிலக உற்பத்தி பொருட்களுக்குகேற்ற பெரிய சந்தையினால் குடியேற்றங்கள் பிரிட்டனுக்கு வழங்கின. பருத்தி போன்ற மூலப் பொருட்களையும் உணவு தானியங்களையும் வழங்கின. குடியேற்ற ஆக்கிரமிப்பு மற்றும் வாணிகம் பிரிட்டீஷ் வியாபாரிகளுக்கும் வங்கிகளுக்கும் பேரளவில் மூலதனத்தை வழங்கியதால் தொழிற்சாலைகளில் அவை முதலீடு செய்யப்பட்டன.

தொழில்மயமாதலுக்கு சில முன் நிபந்தனைகள் தேவை முத-ல் உற்பத்தியில் முதலீடும் இலாபத்தை ஈட்டவும் யார் விரும்புகிளார்களோ அவர்களின் கைகளில் செல்வம் குவிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட செல்வக் குவிப்பு விவசாயப் புரட்சி மற்றும் குடியேற்ற ஆக்கிரமிப்பு மற்றும் வாணிகத்தில் இடம்பெற்றதை நாம் கண்டிருக்கிறோம். முதலீடு செய்வதற்கான மூலதனம் பிரிட்டனில் வங்கி நிறுவனங்கள் வளர்ச்சியால் வழங்கப்பட்டன.

இரண்டாவதாக, குறைந்த கூ-க்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். மீண்டும் விவசாயப் புரட்சி எவ்வாறு கிராமிய மக்களில் பெரும்பாலானோரை வேலையைத் தேடி நகரங்களுக்குச் செல்ல கட்டாயப்படுத்தியது என்பதையும் நாம் கண்டோம்.

மூன்றாவதாக தன் உற்பத்திப் பொருட்களை விற்பதற்கு பெரிய சந்தை தேவைப்படுகிறது. இது பிரிட்டனின் அரசியல் ஒருங்கிணைப்பால் வழங்கப்பட்டது. இது தன்னிறைவு கொண்ட விவசாயிகளின் பண்ணை நிலங்களை முடிவுக்கு கொண்டுவந்தது. விவசாயிகள் தற்போது தங்கள் சொந்த பண்ணை நிலங்களில் உற்பத்தி செய்வதற்கு பதில் அவர்களின் அனைத்து தேவைகளை சந்தைகளி-ருந்து வாங்கும் பணியாட்களாக மாறினர். சந்தையானது குடியேற்றங்களால் வழங்கப்பட்டது.

18ஆம் நூற்றாண்டில் கடல்வழி வணிகம் சிறந்து விளங்கியது. தரமான துறைமுகங்கள் ஏற்பட்டன. உள்நாட்டு போக்குவரத்தான சாலை மற்றும் கால்வாய் போக்குவரத்து முன்னேற்றமடைந்தது. ஸ்காட்லாந்து மற்றும் இங்கிலாந்து நாட்டினரின் புதிய இயந்திர கண்டுபிடிப்புகள், உற்பத்தியை பெருக்கவும் மக்களின் பொருளாதார வசதியை பெருக்கவும் பெரிதும் துணைபுரிந்தன.

- 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து மற்றும் பிற உலக நாடுகளில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி இங்கிலாந்து நாட்டு தொழில் மயத்தை எவ்வாறு ஊக்குவித்தது என கலந்துரையாடு.

## நிலக்கரியும், இரும்பும்

இயந்திரமயமாக்கலுக்கு முக்கியத் தேவையான நிலக்கரி, இரும்பு, எஃகு போன்றவை இங்கிலாந்தில் அதிக அளவில் கிடைத்தன. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் மற்ற உலோகங்களான தாமிரம், ஈயம், தகரம் போன்றவைகளும் கிடைத்தன. 18ஆம் நூற்றாண்டு வரை, பயன்படுத்தப்படும் இரும்பு பற்றாக்குறையாக இருந்தது. தாதுபொருளை உருக்கி எடுக்கும் முறையில், எஃகுலிருந்து இரும்பு, திரவ வடிவத்தில் எடுக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாக உருக்கி எடுக்கும் முறைக்கு மரக்கரி பயன்படுத்தப்பட்டது. இது பல பிரச்சனைகளுக்கு வழிவகுத்தது. நெடுந்தொலைவு போக்குவரத்தின் போது மரக்கரிச்சிதைவு ஏற்படுகின்றது. அதன் அசுத்தத்தன்மை தரமற்ற இரும்பு உருவாகக்காரணமாயிற்று. இம்மரக்கரி குறைந்த அளவிலேயே கிடைத்தது. ஏன்என்றால் மரங்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டன. மேலும் அது அதிக வெப்பத்தை தரமுடியவில்லை.



படம். 15.2: கோல்புரூக்டேல் அருகிலுள்ள வார்ப்பு இரும்பு பாலம்(Cast Iron) இதை மூன்றாம் டார்பி வடிவமைத்தார்.

இப்பிரச்சனைக்குத்தீர்வு காண பல ஆண்டுகள் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இறுதியாக 'ஸ்ரோஸ்பைர்' என்ற இடத்தைச் சேர்ந்த டார்பி குடும்பத்தினர்

இதற்குத் தீர்வுக் கண்டனர். ‘ஆபிரகாம் டார்பி’ என்று அழைக்கப்படுகின்ற இக்குடும்பத்தின் முத்ததலைமுறையினரான தாத்தா, அப்பா, மகன் ஆகிய மூவரும் அரை நூற்றாண்டுக்காலம் கடுமையாக உழைத்ததன் பலனாக உலோகத்தொழிலில் ஒரு புரட்சியைக் கொண்டு வந்தனர். இப்புரட்சி 1709ஆம் ஆண்டு, ‘முதல் ஆபிரகாம் டார்பியின்’ கண்டுபிடிப்புடன் துவங்கியது. இம்முறையில் ஊதுலையில் நிலக்கரி பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் வெப்பநிலையைப்பெற முடிந்தது. நிலக்கரியிலிருந்து சல்பர் மற்றும் அசுத்தங்களை நீக்க கற்கரி(Coke) (குறைவாக சுடப்பட்ட நிலக்கரி) பெற முடிந்தது. இக்கண்டுபிடிப்பு, ஊதுலைக்கு மரக்கரி மட்டுமே தேவை என்ற எண்ணத்தை முறியடித்தது. கற்கரியின் மூலம் உருக்கி எடுக்கப்பட்ட இரும்பு, முன்பைவிட மிகச்சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.

- டார்பிக்கள் உருவாக்கிய இரும்பு பிரித்தெடுக்கும் முறை தற்போதும் இரும்பு, எஃகு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றனவா?
- தொழில்மயத்திற்கு உயர்தர இரும்பு எஃகு ஏன் அவசியமானது? வகுப்பறையில் விவாதிக்கவும்.
- இரும்பு எஃகு மற்றும் நிலக்கரிச் சுரங்கங்கள் ஏன் முக்கியத்துவம் பெற்றது என நீங்கள் நினைக்கின்றீர்கள்?
- துவக்கக்கால தொழிற்சாலைகள் ஏன் சுரங்கங்களுக்கு அருகில் நிறுவப்பட்டது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

ஊதுலையில் உருக்கி எடுக்கும் இம்முறை, மேலும் பல கண்டுபிடிப்புகளால் மெருகு ஊட்டப்பட்டது. இரண்டாவது டார்பி (1711-68) ‘மெல்லிரும்பை’(Wroght Iron) உருவாக்கினார். இது எளிதில் உடையக்கூடிய தன்மை உடையது. இந்த இரும்பு அசுத்த இரும்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும். ஹென்றி கார்ட் (1740-1823) நீராவி உலையை வடிவமைத்தார். இவ்வுலை மூலம் உருக்கிய இரும்பிலுள்ள அசுத்தம் நீக்கப்படும். சுழலும் ஆலை, நீராவி ஆற்றலை பயன்படுத்தியதின் மூலம் சுத்தப்படுத்தப்பட்ட இரும்பு, இரும்புச் சட்டங்களானது. இப்புதிய முறை மூலம் அதிக அளவிலான இரும்புப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இரும்புப் பொருட்கள் வெகுகாலம் உழைக்கக்கூடிய மற்றும் உபயோகிக்கக்கூடிய தன்மை வாய்ந்த உலோகமாக இருந்ததால், மரக்கட்டைக்கு பதிலாக அன்றாட வாழ்க்கையிலும், எந்திரங்களிலும் பயன்படுத்தப்பட்டன. எரியும் அல்லது உடையும் தன்மைகள் உடைய கட்டைகள் போலன்றி, இரும்பின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் கட்டுப்படுத்தத் படுபவையாக இருந்தன.

பிரிட்டனில் கற்கரியும், மிக உயர்தர இரும்பு எஃகும் ஆற்றுப்படுகைகளிலும், அதையொட்டிய பகுதிகளிலும் எளிதாகக்கிடைத்தன. இப்படுகைகள் துறைமுகங்களுக்கு மிக அருகில் இருந்தன. இங்கிலாந்தின் கடற்கரையோரம் ஐந்து நிலக்கரி வயல்கள் இருந்தன. வயல்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டப் பொருட்கள் நேரடியாக கப்பல்களில் ஏற்றப்பட்டன. அதன் விளைவாக கப்பல் கட்டுமானம், மற்றும் கப்பல் வர்த்தகம் மிக அதிகமானது.

1800 மற்றும் 1830ஆம் ஆண்டுகளில், இங்கிலாந்தின் இரும்பு, எஃகு தொழிற்சாலைகள், தங்கள் உற்பத்தியை நான்கு மடங்குகளாகப் பெருக்கின. மேலும், இத்தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்கள் ஐரோப்பாவில் மிக மலிவு விலையில் கிடைக்கத் தொடங்கின. 1820ஆம் ஆண்டில் 1 டன் தூய்மையற்ற இரும்பை தூய்மையுள்ள இரும்பாக்க 8 டன் நிலக்கரித் தேவைப்பட்டது. ஆனால் 1850ஆம் ஆண்டில் இதே அளவு தூய்மையுள்ள இரும்பை உருவாக்க 2 டன் நிலக்கரி மட்டுமே தேவைப்பட்டது. 1848ஆம் ஆண்டின் இறுதிக்குள் பிரிட்டனின் இரும்பு உற்பத்தி, உலக நாடுகளின் மொத்த உற்பத்தியை மிஞ்சியது.

### பருத்தி நூல் நூற்பும், நெசவும்

இங்கிலாந்தில் துவக்கக் காலங்களில் கம்பளி மற்றும் சணல் இழைகளிலான துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. ஆனால் 17ஆம் நூற்றாண்டிலிருந்து இங்கிலாந்து, அதிக செலவழித்து இந்தியாவிலிருந்து நூல் கட்டுகளை இறக்குமதி செய்தது. கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் அரசியல் கட்டுப்பாட்டை நிலை நாட்டிய உடன் பருத்தித் துணிகளுடன்,


- நெசவுத் தொழிற்சாலையில் புரட்சியை ஏற்படுத்திய இரண்டு முக்கிய கண்டுபிடிப்புகளை எழுதுக.

SCERT TELANGANA

நூல் நூற்று நெசவு செய்ய உதவும் கச்சா பருத்தியையும் இறக்குமதி செய்தது.

18ஆம் நூற்றாண்டு வரை, பருத்தி நூற்பு மிக மந்தமாகவும், கடும் உழைப்பு தேவைப்படுவதாகவும் இருந்தது. ஒரு நெசவுத் தொழிலாளி நெசவு செய்ய 10 பெண் நூற்பாளர்கள் தேவைப்பட்டனர். நூல் நூற்கும் வேலை தாமதம் ஏற்பட்டதால், நெசவாளிகள் நூல் நூற்கும் வரை வேலையின்றி இருந்தனர். ஆனால் பல புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் நூற்புக்கும், நெசவுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைத்தன. காலப்போக்கில் வீடுகளில் நடைபெற்ற நூற்பும், நெசவும் தொழிற்சாலைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டன.

இங்கிலாந்தில் 1780ஆம் ஆண்டிலிருந்து, பிரிட்டீஷ் தொழில்மயமாக்களின் அடையாளச் சின்னமாக பஞ்சாலை தொழிற்சாலைகள் திகழ்ந்தன. மற்றத் தொழிற்சாலைகளில் காணப்படும் இயல்புகளைக் போல, இத்தொழிற்சாலையிலும் இரண்டு இயல்புகள் இருந்தன. கச்சா பருத்தி முழுவதுமாக இறக்குமதி செய்யப்பட்டு பெருமளவிலான இறுதி நிலைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது இங்கிலாந்து ஏகாதிபத்தியத்திற்கு வழி வகுத்தது. இதன் மூலம் இங்கிலாந்து குடியேற்ற நாடுகளின் சந்தைகளையும், கச்சா பகுதியின் வளங்களையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்தது. இப்பகுதி நூல் நூற்பு, நெசவுத் தொழிற்சாலைகள் சிறு தொழிற்சாலைகளில் பணிபுரிந்த பெண்கள் மற்றும் குழந்தைகளின் உழைப்பைச் சார்ந்திருந்தன.





*வரைபடம் 2: இங்கிலாந்தில் பருத்தித் தொழிற்சாலைகள்*

## நீராவி சக்தி

நீராவி சக்தி முதன் முதலாக சுரங்கத்தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்டது. நிலக்கரிக்கும், உலோகங்களுக்குமான தேவை அதிகரித்தவுடன், அவற்றை மிக ஆழமான சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கும் முயற்சி தீவிரப்படுத்தப்பட்டது. சுரங்கங்களில் நீர்ப் பெருக்கம் மிக முக்கியப் பிரச்சனையாக இருந்தது. இந்த நீரை வெளியேற்ற நீராவி என்ஜின்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இத்தொழில்நுட்பம் பெரிய அளவில் பயன்படுத்தும் அளவில் சிறந்ததாக இல்லை.

நீர் இறைக்கும் ஆற்றலாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த நீராவி சக்தி, 'ஜேம்ஸ் வாட்' (1736-1819) அவர்களின் கண்டுபிடிப்புக்குபிறகு, மின் இயந்திரங்களுக்குச் சக்தியாகப் பயன்டுத்தப்பட்டது.



*படம் 15.3: ஜேம்ஸ் வாட்டின் நீராவி எஞ்சின்*

SCERT TELANGANA

பணக்கார உற்பத்தியாளரான 'மேத்யூ பௌல்டன்' (1728-1809) என்பவரின் ஆதரவோடு, 1775ஆம் ஆண்டு பர்மிங்ஹாமில் சோஹோ பட்டறையை உருவாக்கினார். இப்பட்டறையிலிருந்து தான் ஜேம்ஸ்வாட்டின் நீராவி இயந்திரங்கள் படிப்படியாக உருவாக்கப்பட்டன. 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள், நீர் சக்தி பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டு, நீராவி சக்தியின் பயன்பாடு துவக்கப்பட்டது. இங்கிலாந்தின் நீராவி இயந்திரங்கள், மொத்தம் ஐரோப்பிய நாடுகளின் மின்சார உற்பத்தியில் 70% உருவாக்கின.

### போக்குவரத்து :

கச்சாப் பொருட்களையும், உற்பத்திப் பொருட்களையும் கொண்டுச் செல்ல இங்கிலாந்தில் சாலை மற்றும் கால்வாய் வசதிகள் வளர்ந்தன. ஜல்லிக்கற்களை பயன்படுத்தி சாலை அமைக்கும் முறையை 'மேக்ஆடம்' என்பவர் அறிமுகப்படுத்தினார். நகரங்களுக்கு நிலக்கரி எடுத்துச்செல்லும் போக்குவரத்து நோக்கத்திற்காக கால்வாய்கள் அமைக்கப்பட்டன. நிலக்கரி பளுவாக இருப்பதாலும் அதிக அளவில் எடுத்துச் செல்லப்படுவதாலும், சாலை போக்குவரத்து கால்வாய் போக்குவரத்தைவிட தாமதமானதாகவும், செலவு மிக்கதாகவும் இருந்தது. தொழிற்சாலைகளின் மின்சாரத்திற்காகவும், வீட்டுப் பயன்பாடுகளுக்காகவும் (விளக்கு எரிய) நிலக்கரியின் தேவை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருந்தது. இங்கிலீஷ் கால்வாய், ஜேம்ஸ் பிரிண்ட்லி (1716-72) என்பவரால் கட்டப்பட்ட ஒர்ஸ்லே கால்வாய் (1761) போன்றவை நிலக்கரி சுரங்கங்களிலிருந்து நிலக்கரியை நகரங்களுக்கு எடுத்துச்செல்வதற்காக கட்டப்பட்டதாகும். இக்கால்வாய் கட்டப்பட்டவுடன் நிலக்கரியின் விலை பாதிக்கும் மேலாக வீழ்ச்சியைக் கண்டது. 1830ஆம் ஆண்டுக்குள் பல ஆயிரம் கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய்கள் கட்டப்பட்டு, பல பொருட்கள் கால்வாய்கள் மூலம் அனுப்பப்பட்டு குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. இக்கால்வாய்கள் பெரும்பாலும் நில உரிமையாளர்களால், தங்கள் நிலங்களின் மதிப்பை அதிகரிக்கும் நோக்கத்தோடு கட்டப்பட்டவையாகும்.

முதன் முதலாக 1814ஆம் ஆண்டு, நீராவி மூலம் இயங்கக்கூடிய ஸ்டெபன்சன்ஸ் ராக்கேட் என்ற ரயில் எஞ்சின் உருவாக்கப்பட்டது. ரயில்வேக்கள் புதிய போக்குவரத்து சாதனங்களாக விளங்கின. இப்போக்குவரத்து பயணிகளுக்கும் பொருட்களுக்கும் சிக்கனமானதாகவும், விரைவானதாகவும், வருடம் முழுவதும் கிடைக்கும் போக்குவரத்தாகவும் விளங்கியது. ரயில்வேக்களில் மரக்கட்டைத் தடம் நீக்கப்பட்டு 1760ஆம் ஆண்டு இரும்புத் தடம் பயன்படுத்தப்பட்டது. அதே போல ரயிலை இயக்க நீராவி இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

ரயில்வேக்களின் கண்டுபிடிப்பு தொழில்மயமாக்கலின் இரண்டாவது கட்டமாகக் கருதப்பட்டுகின்றது. முதல் ரயில் தடம் 'ஸ்டாக்டன்' மற்றும் 'டார்லிங்டன்' நகரங்களுக்கிடையே 1825ஆம் ஆண்டு 9 கிமீ தூரத்திற்கு அமைக்கப்பட்டது. ஒரு மணி நேரத்திற்கு 24KPH என்ற வேகத்தில் பயணம் செய்த ரயில் டார்லிங்டன் அடைய இரண்டு மணி நேரம் எடுத்துக்கொண்டது. 1830ஆம் ஆண்டு, லிவர்பூல் மற்றும் மான்செஸ்டர் நகரங்களுக்கிடையே அடுத்த ரயில் தடம் துவக்கப்பட்டது. ரயிலின் வேகம் அடுத்த இருபது ஆண்டுகாலத்தில், ஒரு மணி நேரத்திற்கு 30லிருந்து 50மைல் தூரம் இயல்பான வேகமாக இருந்தது.

1830களில், கால்வாய்களின் பயன்பாடு பல பிரச்சனைகளுக்கு வழிவகுத்தது. கால்வாய்களில் இடநெருக்கடியால் கப்பல்கள் மெதுவாகச் செல்ல நேரிட்டது. அதுமட்டுமின்றி உறைபனி, வெள்ளம், வறட்சி போன்றவையும் கப்பல் போக்குவரத்துக்குத் தடைகளாக இருந்தன.

SCERT TELANGANA

## கண்டுபிடிப்பாளர்கள் யார்?

இம்மாற்றங்களைக் கொண்டு வந்த மேதைகளைப் பற்றித் தெரிந்துக்கொள்வது மிக ஆர்வமானதாகும். அவர்களில் சிலர் அறிவியல் மேதைகளாவர். அடிப்படை அறிவியல்களான இயற்பியல், வேதியியல் போன்றவற்றை 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரையிலும், தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கு பிறகும் யாரும் கற்றவையாக இல்லை. இக்கண்டுபிடிப்புகளும், அவற்றின் முன்னேற்றங்களும் இயற்பியல் மற்றும் வேதியியல் விதிகளைச் சார்ந்து இருந்தாலும், அவற்றைப் பற்றிய தெளிவு, இக்கண்டுபிடிப்புகளுக்குத் தேவைப்படுவதாக இல்லாத காரணத்தால், தொழில் துறையின் முன்னேற்றங்கள் மேதைகளையும் அவர்களின் பரிசோதனைகளையும் மட்டுமேச் சார்ந்திருந்தன. ஐரோப்பாவின் பிற நாடுகளுக்கு இல்லாத, இங்கிலாந்து நாட்டுக்கு மட்டுமே இருந்த சில சிறப்பு இயல்புகள் இவர்களுக்கு உதவியாய் இருந்தன. 1760 மற்றும் 1800ஆம் ஆண்டுகளுக்கிடையே பல அறிவியல் இதழ்களும், கட்டுரைகளும் ளியிடப்பட்டன. சிறு நகரங்களிலும், தொழில்மயமாக்கலைப் பற்றியும், அதைச்சார்ந்த அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பற்றியும் தெரிந்துக்கொள்ளும் ஆர்வம் மக்களிடையே இருந்தது. இதற்குக் கலைச்சங்கத்தின் செயல்பாடுகள் உதவியாய் அமைந்தன. 1754ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இச்சங்கம், தன் உறுப்பினர்கள் மூலம் பல்வேறு இடங்கதளில் சிறப்புரை நிகழ்த்தச்செய்தது. அது மட்டுமின்றி, காபி விடுதிகளில் மக்களிடையே நிகழ்ந்த உரையாடல்களும் அறிவியல் அறிவை மக்கள் பெற உதவியாய் இருந்தன.

அறிவியல் கண்டுபிடிப்புகளில் பல அறிவியல் ஞானத்தைப் பயன்படுத்திக் கண்டுபிடித்தவை அல்ல. இவை ஆர்வம், தெரிந்துக்கொள்ள வேண்டும் என்னும் விருப்பம், மனஉறுதி, அதிர்ஷ்டம் போன்றவற்றின் மீது சார்ந்திருந்தது. பஞ்சாலை தொடர்பான கண்டுபிடிப்புகளை நிகழ்த்திய 'ஜான்கே' மற்றும் 'ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ்' நெசவு மற்றும் தச்சுத்தொழிலில் வல்லுநர்களாக இருந்தனர். 'ரிச்சர்டு ஆர்க்ரைட்' என்பவர் முடிதிருத்துபராகவும், பொய்முடி உருவாக்குபவராகவும் இருந்தார். 'சாமுவேல் கிராம்ப்டன்' என்பவர் தொழில்நுட்ப அறிவு இல்லாதவராக இருந்தார். துவக்கத்தில் மதபோதகராக பணியாற்ற விரும்பிய 'எட்மண்ட் கார்ட்ரைட்' இலக்கியம், மருத்துவம், விவசாயம் போன்றவற்றைக் கற்று அறிந்தவராக விளங்கினார். இவர் எந்திரங்களைப்பற்றியும் சிறிதளவு தெரிந்தவராக இருந்தார்.

இதற்கு மாறாக, ராணுவ அதிகாரியான தாமஸ் சரவெரி, கருமானாகவும், பூட்டு தயாரிப்பாளராகவும் விளங்கிய 'தாமஸ் நியூகோமன்' எந்திரத்துறை அனுபவம் பெற்றிருந்த ஜேம்ஸ்வாட், போன்றோர் தங்கள் கண்டுபிடிப்புத் தொடர்பான துறைகளில் அறிவாற்றல் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். பூமியின் மேல்பரப்பை, சாலைக்கட்டுமானப் பணிக்காக நேரில் சென்று நில அளவு மற்றும் அதற்கான திட்டங்களை வகுத்தவருமான, 'ஜான் மெட்காஃப்' ஒரு குருடராவார். படிப்பறிவு அற்றவரும், 'நேவிகேசன்' (கப்பல் போக்குவரத்து) என்ற வார்த்தையை கூட்டிப்படிக்கத் தெரியாதவருமாகிய, கால்வாய் கட்டுமான நிபுணர் 'ஜேம்ஸ் பிரிண்ட்லி,' நினைவாற்றல் கற்பனை, மனதை ஒருநிலைப்படுத்துதல் போன்றவற்றில் அதிக ஆற்றலைப் பெற்றவராக விளங்கினார்.

### மாற்றமடைந்த வாழ்க்கை :

ஆகவே, இக்காலங்களில் அறிவுத்திறன் மிக்கவர்களால் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டு வர முடிந்தது. அதேபோல அக்கால செல்வந்தர்கள் நஷ்ட பயத்தையும் பொருட்படுத்தாமல், தங்கள் முதலீடு வருங்காலத்தில் பெருமளவு பெருகும் என்று நினைத்து தொழிற்சாலைகளில் முதலீடு செய்தனர். பெரும்பாலான முதலீடுகள் பல மடங்கு லாபத்தை ஈட்டித்தந்தன. செல்வம் பொருட்கள், வருமானம், சேவைகள், அறிவு மற்றும் உற்பத்தித்திறன் போன்றவை பல வடிவங்களில் படிப்படியாக அதிகரித்தது.

அதே நேரத்தில் இம்மாற்றங்கள் மக்களிடையே எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியது. தனிக்குடும்பங்கள், சீரழிந்த நகரங்கள், சீர்கேடான வேலை நிலைமைகள் போன்றவை இதற்கு வலுச்சேர்ப்பதாக இருந்தன.

1750ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் 50,000 பேர் வசிக்கக்கூடிய மக்கள் தொகை கொண்ட நகரங்கள் இரண்டு மட்டுமே இருந்தன. ஆனால் 1850ஆம் ஆண்டில் இது போன்ற மக்கள் தொகைக் கொண்ட நகரங்களின் எண்ணிக்கை 29ஆனது. நகர



படம் 15.4: 1783ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வசிப்பதற்காக, தொழிலதிபர்களால் கட்டப்பட்ட சிறிய டார்பிக்களின் வீடுகள், இந்த ஓவியம் 1835ஆம் ஆண்டு வில்லியம் வெஸ்ட்வுட் அவர்களால் தீட்டப்பட்டது.

மக்கள் தொகைக்கு ஏற்றவாறு வீடுகள், சுகாதாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் போதுமானாதாக இல்லை. நகரங்களுக்கு புதியதாக வேலைத்தேடி வருபவர்கள், அசுத்தமான குடிசைப் பகுதிகளிலும், நெருக்கடி மிகுந்த நகர மையப்பகுதியிலுள்ள தொழிற்சாலைகளின் ஓரங்களிலும் வசிக்கத் தொடங்கினர். செல்வந்தர்கள், தூயக்காற்று, சுத்தமான குடிநீர் உள்ள புறநகர் பகுதிகளுக்குக்குடி பெயர்ந்தனர்.

### தொழிலாளர்கள்

1842ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் படி, நகரங்களில் வாழும் பிற சமூகத்தினரை விட தொழிலாளர்களின் வாழ்நாள் குறைவானதாகும். தொழிலாளர்களின் வாழ்நாள் பர்மிங்காமில் 15 ஆண்டுகளாகவும், மான்செஸ்டரில் 17 ஆண்டுகளாகவும், டெர்பியில் 21 ஆண்டுகளாகவும் இருந்தது. கிராமங்களை விட, புதிய தொழிற் நகரங்களில் இளைஞர்களின் இறப்பு விகிதம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருந்தது. குழந்தைகளில் 50% ஐந்து வயது அடைவதற்கு முன்பே இறந்துவிட்டனர். நகரங்களின் மக்கள் தொகைப்பெருக்கம், ஏற்கனவே குடியிருந்த குடும்பங்களின் குழந்தைப் பிறப்பைச் சார்ந்தது அல்ல. புதியதாக குடியேறியவர்களால் மட்டும் தான் மக்கள் தொகை அதிகரித்தது.

இறப்புக்கு முக்கிய காரணமாக தொற்றுநோய் அமைந்தது. குடிநீர் மாசுபட்டதால் காலரா, டைபாய்ட் போன்ற நோய்களும், காற்று மாசுபட்டதால் காசநோயும் ஏற்பட்டது. 1831ஆம் ஆண்டில், காலரா நோயால் பாதிக்கப்பட்டு சுமார் 31,000பேர் இறந்தனர். 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை, நகராட்சி நிர்வாகங்கள் நோய்களைப் போக்குவதற்காக எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை. இந்நோய்களைப் புரிந்துக்கொள்ள அல்லது குணமாக்க தேவைப்படும் மருத்தவ அறிவையாரும் தெரிந்திருக்கவில்லை.

- பெண்கள் மற்றும் குழந்கைளின் வாழ்வின் மீது எதிர்மறை விளைவை ஏற்படுத்திய தொழில்மயத்தின் முக்கிய காரணங்களை குறிப்பிடு.

### தொழிற் புரட்சியில் பெண்களும், குழந்தைகளும்

தொழிற் புரட்சி என்பது பெண்கள், குழந்தைகள் போன்றோர் பணியாற்றியதன் மூலம் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்திய காலமாக இருந்தது. தம் பெற்றோர்களின் மேற்பார்வையில் கிராமப்புறக் குழந்தைகள், வீடுகளிலும் அல்லது விவசாய பண்ணைகளிலும் பணி புரிந்தனர். இவர்கள் பகல் நேரங்களிலும், பருவக்கால

தேவைகளுக்கு ஏற்பவும் பணிபுரியலாயினர். அதேபோல கிராமப்பகுதிகளிலுள்ள பெண்கள் விவசாய பண்ணைகளில் சுறுசுறுப்பாக பணியாற்றினர். கால்நடைகளை மேய்த்தல், அடுப்பு எரிக்க விறகுகளைக் கொண்டு வருதல், ராட்டினங்களில் நூல் நூற்றல் போன்ற வேலைகளை பெண்கள் செய்தனர்.



படம் 15.5 : பர்மிங்காமிலுள்ள பட்டன் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் 1850களில் இத்தொழிற்சாலைகளில் பணியாற்றியவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர். ஆண்களுக்கு ஒரு வாரத்திற்கு 25 ஷில்லிங்களும், பெண்களுக்கு 7ஷில்லிங்களும், குழந்தைகளுக்கு ஒரு ஷில்லிங்கும் ஒரே நேர வேலைக்காகக் கொடுத்தனர்.

தொழிற்சாலைகளில், கடும் ஒழுக்கத்துடன் நெடு நேரம் ஒரே வகையான வேலையைச் செய்வதும், வேலையின் கவனக்குறைவால் கடும் தண்டனைப் பெறுவதும் முற்றிலும் வேறுபட்டதாகும். ஆண்களின் குறைந்தக் கூலியில் குடும்பத்தை நடத்துவது சிரமமாக இருந்ததால் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வருமானமும் அவசியமானதாக இருந்தது. தொழிற்புரட்சியின் போது இயந்திரங்களின் பயன்பாடு பல பகுதிகளுக்கும் பரவியதால், குறைந்த அளவிலேயே தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். தொழிலதிபர்கள் பெண்களையும், குழந்தைகளையும் வேலைக்கு அமர்த்தவதற்கே முன்னுரிமை கொடுத்தனர். ஏனெனில் பெண்களும், குழந்தைகளும் போராட்டம் நடத்தமாட்டார்கள் என்றும், குறைந்த கூலிக்கே வேலைச் செய்வார்கள் என்றும் அவர்கள் கருதினர்.

பெண்களும், சிறுவர்களும் லாங்க்ஷைர் மற்றும் யோர்க்ஷைர் பகுதிகளில் இயங்கிவந்த பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் பெருமளவு வேலைக்கு அமர்த்தப்பட்டனர். பெண்கள் பட்டு, ஜரிகை, பின்னலாடை போன்ற தொழிற்சாலைகளில் முக்கிய பணியாட்களாக இருந்தனர் (குழந்தைகளுடன் சேர்ந்து). அது மட்டுமின்றி பர்மிங்காமிலிருந்த உலோகத் தொழிற்சாலைகளிலும் பணியாட்களாக பணிபுரிந்தனர். குழந்தைத் தொழிலாளர்களுக்காக ‘ஜென்னி’ என்ற பருத்தி நூற்பு இயந்திரம் வடிவமைக்கப்பட்டது. இடநெருக்கடி மிகுந்த இயந்திரங்கள் இருந்த ஜவுளித் தொழிற்சாலைகளில் சிறுவர்கள்; மட்டுமே வேலைக்கு அமர்த்தப்பட்டனர். ஏனெனில் அவர்கள் இயந்திரங்களுக்கிடையே எளிதாகச் சென்று பணிபுரிய முடியும் என்று தொழிலதிபர்கள் நம்பினர்.

தொழிற்சாலைகளில் நீண்ட நேரம் பணிபுரிந்தாலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயந்திரங்களைச் சுத்தப்படும் வேலைகளில் இவர்கள் ஈடுபட்டிருந்ததாலும் ஓய்வின்றித் தவிக்க நேரிட்டது. சிறுவர்கள் இயந்திரங்களில் பணிபுரியும் போது முடியையும், கைகளையும் இயந்திரங்களில் வைத்து விபத்துக்கு உள்ளாக நேரிட்டது. உடல் சோர்வின் காரணமாக ஓய்வின்றி பணியாற்றிய சிறுவர்கள், உறங்கிய போது இயந்திரங்களின் மீது விழுந்து தங்கள் உயிர்களை இழந்தனர்.

SCERT TELANGANA

## பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் தொழில்மயமாக்கம்

இங்கிலாந்தில், 18ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியிலேயே தொழில்மயமாக்கள் ஏற்பட்டாலும், ஜெர்மனி மற்றும் பிரான்சு நாடுகளில் முறையே 1850 மற்றும் 1870வரை தொழிற்துறை மாற்றங்கள் நிகழவில்லை. ஜெர்மனியில் 1870ஆண்டுவரை பிரிந்திருந்த பகுதிகள் இணைக்கப்படவில்லை என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதே நேரத்தில் பிரான்ஸ் நாடு போர்களாலும், புரட்சிகளாலும் பாதிக்கப்பட்டிருந்ததையும் நீங்கள் அறிவீர்கள். பிரிட்டன் ஏராளமான காலனி நாடுகளின் வளங்களை சுரண்டி தன் நாட்டை வளமாக்கியது. இதற்கு மாறாக, ஜெர்மனி மற்றும் பிரான்சுக்கு காலனி நாடுகள் இல்லை, அவற்றின் வளங்களும் இல்லை.

இவ்விரண்டு நாடுகளிலும் 1830ஆம் ஆண்டு ரயில்வேக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் தொழில்மயமாக்கல் மேலும் முன்னேற்றத்தைக் கண்டது. ரயில்வேக்கள் வர்த்தகத்தையும், தகவல் தொடர்பையும், பொருளாதார வளர்ச்சியையும் ஊக்கப்படுத்தியது. 1850ஆம் ஆண்டுக்குள், ஜெர்மன் நாட்டின் மாகானங்கள், இங்கிலாந்து நாட்டின் மொத்த ரயில் போக்குவரத்தில் 50% விடவும், பிரான்ஸ் நாட்டின் மொத்த இரயில் போக்குவரத்தைவிட இரண்டு மடங்காகவும் தம் மாகானங்களில் ரயில்வே கட்டுமான பணிகளை பெருக்கின.

பிரஷ்யா, தன் நாட்டின் வளம்மிக்க நிலக்கரி சுரங்கங்களையும் (சிலெசியா, ரைன்லேண்ட், ரூர்), இரும்புப் படுகைகளையும் (பொஹிமியா) இரும்புத் தொழிற்சாலையை நிறுவப் பயன்படுத்திக்கொண்டது. 'ஆல்பிரட் கிரப்' என்பவர் 1810ஆம் ஆண்டு 'எஸ்ஸென்' என்ற இடத்தில் சிறிய இரும்பு பட்டறையை நிறுவினார். இத்தொழிற்சாலை

### குழந்தைத் தொழிலாளர்களுக்கான கட்டுப்பாடுகள் :

பிரிட்டிஷ் பாராளுமன்றக்குழு, 1816ஆம் ஆண்டு, சேகரித்த குறிப்பு, குழந்தைத் தொழிலாளர்கள் அனுபவித்த கொடுங்கட்டுப்பாடுகளுக்கு அத்தாட்சியாக விளங்குகிறது. கீழ்காணும் குறிப்புகள், ஒரு காலத்தில் பஞ்சாலை பயிற்சியாளர்களின், பயிற்றுனராகப் பணிபுரிந்தவரிடமிருந்து பெறப்பட்டவையாகும். குழந்தைத் தொழிலாளர்களின் நிலைமைகள் பற்றி அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

எந்த வயதில் அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்?

லண்டனிலிருந்து வந்த அவர்கள் 8 அல்லது 10லிருந்து 15வயதுக்குள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

எத்தனை மாதங்கள் அவர்கள் பயிற்சியாளர்களாகப் பணிபுரிய வேண்டும்?

ஒன்றிலிருந்து இருபது மாதங்கள் வரை

அவர்களின் வேலை நேரம் என்ன?

காலை 5மணியிலிருந்து இரவு 8 மணி வரை

ஒரு நாளைக்கு 15மணி நேரம் வேலை செய்கின்றனரா?

ஆம்

ஆலை பழுதானதாலோ அல்லது பருத்தி பற்றாக்குறையாலோ வேலை நிறுத்தப்பட்டால், அந்த வேலை நேரத்தை ஈடுகட்ட வேண்டுமா?

ஆம்

சிறுவர்கள் உட்கார்ந்து பணிபுரிகிறார்களா அல்லது நின்றுக்கொண்டா?

நின்றுக்கொண்டு

பணி நேரங்கள் முழுவதுமா?

ஆம்

தொழிற்சாலைகளில் உட்கார இருக்கைகள் உள்ளனவா?

இல்லை, அவர்கள் தரையில் உட்கார்ந்ததையே நான் அடிக்கடி பார்த்திருக்கின்றேன். பிறகு அவர்கள் ஓய்வெடுக்கச் சென்று விடுவார்கள்.

இயந்திரங்களால் சிறுவர்கள் எப்போதாவது காயமுற்றனரா?

அடிக்கடி காயமுற்றனர்.

SCERT TELANGANA

1870ஆம் ஆண்டுக்குள், மிகப்பெரிய தொழிற்சாலையாக மாறி ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தந்தது. இரயில் தளவாடங்களும், என்ஜின்களும் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டன. 1866ஆம் ஆண்டு 'வெர்னர் சீமன்ஸ்' ஆல் கண்டுபிடிக்கப்பட்ட மின்சார டைனாமோ, ஜெர்மனியில் புதிய மின்சார தொழிற்சாலைகள் உருவாக அடித்தளமாக விளங்கியது. இதன் மூலம் மின்சார இயந்திரங்களின் உற்பத்தியில் ஜெர்மனி மற்ற உலக நாடுகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது. 1870ல் பிரான்ஸின் தோல்வியும், ஒருங்கிணைப்பும், தொழில் மயமாக்கலை மேலும் ஊக்கப்படுத்தின. இதற்குக்காரணம் என்னவென்றால் புதியதாக ஒருங்கிணைக்கப்பட்ட ஜெர்மனி, பிரான்சிடமிருந்து பெற்ற லொரைன் பகுதியிலிருந்து இரும்பு வயல்களை தன் நாடு வளம்பெற பயன்படுத்திக் கொண்டதே ஆகும்.

- ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளின் தொழில்மயமாக்கலை ஒப்பிடுக. இவ்விரண்டுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை எழுதுக.
- தொழிற்துறை முன்னேற்றத்தில் பிரான்ஸ் ஏன் பின்தங்கியது? காரணங்களை கண்டறியவும்
- தொழில்மயமாக்கலில் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து நாடுகளைப் பின்னுக்குத்தள்ளி, ஜெர்மனி தொழிற்துறையில் முன்னேற்றம் அடையக் காரணங்கள் யாவை?

ஜெர்மன் அரசாங்கம், தன் நாட்டில் தொழில் மயமாக்கலுக்குத் தேவையான வசதிகளைச் செய்துத் தந்தது. தொழிற்சாலைகளுக்கு மிகப்பெரிய சந்தையை ஏற்படுத்தியது மட்டுமின்றி சாலை, ரயில் போக்குவரத்து, சுரங்கத்தொழில் வளர்ச்சிக்கான முன்னேற்றப் பணிகள் போன்றவற்றையும் செய்தது. ஜெர்மன் ராணுவத்திற்கு பெருமளவில் ஆயுதங்கள் தேவைப்பட்டதால், முன்னனி தொழிலதிபர்கள ஆயுதத் தயாரிப்புத் தொழிற்சாலைகளில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தினர். ஜெர்மன் அரசாங்கம் தொழிலாளர் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கியது. அதே வேளையில் அவர்களுக்குத் தேவையான சமூகப்பயன்களையும், காப்பீடு வசதிகளையும் செய்தது. ஜெர்மன் அரசாங்கத்தின் இச்செயல் தொழில் அதிபர்களுக்கு தொழிலாளிகளைக் கட்டுப்படுத்தவும், அவர்கள் நலனில் அக்கரையற்று இருப்பதற்கும் உதவியது.

**க்ரப் குடும்பம்**

'க்ரப் குடும்பம்,' உலகின் மிகப்பெரிய ஆயுதத் தொழிற்சாலையை நிறுவியது. இத்தொழிற்சாலை துப்பாக்கி உற்பத்தியில் சிறப்புமிக்கதாக விளங்கியது. 1887ஆம் ஆண்டுக்குள் இத்தொழிற்சாலை 46 நாடுகளுக்கு ஆயுதங்களை அனுப்பியது. முதலாம் உலகப்போரின் போது க்ரப் தொழிற்சாலைகள் ஜெர்மன் தரைப்படைக்கு துப்பாக்கிகளை தயாரித்து அனுப்பியது. 1933ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டில் நடந்த பொதுத்தேர்தலில், க்ரப் குடும்பத்தினர் ஹிட்லரை ஆதரித்தனர். நாஜிப்படையினர் பக்கத்து நாடுகளை ஆக்கிரமித்தபோது, க்ரப் குடும்பத்தினர் ஆயுத தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக புதிய இடங்களைப் பெற்றனர். நாஜிப் படைகளின் முகாம்களில் இருந்தபலர், இத்தொழிற்சாலைகளில் கொத்தடிமைத் தொழிலாளர்களாகப் பயன்படுத்தப்பட்டனர்.

பிரிட்டன் மற்றும் அமெரிக்கா நாடுகளின் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் ஜெர்மனி தொழிற்சாலைகளும் பயன் அடைந்தன. அத்தொழிற்சாலைகள், மற்ற நாடுகள் பல ஆண்டுகளாக உருவாக்கிய புதிய தொழில்நுட்பத்தை நேரடியாக வாங்கிப் பயன்படுத்தின. இதற்குத் தேவையான பெரும் முதலீட்டை இத்தொழிற்சாலைகள் பெரிய வங்கிகளிடமிருந்துப்

SCERT TELANGANA

பெற்றன. இவ்வாறாக ஜெர்மனியில் மிகப்பெரிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன. இவை இங்கிலாந்து தொழிற்சாலைகளை விட அளவிலும், பரப்பிலும் மிகப்பெரியதாக இருந்தன.

ஜெர்மன் தொழிற்சாலைகள், துவக்கத்தில் பஞ்சாலைகள், இயந்திரக் கட்டுமானம் போன்றவற்றில் இங்கிலாந்து தொழிற்சாலைகளையும், தொழில் நுட்பத்தையும் நம்பி இருந்தன. ஆனால் அதற்குப் பின் ஜெர்மனியில் இரும்பு எஃகு, வேதிப் பொருட்கள் மற்றும் மின்சார தொழிற்சாலைகளை வெகுவேகமாக நிறுவி இத்துறைகளில் பிரிட்டனையும் மிஞ்சியது. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தொழிற்துறையில் மிக விரைவான முன்னேற்றத்தைக்கண்ட ஜெர்மன் தொழிற்சாலைகள், இங்கிலாந்து நாட்டுக்கே சவால் விடுகின்ற அளவிற்கு ஐரோப்பாவின் பெரும் தொழிற்மைய சக்தியாக உருவெடுத்தது. பிரிட்டன் அதிக அளவு நிலக்கரி உற்பத்தி செய்துக்கொண்டிருக்கும் வேளையில், ஜெர்மன் இரும்புத் தாதுக்களை அதிக அளவில் உற்பத்தி செய்தது.

இதில் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்குக் கவலை அளிக்கின்றச் செய்தி என்னவென்றால், ஜெர்மன் நாட்டு இரும்புத் தொழிற்சாலைகளின் உற்பத்தியில் பெரும்பங்கு ராணுவத்திற்கும் மற்றும் போர் கப்பல்களின் கட்டுமானத்திற்கும் பயன்படுத்தப்பட்டது ஆகும்.

இதற்கு மாறாக, பிரான்ஸ் தொழில்மயமாக்கலில் மந்த நிலையில் இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை பிரான்ஸ் முன்னேற்றமடையாத நாடாக இருந்தது. பெரும்பாலான மக்கள், தங்களுக்குள்ள சிறிய அளவு நிலங்களில் விவசாயம் செய்து வந்தனர். கிராமப்புற தொழிலாளர்களின் வீடுகளில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டத்தில் அதிக லாபம் கண்ட உற்பத்தியாளர்கள், தொழிற்சாலைகளை நிறுவுவதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. வீடுகளில் தயாரிக்கப்படும் பொருட்களின் உற்பத்தி 1850ஆம் ஆண்டுக்குப் பிறகு மிகவும் குறைந்துவிட்டது. இது மக்களிடையே பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தியது. நகர்ப்புறங்களில் உற்பத்திச் செய்யப்பட்ட பெரும்பாலான பொருட்கள், இயந்திரங்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்டன. மிகச்சிக்கலான கைவேலைப்பாடு மட்டுமே கிராமப்பகுதி மக்களுக்குத் தரப்பட்டது. 1860ஆம் ஆண்டுக்குப்பிறகு, சாலை மற்றும் ரயில் கட்டுமானப்பணிகளால் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்களுக்கு சந்தைகள் மூலம் விற்பனை வாய்ப்பு ஏற்பட்டது. இதுவே பிரெஞ்சு தொழிற்புரட்சிக்கு வித்திட்டது.

பிரான்ஸ் நாட்டில், பெருமளவு பணத்தைத்திரட்டி, தொழிலதிபர்களுக்குக் கடன் கொடுக்க பெரிய வங்கிகள் நிறுவப்படவில்லை. அதன் விளைவாக பிரெஞ்சு உற்பத்தியாளர்களில் பெரும்பான்மையோர், தங்கள் குடும்பச்சொத்துக்களையே முதலீடாகப் பயன்படுத்தினர். அதனால் அவர்கள் சிறு உற்பத்தியாளர்களாவே இருந்தனர். புதிய இயந்திரங்களை நிறுவுவதிலும், புதிய தொழில்நுட்பத்தை கடைபிடிப்பதிலும் மந்த நிலையே காணப்பட்டது.

பிரான்ஸில் நிலக்கரிப் படுகைகள் அதிகமாக இல்லாத காரணத்தால், இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியையே நம்பி இருக்கும் நிலைமை ஏற்பட்டது. இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி மிக அதிகமான செலவினத்தை ஏற்படுத்தியது. இது பிரான்ஸில் இரும்பு எஃகு தொழிற்சாலைகள் மிக மந்தமாக நிறுவப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. பிரெஞ்சுத்தொழிற்சாலைகள் ஜவுளித் துணிகளை தயாரிப்பதில் அதிக முனைப்புக்காட்டியது. இது ஜெர்மன் மற்றும் பிரிட்டீஷ் தொழிற்புரட்சிக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். அந்நாடுகளில் மிகப்பெரிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டதை இங்கு நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

SCERT TELANGANA

## முக்கியச் சொற்கள்

1. தொழில்மயம்
2. உருமாற்றம்
3. தொழில்புரட்சி
4. நீராவி சக்தி
5. நீர்சக்தி

## உனது கற்றலை மேம்படுத்துக

1. தொழிற்புரட்சியை கருத்தில் கொண்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றுக்கும் இரண்டு வரிகளில் விடையளிக்கவும்.(AS1)
   அ) தொழில்நுட்பம் ஆ) போக்குவரத்து முறைகள்
   இ) நிதி ஈ) விவசாயப் புரட்சி
2. தொழிற்புரட்சியின் போது, புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?(AS1)
3. பிரிட்டீஷ் பெண்களின் வெவ்வேறு தரப்பினரை, தொழிற்புரட்சி எவ்வாறு பாதிப்புக்குள்ளாக்கியது?(AS1)
4. கால்வாய் மற்றும் இரயில் போக்குவரத்தால், இங்கிலாந்தில் ஏற்பட்ட நன்மைகள் யாவை?(AS1)
5. இங்கிலாந்தில் தொழில் புரட்சியின் போது, இரும்பு மற்றும் நெசவுத் தொழிற்சாலைகள் அதிகம் துவக்கப்பட்ட இடங்களை இங்கிலாந்து வரைபடத்தை வரைந்து குறிக்கவும்.(AS5)
6. தொழில் புரட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் வருடங்களை பட்டியிலிடுக.(AS3)
7. பக்கம் 185ல் உள்ள தொழிலாளர்கள் என்னும் தலைப்பில் உள்ள பத்தியை படித்து உன் கருத்தை கூறுக.(AS2)

## செயல்திட்டம்

இங்கிலாந்திலும் பிற நாடுகளிலும் தொழில் புரட்சியால் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட பலன்களை எழுதி வகுப்பறையில் படித்துக்காட்டவும்.

SCERT TELANGANA

பாடம்

# 14 சமுதாய எதிர்ப்பு இயக்கங்கள்

தொழில்மயமாக்கலும் தேசிய அரசுகளின் தோற்றமும் மிகவும் அடிப்படையான வழிகளில் மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தின. மக்களின் வேலை செய்யும் முறை, வாழ்க்கை மற்றும் ஒழுங்கிற்குத் தேவையான அவர்களின் பட்டம், அவர்களின் சுயமான வேலைக்கும் அவற்றின் உற்பத்திகளுக்கும் உள்ள அவர்களின் தொடர்பு அவர்களின் குடும்பங்கள் மற்றும் சுற்றத்தாருக்கு உள்ள தொடர்புகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. மக்களில் பலருக்கும் முக்கியமாக ஏழை விசாயிகள் கைவினைக் கலைஞர்கள், தொழில் உழைப்பாளிகளுக்கும் இது ஒரு சீரான மற்றும் பாதுகாப்பான வாழ்க்கைக்கு ஒரு முடிவாக கருதப்பட்டது. அவர்கள் கருணையற்ற உழைப்பாளிகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளின் கீழ் தொழிற்சாலைகளில் நூற்றுக்கணக்கான மற்றும் ஆயிரக்கணக்கான பிற உழைப்பாளர்களுடன் பணிபுரிய வேண்டியிருந்தது. அவர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களின் மீது எவ்வித அதிகாரமும் இல்லை. எப்பொழுது எப்படி வேலை செய்கிறார்கள் என்பதிலும் கட்டுப்பாடு கிடையாது. குறைந்த கூலிகள் மற்றும் வேலை உறுதியின்மை போன்றவை மக்களிடையே தீவிரமான அதிருப்தியை ஏற்படுத்தியது. தொழிற்சாலை உரிமையாளர்கள் கூலிகளை குறைக்கும்போது அல்லது உழைப்பார்களை ஆட்குறைப்பு செய்யும் போது அல்லது அவர்களின் மீது வேலைச்சுமையை அதிகரிக்கும் போதும் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் சிரமமாக மாறியது.

தொழில் மயமாக்கலின் முந்தைய பத்தாண்டுகள் பிரெஞ்சுப் புரட்சியால் (1789-94) வழி மொழியப்பட்ட புதிய அரசியல் சிந்தனைகளுடன் ஒத்திருந்தன. 'சுதந்திரம்,' 'சமத்துவம்,' 'சகோதரத்துவம்' போன்ற கருத்துக்களின் இயக்கங்கள் ஒன்றுபட்ட மக்களின் செயலின் சாத்தியக்கூறுகளை எடுத்துக்காட்டின. அவர்கள் மக்களாட்சி நிறுவனங்களான பிரெஞ்சுப் பாராளுமன்ற சபைகளை 1790களில் உருவாக்கினர். போருக்குப் பின்னர் ஏற்படும் மோசமான இன்னல்களை, ரொட்டி போன்ற அத்தியாவசதியமான பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தடுத்தனர்.

தொழில் மயமாக்கல் கலைஞர்களையும் அறிவாளிகளையும் கூட மோசமாக பாதித்தன. விவசாய அல்லது கைவினைப் பொருள் உற்பத்தி மற்றும் கிராமங்களின் சமூக வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருந்த மனித நேய மதிப்புகள் பறிபோயின. வருத்தங்கள் மற்றும் உணர்வுகளைக் காட்டிலும் பகுத்தறிவு, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கு அதிக அளவு முக்கியத்தவம் தரப்பட்டதால் பேரளவில் தொழில்மயமாக்கலின் கவலைதோய்ந்த தாக்கம் உழைக்கும் மக்களின் வாழ்க்கை வறுமை மற்றும் தூய்மையின்மையுடன் இரட்டிப்பாக மாறி மக்களின் சிந்தனையில் ஆழ்ந்த சோகத்தை ஏற்படுத்தி விட்டது.



படம். 16.1: லண்டனில் தொழிலாளர்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்குச் செல்லும் குறுகலான வழிகள். 1876-ல் பிரெஞ்சு ஓவியர் 'டோர்' என்பவர் வரைந்த ஓவியம்..

SCERT TELANGANA

அவர்களில் சிலர் தொழில் மயமாக்கலின் சவால்களை புரிந்துகொள்வதற்காக பொருளாதாரத்தையும், சமூக வரலாற்றையும் படித்தனர். மற்றவர் மாற்று நற்குணங்களால் உந்தப்படுவதற்காக செய்யுளையும் கலைகளையும் கற்கச் தொடங்கினர்.

தொழில் மயமாக்கல், சமுதாயத்தில் முக்கிய பங்கினை வகிக்க அதிக அளவில் விரும்பிய புதிய சமுதாய குழுவினரையும் உருவாக்கியது. அது தொழிற்சாலை முதலீட்டாளர்களுக்கும் பெரிய நிலச்சுவாந்தார்களுக்கும் அதிக அதிகாரத்தையும் செல்வாக்கையும் வழங்கியதோடு, சீரமைக்கப்பட்ட பாட்டாளி மக்கள் இயக்கத்தையும் உருவாக்கியது. உழைப்பாளிகள் ஒன்றுபட்டபோது முழு பொருளாதாரத்தையும் முடக்கிவிட முடியும் என்னும் தங்கள் ஆற்றலை உணர்ந்தனர். அவர்கள் பிரெஞ்சுப்புரட்சி மற்றும் பொதுவுடைமைக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டனர். அதேபோன்று அதுவரை வீட்டில் மட்டுமே அடைந்து கிடந்த பெண்கள், அதிலிருந்து வெளியே வந்து சமுதாயம், பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாச்சாரங்களில் சம தகுதியையும் பங்கினையும் கோரினர். அவர்கள் அவ்வப்போது பிற சமுதாய இயக்கங்களான பொதுவுடைமைக் கொள்கை மற்றும் மக்களாட்சி தேசியவாதம் போன்றவற்றில் தங்கள் காரணத்தை முன்வைத்து கைகோர்த்துக்கொண்டனர்.

இந்தப் பாடத்தில் நாம் இவற்றில் சில முன்னேற்றங்களையும் அவை நவீன உலகத்தின் பாதையை குறிப்பாக இந்தியாவின் பாதையை எவ்வாறு பாதிக்கச்செய்தது என்பதையும் காண முயற்சிக்கலாம்.

- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கருத்துக்கள் எதிர்ப்பு இயக்கங்களுக்கு உந்துதலாக இருந்து உதவிய வழிமுறைகள் என்ன?
- 21ஆம் நூற்றாண்டில் மக்கள் இந்த மூன்று கொள்கைகளையும் அடைந்தார்கள் என்று நினைக்கிறாயா?
- உன்னைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏதேனும் சமூக இயக்கங்கள் இக்கொள்கைகளால் இன்னும் ஈர்க்கப்பட்டு வருகின்றன என்பதை நீ காண்கிறாயா?

## இங்கிலாந்தின் முந்தைய உழைப்பாளர் இயக்கங்கள் :

இங்கிலாந்தில் தொழிற்சாலைகளில் பணியாற்றும் மோசமான நிலைகளை எதிர்த்து அரசியல் எதிர்ப்புகள் அதிகரித்தவண்ணம் இருந்தன. தொழிலாளர்கள் வாக்குரிமைக்காக கிளர்ச்சி செய்தனர். அரசாங்கம் ஒடுக்கும் செயலில் ஈடுபட்டது. புதிய சட்டங்களை இயற்றி எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையை மக்களுக்கு மறுத்தது.

1792 முதல் 1815 வரை இங்கிலாந்து, பிரான்ஸ் நாட்டுடன் போரில் ஈடுபட்டு வந்தது . இங்கிலாந்திற்கும் ஐரோப்பாவிற்கும் இடையேயான வாணிகம் தடைசெய்யப்பட்டது. தொழிற்சாலைகள் மூடும்படி வலியுறுத்தப்பட்டன. வேலைவாய்ப்பின்மை வளர்ந்தது. முக்கிய உணவுகளான ரொட்டி, இறைச்சி, ஆகியவற்றின் விலைகள் சராசரி கூலிகளை விட உயரத்தில் பறந்தது. பாராளுமன்றம் இரண்டு இணைந்த சட்டங்களை 1795 இயற்றியது. அதன்படி அரசியலமைப்புச் சட்ட அரசு அரசரை இழிவுபடுத்தும் மற்றும் வெறுக்கும் பேச்சு அல்லது எழுத்து மூலம் மக்களை தூண்டுதல் சட்டத்திற்கு புறம்பானது என்று கூறி, 50 நபர்களுக்கும் மேலாக உள்ள அதிகாரமற்ற பொதுக்கூட்டங்களை தடைசெய்தது. இருப்பினும் பழைய ஊழலை எதிர்த்து கிளர்ச்சி தொடர்ந்து நீடித்தது. 'பழைய ஊழல்' என்னும் சொல் முடியாட்சி மற்றும் பாராளுமன்றத்துடன் தொடர்புடைய சலுகைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களான நிலஉரிமையாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் பல்வேறு உயர்ந்த தொழில்களை மேற்கொள்பவர்கள் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்குவதை எதிர்த்தனர். அவர்கள் உணவு தானியச் சட்டங்களை ஆதரித்தனர்.

அவை பிரிட்டனில் விலைகள் ஒரு குறிப்பிட்ட அளவை அடையும் வரை மலிவான உணவுப் பொருட்களின் இறக்குமதியை தடுத்தன.

தொழிலாளிகள் நகரங்களிலும், தொழிற்சாலைகளிலும் வெள்ளம் போல் திரண்டு தங்களுடைய கோபம் மற்றும் மனவெழுச்சியை பல்வேறு வடிவிலான எதிர்ப்புகளாக

- உழைப்பாளர்கள் உணவுதானிய சட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர ஆதரவு தெரிவித்தது ஏன் என நீ நினைக்கிறாய்? மேலும் நில உரிமையாளர்கள் ஏன் அதற்கு ஆதரவு தெரிவித்தனர்?
- இந்தியாவிலும் இது போன்ற சட்டங்கள் நம் விவசாயிகளை மலிவான விவசாயப் பொருட்களை இறக்குமதி செய்யும் போட்டியிலிருந்து அவர்களைக் காத்து அவற்றை முடிவுக்குக் கொண்டுவந்தன. நம் நாட்டின் ஏழை மக்கள் அதுபோன்ற இறக்குமதிகளால் நன்மை அடைந்தனர் என்று நீ கருதுகிறாயா?

SCERT TELANGANA


வெளிப்படுத்தினர். 1790களிலிருந்து நாடெங்கிலும் ரொட்டி அல்லது உணவுக்கான போராட்டங்கள் நடந்தன. ஏழைகளின் முக்கிய உணவுப்பொருளாக ரொட்டி திகழ்ந்தது. அவற்றின் விலை அவர்களின் வாழ்க்கை தரத்தை தழுவிநின்றது. ரொட்டி இருப்புகள் பறிமுதல் செய்யப்பட்டு வாங்கக்கூடிய ஒரு குறிப்பிட்ட விலைக்கு விற்கப்பட்டது. அது லாபப் பசியோடு காத்திருந்த வியாபாரிகளால் நிர்ணயிக்கப்பட்ட உயர்ந்த விலையை விட ஒழுக்க நெறியிலான சரியான விலையாக இருந்தது. இதுபோன்ற கலகங்கள் 1795ஆம் ஆண்டின் மிக கொடுமையான போரின் போது அடிக்கடி நடந்தன. ஆனால் அவை 1840கள் வரை தொடர்ந்தன. கொடுமைக்கு மற்றொரு காரணமாக ‘இணைப்பு’ என்று வழங்கப்பட்ட செயல்முறை இருந்தது. இதன் மூலம் 1770களில் நூற்றுக் கணக்கான சிறிய பண்ணைகள் அதிகாரம் மிக்க நிலச்சுவாந்தார்களின் பெரிய பண்ணைகளுடன் இணைக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட ஏழை கிராமத்துக் குடும்பங்கள் தொழிற்சாலை வேலையைத் தேடவேண்டியதாயிற்று. ஆனால் பருத்தித் தொழிலில் இயந்திரங்களை அறிமுகப்படுத்தியதால் ஆயிரக் கணக்கான கைத்தறி நெசவாளர்கள்; பணியிலிருந்து வெளியேற்றப்பட்டு வறுமையில் தள்ளப்பட்டனர். ஏனெனில் அவர்களின் உழைப்பு இயந்திரங்களுடன் ஒப்பிடும் போது போட்டியிட முடியாத அளவிற்கு மிகவும் வேகம் குறைவானதாக இருந்தது. 1790களிலிருந்து இந்த நெசவாளர்கள் ஒரு சட்டரீதியான குறைந்தபட்ச கூலியை தரும்படி வேண்டினாலும் பாராளுமன்றம் அதை மறுத்தது. அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது இராணுவத்தைக் கொண்டு அவர்களை கலையச்செய்தது. ஏமாற்றமடைந்த பருத்தி நெசவாளர்கள் லங்காஷையரில் தங்களுடைய வாழ்வாதாரத்தை அழித்ததாக அவர்களால் நம்பப்பட்ட விசைத்தறிகளை அழித்தனர்.

- உழைப்பாளர்களால் இயந்திரங்களை உடைத்த செயல் அவர்களுக்கு எந்த அளவிற்கு உதவியாய் இருந்தது என்று நீ கருதுகிறாய்?
- இயந்திரங்களை உடைத்த உழைப்பாளர்களுக்கு தூக்கு தண்டனை வழங்க அரசாங்கம் சட்டமியற்றியது. இது நியாயமானது என்று நீ நினைக்கிறாயா?
- புதிய இந்திரங்களை தொழிற்சாலைகளில் கொண்டு வந்ததால் சில உழைப்பாளர்கள் தங்கள் வேலையை இழந்தனர். இவ்வாறு ஏன் நடந்தது என நீ நினைக்கிறாய்? உழைப்பாளர்களுக்கு வேவலைவாய்ப்பை உருவாக்காமலேயே தொழில் நுட்பத்தை மேம்படுத்தும் வழிமுறைகள் உள்ளனவா?

யார்க்ஷையரில் மரபுவழியாக கையால் செம்மறியாடுகளின் உரோமங்களைக் கத்தரித்து உரோமம் வெட்டுபவர்களால் உரோமம் வெட்டும் கத்தரிக்கோல்கள் அழிக்கப்பட்டன. 1830கலகங்களின் போது விவசாயக் கூலியாட்கள் தானியங்களை அவற்றின் உமிகளிலிருந்து வேறுபடுத்தும் புதிய கதிரடிக்கும் இயந்திரங்களால் தங்கள் வேலைக்கு அவை அச்சுறுத்தலாக இருப்பதைக் கண்டனர். கலகக்காரார்கள் இந்த இயந்திரங்களை தூள் தூளாக உடைத்து நொறுக்கினர். அவர்களுள் ஒன்பது பேர் தூக்கிலிடப்பட்டனர். மேலும் 450பேர் கைதிகளாக ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பப்பட்டனர்.

## லுட்டிஸம்

லுட்டிஸம் என்று அழைக்கப்பட்ட இயக்கம் (1811–17) நற்குணம் கொண்ட தளபதியான நெட்லுட் என்பவரால் வழிநடத்தப்பட்டது. இது மற்றொரு வகையான எதிர்ப்புக்கு எடுத்துக்காட்டாகும். லுட்டிஸம் என்பது இயந்திரங்களை பின்னோக்கி இழிவாக பார்ப்பது மட்டுமன்று. அதில் பங்கு கொண்டவர்கள் குறைந்தபட்ச கூலி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் மீது கட்டுப்பாடு, இயந்திர வருகையால் வேலை இழந்தவர்களுக்கு வேலை தங்கள் கோரிக்கைகளை சட்டரீதியாக எடுத்துரைக்க வியாபார சங்கங்கள் அமைத்துக்கொள்ளும் உரிமை போன்றவற்றை வேண்டினர். இன்னும் தங்கள் உரிமைகளுக்காக போராட எந்தவொரு அதிகாரம் மிக்க



படம் 16.2: 1812ல் இயந்திரங்களை உடைக்கும் லுட்டிஸ்ட் தொழிலாளர்களைக் காட்டும் விளக்கப்படம்

வியாபார சங்கங்களை பெற்றிராத உழைப்பாளிகள் இயந்திரங்களையும் தொழிற்சாலை உரிமையாளர்களின் இருப்புகளையும் அழித்து விடுவதாக பயமுறுத்தியும் போராடி வந்தனர். பல சமயங்களில் தொழிற்சாலை உரிமையாளர்கள் உழைப்பாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நல்ல கூலியையும் வழங்கினர். உழைப்பாளர்களும் மேலும் பல நடுத்தர வகுப்பினருமான கடை உரிமையாளர்கள், தலைமை கைவினைக்கலைஞர்கள், தங்களுடைய வாழ்வாதாரத்தை கொள்ளையடிக்கவே தேவையற்ற இயந்திரங்களை அறிமுகப்படுத்தியதாக எண்ணினர். எனவே அதுபோன்ற எதிர்ப்புகளுக்கு அதிகஅளவில் சமுதாய ஆதரவு இருந்தது. பல இடங்களில் புரட்சி உழைப்பாளர்கள் தளபதி லுட்டின் பெயரில் தன்னிச்சையாக செயல்பட்டனர். மேலும் பிற பகுதிகளில் திட்டமிடப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த முறையிலான இரகசிய அமைப்புகள் செயல்பட்டன.

### பொதுவுடைமை


லுட்டிஸமானது அரசாங்கத்தாலும் இராணுவத்தாலும் ஒடுக்கப்பட்டு வந்தபோதும் உழைப்பாளிகளுக்கு ஒரு புதிய சமூக குறிக்கோளை வழங்குவதற்காக ஒரு புதிய சிந்தனைக் கருத்து உருவாகி வந்தது. அதுவே ‘பொதுவுடைமைக் கொள்கை’ ஆகும். பொதுவுடைமை என்றால் என்ன? அது தனியார் உரிமையை விட பொதுமக்களுக்கு சொத்துக்களின் மீது ஆதிக்கம் மற்றும் இயற்கை வளங்களின் மீது உரிமை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு கோட்பாடு. பொதுவுடைமைக் கருத்துப்படி, தனிமனிதர்கள் தனிமையில் வாழவோ அல்லது வேலை செய்யவோ கூடாது. ஆனால் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக்கொண்டு வாழலாம். மேலும், மக்களால் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்தும் ஒரு வகையில் ஒரு சமுதாயப் பொருளாகும். மேலும் ஒரு பொருளை உற்பத்தி செய்ய உதவிய ஒவ்வொருவருக்கும் அப்பொருளில் பங்கு உண்டு. ஆகவே முழு சமுதாயமும் சொத்தின் மீது உரிமை அல்லது சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களின் நன்மைக்காகவும் சொத்தின் மீது அதிகாரத்தையாவது பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு பொதுவுடைமையானது முதலாளித்துவத்தின் அடிப்படைக் கொள்கையிலிருந்து வேறுபடுகிறது. முதலாளித்துவம் என்பது உற்பத்திக்காரணிகளின் உரிமை தனியாரிடம் இருக்கும் மற்றும் என்ன உற்பத்தி செய்ய வேண்டும், உற்பத்தியின் பகிர்வு யாருக்குத் தரப்பட வேண்டும் என்பதில் சந்தையின் சுதந்திர செயல்பாடுகளையும் முதலாளியே கொண்ட கொள்கையாகும். பொதுவுடைமைவாதிகள் முறையிடுவது யாதெனில், முதலாளித்துவம் நேர்மையற்ற, ஏய்க்கக்கூடிய சொத்துக் குவிப்புகளுக்கும் ஒரு குறிப்பிட்ட சிலரின் கைகளிலேயே அதிகாரம் இருப்பதற்கும் வழிவகுக்கிறது. பின்னர் செல்வந்தர்கள் தங்களின் சொத்துக்களை பயன்படுத்தி சமுதாயத்தில் தங்களின் ஆதிக்கத்தை பலப்படுத்தும் அதிகாரத்தையும் பெறுகின்றனர். ஏனெனில் அதுபோன்ற மக்கள், செல்வந்தர்களாக இருப்பதால் அவர்கள் எங்கு, எப்படி வாழவேண்டும் என்று தேர்ந்தெடுத்துக்கொள்வதால் ஏழைகளுக்கான விருப்ப வாய்ப்புகள் குறைகின்றன. இதன் விளைவாக, தனிமனித சுதந்திரம் மற்றும் வாய்ப்பில் சமத்துவம் போன்ற சொற்றொடர்கள் முதலாளிகளுக்கு மட்டுமே பொருந்துவதாக உள்ளது. ஆனால், முதலாளிகளை வழியனுப்ப விரும்பும் உழைப்பாளி மக்களுக்கு, அவர்கள் வாழ வேண்டுமெனில் முதலாளிகளுக்கு சாவு மணியடிக்க மட்டுமே முடியும். பொதுவுடைமைவாதிகள் கண்டதைப் போன்று உண்மையான சுதந்திரம் மற்றும் உண்மையான சமத்துவத்திற்கு வளங்களின் கட்டுப்பாடு சமுதாயத்திடம் இருக்க வேண்டும். அது எந்த சமுதாயத்திற்கும் முன்னேற்றத்திற்கான அடிப்படையை வழங்கும். பொதுவுடைமை வாதிகள் மேலும் நம்புவது யாதெனில், சமமற்ற வளப்பகிர்வினை தருவதால், செல்வந்தர்களும் செல்வாக்கு படைத்தவர்களும் நியாய அல்லது அநியாய வழியாலும் தங்களுக்கு சாதகமாக முறையில் வளங்களை பெறுகின்றனர்.

பொதுவுடைமையின் சில அடிப்படைக் கூறுகள் பண்டைய காலசமத்துவஞானிகளான ‘பிளாட்டோ’ மற்றும் ‘தாமஸ் மூரின்’ படைப்புகளிலிருந்தும் காணமுடிகிறது. இந்த கொள்கைகளுடன் பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளை இணைக்கும்போது இவை ஆற்றல் மிக்கவையாக மாறுகின்றன.

‘பாபியோப்’ என்பவரும் பிற புரட்சியாளர்களும் முறையிட்டது யாதெனில் புரட்சியானது சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கொள்கைகளை நிறைவேற்ற தவறிவிட்டது என்பதாகும். சமத்துவம் என்னும் உயர்ந்த கொள்கையை பின்பற்றுவது என்பது தனியார் சொத்தினை அழிப்பதும் நிலத்தையும் அதன் விளைவுகளையும் பொதுமக்கள் சமமாக அனுபவிப்பது என்று பாபியோப் வாதாடுகிறார். இது போன்ற நம்பிக்கைகளால் அரசாங்கத்தை கவிழ்க்க சூழ்ச்சி செய்கிறார் என்று அவரை தூக்கிலிட வழிவகுத்தது. இருப்பினும் அவருடைய சிந்தனைகள், தொழிற்சாலை அமைப்பை எதிர்த்த சமூக எதிர்ப்பு இயக்கங்களின் ஒரு சந்ததிக்கே தூண்டுகோலாக அமைந்தன.


மற்றொரு முந்தைய பொதுவுடைமைச் சிந்தனையாளர் பிரான்சின் செயின்ட் சைமன் ஆவார். அவர் உற்பத்திச் சொத்துக்களின் உரிமைக்காக பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை. ஆனால் அவர், 'மையதிட்டமிடுதல்' வாயிலாக பொதுமக்கள் கட்டுப்பாட்டில் சொத்து இருக்க வேண்டும் என்று போதித்தார். மைய திட்டமிடுதலில் அறிவியலறிஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பொறியியலாளர்கள் சமுதாய தேவைகளையும் அவற்றை சந்திக்க சமூக சக்திகளை இயக்கவும் ஆவலுடன் எதிர்பார்ப்பர். அது போன்ற சிந்தனையாளர்கள் தொழிற்புரட்சியின் தாயகமான இங்கிலாந்திலும் தோன்றினர். இங்கு ஓவன் என்னும் பெயருடைய ஒரு சில தொழிலதிபர்கள், உழைப்பாளர்களின் நிலைமையையும் முதலாளிகளின் செல்வச் செழிப்பையும் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்தனர். அவர் கூட்டுறவு கிராமங்களை உருவாக்க அழைப்புவிடுத்தார். அது போன்ற கிராமங்களில் அனைத்தும் பொதுமக்களால் உரிமை கொண்டாடப்படும் மற்றும் மக்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக்கொண்டு வேலை செய்வர் மற்றும் தங்களுடைய உழைப்பால் உற்பத்தி செய்த பொருட்கள் ஆகியவற்றை பகிர்ந்து கொள்வர். இருப்பினும் இச்சிந்தனைகள் கருத்துக்கோட்பாடுகளாக அல்லது உடோபியக் கோட்பாடுகளாகவே இருந்துவிட்டன. ஏனெனில் பெரும்பாலான மக்கள் நினைத்தது யாதெனில், தொழில் உற்பத்தியின் வளர்ச்சிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ள இத்தருணத்தில், இச்சிந்தனைகள் நடைமுறைப்படுத்த முடியாத நல்ல கொள்கைகள்.




*படம் 16.3: உழைப்பாளர்களை ஒன்றுதிரட்டும் ஒரு வார இதழின் சுவரொட்டி*

கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரடெரிக் எஞ்செல்ஸ் ஒரு புதிய பொதுவுடைமை கோட்பாட்டை முதலீட்டாளர் தொழில் உற்பத்தியில் அவர்கள் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் வடிவமைத்தனர். முதலாளித்துவம் என்பது வரலாற்றில் ஒரு முன்னேற்ற சக்தியாகவும், உண்மையான மனித நேயத்திலிருந்து முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் இருவரையும் மாற்றக்கூடிய ஒரு முறையாகவும் உள்ளது. அது முன்னேற்றத்தன்மை வாய்ந்தது. ஏனெனில், அது உலகை தொழில்ரீதியாக உருமாற்றுவதில் வெற்றிகண்டது. ஆனாலும், அது ஏய்க்கக்கூடியதாக உள்ளது. முதலாளித்துவம், தொழிலாளர்களை கண்டிக்கிறது. ஏனெனில் அவர்களுக்கு தங்கள் உழைப்பாற்றலைத்தவிர சொந்தமாக ஏதுமில்லை. தங்கள் உழைப்பை பிழிந்து முதலாளிகளை லாபமடைய வைக்கின்றனர். மார்க்ஸ் நம்புவது யாதெனில், சிறிய அளவில் தொழில் உற்பத்தியானது மக்களை வாழவைக்கவோ வேலை செய்ய வைக்கவோ முடியாது. அவர்கள் எண்ணற்ற மக்களுடன் ஒத்துழைக்கும் போது மட்டுமே தங்கள் அடிப்படைத் தேவைகளுக்குத் தேவையான பொருட்களை கூட உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறு உற்பத்தி என்பது ஒருகுடும்பம் அல்லது ஒரு சிறு பண்ணை அல்லது ஒரு கிராமம் தொடர்புடைய விஷயத்திற்குப் பதிலாக அனைத்து சமூகப் பிரச்சனையாக உள்ளது. இது மனிதர்களுக்கு தங்களின் சொந்த வாழ்வுகளை சிறப்பாக்கிக்கொள்ள அவர்களின் கைகளில் அளவுக்கதிகமான ஆற்றலை தந்துள்ளது.

SCERT TELANGANA



கார்ல் மார்க்ஸ்

ஆனால் அதை அவர்கள் தங்களுடைய கூட்டு நலத்திற்காக மட்டுமே செய்ய முடியும்.



பிரடெரிக் ஏஞ்சல்ஸ்

மார்க்ஸ் மற்றும் பிரடெரிக் ஏஞ்சல்ஸ் ஆகியோர் விவாதிப்பது என்னவென்றால் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும் உழைப்பாளிகளுக்கு எந்த சொத்தும் கிடையாது மற்றும் அதே சமயம் உற்பத்தி நடைபெற வேண்டுமாயின் அவர்களின் உதவி மிகவும் இன்றியமையாதது. ஆனாலும் முதலாளித்துவ அமைப்பு தொடர்ந்து லாபம் சம்பாதிக்க அவர்கள் சுரண்டப்படுகிறார்கள். இது உழைப்பாளர்களை தங்கள் நல்ல கூலிகளுக்காக போராடும்படி வலியுறுத்துவதோடு முதலாளித்துவ அமைப்பையே முடிவுக்குக் கொண்டுவருவது அவசியமாகிறது என்றும் வலியுறுத்துகிறது. உழைப்பாளிகள் அனைத்து தொழிற்சாலைகளையும் பிற வளங்களையும் தாங்களே எடுத்துக்கொண்டு அதை பொது நன்மைக்காக நடத்தினால் ஒரு புதிய மற்றும் சமத்துவ சமுதாயத்திற்கான அடித்தளங்கள் அமைக்கப்படும். அவர் விவாதிப்பது என்னவென்றால் உழைப்பாளிகள் தங்களுக்கு தாங்களாகவே ஒருங்கமைத்து, பிரெஞ்சுப் புரட்சியின்போது நிலப்பிரபுக்களையும் அரசர்களையும் மக்கள் எவ்வாறு விரட்டியடித்தனரோ அதே போல் உழைப்பாளிகளும் முதலாளிகளை துரத்தியடிக்க வேண்டும். அரசு இயந்திரத்தை உழைப்பாளிகள் எடுத்துக்கொண்டு, உழைப்பாளர் அரசை அமைக்க வேண்டும். அவ்வரசு அனைத்து தொழிற்சாலைகளையும் நிலங்களையும் தனக்கு சொந்தமாக்கிக் கொண்டு அனைவருக்கும் நன்மை தரக்கூடிய திட்டமிட்ட அடிப்படையில் உற்பத்தியை மேற்கொள்ளவேண்டும்.

மார்க்ஸ் மற்றும் எஞ்செல்ஸ் ஆகியோரின் சிந்தனைகள் புரட்சிச் சிந்தனையாளர்களின் மீதும், செயல்வீரர்கள் மீதும் ஒரு பெரும் தாக்கத்தை 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்படுத்தி, 20ஆம் நூற்றாண்டின் முக்கிய சமூக இயக்கங்களுக்கு உந்துதலாக அமைந்தன. அதே நேரத்தில் பெரும்பாலான மற்றும் புரட்சி சிந்தனையாளர்கள் கார்ல் மார்க்ஸின் எண்ணற்ற கருத்துக்களை ஏற்க மறுத்து அராஜகம் போன்ற புதிய கோட்பாடுகளை எடுத்துரைத்தனர்.

பொதுவுடைமைக் கருத்துகள் மிகவும் பழமையான நாட்களிலிருந்தே இந்தியாவிற்கு வந்தது. சுவாமி விவேகானந்தர் ஐரோப்பா மற்றும் அமெரிக்க கண்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது பொதுவுடைமைச் சிந்தனைகள் அவரை மிகவும் கவர்ந்தன. தேசிய இயக்கம் வலுவடைந்து வளர்ந்த போது பல தேசியவாதிகளும் பொதுவுடைமைக் கொள்கையால் கவரப்பட்டனர். 1917ல் நடந்த ரஷ்ய கம்யூனிஸப் புரட்சியின் முடிவில் ஏற்பட்ட புரட்சி அரசு, அனைத்து தேசியவாத காரணங்களையும் தான் ஆதரிப்பதாக அறிவித்ததால், அது நம் இந்திய தேசியவாதிகளுக்கு உற்சாகத்தின் பெரிய வளமாக இருந்தது. இந்திய தலைவர்களான M.N. ராய், பகத்சிங், ஜவகர்லால் நேரு, போன்றோர் உற்சாகமான பொதுவுடைமை வாதிகளாவர். இந்திய நகரங்களிலும் தொழிற்சாலை உற்பத்தி முன்னேற்றமடைந்ததால் உழைப்பாளர்களிடையே பல வியாபார சங்கங்களை பலதலைவர்கள் அமைத்தனர். அவர்களும் மார்க்ஸ் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டதோடு 1920களில் இந்தியாவில் கம்யூனிஸக் கட்சியைத் தொடங்கி வைத்தனர்.

- மார்க்ஸின் பொதுவுடைமைக் கொள்கை எவ்வழிமுறையில் லுட்டிஸக் கருத்துக்களை ஏற்க மறுத்தது?
- தொழிற்சாலை உற்பத்தி சிறந்ததாகவும் விரும்பத்தக்கதாகவும் உள்ளது என மார்கிஸ் ஏன் கருதினார்?
- மார்க்ஸ்க்கும் முந்தைய பொதுவுடைமை வாதிகளுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு யாது?

## பெண்களின் இயக்கம்

இடைக்காலத்திலும் நவீனகாலத்தின் முற்பகுதியிலும் ஐரோப்பா உள்ளிட்ட உலகம் முழுவதும் பெண்கள் ஆண்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டனர். அவர்களுக்கு சொத்துவசதிகள் அல்லது குடியுரிமைகளான வாக்களிப்பு போன்ற உரிமைகள் இல்லை. அவர்கள் பெரும்பாலும் வீட்டுப்பணிகளான சமைத்தல், குழந்தைகளை வளர்த்தல், வீட்டில் பெரியவர்களை கவனித்துக்கொள்ளுதல், வேலை செய்வதில் ஆண்களுக்கு உதவுதல் போன்றவற்றிலேயே அடைபட்டுக்கிடந்தனர். தொழில்மயமாக்கலால் அதிக

SCERT TELANGANA

எண்ணிக்கையில் தொழிற்சாலைகளில் பெண்கள் வேலை செய்யத் தொடங்கியதால் இந்நிலை மாறத் தொடங்கியது. வீட்டிலிருந்து வெளியேவந்து வேலை செய்து பொருளீட்டியதால் அவர்கள் தங்களுக்கென ஒரு புதிய அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டதோடு சமுதாயத்திலும் தங்களின் பங்கை அதிகரித்துக்கொண்டனர். மனிதர்கள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அனைவரும் சமம் என்னும் கொள்கையை பெண்கள் வலியுறுத்தத் தொடங்கினர்.

பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் 1791ல் ஆண்களின் உரிமை அறிவிப்பைத் தயாரித்தபோது பல பிரெஞ்சுப் பெண்கள் அதை எதிர்த்துப்போராடி பெண்களின் உரிமை அறிவிப்பை தனியாக வரைந்துகொண்டனர். பெண்கள் சுதந்திரமாகப் பிறந்து உரிமைகளில் ஆண்களுக்குச் சமமாக விளங்குகின்றனர். சமுதாய வேற்றுமைகள் பொதுப்பயன்பாட்டின் மீது மட்டுமே ஆதாரப்பட்டுள்ளது. பெண்கள் உள்ளிட்ட அனைத்துக் குடிமக்களும் அனைத்து பொதுத் தகுதிகளுக்கும் அலுவலகங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கும் அவர்களின் திறமைக்குத் தக்கவாறு சமமாக அனுமதிக்கப்படுவர். அவர்களின் நற்குணங்கள் மற்றும் திறமைகளைத் தவிர பிறவேறுபாடுகள் ஏதுமில்லை என்று பெண்களின் உரிமை அறிவிப்பு தெரிவிக்கிறது. இருப்பினும் பிரெஞ்சு பாராளுமன்றம் இந்த அறிவிப்பை எப்போதும் நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. எனினும், பெண்கள் ஆண்களுக்குச் சமமானவர்களாகக் கருதப்பட வேண்டும் என்னும் கொள்கையானது, வாக்களிப்பின் மூலம் அரசாங்கத்தில் பங்குபெறும் உரிமை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். பொதுப்பதவிகளை வகித்தல் என்பதும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெண்களின் இயக்கத்தின் குறிக்கோள்களாக இருந்தன.

மக்கள் தொகையின் அனைத்து பிரிவினருக்கும் வாக்களிக்கும் உரிமையை விரிவாக்கம் செய்வதற்கான இயக்கம் 1830 முதல் 1870வரை சூடுபிடித்தது. இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெருமளவிலான எண்ணிக்கையில் பெண்கள் வாக்களிக்கும் உரிமையைக் கோரினர். அவர்கள் பெண்களின் வாக்குரிமை கோருபவர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டங்களையும், கூட்டங்களையும் நடத்தி, செய்தித்தாள்களில் எழுதியும் பாராளுமன்றத்திற்கு மேல் முறையீடு செய்தும் வந்தனர். அதுபோன்ற உரிமைகளை 1917ல் ரஷ்யப்புரட்சி பெண்களுக்கு முதன் முதலில் வழங்கியது. 1918ல் இங்கிலாந்தில் சில பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. 1928க்குள் வயது வந்த அனைத்து பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. படிப்படியாக இதை பெரும்பாலான மக்களாட்சி நாடுகளும் ஏற்றுக்கொண்டன.

பொது விஷயங்களில் பெண்கள் அதிகமாக பங்குபெற்றதால், கல்வி, அல்லது சுகாதாரம், அல்லது சொத்துரிமைகள் அல்லது வேலைவாய்ப்பு போன்ற பலபிரிவுகளில் பெண்கள் சமமின்மையாக நடத்தப்படுவது தொடர்கிறது என்பதை அவர்கள் உணர்ந்தனர். ‘வர்ஜினியா உல்ப்’ போன்ற பல பெண் எழுத்தாளர்கள் பெண்களின் மீது ஆண்கள் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்பதையும் இந்த ஆதிக்கத்திற்கு பெண்கள் தாங்களே எவ்வாறு கருவிகளாக மாறுகின்றனர் என்பதையும் எழுதினர். பெண்கள் இயக்கத்தின் ஒரு புதிய நிலை இரண்டாம் உலகப்போருக்குப்பின் வளர்ச்சியடைந்தது. அது வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் பெண்களின் சமத்துவத்தைப் பெறுவவதில் கவனத்தை செலுத்தியது. கலாச்சார மற்றும் அரசியல் சமமின்மைகளிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாத வகையில் இருந்ததை அவர்கள் கண்டதால் அதை எதிர்த்து போராட முகாம்களை அவர்கள் அமைத்தனர். இந்த இயக்கம் பெண்களை அதிக அளவில் அரசியல் மயமாக்கப்பட்ட தங்கள் சொந்த தனிப்பட்ட வாழ்க்கை முறைகளின் கூறுகளை புரிந்துகொள்ள உற்சாகப்படுத்தியது. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே சமமற்ற ஓர் அதிகாரப் பகிர்வு இருப்பதையும் அவர்களுக்கு இவ்வியக்கம் தெரிவித்தது. முதற்கட்ட பெண் கொள்கை முழுமையான உரிமைகளான வாக்குரிமை போன்றவற்றின் மீது கவனத்தை செலுத்தினால், இரண்டாம் கட்ட பெண் கொள்கை சமத்துவத்தின் பிற பிச்சனைகளான கல்வி மற்றும் ஆரோக்கியம் உள்ளிட்ட வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் உள்ள வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவது போன்றவற்றின்மீது பெரிதும் அக்கறை செலுத்தும்.

‘சதி,’ ‘பிறப்பிலேயே பெண் குழந்தையைக் கொல்லுதல்,’ வாழ்க்கைக்காக ‘விதவைத் தன்மையை’ கட்டாயப்படுத்துவது போன்றவற்றை முடிவுக்குக்கொண்டுவரவும் மற்றும் பெண்களுக்கு நவீன கல்வியை வழங்குவது போன்றவற்றிற்காக 19ஆம் நூற்றாண்டில் இந்திய சீர்திருத்தவாதிகளின் போராட்டங்களைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். பெண்களிடையே கல்வி வளர்ந்ததால் பொது வாழ்க்கையில் பல பெண்கள் பங்குபெற முடிந்தது மற்றும் மற்ற பெண்களையும் அவர்களைப் போலவே சீரமைக்கவும் முடிந்தது. இது இந்தியாவிலும் பெண்களின் இயக்கம் வளர வழிவகுத்தது.

SCERT TELANGANA

பெண்கள் தேசிய இயக்கத்தில் பங்குகொண்டனர். இவ்விசயத்தில் பெண்களின் முக்கியத்துவத்தை காந்தியடிகள் போன்ற தலைவர்கள் வலியுறுத்தினர். ஆயிரக்கணக்கான பெண்கள் விடுதலை இயக்கத்தில் இணைந்து தேசியவாதிகளின் சிந்தனைகளை வடிவமைப்பதில் உதவிபுரிந்தனர். அதன் விளைவாக இந்தியா விடுதலை அடைந்தவுடன் பெண்களுக்கு ஆண்களை போலவே முழு சட்டப்பூர்வமான சமத்துவம் தரப்பட்டது. சொத்துச் சட்டங்கள் போன்றவற்றில் அவர்களுக்கு எதிரான வேறுபாடுகளை முடிவுக்கு கொண்டு வரவும் இவ்வியக்கம் போராடியது.

சட்டப்பூர்வமான சமத்துவம் அடையப்பட்டாலும் இந்தியா உள்ளிட்ட உலகம் முழுவதும் உண்மையான சமத்துவத்தை பெண்கள் இன்னும் அடையவில்லை. இதற்கான காரணத்தை புரிந்துக்கொள்ளக்கூடிய மற்றும் உண்மையான, மற்றும் சிறந்த சமத்தவத்தைக் கொண்டுவரவும் பெண்கள் இயக்கத்தின் புதிய அலை உருவாகி வருகிறது. பெண்களின் மீதுள்ள ஆண்களின் எண்ணங்கள் மாறவேண்டும்.

## முக்கியச்சொற்கள்

1. பொதுவுடைமை 2. லுட்டிஸம் 3. கற்பனைவாதம் 4. பெண்ணியல்
5. முதலாளித்துவம் 6. புரட்சியாளர்கள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. தொழிற்சாலை உழைப்பாளிகளின் வாழ்க்கை பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எவை சரியானவை? தவறான கூற்றுகளை திருத்திஅமை.(AS1)
   - தொழிற்சாலைகளை உழைப்பாளிகள் கட்டுபடுத்தினர்
   - உழைப்பாளிகளின் வாழ்க்கை நிலைகள் வசதிபடைத்தவையாக இருந்தன
   - உழைப்பாளிகளிடையே அதிருப்தி ஏற்பட குறைந்த ஊதியங்கள் ஒருகாரணமாக இருந்தது.
   - தொழில்மயமாக்கல் காலகட்டத்தில் மனைவெழுச்சிகளுக்கும் உணவுகளுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது.
   - கற்பனைவாத எழுத்தாளர்களும் கலைஞர்களும் நாட்டுப்புறக் கதைகளிலும் நாட்டுப்புற பாடல்களிலும் விவரிக்கப்பட்டதைப் போன்று இயற்கையுடன் தொடர்புடைய மதிப்புகளை உயர்த்திக்காட்ட முயன்றனர்.
2. அக்காலங்களில் உழைப்பாளர்களால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சனைகள் சிலவற்றை பட்டியலிடு. நம் காலத்திலும் அதுபோன்ற பிரச்சினைகள் இருந்தால் அதைக்குறித்து கலந்துரையாடு?(AS4)
3. முதலாளித்துவம் மற்றும் பொதுவுடைமைக் கொள்கைகளை ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுது. அவையிடையே உள்ள ஒற்றுமைகள், வேறுபாடுகள் யாவை?(AS1)
4. பெண்கள் மற்றும் உழைப்பாளர் இயக்கங்களால் சவால் விடப்பட்ட சமத்துவக் கொள்கை எவ்வாறு ஒற்றுமையாக அல்லது வேற்றுமையாக இருந்தது?(AS1)
5. உழைப்பாளர்கள் மற்றும் பெண்களை உள்ளடக்கிய சுதந்திரம் சமத்துவம் மற்றும் நீதிக் கொள்கைகளை விளக்கிக் கூறும் ஒரு சுவரொட்டியை வரை. இக்கொள்கைகள் மீறப்பட்டு வரும் சந்தர்ப்பங்களை அடையாளம் காண்க.(AS6)
6. எதிர்ப்பு இயக்கங்கள் நடைபெற்ற நாடுகளை உலக வரைபடத்தில் குறிக்கவும்(AS5)
7. பக்கம் 196ல் உள்ள கடைசி இரண்டு பத்திகளை படித்து விவாதியுங்கள்.(AS2)

## செயல்திட்டம்

உனது பகுதியில் செயல்படும் சமுதாய எதிர்ப்பு இயக்கங்கள் யாவை? அவற்றின் தலைவர்களிடம் அவர்களின் கொள்கைகளைப் பற்றி நேர்காணல் நடத்து. அந்நேர்காணலை அடிப்படையாகக் கொண்டு ஒரு அறிக்கையை தயாரித்து, வகுப்பறையில் படித்துக்காட்டு.

SCERT TELANGANA

பாடம்
15

# இலத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் காலனி ஆதிக்கம்

## ஐரோப்பாவின் விரிவாக்கமும், முந்தைய காலனி ஆதிக்கமும்

கீழே தரப்பட்டுள்ள உலகப்படத்தைப் பார். இது 600 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பியர்களுக்கு தெரிந்த உலகத்தைக் காட்டுகிறது.



*புறவரிப்படம் 1: ஜெனோஸ் என்று வழங்கப்பட்ட உலகப்படம் கி.பி.1400ல் ஐரோப்பியர்கள் அறிந்தது*

600 ஆண்டுகளுக்கு முன் உலகமக்கள் மிகவும் சொற்பமாகவே பயணம் செய்தனர். அவர்கள் பொதுவாக குதிரைகள் அல்லது ஒட்டகங்களின் முதுகுகளின் மீதும் அல்லது சிறு படகுகள் மற்றும் கப்பல்களிலும் கடற்கரையோரங்களில் பயணம் செய்தனர். இருப்பினும் மக்களுக்கும் நாடுகளுக்கும் இடையிலான தொடர்பு வியாபாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தொடங்கியது. அவர்கள் உலகமெங்கிலும் பயணம் செய்து அந்நியப் பொருட்களை வாங்கி அவற்றை உயர்ந்த விலைக்கு விற்றனர். சீனாவின் பீங்கான் பாண்டங்களுக்கும், இந்தியாவின் பருத்தி ஆடைகள், எஃகு மற்றும் வாசனை பொருட்களுக்கும் அரேபியாவின் பழங்கள் மற்றும் வாசனை திரவியங்களுக்கும் ஐரோப்பாவின் மதுபானங்களுக்கும் உலகமெங்கிலும் அதிக அளவில் தேவைஇருந்தது. வியாபாரிகள் பொதுவாக அவற்றை வாங்கி மற்றவர்களுக்கு விற்கும் போது தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்களை பண்டமாற்றமாகப்பெற்று அதிக அளவில் இலாபமடைந்தனர். இந்த அதிக லாபத்தால் வியாபாரிகளில் சிலர் அரசர்களைவிடவும் செல்வந்தர்களாகத் திகழ்ந்தனர்.

- எந்த கண்டங்களைப் பற்றி அவர்களுக்கு தெரியவில்லை?
- எந்த கண்டங்களின் கடற்கரைப் பகுதிகளைத் தவிர அவற்றின் உட்புறப்பகுதிகள் அவர்களுக்குத் தெரியவில்லை?

கி.பி.1400ல் பெரும்பாலான வியாபார வழிகள் ஐரோப்பாவையும் ஆசியாவையும் இணைத்தன. அவை முஸ்லீம் அரசுகளால் குறிப்பாக ஆட்டோமான் பேரரசால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. அவ்வரசு ஐரோப்பிய கிறிஸ்துவ சக்திகளை எதிர்த்து தொடர்ந்து போரில் ஈடுபட்டு வந்தது. இத்தாலியர்கள் எகிப்தின் அலெக்சாண்டிரியாவிற்கு ஆசியப் பொருட்களைக் கொண்டு வந்த அரேபிய வணிகர்களுடன் புரிந்துகொள்ளுதலை ஏற்படுத்திக் கொண்டனர்.

SCERT TELANGANA

அதனால் அரேபியர்கள் தங்கள் பொருட்களை இத்தாலியர்களுக்கு விற்றனர். வணிகர்களும், ஹாலந்து, ஸ்பெயின், போர்ச்சுகள் மற்றும் இங்கிலாந்து போன்ற மேற்கு ஐரோப்பிய அரசுகளும் வியாபாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்ததால் அவர்கள் இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கு இத்தாலிய வணிகர்களால் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளின் வழியாகச் செல்லாமல் வேகமான மற்றும் எளிமையான வழிகளைக் கண்டறிய விரும்பினர். ஸ்பெயின் நாட்டினர் அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து இந்தியாவை அடையும் வழியை கண்டறிய விரும்பினர். அவர்கள் அனுபவமிக்க கடற்பணிகளை அதிகமாக செல்வத்தைக் கொண்டு அவர்களுக்கு கடல்வழி கண்டறியும் ஆய்வினை மேற்கொள்ள கப்பல்களையும் பிற வளங்களையும் தந்தனர். இது 1492ல் 'கிறிஸ்டபர் கொலம்பஸ்' மத்திய அமெரிக்காவை கண்டறிய வழிவகுத்தது. 1498ல் வாஸ்கோடகாமாவால் ஆப்ரிக்காவைச் சுற்றிக்கொண்டு இந்தியாவிற்கு கடல் வழியைக் கண்டறியவும் வழி வகுத்தது. கொலம்பஸ் ஸ்பெயின் நாட்டின் அரசிக்காகவும், வாஸ்கோடகாமா போர்ச்சுகீசிய அரசிக்காகவும் பணியாற்றினர். விரைவிலேயே ஆங்கில மற்றும் டச்சு அரசுகளும் தங்களின் கடற்பணிகளை இப்பகுதிகளுக்கு அனுப்பி வந்தனர்.

- இத்தாலியர்கள் 1400ல் ஆசியாவுடனான வாணிகத்தை ஏன் கட்டுப்படுத்தி வந்தனர் என நீ நினைக்கிறாய்? பிற ஐரோப்பியர்களான போர்ச்சுகீசியரும் ஸ்பெயின் நாட்டினரும் ஏன் அவ்வாறு செய்யவில்லை?
- போர்ச்சுகீசியரும் ஸ்பெயின் நாட்டினரும் ஆசியாவை அடைய பிற வழிகளை கண்டறிவதில் ஏன் ஆர்வமுடன் இருந்தனர்?

## அமெரிக்காவில் ஐரோப்பிய குடியேற்றங்கள்

நாம் இன்று மேற்கிந்தியத் தீவுகள் என்று அழைக்கும் தென் அமெரிக்க கடலோர தீவுகளில் கொலம்பஸ் தரை இறங்கினார். அவர் தான் இந்தியாவை அடைந்துவிட்டதாக நினைத்து மக்கள் சிவப்பாக இருந்ததால் அங்குள்ள மக்களை செவ்விந்தியர்கள் என்று அழைத்தார். (எனவேதான் அமெரிக்காவின் முதல் குடிமக்கள் இன்று 'உள்ளூர் இந்தியர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர்) அவர்கள் வந்தவர்களை வரவேற்று உணவும் இருப்பிடமும் தந்த எளிய பழங்குடி மக்களாவர். இருப்பினும் ஸ்பெயின் நாட்டினர் அவர்களை அடிமைப்படுத்தியதோடு மட்டுமின்றி அவர்களைச் சுரண்டி உணவு உற்பத்தி செய்யவும் சுரங்கங்களிலிருந்து தங்கத்தைப் பெறவும் அடிமைத் தொழிலாளர்களாக மாற்றிவிட்டனர். படிப்படியாக அத்தீவுகளிலிருந்து அனைத்து உள்ளூர்வாசிகளும் இறந்தனர் அல்லது கொல்லப்பட்டனர்.



படம் 15.1: 1843ல் இமானுவேல் காட்லீப்லூட்சால் கற்பனையாக வடிவமைக்கப்பட்ட சித்திரம். அரசியின் முன் கொலம்பஸ்.


கொலம்பஸ் இறந்தபின் ஸ்பெயின் அரசு அமெரிக்காவை கைப்பற்றவும், சூறையாடவும் பல படையெடுப்புகளை அனுப்பியது. அவர்கள் தங்கம் மற்றும் வெள்ளிச் சுரங்கங்களையும் உள்ளூர் அரசர்களிடம் இந்த உலோகங்கள் அதிக அளவில் கிடைக்கும் எனவும் எதிர்பார்த்தனர். 'கார்டெக்ஸ்' என்னும் ஒரு ஸ்பெயின் முற்றுகையாளர் ஒரு படையை வழிநடத்திச் சென்று மெக்சிகோவைச் சூறையாடி அந்நாட்டு மக்களை படுகொலை செய்தார். அவர் படிப்படியாக உள்ளூர் அரசரைக் கொன்று மெக்சிகோவின் சுதந்திர ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அதே போன்று மற்றொரு முற்றுகையாளரான

TELANGANA

‘பிஜாரோ’ என்பவர் பெருவை சூறையாடி அதை கைப்பற்றினார்.

விரைவிலேயே ஆங்கிலேயர்களும், வட அமெரிக்காவில் தரைஇறங்கி கிழக்கு கடலோரங்களில் ஆங்கில விவசாயிகளின் குடியேற்றங்களை அமைத்துக் கொள்ளத் தொடங்கினர். உள்ளூர் அமெரிக்கர்கள் பெரும்பாலும் நட்புறவாக நடந்துகொண்டு ஐரோப்பியர்களுக்கு தங்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கினர். இதே நேரத்தில் இங்கிலாந்தில் சிறு விவசாயிகள் நிலச் சுவாந்தார்களால் தங்களின் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்விவசாயிகளுள் பெரும்பாலானோர் வட அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்து அங்கு நிலையான குடியேற்றங்களை அமைத்துக்கொள்ள விரும்பினர். அவர்கள் உள்ளூர் அமெரிக்கர்களை தங்களின் நிலங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றியும் அவர்களை படுகொலை செய்தும், உட்புறப் பகுதிகளுக்கு அவர்களை விரட்டியடித்தும் வந்தனர்.

அமெரிக்காவின் இயற்கை வளங்களைப் பற்றிய செய்தி அமெரிக்க மக்களைச் சென்றடைந்ததும், பேராசை கொண்ட குடியேறிகள் அமெரிக்காவிற்குப் புறப்பட்டது. அவர்கள் உள்ளூர் மக்களை விரட்டியடித்து அவர்களின் நிலங்களைப் பறித்துக்கொண்டனர். தொடக்க கால படுகொலை மற்றும் சூறையாடுதல் ஐரோப்பியர்களுக்கு தணிந்தபின் அவர்கள் அமெரிக்காவில் குடியேறவும் அதனுடைய இயற்கை வளங்களை சுரண்டவும் விரும்பினர். இருப்பினும் பணிகளைச் செய்ய அவர்களுக்கு அடிமைத்தனமான உழைப்பு தேவைப்பட்டது. உள்ளூர் அமெரிக்கர்களை எளிதில் அடிமைப்படுத்த முடியாது என்று அவர்கள் உணர்ந்தனர். அதனால் ஐரோப்பிய (குறிப்பாக போர்ச்சுகீசியர்கள்) வணிகர்கள் மற்றும் அவர்களின் பதிலாள்களால் ஆப்ரிக்காவின் உட்புறப் பகுதிகளிலிருந்து பிடித்துவரப்பட்ட எண்ணற்ற ஆப்ரிக்க அடிமைகள் அமெரிக்காவிற்கு மிகவும் மனிதநேயமற்ற நிலையில் கொண்டுசெல்லப்பட்டனர். அவர்கள் பெரிய நிலச்சுவாந்தார்களுக்கும் மற்றவர்களுக்கும் விற்கப்பட்டனர். 15 முதல் 20 மில்லியன் ஆப்ரிக்க அடிமைகள் பலவந்தமாக அமெரிக்காவிற்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் கரும்புப் பண்ணைகளிலும், மக்காச் சோள வயல்களிலும், புகையிலைத் தோட்டங்களிலும் மற்றும் பருத்தி வயல்களிலும் பணியாற்றும்படி பணிக்கப்பட்டனர். அவர்களின் உற்பத்திப் பொருட்கள் இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அதிக லாபங்களுக்கு விற்கப்பட்டன.





*படம். 15.2:கப்பலின் கீழ்தளத்தில் 292 அடிமைகள் அடைத்துவைக்கப்பட்டுள்ளதை காட்டும் விளக்கப்படம்.*

## இலத்தீன் அமெரிக்கா

கி.பி.1500 முதல் 1800 வரையிலான முன்னூறு ஆண்டுகளின் போது மத்திய மற்றும் தென் அமெரிக்காவின் பெரும்பான்மையான பகுதிகள் ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. ஸ்பானிஷ் மற்றும் போர்ச்சுகீசிய மொழிகள் இலத்தீன் மொழியிலிருந்து தோன்றியவை என்று கருதப்படுவதால் மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகள் இலத்தீன் அமெரிக்க நாடுகள் என அழைக்கப்படுகின்றன. ஏறக்குறைய கண்டத்தின் முதன்மை உள்ளூர் வாசிகளில் பாதிபேர் ஐரோப்பியர்களால் கொல்லப்பட்டும் அல்லது ஐரோப்பியர்களால் கொண்டுவரப்பட்ட நோய்களால் இறந்து போயினர். ஐரோப்பாவிலிருந்து வந்த எண்ணற்ற மக்கள் அங்கு குடியேறியதோடு ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளையும் விலைக்கு வாங்கினர்.

வழிந்தோன்றல்களடங்கிய ஒரு கலவையாக உள்ளனர். மக்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள் அல்லது ஆப்ரிக்கர்களை மணந்துகொண்ட ஐரோப்பியர்களான கலவையினப் பெற்றோர்களின் வழித்தோன்றல்களேயாவர். உள்ளூர் இந்தியர்களில் பெரும்பாலானவர்கள்

- 1800ஆம் ஆண்டில் பல்வேறு நாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்ட தென் அமெரிக்க நாடுகளைக் காண்க.




*நிலப்படம் 2: 1800ல் தென் அமெரிக்கா*

கொல்லப்பட்டதாக நாம் அறிந்தோம். பல சிறிய பழங்குடி சமூகத்தினர் ஸ்பெயின் கட்டுப்பாட்டின் கீழ்வந்தனர். அவர்கள் மீது அதிக வரி விதிக்கப்பட்டது. ஸ்பானிஷ்யருக்கு சொந்தமான பண்ணைகள் மற்றும் சுரங்கங்களில் வேலை செய்யப்பணிக்கப்பட்டனர். அவர்களுக்குச் சொந்தமான, பெரும்பாலான கோயில்கள் அழிக்கப்பட்டன. அவர்கள் அனைவரும் ரோமன் கத்தோலிக்க மதத்தை தழுவும்படி செய்யப்பட்டனர். தென் அமெரிக்காவில் 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டில் இந்தியர்களால் பல சிறிய மற்றும் பெரிய கிளர்ச்சிகள் நடத்தப்பட்டன. ஆனால் இவை இரக்கமற்ற முறையில் ஒடுக்கப்பட்டன. ஏனெனில் ஸ்பானிஷ்யரிடம் இருந்ததைப் போல் அவர்களிடம் ஆயுதங்கள் இல்லாமல் இருந்ததே ஆகும்.

பெரும்பாலான ஸ்பானிஷ் ஆளுகைக்குட்பட்ட நாடுகளில் அனைத்து அதிகாரங்களும் (ஸ்பெயின் தலைநகரமான) மாட்ரிட்டில் அமைந்திருந்த உச்சக்குழுவிடம் குவிந்திருந்தது. இக்குழு, குடியேற்றப்பகுதிகளை ஆள ஸ்பெயினிலிருந்து உயர் அலுவர்களையும் உயர்குடிமக்களையும் நியமித்தது, கத்தோலிக்க தேவாலயமும் குடியேற்றப் பகுதிகளை ஆள்வதில் முக்கிய பங்கு வகித்தது. அதோடு மட்டுமின்றி இந்த நாடுகளில் உள்ள நிலத்தையும் சுரங்கங்களையும் கட்டுப்படுத்திய ஸ்பானிஷ் குடியேறிகள் இருந்தனர். அவர்களில் சிலர், 'ஹேசியண்டாக்கள்,' என அழைக்கப்பட்ட பெரிய பண்ணையின் உரிமையாளர்களாவர். ஹேசியண்டாக்கள் எனப்படுபவை வெள்ளி மற்றும் தாமிரச் சுரங்கங்கள், விவசாய நிலங்கள், புல்வெளி நிலங்கள் தொழிற்சாலைகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட பண்ணை நிலங்களாகும். அவை நிலச்சுவாந்தார்களுக்கு சொந்தமானவைகளாக இருந்தன. அவற்றில் பணியாற்ற சேவகர்களையும் அல்லது சுதந்திரமற்ற இந்தியர்களையும் ஆப்ரிக்க அடிமைகளையும் நியமித்தனர்.

இவற்றுடன் சிறு விவசாயிகளாகவும் கால்நடை வளர்ப்பவர்களாகவும் சாதாரணமான ஸ்பானிஷ்காரர்கள் குடியேறி இருந்தனர். இருப்பினும் குடியேறிய ஸ்பானிஷ்காரர்களுக்கு ஐரோப்பாவிலிருந்த ஸ்பானிஷரால் கட்டுப்படுத்தப்பட்ட குடியேற்றப் பகுதிகளை நிர்வகிப்பதில் எவ்வித பங்கும் இல்லாமலிருந்தது.

காலப்போக்கில் ஸ்பானிஷ் நிலச்சுவாந்தார்கள் மற்றும் விவசாயிகள் இந்த நாடுகளில் வாணிகம் மற்றும் தொழிலை முன்னேற்றமடையச் செய்தனர். மேலும் விவசாய உற்பத்திப் பொருட்களான சர்க்கரை மற்றும் மாமிசத்தை அதிக அளவில் ஏற்றுமதி செய்வதோடு சில உலோகங்களான தகரம் மற்றும் தாமிரங்களையும் ஏற்றுமதி செய்தனர்.

குடியேற்றப் பகுதிகளின் பொருளாதாரம் ஸ்பெயினால் கட்டுப்படுத்தப்பட்டன. குறைந்த செலவில் உழைப்பு மற்றும் இயற்கை வளங்களின் ஆதாரமாக சேவை செய்யும்

SCERT TELANGANA

- குடியேற்றப் பகுதிகளின் ஆட்சியில் முக்கிய பதவிகளில் இடம்பெற ஸ்பானிஷ் குடியேறிகள் ஏன் அனுமதிக்கப்படவில்லை என்று நீ நினைக்கிறாய்?

முறையில் மற்றும் உள்நாட்டு முன்னேற்றத்தை திட்டமிட்டு எப்பணியும் செய்யாமலும் ஸ்பெயின் குடியேற்றப்பகுதிகளை கட்டுப்படுத்தத் தொடங்கியது. இந்த நிலையானது குடியேற்ற அதிகார வர்க்கங்களின் பொருளாதார மேன்மைக்கான ஏகாதிபத்திய வாணிக உறவுகள் ஏற்பட வழிவகுத்தது. இந்த ஏகாதிபத்திய சலுகைகளை உறுதிசெய்ய குடியேற்றப்பகுதிகளின் அதிகார வர்க்கங்கள் குடியேற்றப்பகுதிகளின் சமூக பொருளாதார இயக்கவியலை பலவந்தமாக வடிவமைத்தனர்.

குடியேற்றங்கள் கரும்பு அல்லது புகையிலை அல்லது பருத்தி போன்ற வாணிபப்பயிர்களை விளைவிக்கும்படிக் கட்டாயப் படுத்தப்பட்டனர். அவ்விளைபொருட்கள் ஆதிக்க நாடுகளுக்கு மலிவான விலைக்கு விற்கப்பட்டன. அவர்கள் தொழில்களை மேம்படுத்திக்கொள்ள அல்லது பிறநாடுகளுடன் வாணிகத்தை மேம்படுத்திக் கொள்ளவும் அனுமதிக்கப்படவில்லை. பெரிய பண்ணைகளில் சுதந்திரமற்ற உழைப்பை பயன்படுத்தியதால் குறைந்த விலைகளில் பேரளவில் வாணிபப் பயிர்களை வளர்க்க முடிந்தது. இந்த பண்ணை உரிமையாளர்களுக்கு நவீன விவசாயம் அல்லது உற்பத்தி செய்யும் முறைகளை பயன்படுத்த எந்த ஊக்கத்தொகையும் அளிக்கப்படவில்லை. ஏனெனில் அவர்கள் மலிவான அடிமைப்பணியாளர்களைக் கொண்டிருந்தனர்.

உள்ளூர் பிரமுகர்களால் திரட்டப்பட்ட இலாபங்கள் சேமிப்பு மற்றும் உற்பத்தியில் முதலீடு செய்வதைக் காட்டிலும் ஆடம்பரப் பொருட்களை வாங்கி பெருமையாக காட்டிக்கொள்வதில் பயன்படுத்தப்பட்டது. இந்த நீடித்த மிகவும் சமமற்ற விவசாய சமூக அமைப்பு மக்களில் பெரும்பாலானோர் மிகவும் ஏழ்மையான நிலையிலிருந்ததைத் தெரிவித்தது.

காலனி ஆதிக்க முறை குடியேற்றப்பகுதிகளின் பொருளாதாரத்தின் மீதும் அதிகக் கட்டுப்பாட்டினை வைத்தது. கண்டிப்பான சட்டங்களும் சமூகக் கட்டுப்பாட்டின் பிற நடவடிக்கைகளும் குடியேற்ற நாடுகளில் ஏற்படுத்தப்பட்டன. ஆணிகள் போன்ற மிக அற்பமான தொழில் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பிற்கும் தடைவிதிக்கப்பட்டு குடியேற்றப்பகுதிகளின் சார்ந்திருத்தலை செயற்கையாக அதிகரித்தது. இவ்வாறு காலனி ஆதிக்கம் கட்டுப்பாடு ஒரு வகையான குறை வளர்ச்சியை வலியுறுத்தி அவை தாங்களாகவே உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்து முன்னேறுவதையும் தடுத்தது.

- நீங்கள் எட்டாம் வகுப்பில் நிஜாம் மாநிலத்தில் ஜமீன்தாரி அமைப்பைப் பற்றி படித்திருப்பீர்கள். நிஜாம் மாநிலத்தின் ஜமீன்தாரி அமைப்பை தென் அமெரிக்காவின் ஹேசியண்டாக்களுடன் ஒப்பிடு. அவற்றிடையே காணப்படும் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் யாவை?
- கீழ்காணும் இலத்தீன் அமெரிக்கக் குடியேற்றப்பகுதி மக்களின் சோக நிலையை விவரி.

1. ஹேசியண்டாக்களுக்கு உரிமையாளர்களான ஸ்பானிஷ் குடியேறிகள்.
2. அமெரிக்காவில் குடியேறிய சிறு ஸ்பானிஷ் விவசாயிகள்
3. உள்ளூர் அமெரிக்கர்கள்
4. இலத்தீன் அமெரிக்காவில் குடியேறிய ஆப்ரிக்க அடிமைகள்.

ஸ்பானிஷ் குடியேற்றப்பகுதி மக்கள், பழைய ஸ்பானிஷ் குடியேரிகளும் அவர்கள் மீது ஸ்பானிஷ் உயர்குடிமக்களால் செலுத்தப்பட்ட ஆதிக்கத்தை வெறுத்தனர். மேலும் இலத்தீன் அமெரிக்காவில் 1810லிருந்து ஸ்பெயினுக்கு எதிராக தொடர்ச்சியான புரட்சிகள் வெடித்தன. அவை வட அமெரிக்கக் குடியேற்றப்பகுதிகள் மற்றும் பிரெஞ்சுப் புரட்சிகளால் அறிவிக்கப்பட்ட சுதந்திரப் பிரகடனத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டன. 1816 மற்றும் 1826 ஆண்டுகளுக்கிடையில் பெரும்பாலான இலத்தீன் அமெரிக்க நாடுகள் விடுதலை பெற்றன. ‘சைமன் பொலிவர்’ என்பவர் கருப்பின அடிமைகளாலும் சிறுவிவசாயிகளாலும், விடுதலையையும் மக்களாட்சியையும் ஆதரித்த ஐரோப்பாவின் பல மக்களாலும், ஆதரிக்கப்பட்ட ஒரு புரட்சி இராணுவத்தை வழிநடத்தினார்.

SCERT TELANGANA

இந்த புரட்சி இராணுவம் பிரெஞ்சுப் புரட்சிக் கருத்துக்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டது. இந்த இராணுவம் தற்போதைய கொலம்பியாவிலிருந்து வெனிசுலாவை விடுதலை பெறச் செய்தது. 'சான் மார்ட்டினால்' என்பவரால் வழிநடத்தப்பட்ட மற்றொரு புரட்சி இராணுவம் 1817ல் சிலி, பெரு மற்றும் அர்ஜென்டைனா நாடுகளை விடுதலை பெறச்செய்தது. போர்ச்சுகல்லின் குடியேற்றப் பகுதியான பிரேசில் 1822ல் விடுதலை பெற்றது. இவ்வாறு தென் அமெரிக்காவின் பெரும்பான்மையான பகுதிகளின் மீதான ஐரோப்பிய சக்திகளின் குடியேற்ற ஆதிக்க ஆட்சி முடிவுக்கு வந்தது.



படம் 17.3: உலக அதிசயங்களில் ஒன்றான இன்றைய பெரு நாட்டில் அமைந்துள்ள 'மச்சு பிச்சு' என்று அழைக்கப்படும் 'இன்கா' நாகரிக வழிபாட்டு இடம்.

1820களுக்குள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒரு பெரிய பொருளாதார மற்றும் அரசியல் சக்தியாக உருவெடுத்தது. அது தென் அமெரிக்காவை தன் செல்வாக்கின் மையமாகக்கருதத் தொடங்கியது. இப்பகுதியின் மீது எந்தவொரு ஐரோப்பிய சக்தியும் ஆதிக்கத்தை செலுத்துவதை தடைசெய்தது. அமெரிக்க ஜனாதிபதியான 'ஜேம்ஸ் மன்ரோ' என்பவர் மன்ரோ கொள்கையை வடிவமைத்தார். அதன்படி எந்த ஐரோப்பிய சக்திக்கும் அமெரிக்கக் கண்டங்களில் குடியேற்றப் பகுதிகளை அமைக்க அனுமதி இல்லை. மேலும் அமெரிக்காவும் ஐரோப்பாவின் விவகாரங்களில் தலையிடாது அல்லது மற்ற கண்டங்களில் உள்ள குடியேற்றப் பகுதிகளின் விவகாரங்களில் தலையிடாது. 1823ல் மன்ரோ உரையின் சிறு பகுதியை படியுங்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உரிமைகள் மற்றும் நலன்கள் உள்ளடங்கிய ஒரு கொள்கையை வலியுறுத்திக் கூறுவதற்கான தகுந்த சமயமாக இது கருதப்படுகிறது. அமெரிக்கக் கண்டங்கள் தங்களை சுதந்திர மற்றும் தன்னிச்சையான நிலைமையை கருதி, நிலைநிறுத்திவருவதால் இனிமேல் ஏதேனும் ஐரோப்பிய சக்திகளால் எதிர்கால காலனி ஆதிக்கத்தின் குடிமக்களாக கருதக்கூடாது.

அமெரிக்கக் குடியேற்றப்பகுதிகளின் சுதந்திரத்திற்கான உரிமையை மன்ரோ ஆதிக்கவில்லை, ஆனால் அமெரிக்காவின் உரிமைகளையும் நலன்களையும் வலியுறுத்துகிறார் என்பதை நீங்கள் காணலாம். அக்கொள்கை வலியுறுத்துவது என்னவென்றால் ஐரோப்பிய சக்திகள் எந்த ஒரு அமெரிக்க நாட்டையும் தங்களின் குடியேற்றப் பகுதியாகக் கருதக்கூடாது. ஆனால் ஒரு அமெரிக்க நாடு இந்த ஐரோப்பிய நாடுகளை தங்களின் குடியேற்றப் பகுதிகளாக ஆக்கிக்கொள்ள அனுமதிக்கிறது.

சக்திவாய்ந்த கப்பற்படையைக் கொண்டிருந்த பிரிட்டன் மன்ரோ கொள்கையை ஆதரித்தது. அமெரிக்கக் குடியேற்றப்பகுதிகள் எந்த ஒரு ஐரோப்பிய சக்தியின் அரசியல் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாமல் இருப்பதில் பிரிட்டன் மிகவும் கவனமாக இருந்தது. ஏனெனில் அது இங்கிலாந்துடன் வாணிகம் செய்ய சுதந்திரமாக இருந்து அதனுடைய தொழிலகப் பொருட்களை வாங்க விரும்பியது.

இவ்வாறு நேரடிக் குடியேற்ற ஆட்சி முடிவுக்கு வந்தாலும் பழைய குடியேற்றிய ஆட்சியின் பல நினைவுச் சின்னங்கள் எஞ்சியிருந்தன. இவ்வாறு இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ஒருபுறம் மிகப்பெரிய நிலச்சுவாந்தார்கள் கொண்ட ஒரு சமுதாய அமைப்பும், மறுபுறம் அதிக எண்ணிக்கையிலான அடிமைகள், பகுதி-அடிமைகள் மற்றும் சிறு ஏழை விவசாயிகள் கொண்ட சமுதாய அமைப்புப் இருந்தது.

- குடியேற்ற ஆட்சியிலிருந்து விடுதலைபெற்ற போதிலும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் வளர்ச்சியடையாத நாடுகளாக ஏன் உள்ளன என்று நீ கருதுகிறாய்?
- மன்றோ கொள்கை எவ்வகையில் இலத்தீன் அமெரிக்காவின் சுதந்திரத்தை காக்கிறது? அவர்களின் சுதந்திரத்தையும் அது கட்டுப்படுத்தியுள்ளதா?
- மன்றோ கொள்கையிலிருந்து எவ்வாறு பிரிட்டன் இலாபமடைந்தது?

ஏழை இந்திய சமூகத்தினர்களைக் கொண்ட கிராமங்களும் அங்கு இருந்தனர். தொழிலும் வாணிகமும் நிலச்சுவாந்தார்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. அவர்கள் அடிமை உழைப்பாளர்களின் உழைப்பைக் கொண்டு போதிய உருமானத்தைப் பெற்றதால் அவர்கள் அவற்றை மேம்படுத்துவதில் அதிக அக்கறை காட்டவில்லை. இவ்வாறு பலவழிகளில் பழைய காலனி ஆதிக்கம் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் மீது தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்தியது. பிரிட்டன் மற்றும் அமெரிக்கா போன்ற வளர்ச்சிஅடைந்த தொழில் நாடுகளின் மீது சார்ந்திருந்தலானது, மிக அதிக அளவிலான சமூக மற்றும் பொருளாதார சமமின்மை மற்றும் நிலமின்மையால் மிக உயர்ந்த வறுமையின் தாக்கம் இந்த நாடுகளை வளர்ச்சியடையாத நாடுகளாக தொடர்ந்து வைத்திருந்தது.

## ஆசியாவில் ஐரோப்பாவின் காலனி ஆதிக்கம்

ஆசியாவின் பெரும்பாலான நாடுகளான இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் இலத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து பல வழிகளில் வேறுபட்டிருந்தன. பெரும்பாலான ஆசிய நாடுகள் வளமான விவசாய சமூகத்தினரால் மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்டிருந்தது. அவை மிகப் பரந்த இராணுவங்களால் பாதுகாக்கப்பட்ட ஆற்றல்மிக்க பேரரசுகளால் ஆளப்பட்டன. இவ்வாறு ஐரோப்பிய சக்திகள் முகலாயப் பேரரசை தாக்க முற்பட்டபோது அவை முகலாய இராணுவங்களால் திரும்பத் திரும்ப தோற்கடிக்கப்பட்டன. இருப்பினும் ஐரோப்பியர்களால் சில முக்கிய துறைமுகங்களான கோவா போன்றவற்றின் மீது தங்கள் அதிகாரத்தை நிறுவமுடிந்தது. அவர்கள் கோவாவிலிருந்தே தங்களின் கடல் வாணிகத்தைக் கட்டுப்படுத்தி வந்தனர். எடுத்துக்காட்டாக போர்ச்சுகீசியர்கள் 16ஆம் நூற்றாண்டில் இந்தியப் பெருங்கடலின் மீது கடல்சார் பேரரசை நிறுவினர். அரபிக் கடல் அல்லது இந்தியப் பெருங்கடல் அல்லது வங்காள விரிகுடா மீது பயணம் செய்த அனைத்துக் கப்பல்களும் போர்ச்சுகீசியர்களுக்கு ஒரு சிறப்பு கப்பத்தை செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு அவை கட்டத் தவறியபோது அவை தாக்கப்பட்டு சூறையாடப்பட்டது.

கடல்களின் மீது போர்ச்சுகீசியரின் ஆதிக்கம் பிற ஐரோப்பிய சக்திகளான வியாபாரத்திற்காக ஆசியாவை நெருங்கிக் கொண்டிருந்த ஹாலந்து மற்றும் இங்கிலாந்து நாடுகளால் இறுதியாக உடைத்தெறியப்பட்டது. ஹாலந்தும் இங்கலாந்தும் ஆசிய நாடுகளில் வியாபாரத்தைக் கையாள 1600-ல் தங்களின் கிழக்கிந்திய கம்பெனிகளை நிறுவிக்கொண்டன. ஐரோப்பாவில் அதிக தேவை மற்றும் அதிக அளவு இலாபத்தைத தந்த ஆசிய நாடுகளின் உற்பத்திப் பொருட்களான பருத்தி, மற்றும் பட்டாடைகள் வாசனைப் பொருட்கள், எஃகு போன்றவற்றை வாங்குவதில் கம்பெனிகள் அதிக ஆர்வம் காட்டின. எடுத்துக்காட்டாக டச்சு நாட்டின் முதல் வருகை தன் முதலீட்டின் மீது 400% இலாபத்தைக் கொண்டு வந்தது.

ஐரோப்பிய கம்பெனிகள் இந்தியா, ஆப்பிரிக்கா மற்றும் இந்தோனேஷிய நாடுகளிலுள்ள பல்வேறு துறைமுக நகரங்களில் வியாபார மையங்களை நிறுவின. ஹாலந்து போன்ற சில நாடுகள் இந்தோனேஷியாவின் சில துறைமுக நகரங்களின் மீது தங்களுடைய அரசியல் ஆதிக்கத்தை நிறுவின.

டச்சு : ஹாலந்து நாட்டு மக்களை டச்சுக்காரர்கள் என்பர். தற்போது ஹாலந்தின் ஆட்சி/அலுவலகப் பெயர் நெதர்லாந்து ஆகும்.

இந்த கம்பெனிகளின் நடவடிக்கைகளின் மீது ஐரோப்பாவில் வெகுவிரைவிலேயே எதிர்ப்புகள் ஏற்படத் தொடங்கின. அவர்கள் தங்கம் மற்றும் வெள்ளி போன்ற விலைமதிப்புமிக்க உலோகங்களைக் கொண்டு இந்தியாவிலிருந்து பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தனர். இவ்வாறு ஹாலந்தும் இங்கிலாந்தும் தங்களின் பெருகிய செல்வத்தை செலவழித்தன. இந்த வியாபாரத்தின் விளைவாக, ஐரோப்பிய நாடுகளின் முயற்சியால் இந்தியா செல்வம் மிக்க நாடாக மாறும் என்று உணரப்பட்டது.

SCERT TELANGANA



படம் 17.4: டச்சுக் கிழக்கிந்திய கம்பெனியை குறிப்பிடும் டச்சு ஏகாதிபத்தியத்தின் பிரதிபிம்பம் (1916). இது மிகவும் விலையுயர்ந்த ஆபரணத்தைப் பற்றி கூறுகிறது.

எனவே ஆசியாவிலேயே அவற்றின் வியாபாரத்திற்கு நிதியளிக்க கம்பெனிகளின் மீது அதிக வற்புறுத்தல் இருந்தது. அப்போது மிக அதிக அதிகாரமற்ற அரசுகளான இந்தோனேஷியா போன்ற நாடுகளில் விரிவான நிலங்களை ஆக்ரமித்ததின் மூலம் இந்த மாற்றத்திற்கு டச்சுக் கம்பெனி செவி சாய்த்தது. அவர்கள் உள்ளூர் மக்களை தங்கள் உற்பத்திப் பொருட்களை மலிவான விலைக்கு, பிற நாடுகளை அவர்களுடன் வியாபாரம் செய்ய அனுமதிக்காமல் தனி உரிமை பெற்றிருந்த கம்பெனிக்கு விற்கும் படி வற்புறுத்த முடிந்தது. 1800ல் டச்சு அரசாங்கம் கம்பெனியைக் கலைத்துவிட்டு இந்தோனேஷியாவில் நேரடி ஆட்சியை நிறுவியது. அரசாங்கத்திற்கு ஆழ்ந்த பொருளாதார நெருக்கடி இருந்ததால் அது இந்தோனேஷியாவை வரி வருமானத்தின் ஆதாரமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பியது. டச்சு அரசு உள்ளூர் மக்களை காப்பி, சர்க்கரை வாசனைப் பொருட்களை வரியாக செலுத்த பலவந்தப்படுத்தியது. இவற்றை அரசாங்கம் சர்வதேச சந்தையில் விற்க பெரும் இலாபத்தை ஈட்டியது. டச்சு அரசாங்க வரவு செலவு திட்டத்தின் 25%த்திற்கும் மேல் இந்த இலாபங்களிலிருந்தே வந்தது. இது உள்ளூர் மக்களுக்கு, அவசியமான உணவு தானியங்களை விளைவிக்க முடியாமலும் அல்லது தங்களின் வர்த்தகத் துன்பங்களை விளைவித்தது. இதனால் தீவிர வறுமையும் பஞ்சங்களும் ஏற்பட்டன. அவர்கள் பல புரட்சிகளைச் செய்தாலும் அவை யாவும் கொடூரமான முறையில் ஒடுக்கப்பட்டன. இக்கொள்கை ஹாலந்தின் பெரும்பாலான மக்களால் விமர்சிக்கப்பட்டது.

அரசாங்கம் இறுதியில் 1870ல் இந்த கட்டாயமான விளைபொருட்களை வழங்கும் முறையை முடிவுக்குக் கொண்டு வந்தது. இது தற்போது டச்சு முதலீட்டாளர்களை இந்தோனேஷியாவில் தோட்டங்களை அமைத்து ஒற்றைப் பயிர் (ரப்பர், கடுகு அல்லது கரும்பு) போன்றவை தீவிரமான அளவில் நட்டு, டச்சு தோட்டக்காரர்களால் நிர்வகிக்க, முதலீடு செய்யும் படி தூண்டப்பட்டனர். டச்சுக்காரர்கள் காப்பி, தேநீர், கோகோ, புகையிலை மற்றும் ரப்பர் போன்றவற்றை அறிமுகப்படுத்தியதால் பெருமளவிலான நிலத்தோட்டங்களாக மாறின. இத்தோட்டங்களில் மேற்பார்வையாளர்களின் கீழ் பகுதி–அடிமைப் பணியாளர்கள் பணியாற்றினர். அவர்களின் பலர் தூரத்து நாடுகளான இந்தியா போன்ற நாடுகளிலிருந்தும் கொண்டுவரப்பட்டனர். தோட்டங்களின் விளைபொருட்கள் சர்வதேச சந்தைகளில் குறிப்பாக ஐரோப்பாவில் உரிமையாளர்களால் விற்கப்பட்டன. அவர்கள் தகரம் மற்றும் பெட்ரோலியச் சுரங்கங்களின் மீதும் முதலீடு செய்தனர். இப்பொருட்களின் போக்குவரத்தை வசதியாக்க அரசாங்கம் இரயில்வே, தந்தி போன்றவற்றில் அதிக அளவில் முதலீடு செய்தது. டச்சு ஆதிக்க இந்தோனேஷியா உலகின் 'குவினைன்' மற்றும் மிளகு அளிப்பின் பெரும்பாலானவற்றையும், ரப்பர் உற்பத்தியில் மூன்று மடங்கினையும், தேங்காய் உற்பத்தியில் கால் பாகத்தையும், தன்னுடைய தேயிலை, சர்க்கரை, காப்பி மற்றும் எண்ணெய் உற்பத்தியில் ஐந்து மடங்கினையும் உற்பத்தி செய்தது. டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியிலிருந்து வந்த இலாபம் தொழிலில் முன்னேற்றம் காண ஹாலந்திற்கு உதவியது. மேலும் அதை உலகின் மிக முக்கியமான காலனி ஆதிக்க சக்திகளில் ஒன்றாகவும் ஆக்கியது. இந்த அதிகாரம் 1939-45 ஆண்டுகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது உலகப்போரின் போது ஜப்பானால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. உலகப்போருக்குப் பின் இந்தியாவைப் போன்று இந்தோனேஷியாவும் விடுதலைப் பெற்றது.

SCERT TELANGANA

## இந்தியாவில் காலனி ஆதிக்க விரிவாக்கம்

நீ முன் வகுப்புகளில் ஆங்கிலேயர்கள் இந்தியாவின் மீது படையெடுத்ததைப் பற்றி படித்திருப்பாய். இந்த படையெடுப்பின் சில முக்கியமான கட்டங்களை நினைவுபடுத்த இது உதவியாக இருக்கும். போர்ச்சுகீசியர்கள் 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோவா போன்ற சில துறைமுகங்களின் மீது தங்களின் ஆதிக்கத்தை நிறுவியிருந்தனர். பிற ஐரோப்பிய சக்திகளும் தங்களின் வியாபார மையங்களை ஏற்படுத்திக் கொண்டு 15ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் இந்தியாவுடன் வியாபாரம் செய்யத் தொடங்கின. ஔரங்கசீப் உயிருடன் உள்ளவரை, எந்த ஒரு ஐரோப்பிய சக்தியும் இந்தியாவில் அரசியல் அதிகாரத்தை உருவாக்க நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. 1700ஆம் ஆண்டிற்குப் பின் முகலாயப் பேரரசின் வீழ்ச்சியினால் ஐரோப்பிய கம்பெனிகள் படிப்படியாக கடலோரப் பகுதிகளின் மீது தங்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவத் தொடங்கினர். அவர்கள் முதலில் தென்னிந்தியாவில் அரசியல் அதிகாரத்தை நிறுவத் தொடங்கினர். ஆங்கிலேயர்கள் சென்னையின் மீது ஆதிக்கத்தை செலுத்திய போது பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரியின் மீது ஆதிக்கத்தைச் செலுத்தினர். அவர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு இந்தியாவில் தங்களின் ஏகாதிபத்திய வாணிகத்தை அமைக்க விரும்பினர். ஆங்கிலேயர்கள் படிப்படியாக வங்காள நவாப்பை தோற்கடிப்பதில் வெற்றிபெற்று 1757ல் வங்காளத்தின் மீது அரசியல் அதிகாரத்தை நிறுவினர். இந்த வெற்றி இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடிக்கல் நாட்டியது. கம்பெனியானது இந்தியாவில் தங்களின் கொள்முதலுக்கு வங்காள வரி வருவாயைப் பயன்படுத்தியது. அதுமட்டுமின்றி இந்திய கைவினைக் கலைஞர்கள், விவசாயிகள் மற்றும் வணிகர்களை அவர்களின் பொருட்களை மிகவும் மலிவான விலைக்கு விற்குமாறு தங்களின் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி வலியுறுத்தியது. இதனால் கம்பெனிக்கு மிக அதிகமான லாபங்கள் கிடைத்தன.

## சீனா

இந்தியாவைப் போன்றே சீனாவும் உலகிலேயே மக்கள் தொகையை மிக அதிக அளவில் கொண்டதும் மிகவும் ஆற்றல் வாய்ந்த பேரரசைப் பெற்றும் விளங்கியது. இது மேலும் இந்தியாவின் கிழக்கில் இருந்ததால் இலத்தீன் அமெரிக்கா அல்லது இந்தோனேஷியாவைப் போல் இதன் மீது ஆதிக்கத்தை நிறுவ ஐரோப்பியர்களால் இயலவில்லை. சீன ஆட்சியாளர்கள் சீனாவில் ஐரோப்பியர்களை சுதந்திரமாக வாணிகத்தைச் செய்ய அனுமதிப்பது ஆபத்தானது என்பதை உணர்ந்து அவர்களை சிறப்பாக, உருவாக்கப்பட்ட வணிகர்களைக் கொண்டு ஒரே ஒரு நகரத்தில் மட்டும் வாணிகம் செய்ய அனுமதித்தனர். அவர்களால் பேரரசில் தன்னிச்சையாக நடமாடவும் முடியாததால் தங்களின் வசிப்பிடக் பகுதிகளிலேயே அடைந்து கிடந்தனர். இவ்வாறு ஆட்சியாளர்கள் ஐரோப்பிய வாணிகர்களால் அச்சுறுத்தப்படுவதை குறைக்க முயன்றனர். ஐரோப்பிய வாணிகர்கள் சீனப் பட்டு மற்றும் தேயிலை வாணிகம் நல்ல இலாபகரமானதாக இருப்பதைக் கண்டனர். ஆனால் சீனர்கள் எந்த ஐரோப்பிய பொருட்களையும் விரும்பாததால் அவர்கள் வெள்ளியையும் தங்கத்தையும் செலுத்த வேண்டியிருந்தது. நான் முன்பே கண்டதைப்போல ஐரோப்பாவில் இக்கொள்கை எதிர்க்கப்பட்டது. ஏனெனில் ஐரோப்பாவின் விலையுயர்ந்த உலோகங்கள் செலவழியத் தொடங்கின. சீனாவில் ஒரு பொருளுக்கு அதிக தேவை இருப்பதையும் ஆனால் அது இந்தியாவில் உற்பத்தியாவதையும் ஐரோப்பிய வணிகர்கள் கண்டறிந்தனர். அந்தப் பொருள் கருப்பு மருந்து என வழங்கப்படும் 'ஓப்பியம்' ஆகும். ஆங்கிலேயர்கள் அதிக அளவில் ஒப்பியத்தை உற்பத்தி செய்யுமாறு இந்திய விவசாயிகளைத் தூண்டினர். அவர்கள் மிகவும் மலிவான விலைகளுக்கு அவற்றை இந்தியர்களிடமிருந்து வாங்கினர்.



*படம் 17.5: முதல் ஒப்பிப் போரில் ஆங்கில கப்பல்படை*



படம் 17.6: காகிதத்தாளின் மீது வண்ணத்தால் 1840ல் தீட்டப்பட்ட மக்காவ் வீதிக் காட்சியைக் காட்டும் படம். மக்காவ் என்பது சீனாவிலுள்ள துறைமுக நகரங்களில் ஒன்று. இங்கிருந்துதான் ஐரோப்பியர்கள் வியாபாரத்தை நடத்த அனுமதிக்கப்பட்டனர்.

இந்த ஓப்பியம், சட்டத்திற்கு புறம்பாக கடத்தப்பட்டு சீனாவில் விற்கப்பட்டது. அதற்குப் பதிலாக ஐரோப்பியர்கள் பட்டு மற்றும் தேயிலையை வாங்கி ஐரோப்பாவில் விற்றனர். இவ்வாறு ஐரோப்பியர்கள் சீனர்களுக்கு வெள்ளியை செலுத்தாமல் இருந்தனர். ஓப்பியத்தைக் கடத்துவது அதிகரித்ததால் சீனா, ஐரோப்பிய வணிகர்களுடன் ஒரே ஒரு நகரத்தில் அனுமதித்து நடத்தி வந்த அனைத்து வாணிகத்தையும் தடைசெய்தது. இது சீனாவிற்கும் இங்கிலாந்திற்குமிடையே ஓப்பிய போர்கள் ஏற்பட வழிவகுத்தது. இப்போர்கள் ஐரோப்பாவின் பிற சக்திகளால் 1840-42 ஆண்டுகளுக்கிடையில் ஆதரவளிக்கப்பட்டது. போரில் சீனாவை இங்கிலாந்து தோற்கடித்து சமமற்ற ஒப்பந்தங்களின் தொடர்களை சீனாவின் மீது விதித்தது. இந்த ஒப்பந்தங்கள் சீனாவுடன் இங்கிலாந்து எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி வியாபாரம் செய்ய அனுமதித்ததோடு சீனாவில் தங்களின் வியாபார மையங்களை நிறுவி ஆங்கிலச் சட்டம் மட்டுமே நடைமுறையில் இருக்குமாறு செய்தன. இங்கிலாந்து சீனாவை தனக்கு மிகவும் சாதகமான தேசிய மரியாதையைத் தரும்படி வற்புறுத்தியது. இதன்மூலம் பிற நாடுகளுக்கு ஏதேனும் சலுகைகள் வழங்கப்பட்டால் அது தானாக இங்கிலாந்துக்கும் பொருந்துவதாக இருக்கும் என நினைத்தது.

இதோடு, பேரரசாட்சி 1911 வரை நீடித்த போதிலும் சீனாவின் சுதந்திரம் பறிபோகத் தொடங்கியது. இந்தியா அல்லது இலத்தீன் அமெரிக்க நாடுகளைப் போல் அல்லாமல் சீனா எந்த ஒரு ஐரோப்பிய சக்தியின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியவில்லை என்பதை நம்மால் காணமுடிகிறது. இருப்பினும் சமமற்ற ஒப்பந்தங்கள் சீனாவை ஐரோப்பிய நாடுகளுக்குச் சாதகமான விதிமுறைகளுக்கு ஒப்புக்கொள்ள வற்புறுத்தியதன் மூலம் இச்சக்திகளின் நலன்களாகச் சேவை செய்யும் படிச் செய்தது. இவ்வாறு சீனா ஐரோப்பியர்களுக்கு அதிகஅளவு போர் இழப்புத் தொகை செலுத்தவேண்டியதாயிற்று. அவர்களுக்கு இலவச சுதந்திரமான வாணிக உரிமைகளை அனுமதித்தும், குறைந்தபட்ச இறக்குமதி தீர்வைகளை விதித்தும், சீன மண்ணில் ஐரோப்பிய சக்திகளின் குடியேற்றங்களை நிறுவி அவர்களின் சட்டங்களை நடைமுறைப்படுத்தி சீனச் சட்டங்களை அனுமதிக்காமல் இருப்பது போன்ற பல செயல்கள் நடைபெற்றன. இவ்வாறு சீன அரசாங்கம் நாட்டின் அன்றாட நிர்வாகத்தை நடத்த பொறுப்பு வகித்தபோதும் நாட்டின் பொருளாதாரம் ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததால் சீனாவில் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்கவும், குறைவான விலைகளில் தங்களின் தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருட்களை வாங்கவும், அதே சமயம் சீனாவில் உள்ளூர் தொழில்களை வளர்ச்சியடையச் செய்யாமலும் பார்த்துக்கொள்ளப்பட்டது.

சீனாவுடன் வியாபாரத் தொடர்பு வைத்துக்கொண்டது இங்கிலாந்து நாடு மட்டுமல்ல என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். பிற ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், ஜெர்மனி, இரஷ்யா போன்ற நாடுகள் சீன அரசாங்கத்தை சீனாவின் சில குறிப்பிட்ட பகுதிகளை இந்த நாடுகளின் தனிப்பட்ட செல்வாக்குமிக்க பகுதிகளாக

SCERT TELANGANA

அறிவிக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தியது. அங்கு இந்த நாடுகள் சுதந்திரமாக நுழையலாம். ஆனால் பிற நாடுகள் நுழைய முடியாது. உண்மையில் இவ்வாறு நடைபெறாவிட்டாலும் இது சீனாவை பிரிக்கும் ஒரு முயற்சியாக இருந்தது. இவ்வாறு சீனா பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒரு நாட்டால் மட்டுமின்றி பல ஐரோப்பிய நாடுகளால் கட்டுப்படுத்தப்பட்டு வந்தது.

இந்த ஐரோப்பிய நாடுகள் ஆசியாவிலேயே தோன்றிய ஜப்பான் என்னும் ஒரு புதிய வல்லரசுடன் இணைந்து கொண்டன. ஜப்பானில் 1861ல் ஒரு அரசியல் புரட்சி ஏற்பட்டு வேகமான தொழில் மயமாக்கல் மற்றும் நவீன மயமாக்கல் என்னும் ஒரு புதிய செயல்திட்டம் ஏற்படத் தொடங்கியது. ஜப்பானும் மலிவான கச்சாப் பொருட்களைப் பெறவும் தங்கள் தொழில் உற்பத்திப் பொருட்களை விற்கவும் குடியேற்றப் பகுதிகளை நாடியது. அது 1894–95ல் சீனாவுடன் போரிட்டு சீனாவை அதிக மாகாணப் பரப்பை தருமாறும் ஜப்பானுக்கு போர் இழப்பீட்டினை செலுத்துமாறும் வற்புறுத்தியது.

- சீனாவிலிருந்து மேற்கு நாடுகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய உற்பத்திப் பொருட்கள்....................
- மேற்கத்திய நாடுகள் சீனாவில் விற்க மயற்சிசெய்த உற்பத்திப் பொருள் ..........
- சீனாவில் வாணிகச் செல்வாக்கிற்காக முயற்சி செய்த ஆசிய நாடு.........

இவ்வகையில் பல்வேறு ஐரோப்பிய சக்திகளும் ஜப்பானும் சீனாவில் தங்களின் செல்வாக்கு மையங்களை வடிவமைத்துக் கொண்டன. எனவே சீனா ஒரு பகுதிநேரக் காலனியாக இருந்ததேயன்றி முழுமையான காலனியாக எந்த ஒரு நாட்டிற்கும் இருந்ததில்லை என்று கருதப்படுகிறது.

## ஆப்பிரிக்காவில் காலனி ஆதிக்கம்

19ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை ஐரோப்பியர்கள் ஆப்பிரிக்காவில் காலனி ஆதிக்கத்தை நிறுவுவதில் குறைந்த ஆர்வத்தையே காட்டினர். 16 மற்றும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதிகளுக்கிடையில் அதை அடிமைகளின் ஆதார மையமாக மட்டுமே பயன்படுத்தி அடிமைகளை அமெரிக்காவிற்கு விற்றது. இங்கிலாந்து போன்ற சில வல்லரசுகள் நன்னம்பிக்கை முனை போன்ற முக்கிய ஆப்ரிக்க கடலோரப் பகுதிகளை இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கான பயணங்களின் போது தங்கள் கப்பல்களுக்கு அளிப்புகளை புதுப்பிக்க தரையிறங்கும் மையங்களாக பயன்படுத்தின. இந்த வல்லரசுகள் வியாபாரத் தொடர்பான விஷயங்களில் காலனி ஆதிக்கச் சக்திகளுக்கு ஆப்ரிக்கா வழங்க ஒன்றுமில்லை என்று கருதின.

**அகழ்வாராய்ச்சிகள் : ஐரோப்பியர்களுக்கு ஆப்பிரிக்க கண்டத்தின் உட்புறப் பகுதிகளைப் பற்றிய தகவல்கள் மிகவும் குறைந்த அளவிலேயே தெரிந்திருந்ததால் ஐரோப்பியர்கள் அக்கண்டத்தை 'இருண்ட கண்டம்,' என அழைத்தனர். முழு கண்டமும் மிகவும் குறுகிய கடற்கரைப் பகுதியுடன் ஓர் உயர்ந்த பீடபூமியின் மேல் அமைந்திருந்தது. பெரும்பாலான நதிகள் பீடபூமியின் மேல் அமைந்திருந்தது. பெரும்பாலான நதிகள் பீடபூமிகளின் வழியாகப் பாய்ந்து குறுகிய இடுக்கு பள்ளத்தாக்குகள் மற்றும் செங்குத்தான நீர்வீழ்ச்சிகளின் வழியாக கடலோரப் பகுதிகளை அடைந்தன. 19ஆம் நூற்றாண்டு முழுவதும் குறிப்பாக 1850க்குப் பிறகு ஐரோப்பிய நாடுகள் ஆப்ரிக்காவின் உட்புறப் பகுதிகளைப் பற்றி ஆராய ஆய்வுக் குழுக்களை அனுப்பின, இடங்களின் நிலப்படங்களை தயாரித்தன. இயற்கைப் பிரிவுகளான நதிகள், மலைகள், தாதுப் பொருள் வளங்கள், காடு மற்றும் காட்டு உற்பத்திப் பொருட்கள் அங்கு வாழும் மக்கள் போன்றவற்றை ஆராயவும் ஆய்வுக் குழுக்கள் அனுப்பப்பட்டன. அவர்கள் இந்த அரிய தகவல்களை உட்புறப்பகுதிகளை கைப்பற்றவும் குடியேற்றப் பகுதிகளாக்கி கொள்வதற்கான திட்டங்களை வகுக்கவும் பயன்படுத்திக் கொண்டனர். இங்கிலாந்து சார்பின் தென் ஆப்பிரிக்கா மற்றும் மத்திய ஆப்ரிக்காவின் மிகப் பரந்த பரப்புகளை நிலப்படம் வரைந்த டேவிட் லிவிங்ஸ்டன் மற்றும் H.M.ஸ்டான்லி ஆகிய இருவரும் ஐரோப்பிய ஆய்வாளர்களுள் மிகவும் புகழ்பெற்றவர்களாவர். 1850களிலும் 1860களிலும் 'ரிச்சார்டு பர்டன்,' 'ஜான் ஸ்பீக்' மற்றும் 'ஜேம்ஸ் கிரான்ட்' ஆகியோரால் வழிநடத்தப்பட்ட தீவிர ஆய்வுக் குழுக்கள் பெரிய மத்திய ஏரிகளையும், நைல் நதியின் உற்பத்தி மையத்தையும் அடையாளம் கண்டன. 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஐரோப்பியர்கள் நைல் நதியின் உற்பத்தி மையத்தை வரையறுத்து நைஜர், காங்கோ மற்றும் ஜாம்பேஜி நதிகளின் போக்குகளை கண்டறிந்து ஆப்ரிக்காவின் மிகப்பரந்த வள ஆதாரங்களைக் குறித்து உணர்ந்தனர். பெரும்பாலான இவ்வாய்வாளர்கள்**

SCERT TELANGANA


கிறிஸ்துவ தேவாலயங்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். எனவே அவர்கள் ஆப்ரிக்க மக்களிடையே கிறிஸ்துவ மதத்தைப் பரப்புவதில் அதிக ஆர்வம் காட்டினர்.

ஆப்பிரிக்காவிற்கான போட்டி : ஐரோப்பிய நாடுகளால் ஆப்ரிக்க மாகாணங்களை வெறித்தனமாக போட்டியிட்டுக் கோரியதைக் குறிக்க இது பயன்படுத்தப்பட்டது.

இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி, இத்தாலி போன்ற பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் 1850க்குப் பிறகு தொழில் மயமாக்கல் முன்னேறியதால், அவர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையை ஆப்ரிக்காவில் வெளிப்படையாக தேட ஆரம்பித்தனர்.

அதோடு மட்டுமின்றி ஆப்பிரிக்காவிடம் பல முக்கிய தொழிலக கச்சாப்பொருட்களான தாமிரம், தகரம், ரப்பர், பாமாயில், பருத்தி, தேயிலை, கோகோ போன்ற பொருட்களும் இருந்ததையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். ஐரோப்பிய தயாரிப்பாளர்களும் ஆப்ரிக்காவைத் தங்களின் உற்பத்திப் பொருட்களுக்கான ஒரு பெரிய சந்தையாகக் கருதினர். ஜெர்மனி, இத்தாலி போன்ற பல நாடுகள் தேசியக் கட்டமைப்பு மற்றும் தொழில் மயமாக்கலுக்கு புதியதாக நுழைந்தவையாதலால் அவை பிற ஐரோப்பிய வல்லரசுகளைக் காட்டிலும் அதிக குடியேற்றப் பகுதிகளை பெற்று தங்கள் நாடுகளின் அதிகாரத்தை நிறுவுவதில் அதிக ஆர்வம் காட்டின. ஐரோப்பாவிற்கு குடியேற்றப் பகுதியாக ஆக்கிக்கொள்ள மீதமிருந்த ஒரே கண்டமாக அதிக மக்கள் தொகையுடனும் இயற்கை வளங்களுடன் நிரம்பியிருந்தது ஆப்ரிக்கா மட்டுமே.

ஆப்பிரிக்காவிற்கான ஓர் உண்மையான போட்டி 1870களில் தொடங்கியது. 1870களில் ஆப்ரிக்காவின் 10% மட்டும் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. மேலும் 40 ஆண்டுகளுக்குள் எதியோப்பியா மற்றும் இரண்டு சிறு மாநிலங்களைத் தவிர கண்டம் முழுமையும் காலனி ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. (எத்தியோப்பியா, ஒரு போரில் இத்தாலியை பகிரங்கமாக தோற்கடித்ததால் ஓர் ஐரோப்பிய இராணுவத்தை தோற்கடித்த ஐரோப்பியரல்லாத ஒரே மரபு வழிப் பேரரசாக மாறியது.



*வரைபடம் 3: 1913ல் ஆப்பிரிக்கா*

| நாட்டின் தற்போதைய பெயர் | 1913ல் காலனி ஆதிக்கம் செலுத்திய நாடு |
|---|---|
| தென் ஆப்பிரிக்கா | |
| எகிப்து | |
| நைஜீரியா | |
| கானா | |
| லிபியா | |
| அல்ஜிரியா | |
| அங்கோலா | |
| காங்கோ | |
| | |

SCERT TELANGANA

ஆப்ரிக்காவில் ஐரோப்பிய சக்திகளால் காலனி ஆதிக்கப் பகுதிகளின் விரிவாக்கத்தைக் காண 1913ல் இருந்த ஆப்ரிக்க வரைபடத்தைப் பார்.

இந்த வரைபடத்தை ஆப்ரிக்காவின் தற்போதைய வரைபடத்துடன் ஒப்பிடு.

பெரிய ஆப்ரிக்க நாடுகளின் பட்டியலைத் தயாரித்து அவற்றின் பெயர்களுக்கு எதிரே அவற்றின் மீது காலனி ஆதிக்கம் செலுத்திய நாடுகளின் பெயர்களையும் எழுது.

காலம் செல்லச் செல்ல ஐரோப்பிய அரசுகளுக்கிடையிலான காலனிகள் மற்றும் மாகாணங்களை அடைவதிலான போட்டி அதிகரித்ததால் அச்சிக்கல்களை பேச்சு வார்த்தைகள் மூலம் அமைதியான முறையில் சரிப்படுத்த முடியவில்லை. இவ்வாறு 1914ல் முதல் உலகப் போர் ஏற்பட்டது. அது மனித இனம் இதுவரைக் கண்டிராத மிகவும் அழிவினை விளைவித்தப் போராக கருதப்படுகிறது.

## காலனி ஆதிக்கத்தின் அனுபவம் (சில தனி ஆய்வுகள்) காங்கோ

1869 முதல் 1874வரை பெல்ஜியத்தின் அரசரான இரண்டாம் லியோபோல்ட் 'ஸ்டான்லி,' என்னும் ஆய்வாளரை இரகசியமாக, காங்கோ பகுதிக்கு அனுப்பி வைத்தார். காங்கோவில் அவர் பல ஆப்ரிக்கத் தலைவர்களுடன் பல ஒப்பந்தங்களை செய்துகொண்டு அவருக்கு பல மாகாணங்களை கொடுத்து விடும்படி தூண்டினார். இந்த மாகாணத்துடன் கடங்காவின் அரசரைக் கொன்று அதனைத் தன் அரசுடன் இணைத்துக் கொண்டார். 1883க்குள் லியோபோல்டின் ஆப்ரிக்க மாகாணங்களின் அளவு 2,300,000 சதுர கிலோ மீட்டர்கள் வரை அதிகரித்தது. அதாவது அது பெல்ஜியத்தை விட சுமார் 75 மடங்குகள் பெரியதாகும். அது காங்கோ சுதந்திர நாடு என்று அழைக்கப்பட்டது. அக்குடியேற்றப் பகுதிக்கு சொந்த உரிமையாளராக இரண்டாம் லியோபோல்ட் திகழ்ந்தார். மேலும் அதை தந்தம் மற்றும் ரப்பரின் வள ஆதாரமாக பயன்படுத்தினார். காங்கோ சுதந்திர அரசு காலனி ஆதிக்கம் செலுத்தப்பட்ட மக்களின்மீது திரளான படுகொலைகள் மற்றும் அடிமை தொழிலாளர் உள்ளிட்ட பயங்கர ஆட்சியை நிறுவியது. கிராமத்திலிருந்த ஒவ்வொரு நபரும் ரப்பரின் ஒரு பங்கினை அளிக்க வற்புறுத்தப்பட்டனர். மேலும் அவ்வாறு இந்த பங்கினை நிறைவேற்றாதவர்களின் கைகள் துண்டிக்கப்பட்டன. 1885 மற்றும் 1908 ஆம் ஆண்டுகளுக்கிடையில் வாழ்ந்ததாக கணக்கிடப்பட்ட 16 மில்லியன் உள்நாட்டு மக்களில் சுமார் எட்டு முதல் 10 மில்லியன் மக்கள் இறந்து விட்டனர். லியோபோல்ட் மிக அதிக அளவிலான சொத்துக்களை குவித்தார். அதில் ஒரு பகுதியை பெல்ஜியத்தில் பல கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பயன்படுத்தினார். இது பெல்ஜியம் உள்ளிட்ட உலகம் முழுவதும் பெருமளவிலான மக்களின் விமர்சனத்திற்கு உள்ளானது. மேலும் பெல்ஜிய அரசாங்கம் காங்கோவின் மீது தன் அரசரின் சொந்த ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர இறுதியில் கட்டாயப்படுத்தப்பட்டது. மேலும் பெல்ஜியப் பாராளுமன்றத்தின் ஆட்சியின் கீழ் அதைக் கொண்டு வந்தது.



*இரண்டாம் லியோபோல்ட் மன்னர்*

அண்டை நாடான பிரெஞ்சு காங்கோவிலும், இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டது. சலுகை கம்பெனிகளால் பெரும்பாலான வள ஆதார பாகங்கள் கடத்தப்பட்டு வந்ததால் அவர்களின் கொடூரமான முறைகள். உள்நாட்டு மக்கள் தொகையில் 50% இழப்பிற்கு காரணமாக விளங்கியது.

## தென் ஆப்ரிக்கா

நன்னம்பிக்கை முனையில் அவ்வழியே கடந்து செல்லும் கப்பல்களுக்கு ஓய்வெடுக்க மற்றும் உணவு அளிப்புகளை வழங்கி உதவுவதற்காக ஒரு மையம் ஆங்கிலேயரால் நிறுவப்பட்டது. சில டச்சு விவசாயிகள் இப்பகுதியில் பயிர் செய்யவும் கடந்து செல்லும் கப்பல்களுக்கு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்கவும் குடியேறினர். அவர்கள் அங்கிருந்த உள்ளூர் ஆப்ரிக்க மக்களுடன் சச்சரவில் ஈடுபட்டு அவர்களின் நிலத்திலிருந்து அவர்களை விரட்ட முயன்றனர். அவர்கள் 'போயர்கள்'(Boers) எனப்பட்டனர். ஆங்கிலேயர்கள் கடலின் மீது தங்களின் ஆதிக்கத்தை அதிகரிக்கத் தொடங்கியதும், போயர்கள்




SCERT TELANGANA



படம். 17.7: போயர் போர் நடைபெறும் காட்சி.

மனநிறைவு குன்றி புதிய பகுதிகளுக்கு குடிபெயரத் தொடங்கி, சுதந்திரப் குடியரசுகளையும் நிறுவிக் கொண்டனர்.

தங்கம் மற்றும் வைரச் சுரங்கங்கள் அப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட போது (1869 மற்றும் 1886) ஐரோப்பா ஆப்ரிக்கா மற்றும் இந்தியாவின் பெரும்பாலான மக்கள் தென் ஆப்ரிக்காவிற்கு குடிபெயர்ந்து சுரங்கங்களின் மூலமாக பயனடைய விரும்பினர். தற்போது ஆங்கில அரசாங்கம் போயர்களின் சுதந்திரத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்பி சுரங்கப் பகுதிகளின் மீது தங்களின் ஆதிக்கத்தை நிறுவினர். அவர்கள், தென் ஆப்ரிக்கா என்று தற்போது அழைக்கப்படும் பெரும்பாலான பகுதியின் மீது தங்களின் ஆதிக்கத்தைப் பெற இரண்டு கடுமையான போர்களைச் செய்தனர். இந்த போர்கள் 1902ல் முடிவுக்கு வந்தன. மேலும் ஆங்கிலேய அரசு தென் ஆப்ரிக்காவின் அனைத்துப் பகுதிகளை ஒருங்கிணைத்து ஒரு ஐக்கிய தென்னாப்பிரிக்காவாக மாற்றியது. இந்த சமயத்தில் தென் ஆப்ரிக்கா ஒரு மிகவும் கலப்பு மக்கள் தொகையான ஐரோப்பியக் குடியேறிகளையும் (முக்கியமாக ஆங்கிலேயர்கள் மற்றும் டச்சுக்காரர்கள்), கருப்பின ஆப்ரிக்கர்கள், இந்தியர்கள் மற்றும் சீனர்கள் போன்றவர்களையும் கொண்டிருந்தது. ஆங்கிலேயர்கள் ஐரோப்பியர்களுக்கு (வெள்ளையர்கள் என்று அழைக்கப்பட்ட மக்கள் தொகையில் 20%) சாதகமான ஒரு அரசாங்க அமைப்பை நிறுவி அவர்களுக்கு வாக்களித்தல் போன்ற குடியுரிமைகளை வழங்கி, கருப்பர்களுக்கும் (மக்கள் தொகையில் 75%) மற்றும் இந்தியர்களுக்கும் (சுமார் 5%) வேறு பாட்டினைக் காட்டியும் வந்தது. உள்ளூர் ஆப்ரிக்கர்கள் அதிக வரி விதிப்பிற்கு ஆளானார்கள். மேலும் மிகச் சிறிய தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் மட்டும் அடைந்து கிடக்கப்பட்டனர். வெள்ளையர்களுக்கான ஒதுக்கப்பட்ட எந்த பிற பகுதியிலும் அவர்களால் நிலத்தை பெற முடியாமல் இருந்தனர். இவ்விதம் அனைத்து நிலப் பகுதியில் 90% வெள்ளையர்கள் பெற்றிருந்தனர். பல்வேறு நிறவேற்றுமைச் சட்டங்கள் இயற்றப்பட்டு பண்ணைகளிலும் சுரங்கங்களிலும் பிரிட்டிஷ் குடியேறிகளுக்கு கருப்பர்களும் இந்தியர்களும் பணியாற்றுவதை உறுதி செய்யப்பட்டன. அவர்களுக்கு சுதந்திரமாக நடமாடவும் அவர்களின் இன்னல்களை வெளிப்படுத்த கூட்டமைப்புகளை உருவாக்கிக் கொள்ளும் உரிமைகளான குடியுரிமைகளும் மறுக்கப்பட்டன. இன வேறுபாடுகளை ஆதாரமாகக் கொண்ட மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு எதிர்ப்பான இக்கொள்கை நிறவெறிக் கொள்கை எனப்பட்டது. ஆப்ரிக்க மக்கள் 20ஆம் நூற்றாண்டு முழுவதும் இதை எதிர்த்துப் போரிட்டனர். இப்போராட்டம் இறுதியாக 1994ல் முடிவுக்கு வந்தது.

1400ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா முழுவதும் அதாவது ஐரோப்பாவைத் தவிர அனைத்துக் கண்டங்களும் ஐரோப்பிய சக்திகளால் காலனி ஆதிக்கம் செலுத்தப்பட்டது என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அவர்கள் இந்த நாடுகள் மற்றும் மக்களின் மீது தங்களின் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்தை நிறுவி அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றினர். இருப்பினும் அவை ஒரே மாதிரியான முறையில் காலனி ஆதிக்கம் செலுத்தப்படவில்லை அல்லது அதுபோன்ற விளைவுகளுக்கு ஆளாகவில்லை. அமெரிக்காவில் உள்ளூர் மக்கள் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதையும், எவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டனர் என்பதையும் நீங்கள் கண்டீர்கள். ஐரோப்பியர்கள் அங்கு எவ்வாறு குடியேறினர். ஆப்ரிக்கா போன்ற பிற கண்டங்களிலிருந்து மில்லியன் கணக்கான மக்களைக் கொண்டு வந்து அமெரிக்காவில் எவ்வாறு அடிமைகளாக நிலைபெறச் செய்தனர் என்பதையும் நீங்கள் கண்டீர்கள். அவர்கள் இந்திய மக்களின் மீது எவ்வாறு ஆதிக்கத்தை செலுத்தினர் என்பதையும்

ஆனால் இந்தியர்களைக் கொல்லாமலும் அடிமைப்படுத்தாமலும் இருந்தனர் என்பதையும் நீங்கள் கண்டீர்கள். அவர்கள் அதிக எண்ணிக்கையில் இந்தியாவில் குடியேறவுமில்லை, மாறாக அவர்கள் இந்தியாவின் இயற்கை வளங்களின் மீதும் விவசாயத்தின் மீதும் வரிவிதிப்பு, குறைந்த விலைகளில் கச்சாப் பொருட்களை வாங்குதல், அதே சமயம் இந்தியாவில் தங்களின் தொழில் உற்பத்திப் பொருட்களை விற்றல் போன்றவற்றின் மூலமாக ஆதிக்கத்தை நிறுவ முயற்சித்தனர். ஐரோப்பியர்களால் சீனாவின் மீது முழுமையான அரசியல் ஆதிக்கத்தை அமைக்கக் கூட இயலவில்லை. ஆனால், அவர்கள் சுதந்திரமாக வியாபாரம் செய்ய செல்வாக்கு மையங்களை நிறுவினர்.

இவ்வாறு ஐரோப்பிய சக்திகள் குடியேற்றப்பகுதி மக்களின் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையை ஐரோப்பிய சக்திகளின் தேவைக்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்தனர். இருப்பினும் அதே நேரத்தில் அவர்களால் குடியேற்றப் பகுதிகளில் சுதந்திரம், மக்களாட்சி மற்றும் தேசிய உணர்வு போன்ற புதிய சிந்தனைகள் உருவாவதை தடுக்க முடியவில்லை. இந்த சிந்தனைகள் குடியேற்றப் பகுதி மக்களுக்கு காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடவும் படிப்படியாக சுதந்திரத்தை வெல்லவும் ஒரு புதிய ஆற்றலையும் அடையாளத்தையும் தந்தது.

## முக்கியச் சொற்கள்

1. காலனி ஆதிக்கம்
2. இலத்தீன் அமெரிக்கா
3. ஆட்டோமன் பேரரசு
4. ஆய்வுகள்
5. நிறவெறி
6. ஹேசியண்டாக்கள்
7. மன்ரோ கொள்கை
8. ஓப்பியப் போர்கள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. காலனி ஆதிக்கத்தில் வாணிகத்தின் பங்கு என்ன?(AS1)
2. குடியேற்ற ஆதிக்கத்தால் பல்வேறு நாடுகளிலிருந்து உள்ளூர் மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பாதிப்புகள் யாவை? மூன்று கண்டங்களிலும் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள்/ மதம்/இயற்கை வளங்களை பயன்படுத்திய விதம் – போன்ற தலைப்புகளின் மீது ஒவ்வொன்றைப் பற்றியும் இரண்டு கருத்துக்களை எழுது.(AS1)
3. சீனா, இந்தியா மற்றும் இந்தோனேஷியா மீது குடியேற்ற ஆட்சியின் தன்மையை ஒப்பிடு. அவற்றிடையே நீ காணும் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் யாவை?(AS1)
4. போர்ச்சுகல், டச்சு, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளை உலக வரைபடத்தில் குறித்து வண்ணம் தீட்டுக.(AS5)

## செயல்திட்டம்

பிரிட்டனின் குடிமகனாக நீ இருந்தால் அதன் காலனி ஆதிக்கத்தை நீ ஆதரிப்பாயா? ஏன்? இந்தியக் குடிமகனாக காலனி ஆதிக்கத்தை நீ ஆதரிப்பாயா, மறுப்பாயா? உன் கருத்துகளை சுருக்கமாக வழங்கு.

SCERT TELANGANA

பாடம்

16

# இந்தியாவில் காலனி ஆதிக்கத்தின் தாக்கம்

எட்டாம் வகுப்பில், நாம் காலனி ஆதிக்க கொள்கைகளால் ஆந்திரபிரதேசத்திலுள்ள காடுகள் எவ்வாறு பாதிப்பிற்கு உள்ளாயின என்பது குறித்து படித்தறிந்தோம். இந்த பாடத்தில் காடுகள், தொழிற்சாலை மற்றும் தொழிலாளர் குறித்த கொள்கைகளால், நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களின் வாழக்கை மீது ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து கவனம் செலுத்துவோம்.

## ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு காடுகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன?

**பண்டைக் காலத்தில் இருந்தே, காடுகளின் உள்ளேயும், அருகிலும் வாழ்ந்து வந்த ஆதிவாசிகளும், கிராம மக்களும், அவர்களின் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பல்வேறு பொருட்களை பெற்றுவந்தனர். அவர்கள் காடுகளின் முதலாளிகளாக வாழ்ந்தனர். வேட்டையாடவும், கிழங்குகள், பழங்கள், மலர்கள் மற்றும் மூலிகைகளை சேகரிக்கவும், கால்நடைகளை மேய்க்கவும் காடுகளை பயன்படுத்தினர். சில இடங்களில் மரங்களை வெட்டி எரித்து, நிலத்தை சீரமைத்து விவசாயம் செய்தனர். மரக்கட்டைகளை வெட்டி வீடுகள்கட்ட மற்றும் கருவிகள் தயாரிக்க பயன்படுத்தினர். காட்டு பொருட்களை தங்களின் சொந்த பயன்களுக்காக உபயோகப்படுத்திக் கொண்டனர். தங்களுக்கு தேவையான உப்பு, இரும்பு போன்ற பொருட்களை வாங்கவேண்டிய சமயங்களில் மட்டும், காட்டு உற்பத்தி பொருட்களை விற்றனர். காட்டு மரக்கட்டைகள் மற்றும் இதர பொருட்களையும் லாபம் பெறுவதற்காக விற்கவில்லை.**



*படம் 18.1: தெலங்கானாவில் உள்ள நல்லமலைக்காடு*

**விவசாய நிலங்களாக மாற்றிட, பெருமளவு காட்டுப்பகுதிகள் வெட்டி சாய்க்கப்படுவது குறித்து விவசாயிகள் மற்றும் பழங்குடி மக்களிடையே இழுபறிநிலை இருந்ததென்றாலும், அதிகளவு** காட்டுப்பகுதிகள் தொடர்ந்து நீடித்து இருந்தன. விவசாயிகளும், ஆதிவாசிகளும் இக்காடுகளை பயன்படுத்தி கொண்டது மட்டுமின்றி பாதுகாத்து வந்தனர். மரக்கட்டைகள் தேவைப்பட்ட போது, பழைய மரங்களை மட்டும் வெட்ட வேண்டும் என்பதில் அக்கறைகாட்டினர். புதிய மரங்கள் வளர்ந்திட அனுமதித்தனர். பெருமளவு காட்டுப்பகுதிகளை கண்மூடி தனமாக வெட்டவில்லை. சிறு அளவு காட்டு பகுதிகளை மட்டும் வெட்டினர். அதனால் காடுகள் முழுவதும் அழிக்காமல் பார்த்துக்கொண்டனர்.

- ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு ஆதிவாசிகளின் நிலைமை மற்றும் அவர்கள் காடுகளை பயன்படுத்தியதை குறிக்கும் வாக்கியங்களை கோடிட்டு காட்டுங்கள்.

காடுகளில் வசித்து வந்த மக்கள், அவ்வப்போது மன்னர்களுக்கும், பேரரசர்களுக்கும் மதிப்புமிக்க பொருட்களான தந்தங்கள், விலங்கு தோல்கள், தேன் போன்றவற்றை பரிசாக அளித்தனர். நிலத்தை விவசாயம் செய்ய பயன்படுத்தியவர்கள் வரிகளை கட்டினர். பல்வேறு ஆதிவாசி மக்கள் மாற்று விவசாயம் மேற்கொண்டனர். இது ஜும்மிங்விவசாயம் என்றும் அழைக்கப்படுகிறது. மன்னர்களும், பேரரசர்களும், காட்டுவாசிகள் தங்கள் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படுத்தாது இருந்தது வரை, அவர்களை கட்டுப்படுத்தும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை விதிக்காமல், தனித்து சுதந்திரமாக வாழ விடடனர். எனவே, ஆதிவாசிகள் பல நூற்றாண்டுகளாக காடுகளோடு ஒன்றி அமைதியாக வாழ்ந்தனர். அவற்றிடம் இருந்து தங்கள் அன்றாட தேவைகளுக்கான பல பொருட்களை பெற்றனர். காடுகளை கவனத்துடன் பாதுகாத்து வந்தனர்.

## ஆங்கிலேயர் ஆட்சியின் போது காடுகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன?

ஆங்கிலேயர் ஆட்சியின் போது நிலைமைமாறியது. அச்சமயத்தில் கொல்கத்தா மற்றும் மும்பை மாநகரங்கள் போன்றே வரையத்தொடங்கின. ஆங்கிலேய அரசு ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் ரயில்வே பாதைகளை நாடுமுழுவதும் அமைத்து கொண்டிருந்தது. பெரிய கப்பல்கள் கட்டுமானம் செய்யப்பட்டன. சுரங்கங்கள் துவக்கப்பட்டன. இவற்றிற்காக பெருமளவு மரக்கட்டைகள் தேவைப்பட்டன. எனவே, மரக்கட்டைகளுக்கான வாணிபம் மிக விரைவாக வளர்ச்சியடைந்தது.



படம் 18.2: சிட்டகாங் மலை பகுதிகளில் காசாலாங் நதியோட்டம் மூலம் மிதந்து செல்லும் மூங்கில் மரக்கட்டைகள்

### ரயில்வே பாதைகளுக்கான மரக்கட்டைகள் (ஸ்லீப்பர்கள்)

இந்தியாவில் 1879ஆம் ஆண்டில் 8000கி.மீ நீளம் கொண்ட ரயில் பாதைகள் இருந்தன. 1910ஆம் ஆண்டில் 50,000கி.மீக்கும் மேற்பட்ட நீளம் கொண்ட ரயில் பாதை அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டும் இப்புதிய ரயில் பாதைகள் அமைக்க ஒரு கோடி மரக்கட்டைகள் (ஸ்லீப்பர்கள்) தேவைப்பட்டன. இவற்றிக்காக, இமயமலை மற்றும் தெரை பகுதிகளில் இருந்த காடுகளில் இருந்து மரக்கட்டைகள் வெட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டன. கட்டிடங்கள், கப்பல்கள், சுரங்கங்கள் போன்றவற்றின் கட்டுமானங்களுக்கும் அதிக அளவு மரக்கட்டைகள் வெட்டப்பட்டு, விற்கப்பட்டன. இப்பணியை, மரக்கட்டை வர்த்தகர்கள் மற்றும் காடுகளை ஒப்பந்தமுறையில் எடுத்துக்கொண்டவர்களால் வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் மூலம் செய்யப்பட்டன.

**ஸ்லீப்பர்கள் : ரயில் தண்டவாளங்களுக்கு அடியில் அமர்த்தப்படும் மரக்கட்டைகள் ரயில் தண்டவாளத்தை பிடிப்பாக வைத்திருக்கும்.**

ஆங்கிலேய அரசாங்கமும், ஆங்கிலேய கம்பனிகளும் இவ்வணிகத்தால் பெருமளவு லாபம் ஈட்டின. அரசாங்கம் ஏலம் விடுவதன் மூலம், காடுகளை வெட்டிக்கொள்ளும் உரிமையை விற்றது. ஒப்பந்தகாரர்கள் இதற்காக அதிகளவு பணத்தை அரசாங்கத்திற்கு செலுத்தினர். இந்த ஏலங்கள் மூலம் அரசாங்கம் அதிகளவு பணத்தை வருவாயாக ஈட்டியது.

## ஆபத்தில் உள்ள காடுகள், புதிய மரங்களை நடவேண்டியதின் தேவை

மரக்கட்டைகளின் வாணிபம் விரைந்து வளர்ந்ததால், ஆங்கிலேய அரசாங்கம் கவலையுற்றது. இவ்வாறு காடுகள் விரைவாக அழிக்கப்பட்டால் ரயில்வேக்களுக்கும், கப்பல்களுக்கும், வீடுகளுக்கும், எதிர்கால தேவைகளுக்கு எங்கிருந்து பெறுவது என யோசிக்க தொடங்கியது.

- ரயில் தண்டவாளங்களுக்கு அடியில் பயன்படுத்தப்பட்ட பழைய மரக்கட்டைகளை (ஸ்லீப்பர்கள்) நீங்கள் பார்த்தீர்களா? தற்போது இவற்றிற்கு பதிலாக எவை பயன்படுத்தபடுகின்றன? இம்மாற்றம் ஏன் நிகழ்ந்துகொண்டு இருக்கிறது என்பது குறித்து கலந்துரையாடு.

மரக்கட்டைகளின் அளிப்பு

SCERT TELANGANA



*படம் 18.3: சோட்டா நாக்பூர் பகுதியில் சிங்பூம் காடுகளில், சால்மரத்துண்டுகள் ஸ்லீப்பர்களாக மாற்றப்படும் காட்சி (மே மாதம் 1897).*

*ஆதிவாசிகள் காட்டு இலாக்காவால், மரங்களை வெட்டும் பணிக்காக கூலிக்கு அமர்த்தப்பட்டனர். அவர்கள் மரங்களை, வழுவழுப்பான மரப்பலகைகளாக வெட்டினர், இவை ரயில்தண்டவாளங்களின் அடியில் இடப்படும் மரக்கட்டைகளாக பயன்படுத்தபட்டன. அதே சமயத்தில் ஆதிவாசிகள் தங்கள் சொந்த வீடுகளை கட்டிக்கொள்ள, சால் மரங்களை வெட்ட அனுமதிக்கப்படவில்லை.*

தொடர்ந்து நிரந்தரமாக கிடைக்கச்செய்ய ஏதாவது செய்யவேண்டும் என்று அரசாங்கம் கருதியது.

எனவே, காடுகள் வெட்டப்பட்ட இடங்களில், புதிய மரங்களை வளர்த்திட முடிவு செய்தது. ஆனால், அரசாங்கம் பொதுமக்களுக்கு பயன்படும் மாமரம், வேப்பமரம், போன்ற மரங்களை நடுவதற்கு அரசாங்கம் விரும்பவில்லை. சந்தைகளில் அதிக தேவை இருந்த மரக்கட்டைகளை தரும் மரங்களை மட்டும் வளர்த்திட விரும்பியது. தேக்கு மற்றும் பைன் மரக்காடுகள் அழிக்கப்பட்டட இடங்களில் மரங்களை வளர்க்கத் தொடங்கியது.

## அரசாங்கம் வனத்துறையை அமைத்தது

ஆங்கிலேய அரசாங்கம் 1864ஆம் ஆண்டு வனத்துறையை அமைத்தது. புதியதாக நடப்பட்டு வளர்த்துவந்த காட்டுப்பகுதிகளை பாதுகாக்க, வனத்துறை புதிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை ஏற்படுத்தியது. இச்சட்டங்கள் மூலம் பழைய காட்டுப்பகுதிகள் முழுவதும் அழிக்கப்படுவதை தவிர்த்து, மிகவும் கவனமாக வெட்டப்படுவதற்கு வழிமுறைகள் செய்தது. இச்சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் காடுகளை கட்டுப்படுத்த அரசாங்கத்திற்கு உதவின. காடுகளின் அருகில் வாழும் மக்களிடம் இருந்து காடுகளை பாதுகாத்தல் அவசியம் என வனத்துறை கருதியது.

## ஆதிவாசிகளின் கலகங்கள்

காட்டுப்பகுதிகளில் வசித்து வந்த ஆதிவாசி இன விவசாயிகளின் நிலைமைகள் ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் எவ்வாறு பாதிக்கப்பட்டன என்பதை நாம் பார்த்தோம். மத்திய பிரதேசம் மற்றும் சத்தீஷ்கர் மாநிலங்களை சேர்ந்த பைகா, முரியா, கோண்ட மற்றும் பில் இன மக்கள் மற்றும் ஆந்திர பிரதேசத்தை சேர்ந்த கோயா, ரெட்டி, கோலம் இன மக்கள், ஓடிசாவின் சவோரா ஆதிவாசிகள், அவர்களுடைய பழைய விவசாய முறையை பின்பற்ற முடியாமல் போனது. அவர்கள் வனத்துறை அல்லது ஒப்பந்தகாரர்களிடம் வேலை செய்யும் கூலியாட்களாக மாற வேண்டியதாயிற்று. வட்டி வியாபாரிகள் அல்லது வெளியிடங்களில் இருந்து வந்த விவசாயிகளின் நிலங்களில் கொத்தடிமைகளாக வேலை செய்விக்கப்பட்டனர்.

சாலை மற்றும் ரயில் பாதைகள் மூலம் சேரக்கூடிய இடங்கள், வெளியிடங்களை சேர்ந்த மக்கள் வந்து நிலங்களை கைப்பற்றி குடியேற எளிதாக இருந்தன. வனத்துறையின் அதிகாரமும் அதிகரித்தது. அபராதம் விதித்தல், சிறிய விஷயங்களுக்காக மக்களை அடித்தல், மக்களின் வீடுகளுக்குள் வலுகட்டாயமாக நுழைந்து பொருட்களை எடுத்துச்செல்லுதல், பெண்களை இழிவாக நடத்துதல், லஞ்சம் வாங்குதல், கூலி கொடுக்காமல் மக்களிடம் வேலை வாங்குதல் போன்றவை சாதாரணமாக நிகழ்ந்துவந்தன.

இப்படிப்பட்ட பாதகமான சூழ்நிலைகளை எதிர்த்து, ஆதிவாசிகள் பல்வேறு இடங்களில் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினர். எதிர்ப்பு போராட்டங்களின் போது, காவல் நிலையங்கள், வனத்துறையின் சாவடிகள், வட்டி வியாபாரிகளின் வீடுகள் போன்றவற்றை எரித்தனர். பல இடங்களில் காட்டுப்பகுதி முழுவதற்கும் தீயிட்டு கொளுத்தினர்.

SCERT TELANGANA

1856ஆம் ஆண்டில் ஜார்கண்டின் சாந்தால் ஆதிவாசிகள், 1880 மற்றும் 1922ல் ஆந்திரப்பிரதேசத்தின் கோயர்கள், 1910ல் பஸ்தர் பகுதியின் மரியா மற்றும் முரியா ஆதிவாசிகள், 1940ல் கோண்ட் மற்றும் கோலம் ஆதிவாசிகள் இவ்வாறான எதிர்ப்பு போராட்டங்களை நடத்தினர்.

### சந்தால் கலகம் :

ஜார்கண்ட் பகுதியை சேர்ந்த சந்தால்கள் துவக்கத்தில் இருந்து ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து போராட்டம் நடத்தி வந்தனர். 1855-56ஆம் ஆண்டுகளில் சந்தால்களின் மாபெரும் கலகம் நிகழ்ந்தது. இதில் ஜமீன்தார்கள் மற்றும் வட்டி வியாபாரிகள் கொல்லப்பட்டனர். அவர்களின் சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டன. இக்கலகத்திற்கு பின்னர், ஆங்கிலேய ஆட்சி முடிவுற்றது என்றும், சுதந்திர மாநிலத்தை அமைப்பதாகவும், சந்தால்கள் அறிவித்தனர். சந்தால்களிடம் அம்புகள்-வில்கள் மட்டுமே ஆயுதங்களாக இருந்தன. அதனால் துப்பாக்கி ஏந்திய ஆங்கிலேய ராணுவத்தை எதிர்த்து நிலைத்திருக்க இயலவில்லை, கொடூரமான போரின் இறுதியில், 15,000 சந்தால்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் கலகம் இறுதியில் அடக்கப்பட்டது.

### பிர்ஸா முண்டா தலைமையில் நடந்த கலகம்

1874 மற்றும் 1901 ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில், தற்போதைய ஜார்கண்ட் மாநிலத்தின் சோட்டாநாக்பூர் பீடபூமி பகுதியைச் சேர்ந்த முண்டா ஆதிவாசிகள், பிர்ஸா என்னும் இளைஞனின் தலைமையில் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயே ஆட்சியை எதிர்த்து போராட்டம் நடத்தினர். அவர்கள் பிர்ஸாவை தெய்வமாக போற்றி, அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் பின்பற்றினர். ஜமீன்தார்களையும், வட்டிவியாபாரிகளையும் பாதுகாத்து ஆங்கிலேய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர விரும்பினர். தங்கள் நிலங்கள் மீதான உரிமைகளையும், காடுகளின் மீதிருந்த உரிமைகளையும் பறித்திட்ட நீதிமன்றங்களையும், முடிவுகட்ட விரும்பினர். இறுதியில், முண்டாஇன கலக தலைவர்களை கைது செய்து, சிறையில் அடைக்கப்பட்டதால், அவர்களின் கலகம் ஒடுக்கப்பட்டது. பிர்ஸா முண்டா, 1900ஆம் ஆண்டில் சிறையில் மரணமடைந்தார். இருப்பினும், சோட்டாநாக்பூர் பீடபூமி பகுதி முண்டா இன ஆதிவாசிகளின் உரிமைகளை காக்கும் சட்டங்கள் இயற்ற வேண்டிய கட்டாயத்தை உணர்ந்தது.

### குமான் காட்டு பகுதியின் கலகம் (1921-22)

உத்தராகண்ட் மாநிலத்தின் குமான் பகுதியை சேர்ந்த விவசாயிகள், காடுகளின் மீது தங்களுக்கிருந்த உரிமைகளை அரசாங்கம் எடுத்துகொண்டதால், வனத்துறையுடன் ஒத்துழைக்க மறுத்தனர். வனத்துறையின் விதிமுறைகளை வெளிப்படையாக எதிர்த்து செயல்பட்டனர். ஒப்பந்தகாரர்களால் பயன்படுத்தபட்டு வந்த காட்டு பகுதிகளை எரித்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வனத்துறைக்காக காட்டிய உழைப்பை செய்திட இம்மக்கள் மறுத்தனர்.

இந்நிகழ்வுகளால், ஆங்கிலேய அரசாங்கம் தனது கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. பல்வேறு இடங்களில் அரசாங்கம் தனது விதிமுறைகளின் கடினதன்மையை குறைத்துக்கொண்டது. சில பகுதிகளில் ஆதிவாசிகளின் நிலங்களை, வெளியூரைச் சேர்ந்த மக்கள் விலைக்குவாங்க கூடாது என்று கூறும் புதுச்சட்டங்கள் இயற்றப்பட்டன.

### அல்லூரி சீதாராம ராஜு



அல்லூரி சீதாராம ராஜு, ஜூலை 4ல் 1897ஆம் ஆண்டு பண்ட்ரங்கி கிராமத்தில், விசாகபட்டினம் மாவட்டத்தில் பிறந்தார். அவருடைய தாய் விசாகபட்டினத்தைச் சேர்ந்தவர். அவருடைய தந்தை பீமாவரம் அருகில் உள்ள மொகல்லு கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் ராஜமுந்திரியில் உள்ள மத்திய சிறைச்சாலையில் அரசு புகைப்படகாரராக பணியாற்றி வந்தார். அல்லூரி சீதாராமராஜு பள்ளியில் படித்துக்கொண்டிருந்த போது, அவருடைய தந்தை மரணமடைந்தார். அதனால், தன் சிற்றப்பா ராமசந்திர ராஜுவின் பாதுகாப்பில் வளர்ந்தார்.

SCERT TELANGANA

மதராஸ் வனச்சட்டம் 1882ஆம் ஆண்டு நிறைவேற்றபட்டது. இச்சட்டம் மலைவாழ் பழங்குடி மக்கள் காடுகளில் சுதந்திரமாக நடமாடுவதை கட்டுபடுத்தியது. அவர்கள் பின்பற்றி வந்த பாரம்பரிய பொடு விவசாய முறைக்கு தடைவிதித்தது. அல்லூரி சீதாராமராஜு, ஆந்திர பிரதேசத்தின் கிழக்கு கோதாவரி மற்றும் விசாகபட்டினத்தின் எல்லைப் பகுதிகளில் எதிர்ப்பு போராட்டங்களை தலைமையேற்று நடத்தினர். வங்காளத்தின் புரட்சியாளர்களின் தேச பக்தியின் ஆர்வத்தால், ஊக்கம் பெற்ற, அல்லூரி சீதாராமராஜு, தனது குழுவினருடன் சிந்தபல்லி, ரம்பசோடோவரம், தம்மனபல்லி, கிருஷ்ணதேவிபேட்டை, ராஜவொம்மாங்கி, அட்டதீகலா, நர்சிபட்டினம் மற்றும் அன்னவரம் போன்ற இடங்களில் அமைந்திருந்த ஆங்கிலேய காவல் நிலையங்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தி, துப்பாக்கிகளையும், குண்டுரவைகளையும் திருடிச் சென்றனர். தம்மனபல்லி அருகே ஆங்கிலேய ராணுவ அதிகாரி ஸ்காட் கவார்ட் என்பவர் உள்பட பல்வேறு ராணுவ அதிகாரிகளை கொன்றனர்.


ஆங்கிலேய அரசு, டிசம்பர், 1922ஆம் ஆண்டில், அஸ்ஸாம் ரைபின்ஸ் என்னும் ராணுவ பட்டாளத்தை, பெடகபல்லி அருகே உள்ள பகுதிக்கு சாண்டர்ஸ் என்பவரின் தலைமையில் தாக்குதல் நடத்த அனுப்பியது. அப்போது, தலைமறைவாக இருந்து வந்த அல்லூரி சீதாராமராஜு, நான்கு மாதங்கள் கழித்து வெளியே வந்து நேரிடையாக சண்டையை தொடர்ந்தார். காம்மல்லு துறை மற்றும் கண்டம் துறை போன்றோரின் தலைமையில், பழங்குடி தொண்டர்களின் படையுடன், வில்கள் மற்றும் அம்புகளுடன் வலிமைபெற்று எதிர்ப்பு சண்டையை நடத்தினார்.

ஆங்கிலேயரின் முகாம் டிசம்பர் 1922ல் இருந்து ஒரு வருடகாலத்திற்கு நீடித்து இறுதியில் அல்லூரி சீதாராமராஜு ஆங்கிலேய படைகளால் சிந்தபல்லி வனப்பகுதியில் மம்பாகிராமத்தில் கொய்யூரு அருகில் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டார்.

### கொமரம் பீம் :

கொமரம் பீம் சங்கபல்லி கிராமத்தில், அதிலாபாத் மாவட்டத்தில் பிறந்தார். இவர் 15வயது சிறுவனாக இருந்த போது, வனத்துறையினரின் தாக்குதலில் இவருடைய தந்தை கொல்லப்பட்டார். அதன்பிறகு, கொமரம் பீம் குடும்பத்தார் கெரிமேரி மண்டபத்தில் உள்ள சர்தாபூர் கிராமத்திற்கு இடம் பெயர்ந்து சென்று குடியேறினர்.

அக்கிராமத்தில் மாற்று விவசாயம் செய்து வாழ்ந்து கொண்டிருந்தார். நிஜாமின் உளவாளியான சிர்த்திக் என்னும் ஜாகிர்தார் கொமரம் பீமின் நிலத்தை அபகரித்துக்கொண்டார். இதனால் சினம் கொண்ட கொமரம் பீம், ஜாகீர்தார் சிர்திக்கை கொன்றார். காவல் துறையினரிடமிருந்து தப்பித்து சென்று அஸ்ஸாமில் தலைமறைவாக வாழ்ந்தார். அதன்பிறகு, ஐந்து ஆண்டுகள், காப்பி மற்றும் தேயிலை தோட்டங்களில் கூலி தொழிலாளியாக வேலை செய்தார். அச்சமயத்தில் அவருக்கு தொழிலாளர் போராட்டங்கள் மூலம் அனுபவம் கிடைத்தது. எழுதவும், படிக்கவும் கற்றுக் கொண்டார். தன்னுடைய ரகசிய தகவல் கூறுபவராக கொமரம் சூரு என்னும் நெருங்கிய நண்பர் மூலம், தன் பகுதியில் நிலவிய நிலைமைகளை புரிந்துகொண்டார். விசாகபட்டினத்தில் சுதந்திரத்திற்காக அல்லூரி சீதாராமராஜு நடத்திய எதிர்ப்புகள், போர்கள் மற்றும் பிர்ஸா முண்டா ஆதிவாசிகள் நடத்திய போராட்டம் போன்றவற்றால் ஊக்கம் பெற்றார். நிஜாம் ஆட்சியை எதிர்த்து போராட்டம் நடத்தினார்.



அச்சமயத்தில் நிஜாம் மன்னனின் அரசு, பம்பிராம் என்னும் பெயரில், பூப்பபெல்லி பகுதியில் கால்நடைகளை மேய்க்கவும், சமையலுக்கு விறகு சேகரிக்கவும் வரிவசூலித்து வந்தது. இவ்வரியை எதிர்த்து இன சுதந்திரம் மற்றும் உரிமைகளுக்காக கொமரம் பீம் கூறிய புரட்சிகரமான கருத்துகளால் பழங்குடி மக்கள் ஊக்கம் பெற்றனர். அதிலாபாத் மாவட்டத்தில் இருந்த ஏறத்தாழ பன்னிரெண்டு கிராமங்கள் நிலத்திற்காக போராட்டம் நடத்த ஆயத்தமாயின. கொமரம் பீம் இதற்காக கொண்ட் மற்றும் கோயா் இனத்தைச் சேர்ந்த இளைஞர்களை கொண்டு ஒரு கொரில்லாபடையை அமைத்தார். பழங்குடி மக்களுக்கு ஆயுதங்கள் கிடைக்காததால், அவர்களை ஒன்று சேர்த்து, போர் பயிற்சி அளித்தார்.

இவரது கொரில்லா யுத்தத்திற்கு ஜோதிகாட் எனும் பகுதி மைய பகுதியாக விளங்கியது. இதனால் ஆத்திரமடைந்த நிஜாம் மன்னன் ஆதிவாசிகள் மீது பல முறைகள் தாக்குதல் நடத்தினான், இறுதியில் ஒரு பௌர்ணமி நாளில் ராணுவத்தை எதிர்த்து ஜோதிகாட் காட்டுபகுதியில் போர் செய்து இறுதி மூச்சை விட்டார். அவருடைய மரணத்திற்கு பிறகு, நிஜாம் மன்னன் ஹைமென்டோர்ப் என்பவரை, பழங்குடி மக்களின் வாழ்க்கை முறை பற்றி ஆராய்ச்சி செய்திட நியமனம் செய்தார்.

SCERT TELANGANA

## ஆங்கிலேய அரசாங்கத்தின் தொழில் கொள்கை

1850களில் சில இந்திய துணி ஆலைகள் மிகுந்த தைரியத்துடன் நிறுவப்பட்டன. முதலில் மும்பையிலும், அதன் பிறகு அகமதாபாத்திலும் துணி ஆலைகள் நிறுவினர். இவ்வாறாக, இந்தியாவிலும் துணிகளின் தயாரிப்பு இயந்திரங்களால் செய்வது துவங்கியது. இங்கிலாந்தில் இருந்து இறக்குமதியாகும் துணிகளுக்கு சிறப்பு வரி விதிக்க வேண்டும் என்று சில கல்வியாளர்களும், தொழிற்சாலை முதலாளிகளும் கோரினர். அவ்வாறு செய்வதால், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட துணிகளுக்கு பாதுகாக்கபட்ட சந்தை கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர். சிறப்பு வரி விதிக்கப்படுவதால், இங்கிலாந்து துணிகள் மிகவும் விலை உயர்ந்ததாகி, இந்திய தொழிற்சாலைகளில் உற்பத்தியான துணிகளின் விற்பனை அதிகரிக்கும் என்றும் நம்பப்பட்டது.



படம். 18.4: கல்கத்தாவைச் சேர்ந்த மார்வாடி வர்த்தகர்களின் சித்திரப்படம்

ஆங்கிலேய அரசாங்கம், தன் நாட்டிற்குள் வரும் இந்திய நெசவுத் துணிகள் மீது சிறப்பு வரிவிதித்து, இங்கிலாந்து துணி தொழிற்சாலைகளுக்கு சாதகமாக நடந்துகொண்டது என்று உங்களுக்குத் தெரியுமா? ஆனால் இந்தியாவிற்குள் கொண்டு வரப்படும் இங்கிலாந்து நாட்டு துணிகள் மீது சிறப்புவரி விதிக்க அரசாங்கம் மறுத்துவிட்டது. ஆங்கிலேய வர்த்தகர்கள் மற்றும் ஆலை முதலாளிகள் அரசாங்கத்தின் மீது நெருக்கடி செய்ததால், அவர்களின் நலனுக்கு எதிராக முடிவு செய்யவில்லை.

1896ஆம் ஆண்டில், இந்தியாவில் ஆட்சி செய்து வந்த ஆங்கிலேய அரசாங்கம் மிகவும் கடுமையான வருவாய் பின்னடைவை சந்திக்க நேரிட்டது. எனவே, அரசாங்கம் தன்னுடைய வருவாயை அதிகரித்துக்கொள்ளும் வழிகளை குறித்து, திட்டமிட தொடங்கியது. அரசாங்கம் நிதிப்பற்றாக்குறையை சந்தித்து வந்த சமயத்தில், இங்கிலாந்தில் இருந்து இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட துணிகளுக்கு மூன்றரை சதவீதம் வரியை விதித்தது. ஆனால், இங்கிலாந்து துணிகளின் விற்பனையை பாதிக்காத வண்ணம் பார்த்துக்கொண்டது. அதே சமயத்தில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட துணிகளுக்கும் மூன்றரை சதவீதம் வரியை விதித்தது.

இவ்வரிவிதிப்பு, இந்திய மக்கள் மற்றும் ஆங்கிலேய அரசாங்கத்தின் இடையே நீண்ட தொடர் போராட்டம் ஏற்பட காரணமாக அமைந்தது. இந்திய தொழிற்சாலை பொருட்கள் மீது வரிவிதித்ததின் மூலம், ஆங்கிலேய அரசாங்கம் இங்கிலாந்து தொழிற்சாலைகளின் நலனை காப்பதை நோக்கமாக கொண்டது என்பதை தெளிவுபடுத்தியது. இவ்வரியை நீக்க வேண்டும் என்று கோரி, இந்தியாமுழுவதும் வலுவான எதிர்ப்பும், கோரிக்கையும் பரவியது.

அரசாங்கத்தின் பாதுகாப்பு இல்லாமலேயே துணி, நூல், சர்க்கரை, சணல், காகிதம், தீப்பெட்டி, சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. 1914ஆம் ஆண்டுக்கு பிறகு அவற்றின் விரைவான வளர்ச்சி ஏற்பட்டது.

- பாதுகாக்கப்பட்ட சந்தை என்பதன் பொருள் குறித்து கலந்துரையாடுக.
- இந்தியாவிற்குள் வரும் ஆங்கிலேயப் பொருட்கள் மீது வரியை விதிக்க வேண்டும் என்று நம் இந்தியர்கள் கோரினர். இது சரியான கோரிக்கை என்று கருதுகிறீர்களா? இந்தியா, ஆங்கிலேய தொழிற்சாலைகளை அரசாங்கம் சமமாக நடத்த வேண்டுமா?

## முதல் உலகப்போரின் போது, இந்திய தொழிற்சாலை



படம். 18.5: டில்லியைச் சேர்ந்த வட்டி வியாபாரிகளின் பழைய புகைப்படம்.

1914 முதல் 1918 வரை நிகழ்ந்த முதல் உலகப்போரின் போது, இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் அளவுமிகவும் குறைந்தது. சரக்கு கப்பல்கள் போர் சம்மந்தப்பட்ட பணிகளுக்கு ஈடுபடுத்தபட்ட நூல் கப்பல்களின் பற்றாக்குறை ஏற்பட்டதும் அதன் காரணங்களுள் ஒன்றாகும். மேலும், ஐரோப்பிய தொழிற்சாலைகள், யுத்தத்திற்கு தேவையானவற்றை உற்பத்திசெய்ய பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. எனவே, இந்திய சந்தைக்கு தேவையான பொருட்களில் சிலவற்றை மட்டும் இறக்குமதி செய்தனர்.

இந்த சூழ்நிலைகளில், இந்தியாவில் அமைக்கபட்ட தொழிற்சாலைகள் அதிகளவு பொருட்களை உற்பத்தி செய்து விற்றுவந்தன அதிகமான பொருட்களின் வரிகள் விதிக்கப்பட வேண்டும் என்றும், அதனால் இந்தியப் பொருட்களின் விற்பனை தொடர்ந்து அதிகரிக்கும் என்றும், இந்திய தொழிலதிபர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தி கேட்டனர்.

- முதல் உலகப் போரின் போது இந்திய தொழிற்சாலைகள் ஏன் விரைந்து வளர்ந்தன?

ஆங்கிலேய அரசாங்கம், பல்வேறு காரணங்களினால், இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டது. 1917ஆம் ஆண்டுக்குப்பிறகு பல்வேறு வெளிநாட்டுப் பொருட்களுக்கு, ஒன்றை அடுத்து மற்றொன்றின் மீது வரிகள் விதிக்கப்பட்டன இதன் விளைவாக, இந்தியாவில் நிறுவப்பட்ட தொழிற்சாலைகள் விரைந்துவளர்ந்தன.

## சுதந்திரம் அடைந்த போது, இந்திய தொழிற்சாலைகளின் பிரச்சனை

நீண்ட போராட்டத்திற்கு பிறகு, இந்திய தொழில் துறைக்கு, ஆங்கிலேய அரசின் சிறிய அளவு உதவி கிடைத்தது. இருப்பினும், பெரும்பாலான தொழிற்சாலைகள், வங்கிகள் போன்றவை ஐரோப்பியரின் கட்டுப்பாட்டில் இருந்தன. இந்தியரின் கட்டுப்பாட்டில் இல்லை. ஐரோப்பியராக இருந்தமையால், இவற்றிற்கு பல நன்மைகள் கிடைத்தன. ஐரோப்பியருக்கு, அரசாங்க அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்புகள் இருந்தன. இந்திய தொழிலதிபருக்கு அவ்விதமான சாதகமான சூழ்நிலைகள் இல்லை. நம் நாட்டின் அயல்நாட்டு வாணிபம் ஐரோப்பிய கம்பனிகளிடமே இருந்தது. எனவே, அவர்களுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படவில்லை. ஐரோப்பிய தொழிலதிபர்களின் ஆதிக்கம் அதிகம் இருப்பினும், இந்திய தொழிலதிபர்கள் மிகுந்த முன்னேற்றத்தை அடைந்தனர். எடுத்துக்காட்டாக இந்திய தொழிலதிபர்கள் துணி தயாரிப்பு தொழில் துறையை கட்டுப்பாட்டில்

SCERT TELANGANA

வைத்திருந்தனர். இந்திய தொழிலதிபர்களின் மிகச்சிறப்பான சாதனைகளில் முக்கியமான ஒன்றாக ஜம்ஷெட்பூரில் உருக்கு இரும்பு தொழிற்சாலையை ஜம்ஷெட்ஜி டாட்டா என்னும் தொழிலதிபர் நிறுவியதை குறிப்பிடலாம்.

அரசாங்கத்திடம் இருந்து இந்திய தொழிலதிபர்கள் பெற்ற உதவி யாதெனில், இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டு பொருட்கள் மீது சிறப்பு வரிவிதித்தல் ஆகும். ஆனால், அது போதுமானதாக இல்லை. இது தவிர, இரயில் பாதைவசதிகள், சாலைகள், மின்சார வசதி, நிலக்கரி மற்றும் இரும்பு போன்றவை தேவைபட்டன. ஆனால், ஆங்கிலேய அரசாங்கம் இவற்றின் மீது போதுமான அக்கறை செலுத்தி, மேம்படுத்தவில்லை.



*படம். 18.6: இந்திய தொழிலதிபர்களின் முன்னோடிகளாக விளங்கிய J.N.டாட்டா, R.D.டாட்டா, Sir.R.J.டாட்டா மற்றும் Sir.D.J.டாட்டா ஆகியோர்களின் படம்.*

இந்திய தொழிலதிபர்கள் தங்களுக்கு தேவையான எல்லா இயந்திரங்களையும் வெளிநாடுகளில் இருந்து வாங்க வேண்டியிருந்தது. இயந்திரங்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள் இந்தியாவில் அப்போது தொடங்கப்படவில்லை.

தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு, விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநகர்கள், தொழில்நுட்ப பணியாட்கள் போன்றோரின் உதவி தேவைப்படுகிறது. உற்பத்தியின் எல்லா நிலைகளிலும் கல்வி கற்ற தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், இந்தியாவில் கல்விக்கு போதுமான முக்கியத்துவம் தரப்படவில்லை. தொழிற்சாலை மேம்பாட்டிற்காக வெளிநாட்டவரை நம்பி இருக்க வேண்டியிருந்தது. ஏனென்றால், இந்திய விஞ்ஞானிகளும், தொழில் நுட்பவல்லுநர்களும் மிகக்குறைந்த எண்ணிக்கையில் இருந்தனர். சுதந்திரம் பெற்ற பின்னரும், கல்வியில் போதிய கவனம் செலுத்தாதால், குறைவான கல்வி கற்ற உழைப்பாளிகள் உருவாயினர். இதனால் தொழில் துறை வளர்ச்சி பாதிக்கப்பட்டது.

இந்திய தொழில் துறையின் நலனை மேம்படுத்த, பல்வேறு தொழிலதிபர்களை கொண்ட நிறுவனங்கள் ஆங்கிலேயர் காலத்திலேயே நிறுவப்பட்டன. அவற்றுள் மிக முக்கியமான ஒன்று, இந்திய வர்த்தகம் மற்றும் தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு FICCI ஆகும். இது போன்ற நிறுவனங்கள், தொழிலதிபர்களின் பிரச்சனைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்துச்சென்று தீர்வு காண உதவியது.

ஆங்கிலேயர் ஆட்சி முடிவுக்கு வந்து, சுதந்திர இந்தியாவில் அரசாங்கம் நிறுவப்பட்டவுடன், நிலைமை மாறியது. இந்திய அரசாங்கம் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு திட்டமிட்ட பொருளாதார முறையில் ஊக்கம் அளித்தது.

- ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் இந்தியாவில் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் யாவை?
- சுதந்திரம் அடைந்த போது இந்திய தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு தடையாக இருந்த பிரச்சனைகள் யாவை?

SCERT TELANGANA

## இந்திய தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் :

### தொழிற்சாலை நகரங்களும், தொழிலாளர் இருப்பிடங்களும்

1850ஆம் ஆண்டிலிருந்து, இயந்திரங்களை அடிப்படையாக கொண்ட தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. மிகப்பெரிய தொழிற்சாலைகளாக நூலிழை தயாரித்தல் மற்றும் நெசவு தொழிற்சாலைகள் விளங்குகின்றன. 1905 ஆம் ஆண்டில் 2.25லட்சம் தொழிலாளர்கள் துணி தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்தனர். 1.5லட்சம் பேர் சணல் தொழிற்சாலைகளிலும், 1லட்சம் பேர் நிலக்கரி சுரங்கத் தொழி-லும் ஈடுபட்டிருந்தனர்.

வேலை வாய்ப்பை எதிர்பார்த்த விவசாயிகளும், தொழிலாளிகளும், கைவினை தொழிலாளர்களும், கிராமங்களில் இருந்து நகர்புறங்களுக்கு வேலை வாய்ப்பை பெறும் நம்பிக்கையுடன் இடம் பெயர்ந்து வரத்தொடங்கினர். அவர்களுக்கு பிறகு, அவர்களின் சுற்றத்தார், சுற்றுப்புறத்தோர், நண்பர்கள் போன்றோர் நகரங்களுக்கு குடியேறினர், நகரங்களில் வாழும் தொழிலாளிகளின் எண்ணிக்கை பெருகியது. தொழிற்சாலைகளை சுற்றி தொழிலாளிகளின் குடிசைகள், கூடாரங்கள் தோன்றின கான்பூர், மும்பை, அகமதாபாத், கொல்கத்தா, சென்னை போன்ற இந்திய நகரங்கள் பெரிய தொழிற்சாலை நகரங்களாயின.

### வேலை நிலைமைகள் :

துவக்க கட்டத்தில், தொழிற்சாலைகளில் வேலை நேரம் விடியற்காலையில் துவங்கி, சூரியன் மறையும் போது முடிவிடையும். அவர்கள் வேலை தொடங்கினால், நிறுத்தும் பேச்சுக்கே இடமில்லை. உணவு உண்பதற்கான இடைவேளை என்று குறிப்பிட்ட நேரம் தரப்படவில்லை. அவர்கள் செய்யும் வேலையை 15 முதல் 20 நிமிடங்களுக்கு நிறுத்தி வைத்தோ அல்லது சமதொழிலாளியிடம் அவருடைய வேலைகளையும் கவனித்துக் கொள்ளுமாறு கூறி, தொழிலாளிகள் தங்கள் மதிய உணவை உண்டனர். உணவை உண்ண தனி இடமும் ஒதுக்கப்படவில்லை.

நாள் முழுவதும், அவர்களுடைய வேலை, வெப்பம், இடைவிடாத பலத்த சப்தங்கள், தூசுகள் மற்றும் மூச்சுத்திணரல் கலந்த சூழ்நிலைகளிலேயே செய்து முடிக்கப்படுகின்றன. சூரியன் மறையும் சமயத்தில், பார்க்க முடியாத அளவில் இருட்டாகும் போது, இயந்திரங்கள் இயங்குவது நின்றுவிடும். அவர்களின் வேலை நேரமும் முடியும்.

இது போன்ற வேலை சூழ்நிலைகள் மாதக் கணக்கில் நடந்திடும். வாராந்திர விடுமுறைதரும் விதிமுறைகள் கிடையாது. தொழிற்சாலையின் முதலாளி, மிகமுக்கியமான பண்டிகைகளின் போது விடுமுறை தருவார்.

ஆண்டின் எல்லாநாட்களிலும் வேலை செய்யமுடியாது. உடல்நலக்குறைவு, குடும்ப பொறுப்புகள் நிறைவேற்ற வேண்டியிருந்தது. தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்ததால் உடல் சோர்வடைந்தனர். தொழிலாளர் எப்போதாவது வேலைக்குச் செல்லாத போது, அவருடைய ஒருநாள் ஊதியம் குறைக்கப்பட்டது.

அந்நாட்களில், தொழிலாளர்களின் ஊதியங்கள், அவர்கள் உற்பத்தி பொருட்களின் மதிப்பின் அடிப்படையில் செலுத்தப்பட்டன. நீங்கள் எவ்வளவு அதிகம் உற்பத்தி செய்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக ஊதியம் செலுத்தப்படுவீர்கள் என்ற நிபந்தனை படி செயல்பட்டனர். சிலசமயங்களில் இயந்திரங்கள் பழுதடைந்தன. கச்சாப் பொருட்களின் அளிப்பு தாமதம் ஆயின மற்றும் பற்றாக்குறையாக இருந்தன. இவற்றிற்கு தொழிலாளர்கள் பொறுப்பில்லாவிட்டாலும் முதலாளிகள் வேலை செய்யாத நாட்களின் ஊதியத்தை குறைத்தனர். இவ்வாறாக, தொழிலாளிகள் நிலையான மாத ஊதியம் அல்லது வருவாய் பெற முடியாமல் இருந்தனர். அதுமட்டுமல்ல, மாத இறுதியில், முதலாளிகள், தொழிலாளிகளுக்கு முழுமையான ஊதியத்தை அளிப்பதில்லை. ஊதியத்தின் ஒரு பகுதியை, அடுத்த மாத இறுதிவரை அவர்களிடமே வைத்துக்கொண்டனர். அச்சமயங்களில் தொழிலாளர்கள் வேலையை விட்டு வெளியேறமுடியாத நிலை உருவானது. ஏனெனில், அவர்களுடைய முந்தைய மாத ஊதியத்தின் ஒரு பகுதி, முதலாளியிடமே அடைபட்டிருந்தது.

தொழிலாளிகளுக்கு அபராதங்களும் விதிக்கப்பட்டன. முதலாளிகள் சிறுகாரணங்களுக்கும் தொழிலாளர்கள் மீது அபராதங்கள் விதித்தனர். தொழிலாளிகள் பணிக்கு தாமதமாக வந்தாலும், ஆடைகளை சேதப்படுத்தினால், சிரத்தையுடன் வேலைசெய்யவில்லை என்று முதலாளி நினைத்தாலும், அபராதங்கள் விதிக்கப்பட்டன. அவர்களின் மாத ஊதியத்தில் இருந்து அபராதம் கழிக்கப்பட்டது.



படம் 18.7: தொழிற்சாலைகளுக்குச் செல்லும் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள்

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் போன்ற எல்லா விததொழிலாளிகளும், அந்த நிபந்தனைகளை ஏற்று, கோடைக்காலங்களில் 14மணி நேரமும், குளிர் காலங்களில் 12 மணிநேரமும் வேலை செய்ய வேண்டியிருந்தது.

அதன் பிறகு, 1880 ஆம் ஆண்டில், புதிய மாற்றம் உண்டானது. மில்களில் மின்சார பல்புகள் பொருத்தப்பட்டன. வெளிச்சத்தின் நேரம் அதிகரித்ததற்கு ஏற்ப, வேலை செய்யும் நேரமும் அதிகரிக்கப்பட்டது. இதனால் சூரியன் மறையும் போது, வேலையை நிறுத்த வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. ஒவ்வொரு தொழிலாளியும், தினந்தோறும் 15மணி நேரங்கள் வேலை செய்ய வேண்டியதாயிற்று.

இந்தியாவில், தொழிற்சாலைகள் நிறுவப்பட்ட ஆரம்ப காலத்தில்.

- தொழிலாளர்களின் வேலை செய்யும் நேரம் மற்றும் ஓய்வுக்கான விதிமுறைகள் யாவை?
- ஊழியர்களுக்கு ஊதியங்கள் செலுத்துவதில் இருந்த விதிமுறைகள் யாவை?
- தொழிலாளர்களின் ஊதியத்தில் எந்தெந்த காரணங்களுக்காக ஊதியம் குறைக்கப்பட்டது?

வேலை செய்யும் இடங்களிலும் பல்வேறு பிரச்சனைகள் இருந்தன. அவற்றில் முதன்மையானது வேலைப்பாதுகாப்பின்மையாகும். தொழிற்சாலை முதலாளிக்கு லாபத்தில் இழப்பு ஏற்பட்டால், அவர் சில தொழிலாளிகளை வேலையில் இருந்து நீக்குதல், ஊதியத்தை குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வார். ஆனால், தொழிற்சாலைக்கு அதிக லாபம் ஏற்பட்டால், தொழிலாளர்களுக்கு ஊதியங்களை அதிகபடுத்தினார்களா? இல்லை அப்படிபட்ட சம்பவம் எப்பொழுதும் ஏற்படவில்லை.


## தொழிலாளர்களின் போராட்டங்கள்

தொழிலாளர்கள் தங்களின் தொழிற்சாலைகளில் நிலவிய தாங்கமுடியாத நிலைமைகளை எதிர்த்து போராடினர். 1870ஆம் ஆண்டிலேயே மும்பையில், வேலைநிறுத்தங்கள் ஒன்றை அடுத்து மற்றொன்று நடந்தன. தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கங்கள் இல்லை. ஒவ்வொரு தொழிற்சாலையின் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து, வேலை நிறுத்தம் செய்து வந்தனர். தொழிற்சாலை முதலாளிகள் மீது உண்டாக்கினர்.

1892ஆம் ஆண்டில், மும்பையைச் சேர்ந்த தொழிலதிபர்கள், தொழிலாளர்களின் ஊதியத்தை குறைத்திட யோசித்து வந்தனர். அச்சூழ்நிலையில், எல்லா தொழிற்சாலைகளின் தொழிலாளிகள் ஒன்றுசேர்ந்து போராட்டம் செய்தனர். தொழிற்சாலைகளை ஆய்வுசெய்ய, அரசாங்கம் ஆய்வாளர்களை நியமித்தது. ஒரு தொழிற்சாலை ஆய்வாளர், தொழிலாளிகளின் நிலைமைகள் குறித்து எழுதும் போது, ஊதியக் குறைப்பு உண்மையிலேயே செயல்படுத்தப்பட்டால், மும்பை முழுவதும்

SCERT TELANGANA

வேலைநிறுத்தம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. தொழிலாளர்களுக்கென்று, தொழிற்சங்கங்கள் இல்லாவிட்டிலும், ஜாதி, இனம், கிராமங்கள் போன்றவற்றால் பொதுவாக ஒன்றுபட்டவர்கள், எளிதாக ஒன்றுசேர்ந்து, வேலை நிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.



படம் 18.8: தொழிலாளர் மாநாட்டைக் காட்டும் சுவரொட்டி

தொழிலாளர்கள் எவ்வாறு போராட்டம் நடத்தி, அவர்களின் நலனை காப்பாற்றிக்கொண்டனர் என்பதற்கு, இங்கே ஒரு எடுத்துக்காட்டு தரப்பட்டுள்ளது. 1900-1901 ஆண்டில், மும்பையில் இயங்கி வந்த 20 ஆலைகளில், தொழிலாளிகளின் ஊதியம் 12½% குறைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து 20,000 ஆலைத் தொழிலாளர்கள், வேலைகளை நிறுத்தி, வெளியேறி, வேலைநிறுத்தம் செய்தனர். அதனால் அந்த 20 ஆலைகளும் பத்துநாட்கள் மூடப்பட்டிருந்தது.

அதைப் போலவே, 1919ஆம் ஆண்டில், வாழ்வதற்கான செலவுகள் அதிகரித்தாலும், தொழிலாளிகளின் ஊதியங்கள் அதிகரிக்கப்படவில்லை. மும்பை நகரத்தில் இருந்த எல்லா ஆலைத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்தனர். இதனால், எல்லா தொழிற்சாலைகளும் பன்னிரெண்டு நாட்கள் மூடப்பட்டு இருந்தன.

ஆலைத் தொழிலாளிகள் தங்கள் ஊதிய உயர்வுக்காக மட்டுமல்ல, ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்தும், பேராடினர். 1908 ஆம் ஆண்டில் ஆங்கிலேய அரசாங்கம் புகழ்பெற்ற விடுதலைப்போராட்ட வீரரான லோகமான்ய பாலகங்காதர திலகரை 6 ஆண்டுகள் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு தண்டனை விதித்தது. இதை கண்டித்து, மும்பை நகர ஆலை தொழிலாளர்கள், 6 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இவ்வாறாக, தொழிலாளிகள் சுதந்திர போராட்டத்திலும், பலசமயங்களில் வேலைநிறுத்தங்கள் செய்து பங்கேற்றனர்.

## தொழிலாளர்களின் பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல்

ஆரம்பத்தில் இந்தியாவின் பெரும்பாலான கல்வியாளர்கள், தொழிலாளர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதில் அதிக கவனம் செலுத்தவில்லை என்பது வியப்படையச் செய்கிறது. இந்தியாவில் தொழிற்சாலைகளை எவ்வாறு அபிவிருத்தி அடையச் செய்வது என்பது அவர்களுடைய மனதில் மேலோங்கி இருந்தது. ஆரம்பகட்டத்தில், தொழிலாளர்கள் வேலை செய்யும் இடங்களில், இருக்க வேண்டிய நிலைமைகள் குறித்து அதிகமாக சிந்திக்கவில்லை.

- தொழிலாளிகள் ஏன் வேலை நிறுத்தம் செய்தனர்?
- வேறு நடவடிக்கைகளை விட வேலைநிறுத்தங்கள் நடத்தப்பட்டது ஏன்?

இதைவிட, ஆச்சரியப்பட வைத்த விஷயம் யாதெனில், இங்கிலாந்தைச் சேர்ந்த தொழிற்சாலை முதலாளிகளும், வர்த்தகர்களும், சமூக ஆர்வலர்களும், இந்திய தொழிலாளர்களின் நிலைமை குறித்து அக்கறை காட்டத்தொடங்கினர். அவர்கள் தொழிலாளிகளின் பிரச்சனைகள் குறித்து அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கு சுறுசுறுப்புடன் செயல்பட்டனர்.

இங்கிலாந்து நாட்டின் தொழிலதிபர்களும், சமூக ஆர்வலர்களும், இந்திய தொழிலாளிகளின் நிலைமைகளை மேம்படுத்த இங்கிலாந்தில் உள்ளதைப்போன்று சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்று அரசாங்கத்தின் மீது நெருக்கடி செய்ய துவங்கினர். இதன் விளைவாக, அரசாங்கம் தொழிலாளர்களின் வேலை செய்யும் நேரத்தை குறைக்கவும், தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கும் தீவிரமாக பரிசீலனை செய்தது.

SCERT TELANGANA

# தொழிலாளர்களுக்கான நல்வாழ்வுச் சட்டங்கள்

அரசாங்கம் தொழிற்சாலைகளின் முதல்சட்டத்தை 1881ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தியது. கீழ்காணும விதிமுறைகளை உண்டாக்கியது. வேலை செய்யும் குழந்தைகளின் நலனை காப்பதை சிறப்பு நோக்கமாக கொண்டிருந்தன.

- ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகளை தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தக்கூடாது
- 7 வயதிலிருந்து 12வயதுடையோரை, ஒரு நாளைக்கு 9மணி நேரத்தை விட அதிகமாக வேலைசெய்விக்க கூடாது. ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் ஓய்வு தரவேண்டும். ஒவ்வொரு மாதமும் நான்கு நாட்கள் விடுப்பு தரப்படவேண்டும்.


பெண் தொழிலாளிகளின் நலனை காக்க 1891ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி :

- பெண் தொழிலாளிகளை 11மணி நேரத்தை விட அதிகமாக வேலை செய்விக்கக்கூடாது.
- பெண் தொழிலாளர்களுக்கு, ஒவ்வொரு நாளும் ஒன்றரை மணி நேரம் ஓய்வு தரப்படவேண்டும்.
- குழந்தைகளின் வேலை நேரங்கள் 9மணிகளில் இருந்து 7 மணிகளாக குறைக்கப்பட்டது. தொழிற்சாலை முதலாளிகள் 9 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்த தடைசெய்யப்பட்டது.

தொழிற்சாலைகளில் வேலை செய்வோரில் பெரும்பான்மையினர் ஆண்கள், 1911வரை அவர்களின் நல்வாழ்விற்காக சட்டங்கள் எழுதப்படவில்லை. 1911ஆம் ஆண்டின் தொழிற்சாலை சட்டத்தின்படி

- வயது வந்த ஆண் தொழிலாளியை, ஒரு நாளில் 12மணி நேரங்களை விட அதிகமான நேரம் வேலை செய்விக்ககூடாது.
- ஒவ்வொரு ஆறுமணி நேர வேலைக்குப்பிறகு அரைமணிநேரம் ஓய்வு தரப்படவேண்டும்.

இந்தியாவும் பாகிஸ்தானும் இங்கிலாந்திடமிருந்து சுதந்திரமடைந்தது




தகவலறியும் உரிமை சட்டம்

கல்வி உரிமை சட்டம்

- ஆங்கிலேய தொழிலதிபர்கள், இந்திய தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்கு எதிரான போக்கு கொண்டிருந்தனர். இருப்பினும், அவர்கள் இந்திய தொழிலாளர்களுக்கு சாதகமாக நடந்துகொண்டனர். ஏன்?
- இந்தியாவில் கல்வியாளர்கள், துவக்கத்தில் தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்ததொழிலாளர்களின் நலனை காத்திட அதிககவனம் செலுத்தவில்லை. ஏன்?
- தொழிலாளர் சட்டப்படி, குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்களின் அதிகபட்ச வேலைநேரம் எவ்வளவு?
- ஆங்கிலேயர் காலத்தில், எந்த வயதுக்குட்பட்டோர், தொழிற்சாலைகளின் பணியில் அமர்த்தப்படக்கூடாது?
- தற்போது நடைமுறையில் உள்ள தொழிலாளர் சட்டப்படி, வேலைக்கு அமர்த்த குறைந்தபட்ச வயது எவ்வளவு? எவ்வயதுக்கும் கீழ்உள்ளோரை பணியில் அமர்த்தக்கூடாது?
- தொழிலாளர் சட்டங்கள், தொழிலதிபர்களை எவ்வாறு பாதித்திருக்கும்?

- நீ எந்த ஆண்டில் பிறந்தாய்? கால வரிசை கோட்டில் குறித்திடு. மேலும் உன் பெற்றோர், தாத்தா, பாட்டி, இதர வயதான சுற்றத்தாரின் பிறந்த ஆண்டுகளை காலவரிசைப்படி குறிப்பிடவும்.
- 1980ஐ பிறந்த ஆண்டாக கொண்டவர்களில் யாரெல்லாம் தொழிலாளர் சட்டங்களால் பாதிக்கப்பட்டனர் என்பதை கண்டறியவும்.

SCERT TELANGANA



படம் 18.9: 1931ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் உள்ள லாங்காஷைர் பகுதியைச் சேர்ந்த ஆலைத் தொழிலாளிகள் காந்தியடிகளை சந்தித்து மகிழ்ச்சியில் உள்ளனர். அவர்கள் இந்திய சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவை வெளிப்படுத்திய காட்சி

இதற்கு இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபர்களும், கல்வியாளர்களும் தீவிரமாக எதிர்ப்பு தெரிவித்தனர். தொழிலாளர்களுக்கு நிலையான ஊதியம், விடுப்பு போன்ற வசதிகள் அளிக்கப்பட்டால், உற்பத்தி அளவு குறைந்துவிடும் என்றும், முதலாளிகளின் உற்பத்தி செலவுகள் அதிகரிக்கும் என்றும் கருதினர். இதனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலைகள் மிகவும் அதிகமாகிவிடும். இந்நிலை நேரிட்டால், இங்கிலாந்தில் இருந்து இறக்குமதியாகும் பொருட்கள் மலிவாகி, சுலபமாக விற்கப்படும் இந்தியத் தொழிற்சாலைகளின் மேம்பாடு ஸ்தம்பித்துவிடும் என அஞ்சினர்.

ஆங்கிலேய தொழிலதிபர்கள், இந்திய தொழிலாளிகளின் நல்வாழ்விற்கு அக்கறை இருப்பது போல் பாசாங்கு செய்கின்றனர் என்று இந்திய தொழிலதிபர்கள் சந்தேகித்தனர். ஆங்கிலேயர் மனதில் சுயநல நோக்கங்கள் இருக்கலாம் என்றும் கருதினர். தொழிலாளர்களின் நலனுக்கு சாதகமாக சட்டங்கள் இயற்றப்பட்டால், இந்தியாவில் தொழிற்சாலைகள் வளர்ச்சியடைய முடியாது என்று, இந்தியாவில் இருந்த கல்விகற்றோர் கருதினர். வங்காளத்தைச் சேர்ந்த முக்கியமான செய்தித்தாளில் 1875ஆம் ஆண்டு வெளியிடபட்ட சில வரிகள் அந்நாட்களில் நிலவிய கருத்தை காட்டுகிறது, புதியதாக தோன்றி வளர்ந்து வரும் தொழிற்சாலைகள் அழிவதை விட, தொழிலாளிகள் அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து மாள்வதே மேலானது. நம் தொழிற்சாலைகள் நன்கு வளர்ச்சியடைந்த பிறகு, தொழிலாளிகளின் நலத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறான அச்சம், தொழிலதிபர்கள் மற்றும் கல்வி கற்றோரிடம் காணப்பட்டது. ஆனால், அது முழுவதுமாக நியாயபடுத்தபடவில்லை. இந்தியாவில் தொழிற்சாலைகள் லாபம் ஈட்டுவதற்காகவே துவங்கப்பட்டன. எப்போதும் புது ஆலைகள் திறக்கபடுதல் நிகழ்ந்து கொண்டே இருந்தது.

நிலைமை எவ்வாறு இருப்பினும், தொழிலாளர்கள் தேவைபட்டனர். அவர்கள் அபாயகரமான, சூழ்நிலைகள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களின் மேம்பாட்டுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன, ஏனெனில் தொழிற்சாலைகளின் மேம்பாடு தொழிலாளர்களின் கையில் இருந்தது.

## தொழிலாளர் சங்கங்கள்

காலத்தோடு தொழிலாளர்களின் பிரச்சனைகளும் நன்கு பிரபலமாயின. சில கல்வியாளர்கள் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்க தொடங்கினர். செய்தித்தாள்களில், கட்டுரைகள் மூலம் தொழிலாளர்கள் பிரச்சனைகள் குறித்து மக்களுக்கு விவரிக்கத் துவங்கினர். தொழிலாளர்களின் நல்வாழ்விற்கு சிறு சங்கங்கள் துவக்கப்பட்டன.

வேலைநிறுத்தங்களின் போது தொழிலாளர்கள் அவர்களுக்கு சொந்தமான சங்கங்களை, சில கல்வியாளர்களின் உதவியோடு துவங்கினர். இவற்றை தொழிற்சங்கங்கள் என்றழைப்பர். இவை வேலை நிறுத்தங்கள் செய்யவும், தொழிலதிபர்களுடன் பேச்சுவார்த்தைநடத்தி ஒப்பந்தம் செய்வதற்காகவும் ஏற்படுத்தபடடன. படிப்படியாக, தொழிற்சங்கங்கள் சுறுசுறுப்பாக இயங்கின. வேலை நிறுத்தங்கள் செய்வது மட்டுமல்ல, வருடம் முழுவதும், தொழிலாளர்களின் நல்வாழ்விற்காகவும், உரிமைகளுக்காகவும் போராடி செயல்பட்டன. அப்படிபட்ட தொழிற்சங்கங்கள் 1920களின் துவக்க காலங்களில் அமைக்கப்பட்டன. சோஷியலிச கருத்துக்களால் செல்வாக்குறுத்தபட்ட சங்கங்கள் அவற்றுள் முக்கியமானவையாகும். கிர்னி காம்கார் சங்கம் குறிப்பிடதக்க ஒன்றாகும். இதன் உதவியுடன் மும்பை தொழிலாளர்கள் 1928ஆம் ஆண்டில் மிகவும் வெற்றிகரமான வேலைநிறுத்தம் செய்தனர். அலகாபாத்தில் மஜ்தூர் மஹாஜன் என்னும் சக்தி வாய்ந்த தொழிற்சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கம் காந்தியடிகளின் கொள்கைகளை பின்பற்றியது. தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டதால், அரசாங்கமும் ஆலைகளின் முதலாளிகளும் கவலையடைந்தனர். வேலைநிறுத்தங்களின் மீது கட்டுபாடுகள் விதிக்க சட்டங்கள் இயற்றப்பட்டன.

SCERT TELANGANA

தொழிலாளர்களின் நல்வாழ்விற்காக அரசாங்கம் தொழிலாளர் நல அதிகாரிகளை நியமித்தது. இவ்வதிகாரிகள் மூலம் தொழிலாளர்கள் அவர்களுடைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதை கட்டாயமாக்க, அரசாங்கம் முயற்சிகள் மேற்கொண்டது. தொழிற்சங்கங்களை அணுகுவதை தவிர்க்க, இந்த ஏற்பாட்டை செய்தது.

ஆனால், தொழிலாளர்கள் இதற்கு சம்மதிக்கவில்லை. தங்களின் உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள சொந்தமான தொழிலாளர் சங்கங்கள் இருப்பதே சிறந்தது என்று அவர்கள் கருதினர். இவ்வாறாக, தொழிலாளர்கள் வர்கத்தினர் மற்றும் அரசாங்கம், ஆலை முதலாளிகள் இடையே தொழிற்சங்கங்கள் அமைப்பது, வேலைநிறுத்தம் செய்யும் உரிமை குறித்து மோதல் தொடர்ந்து இருந்து வந்தது.

## முக்கியச் சொற்கள்

**1. ஆதிவாசிகளின் கலகங்கள் 2. கொத்தடிமை முறை 3.ஒதுக்கப்பட்ட காடுகள்**
4. பாதுகாக்கப்பட்ட காடுகள் 5. ஏலமிடும்முறை 6. சமூக பணியாளர்கள்
7. தொழிலதிபர் 8. வேலை நிறுத்தம் 9. தொழிலாளர் சங்கங்கள்
10. தொழிற்சாலை நகரங்கள் 13. தொழிலாளர் குடியேற்றங்கள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு, காடுகளை மக்கள் எவ்வாறு பயன்படுத்தினர்? அக் காலத்தில் காடுகளை அழிக்கும் அபாயம் எப்போது ஏற்பட்டது? ஏன்?(AS1)
2. ஆதிவாசிகள் காடுகளை பயன்படுத்தி கொள்வதின் மீது வனத்துறையின் விதிமுறைகளின் தாக்கம் யாது?(AS1)
3. ஆதிவாசிகளின் புரட்சிகளை ஆங்கிலேய அரசாங்கம் எவ்வாறு அடக்கியது?(AS1)
4. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஆதிவாசிகள் நடத்திய எதிர்ப்பு போராட்டங்களை காட்டும் காலக்கோட்டை வரைந்திடுக.(AS3)
5. ஆதிவாசிகளின் எதிர்ப்பு போராட்டங்கள் எங்கெங்கு நடந்தன என்பதை தெரிந்து கொண்டு, அப்பகுதிகளை இந்திய வரைபடத்தில் குறித்திடுக.(AS5)
6. ஆங்கிலேய அரசாங்கத்தால் இந்திய தொழிலதிபர்களுக்கு என்னென்ன பிரச்சனைகள் இருந்தன?(AS1)
7. ஆங்கிலேய ஆட்சியின்போது, இந்திய தொழிற்சாலைகளைக் காட்டிலும் ஐரோப்பிய தொழிற்சாலைகள் நிறுவுவது மிகவும் சுலபமாக இருந்தது என்பதற்கான காரணங்களைக்கூறுக.(AS1)
8. தொழிலாளர் சட்டங்கள் முதன்முதலில் குழந்தைகளுக்காக இயற்றப்பட்டன. அதன்பிறகு பெண் தொழிலாளர்களுக்காக ஏற்பட்டன. இறுதியாக ஆண் தொழிலாளர்களுக்காக இயற்றப்பட்டன. இச்சட்டங்கள் ஏன் இயற்றப்பட்டன? இங்கு சொல்லப்பட்ட வரிசைப்படி, ஏன் இயற்றப்பட்டன?(AS6)
9. தொழிற்சாலை வளர்ச்சியில் கல்வி எப்படி பாதிப்பை உண்டாக்கி இருக்கும்? இது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.(AS3)
10. 20ஆம் நூற்றாண்டில் பெரிய தொழிற்சாலை நகரங்களை, இந்திய புறவரிபடத்தில் குறித்து காட்டுக.(AS5)
11. பக்கம் 215ல் உள்ள ஆதிவாசிகளின் கலகங்கள் தலைப்பில் உள்ள பத்திகளை படித்து உன் கருத்தை கூறுக.(AS2)

## செயல்திட்டம்

1. காட்டு இலாகா அலுவலகத்திற்கு சென்று அதன் அதிகாரியை நேர்காணல் மூலம் காடுகளை எவ்வாறு பாதுகாப்பது, உள்ளூர் மக்களும், தொழிற்சாலைகளும், எவ்வாறு காடுகளை பகுத்தறிவுடன் பயன்படுத்துவது, என்பவை குறித்து தகவல்களை கேட்டறிந்து பதிவு செய்து காட்டுங்கள்.
2. உங்கள் பகுதியில் அருகிலுள்ள தொழிற்சாலைக்கு நேரில் சென்று, அதன் வரலாறு, தொழில்நுட்பம் எவ்வாறு மாறியுள்ளது, தொழிலாளர்கள் எங்கிருந்து வருகின்றனர் என்பதை கேட்டறியுங்கள். தொழிற்சாலை முதலாளி மற்றும் சில தொழிலாளிகளுடன் பேசி அவர்களுடைய கருத்துக்களை கேட்டறியுங்கள். தொகுத்தெழுதிகாட்டுங்கள்.

SCERT TELANGANA

பாடம்
17

# மக்களாட்சியின் பரவல்




படம் .1: மக்களின் போராட்டம்

ஐரோப்பாவில் மக்களாட்சியை நிறுவிட புரட்சிகள் நடத்தப்பட்டதையும், மக்களாட்சி அரசாங்கங்கள் நிறுவப்பட்டதைக் குறித்தும் இதற்கு முந்தைய பாடத்தில் நீங்கள் படித்தீர்கள். மக்களின் விருப்பங்கள் மற்றும் தேவைகளுக்கு இணங்க மக்களாட்சி அரசாங்க முறைகள் அமைக்கப்பட்டன. இவ்வகையான அரசாங்க முறையில், மக்கள் நிர்வாகத்தில் சுதந்திரமாகவும், முழுமையாகவும் பங்கேற்கும் வாய்ப்பை பெற்றிருப்பர். இம்முறையிலான அரசாங்கத்தில், மக்கள் அனைவருக்கும் மதிப்பான இடம் தரப்படுகிறது. உலகம் முழுவதும் உள்ள மக்கள் இவற்றை அடைந்திட இன்னமும் முயற்சித்துக் கொண்டே இருக்கின்றனர்.

நாம் இப்போது, மக்களாட்சியை நிறுவ, போராடிய இரண்டு நாடுகளை குறித்து படித்தறிவோம். அவை லிபியா மற்றும் மியான்மர் நாடுகளாகும்.

- உலக வரைபடத்தில் லிபியா மற்றும் மியான்மர் நாடுகளை குறிக்கவும். இவ்விருநாடுகளும் எந்தெந்த கண்டங்களில் உள்ளன?

## லிபியா நாடு

லிபியா நாடு, வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு ஏழைநாடு. இது இத்தாலி நாட்டின் குடியேற்ற நாடாக இருந்தது. நீண்ட போராட்டத்திற்கு பிறகு, 1951ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. அந்நாடு விடுதலை பெற்ற போது, இத்தாலி நாடு அதிகாரத்தை, இட்ரிஸ் மன்னனுக்கு ஒப்படைத்தது. இம்மன்னன் சில செல்வந்தர் மற்றும் சக்திவாய்ந்த குடும்பங்களின் உதவியோடு ஆட்சி செய்தார். மக்களில் பெரும்பான்மையோர் விவசாயத்தையும், பாலைவனங்களில் கால்நடை மேய்ப்பையும் சார்ந்து இருந்தனர். இப்பழங்குடி மக்கள் மீது மரபுவழி வந்த பழங்குடி இனத்தலைவர்கள் ஆதிக்கம் செலுத்திவந்தனர். 1959ஆம் ஆண்டில், பெட்ரோலிய வளங்கள் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டன. பெட்ரோல் எண்ணெய் விற்பனையால், லிபியா நாட்டிற்குள் செல்வம் குவியத் தொடங்கியது. மன்னனும், சில அதிகாரம் படைத்த குடும்பங்களும், இவ்வாறு சேர்ந்த புதிய செல்வத்தில் பெரும் பகுதியை கைப்பற்றிக் கொண்டனர். இச் சமயத்தில், தேசியவாதம் என்னும் புதிய கருத்து ஆப்பிரிக்காவில் விரைந்து பரவியது. அந்நாட்டின் இளைஞர்கள், நவீன அரசாங்க முறையை நிறுவிட விரும்பினர். குடியேற்ற ஆட்சிக்கு அடிபணிந்து செயல்படாமல், மக்களின் நல்வாழ்விற்கு உழைத்திடும் ஆட்சி முறையை நிறுவிட விரும்பினர். நாட்டில் சீர்த்திருத்தங்கள் கொண்டு வரவும் விரும்பினர். பெண்களின் மீது அடக்கு முறையை முடிவுக்கு கொண்டுவர விரும்பினர். பழங்குடி மக்களிடையே தொடர்ந்து இருந்து வந்த யுத்தங்களை முடிவுக்கு கொண்டுவந்து, ஒற்றுமையையும், அமைதியையும் நிலைநாட்ட விரும்பினர்.

மேலும், பெட்ரோலிய எண்ணெய் வளத்தால் கிடைத்த, புதிய செல்வத்தை எல்லா மக்களிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். லிபியா நாட்டின் பெருமளவு மக்களும் இக்கருத்தைக் கொண்டிருந்தனர்.

SCERT TELANGANA

1969ஆம் ஆண்டு, மும்மர் கடாபி மற்றும் 70 இளைய ராணுவ அதிகாரிகள், லிபியா நாட்டின் ஆட்சியை நடத்தும் அதிகாரத்தை எடுத்துக்கொண்டனர். இந்த அதிகாரிகளின் குழு தங்களை, **விடுதலை அதிகாரிகளின் இயக்கம்** என்று அழைத்துக் கொண்டனர். இதனால் மன்னன் முதலாம் இட்ரிஸ் நாட்டை விட்டு தப்பியோடினார். மன்னராட்சி அழிக்கப்பட்டது. லிபியா நாட்டை அதிகாரபூர்வமாக **சோஷியலிச லிபிய அரபுக் குடியரசு** என்று பிரகடனம் செய்யப்பட்டது. இவ்வாறு அதிகாரத்தை கைப்பற்றியதை ராணுவம் முழுவதுமாக ஆதரித்தது. இந்த இயக்கம் புரட்சி ராணுவ கவுன்சில் 12 ராணுவ உறுப்பினர்களைக் கொண்டது. இப்புதிய தலைமை, லிபியா நாட்டை நவீன சமத்துவ நாடாக வளர்ச்சியடைய செய்வதில் விருப்பம் கொண்டது. அத்துடன் பெரும்பான்மை மக்களின் இஸ்லாமிய மதத்தையும், அதன் அடிப்படைக் கொள்கைகளையும் பின்பற்ற விரும்பியது.

நாம் இதற்கு முன் படித்தறிந்தபடி, லிபிய சமூகத்தினர், தொடக்கத்தில் பழங்குடி இனத்தலைவர்களின் குடும்பங்களின் கட்டுப்பாட்டில் இருந்தனர். மக்கள் தங்களின் சொந்த இனம் மற்றும் அதன் கௌரவத்தை மேம்படுத்துவதில் அக்கறை செலுத்தினர். நாட்டின் எல்லா மக்களின் நல்வாழ்விற்கு உழைப்பது குறித்து அதிக கவனம் செலுத்தவில்லை. மக்களில் பெரும்பான்மையோர் ஏழை நாடோடி மக்களாகவும், கால்நடைகளை மேய்ப்பவர்களாகவும் இருந்தனர். அவர்கள் கல்வியறிவு இல்லாதவர்களாகவும் இருந்தனர். பெண்கள் தலையை மூடும் பர்தா முறையை பின்பற்றினர். பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்க பெண்கள் அனுமதிக்கப்படவில்லை.

- மக்களாட்சி அரசாங்கத்தை அமைப்பதில் தடையாக எவ்வகையான பிரச்சனைகள் இருந்தன என்று நீ கருதுகிறாய்?

புதிய ஆட்சி, பல்வேறு சீர்த்திருத்தங்களை கொண்டு வந்தது. இவை லிபியாவின் விரைவான வளர்ச்சிக்கு வழிவகுத்தது. எண்ணெய் வளங்களை தேசியமயமாக்குதல் நாடோடி வாழ்க்கை முறையை முடிவுக்கு கொண்டுவர நீர்ப்பாசனம் உடைய நிலங்களை ஏழை தொழிலாளிகளுக்கு பகிர்ந்தளித்து விவசாயத்தை பரவலாக்கச் செய்தல், அனைவருக்கும் இலவச மருத்துவ வசதிகளை தருதல், எண்ணெய் விற்பனையால் கிடைத்த லாபங்களை மக்களிடையே பகிர்ந்தளித்தல், அதிக அளவு மானியத்துடன் வீட்டு வசதி திட்டங்களை அனைவருக்கும் தருதல் போன்ற சீர்த்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. மக்களின் சராசரி ஆயுட்காலம் 50 வயதிலிருந்து 77 வயதாக உயர்ந்தது. சீர்த்திருத்தங்களில் மிக முக்கியமான சீர்த்திருத்தம் பெண்களுக்கு சுதந்திரம் மற்றும் சம உரிமைகளை வழங்குதல் ஆகும். தற்போது பெண்கள், சொத்துகள் பெறும் உரிமையையும், வியாபாரம் செய்யும் சுதந்திரத்தையும் பெற்று அரசாங்கத்தில் பல்வேறு வேலைகளை செய்கின்றனர். தற்போது ஆண்கள் மற்றும் பெண்களின் எழுத்தறிவு சதவீதம் 90%ஆக உள்ளது. மேற்கண்ட நடவடிக்கைகளால், லிபியா நாடு, ஆப்பிரிக்க கண்டத்திலேயே மிகவும் உயர்ந்த நிலை சமூக நல்வாழ்வை சாதிக்க முடிந்தது.

பழங்குடி இனமக்கள் சமூகம், நாடோடி வாழ்க்கை, கல்வியறிவின்மை, பெண்கள் மீது கட்டுப்பாடுகள் நிறைந்த நிலைமைகளில், மக்கள் அனைவரின் பங்கேற்பை பெறுவது கடினமான ஒன்று. புதியதாய் பொறுப்பேற்ற லிபியாவின் தலைமை, மத்திய அரசளவில் மக்கள் கவுன்சில்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் சட்டமன்றம் மூலம் நாட்டின் பொது விவகாரங்களில், பொது மக்களின் பங்கேற்பை ஊக்குவித்தது. கல்விகற்ற நடுத்தர வகுப்பு தோன்றி வளர்ந்தது. சமுதாயம் விரைவாக வளர்ந்தது. இருப்பினும், கடாபி தலைமையிலான அரசாங்கம் இவ்வகை மக்களாட்சி அமைப்புகள் மீது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக, புரட்சிக் கவுன்சில்கள் என்னும் இணையான தலைமை அமைப்பை உண்டாக்கியது. இது அதிபர் கடாபி மற்றும் புரட்சி கவுன்சிலின் தலைவரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன. ஜனநாயக முறைப்படி அமைந்த அமைப்புகள், புரட்சி கவுன்சில்களின் முடிவுகளை நடைமுறைப்படுத்தின. இதன் விளைவாக இந்த அமைப்புகள் மீது நம்பிக்கையை இழந்தனர். ஆனால், அரசாங்கம் மக்களின் பங்கேற்பை வற்புறுத்தி பெற முயற்சித்தது. புரட்சி கவுன்சில் தனக்கு எதிராக கண்டனங்கள் மற்றும் எதிர்ப்பாளர்களை கைது செய்து, சித்தரவதை செய்தல், கொல்லுதல் போன்ற மிருகத்தனமான ராணுவ சக்தியை பயன்படுத்தியது. பத்திரிக்கை சுதந்திரம் தரப்படவில்லை.

நாட்டில் பத்திரிக்கை சுதந்திரம் தரப்படவில்லை. தொழிலாளர் சங்கங்கள், இதர சங்கங்கள் செயல்பட அனுமதிக்கப்படவில்லை. லிபியாவில் எந்த விதமான அரசியல் கட்சிகளும் செயல்பட அனுமதி தரப்படவில்லை.

இவ்வாறான, சர்வாதிகாரமான போக்கு, அரசாங்கத்தையும், புரட்சி கவுன்சில்களையும், அரசாங்கத்திற்கு சொந்தமான எண்ணெய் நிறுவனங்களையும், கட்டுப்படுத்தி வந்த சக்தி வாய்ந்த குடும்பங்களின் நிலையை உறுதிப்படுத்த உதவியது. இவர்கள் மக்களால் வெறுக்கப்பட்டனர். ஆனால், மக்கள் தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்த வழியின்றி தவித்தனர்.

விரைவான வளர்ச்சி, நகரமயமாதல், புதிய பொருளாதார வாய்ப்புகள் மற்றும் வேலைகள் போன்றவற்றின் விளைவால், பழங்குடி வாழ்க்கை முறை படிப்படியாக மறைய ஆரம்பித்தது. பல்வேறு பழங்குடி மக்கள், ஒன்று சேர்ந்து மாநகரங்களில் வாழத் தொடங்கினர். பெரும்பாலான புதிய வேலைகள், அரசாங்கத் துறைகளில் கிடைத்தன. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் எண்ணெய் வளங்கள், வாணிபம் மற்றும் தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. ஒரு புதிய நடுத்தர வகுப்பு லிபியாவில் தோன்றியது. இவர்கள் வாணிபம் மற்றும் தொழிற் துறைகளை நடத்துவதின் மீது அதிக நாட்டம் காட்டினர். ஆனால், அவ்வாய்ப்புகள் அவர்களுக்கு தரப்படவில்லை. அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் சக்தி வாய்ந்த குடும்பங்களின் கட்டுப்பாடு போன்றவற்றால் இந்நிலை ஏற்பட்டது.

2010ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அரேபிய நாடுகளில் மக்களாட்சி அரசாங்கங்களை அமைத்திட போராட்டங்கள் நடைபெற்றன. இவ்வியக்கங்களின் துவக்கம் சிறிய நாடாகிய டுனீஷியாவில் துவங்கி, எகிப்து, லிபியா, ஏமென், பஹ்ரைன் மற்றும் சிரியா போன்ற நாடுகளுக்கு பரவியது. எதிர்ப்பு போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மற்றும் போர்கள் முதலியவை அரபு நாடுகளில் 2010ஆம் ஆண்டு டிசம்பர் 18லிருந்து நிகழத் தொடங்கின. இது தற்போது **அரேபிய எழுச்சி** என்றழைக்கப்படுகிறது.

**லிபியாவில் ஏற்பட்ட மாற்றம்**



படம் 2: எகிப்து நாட்டின் தெருவில் வரையப்பட்ட ஓவியம், இப்பத்தாண்டில் மக்களாட்சி கோரி மக்கள் இயக்கம் நடந்த மற்றொரு நாடு எகிப்து.

**பெங்காஜி போன்ற நகரங்களில் பொது மக்களுக்கான வசதிகள் மிகவும் மோசமாக இருந்தன. பெரும்பாலான மக்கள் வேலையின்றியும் இருந்தனர். நாடு முழுவதும் இருந்த மக்கள் தொலைபேசிகள் மூலம் பகிர்ந்து கொண்டனர். ஆனால், அரசு ஆதிக்கத்தில் இயங்கி வந்த தொலை தொடர்பு சாதனங்கள், இவற்றை ஒளிபரப்ப மறுத்தன. 2011ஆம் ஆண்டில், ஜனவரி மாத துவக்கத்தில், லிபியா நாட்டின் வடகிழக்கு பகுதியான பாய்டா நகரத்தில், அரசியல் ஊழலை எதிர்த்தும், மக்களுக்கான வீடுகளை கட்டித்தருவதில் ஏற்பட்ட தாமதத்தை எதிர்த்தும், ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவினர் போராட்டத்தை துவக்கினர். இப்போராட்டம் அமைதியான தெரு அணிவகுப்புகளாக துவங்கின. இவற்றை ஒடுக்க காவல் துறையினர் முயன்றனர். இப்போராட்டங்கள் இதர நகரங்களுக்கு பரவியது. பென்காஜி என்னும் நகரம் முக்கியமான வன்முறை போராட்டங்களின் மையமாக விளங்கியது. இந்நகரங்களில் பொதுமக்களுக்கான வசதிகள் மிகவும் மோசமாக இருந்தன. அதிகமான குடிமக்கள் வேலையின்மையால் பாதிக்கப்பட்டனர். பல குடும்பங்கள் நிலையான வருவாயை பெற்றிருக்கவில்லை. இணையதளங்கள் மற்றும் கைப்பேசிகள் மூலம் அவர்களின் துன்பங்களை பகிர்ந்து கொண்டனர். இருப்பினும், அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்த ஊடகங்கள் அறிவிக்க மறுத்துவிட்டன.**

பிப்ரவரி மாதத்தில், எதிர்ப்பு போராட்டங்கள் வன்முறையாக மாற்றம் கொண்டன. பென்காஜி நகரத்தில், மக்கள் காவல் துறையினரை எதிர்த்து பேரணி நடத்தினர். துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. மக்கள் காயமடைந்தனர். சில மக்கள் பிரிவுகள் தங்களுக்கென்று ஆயுதங்களையும், போர்க்கருவிகளையும் வரவழைத்துக் கொண்டன. இந்த எதிர்ப்பாளர்களுடன், தொழில் ரீதியாக ராணுவ வீரர்களும் சேர்ந்து கொண்டனர். இவர்கள் அரசாங்கத்தின் ராணுவத்தில் இருந்து வெளியேறியவர்கள். ஆனால், எதிர்ப்பாளர்களில் பெரும்பான்மையோர் சாதாரண மக்களாகிய வழக்கறிஞர்கள், தொழிலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோர் இருந்தனர். கடாபி அரசாங்கத்தை எதிர்த்த எல்லா குழுக்களும் ஒன்று சேர்ந்தன.

பாதுகாப்பு படையினர் மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். எதிர்ப்பாளர்கள் அரசாங்க கட்டிடங்களை தாக்கினர். எதிர்ப்பாளர்கள் உள்நாட்டு வானொலி நிலையத்தை கைப்பற்றினர். மக்கள் பல்வேறு கோரிக்கைகளை விடுத்தனர். பழைய அரசியலமைப்பு சட்டத்தை புதுப்பிக்க கோரினர். பலகட்சி மக்களாட்சியை அமைத்திட கோரிக்கை விடுத்தனர். கடாபியின் அரசாங்கமும் தனக்கு ஆதரவாளர்களை திரட்டி ஆதரவு போராட்டங்களை நடத்த முயற்சித்தது. அடுத்த சில நாட்களில், பெரிய அளவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. சாதாரண மக்களும் ஆயுதங்கள் ஏந்தி போராடினர். ராணுவத்தை சேர்ந்த சிலரும் அவர்களுடன் சேர்ந்துக் கொண்டனர். லிபியாவின் அதிபர் கடாபி தன்னுடைய ராணுவம் மற்றும் விமானப்படையை மக்களுக்கு எதிராக பயன்படுத்தினார். எதிர்ப்பு போராளிகளை ஒடுக்க பயன்படுத்தினார். மக்களில் பலர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கா போன்ற பல்வேறு சக்தி வாய்ந்த நாடுகள், இவ்விஷயத்தில் தலையிட மிகுந்த ஆர்வத்துடன் இருந்தன. அரசாங்கத்தை அமைத்திட ஆர்வம் காட்டினர். ஏனெனில், லிபியா நாட்டின் எண்ணெய் வளங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பினர். இந்நாடுகள், லிபியா நாட்டின் எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவு தந்து, அந்நாட்டினை உள்நாட்டு போரில் தள்ளிவிட்டது. ஐக்கிய நாடுகள் சபையும், இவ்விஷயத்தில் தலையிட்டு, எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தது. லிபியா நாட்டை விமானம் பறக்க தடைசெய்யப்பட்ட பகுதி என அறிவித்தது. இதன் மூலம், லிபியா அரசாங்கம் விமானப்படையை பயன்படுத்தி, எதிர்ப்பாளர்கள் மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்துவதை தவிர்க்க இந்த அறிவிப்பை செய்தது. இருப்பினும், அரசாங்கம் வான்தாக்குதலை தொடர்ந்து நடத்தியது. பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் கூட்டாக சேர்ந்து, அவர்களின் விமானபடை மூலம் தாக்குதல் நடத்தின. லிபியா நாட்டு அரசாங்க கட்டிடங்கள் மீது வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. இறுதியில் மக்கள் புரட்சி வெற்றி அடைந்தது. கடாபி கொல்லப்பட்டார்.

**உள்நாட்டுப் போர்**

உள்நாட்டுப் போர் என்பது நாட்டுக்குள் பல்வேறு பிரிவினரிடையே அல்லது வட்டாரங்கள் இடையே நடக்கும் போரை குறிக்கும்.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் நடத்தப்பட்டன. 100அரசியல் கட்சிகள் பங்கேற்றன. 200மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒரு புதிய அரசாங்கம் அமைந்தது. நவம்பர் 14 2012ல் புதிய ஆட்சி பதவியேற்றது. அவர்கள் இடைக்கால அரசியலமைப்பு சட்டத்தை இயற்றிக்கொண்டனர். எதிர்காலத்தில் லிபியாவில் மக்களாட்சி அரசாங்கம் உருவாகும் வாய்ப்புள்ளது. லிபியாவில் மக்களாட்சிமுறை வெற்றியடையுமா? அந்நாட்டு மக்கள், மக்களாட்சி முறைகளை வலுப்படுத்தி கொள்வார்களா? என்று உலகநாடுகள் அனைத்தும் லிபியாவை கவனித்து வருகின்றன.

## மியான்மர் (பர்மா)

பர்மா நாட்டை வரைபடத்தில் குறித்துக் காட்டு. (தற்போதைய பெயர் –மியான்மர்) இந்தியா தன் எல்லைக்கோட்டை இந்த நாட்டுடன் பகிர்ந்துக் கொள்கிறது. இந்தியாவைப் போலவே, பர்மாவும் இங்கிலாந்து நாட்டின் குடியேற்ற நாடாக இருந்தது, தேக்கு மரக்கட்டைகள், அரிசி போன்ற உணவு தானியங்கள், தகரம் போன்ற தாதுப்பொருட்களையும், மாணிக்கங்களையும் மற்றும் நீலக்கற்கள் போன்ற விலை உயர்ந்த கற்களையும் அளிக்கும் நாடாக விளங்கியது. இந்தியா சுதந்திரம் அடைந்த ஐந்து மாதங்கள் கழித்து. பர்மாவும் சுதந்திர நாடாகியது. நம் இந்தியாவைப்போலவே இரண்டு அவைகள் கொண்ட பாராளுமன்றத்தை அமைத்துக்கொண்டனர். 1951, 1956 மற்றும் 1960ஆம் ஆண்டுகளில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. பல்வேறு அரசியல் கட்சிகள் தேர்தலில் பங்கேற்றன. இந்தியாவைப் போலவே, பர்மாவும் குடியரசு நாடாக உருவெடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்நாட்டு மக்களை வழிநடத்திச் செல்லும் அரசியல் கட்சி எதுவும் அச்சமயத்தில் இல்லை. இந்தியா 1947ல் சுதந்திரம் அடைந்த போது, ஐதராபாத் போன்ற பல சுதேச சமஸ்தானங்கள் இருந்தன. அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து இந்திய குடியரசில் இணைத்திட சில ஆண்டுகள் பிடித்தது. அதுபோலவே, பர்மா நாடும் அதிக எண்ணிக்கையில் சிறிய இன, மொழி பகுதிகளாக கொண்டிருந்தது.

பர்மா நாடு சுதந்திரம் பெற தலைமையேற்று நடத்திய பர்மிய இனக்குழுவின் தலைவரான ஆங்சான் (தற்போதுள்ள எதிர்கட்சி தலைவரான ஆங்சான் சூக்கியின் தந்தை) மற்றும் பல்வேறு சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த தலைவர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்தி, மக்களுக்கு மரபு வழியான உரிமைகள், சுயமான மனஉறுதி, மக்களாட்சி செயல்களில் சிறுபான்மையினரையும் சேர்த்துக் கொள்ளுதல் போன்றவை குறித்து உடன்படிக்கை செய்து கொண்டனர். ஆனால், மரபு வழியான ராஜ்ஜியங்கள் மீது பர்மிய ராணுவம் படிப்படியாக முன்னேறி, படை அதிகாரத்தை பயன்படுத்தி

SCERT TELANGANA

- கடாபியின் அரசாங்கத்தால் மக்கள் மிகவும் பயன்அடைந்தாலும், பிறகு அவரை எதிர்த்து மக்கள் ஏன் புரட்சி செய்தனர் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
- கடாபியின் அரசாங்கம், தன்னை மக்களாட்சி அரசாங்கம் என்று கூறிக்கொண்டாலும், அதில் இல்லாத உண்மையான மக்களாட்சி அம்சங்கள் யாவை? அவருடைய அரசாங்கத்தில் இருந்த மக்களாட்சி அம்சங்கள் யாவை?
- சிவில் சுதந்திரங்கள் மக்களாட்சிக்கு ஏன் முக்கியமானவை? லிபியாவில் நடந்த நிகழ்ச்சிகளை கருத்தில் கொண்டு விவரி.
- சர்வாதிகார ஆட்சியாளர்கள் செய்தித்தாள் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களை கட்டுப்படுத்த முயற்சிக்கின்றனர். மக்களிடையே தகவல்களை பகிர்ந்துக் கொள்ள உனக்குத் தெரிந்த வேறு வழிகள் இருக்கின்றனவா?
- டுனீஷியாவில் மக்கள் போராட்டம், ஒரு வர்த்தகர் இறந்த சம்பவத்தால் துவங்கியது. இப்போராட்டம் இணைய தளத்தில் **பேஸ்புக்(Face Book)** பயன்பாட்டால் வலிமையை பெற்றது. இதனை கட்டுப்படுத்துவது அரசாங்கத்திற்கு சுலபமான செயல் அல்ல என்று நீங்கள் கருதுவது ஏன்?

ஆட்சி செய்ய துவங்கியபோது, ஆங்சான் படு கொலை செய்யப்பட்டார். பல்வேறு மரபு வழியான குழுக்கள், பர்மா நாட்டு ராணுவ தாக்குதலில் இருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள ஆயுத மேந்தி போராடத் துவங்கின. சுய ஆட்சி அதிகாரம், மரபுவழியான உரிமைகள், மக்களாட்சி முறை போன்றவற்றை கோரின. மரபுவழியான ராஜ்ஜியங்களின் பிரச்சனை 1962ஆம் அண்டில் மிகவும் சிக்கலாக மாறியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ராணுவத்தால் கைப்பற்றப்பட்டு, ராணுவ தளபதி **நீவின்** நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் நாட்டிலுள்ள எல்லா தொழிற்சாலைகளையும், தாது சுரங்கங்களையும் தேசியமயமாக்க முயன்றார். பொதுமக்களுக்கான மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. 1962 மற்றும் 1965 ஆண்டுகளுக்கு இடையே நிலச்சுவாந்தார்கள் மற்றும் வட்டி வியாபாரிகளுக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டன.

அச்சட்டங்கள் சிறு விவசாயிகளின் நிலம், சொத்துகளையும், நிலங்களையும் குத்தகை எடுப்போரின் உரிமைகளையும் பாதுகாப்பதை நோக்கமாக கொண்டிருந்தன. ஏழை விவசாயிகளுக்கு உதவுவதற்கு, நிலக்குத்தகைக்கான வாடகைகளை ரத்துசெய்யும் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அப்போதிலிருந்து ராணுவ ஜெனரல்கள் நாட்டை ஆட்சிசெய்து கொண்டிருந்தனர். ஆட்சியாளர்கள் சோஷியலிச கொள்கைகளை பின்பற்றுவதாலும், எல்லா சுரங்கங்களையும், தொழிற்சாலைகளையும் தேசிய மயமாக்கம் செய்ததாகவும், அறிவித்துக்கொண்டனர். இது, நாட்டின் மிகப்பெரும் இயற்கை வளங்களை ராணுவ தளபதிகளின் கட்டுப்பாட்டில் வைத்தது. லிபியா நாட்டின் ராணுவ ஆட்சியின் விளைவாக, மேம்பாடுகளும், மக்கள் நல்வாழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் பர்மாவில் எவ்விதமான வளர்ச்சியையும் காண முடியவில்லை. பர்மா பலவீனமான நாடாக மாறியது. சிறுவிவசாயிகள் தங்கள் குழந்தைகளை ராணுவத்திற்கு விற்குமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். சுரங்கங்களில் கொத்தடிமைகள் போன்ற சூழ்நிலைகளில் வேலை செய்தனர். மனித உரிமைகளுக்கு எதிராக செயல்படுதல், பொதுமக்கள் வலுக்கட்டாயமாக இருப்பிடங்களில் இருந்து அகற்றுதல், சிறுவர்கள் உட்பட, மக்களிடம் இருந்து வலுக்கட்டாயமாக வேலை வாங்குதல் போன்ற குற்றங்களை செய்தனர் என்று பர்மாவை ஆண்ட ராணுவ ஜெனரல்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இவ்வாறான ராணுவ ஆட்சியை எதிர்த்து மாணவர்கள் எதிர்ப்பு போராட்டத்தை தலைமையேற்று நடத்தினர், ஆனால் அப்போராட்டங்களை ராணுவம் அடக்கியது. ராணுவ ஆட்சியை எதிர்த்து, 1988ல் மிகப்பெரிய போராட்டம் வெடித்தது. ராணுவம் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களை மிருகத் தனமாக கொன்று அடக்கியது. அடுத்த ஆண்டில் நடந்த தேர்தலில், ஒரு புதிய ராணுவ கவுன்சில், ஆட்சியை கைப்பற்றியது. ஆங்சான் சூக்கி என்னும் பெண்மனி, பர்மாவில் சீர்த் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று போராட்டத்தை

**தன்னாட்சி**

ஒரு நாடு, வட்டாரம் அல்லது ஒரு அமைப்பை சுய ஆட்சியுடன் நிர்வகிப்பதை சுதந்திரம் என்பர்.



SCERT TELANGANA

துவக்கினார். பர்மாவில் மக்களாட்சியை நிறுவிட நடந்த எதிர்ப்பு போராட்டங்களுக்கு ஆங்சான் சூக்கி வழி நடத்திச் செல்லும் முக்கிய தலைவராக விளங்கினார்.

பர்மாவின் ஆட்சியாளர்கள், 1990ல் தேர்தல் பிரகடனம் செய்தனர். இத்தேர்தலில் ஆங்சான் சூக்கி தலைமையிலான தேசிய மக்களாட்சி சங்கம் பெரும்பான்மை இடங்களை (80%) வென்றது. அச்சமயத்தில் அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ராணுவ ஆட்சி, அவரை விடுதலை செய்ய மறுத்தது. அவரிடம் ஆட்சியை ஒப்படைக்கவும் மறுத்துவிட்டது. அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். வீட்டிலேயே அடைபட்டு, வெளியில் நடமாட, மக்களோடு பேச அனுமதியின்றி வாழ்ந்தார். புற்று நோயால் மரணம் அடைந்த தன் கணவரின் இறுதிச் சடங்கிலும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. அவருடைய இரண்டு மகன்களை சந்திக்கவும் தடைவிதிக்கப்பட்டிருந்தது.



மக்களாட்சியை ஆதரித்து மியான்மரில் வெளியிடப்பட்ட ஆங்சான் சூக்கி சுவரொட்டியின் தோற்றம்

பர்மாவில் சிவில் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அதிகப்படுத்தவும், மக்களாட்சி அரசாங்கத்தை நிலை நாட்டவும், ராணுவ அரசுமீது உலக நாடுகளின் வற்புறுத்தல்கள் மேலோங்கியது. பர்மாவின்மீது உலக நாடுகளின் பொருளாதார தடைகளும் விதிக்கப்பட்டன. இதர நாடுகளுடன் பர்மாவின் வியாபார தொடர்பு தடைசெய்யப்பட்டது. இதன் விளைவாக பர்மா தன் உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்யவும், தேவையான பொருட்களை இறக்குமதி செய்திடவும் இயலாமல் போனது. அந்நாட்டின் பொருளாதாரத்தின் மீது அதிகமான தேக்க நிலையை ஏற்படுத்திவிட்டது. பொருளாதார தடைகளால், அந்நாட்டின் பொது மக்கள் பாதிக்கப்பட்டனர். இருப்பினும் பர்மாவின் ராணுவ ஆட்சியின் மீது தாக்கத்தை உண்டாக்க அவை பின்பற்றப்பட்டன.

## பர்மாவில் ஏற்பட்ட மாற்றம்

பர்மா நாட்டில் 2008ஆம் ஆண்டில் இருந்து, பல்வேறு வகைகளில் மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. மக்களாட்சி அமைப்பது குறித்து மக்கள் ஒப்புதலை பெற மக்கள் கருத்து கணிப்பிற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. நாட்டின் பெயரை மக்களாட்சி குடியரசு என்று மாற்றம் செய்யப்பட்டது. இருப்பினும், அரசாங்கத்தில் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், ராணுவத்தால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளும் இடம் பெற்றிருந்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் 2010ஆம் ஆண்டில் தேர்தல் நடத்தப்பட்டது. ஆங்சான் சூக்கி தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கப்பட்டது. தேர்தலுக்கு பிறகு, வீட்டுக் காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். தேர்தலில் போட்டியிட அவரது கட்சி மறுத்துவிட்டது. இதன் விளைவாக, ராணுவ ஆதரவு பெற்ற ஐக்கிய ஒருமைப்பாட்டு முன்னேற்றக்கட்சி பெரும்பான்மை இடங்களை வென்றது. தேர்தலில் முறைகேடுகள் நடந்தன என்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இராணுவ ஆட்சிமுறை கலைக்கப்பட்டது. **தைன்சைன்** என்பவர் நாட்டின் ஜனாதிபதி ஆனார். ராணுவத்தின் கட்டுப்பாடு நீடித்தது.

ஆங்சான் சூக்கி தலைமையிலான 'மக்களாட்சிக்கான தேசிய சங்கம் கட்சி'(National League for Democracy), பாராளுமன்றத்தில் காலியாக இருந்த 45 இடங்களுக்கு நடத்தப்பட்ட தேர்தலில் 43 இடங்களை வென்றது. ஆங்சான் சூக்கி விடுதலை செய்யப்பட்டார். மக்களாட்சிக்கான தேசிய லீக் கட்சியின் வெற்றி, பர்மாவில் மக்களாட்சியின் துவக்கத்திற்கு வழிவகுத்தது.

மியான்மரின் ஜனநாயக போராட்ட நிகழ்வுகள், லிபியா நாட்டைப் போலவே இன்னமும் முடிவடையாமல் உள்ளது. இந்த நாட்டில் முழுமையான மக்களாட்சியும், பல கட்சி தேர்தல்களும் வருங்காலத்தில் நடப்பதற்கான அறிகுறிகள் தற்போது காணப்படுகின்றன.

## நோபல் பரிசை ஒப்புக் கொள்ளுதல்

1991ஆம் அண்டு அமைதிக்கான நோபல்பரிசு ஆங்சான் சூக்கிக்கு வழங்கப்பட்டது. அப்போது அவர் வீட்டுக்காவலில் இருந்தார். அவர் சார்பாக நோபல்பரிசைப் பெற்று, அவரது மகன் உரையாற்றினார். அந்த உரையின் சுருக்கத்தை படித்தறிவோம்.

“அமைதிக்கான இந்த நோபல் பரிசை, அவர் தன்னுடைய பெயரில் பெற்று கொள்ளவில்லை. பர்மா நாட்டு மக்களின் பெயரில் இதனைப் பெற்றுக்கொள்கிறார். இப்பரிசு எங்கள் நாட்டு மக்களுடையது. பர்மா நாட்டின் அமைதிக்காகவும், சுதந்திரம் மற்றும் மக்களாட்சிக்காகவும் நடத்திய அவரின் நீண்ட கால போராட்டம் இறுதியில் வெற்றுபெறும்”.

“நான் தனிப்பட்ட முறையில் நம்புவது யாதெனில், அவருடைய அர்பணிப்புத் தன்மை, தியாக மனப்பான்மை போன்றவற்றால் பர்மா நாட்டு மக்களின் நிலைமைகள் குறித்து தெரிந்து கொள்ள உதவும் மதிப்புள்ள அடையாள சின்னமாக விளங்குகிறார். எங்கள் நாட்டின் கிராம மற்றும் நகர மக்களின் நிலைமைகளையும், வறுமை மற்றும் ஆதரவற்ற நிலைமைகளில் வாழ்வோர், சிறையிலடைக்கப்பட்டவர்கள் மற்றும் சிதறுண்டு வாழ்வோர், சித்தரவதை செய்யப்பட்டவர்களின் நிலைமைகள், இளைஞர்களின் நிலைமைகள், காடுகளுக்கு தப்பியோடி வாழ்வோரில் மலேரியா பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் குறித்தும், அடித்து அவமானப்படுத்தப்பட்ட புத்தத்துறவிகள் குறித்தும் உலக நாடுகள் அவர் மூலமாகவே அறிந்துக் கொண்டன”.

“இறுதியாக அவர் (ஆங்சான் சூக்கி) இவ்வாறு கூறுகிறார். பர்மாவில் மக்களாட்சியை ஏற்படுத்த நடக்கும் மக்களின் போராட்டம், நாட்டு மக்கள் முழுமையாக, அர்த்தமுள்ள வாழ்க்கை வாழவும், உலக மனித சமுதாயத்தினருக்கு சமமான, சுதந்திர வாழ்க்கை வாழ்ந்திடவும் நோக்கமாக கொண்டது”.

- பர்மா விடுதலை அடைந்த பிறகும், அந்நாட்டில் மக்களாட்சியை ஏன் அமைக்கமுடியவில்லை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
- லிபியா விடுதலை அடைந்த பிறகும் அந்நாட்டில் மக்களாட்சியை ஏன் அமைக்க முடியவில்லை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
- பர்மா மற்றும் லிபியாவில் மக்களாட்சியை நிறுவுவதில் மாணவர்களும், இளைஞர்களும், முக்கிய பங்கு வகித்தனர் என்று நீ எவ்வாறு கூறுவாய்?
- லிபியா மற்றும் பர்மா நாடுகளில் நடந்த மக்கள் எதிர்ப்பு போராட்டங்களில் நீ காணும் ஒற்றுமைகள் யாவை?
- இரண்டு நாடுகளின் மக்கள் போராட்டத்தை தலைமை, போராட்டத்தின் தன்மை, ஆட்சி மாற்ற முறை ஆகிய அம்சங்களை மனதில் கொண்டு விவரி.
- மக்கள் போராட்டங்களை வர்ணிக்கும் போது, அரசியல் கட்சி மற்றும் வாக்குச் சாவடியில் வாக்களித்தல், சம்பந்தபட்ட வாக்கியங்களை கோடிட்டு காட்டுக.
- லிபியா மற்றும் பர்மா நாடுகளில் நடைபெற்ற மாற்றங்களை எழுதுங்கள்.

SCERT TELANGANA

## மக்களாட்சி மற்றும் சர்வாதிகார ஆட்சிகளின் சில அம்சங்கள்

மக்களாட்சிக்காக சமீப காலத்தில் நிகழ்ந்த இரண்டு மக்கள் போராட்டங்கள் குறித்து நீங்கள் படித்தீர்கள். இரண்டு நாடுகளும், வேறுபட்ட நிலைமைகளை கொண்டிருந்தாலும் மக்கள் ஒரேவிதமான குணங்களை பெரும்பாலும் கொண்ட அரசாங்கத்தை நிறுவ விரும்பினர்.

கடாபியும், புரட்சி கவுன்சில் தலைமையும், மக்கள் நலவாழ்வு அரசாங்கத்தை நிறுவிட முனைந்து செயல்பட்டன. மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்தல், எல்லா மக்களும் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் பெறச்செய்து வாழ்வை மேம்படுத்துதல் போன்றவற்றை முக்கிய நோக்கமாக கருதி செயல்பட்டனர். அதுபோலவே, பர்மா நாட்டிலும் சில நல்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டன. நிலசீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் ராணுவத்தின் கட்டுபாட்டை அதிகரித்துக் கொண்டே சென்றது. நாட்டு மக்களின் வளங்களை ராணுவம் சுரண்டியது. மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டனர். இருப்பினும், இரண்டு நாடுகளும் ராணுவத்தின் பெரும் ஆதரவு பெற்ற நபர்களால் ஆட்சி செய்யப்பட்டன. அத்தலைவர்கள் சுதந்திரமான தேர்தலையும், அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளையும் அனுதிக்கவில்லை. இரண்டு நாடுகளும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சியமைக்க அனுமதிக்கவில்லை. இரண்டு நாடுகளும், கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரத்தை அனுமதிக்கவில்லை. சங்கங்களை அமைத்திடவும் அரசாங்கத்தை எதிர்த்து போராட்டம் செய்யும் சுதந்திரத்தையும் அனுமதிக்கவில்லை.

இவ்விரு நாட்டு மக்களும், சுதந்திரமான மற்றும் நடுநிலையான தேர்தல்கள் மூலம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களை நிறுவ விரும்பினர். இருநாட்டு மக்களும் தங்கள் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் தேவை என கோரினர். சங்கங்கள் அமைத்துக்கொள்ளவும், தவறானவற்றை எதிர்த்து போராட்டம் நடத்தும் சுதந்திரத்தை அடைய விரும்பினர். இரு நாட்டு மக்களும் தங்கள் நாடுகளில் பல்வேறு அரசியல் கட்சிகள் செயல்பட அனுமதிக்கபட வேண்டும் என்று விரும்பினர்.

பர்மா நாடு, லிபியா நாட்டினை போன்றதல்ல, பர்மா நாடு மக்களாட்சி முறையில் இருந்து, ராணுவ ஆட்சிமுறைக்கு மாறியது. லிபியா நாடு மன்னராட்சி முறையில் இருந்து ராணுவ ஆட்சி முறைக்கு மாறியது. இருப்பினும், இரண்டு நாடுகளிலும், மக்களாட்சி மலர்வதற்கான நிலைமைகள் இருக்கவில்லை. அவை அரசியல் ரீதியாகவும், இனங்கள் ரீதியாகவும் பிரிக்கப்பட்டு இருந்தன. எனவே, அரசியல் ரீதியான ஒருமைப்பாட்டை அடைவதில் பிரச்சனைகள் இருந்தன.

## மக்களாட்சியின் அணிவகுப்பு

17வது நூற்றாண்டில் இங்கிலாந்தில், நவீன மக்களாட்சியின் தோற்றம் நிகழ்ந்ததில் இருந்து, உலகம் முழுவதும் அரசியல் அமைப்புகளின் முறைகளில் படிப்படியான மாற்றங்கள் உண்டாகி மக்களாட்சி குறிக்கோள்களை உறுதியாக பின்பற்றும் போக்கு வளர்ந்தது. துவக்கத்தில், மக்களாட்சி கொள்கைகள் சமூக பிரிவுகள் நிலபிரபுத்துவ முறைகளையும், மன்னராட்சிகளையும் எதிர்க்க உதவுகிறது. பிறப்புரிமை அல்லது தெய்வீக உரிமை அடிப்படையிலான ஆட்சி செய்யும் முறையை நிராகரித்து, புதுவகையான சமூக நிலைமையை அமைக்க உதவியது. 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகள் பெரும் புரட்சிகளை சந்தித்து, மக்களாட்சி முறைக்கு சாதகமான சமூக நிலைமைகளை பெற்றன.

தொழில்மயம் மற்றும் காலனி ஆதிக்கம் போன்றவை உலகம் முழுவதும் மக்களாட்சி கருத்துக்களுக்கு சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தின. பெரும்பாலான நாடுகளில், மக்களாட்சி கருத்துகளால் ஊக்கம் பெற்ற, கல்வி கற்ற நடுத்தர வகுப்பு மக்கள் பெருகினர். ஒவ்வொரு நாடும், அதற்கென்ற சொந்தமான தனித்தன்மையுடைய சமூக அமைப்பு மற்றும் பிரச்சனைகளை பெற்றிருந்தன. இருப்பினும், மக்களாட்சி அப்பிரச்சனைகளை தீர்வுகாணும் வழிமுறைகளை கொண்டிருந்தது. இவ்வாறாக ஒவ்வொரு நாடும், அதன் தேவைகளுக்கு பொருத்தமான மக்களாட்சி அமைப்பை உருவாக்கிக்கொண்டன.

20வது நூற்றாண்டில், ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில், காலனி ஆதிக்க போராட்டங்களுக்கு மக்களாட்சி என்பது ஒரு முழக்கமாக மாறியது. இந்தியா, இலங்கை தெற்கு ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் இதற்கு எடுத்தக்காட்டுகளாகும். இந்நாடுகளில் சில சுதந்திரம் அடையவும், நிலையான மக்களாட்சியை அமைத்திடவும் சாத்தியமானது. இருப்பினும், பல நாடுகள் நிலையான மக்களாட்சியை நிறுவ இயலவில்லை. (பர்மா



SCERT TELANGANA

மற்றும் பாகிஸ்தான் நாடுகள்) ராணுவ சர்வாதிகார ஆட்சிகள் அமைக்கப்பட்டன. பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ராணுவ சர்வாதிகார ஆட்சியும், மக்களாட்சியும் சுழற்சியாக ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ராணுவ சர்வாதிகார ஆட்சியின் கீழ் இருக்கும் நாடுகளில், மக்கள் உண்மையான மக்களாட்சியை நிறுவிட இயக்கங்களை நடத்திவருகின்றனர். லிபியா மற்றும் பர்மா போன்ற நாடுகளில் சமீப காலத்தில் தான் அம்மாற்றங்கள் உருவாவது துவங்கி உள்ளன.

20ஆம் நூற்றாண்டில், மற்றொரு அரசியல் முறையான கம்யூனிசமுறை உருவெடுத்தது. கம்யூனிஸ்டுகள் கருத்துப்படி, இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்ற மக்களாட்சி முறை, செல்வந்த முதலாளிகளுக்கு மட்டும் நாட்டை ஆட்சி செய்து கட்டுப்படுத்தும் வாய்ப்பை பெறஉதவுகிறது.

பாராளுமன்ற மக்களாட்சி முறை ஏழை தொழிலாளிகளின் உண்மையான உரிமைகளை பிரதிபலிக்காது என்றும் நம்புகின்றனர். தொழிலாளிகளின் நலனை காத்திட உழைப்பாளர்கள் அல்லது தொழிலாளிகளின் சர்வாதிகார ஆட்சியினால் மட்டுமே சாத்தியம் என்ற நம்பிக்கை கொண்டவர்கள். செல்வந்தர்கள் மற்றும் சக்தி வாய்ந்த நிலச்சுவாந்தார்கள் மற்றும் முதலீட்டார்கள் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி தங்கள் கொள்கைகளை ஏற்குமாறு செய்வதை தடுக்க தொழிலாளர் ஆட்சி தேவைப்படுகிறது. இவ்வகையான அரசியல் அமைப்பு சோவியத் யூனியன் அல்லது ரஷ்யாவில் 1917க்கு பிறகும், கிழக்கு ஐரோப்பாவில் 1945க்கு பிறகும், சீனாவில் 1949க்கு பிறகும், வியட்நாம் மற்றும் கியூபாவில் 1960க்கு பிறகும் அமைக்கப்பட்டன. இந்நாடுகள், சோஷியலிச பொருளாதார முறையை அமைத்தன. இவ்வகை பொருளாதார முறையில் நாட்டிலுள்ள எல்லா நிலப்பகுதிகளும், தொழிற்சாலைகளும், அரசாங்கத்திற்கு சொந்தமானவை. மக்கள் அனைவருக்கும் கல்வி, உடல்நலம், மற்றும் வேலைவாய்ப்புகள் போன்றவற்றிற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. சமத்துவ கொள்கை பின்பற்றப்பட்டது.

இருப்பினும், இந்நாடுகள் பலகட்சி தேர்தல்களை அனுமதிக்கவில்லை. ஒரே கட்சி பல தசாப்தங்கள் ஆட்சி செய்தது. செய்தி மற்றும் தகவல் தொடர்பு சாதனைங்கள் மீது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு இருந்தது. அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கும் சங்கங்கள் அமைத்துக்கொள்ள மக்களுக்கு அனுமதித் தரப்பட்டவில்லை அல்லது மக்கள் அரசாங்கத்தை மாற்றும் முயற்சி செய்யவும் அனுமதிக்கவில்லை. சமுதாயத்திலுள்ள மிகவும் ஏழ்மையான மக்களின் நலனுக்காவும், ஏழை மக்களுக்கு பயனளிக்கும் உண்மையான ஜனநாயகத்தை கொண்டு வரவும், உழைக்கும் தொழிலாளர் கட்சி அரசாங்கம் என்று கூறிக்கொண்டனர். ஆனால் இந்த அரசாங்கங்கள், இறுதியில் மக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் குறைப்பனவாக மாறிவிட்டன. 1992ஆம் ஆண்டில் ‘ஐக்கிய சோஷியலிஸ்ட் சோவியத் குடியரசு’(U.S.S.R) மக்கள் சுதந்திரம் மற்றும் உரிமைகளை கோரியதால் பிரிந்தது. இதை தொடர்ந்து U.S.S.R.ல் இருந்த பல சிறிய நாடுகளான, ரஷ்யா,(U.S.S.R ன் மறுபெயர்) உக்ரைன், எஸ்தோனியா போலந்து, ஹங்கேரி போன்ற நாடுகள் கம்யூனிச ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளன. பாராளுமன்ற ஜனநாயக முறையை அமைத்துக் கொண்டன. ஆயினும், இவற்றில் பல நாடுகள் ஜனநாயக முறையில் இருந்து நழுவி, ராணுவ சர்வாதிகார ஆட்சிக்கும் இனப்பிரிவுகளின் யுத்தங்களுக்கும் வழிவகுத்துவிட்டன.


தற்போதுள்ள நிலைமைகளில், உலக நாடுகள் எதிர் கொண்டுவரும் சிக்கலான பிரச்சனைகளுக்கு தீர்வு காண மிகச் சிறந்த ஆட்சி முறையாக விளங்குவது மக்களாட்சி முறை தான் என்று மக்கள் தெளிவாக புரிந்துகொண்டு வருகின்றனர். மக்களாட்சி முறை தான், மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளை மதித்து போற்றுகிறது என்றும் தெளிவாகி விட்டது. தற்போது புதுவகையான மக்களாட்சி முறை கருத்து உலகம் முழுவதும் மேலோங்கி வருகிறது. இவ்வகையான ஆட்சி முறையில் மிகவும் ஏழைகளும் பாதிக்கப்பட்ட மக்களும், அரசாங்கத்தின் கொள்கைகளை நிர்ணயிப்பதில் பங்கு வகித்து, செல்வாக்கு ஏற்படுத்தும் வாய்ப்பை பெற்றிருப்பர். இம்முறையிலான அரசாங்கம் மக்கள் அனைவருக்கும் நீதியையும், அமைதியையும் வழங்கிட உறுதி கூறுகிறது.

## முக்கியச் சொற்கள்


1. நாடோடி கால்நடை மேய்ப்பவர்கள்
2. நகரமயமாதல்
3. அரசியல் ஊழல்
4. வீட்டுக் காவல்
5. சர்வாதிகாரம்
6. முடியாட்சி
7. நிலப்பிரபுத்துவம்

## உனது கற்றலை மேம்படுத்துக :

வரைபடம் 1: 1900-1950 ல் மக்களாட்சி அரசுகள்,




வரைபடம் 2: 2011 ல் மக்களாட்சி அரசுகள்,




1(a). மேலே தரப்பட்டுள்ள கண்டங்களின் வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டு, கொடுக்கப்பட்ட ஆண்டில் மக்களாட்சியாக மாறிய மூன்று நாடுகளை கண்டறியவும். (சிலவற்றில் மூன்று நாடுகள் இல்லாமலும் இருக்கும்) கொடுக்கப்பட்ட ஆண்டுகள் மற்றும் கண்டங்கள் வாரியாக எழுதி அட்டவணையை தயாரிக்கவும்.(AS5)

SCERT TELANGANA

| வருடம் | ஆப்பிரிக்கா | ஆசியா | ஐரோப்பா | தென் அமெரிக்கா |
|---|---|---|---|---|
| 1900 | | | | |
| 2011 | | | | |

b) 2011ஆம் ஆண்டில் மக்களாட்சியை கொண்ட சில ஆப்பிரிக்க நாடுகளை கண்டறியுங்கள்.

c) 2011 ஆண்டில் மக்களாட்சியை பின்பற்றாத பெரிய நாடுகளின் பெயர்களை பட்டியலிடுக.

2. பெரும்பாலான நாடுகள், தேர்தல்களை நடத்துவதன் மூலம் தம்மை தாமே மக்களாட்சி என உரிமை கொண்டாடுகின்றன. இது மியான்மர் மற்றும் லிபியா நாடுகளில் எவ்வாறு நிகழ்ந்தது?(AS1)

3. ஆட்சியாளர்கள் ஏன் ஊடகங்களை கட்டுப்படுத்த முயற்சிக்கின்றனர்? உங்கள் பகுதியில், ஊடகங்கள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன என்று உங்களுக்குத் தெரியுமா?(AS4)

4. லிபியா மற்றும் மியான்மர் நாடுகளைச் சேர்ந்த இருவர் இடையே, அவர்களின் நாடுகளில் மக்களாட்சியை நிறுவிட நடந்த போராட்ட நிகழ்வுகள் குறித்து நடக்கும் உரையாடலை கற்பனை செய்து எழுதுக.(AS1)

5. மக்களாட்சியின் செயல்பாட்டிற்கு கல்விறிவும், தகவல் தொழில்நுட்பமும் எவ்வாறு உதவிபுரிகின்றன?(AS6)

6. மக்களாட்சிக்கும் சர்வாதிகாரத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாது?(AS1)

7. மியான்மர் நாட்டில் மக்களாட்சி தழைக்க ஆங்சான் சூகி எவ்வாறு காரணமானார்?(AS6)

8. பாடத்தின் கடைசி பத்தியை படித்து மக்களாட்சியின் புதிய வடிவத்தை எழுதுக.(AS2)

## செயல்திட்டம்


மக்களாட்சி கோரி லிபியா மற்றும் எகிப்து அல்லது இதர நாடுகளில் நடந்த போராட்டங்கள் குறித்த செய்திகளை, செய்தித்தாள்களை படித்து குறித்துக் கொள்ளவும். செய்திப் படங்களைக் கொண்ட ஒரு கோப்பு தயாரித்து, வகுப்பறையில் பார்வைக்கு வைக்கவும்.

SCERT TELANGANA

பாடம்
18

# மக்களாட்சி-ஒரு புதிய கருத்து

பதினேழாவது மற்றும் பதினெட்டாவது நூற்றாண்டுகளில், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் மக்களாட்சி அரசாங்கத்தின் துவக்கங்கள் நடந்ததை குறித்து நீங்கள் படித்தீர்கள். மேலும், லிபியா மற்றும் மியான்மர் நாடுகளில் மக்களாட்சிக்காக மிகவும் சமீப காலத்தின் போராட்ட இயக்கங்கள் குறித்தும் படித்தீர்கள். மக்களாட்சியின் பரிணாம வளர்ச்சி பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை சந்தித்துள்ளது. பொது மக்களின் ஆட்சிகள் ஏற்படுத்தப்பட்டன, பிறகு அவை தூக்கி எறியப்பட்டு மீண்டும் மன்னராட்சிகள் அமைக்கப்பட்டன. மக்களாட்சி அமைக்கப்பட்ட நாடுகளிலும், அவை ஆட்சியாளர்களை தேர்ந்தெடுப்பதில், ஒரு சில மக்களின் பங்கேற்பாக மட்டுமே இருந்தன. படிப்படியாக, மக்களாட்சியின் பொருள் பிரபலமடைந்தது. அதே சமயத்தில், மக்களாட்சி கருத்து, பல்வேறு வினாக்களை எழுப்பியது. அவை எளிதில் விடையளிக்க முடியாதவைகளாக இருந்தன. மக்களாட்சி குறித்த சில அர்த்தங்களையும், வினாக்களையும் இப்போது பரிசீலிக்க போகிறோம். மக்களாட்சி குறித்த வினாக்களை வகுப்பறையிலும், வெளியேயும், உங்களுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களுடனும் கலந்துரையாடுங்கள்.



நீங்கள் வரி செலுத்துபவராக இருந்தால் வாக்களிக்க முடியும்



நீங்கள் கல்வி கற்றவராக இருந்தால், வாக்களிக்க முடியும்



நீங்கள் பெண்களாக இருப்பதால், வாக்களிக்க முடியாது.

### மக்களாட்சி என்பது பொறுப்புள்ள ஒரு அரசாங்கம் :

அரசாங்கம் மக்களால் தேர்ந்தெடுக்கபடுகிறது. மக்களுக்கு பதிலளிக்கும் பொறுப்புடையது. மக்களாட்சி அமைப்பில் அரசாங்கத்தில் இருப்போர் மக்களிடம் இருந்து அவர்களுடைய அதிகாரத்தை பெறுகின்றனர். மக்களுக்கு பொறுப்புடையவர்கள் ஆவர். ஒவ்வொரு மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் இடைவெளியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களால் மக்களாட்சி அரசாங்கம் உருவெடுக்கிறது. அவர்கள் நிச்சயமான கால இடைவெளியில் அதாவது மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் தேர்தல்கள் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

லிபியா நாட்டு விஷயத்தில், நாட்டின் உயர் ஆட்சி அதிகாரம் புரட்சிகர அதிகார கவுன்சிலிடம் உள்ளதை நீங்கள் ஏற்கனவே படித்தறிந்தீர்கள். அது சுயமாக நியமித்து கொள்ளப்பட்ட ஒன்று. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதல்ல. அல்லது மக்கள் பிரதிநிதிகளின் கட்டளைக்கு உட்பட்டதல்ல. லிபியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் இருந்தன. ஆனால், அவை சுயமாக முடிவுகள் எடுத்து, நடைமுறைபடுத்தும் அதிகாரம் இன்றி இருந்தன. அவை 'புரட்சிகர அதிகாரக் கவுன்சிலின்' கட்டளைகளை நடைமுறைபடுத்த வேண்டியிருந்தது. புரட்சிகர அதிகாரக் கவுன்சில் அதனை தவிர, யாருக்கும் பொறுப்புடையதல்ல. மக்களாட்சி நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு மிகவும் உயர்ந்த அதிகாரம் உள்ளது. மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படாத எந்த ஒரு நபரும் அவர்கள் மீது அதிகாரம் செலுத்த முடியாது.


மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகம் செய்வோர் மக்களுக்கு பல்வேறு வழிகளில் பொறுப்புடையவர்கள். முதலாவதாக, மக்களாட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் இருக்கும். இவற்றில் நிர்வாகம் செய்வோர், அவர்கள் செய்யப் போகும் திட்டப்பணிகள் குறித்து விவரித்து அங்கீகாரம் பெறவேண்டும்.

SCERT TELANGANA

இரண்டாவதாக, அரசாங்கத்தால் செய்து முடிக்கப்பட்ட பணிகள் சம்பந்தபட்ட தகவல்களை கேட்டறியும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ளது. அரசாங்கம் அவ்வாறு கேட்கப்படும் தகவல்களை வெளியிட வேண்டியிருக்கும். மூன்றாவதாக, குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு பிறகு, தேர்தல்கள் நடத்தப்படும். நிர்வாகம் செய்வோர், மறுபடியும் தேர்தல்கள் மூலம் புதியதாக மக்களின் சாதகமான தீர்ப்பை கோருவர். மக்கள் வேட்பாளர்களிடம், அவர்கள் செய்த பணிகள் குறித்து விவரிக்க கேட்கலாம். வேட்பாளர்களின் பணிவிவரங்கள் திருப்தி அளிக்காவிட்டால், அவர்களை நிராகரிக்கும் முடிவு எடுப்பர்.

### மக்களாட்சி சமத்துவத்தின் மீது சார்ந்துள்ளது

மக்களாட்சி என்பது மக்களின் ஆட்சி என்று நாம் கூறும் போது, வயது வந்தோரை குறிக்கும். அவர்கள் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம். செல்வந்தரா அல்லது ஏழையாக, வெள்ளையரா அல்லது கறுப்பராக, இந்துவாக அல்லது கிருஸ்துவராகவோ அல்லது முஸ்லீமாகவோ, அல்லது நாத்திகராகவோ இருக்கலாம். ஒரு மொழி பேசுபவராக அல்லது வேறுமொழி பேசுபவராக இருக்கலாம். இவ்வாறான நிலையை அடைய நீண்ட காலம் பிடித்தது. தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை குறிப்பானாக எடுத்துக் கொள்வோம். துவக்கத்தில் செல்வம் படைத்த ஒரு சிலர் மட்டுமே வாக்களிப்பதில் பங்கேற்றனர். படிப்படியாக சில நாடுகளில் ஏழை மக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அதன் பிறகு பெண்களுக்கும் இறுதியில் எல்லா இன மற்றும் மதங்களில் மக்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. அமெரிக்காவில் வெள்ளையர் இன பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை 1920ல் வழங்கபட்டது. வாக்களிப்பதில் கறுப்பு இன குடிமக்கள் பங்கு கொள்வதை தடுக்கும் பாரபட்ச போக்கு 1965ஆம் ஆண்டில் தான் நீக்கப்பட்டது. எல்லா இன மக்களுக்கும் வாக்கு அளிக்கும் முறையை பின்பற்றிய முதல் நாடு நியூசிலாந்து நாடாகும். அந்நாட்டில் கறுப்பின மக்களும், பெண்களும் இவ்வுரிமையை சாதித்திட போராட்டம் நடத்தினர். 1917ஆம் ஆண்டின் ரஷ்ய புரட்சிக்கு பிறகு வாக்குரிமை ரஷ்யாவில் வழங்கப்பட்டது. வயது வந்தோருக்கான வாக்குரிமையை அனைவருக்கும் வழங்கிய மிகப்பெரிய முதல் நாடு சோவியத் சோஷியலிச குடியரசுகளின் யூனியன் (USSR) ஆகும். இருப்பினும், இப்போதும் கூட பல்வேறு நாடுகள் மக்களின் சில சமூகங்களிடையே வேற்றுமை காட்ட சட்டங்கள் இயற்றியுள்ளன.



*நீங்கள் வாக்களிக்க முடியாது. ஏனெனில், நீங்கள் வேறு இனத்தவர்கள்*



*நீங்கள் வாக்களிக்க முடியாது. ஏனெனில், நீங்கள் மிகவும் வயது குறைந்தவர்கள்.*

- எஸ்டோனியா நாட்டு அரசாங்கம், அதன் குடியுரிமை பெறும் விதிமுறைகளை கடுமையாக்கி உள்ளதால், ரஷ்ய சிறுபான்மை மக்கள் வாக்குரிமை பெறுவது கடினமாகியுள்ளது.
- பிஜி (Fiji) நாட்டில் தேர்தல் முறைகளால் அந்நாட்டின் பூர்வீக பிஜி மக்களுக்கு, இந்திய பிஜி குடியுரிமை பெற்ற மக்களை காட்டிலும் அதிக மதிப்பு தரப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டில் இருந்து சமமான வாக்குரிமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


மக்களாட்சி என்பது அரசியல் சமத்துவம் என்னும் அடிப்படை கொள்கை மீது ஆதாரப்பட்டுள்ளது. மக்களாட்சியில், ஒவ்வொரு வயது வந்தோருக்கும் ஒரு வாக்குரிமையும், ஒவ்வொரு வாக்குக்கும் ஒரு மதிப்பும் இருக்கும்.

SCERT TELANGANA

- இப்போதும் கூட, பெரும்பாலான நாடுகள், இதர நாடுகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்து அந்நாடுகளில் வாழும் மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கவில்லை. உலகம் முழுவதும் இவ்வாறு பல மில்லியன்கள் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வாக்களிக்கும் ஜனநாயக உரிமையின்றி வாழ்கின்றனர். இவர்கள் வாழும் நாடுகள் இவர்களை சட்டத்திற்கு புறம்பாக குடியேறியவர்கள் போல் நடத்துகின்றன. அமெரிக்காவில் குடியேறியுள்ள தென் அமெரிக்கர்கள், அல்லது பிரான்ஸ் அல்லது ஜெர்மனி நாட்டில் குடியேறியுள்ள துருக்கியர் போன்றோரின் மோசமான நிலையும் இது போன்றதே. அவ்வாறு குடியேறியவர்கள் அல்லது அகதிகள் இந்தயா உள்பட எல்லா நாடுகளிலும் உள்ளனர். அவர்கள் மக்களாட்சி நிர்வாகத்தில் ஒரு பாகமாக இருக்கக்கூடாதா?
- ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்குரிமை தரப்பட்டால், சிறுபான்மை மற்றும் சிறுபான்மை மதத்தவர்கள், பெரும்பான்மை இல்லாதவரால் ஆதிக்கம் செலுத்தப்படுவர். இது நியாயமானதா? அல்லது வேறுபட்ட கருத்துள்ள மக்களின் பங்கேற்பு மக்களாட்சியில் உறுதிபடுத்த வேண்டும் என்னும் கொள்கைக்கு ஏற்புடையதா?

## மக்களாட்சியில் குடிமக்களின் சுறுசுறுப்பான பங்கேற்பு தேவைப்படுகிறது

பெரும்பாலும் மக்களாட்சி என்பதை தேர்தலில் வாக்களித்தல் மற்றும் ஆட்சியாளர்களை தேர்ந்தெடுத்தல் என்னும் பொருள்படும் கருதப்படுகிறது. இருப்பினும், மக்களாட்சி என்பது, அரசாங்கத்தின் சட்டம் இயற்றுதல், கொள்கைகள் உருவாக்குதல் போன்றவற்றில் குடிமக்கள் சுறுசுறுப்பாக பங்கேற்பதாகும். மேலும் அவற்றின் நடைமுறை படுத்தலிலும் பங்கேற்க வேண்டும். இவற்றை எவ்வாறு செய்திட முடியும்? நாட்டின் கொள்கைகள், சட்டங்கள் இயற்றப்படும் போது, பொது மக்கள் கலந்துரையாடலில் பங்கேற்று தங்கள் தேவைகள் மற்றும் கருத்துகளை வெளிப்படையாக எடுத்துரைத்தல் போன்றவை மூலம் பங்கேற்கலாம். சுதந்திரமான குடிமக்கள் கமிட்டிகள் அமைத்துக்கொண்டு, நாட்டின் சட்டங்கள் திறம்பட செயல்படுகின்றனவா என்பதை கவனித்து வரவேண்டும். இவ்வாறான குடும்பங்களின் பங்கேற்பை சுலபமாக சாதிக்க முடியாது. பல்வேறு நாடுகளில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள், பொது மக்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதில்லை. மேலும் அவர்கள் பங்கேற்பை தடுக்கின்றன. மக்களும் பொது நிர்வாக விஷயங்களில் ஆர்வம் காட்டுவதில்லை. அக்கறையின்றி காணப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, மிகவும் விளம்பரபடுத்தப்பட்டு நடத்தபட்ட 2012ஆம் ஆண்டின் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் 40%க்கும் மேற்பட்ட மக்கள் வாக்களிக்காமல் இருந்துவிட்டனர்.



*மக்களின் அதிகாரம் இச்சதுரங்க பலகையில் எவ்வாறு நகர்ந்து மாறும்?*

- மக்கள் ஏன் நிர்வாகத்தில் பங்கேற்க விரும்புவதில்லை? இந்நிலை ஏன்? மிகவும் குறைவான நிர்வாக அறிவா? அல்லது நிர்வாகத்தில் ஆர்வம் இல்லாமையா? அல்லது நிர்வாகத்தில் அவர்கள் உண்மையில் செய்வதற்கு ஒன்றுமில்லையா?

## மக்களாட்சியில் சமூக சுதந்திரங்கள் தேவைப்படுகின்றன

மக்களாட்சியில் ஆட்சி விவகாரங்கள் குறித்து தெரிந்துகொள்ளவும், அவற்றை குறித்து விவாதிக்கவும், தங்கள் கருத்துகளை ஏற்படுத்தி கொள்ளவும், தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த அவர்களின் கருத்துக்களை வலியுறுத்த சங்கங்கள் அமைத்துக்கொள்ளவும், மக்களுக்கு சுதந்திரம் இருந்தால் தான், மக்கள் சமூக செயலில் பங்கேற்க முடியும். இவற்றை சமூக சுதந்திரங்கள் என்பர். இருப்பினும். இவ்வுரிமைகளை மக்கள் அவ்வளவு எளிதில் சாதித்திடவில்லை. அரசாங்கங்கள், பொது விவகாரங்கள் குறித்து தெரிந்துகொள்ளும் மக்களின் உரிமைகள், சுதந்திர சங்கங்கள், சுதந்திரமான பேச்சு முதலியவற்றின் மீது கட்டுபடுத்த முயற்சிக்கும். பெரும்பாலான அரசாங்க முடிவுகள் மக்கள் அறியாதவண்ணம், ரகசியமாக வைக்கப்பட்டன. செய்தித்தாள்களும், அரசு நிர்வாகம் குறித்த நூல்களும் தணிக்கை செய்யப்பட்டன. அரசாங்கத்திற்கு எதிரான கருத்துகள் வெளியிட அனுமதிக்கபடவில்லை. மக்கள் அரசியல் கட்சிகளை அமைத்துக்கொள்ளவும் அல்லது சங்கங்களை அமைத்துகொள்ளவும், அனுமதிக்கப்படவில்லை. ஒரே ஒரு கட்சி மட்டும் அல்லது அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற கட்சிகள் மட்டும் செயல்பட அனுமதிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக சமூக உரிமைகள், சோவியத் சோஷியலிச குடியரசுகளின் யூனியனின் மக்களுக்கு வழங்கப்படவில்லை. அங்கு வயதுவந்தோருக்கான வாக்குரிமை மற்றும் குறிப்பிட்ட இடைவெளி காலத்தில் தேர்தல்கள் இருந்தன. எனவேதான், அம்மக்கள் அறுபது ஆண்டுகளாக ஒரே கட்சியின் ஆட்சியில் அனுசரித்து செல்ல வேண்டியதாயிற்று. இன்றும் கூட இவ்வுரிமைகள் எல்லா நாடுகளிலும் மக்களுக்கு கிடைப்பதில்லை. மக்களின் சமூக உரிமைகள் மீதான கட்டுபாடுகள், அரசாங்கங்கள் ஆட்சியில் நீடித்திருக்க உதவுகின்றன.

- பல்வேறு அரசாங்கங்கள் மக்களுக்கு சமூக சுதந்திர உரிமைகளை வழங்கியுள்ளன. ஆனால், அவை குடிமக்களின் நடவடிக்கைகளை, அவர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுகேட்பது அல்லது கடிதங்களை தணிக்கை செய்வது, உளவுபார்ப்பது போன்றவை மூலம் உன்னிப்புடன் கவனித்து வருகின்றன. இது நியாயமானது என்று நீங்கள் கருதுகிறீர்களா?

## மக்களாட்சியில் சமத்துவம் தேவைப்படுகிறது

மக்களாட்சிக்கு அரசியல் சமத்துவம் தேவைப்படுகிறது என்பதை நாம் ஏற்கனவே அறிந்தோம். அதாவது ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்குரிமை என்பதாகும். இருப்பினும் அரசியல் சமத்துவம் பலனிக்க வேண்டுமாயின், சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளில் சமத்துவம் பலனலிக்க வேண்டுமாயின், சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளில் சமத்துவம் இருக்க வேண்டும். சமுதாயம் மிகுந்த அளவில் சமனில்லாத சமூக வகுப்புகளாக பிரிந்திருந்தால் அல்லது பணக்காரர்கள் மற்றும் ஏழைகளாக அல்லது உயர்ந்த ஜாதிகள் மற்றும் தாழ்த்தப்பட்டோராக பிரித்திருந்தால், அரசியல் சமத்துவம் பொருளற்றதாகி விடும். உயர்ந்த நிலை மற்றும் செல்வம் படைத்தோர் சமூகத்திலுள்ள பிற மக்களை எளிதில் கட்டாயபடுத்தி, அவர்கள் விரும்பும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு செய்திட முடியும். அதிக எண்ணிக்கையிலான குடும்பங்களில், குடும்பத்தலைவர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை முடிவு செய்கின்றனர். குடும்பத்திலுள்ளோர் அனைவரும் அவரது முடிவு படியே வாக்களிக்கின்றனர். பல பகுதிகளில் சக்தி வாய்ந்த நிலச்சுவாந்தார்கள் அல்லது தொழிற்சாலை அதிபர்கள் போன்றோர் அவர்களுடைய தொழிலாளர்களை அவர்கள் கூறியபடி வாக்களிக்குமாறு கட்டாயபடுத்துகின்றனர். மக்களாட்சியில் இது ஒரு வகையான பணம் என்றும் அதிகாரம் படைத்தோரின் தலையீடு என்றும் கூறுவர். பணம் படைத்த செல்வந்தர்கள், மக்களாட்சியில் தலையீடு செய்திடும் மற்றொரு வழியும் உள்ளது. அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில், தகவல்தொடர்பு சாதனங்கள் மிகுந்த செல்வம் படைத்த வணிக நிறுவனங்கள் அல்லது

| அட்டவணை 1 தேர்ந்தெடுக்கபட்ட நாடுகளில் வருவாய் சமமின்மைகள் | | |
|---|---|---|
| | தேசிய வருவாயில் பங்கு | |
| | 20% மேல்மட்ட வகுப்பினர் | 20% அடிமட்ட வகுப்பினர் |
| தென் ஆப்பிரிக்கா | 64.8 | 2.9 |
| பிரேசில் | 63.0 | 2.6 |
| அமெரிக்கா | 50.0 | 4.0 |
| இங்கிலாந்து | 34.5 | 9.6 |
| டென்மார்க் | 34.5 | 9.6 |
| ஹங்கேரி | 34.5 | 10.0 |

SCERT TELANGANA

செல்வந்தர்களுக்கு சொந்தமானவைகளாக உள்ளன.

அவர்கள் திறமையாக கையாண்டு, பொதுமக்கள் கருத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். எதை மிகைபடுத்த வேண்டுமோ, எதை இரட்டிப்பு செய்ய வேண்டுமோ அதன்படி செயல்படுகின்றனர். செல்வம் படைத்தோரும், செல்வாக்கு உடையோரும், சட்டமியற்றும் சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுடன் மிக எளிதில் தொடர்பு கொள்ள முடிவதால், அவர்களுடைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்ள முடிகிறது. மற்றொரு பக்கத்தில், ஏழைகள் மற்றும் எழுத்தறிவு இல்லாத மக்களுக்கு அரசாங்க வட்டாரங்களில் செல்வாக்கு கிடையாது. மக்களாட்சி முறையை பின்பற்றும் பெரும்பாலான அரசாங்கங்கள் ஏழை மக்களின் நலனுக்கு எதிரான கொள்கைகளை பின்பற்றுகின்றன. இவற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது யாதெனில், அரசியல் சமத்துவத்துடன், சமூக மற்றும் பொருளாதார சமத்துவம் இல்லாமல். உண்மையான மக்களாட்சியை பெறமுடியாது என்பதாகும்.

- மக்களாட்சியை பின்பற்றி, மக்களின் நலனுக்காக பணியாற்றும் நாடுகளிலும், அதிக அளவில் சமனின்மை நிலவுவதற்கு, காரணங்கள் எதுவாக இருக்கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

## மக்களாட்சிக்கு சுதந்திரமான மற்றும் திறமையான தேர்தல்கள் தேவைப்படுகின்றன

ஒரு நாட்டின் மக்கள் உண்மையில் சிறந்த நபர்களை அல்லது கட்சிகளை தங்கள் சார்பாக தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். அதாவது, எந்த ஒரு நபரோ அல்லது கட்சியோ தேர்தலில் போட்டியிட வாய்ப்பு இருக்க வேண்டும். எந்த ஒரு கட்சிக்கும் சிறப்பு சலுகைகள் தரப்படக்கூடாது. சோவியத் சோசியலிச குடியரசுகளின் கூட்டமைப்பு, மியன்மார், லிபியா போன்ற பல நாடுகளில் ஒன்று அல்லது இரண்டு கட்சிகள் மட்டும் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படுகின்றன. அச்சமயங்களில், மக்கள் வேறு வழியின்றி அவர்களுக்கு வாக்களிக்க வேண்டியுள்ளது. மேலும் சில நாடுகளில் ஆளுங்கட்சிகள் அரசாங்க சாதனங்களை பயன்படுத்தி அவர்களுக்கு சாதகமாக வாக்களிக்குமாறு சம்மதிக்க வைக்கின்றனர் அல்லது கட்டாயப்படுத்தி வாக்களிக்கச் செய்கின்றன அத்துடன் எதிர்கட்சி வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படுமாறு செய்கின்றனர். அல்லது எதிர்கட்சி வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குமாறு செய்கின்றனர். தேர்தல்களை ஏதோ ஒரு வகையில் நடத்துவது போதுமானதல்ல. தேர்தல்கள் வாக்காளர்களுக்கு அவர்கள் விரும்பும் அரசியல் கட்சிகளை தேர்ந்தெடுக்கும் உண்மையான வாய்ப்புகளை தரவேண்டும். தேர்தல்கள் வாக்காளர்களுக்கு, ஆட்சியில் இருப்போரை நீக்க விரும்பினால், அவர்களுக்கு பதிலாக மாற்று அரசியல் கட்சியை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு தரப்படவேண்டும். ஒரு மக்களாட்சி நாட்டை மதிப்பீடு செய்ய வேண்டுமானால், அதன் தேர்தல்களை முக்கியமாக கவனிக்க வேண்டும். ஆனால் தேர்தலுக்கு முன்பு இருந்த நிலையையும், தேர்தலுக்குப் பின்பு ஏற்பட்ட நிலையையும் கவனிக்க வேண்டியது முக்கியமானதாகும். நாட்டில் சாதாரண அரசியல் நடவடிக்கைகளுக்கு போதுமான வாய்ப்பு இருக்கவேண்டும். தேர்தலுக்கு முன்பு அரசியல் ரீதியான எதிர்ப்பு தெரிவிக்கும் நிலைமை இருக்க வேண்டும். நாட்டின் அரசாங்கம் குடிமக்களின் சமூக சுதந்திரங்களை மதித்து போற்ற வேண்டிய தேவை உள்ளது. எனவே, பதவியில் இருக்கும் கட்சி தோல்வியுறும் நிலைமை இருப்பினும், மக்களாட்சியின் தேர்தல்கள் சுதந்திரமானவையாகவும், நியாயமானவையாகவும், நடக்க வேண்டும்.

## மக்களாட்சியில் சட்டத்தையும், சிறுபான்மையினர் கருத்தையும் மதிக்க வேண்டும்

மக்களாட்சி என்பது பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் என்று குறிப்பிட்டு சொல்லப்படுகிறது. இதன் பொருள் மக்கள் தலைவர்களின் ஆட்சி என்பதல்ல. ஆட்சியிலுள்ள தலைவர்கள் அவர்களின் ஆதரவாளர்கள் விரும்புவதையெல்லாம் செய்யலாம் என்ற போக்கு இருக்காது. எல்லா மக்களாட்சி அரசாங்கங்களும் சட்டத்திற்கு உட்பட்டு செயலாற்ற வேண்டும். நீதித்துறையையும், நிர்வாகம் செய்திடும் அதிகாரிகளையும், சட்டத்தின்படி சுதந்திரமாக செயலாற்ற அனுமதிக்க வேண்டும். பெரும்பான்மை மக்களின் கருத்துக்கு எதிரான கருத்துடைய சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கும், மதிப்பளிக்க வேண்டும். அவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்கவும், பரப்புவதற்கும், மக்கள் அவற்றை ஏற்கும்படி செய்யவும் அவர்களுக்கு உள்ள உரிமையை மதித்து நடந்து கொள்ள வேண்டும். அவற்றை பொரும்பான்மையினர் மறுத்தாலும், அவற்றை தீங்கு விளைவிப்பதாக இருப்பினும்,



SCERT TELANGANA

- ஒரு அரசியல் கட்சிக்கு மக்கள் தொடர்ந்து ஆட்சி நடத்த வாக்களிக்கின்றனர் என்றால், மக்கள் உண்மையிலேயே அக்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்று உண்மையிலேயே கருதுகிறீர்களா? அல்லது மாற்று கட்சி இல்லையா? அல்லது மக்கள் மாற்று கட்சிக்கு வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லையா? கீழ்காணும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு பதிலளியுங்கள்:

அ. மெக்ஸிகோ நாட்டில், 1930ல் அந்நாடு சுதந்திரம் பெற்றதில் இருந்து, ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஜனாதிபதிக்கான தேர்தல்கள் நடந்து வருகின்றன. இந்நாடு எப்பொழுதும் ராணுவ ஆட்சி அல்லது சர்வாதிகாரியின் ஆட்சியின் கீழ் இருந்ததில்லை. ஆனால் 2000ஆம் ஆண்டுவரை, ஒவ்வொரு தேர்தலிலும் புரட்சிகர நிறுவனத் கட்சி வெற்றி பெற்று வந்தது. எதிர் கட்சிகள் போட்டியிட்டாலும், ஆட்சி அமைக்க இயலவில்லை. புரட்சிகர நிறுவனக் கட்சி தேர்தலில் வெற்றி பெற பல்வேறு முறைகேடுகளை பயன்படுத்தியது என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன. அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைக் கொண்டு, புரட்சிகர நிறுவனக் கட்சிக்கு வாக்களிக்குமாறு, பெற்றோர்கள் கட்டாயப்படுத்தபட்டனர்.

ஆ. ஜிம்பாப்வே நாடு, 1980ஆம் ஆண்டில், சிறுபான்மை வெள்ளையரின் ஆட்சியில் இருந்து விடுதலை அடைந்தது. அப்போதிலிருந்து அந்நாடு, விடுதலைப்போராட்டத்தை தலைமையேற்று நடத்திய ZANU-PF கட்சி ஆட்சியில் இருந்து வருகிறது. அக்கட்சியின் தலைவர் 'ராபர்ட் முகாபே' நாடு விடுதலை பெற்றது முதல் ஆட்சி செய்து வருகிறார். குறிப்பிட்ட இடைவெளியில் தொடர்ந்து தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. எப்போதும் ZANU-PF கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்து வருகிறது. ஜனாதிபதி முகாபே பிரபலமான தலைவர். தேர்தலின் போது முறைகேடுகளை பின்பற்றினார் என்ற குற்றச்சாட்டு உள்ளது. அவருடைய அரசாங்கம், அரசியலமைப்பு சட்டத்தை பல முறை திருத்தியது. இதனால் ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. அவருடைய பொறுப்புத்தன்மை குறைக்கப்பட்டது. எதிர்கட்சி தொண்டர்கள் துன்புறுத்தப்பட்டனர். அவர்களுடைய கூட்டங்களுக்கு இடையூறுகள் விளைவிக்கப்பட்டன. ஜனாதிபதியை குறைகூறும் உரிமைக்கு கட்டுப்பாடு விதிக்கும் சட்டம் உள்ளது. தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்றவை அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆளும் கட்சியின் கருத்துக்களை சார்ந்து வெளியிடுகின்றன.

இ. சீன நாட்டில், ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை, பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க, தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்தில் நடத்தப்படுகின்றன. இதன் பாராளுமன்றம் தேசிய மக்களின் சபை எனப்படுகிறது. சீன மொழியில் 'குவாங்குவோ ரென்மின் தாய்பியா தாஹுய்,' என்றழைக்கப்படுகிறது. தேசிய மக்களின் சபை, நாட்டின் ஜனாதிபதியை நியமிக்கும் அதிகாரம் கொண்டது. இச்சபையில் சீன நாட்டின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 3000 உறுப்பினர்களை கொண்டது. சில உறுப்பினர்களை ராணுவம் தேர்ந்தெடுக்கிறது. தேர்தலில் போட்டியிடுவதற்கு முன், வேட்பாளர்கள், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அனுமதி பெற வேண்டியிருக்கும். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்கள் அல்லது அக்கட்சியுடன் கூட்டு வைத்துள்ள எட்டு சிறிய கட்சிகளின் வேட்பாளர்களை தேர்தலில் போட்டியிட 2002-2003 ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டது. இந்நாட்டில் எப்பொழுதும் சீன கம்யூனிஸ்ட் கட்சி தான் ஆட்சி செய்யும் அரசாங்கத்தை அமைத்து வருகிறது.

சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

மக்களாட்சிக்கு எதிரான கருத்து கொண்ட மக்களை சமாளித்தல், மக்களாட்சிக்கு பதிலாக ஏதேனும் ஒரு வகை சர்வாதிகார ஆட்சி வரவேண்டும் என்று நினைப்போரையும், ஆட்சி அதிகாரம் ஒரு குறிப்பிட்ட வகுப்பை சேர்ந்தவருக்கு அல்லது குறிப்பிட்ட மதம் அல்லது இனத்தை சேர்ந்தவருக்கு மட்டும் இருக்கவேண்டும் என்று கருதுவோரையும் சமாளித்தல் என்பது மக்களாட்சி எதிர்கொண்டுள்ள மிகப்பெரும் சவாலாகும். இக்கருத்துடைய மக்கள் தங்களுடைய கருத்துகளை பரப்புவதற்கு அனுதிக்கப்படலாமா? வேண்டாமா?

இவை அனைத்தும், நமக்கு மக்களாட்சியின் மற்றொரு அம்சத்தை எடுத்துக்காட்டுகிறது. மக்களாட்சி அரசாங்கம் அரசியலமைப்பு சட்டம் மற்றும் குடிமக்களின் உரிமைகள் குறித்த கட்டுபாடுகளுக்கு உட்பட்டு ஆட்சி செய்கிறது என்பதாகும்.

## மக்களாட்சி - பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை

மக்களாட்சி என்பது பெரும்பான்மையோரின் ஆட்சி என்று பொருள்படுகிறது. எந்த



SCERT TELANGANA

ஒரு நாட்டிலும், மாறுபட்ட எண்ணங்கள் மற்றும் கலாச்சாரங்கள் கொண்ட மக்கள் இருப்பர். எனவே, வேறுபட்ட கருத்துகள் எழுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. கருத்துவேறுபாடுகளை தீர்த்து வைக்க மக்களாட்சி முறைப்படியான வழிஎது? மக்களாட்சியில் பல சமயங்களில் பெரும்பான்மை அடிப்படையில் முடிவுகள் செய்யப்படுகின்றன. அதாவது, ஒவ்வொரு வாக்கையும், சாதகமான கருத்தாக கொண்டு, பெரும்பான்மை வாக்குகள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளபட்டதாக கருதப்படுகிறது. இம்முறை சாதாரண சமயங்களில் பயன்படுகிறது. முக்கியமான சமயங்களில் சாதாரண பெரும்பான்மை முறையை பின்பற்றுவதால் சிறுபான்மை வகுப்பினரின் கருத்தை கவனத்தில் கொள்ளாமல் அண்ணியராக விடப்படும் அபாயம் உள்ளது. எனவே,

**தேர்தல்கள் மற்றும் மக்களாட்சி குறித்து சில வினாக்கள்**


நம் நாட்டில் நடக்கும் தேர்தலை எடுத்துக்காட்டாக பார்ப்போம். ஒரு பகுதியில் வாழும் அனைத்து மக்களில் 1000 நபர்கள் வாக்குரிமை பெற்றுள்ளனர் என்று ஊகித்துக்கொள்வோம். ஒரு தேர்தலின் போது 60% வாக்காளர்கள் வாக்களிக்கின்றனர். இதில் 600பேர் வாக்களித்தனர் என்று தெரிகிறது. தேர்தலில் பத்து வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்று வைத்துகொள்வோம். இவர்களில் வெற்றி பெறுபவர் 250 வாக்குகள் பெறுகின்றார். இரண்டாவதாக வருபவர் 200 வாக்குகளும், மீதமுள்ளவர்கள் 150 வாக்குகளும் பெறுகின்றனர். நாம் 250 வாக்குகள் பெற்றவரை வெற்றி பெற்றவராக அறிவிக்கின்றோம். வெற்றி பெறும் அவர் உண்மையில் அப்பகுதி மக்களின் பிரதிநிதியாக அவர்களின் நலனை பிரதிபலிக்க முடியுமா? உண்மையாக கணித்து பார்த்தால், நான்கில் ஒரு பங்கு வாக்காளர்களின் பிரதிநிதியாக மட்டும் விளங்குகிறார். இவ்வாறான முறை சரியான ஜனநாயக ஏற்பாடு என்று நீங்கள் கருதுகிறீர்களா? இதைவிட மேலான முறைகள் மூலம் மக்கள் பிரதிநிதித்துவம் செய்து நாட்டு நிர்வாகத்தில் முடிவுகள் செய்யும் அமைப்பில் பங்கு பெறச்செய்ய முடியுமா?

முக்கியமான முடிவுகள் எடுக்கும் சமயங்களில் சிறுபான்மையினரின் கருத்துகளையும், தேவைகளையும் கவனத்தில் கொண்டு, முடிவுகள் எடுக்க வேண்டும். இது தொடர்பான இரண்டு முக்கியமான எடுத்துக்காட்டுகளை காண்போம்.

### பெல்ஜியம் மற்றும் ஸ்ரீலங்கா

பெல்ஜியம் ஐரோப்பாவிலுள்ள ஒரு சிறிய நாடு. மொத்த மக்கள் தொகையில் 59% மக்கள் ப்ளமிஷ் மாகாணத்தில் வசிக்கின்றனர். டச்சு மொழி பேசுகின்றனர். மற்றொரு 40% மக்கள் வாலோனியா மாகாணத்தில் வசிக்கின்றனர். பிரெஞ்சு மொழி பேசுகின்றனர். மீதமுள்ள ஒரு சதவீத மக்கள் ஜெர்மன் மொழி பேசும் பெல்ஜியர்கள். இதன் தலைநகரான பிரசெல்ஸ்-நகரில் உள்ள மக்களில் 80% மக்கள் பிரெஞ்சு மொழியையும், 20% மக்கள் டச்சு மொழியையும் பேசுகின்றனர்.

பிரெஞ்சு மொழி பேசும் சிறுபான்மை சமூகத்தினர் செல்வந்தர்களாகவும், செலவாக்கு உடையவர்களாகவும் விளங்கினர். இது டச்சுமொழி பேசும் சமூகத்தினரால் எதிர்க்கப்பட்டது. இதனால் டச்சு மொழி மற்றும் பிரஞ்சு மொழி பேசம் சமூகத்தினரிடையே 1950 மற்றும் 1960களில் தீவிர கருத்து வேறுபாடு மற்றும் பதற்றங்களை உண்டாக்கியது. இப்பதற்ற நிலை பிரசெல்ஸ் பகுதியில் இவ்விரு சமூகத்தினரிடையே மிக கடுமையான அளவில் இருந்தது. பிரசெல்ஸ் பகுதியில் பிரத்யேகமான பிரச்சனையை கொண்டிருந்தது. அங்கு டச்சு மொழி பேசும் மக்கள் தேசிய அளவில் பெரும்பான்மையினராக இருந்தனர். ஆனால், தலைநகரில் சிறுபான்மையினராக இருந்தனர்.



பெல்ஜியத்தின் மாகாணங்களும் சமூகங்களும்

ஸ்ரீலங்கா ஒரு தீவு நாடாகும். இது இந்தியாவின் தென்திசையில் அமைந்துள்ளது. ஸ்ரீலங்காவும் வேறுபட்ட மக்களை கொண்டுள்ளது. பெரும்பான்மை சமூகத்தினராக சிங்கள மொழி பேசும் மக்கள் 75% உள்ளனர். தமிழ்மொழி பேசும் மக்கள் 18% உள்ளனர். சிங்கள மொழி

SCERT TELANGANA


பேசும் மக்களில் பெரும்பான்மையோர் புத்தமதத்தினராக உள்ளனர். தமிழ்மொழி பேசும் மக்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள் அல்லது முஸ்லீம்களாக உள்ளனர்.

இவ்விரண்டு நாடுகளிலும், பெரும்பான்மை சமூகத்தினரின் கருத்துக்கள் கட்டாயமாக மேலாதிக்கம் பெற்றிருக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? பெல்ஜியம் மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய இவ்விரு நாடுகளில் என்ன நிகழ்ந்தது என்பதை நாம் பார்ப்போம்.

## ஸ்ரீலங்காவில் பெரும்பான்மையினரின் ஆதிக்கம்

ஸ்ரீலங்கா 1948ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற பிறகு, சிங்கள இனத்தவரின் தலைவர்கள், அவர்களின் பெரும்பான்மை எண்ணிக்கையை கொண்டு, அரசாங்கத்தில் மேலாதிக்கம் செலுத்த துவங்கினர். இதன் விளைவாக, மக்களாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் பெரும்பான்மையினர் கருத்துபடி சிங்களர்களின் மேலாதிக்கம் பெறும்படியான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைமுறைபடுத்தியது. சிங்கள மொழி அரசாங்க மொழியாக்கப்பட்டு தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தராமல் அலட்சியப்படுத்தியது. வேலைவாய்ப்புகளில் சிங்கள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை கொள்கையை அரசாங்கம் பின்பற்றியது. அந்நாட்டின் புதிய அரசியலமைப்பு சட்டம், புத்தமதத்தை போற்றி பாதுகாத்திட நிர்ணயித்தது. அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகள் அனைத்தும், ஒன்றை அடுத்து மற்றொன்று தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதால், ஸ்ரீலங்கா தமிழரிடையே தாங்கள் வெளிநாட்டவர் ஆக்கப்பட்டு வருகின்றோம் என்ற எண்ணம் படிப்படியாக அதிகரித்தது. இதன் விளைவாக, சிங்களர்கள் மற்றும் தமிழர் சமூகத்தினரிடையே தொடர்புகள் காலப்போக்கில் நம்பிக்கையில்லா தன்மையை அடைந்தன. இலங்கைத் தமிழர்கள் தங்களுக்கென்று கட்சிகளை அமைத்துக்கொண்டனர். சம அந்தஸ்து மற்றும் தமிழர்கள் வாழும் மாகாணங்களின் சுய ஆட்சி உரிமைக்காக போராட்டங்கள் நடத்தினர். சிங்கள அரசு இவற்றை தொடர்ந்து மறுத்து வந்தது. 1980களில் பல்வேறு அரசியல் நிறுவனங்கள் நிறுவப்பட்டன. சுதந்திர தமிழ் ஈழம் கோரி வடக்கு மற்றும் கிழக்கு இலங்கை பகுதிகளில் மக்கள் போராட்டம் செய்தனர்.

**ஸ்ரீலங்காவின் தொன்மை சமூகங்கள்**




சிங்களர்கள் மற்றும் தமிழர்களிடையே நிலவி வந்த நம்பிக்கையற்ற தன்மை, பரவலான சண்டை சச்சரவுகளாக மாறியது. தமிழ் ஈழம் விடுதலை புலிகள் தீவிர தேசிய இயக்கத்தை சேர்ந்தவர்கள். தமிழர்கள் வாழும் சில மாகாணங்களில் சுதந்திர ஆட்சியை அமைந்தது. விரைவில் இது உள்நாட்டு போராக மாறியது. இப்போரின் இறுதியில் ஸ்ரீலங்கா ராணுவம், தமிழ் ஈழ விடுதலை புலிகள் இயக்கத்தை தோற்கடித்து விட்டது. தமிழர்கள் வாழும் மாகாணங்களில் மிருகத்தனமான அடக்குமுறையை கையாண்டது. ஆயிரக்கணக்கான தமிழர்களை கொன்று, வாழ்விடங்களை வேருடன் களைந்தெறிந்தது. எண்ணற்ற குடும்பங்கள் நாட்டைவிட்டு வலுகட்டாயமாக அகதிகளாக வெளியேற்றப்பட்டனர். எண்ணற்ற மக்கள் அவர்களின் வாழ்க்கை மற்றும் தொழில்களை இழந்தனர்.

உள்நாட்டு போருக்கு முன்பு, ஸ்ரீலங்கா மிகச் சிறந்த பொருளாதார மேம்பாடு, கல்வி, ஆரோக்கியம் முதலிய அம்சங்களில் சாதித்திருந்தது. ஆனால், உள்நாட்டுப்போர் மிக மோசமான பின்னடைவை சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார வாழ்க்கை நிலைகளில் ஏற்படுத்திவிட்டது.

## பெல்ஜியத்தில் அனைவரையும் ஒருங்கிணைத்து செல்லுதல்

பெல்ஜிய தலைவர்கள் மாறுபட்ட பாதையை பின்பற்றினர். அவர்கள் மாகாண வேற்றுமைகள் மற்றும் கலாச்சார வேறுபாடுகளை இணைத்து அங்கீகாரம் அளித்தனர். 1970 மற்றும் 1993 ஆண்டுகளிடையே, அவர்கள் தங்கள் நாட்டுடைய அரசியலமைப்பு சட்டத்தை நான்கு முறை திருத்தம் செய்தனர். இதன்படி பலதரப்பட்ட

SCERT TELANGANA

வேற்றுமை கொண்ட மக்கள், ஒன்று சேர்ந்து, ஒரே நாட்டில் வாழ்ந்திட ஏற்பாடுகள் செய்து தரப்பட்டன. அந்நாட்டவர்கள் செய்து கொண்ட ஏற்பாடுகள் வேறு நாடுகளைவிட வேறுபட்டு இருந்தன. மேலும் மிகவும் புதுமையானதாகவும் இருந்தன. பெல்ஜியம் நாட்டவரின் புதுமையான தீர்வில் சில அம்சங்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

- அரசியலமைப்பு சட்டத்தில் பரிந்துரைத்த கட்டளைப்படி, மத்திய அரசாங்கத்தில் டச்சு மற்றும் பிரெஞ்சு மொழி பேசுவோருக்கு சமமான மந்திரி பதவிகள் வழங்கப்படும். ஒவ்வொரு மொழி குழுக்களின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் தான் சில சிறப்பு சட்டங்கள் இயற்றப்படும். இவ்வாறாக, எந்த ஒரு சமூகமும், தன்னிச்சையாக செயல்பட்டு முடிவுகள் எடுக்க இயலாது.
- மத்திய அரசாங்கத்தின் பல்வேறு அதிகாரங்கள், நாட்டின் இரண்டு மாகாணங்களை ஆட்சி செய்திடும் மாநில அரசாங்கங்களுக்கு வழங்கபட்டன. மாநில அரசாங்கங்கள், மத்திய அரசாங்கத்திற்கு கட்டுபட்டவை அல்ல.
- பிரசெல்ஸ் தனிபட்ட அரசாங்கத்தை கொண்டிருந்தது. அதில் இரண்டு சமூகத்தினருக்கும் சமமான பிரதிநித்துவம் தரபட்டது. பிரெஞ்சு மொழி பேசுவோர் பிரசெல்ஸ் சமமான பிரதிநித்துவத்திற்கு சம்மதித்தனர். ஏனெனில், டச்சு மொழி பேசும் சமூகத்தினர் மத்திய அரசாங்கத்தில் சமமான பிரதிநிதித்துவத்திற்கு சம்மதித்தனர்.

மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் தவிர சமூக அரசாங்கம் என்னும் மூன்றாவது வகை அரசாங்கமும் உள்ளது. இந்த சமூக அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட மொழிபேசும் சமூகத்தினரால் தேர்ந்தெடுக்கப்படும். டச்சுமொழி, பிரெஞ்சு மொழி, ஜெர்மனி மொழி பேசுவோர் தேர்ந்தெடுத்து கொண்டனர். நாட்டில் அவர்கள் எங்கு வாழ்கின்றனர் என்பது பொருட்டல்ல. இச்சமூக அரசாங்கம் அந்தந்த சமூகத்தினரின் கல்வி, கலாச்சார மற்றும் மொழி தொடர்பான விவரங்களை கவனித்துக்கொள்ளும்.

பெல்ஜியத்தின் இந்த ஏற்பாடு சிக்கலானதாக உங்களுக்கு புலப்படும். ஆனால், இந்த ஏற்பாடுகள் நல்லமுறையில் இதுவரை செயல்பட்டு வருகின்றன. நாட்டில் வாழும் இரண்டு பெரிய சமூகத்தினர் இடையே உள்நாட்டு போரை தவிர்த்திட இந்த ஏற்பாடுகள் உதவின. மொழி அடிப்படையில் நாட்டை முடிந்த அளவு பகிர்ந்தளிக்கவும் முடிந்தது. ஐரோப்பாவின் பல்வேறு நாடுகள் ஒருங்கிணைந்து, ஐரோப்பிய யூனியனை அமைத்திட முன்வந்த போது, பிரசெல்ஸ் அதன் தலைநகராக தேர்வு செய்யபட்டது. பெல்ஜியத்தின் மீது ஐரோப்பிய சமுதாயம் வைத்திருந்த நம்பிக்கைக்கு கௌரவமாக இதைக்கருதலாம். மேலும் பெல்ஜியம் சம நோக்கோடு நடந்துகொண்டதற்கும், நீதியின் படி செயல்பட்டதற்கும் இது ஒரு அத்தாட்சியாக விளங்குகிறது.

ஸ்ரீலங்கா மற்றும் பெல்ஜியம் நாடுகளின் நிகழ்வுகளில் இருந்து நாம் கற்றுக்கொண்டது என்ன? இரு நாடுகளும் மக்களாட்சி நாடுகளே ஆகும். இருப்பினும், ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளும் பிரச்சனையை வேறுபட்ட முறையில் கையாண்டன. பெல்ஜியத்தின் தலைவர்கள், நாட்டில் உள்ள பல்வேறு சமூகங்களின், மாகாணங்களின் ஒற்றுமையை காத்திட முடியும் என்பதை உணர்ந்தனர். அவ்வுணர்வு, இருசாரரும் ஏற்றுக்கொள்ளும் முறையில் அதிகார பகிர்வுக்கு வழி வகுத்தது. ஸ்ரீலங்கா இதற்கு எதிர்முறையில் கையாண்டது. பெரும்பான்மை மக்கள் சமூகம், சிறுபான்மையினர் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பியது. அதிகார பகிர்வுக்கு சம்மதிக்கவில்லை. இதனால் நாட்டின் ஒற்றுமைக்கு கேடு விளைவித்தது மட்டுமின்றி, நாட்டை பல நூற்றாண்டுகளுக்கு பின்நோக்கி தள்ளிவிட்டது. உள்நாட்டு சண்டை சச்சரவுகள், உள்நாட்டு போர்கள் தோன்றி வளர்ந்திட வழிவகுத்தன.

### குடிமக்களின் கண்ணியம் மற்றும் சுதந்திரம்

ஒவ்வொரு தனிமனிதனின் கண்ணியம் மற்றும் சுதந்திரத்தை மேம்படுத்துவதில், இதர அரசாங்க முறைகளை காட்டிலும், மக்களாட்சி மிகுந்த மேலான அரசாங்க முறையாக விளங்குகிறது. ஒவ்வொரு தனிமனிதனும், தன்னுடைய சமூகத்தில் வாழும் சக மனிதர்கள் தன்னை கண்ணியத்துடன் நடத்த வேண்டும் என்று விரும்புகின்றனர். தங்களை போதிய கண்ணியத்துடன் நடத்தவில்லை என்று சிலர் கருதுவதால் மனிதர்களிடையே அடிக்கடி சண்டை சச்சரவுகள் எழுகின்றன. கண்ணியம் மற்றும் சுதந்திரம் போன்றவற்றின் மீது தீவிரமான உணர்வு கொண்டிருத்தல் என்பது மக்களாட்சியின் அடிப்படையாகும். உலகம் முழுவதும் உள்ள மக்களாட்சி அரசாங்கங்கள் இதனை அங்கீகரித்துள்ளன. பல்வேறு மக்களாட்சி நாடுகளில் பலதரப்பட்ட நிலைகளில் குடிமக்களின் கண்ணியமும், சுதந்திரமும் சாதிக்கப்பட்டுள்ளன. அடக்குமுறை மற்றும் மேலாதிக்கம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு அமைக்கபட்ட சமுதாயங்களில், மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கொள்கையை அங்கீகரிக்கச் செய்வது எளிதான விஷயம் அல்ல.

உலகம் முழுவதும் வரலாற்று ரீதியாக பெரும்பாலான சமுதாயங்கள் ஆண் ஆதிக்கம் கொண்டவைகளாக இருந்தன. பெண்களின் நீண்ட கால போராட்டங்கள் தற்போது சிறிதளவு உணர்வு பூர்வமான விழிப்புணர்வை உண்டாக்கி, பெண்களை கௌரவித்தல்

மற்றும் சமமாக நடத்துதல் முதலியவை மக்களாட்சி சமுதாயத்தின் அத்தியாவசியமான கலவை அம்சங்கள் என்பதை உணர்த்தியுள்ளன. இதனால் பெண்கள் எல்லா சமயங்களிலும் சமமான கௌரவத்துடன் நடத்தப்படுகின்றனர் என்று பொருளாகாது, ஆனால் கொள்கைரீதியாக ஒருமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், இப்போது சட்டத்தாலும், நீதி நெறிப்படியும் சம்மதிக்கபடாதவற்றை எதிர்த்து போராட்டம் நடத்துவதற்கு பெண்களுக்கு எளிதாகி உள்ளது. மக்களாட்சி அல்லாத அரசாங்க அமைப்பில், தனிமனித சுதந்திரம் மற்றும் கண்ணியம் சட்ட அடிப்படையிலானதாக இருக்காது. ஏனென்றால், தனிமனித சுதந்திரம் மற்றும் கண்ணியம் போன்ற கொள்கைகளுக்கு சட்டம் மற்றும் நீதி நெறிப்படியான ஆதரவு இருக்காது. இதைப்போலவே, ஜாதிகளிடையே சமனின்மைகளும் காணப்படுகின்றன.

நம் இந்திய நாட்டில் மக்களாட்சி, சமுதாயத்தில் தொன்று தொட்டு பாரபட்சம் காட்டப்பட்டு நலிவுற்ற ஜாதிகளின் உரிமை கோரிக்கைகளான சம அந்தஸ்து மற்றும் சம வாய்ப்புகள் போன்றவற்றிற்கு வலிமையை சேர்ந்துள்ளது. ஆனால், இன்னமும் ஜாதி அடிப்படையிலான சமமின்மைகளும், அக்கிரமமான கொடுஞ் செயல்களும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், இவற்றிற்கு நீதிநெறி மற்றும் சட்டபடியான ஆதாரங்களின் குறைபாடு காணப்படுகின்றது. சாதாரண குடிமகனின் அங்கீகாரம், அவர்களின் மக்களாட்சி உரிமைகளை மதிப்பீடுசெய்திட வைக்கின்றன.

> ● இரண்டு நாடுகளிலும் சமூக, மதம் மற்றும் மொழி வேற்றுமைகளை களைய தரப்பட்ட தீர்வுகள் குறித்து கலந்துரையாடுக.

மக்கள் குறைகூறுவதே மக்களாட்சியின் வெற்றிக்கு தரும் அத்தாட்சியாகும். மக்கள் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது மற்றும் அதிகபடியான பலனை எதிர்பார்க்கும் திறமையும் வளர்ந்துள்ளது மற்றும் ஆட்சியாளர்களை நுட்பமாக கவனிக்கின்றனர் என்பதையும் காட்டுகிறது. பொதுமக்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்துவதே மக்களாட்சி செயல் திட்டத்தின் வெற்றியை குறிக்கும். இத்திறமை மக்களை குடிமக்களாக்குகிறது. தற்காலத்தில் பெரும்பாலான தனிமனிதர்கள் தங்களின் வாக்கு, அரசாங்கம் செயல்படும் முறையை மக்களின் நலனுக்கு பயன்படுமாறு செய்யமுடியும் என்று நம்புகின்றனர்.

## முக்கியச் சொற்கள்

1. சோவியத் சோஷியலிஷ குடியரசுகளின் கூட்டமைப்பு (USSR)
2. பொதுமக்களின் கலந்துரையாடல்கள் 3. சமூக சுதந்திரங்கள்
4. சமூக மற்றும் பொருளாதார சமத்துவம் 5. உள்நாட்டு கலவரங்கள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. மக்களாட்சி எவ்வாறு பொறுப்புள்ள மற்றும் சட்டரீதியான அரசாங்கத்தை உருவாக்க முடியும்?(AS1)
2. மக்களாட்சிகள் எந்தெந்த நிலைமைகளில் சமூக வேற்றுமைகளுக்கு இடமளிக்கின்றன?(AS1)
3. கீழ்காணும் உறுதியான கருத்தை கூறும் வாக்கியங்களை படித்து, அவற்றிற்கு ஆதரவாக அல்லது எதிரான வாதங்களை கூறுங்கள்:(AS2)
   - அ. தொழில்மயமான நாடுகள் மக்களாட்சியை அளிக்க முடியும். ஆனால் ஏழைகள் பணக்காரர்கள் ஆவதற்கு சர்வாதிகார ஆட்சி தேவைப்படுகிறது.
   - ஆ. மக்களாட்சியால் பல்வேறு குடிமக்களிடையே உள்ள வருவாய் சமனின்மைகளை குறைக்க முடியாது.
   - இ. ஏழை நாடுகளில் உள்ள அரசாங்கங்கள், ஏழ்மை குறைப்பு, ஆரோக்கியம், கல்வி முதலியவற்றின் மீது குறைவாக செலவிட வேண்டும். தொழிற்சாலைகள் மற்றும் அடிப்படை கட்டுமானங்களுக்கு அதிகம் செலவிடவேண்டும்.
   - ஈ. மக்களாட்சியில் எல்லா குடிமக்களுக்கும் ஒரு வாக்குரிமை உள்ளது. இதன் பொருள், மக்களாட்சியில் வாக்குரிமை குறித்து ஆதிக்கமோ, சண்டைசச்சரவுகளோ இல்லை என்பதாகும்.
4. மக்களாட்சி முறை குறித்து மதிப்பிடும் போது, கீழ்கண்டவற்றில் எது மாறுபட்ட கருத்து கண்டறியவும்:(AS1)

SCERT TELANGANA

அ. சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள் ஆ. தனி மனிதனின் கண்ணியம்
இ. பெரும்பான்மையினரின் ஆட்சி ஈ. சட்டத்தின் முன் அனைவரையும் சமமாக நடத்துதல்

5. மக்களாட்சியில் சமூக, பொருளாதார சமனின்மைகள் குறித்த ஆய்வு கூறுவது யாதெனில்(AS1)
   அ. மக்களாட்சியும், மேம்பாடும் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்கின்றன.
   ஆ. மக்களாட்சியில் சமமின்மைகள் உள்ளன.
   இ. சர்வாதிகார ஆட்சியில் சமமின்மைகள் இருப்பதில்லை.
   ஈ. சர்வாதிகார ஆட்சி, மக்களாட்சியை விட மேலானது.
6. ஆறு நாடுகளை பற்றிய தகவல்கள் இங்கு தரப்பட்டுள்ளன. இத்தகவல்களை ஆதாரமாக கொண்டு, ஒவ்வொரு நாட்டையும் எவ்வாறு வகைப்படுத்துவாய்? ஒவ்வொன்றுக்கும் மக்களாட்சி, மக்களாட்சிக்கு எதிரானது அல்லது நிச்சயமாக கூற முடியாது என்று எழுதி காட்டுங்கள்.(AS1)
   **நாடு அ:** நாட்டின் அலுவலக மதத்தை ஏற்றுக்கொள்ளாத மக்களுக்கு வாக்குரிமை இல்லை.
   **நாடு ஆ:** கடந்த இருபது ஆண்டுகளாக ஒரே கட்சி தேர்தல்களில் வெற்றிபெற்று வருகிறது.
   நாடு **இ:** ஆளுங்கட்சி கடந்த மூன்று தேர்தல்களில் தோல்வி அடைந்துள்ளது.
   **நாடு ஈ:** பாராளுமன்றம் ராணுவத்தின் தலைமை தளபதி அனுமதியின்றி ராணுவம் குறித்த சட்டங்களை இயற்ற முடியாது.
   **நாடு உ:** நீதித்துறையின் அதிகாரத்தை குறைக்கும் சட்டத்தை பாராளுமன்றம் இயற்ற முடியாது.
   **நாடு ஊ** : நாட்டின் எல்லா முக்கியமான பொருளாதார முடிவுகளையும், மத்திய வங்கியின் அதிகாரிகள் எடுக்கின்றனர். இவற்றை அமைச்சர்கள் மாற்ற இயலாது.
7. கீழ்காணும் ஒவ்வொரு கூற்றும் மக்களாட்சி மற்றும் மக்களாட்சிக்கு எதிரான கருத்தை கொண்டிருக்கும். ஒவ்வொரு கூற்றுக்கும் ஆதரவான, எதிரான இரண்டு கருத்தை தனித்தனியாக எழுதுக.(AS1)
   அ. பாராளுமன்றம், உலக வர்த்தக நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு ஒத்துபோகும் சில சட்டங்களை இயற்ற வேண்டும் என்று ஒரு அமைச்சர் கூறினார்
   ஆ. ஒரு தொகுதியில் பெருமளவு கள்ள ஓட்டுகள் போடபட்டதால், அங்கு மறு வாக்குபதிவு நடத்திடுமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.
   இ. பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநித்துவம் எப்போதும் 10% கூட அடையவில்லை. இதனால் சங்கங்கள், பெணகளுக்கு மூன்றில் ஒருபங்கு இடங்களை இட ஒதுக்கீடு மூலம் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தன.
8. மக்களாட்சிக்கு எதிராக வாதிக்கும் கீழ்கண்ட வாதங்களுக்கு தனித்தனி பதில் கூற்றுகளை எழுதுக:(AS4)
   அ. ராணுவம் நாட்டிலேயே மிகவும் ஒழுக்கமானதும், ஊழல் இல்லாத அமைப்பு ஆகும். எனவே, கட்டாயமாக ராணுவம் தான் நாட்டை ஆட்சி செய்ய வேண்டும்.
   ஆ. பெரும்பான்மையோரின் ஆட்சி என்றால், படிப்பறிவு இல்லாதவர்களின் ஆட்சி என்று பொருள். எனவே, நமக்கு தேவைப்படுவது யாதெனில், குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும், அறிவுடையோரின் ஆட்சியாகும்.
   இ. ஆன்மீக விஷயங்களில் நமக்கு வழிகாட்ட மதத் தலைவர்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அவ்வாறே, நாம் ஏன் அரசியலிலும் வழிகாட்ட அவர்களை வரவேற்க கூடாது? நாடு மதத் தலைவர்களால் ஆட்சி செய்யப்படவேண்டும்.
9. உலக வரைபடத்தில் கீழ்காணும் நாடுகளை குறிக்கவும்.(AS5)
   அ. ஸ்ரீலங்கா ஆ. பெல்ஜியம் இ. ரஷ்யா ஈ. அமெரிக்கா
10. 'குடிமக்களின் கண்ணியமும், சுதந்திரமும்,' என்னும் துணைத் தலைப்பில் உள்ள முதல் இரண்டு பத்திகளை படித்து, கீழ்காணும் கேள்விக்கு விடையளி.
    மக்களாட்சி குடிமக்களின் கண்ணியம் மற்றும் சுதந்திரம் குறித்து எழுதுக.(AS2)
11. மக்கள் மக்களாட்சிக்காக போராடுவதற்கான காரணங்களை தெரிவியுங்கள்?(AS1)
12. நம் பள்ளிகளில் மக்களாட்சி நடைமுறை படுத்தபடுகிறது என்பதற்கான சில எடுத்துக்காட்டுகளை தருக.(AS6)

## செயல் திட்டம்

உங்கள் ஆசிரியர் உதவியுடன், உங்கள் வகுப்புத் தலைவரை தேர்ந்தெடுக்க மாதிரி தேர்தலை வகுப்பில் நடத்துங்கள்.

SCERT TELANGANA

பாடம்

19

# மனித உரிமைகளும், அடிப்படை உரிமைகளும்

சமத்துவ உரிமைக்காக மக்கள் பல போராட்டங்களில் ஈடுபட்டதை நாம் முன் பாடத்தில் படித்தோம். சுதந்திரத்திற்குப்பிறகும் இவ்வகையான பாகுபாடுகள் முழுவதுமாக மறையவில்லை. இந்திய அரசியல் அமைப்புச் சட்ட சிற்பிகள், நாட்டில் நிலவும் அனைத்து வகையான பாகுபாடுகளை முற்றிலும் ஒழிக்க முடியாது என்பதை உணர்ந்து, மக்களின் தேவைகளையும், குறிக்கோள்களையும் நிறைவேற்றும் சட்டங்களை அரசியல் அமைப்பு சட்டத்தில் புகுத்தினர். இந்திய அரசியல் அமைப்புச்சட்டம், அதன் முகவுரையில் பட்டியலிடப்பட்ட கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமுதாயத்தைக்காண விழைந்தது. முகவுரையை மீறும் எந்த சட்டமும் செல்லாததாகிவிடும்.

- கடந்த ஆண்டு, நீங்கள் படித்த இந்திய அரசியல் அமைப்புச்சட்ட முகவுரையின் சில முக்கிய இயல்புகளை எழுதுங்கள்.

## உரிமைகள் என்றால் என்ன?

உரிமைகள் என்பது மக்களின் நியாயமான கோரிக்கைகளாக உள்ளன. இக்கோரிக்கைகள் சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்றன. யாரும் வாழ்க்கைத் தரத்தில் குறைவில்லாமல் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று நாம்நினைக்கிறோம். அது போலவே, மற்றவர்களும் அவர்களின் உரிமைகளை அனுபவிக்க அனுமதிப்பது நம் கடமையாகும். மற்றவர்களின் உரிமைகளை மதித்து, பாதுகாக்கும் கடமையில் தான் உங்கள் உரிமைகள் அடங்கியுள்ளன.

சமஉரிமைகள் பற்றிய கொள்கைகள் மாறக்கூடிய ஒன்றாக உள்ளன. எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும் அனைவரும் சமமாக நடத்தப்படவில்லை என்பதை நாம் ஏற்கனவே தெரிந்துக்கொண்டோம். ஆப்பிரிக்காவில் கருப்பர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டதும், பலநாடுகளில் பெண்களுக்குச் சொத்துரிமை தரப்படாததும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. ஆனால் தற்காலத்தில் இச்செயல்களை அநீதியாகவும், உரிமை மீறலாகவும் கருதுகின்றோம்.


மக்களாட்சி முறையில், உரிமைகள், மிக முக்கியப்பங்கை வகிக்கின்றன. மக்கள் அனைவரும் சமமாக நடத்தப்படவேண்டும் என்பதே மக்களாட்சி முறையின் நோக்கமாக விளங்குகின்றது. மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கவும், வாக்களிப்பின் மூலம் தங்களுக்குத் தேவையான பிரதிநிதிகளை தேர்தலில் தேர்ந்தெடுக்கவும் மக்களாட்சி முறை வழி வகுக்கின்றது. அரசியல் உரிமைகளில், மக்களுக்கு அளிக்கப்படும் வாய்ப்பே வாக்கு என்று அழைக்கப்படுகின்றது.

மக்களாட்சி பெரும்பான்மை மக்களை மட்டுமல்லாமல் சிறுபான்மை மக்களையும் பாதுகாக்கின்றது. பெரும்பான்மை அல்லது சிறுபான்மை மக்கள் அனைவரையும் மக்களாட்சி சமமாக நடத்துகின்றது. சாதி, மதம், இனம், பால் போன்ற எந்தவித பாகுபாடுமின்றி அனைவரின் உரிமைகளுக்கும் இந்திய அரசியலமைப்புச்சட்டம் பாதுகாப்பு அளிக்கின்றது. இருப்பினும் மனிதனுக்கு மிகவும் அடிப்படையாக உள்ள சில உரிமைகளுக்கு அரசியல் அமைப்பு சட்டத்தில் மிகப்புனிதமான இடம் தரப்பட்டுள்ளன. இவ்வுரிமைகள் அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன.

இவ்வுரிமைகள் மிக முக்கியமானது என்பதால் உலகின் பல மக்களாட்சி நாடுகள் இவற்றை தம் குடிமக்களுக்கு வழங்கியுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையும் அடிப்படை உரிமைகளின் அவசியத்தை உணர்ந்து உலக மனித உரிமைகள் பிரகடனம் இவற்றைப் புகுத்தியுள்ளது. UDHR என்ற ஆவணத்தில் தற்போதைய நாடுகள் அனைத்தும் கையெழுத்திட்டு, அவ்வாவணத்தில் அடிப்படை மனித உரிமைகளை நிலைநாட்டுவதாக அறிவித்துள்ளன.

SCERT TELANGANA

## இந்திய அரசியல் அமைப்புசட்டத்தில் உரிமைகள்



படம். .1: அடிப்படை உரிமைகள்

அடிப்படை உரிமைகள், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதியில் இடம் பெற்றுள்ளன. அடக்குமுறை அரசுகளின் பிடியிலிருந்து மக்களுக்கு இவ்வுரிமைகள் பாதுகாப்பு அளிக்கின்றன. இவ்வுரிமைகளை நிலைநாட்டவேண்டியது அரசுகளின் கடமைகளாக விளங்குகின்றன. இவ்வுரிமைகள் மிக முக்கியமானது என்பதால், அரசால் இவை மாற்றப்படும் போது ஒருவர், கீழ் நீதிமன்றங்களை அணுகாமல் நேரடியாக உயர்நீதி மன்றத்தையோ அல்லது உச்சநீதி மன்றத்தையோ அனுக உரிமையுள்ளது. ரிட் மனுக்கள் என்பது அரசியல் அமைப்புச்சட்ட உரிமையைக் காப்பாற்ற அல்லது செயல்படுத்த நீதிமன்றங்களால் அரசுக்கு இடப்படும் ஆணைகளாக உள்ளன. இவை நீதிமன்றங்களுக்கு அளிக்கப்பட்ட மிக முக்கியமான அதிகாரங்களாகும். வழக்கு விசாரணையின் மூலம், நீதிமன்றம் அடிப்படை உரிமைகளின் மீறலைக் எளிதாகப்புரிந்துக்கொள்கின்றது.

### சமத்துவ உரிமை

இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் சமத்துவ உரிமைக்கு உறுதியளிக்கின்றது. சமத்துவ உரிமை கீழ்காணும் உரிமைகளை உள்ளடக்கியது.

### 1. சட்டத்தின் சமத்துவ பாதுகாப்பு :

“சட்டத்தின் முன் அனைவரும் சமம்” என்றும், அனைவருக்கும் சட்டத்தின் சமத்துவ பாதுகாப்பு உறுதியளிக்கப்பட்டது என்றும், அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகின்றது. ஒருவரின் வருமானம், அந்தஸ்து, செல்வாக்கு போன்றவற்றைக் கருத்தில் கொள்ளாமல் சட்டம் அனைவரையும் சமமாக கருதுகின்றது.

குடிமக்கள் அனைவரும் நாட்டின் சட்டங்களால் சமமாகப் பாதுகாக்கப்படுவர் என்று சமத்தவ உரிமை உறுதியளிக்கின்றது. சாதாரண குடிமகன், அமைச்சர், அரசு அதிகாரி சிறுவிவசாயி போன்ற அனைவருக்கும் சட்டம் சமமாகவே பொருந்துகின்றது. சாதி, இனம், நிறம், பால், மதம், பிறப்பிடம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு யாருக்கும் எந்தவித சலுகைகளையும் சட்டம் அனுமதிப்பதில்லை. நாட்டின் பிரதமராக இருந்தாலும், நீதிமன்றத்திற்கு வந்து சாதாரண குடிமக்களைப்போல வழக்கு விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அதைப்போலவே ஒரு அதிகாரி தவறு செய்தாலும் சாதாரண குடிமகனுக்கு கிடைக்கின்ற தண்டனையே கிடைக்கின்றது. யாரும் தண்டனைகளிலிருந்து சிறப்புச் சலுகைகளை பெறமுடியாது.

சட்டமன்றங்களால் இயற்றப்படும் பாகுபாடு நிறைந்த அநீதியான சட்டங்கள், ஆட்சியாளர்களின் சர்வாதிகார போக்கு போன்றவற்றிற்கு எதிராக சமத்துவ உரிமை பாதுகாப்பு அளிக்கின்றது. நவீன நாடுகளின் ஆட்சியாளர்கள் பரந்த அதிகாரங்களைப் பெற்றவர்களாக விளங்குகின்றனர். இவ்வதிகாரங்கள் பாகுபாடின்றி பயன்படுத்தப்பட வேண்டும் என்று சமத்துவ உரிமையின் விதிகள் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக வெவ்வேறு வர்த்தக மற்றும் வியாபார முறைப்படுத்தும், உரிமம் தரும் ஆணையம் உரிமங்களை அந்த ஆணையத்தின் விதிகளின் படியே எந்தவித பாகுபாடின்றித் தர

SCERT TELANGANA

வேண்டும். விதிகளுக்கு எதிராக திறமையற்றவர்களுக்கும், தகுதியற்றவர்களுக்கும் உரிமம் வழங்கக்கூடாது.

பாகுபாடற்ற சமத்தவம் என்பது நாட்டைச் சேர்ந்ததே தவிர, தனி மனிதனைச் சேர்ந்தது அல்ல. எடுத்துக்காட்டாக தனியார் துரையைச் சேர்ந்த வேலை வாய்ப்பாளர் தன் நிறுவனத்திற்கான ஊழியர்களை சமத்துவமற்ற முறையில் பாகுபாட்டுடன் தேர்ந்தெடுத்துக்கொண்டால் நீதிமன்றத்தை நாட முடியாது..

## 2. சமூக சமத்துவம்

இவ்வுரிமையின் அடுத்த இயல்புகளில் முக்கியமானது சமூக சமத்துவமாகும். நாடு தன் மக்களை மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு எந்தவித பாகுபாடும் காட்டக்கூடாது. மேற்கண்ட வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு கடைக்கு அனுமதித்தல், உணவுவிடுதிகளில் அனுமதி, கிணறு, ஏரி, சுற்றுலாத்தளம் போன்ற அரசால் முழுவதுமாக அல்லது பகுதியாக நிர்வகிக்கப்படும் நிறுவனங்களில் யாருக்கும் அனுமதி மறுக்கப்படக்கூடாது. மத, இன, சாதி, பால் போன்ற வேறுபாடுகளுக்கு எதிராக உறுதியளிப்பதால் இவ்விதி முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆனால் இவ்வுரிமைக்கு இரண்டு குறிப்பிடத்தக்க விதிவிலக்குகள் உள்ளன. முதலாவதாக, பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன்களுக்காக சிறப்புச் சலுகைகள் பெற இச்சட்டம் வழிவகுக்கின்றது.

இரண்டாவதாக கல்வி மற்றும் சமூக நிலைகளில் பின்தங்கியுள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு சிறப்பு சலுகைகள் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமுதாய நலன்களைப் பெருமளவில் காக்கவே பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சிறப்புச்சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வுரிமை சமுதாய மரபுகளையும், நாட்டின் வரலாற்றுப்பிண்ணனியையும், நசுக்கப்பட்ட மக்களின் நலன்களையும் அடையாளம் கண்டுள்ளது.

இவ்வுரிமையை நிலை நாட்டவே, சொத்துக்கள் தொடர்பான சட்டங்களில் திருத்தம் செய்யப்பட்டு, கூட்டுக்குடும்பச்சொத்தில் பெண்களுக்கும் சம உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு, அரசு வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு போன்றவை சமூக பாகுபாடுகளுக்கு எதிராக இந்திய அரசியல் சட்டம் வழங்கிய சலுகைகளாகும். குடிமக்களுக்கும், நாட்டுக்கும், பொதுமக்களுக்கும் இடஒதுக்கீட்டின் நீடிப்பு மிக முக்கியமானதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட சதவீத மாணவர்களை மருத்துவக்கல்லூரிகளில் கட்டாயமாக சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மற்ற மக்களைப்போலவே, தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கும் சமவாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும் என்பதற்காக இட ஒதுக்கீடுகள் கொண்டுவரப்பட்டன. இடஒதுக்கீடு இல்லாமல் சில வகையான முக்கிய வேலை வாய்ப்புகளை இவர்கள் பெற முடியாது. ஆகவே இட ஒதுக்கீடு என்பது SC/ST பிரிவினருக்கு மற்ற மக்களை விட லாபம் தரக்கூடியது என்பதை விட அவர்களுக்கு நேர்ந்த அநீதிகளை நீக்குகிறது என்பதேப் பொருள். ஆனால் இந்த இட ஒதுக்கீடுகளை நடைமுறைப்படுத்துவதில் பாகுபாடு நீடிக்கின்றது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் SC/ST பிரிவு மக்கள் 24% பேர் இருந்தாலும், 13% அரசுத் துறைகளில் சிறப்பு பணிகளை அரசுத்துறைகளில் பெற முடிகின்றது. பல்கலைக்கழக கல்லூரி ஆசிரியர்களுக்கான வேலை வாய்ப்பில் 2% SC/STயினரே வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

## 3. சமத்துவவாய்ப்பு :

அரசாங்க வேலை வாய்ப்பு, பணி நியமனம் ஆகியவற்றை அனைத்துக்குடிமக்களும் சமமாகப் பெற இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுதியளிக்கின்றது. எந்த குடிமகனும் மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசு வேலை வாய்ப்பு, பணி நியமனம் போன்றவற்றில் பாகுபாடு காட்டப்படக்கூடாது தகுதியற்றவராக செய்யப்படக்கூடாது.

இவ்வுரிமையிலும் விதிவிலக்கு உள்ளது. இந்த விதிவிலக்கின்படி, எந்த ஒரு பின்தங்கிய வகுப்புக்கும், அரசுப்பணிகளில் சமவாய்ப்பு அளிக்கும் நோக்கில் அரசாங்கம் இடஒதுக்கீடு செய்ய முடியும். ஆகவே பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் BC, SC, ST வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்தோடு அரசாங்கங்கள் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு செய்கின்றன.

SCERT TELANGANA

**4. தீண்டாமை ஒழிப்பு :**

தீண்டாமை எவ்வடிவத்தில் இருந்தாலும் அதை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் தடை செய்கின்றது. தீண்டாமை பெருங்குற்றம் என்றும் மீறுவோர் சட்டப்படி தண்டிக்கப்படுவர் என்பதையும் அரசியல் அமைப்புச் சட்டம் வலியுறுத்துகின்றது. பொது வழிபாட்டு தலங்களில் பிறர் செல்வதைத் தடுப்பவர்களும், கிணறு, ஏரி போன்ற நீர்நிலைகளில் நீர் எடுப்பதைத் தடுப்பவர்களும் சிவில் உரிமைச் சட்டப்பாதுகாப்புப்படி தண்டிக்கப்படுவர்.

**5. பட்டங்களை தடை செய்தல் :**

உயர் வகுப்பினர் மற்றும் நடுத்தர மக்களின் அநீதியான பிரிவுகளை நீக்குவதற்காக இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் பட்டங்களை வழங்குவதைத் தடை செய்கிறது.

**சுதந்திர உரிமை**

- இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் எவ்வகையான சமத்துவ உரிமைகளுக்கு உறுதியளிக்கின்றது? எடுத்துக்காட்டுகளுடன் தெரிவி.
- கீழ்கண்டவற்றை சமத்துவ உரிமையின் மீறலாக நீங்கள் நினைக்கின்றீர்களா? கீழே குறிப்பிடப்பட்டவைப் போல செயல்படுவது இந்திய அரசியல் அமைப்புச்சட்டப்படி சரியா? தவறா? விவாதியுங்கள்.
  - பொது நீர் நிலைகளில் நீர் எடுக்கும் போது, ஒருவரின் பாத்திரம், (கிண்ணம், சொம்பு) மற்றவர்களின் குடங்களின் மேல் படுகின்றது.
  - சமுதாயத்தின் சில பிரிவினர் ஊருக்குள் வசிக்க இடம் அளிக்கப்படுவதில்லை. ஆனால் வெளியே வசிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.
  - சில பள்ளிகளில், பிறருக்கு குடிநீர் அளிப்பதற்கு தாழ்த்த சாதி மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.
  - சமுதாயத்தில் சில பிரிவினர், தாங்கள் அவமதிக்கப்படுகிறோம் அல்லது அடித்துத்துன்புறுத்தப்படுகிறோம் என்று வழிபாட்டுத்தலங்களுக்கு செல்வதில்லை.
- இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சமத்துவ உரிமை இல்லையென்றால் என்ன நேரும்? விவாதிக்கவும்.

இந்திய அரசியல் அமைப்புச்சட்டம், மிக முக்கியமானதாக கருதப்பட்ட சில தனிப்பட்ட உரிமைகளுக்கும் உறுதியளிக்கின்றது. சுதந்திர உரிமை, கீழ்காணும் ஆறு சுதந்திரங்களுக்கு உறுதியளிக்கின்றது.

**1. பேச்சு மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் : பொதுச்செயல்களில் பங்கு பெறுவதற்கு வழிவகுக்கும் கருத்துக்களை பொதுக்கூட்டங்கள், புத்தக வெளியீடுகள், நாடகங்கள், ஓவியங்கள மூலம் வெளியிட சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வுரிமை பொது அமைதி, நாட்டின் பாதுகாப்பு, பொதுநலன் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு கட்டுப்படுத்தவோ அல்லது தடைசெய்யவோ முடியும். ஆகவே திரைப்படங்கள், பொதுநலன், நல்லிணக்கம், நீதி போன்றவற்றைக் கருத்தில் கொண்டு தணிக்கைச் செய்யப்படுகின்றன.**

SCERT TELANGANA

பேச்சுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த அல்லது முறைப்படுத்த பல்வேறு சட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன. நமக்கு பேச்சுச்சுதந்திரம் இருந்தாலும், தரக்குறைவாகவோ, அநீதியாகவோ, சட்டவிரோதமாகவோ பேசக்கூடாது. மக்கள் தங்கள் பேச்சுகள் மூலம் மற்றவர்களைத் தூண்டி விடுவது, அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுமாறு செய்வது போன்றவற்றை சட்டங்கள் தடைசெய்கின்றன.

**2. ஆயுதங்களின்றி சுதந்திரமாகக் கூடும் உரிமை :** அரசாங்கம் பொது அமைதி, இறையாண்மை, ஒற்றுமை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சில நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம். மக்கள் பொதுக்கூட்டங்களைக் கூட்டி தங்கள் பிரச்சனைகளை விவாதிக்கவும், கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும் இவ்வுரிமை வழிவகுக்கின்றது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்த ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது.



படம். .3: அணைக்கட்டுவதை எதிர்த்து ஊர்வலம்

இவ்வுரிமைக்கும் சில கட்டுப்பாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, பொதுமக்களால் கூட்டப்படும் கூட்டங்கள், அமைதி ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் போன்றவை நடத்தப்படும்போது அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமாகும்.

**3. அமைப்புகளும் அல்லது சங்கங்களும் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரம் அளிக்கும் உரிமை :** இந்திய இறையாண்மை, ஒற்றுமை, பொதுஅமைதி, நீதி போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, அமைப்புகள் அல்லது சங்கங்கள் ஏற்படுத்தப்படும் போது நாடு சில நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்.

மக்கள் கலாச்சார, வியாபார, வர்த்தக சங்கங்களை ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரம் பெற்றவர்களாக உள்ளனர். பல தொழிற்சாலைகளில் தொழிலாளர் சங்கங்கள் இருப்பதை நாம் அறிவோம். இச்சங்கங்கள் தங்கள் பிரச்சனைகளை விவாதிக்கக் கூட்டங்களைக் கூட்டுகின்றன. தொழிற்சாலை அதிகாரிகளிடம் தங்கள் கோரிக்கைகளை முன் வைக்கின்றன. இவ்வாறாக தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் உரிமைகளைக் காக்கின்றன.

மஜ்தூர் கிசான் சங்க்ராம் சமிதி எனப்படும் விவசாயத் தொழிலாளர்கள் அமைப்பின் ஆதரவாளர் ஒருவர் பீகாரிலுள்ள ஆர்வால் நகரில் உரை நிகழ்த்துகின்றார்.

**4. சுதந்திரமாகப் பயணம் செய்யும் உரிமை:** இந்தியா முழுவதும் சுதந்திரமாக பயணம் செய்யும் உரிமை தரப்பட்டு இருந்தாலும், சில விரும்பத்தகாத சம்பங்களைக் கருத்தில் கொண்டு நியாயமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. பதற்றமாக



SCERT TELANGANA

காணப்படும் நாட்டின் எல்லையோரப் பகுதிகளில் பயணிப்பதற்கும் இதைப்போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

- உங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் அமைப்புகள் அல்லது சங்கங்களின் பெயர்களைக்கூறுக.
- தொழிற்சங்கங்கள் ஏன் ஏற்படுத்தப்படுகின்றன? அவை எதிர்கொள்ளும் பிரச்சனைகளை கூறுக.

**5.நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சுதந்திரமாக வசிக்கும் அல்லது குடியேறும் உரிமை:** நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் சுதந்திரமாக வசிக்கும் அல்லது குடியேறும் உரிமைக்கும் சில கட்டுப்பாடுகள் உள்ளன. பொதுமக்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் போன்றோரின் நலன்களைக் கருத்தில் கொண்டும், அவர்கள் மீதான சுரண்டலை தடுக்கவும் இக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இப்போது நாம் நகர்புறங்களின் அசுத்தப் பகுதிகளில் வாழும் மக்களைப் பற்றித் தெரிந்துக்கொள்வோம். கிராமங்களிலுள்ள மக்கள் வேலை வாய்ப்புகளை தேடி மும்பை, டில்லி, கொல்கத்தா போன்ற பெரு நகரங்களுக்கு வருகின்றனர். அவர்களுக்கு வேலைகள் எளிதாகக் கிடைப்பதில்லை. வேலை கிடைக்கும் இடங்களில் அவர்கள் தினக்கூலிகளாக பணிபுரிகின்றனர். அவர்கள் தங்க தகுந்த இடம் கிடைக்காததால் சாலை ஓர நடைப்பாதைகளிலும் இருப்புப்பாதை ஓரங்களிலும் தங்குகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்பு மும்பை மாநகராட்சி, நடைப்பாதைகளில் வசித்த 50,000 மக்களை அகற்ற முயற்சித்தது. அவர்களின் வசிப்பிடங்களை அழித்தது. 1982ஆம் ஆண்டு, இச்செயலுக்க எதிராக உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

1985ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பில், பொது மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அல்லது பயன்பாட்டிலுள்ள இடங்களை ஆக்கிரமிக்கவோ, கட்டிடங்கள் கட்டிக்கொள்ள யாருக்கும் உரிமை இல்லை. அதைப்போலவே நடைப்பாதைகளையும் யாரும் ஆக்கிரமிக்கக்கூடாது என்று உத்தரவிட்டது. அதுமட்டுமின்றி, சாலை ஓர நடைப்பாதைகளில் பல ஆண்டுகளாக வசிக்கும் மக்களின் வசிப்பிடங்களை அழிப்பதற்கு முன்பு அவர்கள் வசிப்பதற்கான மாற்று இடங்களை அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று ஆணையிட்டது.

**6. விரும்பும் தொழில், வேலை, வியாபாரம் போன்றவற்றை ஏற்படுத்திக்கொள்ளும் சுதந்திரம் :** பொது மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு, தான் விரும்பும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் இவ்வுரிமையின் மீதும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அநீதியான அல்லது பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வியாபாரத்தைச் செய்ய யாருக்கும் உரிமை இல்லை. அதைப்போலவே எந்த ஒரு வேலைக்கும் வேலையைச் சார்ந்த தகுதிகள் மற்றும் தொழில் நுட்ப தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

**7. உயிர் வாழும் உரிமை**

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உயிர் வாழும் உரிமைக்கும் தனிச்சுதந்திரத்திற்கும் உறுதி அளிக்கின்றது. இது கீழ்கண்டவற்றை உள்ளடக்கியுள்ளது.

- உயிர் வாழும் உரிமை, தனிச்சுதந்திர உரிமையின் படி குற்றஞ்சுமத்தப்படும் நபர், நீதிமன்றத்தால் குற்றவாளி என்று நிரூபிக்கப்படவேண்டும். இந்தியச் சட்டம் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனையை விட அதிகமான தண்டனையை யாருக்கும் விதிக்கக்கூடாது.
- உயிர்வாழும் உரிமை மற்றும் தனிச்சுதந்திர உரிமையில், உயிர் பாதுகாப்புக்கும், தனிச்சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. சட்டத்தைத்தவிர யாராலும்

SCERT TELANGANA

தனிச்சுதந்திரமும், உயிர்வாழும் உரிமையும் மறுக்கப்பட முடியாது. ஆகவே ஒருவர் குற்றம் செய்யும் போது மட்டுமே அவரின் தனிச்சுதந்திரமும், உயிர் வாழும் உரிமையும் மீறப்படுகின்றது. ஆனால் இவ்வுயிர் வாழும் உரிமை என்பது உயிரை மாய்த்துக்கொள்ளும் உரிமையை உள்ளடக்கியது அல்ல. ஆகவே தற்கொலை செய்தல் அல்லது தற்கொலை முயற்சி என்பது குற்றச்செயலாகும்.

■ 2002ஆம் ஆண்டில், துவக்கக்கல்விக்கான உரிமை, சுதந்திர உரிமையின் ஒரு பகுதியானது. ஆறுவயது முதல் 14வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக்கல்வியை அரசாங்கம் வழங்க இந்த உரிமை வழிவகுக்கின்றது. இதற்கான பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததாகும். பள்ளிகளை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையும், குழந்தைகளை நாள்தோறும் பள்ளிக்கு அனுப்பவேண்டிய கடமை பெற்றோரையும் சேர்ந்தது என இவ்வுரிமை கூறுகின்றது. குழந்தைகள் கல்விகற்கும் வாய்ப்பை பெறுவதற்காகவும், தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்துக்கொள்வதற்காகவும், தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தும் திறன்களை பெறுவதற்காகவும், தங்கள் படைப்புக்களை சமுதாயத்திற்கு அளிப்பதற்காகவும், தங்கள் எதிர்காலத்திற்கான வாய்ப்புகளை பெருக்கிக் கொள்வதற்காகவும் குழந்தைகளுக்கு கல்வி அவசியமானது என்று மக்கள் உணர்ந்த காரணத்தால் தான் இவ்வுரிமை சேர்க்கப்பட்டது.

- நாட்டின் பல பகுதிகளுக்கு மக்கள் ஏன் செல்கிறார்கள் அல்லது குடியமர விரும்புகிறார்கள்?
- நகரங்களில் வேலை வாய்ப்புகளைப் பெற்று, வாழத்தகுந்த இடமாற்றத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதில் அரசின் பொறுப்பு என்ன?
- நகரங்களில் அதிக அளவு குடிசைப்பகுதிகள் இருந்தால் அவை நகரவாசிகளின் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கும்?

■ சாதாரண சூழலில் கைது செய்யப்படுபவரின் உரிமை, உயிர் வாழும் உரிமை மற்றும் தனிச்சுதந்திர உரிமைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. கைது செய்யப்படுவதற்கான காரணத்தைச் சொல்லாமல், யாரும் கைது செய்யப்படக்கூடாது. கைது செய்யப்பட்டாலும் வழக்கறிஞர் மூலம் தன்னைக் காத்துக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## சுரண்டலுக்கு எதிரான உரிமை

இவ்வுரிமையின் படி அனைத்து வகையான கொத்தடிமை முறைகளும் தடை செய்யப்பட்டன. நீங்கள் ஏற்கனவே படித்த வரலாற்றுப் பாடங்களில் கூலிதராமல் தொழிலாளர்களை கொடுமைகளுக்கு உள்ளாக்கும் “வெட்டி/பெகார்” என்ற கொத்தடிமை முறைகளைத் தெரிந்துக்கொண்டீர்கள். ஒருவர் நிலபிரபுக்கள் அல்லது ஒப்பந்ததாரர்களால் கூலியின்றியோ, குறைந்த கூலிக்கோ பணிசெய்யுமாறு பணிக்கப்பட்டால் அது சுரண்டலுக்கு எதிரான அடிப்படை உரிமையின் மீறலாகும். அவ்வாறு பணிக்கப்படும் நபர் நீதிமன்றத்தை அணுகலாம். அதைப் போலவே ஒருவர் கொத்தடிமையாக பணி செய்யுமாறு பணிக்கப்பட்டாலும் அதுவும் உரிமை மீறலாகவேக் கருதப்படுகின்றது.

- கீழ்உள்ளவற்றில் எது, பேச்சுச் சுதந்திரத்தின் மீதுள்ள கட்டுப்பாடாக நீங்கள் நினைக்கின்றீர்கள்? விவாதம் நடத்துக.

1. ஒரு குறிப்பிட்ட சாதியினரின் உணர்வுகளை புண்படுத்தும் நோக்கத்தோடு ஒரு புத்தகம் எழுதப்படுகின்றது.
2. ஒவ்வொரு திரைப்படமும் தணிக்கை வாரியத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும்.
3. திருவிழாக்களின் போதும், வழிபாட்டுச் சமயங்களின் போதும் இரவு 11மணிக்கு மேல் ஒலிப்பெருக்கியைப் பயன்படுத்தக்கூடாது.

### தொழிற்சாலைகளில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை தடைசெய்தல்

14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், தொழிற்சாலைகளிலோ, சுரங்கங்களிலோ வேறு ஆபத்து



SCERT TELANGANA

விளைவிக்கும் பணிகளிலோ அமர்த்தப்படக்கூடாது என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகின்றது. தீப்பெட்டி, பட்டாசு, பீடி, தரைவிரிப்புகள், அச்சிடுதல், சாயமிடுதல் போன்ற தொழில்களில் சிறுவர்கள் அமர்த்தப்படுவதைச் சட்டங்கள் தடை செய்கின்றன.

## மதச் சுதந்திர உரிமை

அனைவரும் தம் மனசாட்சிப்படி, எம்மதத்தையும் பின்பற்ற சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு தடை ஏதும் இல்லை. ஒருவர் தம் விருப்பப்படி தான் சார்ந்திருக்கும் மதத்தையும் மாற்றிக்கொள்ளலாம். இந்திய மதச்சார்பின்மையை காக்கும் உரிமையாக இது உள்ளது. சில சமுதாய பிரிவினரிடையே பெண் குழந்தைகளைக் கொல்லும் பழக்கம் உள்ளது. எங்கள் மத கோட்பாட்டின்படி குழந்தைகளை நாங்கள் கொல்கிறோம் என்றால் அது ஏற்புடையது அல்ல. மதத்தின் பெயரால் குழந்தைகளைக் கொல்லும் குற்றத்தை யாரும் செய்யக்கூடாது. அதைப்போல உடன்கட்டை ஏறுதல் போன்ற கொடிய செயல்களும் மதத்தின் பெயரால் செய்யக்கூடாது.



படம் .3: வழிபடும் இடங்களும் பல்வேறுமதங்களை சார்ந்த மக்களும்

அரசு அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் பிற நிறுவனங்கள் எந்த மதத்தையும் பின்பற்றக்கூடாது. இது மிக முக்கியமானதாகும். இறைவனை வழிபடுதல், தொழுகை நடத்துதல், பஜனை அல்லது குர்பானி பாடுதல் போன்றவற்றை அரசுப்பள்ளிகள் அல்லது நிறுவனங்களில் செயல்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். அரசால் நடத்தப்படாத ஆனால் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் மதவழிபாடு நடத்தப்படலாம். அதுபோன்ற பள்ளிகளிலும் மத வழிபாட்டை விரும்பாத யாரும் மதவழிபாடு செய்யும்படி கட்டாயப்படுத்தக்கூடாது. குறிப்பாக 18வயதுக்குட்பட்ட சிறுவர்கள், மத வழிபாடு செய்வதை அவர்களின் பெற்றோர்கள் விரும்பவில்லை எனில் அவர்கள் மத வழிபாடு செய்யுமாறு பணிக்கக்கூடாது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி அரசாங்கம் எந்த மதத்தையும் சேர்ந்தது அல்ல. அது எல்லா மதங்களையும் சமமாக நடத்தவேண்டும். அரசியல் அமைப்புச் சட்ட முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ள மதசார்பின்மையின் பொருள் இதுவே ஆகும்.

## கல்வி மற்றும் கலாச்சார உரிமைகள்

மொழி, மத அடிப்படையிலான சிறுபான்மையினர் கல்வி நிலையங்களை நிறுவவும், நிர்வகிக்கவும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழிவகை செய்துள்ளது.

மொழி, மத அடிப்படையிலான சிறுபான்மை என்பது அவர்கள் வசிக்கும் இடத்தைப் பொருத்ததாகும். ஆந்திரப் பிரதேசத்தில் பெரும்பான்மையினராக உள்ள தெலுங்கு மொழி பேசும் மக்கள், மேற்கு வங்கத்தில் மொழி அடிப்படையிலான சிறுபான்மை மக்களாவர். பஞ்சாபில் பெரும்பான்மையினராக உள்ள சீக்கியர் ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா போன்ற மாநிலங்களில் சிறுபான்மையினராக விளங்குகின்றனர்.

அவர்கள், அவர்களின் கலாச்சாரம், கல்வி போன்றவற்றை காக்க கல்வி நிலையங்களை நிறுவ, நிர்வகிக்க சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது.

- உங்கள் பகுதியைச் சேர்ந்த கிராம மற்றும் நகர்புற குழந்தைகளுக்கு இவ்வுரிமை கிடைக்கின்றதா?
- உங்கள் மாநிலத்தில் கொடுக்கப்படும் குறைந்தபட்ச கூலியை, ஆசிரியர் உதவியுடன் கண்டுபிடி.

SCERT TELANGANA

எடுத்துக்காட்டாக, தமிழ்மொழி பேசும் மக்கள், தங்கள் கலாச்சாரத்தையும், மொழியையும் காக்க தமிழ் பயிற்று மொழியாக உள்ள பள்ளிகளை நிறுவவிரும்பினால், அதைத்தடுக்க முடியாது.

சிறுபான்மைக்கல்வி நிறுவனங்கள் அரசின் நிபந்தனைகளைப் பூர்த்திச் செய்யுமானால், அவை அரசால் அங்கிகரிக்கப்படும், மானியங்களும் அளிக்கப்படும், மேற்கண்ட எடுத்துக்காட்டில், மொழி சிறுபான்மையினரின் பள்ளி அந்திரபிரதேச மாநில கல்வி நிறுவனத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றிய பிறகு அதனுடன் இணைக்கப்பட்டால், நிதியுதவி பெறும் தனியார் கல்வி நிறுவனங்களைப் போல அரசு மானியம் பெறமுடியும்.

### அரசியல் அமைப்பு சட்டப்படி தீர்வுகாணும் உரிமைகள் :

ஏற்கனவே குறிப்பிட்டபடி, அடிப்படை உரிமைகள் மிக முக்கியமானது என்பதால், இவ்வுரிமைகள் அரசாங்கத்தால் மீறப்படும் சமயங்களில், மக்கள் உயர்நீதி மன்றங்களையோ, உச்சநீதிமன்றத்தையோ அணுகமுடியும். இவ்வுரிமைகள் மீறப்படும் சமயத்தில் அவற்றைக் காக்க நீதிமன்றம் ஆணையிடலாம். அடிப்படை உரிமை மீறல்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாக உள்ளது. அரசு அடிப்படை உரிமைகளைக் காப்பாற்றத் தவறினால் அரசின் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தொடர முடியும்.

> **பொது நல வழக்கிற்கு ஒரு எடுத்தக்காட்டு**
>
> அரசு, ஒரு நதியின் மீது அணைக்கட்ட முடிவு எடுக்கிறது என்று நினைத்துக்கொள்ளுங்கள். அணையைக்கட்டினால் அதைச்சுற்றியுள்ள 50,000 மக்களின் விளை நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. அவர்கள் வாழ்வாதாரத்தையும் நிலத்தையும் இழக்கும் நிலை உள்ளது. இது அவர்களின் அடிப்படை உரிமைகளான உயிர்வாழும் உரிமை, நாட்டின் எப்பகுதியிலும் குடியமரும் உரிமை, தாம் விரும்பும் தொழிலை மேற்கொள்ளும் சுதந்திரம் போன்றவற்றிற்கு எதிரானதாகும். இது போன்ற சூழலில் அரசின் முடிவுக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் வழக்குத்தொடர முடியும். 50,000 மக்களின் சார்பாக ஒரே ஒரு வழக்கை நீதிமன்றத்தில் தொடுக்கமுடியும்.

அரசு, அடிப்படை உரிமைகளை மீறும்போது சாதாரண மக்களும், ஏழைகளும் நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராக வழக்குத் தொடர்வதில்லை. இவ்வுரிமைகளை அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவும், நீதிமன்ற ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் பொதுநல மனுக்கள் மூலம் தீர்வு காணப்படுகின்றன. ஒரு குழுவினரின் உரிமைகள் மறுக்கப்படும்போது ஒவ்வொருவரும் தனித்தனியாக நீதிமன்றத்தில் வழக்குத்தொடர வேண்டிய அவசியம் இல்லை. இக்குழுவின் சார்பாக யார்வேண்டுமானாலும் நீதிமன்றத்தில் வழக்குத்தொடரலாம். இதுபோன்ற வழக்குகளை பொதுநல வழக்குகள் எனப்படுகின்றன. சுற்றுப்புறச் சூழல், அரசின் நேர்மை மற்றும் நிலைப்பாடு, கைதிகள் நடத்தப்படும் முறை போன்றவற்றிற்கும் பொதுநல வழக்குகள் மூலம் தீர்வு காண்பது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### அடிப்படை உரிமைகளில் அடங்கி இருப்பவை

இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் காலத்திற்கேற்றவாறு திருத்தம் செய்யப்படுகின்றன. அதுமட்டுமின்றி, புதிய உரிமைகளும் அடிப்படை உரிமைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. உரிமைகள் பாராளுமன்றத்தால் மாற்றம் செய்யப்படுகின்றன. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளாலும் குறிப்பிட்ட உரிமையின் எல்லைகள் விரிவாக்கப்படலாம். உயிர்வாழும் உரிமையை கருத்தில் கொண்டு உணவு உரிமையும் விரிவாக்கப்பட்டது.

### உரிமைகளும், பிற அமைப்புகளும்

மக்களாட்சியின் சிந்தனையைப்போலவே, உரிமைகளும் உலக மக்களின் கவனத்தை ஈர்த்தன. இங்கிலாந்தின் 'மேக்னா கர்டா', அரசின் அறிக்கை மற்றும் பிரஞ்சு புரட்சியின் குடிமக்களின் உரிமை பிரகடனம் போன்றவை உரிமைகளின் அடித்தளமாக விளங்குகின்றன. உலகத்தில் இனி போர் நடக்கக்கூடாது என்பதை

SCERT TELANGANA

உறுதியளிக்கவே ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தப்பட்டது. உலக அமைதியைக்காக்க, அதற்கான விதிகளை உருவாக்க உலகின் 9 நாடுகளுக்குப் பொறுப்பு அளிக்கப்பட்டது. அந்நாடுகளின் பிரதிநிதிகள் ஐக்கிய நாட்டுசபைக்காக 30 விதிகளை வகுத்தனர். இதுவே 'உலக மனித உரிமைகள் பிரகடனமாக,' அறிவிக்கப்பட்டது. இது 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் பொதுச்சபையால் நிறைவேற்றப்பட்டது. இப்பிரகடனத்தில் ஐ.நா.வின் உறுப்புநாடுகள் அனைத்தும் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டதால் இவ்வுரிமைகளை நிலைநாட்டும் பொறுப்பு உறுப்பு நாடுகளுக்கு உள்ளது. இவ்வுரிமைகளைச் செயல்படுத்த சட்டமில்லாததால், இவ்வுரிமை மீறல்களை சர்வதேச சமுதாயம் ஏற்றுக்கொள்ளவில்லை.




படம்5: குழந்தைகளின் உரிமைகளைப்பற்றிய சுவரொட்டி

## மனித உரிமைகள் ஆணையம்

ஐக்கிய நாடுகள் சபை மக்களின் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாக்கவே செயல்பட்டு வருகின்றது. இம்முயற்சியின் காரணமாக, அது தன் உறுப்பு நாடுகளையும் மனித உரிமைகளை காக்குமாறு ஊக்கப்படுத்துகிறது. 1993ஆம் ஆண்டு, இந்திய அரசு மனித உரிமைகளைக் காக்க சட்டம் இயற்றியது. மனித உரிமைகளைக் காப்பதற்காக 'தேசிய மனித உரிமைகள் ஆணையம்' ஏற்படுத்தப்பட்டது. இவ்வாணையத்திற்கு ஒரு சிவில் நீதிமன்றத்திற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டு, நாடு முழுவதும் அதிகார செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டது. மனித உரிமை மீறல்களை ஆராய வேறு சில அமைப்புகளும் அரசால் ஏற்படுத்தப்பட்டன. ஆகவே நாம் மனித உரிமைகளைக் காக்க 'தேசிய பெண்கள் ஆணையம்,' 'தேசிய சிறுபான்மை ஆணையம்,' 'மாநில மனித உரிமை ஆணையம்' போன்ற அமைப்புக்களைப் பெற்றிருக்கின்றோம்.



படம். .6: ஐக்கிய நாடுகளின் சபையின் மனித உரிமைகள் ஆணைய சின்னம்

தேசிய மனித உரிமை ஆணையம் உரிமை மீறல்களைப்பற்றியும், ஊடகச்செய்திகளை அடிப்படையாகக் கொண்ட பொது நல பிரச்சனைகளுக்கான தீர்வையும், பாதிப்புக்கு உள்ளாகும் நபர்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள், மீதும் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரங்களை இது பெற்றுள்ளது. நீதிமன்றத்தின் அனுமதியோடு, நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள மனித உரிமை மீறல்கள் வழக்குகளில் இவ்வாணையம் தலையிட முடியும். இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தில் மனித உரிமைகளின் பாதுகாப்பு பற்றி மறுஆய்வு நடத்தி, அவற்றை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்குரிய சிபாரிசுகளை செய்து வருகின்றது.

SCERT TELANGANA

சர்வதேச அளவில் மனித உரிமை மீறல்களைக் கவனிக்க, ஐ.நா.சபை மனித உரிமைக்குழுவை அமைத்துள்ளது.

## மனித உரிமைகளின் மீறல்

காவல் துறையினரின் அத்துமீறல்கள், விசாரணையற்ற கைது நடவடிக்கைகள், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல் அளிக்காமை, ஊழல், பாலியல் கொடுமைகள், குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் தாமதம், பெண் சிசுக்கொலை, பணத்திற்காக ஆட்களைக் கடத்துதல், வருந்தத்தக்க நிலையில் உள்ள பெண்கள், குழந்தைகள், தாழ்த்தப்பட்ட மக்கள், குடும்பத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு, வீட்டுப் பணியாளர்களிடம் கொடுமையாக நடந்துக்கொள்ளுதல் போன்றவை மனித உரிமை மீறல்களாகும். மனித உரிமைகளைப்பற்றிய மக்களின் அறியாமைக் காரணமாகவே இவ்வுரிமை மீறல்கள் நிறுத்தப்படவில்லை. மனித உரிமைகளைக் காக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுகளைச் சேர்ந்ததாகும். மனித உரிமை மீறல்கள் தொடர்பான புகார்களை மாநில ஆணையத்திடமோ அல்லது தேசிய ஆணையத்திடமோ அளிக்கலாம்.

- உங்கள் மாநிலத்தில் மாநில மனித உரிமைகள் ஆணையம் உள்ளதா?
- மனித உரிமை மீறல்கள் சிலவற்றைக் கூறுக.
- உங்கள் பகுதியில் மனித உரிமை மீறல்கள் பற்றிய சம்பவங்கள் உனக்குத் தெரிந்தால், அவற்றைப்பற்றி தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு புகார் கடிதம் எழுதுக.

## அடிப்படைக் கடமைகள் :

நாம் உரிமைகளைப் பெற்றிருப்பது போல, பொறுப்புக்களைக்கூட பெற்றுள்ளோம். நமக்குள்ள பொறுப்புகள் நம்மைச்சுற்றி வாழும் மக்களுக்கு நாம் ஆற்றவேண்டியவை ஆகும். அடிப்படை உரிமைகள் போலன்றி, அடிப்படைக்கடமைகள் மீறப்படும் போது நீதிமன்றத்தை அணுகமுடியாது.

ஒவ்வொரு இந்தியக்குடிமகனின் கடமைகள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

1) இந்திய அரசியல் சட்டத்துக்கு இணங்கி, தேசியக்கொடியையும், தேசியப் கீதத்தையும் அவமதிக்கக்கூடாது.
2) நாட்டுச்சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்ட உயர்ந்த சிந்தனைகளைப் போற்றி, பின்பற்றவேண்டும்.
3) இந்தியாவின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை நிலைநிறுத்த வேண்டும்
4) நாட்டைப் பாதுகாக்க வேண்டும்
5) வெவ்வேறு மொழி, மதம் சார்ந்த மக்களிடையே ஒற்றுமை, அமைதி போன்றவற்றைக் கொண்டுவர பாடுபடவேண்டும். அது மட்டுமின்றி பெண்கள் அவமதிக்கப்படுவதைத் தடுக்கவேண்டும்.
6) சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதைத்தடுத்து, அதன் மேம்பாட்டுக்காகப் பாடுபட வேண்டும்.
7) இந்தியக்கூட்டு கலாச்சாரத்திற்கு மதிப்பளித்துப் பேணி காக்கவேண்டும்.
8) அறிவியல் மனப்பாங்க, மனிதநேயம், சீர்திருத்தம், புதியனவற்றை அறிந்துக்கொள்ளும் ஆர்வம் போன்வற்றை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்
9) பொதுச்சொத்துகளைப் பாதுகாக்க வேண்டும்
10) அனைத்து அம்சங்களின் மீதும் நல்லியல்புகளை வளர்ந்துக்கொள்ள வேண்டும்.நமது குழந்தைகளைக்கல்வி கற்கச் செய்யவேண்டும்.

SCERT TELANGANA

## முக்கியச்சொற்கள்

1. அடிப்படை உரிமைகள் 2. மனித உரிமைகள் 3. பொதுநலவழக்குகள்
4. பட்டங்கள் 5. அநீதியான

## உனது கற்றலை மேம்படுத்துக

1. கீழ்கண்டவற்றுள் எது அடிப்படை உரிமையாக கருதப்படுவதில்லை?(AS1)
   a. பீகாரிலுள்ள தொழிலாளர்கள், விவசாய பண்ணை வேலைகளுக்காக பஞ்சாபிற்கு செல்கின்றனர்.
   b. மதஅடிப்படையிலான சிறுபான்மையினர் பல பள்ளிகளைத் துவக்கினர்
   c. அரசு வேலையிலுள்ள ஆண்களும், பெண்களும் சமஊதியம் பெறுகின்றனர்.
   d. பெற்றோர்களின் இறப்புக்குப்பிறகு சொத்துக்களைப் அவர்களின் குழந்தைகள் பெறுகின்றனர்.
2. கீழ்கண்டவற்றுள் எச்சுதந்திரம் இந்திய குடிமகனுக்குக் கிடைக்காது?(AS1)
   a. அரசை விமர்சிக்கும் சுதந்திரம்
   b. ஆயுதப்புரட்சியில் பங்கேற்கும் சுதந்திரம்
   c. அரசை மாற்ற இயக்கத்தை துவக்கும் சுதந்திரம்
   d. அரசியல் அமைப்புச் சட்டத்தின் மையக்கருத்து மேன்மையை எதிர்ப்பது.
3. கீழ்கண்டவற்றுள் அரசியலமைப்புச் சட்டப்படி கிடைக்கின்ற உரிமை எது?(AS1)
   a. வேலை உரிமை b. போதுமான வாழ்வாதாரத்திற்கான உரிமை
   c. தம் பண்பாட்டை பாதுகாக்கும் உரிமை d. தனிமைக்கான உரிமை
4. மக்களாட்சிக்கும் உரிமைகளுக்கும் இடையேயான உறவில் கீழ்கண்டவற்றுள் மேன்மை மிக்கதாக கருதப்படுவது எது? உங்கள் முன்னுரிமைக்கான காரணங்களைக்கூறுக.(AS2)
   a. ஒவ்வொரு மக்களாட்சி நாடும் தம் குடிமக்களுக்கு உரிமைகளை அளிக்கின்றன.
   b. குடிமக்களுக்கு உரிமைகளை அளிக்கும் எல்லா நாடுகளும் மக்களாட்சி அவசியமில்லை.
   c. உரிமைகளைப்பெறுவது நல்லது, ஆனால் அவற்றைப்பெற மக்களாட்சி அவசியமில்லை.
5. இப்பாடத்தையும், முன்பாடத்தையும் படித்து, அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள ஆறுஅடிப்படை உரிமைகளை பட்டியலிடுக.(AS1)
6. கீழ்காணும் நிகழ்வுகளின் போது அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா? அவ்வாறு மீறப்பட்டால் எந்த அடிப்படை உரிமை அல்லது உரிமைகள் என்பதைப் கூறுங்கள். உங்கள் நண்பர்களுடன் விவாதியுங்கள். (AS1)
   a. ஒருவர், எச்சட்டத்தை மீறினார் என்று சொல்லப்படாமல், காவல் நிலையத்தில் நான்கு நாட்கள் அடைத்து வைக்கப்படுகின்றார்?
   b. உனது பக்கத்து வீட்டுக்காரர், உனது நிலத்தின் மீது உரிமை கொண்டாடுகிறார்
   c. உனது பெற்றோர்கள் உன்னை பள்ளிக்கு அனுப்ப அனுமதிக்கவில்லை. மாறாக தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை செய்யும் படி கூறுகின்றனர். அப்போதுதான் அவர்களுக்கு பணம் சம்பாதித்துத்தரமுடியும் என்று நினைக்கின்றனர்.

SCERT TELANGANA

7 .நீங்கள் வழக்கறிஞர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். கீழ்காணும் விண்ணப்பத்துடன் வரும் மக்களுக்காக நீங்கள் எவ்வாறு வாதிடுவீர்கள்:(AS4)

"எங்கள் பகுதியிலுள்ள ஆறு, தொழிற்சாலைக் கழிவுகளால் மாசுபடுகின்றது. நாங்கள் ஆற்று நீரையே குடிநீராகப் பயன்படுத்துகின்றோம். மாசற்ற நீரால் எங்கள் பகுதி மக்கள் நோய்வாய்ப்படுகிறார்கள். அரசுக்கு இதுபற்றிய புகார் அளித்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது நிச்சயமாக அடிப்படை உரிமை மீறலாகும்."

8. பட்டங்களை தடைசெய்தல், எனும் பாடப்பகுதியை படித்து பின்வரும் வினாவிற்கு விடையளி.(AS2)

வெளிநாட்டின் விருதுகளைப் பெற்றவர்கள், அவர்களின் பெயருக்கு முன்னாள் அவ்விருதின் பெயர்களை ஏன் பயன்படுத்தக்கூடாது?

9. உங்களுக்கு தெரிந்த ஏதாவது ஒரு உரிமை மீறல் நிகழ்ச்சியை செய்தித்தாளில் படித்து பரிசீலனை செய்திடுங்கள்.(AS6)

**கலந்துரையாடல் :** நாம் செய்தித்தாள்களிலும் நமது சுற்றுப்புறத்திலும் தற்கொலைகள் குறித்து கேட்டிருப்போம். ஒவ்வொருவருக்கும் பிரச்சனைகள் இருக்கும். ஆனால் தற்கொலை என்பது பிரச்சனைகளுக்கு தீர்வாகுமா? விவாதி.

## செயல்திட்டம்

1. உனது பகுதியின் மூத்த வழக்கறிஞரை உனது பள்ளிக்கு வரவழைத்து பின்வரும் கருத்துகளைப் பற்றி ஒரு நேர்காணலை நடத்து.
   - அடிப்படை உரிமைகளை மீறுதலும் அதன் முக்கியத்துவமும்
   - குழந்தைகளின் உரிமைகளை மீறுதல்
   - மக்களாட்சியில் உரிமைகளுக்காக போராடும் வழிகள்
   - மற்ற உரிமைகள்.

SCERT TELANGANA

பாடம்
20

# பெண்களின் உரிமைகள் பாதுகாப்புச்சட்டங்கள்

- சிறிய வயதினரின் திருமணங்களுக்கு சென்றதுண்டா?
- பெண்களை கிண்டல் செய்வதை கவனித்துள்ளீர்களா?
- வீட்டில் பெண்களை திட்டுதல். அடித்தல் போன்றவற்றை கண்டீர்களா?
- இவ்வாறான செயல்களை மாற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?

உலக அளவில் பெண்குழந்தைகளும், பெண்களும் வெறுப்பு உண்டாக்குதல் மற்றும் கொடுமைகளுக்கு ஆளாகி வருகின்றனர். அது அவர்களின் மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது. பெரும்பாலான பெண்களால் சுதந்திரமாக நடமாட முடிவதில்லை. அதேபோல், பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லவும் தயங்குகின்றனர். வார்த்தைகளால் வெறுப்பு உண்டாக்குதல், சித்திரவதை செய்தல், இழிவுபடுத்துதல் மற்றும் வாகனங்களை குறுக்கே நிறுத்துதல் போன்றவை நம்மைச் சுற்றி நடைபெறும் பொதுவான நிகழ்வுகள். நாம் அதுபோன்ற செய்திகளையும் தொலைக்காட்சியிலும் செய்தித்தாள்களிலும் காண்கிறோம். இது போன்ற நிகழ்வுகள் பெண்குழந்தைகள் மற்றும் பெண்களின் உரிமைகளை மீறும் செயல்களாகும்.

பெண்களின் மீதான கொடுமைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல சட்டங்களை இயற்றினாலும் மக்களுக்கு அவற்றின் மீது விழிப்புணர்வு இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு மற்றும் உதவியைப் பெற எங்கு, எவ்வாறு செல்லவேண்டும் என்பதும் தெரிவதில்லை.

எதிர்காலப் பெண்களான பெண்குழந்தைகளும், பெண்களும் அவர்களை பாதுகாக்கும் சட்டங்களை அறிந்திருத்தல் வேண்டும். அதன் பின்னர் மட்டுமே அவர்களால் தங்களை பல்வேறு வகையான கொடுமைகளிலிருந்தும், சித்திரவதைகளிலிருந்தும் காத்துக்கொள்ள முடியும்.

பெண் குழந்தைகளுக்கும். பெண்களுக்கும் தங்கள் கவலைகளை வெளிப்படுத்தவும் தங்கள் இரகசியங்களை நிலைநிறுத்திக் கொள்ளவும் ஏதேனும் இணையதளம் அல்லது அமைப்பு உள்ளதா? இருந்தால் அது எங்குள்ளது? எவ்வாறு செயல்படுகிறது?

நாம் இந்தப் பாடத்தில் அதைப்பற்றி விவாதிப்போம்.

குழந்தைகள் மற்றும் பெண்களின் உரிமைகளை மீறுதல் என்பது நம் சமுதாயத்தில் பல்வேறு வழிமுறைகளில் தொடர்கின்றது. இதுபோன்ற உரிமை மீறல் எவ்வளவு காலம் தொடரும்? பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை பாதிக்கச் செய்யும் சமுதாயத்தின் மனப்பான்மையை திருத்த வேண்டிய தேவை உள்ளது. அரசாங்கத்தால் இயற்றப்பட்ட சட்டங்களை தகுந்த முறையில் நடைமுறைப்படுத்தினால் மட்டுமே குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு சுதந்திரமான மற்றும் சந்தோசமான வாழ்க்கையை வழங்க முடியும்.

1989ல் ஐ.நா.சபையால் முன்மொழியப்பட்ட சர்வதேச குழந்தைகளுக்கான சட்ட வரைவில் 191நாடுகள் கையொப்பமிப்;டன. அந்நாடுகளில் நம் நாடும் ஒன்று. இந்த உரிமைகள் வேறுபாடுகள் ஏதுமின்றி ஒவ்வொருவருக்கும் தொடர்புடையவை. இந்தமுக்கியமான உரிமைகளில் சிலவற்றை நாம் காண்போம்.

## குழந்தைகளின் உரிமைகள்

1. 18 வயதிற்கு குறைவான அனைவரும் பாலின வேறுபாடின்றி குழந்தைகளாகக் கருதப்படுவர்.
2. குழந்தைகளின் உரிமைகளுக்காக அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பு பெறுதல்.
3. வாழும் உரிமை
4. பெற்றோருடன் வாழும் உரிமை.
5. வானொலி, செய்தித்தாள், தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் வாயிலாக உலகத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் அறிவையும் பெறுவதற்கான உரிமை.
6. கொடுமை மற்றும் அபாயகரமான நிகழ்வுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் உரிமை.
7. ஊனமுற்ற குழந்தைகளின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் தனிப்பட்ட கவனத்தைப் பெறும் உரிமை.

SCERT TELANGANA

8. நல்ல உடல் ஆரோக்கியம் மற்றும் மருத்துவ வசதியைப் பெறும் உரிமை
9. தாய்மொழியைப் பயன்படுத்த மற்றும் தங்களின் மதம் மற்றும் மரபுரிமையை பின்பற்றும் உரிமை.
10. சிறிது நேரம் விளையாட உரிமை.
11. குழந்தைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியத்திற்கு தீங்க ஏற்படுவதைத் தவிர்க்கும் உரிமை.
12. தீங்குதரும் மருந்துகளை பயன்படுத்துதல், உற்பத்தி செய்தல் மற்றும் வாங்குவதிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
13. குழந்தைகள் அலட்சியப்படுத்தப்படும் போதும் துன்பப்படும் போதும் உதவியைப் பெறும் உரிமை.

குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் ஒவ்வொருவரும் ஐ.நா.சபையின் குழந்தைகள் உரிமைச் சட்டத்தைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். இதைப்பற்றி அரசாங்கம் மக்களுக்கு தகவலை தெரிவிக்க வேண்டும்.

## குழந்தைத் திருமண தடுப்புச்சட்டம், 2006




**குழந்தை என்றால் 21வயது முடியாமல் இருக்கும் ஆணும் 18 வயது முடியாமல் இருக்கும் பெண்ணையும் குறிக்கும். இந்த இருவரில் ஒருவர் குழந்தையாக இருந்தாலும் அவர்களுக்கிடையே ஏற்படும் திருமண ஒப்பந்தம் குழந்தைத் திருமணம் என்று கருதப்படும்.**

**18வயதுக்கு மேல் உள்ள ஓர் ஆண் குழந்தைத் திருமணம் செய்து கொண்டால் அவருக்கு இரண்டாண்டுகள் சிறை தண்டனையும், அல்லது அபராதத் தொகை ரூ.1லட்சம் வரை விதிக்கப்படலாம். குழந்தைத் திருமணத் தடுப்புச்சட்டம் 2006ன்படி இதே தண்டனையை திருமணம் செய்துவைப்பவர், நடத்துபவர் அல்லது இயக்குபவருக்கும் தரப்படும். திருமணம் ரத்து செய்யப்பட்டால் அப்பெண் 18வயதினை அடையும் வரை அவளுக்கு வாழ்வாதாரத் தொகை அந்த ஆணால் செலுத்தப்பட வேண்டும். ஆண் உரிய வயதினை அடையாதவராக இருந்தால் அத்தொகையை அந்த ஆணின் பெற்றோர் வழங்க வேண்டும். திருமணம் ரத்துசெய்யப்பட்ட குழந்தைகளை அரசாங்கம் கவனித்துக்கொள்கிறது. திருமணம் தடைசெய்யப்பட்டால் வரதட்சணை மற்றும் அன்பளிப்புகள் அனைத்தையும் திரும்பச் செலுத்தி விடவேண்டும்.**

### குழந்தை திருமணங்களால் உண்டாகும் தீமைகள்

- குறை வயதில் கர்ப்பம் தரித்தல்
- பெண் குழந்தைகளை முறையற்ற வழிமுறைகளில் விற்பதற்கும் வியாபாரம் செய்வதற்கும் வழிவகுக்கும்.
- பக்குவமடையாத வயதினரை குடும்ப அமைப்பிற்குள் தள்ளுதல்
- கருச்சிதைவுகளும், சிசுமரணம் மட்டுமின்றி தாய் மரணமும் உண்டாகும். இதனால் குறைப்பிரசவ காலத்தில் பிறக்கும் குழந்தைகள் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.
- ஊனமுள்ள குழந்தைகள் பிறத்தல் அல்லது குழந்தைகள் இறந்து பிறத்தல்.
- மன வளர்ச்சிக் குறைபாட்டினைப் போன்று உடல் ஆரோக்கியக்குறைபாடு ஏற்படுதல்.
- படிப்பதற்கு தடை ஏற்படுதல்
- உடல் வளர்ச்சிக்கு (குறிப்பாக பெண்களைப் பொறுத்த வரையில்) தடை ஏற்படுதல்.



SCERT TELANGANA

## குழந்தைத் திருமணத் தடுப்பு - ஒரு வெற்றிபெற்ற கதை

இரவிரால்ல கவிதா என்பவர் பன்னிரண்டு வயதான ஒரு பெண்குழந்தை. அவளுடைய தந்தையார் பெயர் நாஞ்சாரய்யா, அவள் மகபூப் நகர் மாவட்டத்திலுள்ள அச்சம்பேட்டை மண்டலத்திலுள்ள பொம்மனபள்ளி கிராமத்தைச் சேர்ந்தவள். அவள் பொம்மன பள்ளி கிராமத்தில் உள்ள உயர்ஆரம்பப் பள்ளியில் 7ஆம் வகுப்பு படிக்கிறாள். அவள் பிப்ரவரி, 1, 2013லிருந்து பள்ளிக்கு வருவதில்லை. அவள் பள்ளிக்கு வராமல் போனதற்கான காரணம் என்னவெனில், பிப்ரவரி 13ஆம் தேதி, 2013 அன்று அவளுடைய திருமணத்தை நடத்த முடிவு செய்யப்பட்டிருந்ததேயாகும்.

இதுபற்றிய தகவல் மாமிடிபூடி வெங்கட ரங்கையா நிறுவனத்திற்கு (MVF) உள்ளூர் புரோகிதரால் தெரிவிக்கப்பட்டது. MVFன் பொறுப்பாளரும் மற்றும் பிற தன்னார்வ உறுப்பினர்களும் சரிதாவின் வீட்டிற்குச் சென்று திருமணத்தைப் பற்றி விசாரித்தனர். பெற்றோர்கள், சரிதா வேறொரு கிராமத்திற்கு சென்றுவிட்டதாகக் கூறினர். பின்னர் அவர்கள் பெரியவர்களுடனும் அவ்வூரின் குழந்தை திருமணத் தடுப்பு குழுவின் உறுப்பினர்களுடனும் கலந்தாலோசித்தனர். அக்குழுவின் தலைவராக கிராம சர்பஞ்சும் சபையின் பொறுப்பாளராக அங்கன்வாடி ஆசிரியரும் உள்ளனர். ANM, ASHA பணியாளர், கிராமக் குழுத்தலைவர், VRO, பஞ்சாயத்து செயலாளர், இலட்சிய விவசாயி (ஆதர்ஸரைது) சாக்ஸர பாரத் ஒருங்கிணைப்பாளர், அஞ்சல் அலுவலர் மற்றும் சில ஆசிரியர்களும் அதில் உறுப்பினர்கள். தகவல் அளித்தவுடன் அவர்கள் ஒரு கூட்டத்தை கூட்டி கலந்துரையாடினர். முன்னதாக உள்ளூர் புரோகிதர்கள், காஜிக்கள், பாதிரியார்கள் ஒரு கூட்டத்தை நடத்தினர். அவர்கள் அவர்களுக்கு தகவல் தெரிவித்தது யாதெனில், குழந்தைத் திருமணம், சட்டத்திற்குப் புறம்பானது மற்றும் திருமணத்திற்கு முகூர்த்த நாளைக்குறிப்பது குற்றம் மற்றும் திருமணத்தை நடத்துவது அதைவிட குற்றம் என்பதாகும். எனவே MVF தன்னார்வ உறுப்பினர்கள் உள்ளூர் புரோகிதரிடம் கலந்தாலோசித்தனர். சரிதாவின் பெற்றோர் அவரிடம் வந்து முகூர்த்த தேதியை குறிக்கும்படி கேட்டபோது அவர் அவளின் பிறந்த நாள் சான்றிதழைக் கேட்டதாக பதிலளித்தார். பின்னர் அவர்கள் சரிதா படிப்பதில்லை என்று கூறினர். பின்னர் புரோகிதர் குடும்ப அட்டையை கொண்டுவரும்படி கேட்டார். ஆனால் அவர்களால் முடியவில்லை. புரோகிதர் MVF பொறுப்பு அதிகாரிக்கும் இதை தொலைபேசியில் தெரிவித்தார்.

மாப்பிள்ளை/மணமகனான தாமெர்ல சின்ன சத்தியத்திற்கு வயது 23, அவர் உப்புனுதுலா மண்டலத்திலுள்ள பெனிமில்லா கிராமத்திலுள்ள ராமய்யாவின் மகனாவார். அவர் தொடக்கக் கல்வியைக் கூட முடிக்கவில்லை. MVF தன்னார்வ உறுப்பினர்கள் பிப்ரவரி 5ம் தேதி மீண்டும் பொம்மனபள்ளி கிராமத்திற்குச் சென்றனர். அந்த நேரத்தில் சரிதாவின் குடும்ப உறுப்பினர்கள் வீட்டிற்கு வெள்ளை அடிப்பதிலும் பந்தல் போடுவதிலும் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தனர். குழந்தைத் திருமணத்தடுப்புக் குழு உறுப்பினர்களும் அங்கே வந்திருந்தனர். அவர்கள் இவ்வளவு சிறிய வயதில் திருமணம் செய்யக் கூடாது எனவும் இது படிக்கும் வயது, திருமணவயது அல்ல என்றெல்லாம் விளக்கினர். ஆனால் சரிதாவின் தந்தை, நீங்கள் பல விஷயங்களைக் கூறுகிறீர்கள். ஆனால் எங்களுக்கு மற்றொரு மகள் இருக்கிறாள். இந்த திருமணங்களை நான் எவ்வாறு ஏற்பாடு செய்வது? இது உங்களுக்குத் தேவையில்லாத வேலை என்றார். தன்னார்வ உறுப்பினர்கள் அனுபவங்கள், நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகளுடன் பல தகவல்களைத் தந்து விளக்கினர். இந்த முறையில் அவர்கள் ஒரு அறிவுறுத்தலை நடத்த முயன்றனர். ஆனால் அந்த குடும்ப உறுப்பினர்கள் முரட்டுத்தனமாக நடந்துகொண்டனர்.

அவர்கள் சமாதானமாகாததால் தன்னார்வ உறுப்பினர்கள் தாசில்தாரிடமும் சித்தாபுரத்தின் காவல்துணை ஆய்வாளரிடமும் CDPO விடமும் பிப்ரவரி 6ம் தேதிச் சென்றனர். இந்த அலுவலர்கள் பிப்ரவரி ஏழாம் தேதி பள்ளிப் பதிவேடுகளை சரிபார்க்க பொம்மனபள்ளி பள்ளிக்குச் சென்றனர். இந்த அலுவலர்களைப் பார்த்து சில கிராமவாசிகள் அங்கு கூடினர். அவர்கள் சரிதாவையும் அவளுடைய தந்தையையும் அழைத்தனர். மீண்டும் அவளுடைய தந்தை முரட்டுத்தணமாக பேசத்தொடங்கினார். அதே நேரத்தில் பெனிமில்லா கிராமவாசிகளில் சிலரும் அங்கு வந்தனர்.

SCERT TELANGANA

அவர்கள் நாங்கள் திருமணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முடித்துவிட்டோம். பணத்தை ஏராளமாக செலவழித்துவிட்டோம். இப்பொழுது நீங்கள் வந்து திருமணத்தை ஏன் நிறுத்துகிறீர்கள்? என்றனர். துணை ஆய்வாளர், உங்களுடைய செலவைப் பற்றி எங்களுக்கு கவலை இல்லை. நீங்கள் திருமணம் நடத்திக் கொண்டிருந்தாலும் நாங்கள் தடுப்போம். குழந்தைத் திருமணம் செய்வது சட்டப்படி குற்றம். அதை செய்யத் தூண்டும் எந்தவொரு நபரும் தண்டிக்கப்படுவார், என்றார். இறுதியில் அனைவரும் இருதரப்புக் குடும்பத்தாரையும் சமாதானப்படுத்தி திருமணத்தை நிறுத்தி விட்டனர். தற்போது கவிதா பள்ளிக்குச் சென்றுக்கொண்டிருக்கிறாள்.

- சில நேரங்களில் 15வயதுக்கும் குறைவாக உள்ளவர்களுக்குத் திருமணம் நடத்திவைக்கப்படுகிறது. அதுவும் அவர்களின் ஒப்புதல் இல்லாமலேயே நடத்தப்படுகிறது. அவற்றை நாம் எவ்வாறு நிறுத்துவது? யார் உதவி செய்வர்?

• குடும்பத்தை பராமரிப்பதற்காக குழந்தைத் தொழிலாளர்களாக மாறுதல்.

குழந்தைத் திருமணத்தை தடை செய்ய மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளரும், பகுதி அளவில் வருவாய் பகுதி அலுவலரும், மண்டல அளவில் தாசில்தார் அல்லது ICDS அலுவலரும் மற்றும் கிராம அளவில் கிராம பஞ்சாயத் செயலாளரும் பொறுப்பு வகிக்கின்றனர். குழந்தைத் திருமணத்தைப் பற்றி யார் வேண்டுமானாலும் மேற்கூறிய அதிகாரிகளுக்கு தகவல் அல்லது முறையீடு செய்யலாம். சில நேரங்களில் நீதிமன்றம் தானாகவே நம்பிக்கையான தகவல் அடிப்படையில் வழக்கினைப் பதிவு செய்து சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்கும்.

### அநீதியான ஆட்கடத்தல் (தடுப்பு)சட்டம் 1956 மற்றும் சட்டத்திருத்தம் 2006

அநீதியான ஆட்கடத்தல் என்பது ஒரு ஆண்/பெண்ணை அவனுடைய/அவளுடைய விருப்பத்திற்கு மாறாக கடத்திச் செல்லுதல், அதிகாரத்துடன் மிரட்டிப்பணிய வைத்தல், வாழ்வாதாரத்தைக் காட்ட சம்பளமற்ற பணிகளுக்கு பயன்படுத்தக் கொள்ளுதல் அல்லது திருமணத்திற்கான ஏற்பாடுகளை செய்தல் மற்றும் பாலினத் தொடர்பான தாக்குதல்களால் அவர்களை பயமுறுத்துதல் போன்றவையாகும்.

### ஆள்கடத்தலின் பல்வேறு வடிவங்கள்

1. பாலினத் தாக்குதல்
   அ. பலவந்தமான வேசித்தொழில்
   ஆ. சமுதாய மற்றும் மதம் தொடர்பான வேசித்தொழில் (தேவதாசி, ஜோகினி , மாதங்கி போன்றவை)
   இ. சுற்றுலாப் பயணத்தில் பாலினத் தாக்குதல்
   ஈ. ஆபாசமாகவும் நாகரீகமற்ற முறையில் எழுதுதல் மற்றும் படங்கள் காட்டுதல்.
2. சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள்
   அ. பிச்சை எடுத்து வாழ்வதற்காக திரிதல்
   ஆ. மனித உறுப்புகளை விற்றல்
   இ. மது/மயக்க மருந்துகளை சட்டத்திற்கு புறம்பாக வியாபாரம் செய்தல்
3. உழைப்பாளர்கள்
   அ. சம்பளமற்ற (இ) பலவந்தமாக உழைப்பைப் பெறுதல் (வெட்டிவேலை)
   ஆ. வீட்டுப்பணி
   இ. விவசாயக் கூலியாள்
   ஈ. வீடுகட்டும் தொழிலாளி
4. பிறரைத் துன்புறுத்தி இன்பம் காணுதல்
   அ. ஒட்டகங்களின் மீது குழந்தைகளை கட்டி பொழுதுபோக்கிற்காக ஓடச்செய்தல்
   ஆ. திருமணங்கள் மற்றும் அவர்களின் ஒப்புதலில்லாமல் தத்து எடுத்துக்கொள்ளுதல்.



SCERT TELANGANA

பலவந்தமான வேசித்தொழில் ஒரு குற்றம். அது போன்ற வேசிகள் பாலினப் பணியாளர்கள் என்பர். அவர்களின் பாதுகாப்பிற்கு பல சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. காவலர்களுக்கு விசாரணை என்னும் பெயரில் அவர்களை அடிப்பதற்கோ அல்லது தண்டிப்பதற்கோ அதிகாரம் இல்லை. பாலினப் பணியார்களுடன் வேசித்தொழில் செய்யும் தரகர்களுக்கும், 2 அல்லது 3 ஆண்டுகள் சிறைவாசமும், ரூ.10,000வரை அபராதமும் செலுத்தும் தண்டனை உள்ளது. வேசித்தொழிலுக்காக ஒரு வீடு அல்லது ஒரு அறை அல்லது அறையை வாடகைக்கு எடுத்துக் கொள்வது அல்லது கொடுப்பது கூட ஒரு குற்றமாகும்.

தன் வாழ்க்கைத் துணையைத் தவிர மற்றவர்களுடன் பாலினச் சேர்க்கையில் யாரேனும் பங்குகொண்டாலும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

இந்த அநீதியான ஆட்கடத்தல் வியாபாரத்தை தடுப்பதற்காக அல்லது பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற, ஒருவர் உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் செய்ய வேண்டும். இது தொடர்பான அலுவலர்கள் இந்த குற்றத்தை உறுதிசெய்ய முன் அனுமதி (பிடிவாரண்டு) இன்றி விசாரிக்கலாம்.

பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றிய பிறகும், தேவைப்பட்ட மருத்துவசிகிச்சைக்குப் பின், மேஜிஸ்திரேட் (கீழ் நீதிமன்றங்களின் நீதிபதி) முன் நிறுத்தபடவேண்டும். ஒரு பெண் காவல் அதிகாரியால் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் அல்லது அரசு சாராத நிறுவனத்தினர் எவர் வாயிலாகவாவது விசாரணை மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் குழந்தைகளாக இருப்பின் அவர்களை பாலசதனுக்கு (குழந்தை மறுவாழ்வு மையம்) அனுப்பிவைக்க வேண்டும்.

அநீதியான ஆள்கடத்தல் வியாபாரத்திற்கு 7 ஆண்டுகள் ஆயுள் கடுங்காவல் தண்டனையும் அபராதமும் தண்டனையாக வழங்கப்படுகிறது.

## வரதட்சிணை தடுப்புச்சட்டம் 1961

எவரேனும் ஒரு நபர் வரதட்சிணையை கொடுப்பது அல்லது வாங்குவது அல்லது வரதட்சிணையை கொடுப்பது அல்லது வாங்குவதற்கு உதவி செய்தல் அல்லது தூண்டுதலாக இருந்தாலோ அந்த ஆண்/பெண் ஐந்தாண்டுகளுக்குக் குறையாமல் சிறைவாசம் மற்றும் ரூ.15,000க்கு குறையாமல் அபராதமும் அல்லது வரதட்சிணை மதிப்பின் அளவு தொகை, இவற்றில் எது அதிகமோ அதை விதித்து தண்டிக்கப்படுவார்.

திருமணத்திற்குப் பிறகு பல சமயங்களில் மணப்பெண் தொந்தரவு செய்து வெறுப்பூட்டப்படுதல், திட்டப்படுதல், இழிவுபடுத்துதல், சில நேரங்களில் அடிக்கப்பட்டு மரணம் சம்பவித்தல், அல்லது தற்கொலை செய்யத் தூண்டுதல் போன்றவை நிகழ்கின்றன. இந்த அனைத்து குற்றங்களும் இச்சட்டத்தில் அடங்கும். திருமணத்தின் போது பெற்றோர் அன்பளிப்புகளையும், பொருட்களையும் தாமாக முன்வந்து தரலாம். ஆனால் அவை சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

1. அன்பளிப்புகளின் பட்டியல் தனியாக இருக்க வேண்டும்.

2. அன்பளிப்புகளை கட்டாயபடுத்தி வாங்க கூடாது.

3. பெண் வீட்டார் அளிக்கும் அன்பளிப்புகள் அவரவர் கலாச்சாரம், சம்பிரதாயங்களுக்கு ஏற்றவையாக இருக்க வேண்டும். அவை மணப்பெண்ணின் பெற்றோரின் பொருளாதார நிலைக்கேற்றவாறு இருக்க வேண்டும். பெற்றோருக்கு தலைக்கு மீறிய பாரமாக இருக்க கூடாது.




- உங்கள் ஊரில் வரதட்சிணைக் கொடுமையால் வருத்தப்படும் பெண்களை நீ எப்போதாவது கண்டதுண்டா? அவர்கள் எவ்வாறு கொடுமைப்படுத்தப்படுகின்றனர்? அவற்றைத் தடுக்க நீ கூறும் அறிவுரைகள் என்ன?

SCERT TELANGANA

இதுபோன்ற கொடுமை நடைபெறும் போது பாதிக்கப்பட்ட பெண் தானாகவோ அல்லது அவளுடைய தாய்/தந்தை/சகோதரர்/உறவினர்கள் உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் செய்யலாம்.

## வீட்டுக் கொடுமைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005

அனைத்துக் குடிமக்களுக்கும் ஒழுக்கமான முறையில் வாழும் உரிமையை நம் அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. பெண்களும் குடிமக்களே. ஒழுக்கமான வாழ்க்கையை நடத்துதல் என்பது பெண்கள் இழிவுபடுத்தப்படகூடாது, கீழ்த்தரமாக நடத்தப்படுவது அல்லது கொடுமைப்படுத்தப்படுவதோ கூடாது என்று பொருள்படுகிறது. இதுபோன்ற சூழ்நிலைகளை உருவாக்குவதால் அவர்கள் தங்கள் உரிமைகளை அனுபவிப்பர். இதன் மூலம் அவர்களின் பணிக்கும் மதிப்பளிக்கப்படுகிறது.

ஒரு பெண் அல்லது அவளது குழந்தை, தன் குடும்ப உறுப்பினர்களாலேயே தொந்தரவு செய்யப்பட்டு வெறுப்பூட்டப்படுதல் அல்லது கொடுமைப்படுத்தப்படுதல் போன்றவற்றால் வருத்தப்படுவதை வீட்டுக்கொடுமை என்பர். இக்கொடுமை பாதிக்கப்பட்டவரின் உடல் மற்றும் மனநிலையை பாதிக்கிறது. ஆதிக்கம் செலுத்துவதற்காக பெண்களின் மீது திட்டமிட்ட நடவடிக்கைகளை செயல்படுத்தவதை வீட்டுக்கொடுமை என்றும் கூறுவர்.

ஒரு புறம் குடும்பம், சமூகம் போன்றவை இக்கொடுமையை நியாயப்படுத்திக் கொண்டு இருப்பினும், கடந்த 20 ஆண்டுகளாக பெண்களின் போராட்டங்களின் பலனாக நமது அரசாங்கங்கள் பெண்கள் மீது நடக்கும் இக்கொடுமைகளை தடுத்தல் முக்கியமானது என்பதை உணர்ந்தன. இல்லையெனில், மக்கள் தொகையில் ஏறக்குறைய பாதியளவு உள்ள பெண்களின் மேம்பாட்டுக்கு இவை இடையூகளாக உருவாகி, உலகம் பரிபூரணமான மேம்பாட்டை சாதிக்க முடியாது என முடிவுசெய்து, உலக அளவில் அபிவிருத்திக்காக அரசாங்கங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தீர்மானங்களில் பல நாடுகளுடன் நமது நாடு கையொப்பமிட்டு, அந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டுள்ளது.

### தீர்மானங்களில் முக்கியமானவை:

- ''திருமணம், குடும்ப சம்பந்தங்கள் விஷயங்களில் பெண்கள் மீது வேறுபாடுகள் காட்டும் போக்கை நீக்கும் விதமாக, ஆண்-பெண் சமத்துவத்தை அடிப்படை கொள்கையாக அரசாங்கங்கள் எல்லா விதங்களிலும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்''.
- ''ஆண்-பெண் இருபாலருக்கும் சமமான பங்குரிமையும், சொத்துக்களை அனுபவிக்கும் உரிமையும், மேலாண்மை செய்யும் உரிமையும், சமமாக இருக்க வேண்டும்''.
- பீஜிங் உடன்படிக்கை செயல்திட்ட அறிக்கை இவ்வாறு எடுத்துரைக்கிறது:
- சமுதாயத்தில் ஆண்களைவிட பெண்கள் தாழ்ந்த நிலையில் இருப்பதற்கு, பெண்கள் மீது நடக்கும் கொடுமையும் ஒரு காரணம். பெரும்பாலான சூழ்நிலைகளில் பெண்கள், சிறுமிகள் மீது கொடுஞ்செயல்கள் குடும்பங்களிலும், வீடுகளிலும் நிகழ்கின்றன. குடும்பங்களில் நடக்கும் கொடுமை நிகழ்ச்சிகள் பெரும்பாலும் வெளியுலகத்திற்கு தெரிவதில்லை. எனவே, இவற்றை அடையாளம் காண்பது மிகவும் கடினம்.
- ஒருவேளை வீட்டுக் கொடுமைகளை அடையாளம் கண்டுக்கொண்டாலும், பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றுவதிலும், காரணமானவர்களை தண்டிப்பதிலும் அரசாங்கங்கள் முழு வெற்றி பெறமுடியாமல் உள்ளன.
- கொடுஞ்செயல்களால் துன்பப்பட்டு வரும் பெண்களுக்கு சட்ட ரீதியான, நியாயமான பாதுகாப்பிற்கு சம்பந்தப்பட்ட எல்லாவிதமான அமைப்புகளை எளிதில் பெறும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும். இது குறித்த தகவல்களை பரவலாக பிரச்சாரம் செய்ய வேண்டும்.



SCERT TELANGANA

ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான பெண்கள், வீட்டுக் கொடுஞ் செயல்களால் காயமடைந்து, சிகிச்சைப் பெற்று வருகின்றனர். ஆனால், வீட்டில் நடந்த கொடுஞ்செயல் என கூறுவதில்லை. எல்லா சாதிகள், இனங்கள், மதங்களின் சமூக, பொருளாதார வகுப்பினரிடையே இக்கொடுமை பரவலாக காணப்பட்டாலும் நான்கு சுவர்களுக்கிடையே நடக்கும் குடும்ப விவகாரம் என்று நினைக்கின்றனர்.

### வீட்டு கொடுஞ்செயல்கள் குறித்த தவறான எண்ணங்களும், உண்மைகளும்:

**தவறான எண்ணம்**: எப்பொழுதோ ஒரு முறை பெற்றோர், குழந்தைகளை அடித்தால் அதை பெரியதாக எடுத்துக் கொள்ள வேண்டிய அம்சமாக கருதக் கூடாது.

**உண்மை**: குடும்ப கொடுஞ்செயல்கள் இவ்வாறே துவங்கி, படிப்படியாக எதிர்ப்பு இல்லாததால் கெட்ட பழக்கமாக மாறிவிடும். இப்படிப்பட்ட சித்தரவதைகளால் ஏற்படும் காயங்களால் மருத்துவமனையை நாட வேண்டியிருக்கும். சில சமயங்களில் உயிரிழக்கவும் நேரிடும். அடிக்கடி காயப்படுபவர்களின் சுயமரியாதை, தனித்தன்மை மீது மிகுந்த பாதிப்பை உண்டாக்கும்.

**தவறான எண்ணம்** :குடிப்பழக்கத்திற்கு அடிமையாகுதல்.

**உண்மை** : குடிப்பழக்கம் ஒரு தேவையற்ற காரணம். அடித்து சித்தரவதை செய்யும் ஆண்களில் 40 சதவீதம் குடிப்பழக்கமே இருக்காது என புள்ளியியல் விவரங்கள் கூறுகின்றன.

**தவறான எண்ணம்**: பெண்கள் குழந்தைகளுக்காக, குடும்ப சித்தரவதைகளை சகித்துக் கொள்கின்றனர்.

**உண்மை**: கொடுஞ்செயல்களிலிருந்து மேலும் கொடுஞ்செயல்கள் உருவாகும். கொடுஞ் சித்தரவதைகள் நடக்கும் சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் கொடிய செயல் செய்பவர்களாக மாறும் வாய்ப்பு அதிகம்.

**தவறான எண்ணம்**: குடும்ப கொடுஞ்செயல்களிலிருந்து வெளிப்படும் வாய்பேயில்லை.

**உண்மை** : கொடுஞ்செயலற்ற சூழ்நிலை ஒவ்வொரு பெண்ணின் பிறப்புரிமை. பெண்களுக்கு பாதுகாப்பு மற்றும் ஆதரவு தரும் சட்டங்கள் உள்ளன.

### வீட்டுக்கொடுமையின் வடிவங்கள்

- பாலினக் கொடுமை (பலவந்தமான பாலினச் சேர்க்கை, ஆபாசத்திரைப்படங்களை பார்த்தல்)
- உடல் கொடுமை (உடலுக்குத் தீங்க அல்லது வலியை ஏற்படுத்தும் நடவடிக்கை)
- சொற்கொடுமை மற்றும் உணர்வை பாதிக்கும் கொடுமை (இழிவான பெயர்களை வைத்து அழைத்தல் அல்லது கிண்டல் செய்தல்)
- மனதை பாதிக்கும் கொடுமை (கொன்று விடுவதாக பயமுறுத்துதல், படிப்பதற்கு குழந்தைகளை அனுப்பாமல் இருத்தல், வேலைக்குச் செல்வதை நிறுத்துதல், பெண்ணுக்குப் பிடிக்காதவரை திருமணம் செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்துதல்.
- பொருளாதாரக் கொடுமை (பொருளாதார அல்லது நிதி ஆதாரங்களிலிருந்து விலக்குதல், பெண்களின் சொத்துக்களை பயன்படுத்துதல், அவர்களின் சொத்துக்களை விற்றல்)

### யாரிடம் புகார் தருவது :

வீட்டுக் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் காவல் அதிகாரி அல்லது நீதிப் பொறுப்பு வகிக்கும் முதல் வகுப்பு மாநகர நீதிபதியிடம் தனிப்பட்ட முறையிலோ /தொலைபேசி வாயிலாகவோ/மின்னஞ்சல் மூலமாகவோ புகார் தரலாம்.

இவ்வகையான புகார்கள் வீட்டுக்கொடுமை நடத்த பிறகு அல்லது நடந்துக்கொண்டிருக்கும் போதுத அல்லது நடக்கவிருக்கும் போது பதிவுசெய்யப்படலாம்.

SCERT TELANGANA

பாதிப்புக்குள்ளானவர் காயமடைந்தால் அவர் மருத்துவ சிகிச்சைக்காக அனுப்பப்பட்டு, பின்னர் காவல் நிலையத்திற்கும் நீதிபதிக்கும் அறிக்கை அனுப்ப வேண்டும்.

### பாலினக் கொடுமை மற்றும் வருத்துதல்

அண்மையில் மத்தியஅரசு பாலினத் தாக்குதல் மற்றும் கொடுமையைத் தடுப்பதற்கான அறிவுறுத்தல்களைப் பெற நீதிபதி J.S.வர்மா குழுவை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரையை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிற்குரிய இந்தியக் குடியரசுத் தலைவர் பிப்ரவரி 2, 2013ல் ஒரு ஆணையைப் பிறப்பித்தார். அவ்வாணையின் சில முக்கியமான கருத்துகள்.

- 20 ஆண்டுகள் குறைந்தபட்ச சிறைவாசம்.
- பாதிப்புக்குள்ளானவர்களிடமிருந்து புகார்களைக் பெற பெண்காவலர்களை நியமித்தல்.
- பாதிப்பிற்குள்ளானவர்கள் தனிப்பட்ட முறையில் காவல் அதிகாரிகளின் முன்வருகை தர வேண்டிய அவசியமில்லை.
- பெண்கள் மீது அமிலம் ஊற்றித்தாக்குதல் நடத்தினால் குற்றவாளிக்கு கடுமையான தண்டனையும் உண்டு.
- பாதிப்புக்குள்ளானவர்களின் வேண்டுதலுக்கிணங்க புகார் தரும்போது மற்றும் விசாரிக்கும் போது வீடியோ படம் எடுக்க வாய்ப்பு.

### லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றம்)

சட்டத்தின் முன் அனைவரும் சமம். எந்த ஒரு குடிமகனும் நிதிக்காரணங்கள் மற்றும் பிற பலவீனங்களுக்காக மட்டும் நீதியைப் பெறும் உரிமையை இழக்காமல் இருப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதே லோக் அதாலத். 1976ல் மேற்கொண்ட சட்டத்திருத்தத்தின்படி மத்திய அரசு 39(a) என்னும் சட்டப்பிரிவை இணைத்தது. இது நீதி உதவியைத் தருமாறு மாநில அரசுகளுக்கு வழிகாட்டுகிறது.

### நீதி உதவியைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் யார்?

- அட்டவணை வகுப்பினர் மற்றும் அட்டவணையிலுள்ள பழங்குடியினத்தைத் சேர்ந்த குடிமக்கள்.
- அநீதியான முறையில் ஆட்கடத்தல் வியாபாரத்தால் பாதிப்பிற்குள்ளானவர்கள், பிச்சைக்காரர்கள், பெண்கள், குழந்தைகள், மனவளர்ச்சிக் குன்றியவர்கள், மற்றும் மாற்றுத்திறனாளிகள்.
- இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பிற்குள்ளானவர்கள், விவசாய மற்றும் தொழிலக உழைப்பாளிகள்.
- ரூ.50,000த்தைை விட குறைவான ஆண்டுவருவாய் ஈட்டும் குடிமக்கள்.

ஒருவர் இந்த உதவியைப்பெற மாவட்ட நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தில் நீதிச் சேவை அதிகாரியிடம் விண்ணப்பிக்கலாம். புகார் தருபவரும், புகார் சுமத்தப்படுபவர் இருவரும் நீதி உதவியைப் பெற தகுதியுடையவர்களாவர். மேலே குறிப்பிடப்பட்ட அனைத்துச் சட்டங்கள் மூலம் பெண்குழந்தைகள், வாலிப வயதுப்பெண்கள், மகளிர் பாதுகாப்பினைப் பெறலாம்.

### நீதி உதவியைப் பெறும் வழிமுறை

- வழக்கறிஞரால் இலவசமாக நீதி அறிவுரை தரப்படுகிறது.
- வழக்கை ஆராய்ந்தபின், மற்றும் தேவைப்பட்டால் புகார்களின்பேரில் வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குகளை எடுத்து வாதிடலாம்.
- நீதிமன்றத்தின் செலவுகள் மற்றும் நீதிமன்றத்திற்கு செலுத்தும் தொகையையும் உதவியாகப் பெறலாம்.

SCERT TELANGANA

● நீதி உதவியை வேண்டுபவர்களுக்கு தீர்ப்பின் நகல் படிவங்கள் இலவசமாக வழங்கப்படும்.

இச்சட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்த முழுமையான புரிந்துகொள்ளுதலும் விழிப்புணர்வும் தேவைப்படுகிறது. அதன் பின்னர் மட்டுமே மனித உரிமைகளின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு அவற்றை நாம் அனுபவித்து மகிழமுடியும்.

## முக்கியச் சொற்கள்

1. வரதட்சணை
2. வீட்டுக்கொடுமை
3. லோக் அதாலத்
4. பாலினத்தாக்குதல்
5. கட்டாயப்படுத்தப்பட்ட வேசித்தொழில்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் விளைவுகள் யாவை?(AS1)
2. வீட்டுக்கொடுமையானது சாதாரண நடைமுறையாக ஏன் மாறிவிட்டது? காரணங்களைக் கண்டறியவும்.(AS1)
3. சிறுமியர் மற்றும் மகளிர் பற்றிய பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி நீ படித்திருக்கிறாய். உங்கள் ஊர்/நகரத்தில் இதுபோன்ற பிரச்சனைகள் ஏதேனும் நீ பார்த்திருக்கிறாயா? பார்த்திருந்தால் அதைத் தீர்க்க என்ன செய்யவேண்டும்?(AS4)
4. அரசாங்கத்ததால் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றை சிறந்த முறையில் செயல்படுத்த நீ கூறும் அறிவுரைகள் யாவை?(AS4)
5. பெண்கள் எதிர்கொள்ளும் சாதாரணப் பிரச்சனைகள் குறித்து ஒரு கட்டுரை எழுது?(AS6)
6. நீ ஒரு தாசில்தார் என வைத்துக்கொள். குழந்தைத் திருமணங்களை நீ எவ்வாறு தடுப்பாய்?(AS6)
7. பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளை புரிந்து கொள்வதாக ஒரு கைபிரதியை தயாரியுங்கள்.(AS6)
8. பக்கம் 269ல் பாலினக் கொடுமை மற்றும் வருத்துதல் தலைப்பில் உள்ள பத்தியை படித்து உன் கருத்தை கூறு.(AS2)

**கலந்துரையாடல் :**

**1. உங்களுடைய பகுதியில் 18 வயதுக்குட்பட்ட பெண்ணுக்கும் 21 வயதுக்குட்பட்ட ஆணுக்கும் திருமணம் நடந்ததை கண்டீர்களா? அது அப்பெண்ணை எவ்வாறு பாதிக்கும் என கலந்துரையாடுக. நீங்கள் குழந்தை திருமணத்தை ஆதரிக்கிறீர்களா? ஏன்? இதை தடுக்கும் வழிமுறை யாது?**

**2. வீட்டில் நடக்கும் சிறுசிறு சண்டைகளைப்பற்றி கலந்துரையாடுக. இச்சண்டைகள் குடும்ப உறுப்பினர்களை எவ்வாறு பாதிக்கிறது? இச்சண்டைகளை நீ எவ்வாறு தடுப்பாய்?**

**3. அதிக மக்கள் தற்போது குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். அவர்களுடைய குடும்ப நிலையைப்பற்றி கலந்துரையாடுக. பெரியோரின் குடிப்பழக்கம் குழந்தைகளை எவ்வாறு பாதிக்கிறது? நீ அவ்வாறான குடும்பத்திலிருந்தால் அச்சூழ்நிலையை எவ்வாறு எதிர்கொள்வாய்?**

## செயல்திட்டம்

நீதிமன்ற நீதி உதவியைப் பெறுவதில், ஏழைகளுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள சலுகைகள் யாவை? ஒரு வழக்கறிஞரை அணுகி அவரிடமிருந்து தகவல்களைச் சேகரி?

SCERT TELANGANA

பாடம் 21

# பேரிடர் மேலாண்மை

(DISASTER MANAGEMENT)

**மனிதன் உண்டாக்கும் பேரிடர்**

இயற்கை ஆபத்துகள் எந்த அளவிற்கு இயற்கையானவை? நீ இந்த கேள்வியைக் குறித்து எப்போதாகிலும் பகுத்தாராய முயற்சித்ததுண்டா? மும்பையில் ஏற்பட்ட வெள்ளத்தை நாம் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். அதிகமான உயிரிழப்பிற்கும், சொத்து இழப்பிற்கும் இட்டுச் சென்றது எது? இந்த பெருத்த நாசத்தை ஏற்படுத்தியது பலத்த மழை மட்டும்தானா? இல்லை, இந்த பெருத்த நாசத்திற்கு பல்வேறு காரணங்களும் உள்ளன. அவற்றில் சிலவற்றை பட்டியலிடுவோம்.

அ. திட்டமிடப்படாத நகர வளர்ச்சி

ஆ. முறையான வடிகால் வசதியின்மை

இ. மக்கள்தொகை பெருக்கம்

இக்காரணங்களை கவனித்தோமானால், இவையனைத்தும் மனிதன் உண்டாக்கியவையே. மேலும் இவற்றை நாம் பொறுப்புடன் கவனித்துக் கொண்டால் இத்தகைய பேரிடர்களை தடுத்துநிறுத்த முடியும். ஆகவேதான், இயற்கை ஆபத்துகள் அனைத்தும் இயற்கையானவை அல்ல, மனிதர்கள் அவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

மனிதனின் அலட்சியத்தினாலோ அல்லது யாராவது ஒரு தனிநபர் அல்லது ஒரு கூட்டத்தாலோ ஏற்படுகிற பேரிடர்களை மனிதன் உண்டாக்கிய பேரிடர்கள என அழைக்கலாம். மனிதனுக்கு துன்பம், உயிரிழப்பு மற்றும் நீண்டகாலத்திற்கு ஒரு நாட்டின் பொருளாதார உற்பத்தி திறன் பாதிப்பு ஆகியவற்றில் இத்தகைய பேரிடர்கள் கொண்டுபோய் விடுகின்றன.

மனிதன் ஏற்படுத்தும் வெவ்வேறு வகையான பேரிடர்களை நாம் இப்போது பார்ப்போம்.

## விபத்துச்சார்ந்த பேரிடர்கள்

சாலை, ரயில் மற்றும் விமான விபத்துக்கள் நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் பேரிடர்களில் ஒருசில மேலான தொடர்பிற்காக சாலைப்போக்குவரத்தில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சியும், விரிவாக்கமும் மற்றும் மோட்டார் வாகனங்களின் அதிகரிப்பும் பயணிகள் மற்றும் சரக்குகளின் நடமாட்டம் மிக கணிசமான அளவுக்கு உயர வழிவகுத்தது. சாலைவிபத்துக்கள் மற்றும் துர்மரணங்களின் எண்ணிக்கை அண்மைகாலமாக உயர்ந்து வருகின்றன.

இந்தியாவில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் எண்பதாயிரம் மக்கள் சாலை விபத்துக்களில் உயிர் இழக்கின்றனர். இது உலகம் முழுவதிலும் ஏற்படும் துர்மரணங்களில் பதிமூன்று சதவீதமாகும். சாலை விபத்துகளில் உயிரிழக்கும் மக்களில் பாதிபேர் 15லிருந்து 45வயதுக்குட்பட்ட இளைஞர்கள். அதிலும் அவர்கள் தம் குடும்பத்தைக் காப்பாற்றுபவராய் இருக்கின்றனர். வாகனவிபத்துகள் பெரும்பாலும் நடைபெற காரணம் அஜாக்கிரதை, ஓய்வின்மை, அதிவேகம், போக்குவரத்து விதிகளை மீறுதல், குடித்துவிட்டு வாகனத்தை ஓட்டுதல், வாகனத்தை சரிவர பராமரிக்காமை, மோசமான வானிலை ஆகியவவையே. இவையனைத்தும் விபத்துகளின் எண்ணிக்கையையும், சாலைதுர்மணரங்களையும் அதிகரிக்கச் செய்கின்றன. விபத்துக்களால் 3%க்கும் அதிகமான மொத்த உள்நாட்டு உற்பத்தி கறைந்ததென 2000ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டது. எனவே உயிர் பிழைத்திருப்பதற்கான அடிப்படைத் திறன்கள் எவ்வளவு அவசியமோ அந்த அளவிற்கு சாலை பாதுகாப்புக் கல்வியும் அவசியம். சாலை பாதுகாப்பு வாரம் என்பது 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்தியா முழுவதும்

SCERT TELANGANA

அனுசரிக்கப்பட்டது. விபத்து அற்ற சாலை பாதுகாப்பு என்பது சாலைபாதுகாப்பு வாரத்தின் முக்கிய விவாத விஷயமாயிருந்தது.

நீங்கள் எந்த வயதுடையவராக இருந்தாலும் சாலை போக்குவரத்து விதிமுறைகளை தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். அவை உங்களுடைய மற்றும் உங்களை நேசிப்போருக்கும் பாதுகாப்பானவை.

| செய்யக்கூடியவை | செய்யக்கூடாதவை |
|---|---|
| நீ சட்டப்படி ஓட்டுனர் உரிமம் பெற்றும், 18வயது நிரம்பியுமிருப்பின் வாகனம் ஓட்டலாம் | சாலையில் செல்லும் போது பதற்றப்படாதே சாலையில் ஓடாதே |
| எப்பொழுதும் நடைப்பாதையிலேயே நடந்துச் செல். நடைப்பாதை இல்லாத சாலைகளில் செல்லும் போது சாலையின் இடது பக்கமாக நடந்துச்செல் | வளைவிலோ/மூலையிலோ எப்போதும் சாலையை கடக்காதே. ஏனெனில் வாகனம் ஓட்டுபவர் திரும்பும் போது ஓரமாக உடனே கவனிக்க இயலாமல் போகலாம். |
| சாலை குறுக்காக வரிப்பட்டைகோடுகள் போடப்பட்டுள்ள இத்திலும், போக்குவரத்து, சைகைகள் உள்ள இடத்திலும் மட்டும் சாலையைக் கடக்கவும். அத்தகைய வசதிகள் இல்லாத இடங்களில் பாதுகாப்பான இடத்தைப் பார்த்து அங்கு நடக்கவும். மேலும் கடப்பதற்கு முன்பாக இருபுறமும் கவனிக்கவும் | பேருந்து அல்லது ஆட்டோ ரிக்ஷாவைப் பிடிப்பதற்காக ஓடாதே, ஏனெனில் நீ வழுக்கி கீழே விழ நேரிடலாம். |
| சாலை சைகைகளை குறித்து தெரிந்துக் கொண்டு, அவற்றை மதித்துநடக்கவும். | பள்ளிக்குரிய பேருந்தைத் தவிர வேறு பேருந்தில் ஏறாதே. |
| 5நிமிடங்களுக்கு முன்னதாகவே பேருந்து நிறுத்தத்தில் இரு. பேருந்து வந்து நின்றபிறகு ஏறு. தள்ளுமுள்ளு இல்லாமல் வரிசைக் கிரமத்தைக் கடைப்பிடி. | பேருந்துள்ளே சத்தமிடாதே, கூச்சலிடாதே ஏனெனில் அது ஓட்டுநரின் கவனத்தை சிதறடிக்கும், திசைதிருப்பும். |
| ஓடும் பேருந்தில் நின்றுக்கொண்டே பயணம் செய்ய வேண்டியிருந்தால் பேருந்திலுள்ள கம்பியை உறுதியாக பிடித்துக்கொள். | பேருந்து படிக்கட்டில் நின்றோ அல்லது உட்கார்ந்தோ பயணம் செய்யாதே. |
| நீ இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றால் தலைக்கவசத்தை அணிந்துக்கொள். அதனால் உனது தலை பாதுகாக்கப்படும். | வாகனம் ஓடும் போதோ அல்லது நின்றுக் கொண்டிருக்கும் போதோ நீ உன்னுடைய உடலுறுப்புக்களை வெளியே நீட்டாதே |
| பேருந்தை விட்டு வெளியேறும் போது, உனது ஆடையின் முடிச்சுகயிறுகள் மற்றும் புத்தகப் பையின் வளையங்கள் கதவிலோ அல்லது கைப்பிடியிலோ, மாட்டிக்கொள்ளாதவாறு கவனமுடன் இரு. வாகனத்தின் முன்புறமாக மட்டும் கடந்துச்செல். பின்புறமாக கடக்காதே. | நீ ஏதாவது ஒரு பொருளை பேருந்துக்கடியிலோ அல்லது அருகிலோ போட்டுவிட்டால் பேருந்து ஓட்டுனருக்கு தெரிவி. எப்பொழுதும் அதை எடுக்க முயற்சிக்காதே. ஏனெனில் ஓட்டுநர் உன்னைக் கவனிக்காமல் ஓட்டிச் செல்ல முற்படலாம். |

கீழ்காணும் மக்கள் வாகனங்களை ஓட்டுதல் கூடாது :

- மது அருந்தியிருந்தால்
- தங்களுடைய செயற்பாடுகளை பாதிக்கும் மருந்தை அல்லது போதைப்பொருளை உட்கொண்டிருந்தால்.
- களைப்படைத்திருந்தால், ஏனெனில் களைப்பானது ஓட்டும் திறனையும், செயலாக்கும் காலத்தையும் பாதிக்கிறது.

SCERT TELANGANA

- உடல் நலமற்றோ அல்லது காயமுற்றோ இருப்பின்
- கோபமுடன் அல்லது மன அமைதியற்று இருப்பின்
- கைப்பேசியில் பேசிக்கொண்டு இருப்பின்.

மனித வாழ்வு காப்பற்றப்பட வேண்டியது மிக முக்கியமானது என்பதில் இரு வேறுகருத்துக்கு இடமில்லை. நீ ஒரு மாணவனாக அல்லது தன்னார்வத்தொண்டனாக சாலை பாதுகாப்பைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதின் மூலம் இறப்பு எண்ணிக்கையை குறைக்கும் அற்புதங்களை நிகழ்த்தலாம். விபத்தில் சிக்கிய ஒருவரை நீ காண நேரிட்டால், காவலர்களின் உதவியையோ அல்லது உள்ளூர் மக்களின் உதவியை நாடலாம், மேலும் தேவைப்பட்டால் மருத்துவ உதவியை கோரலாம்.

## இரயில் விபத்துகள்

ரயில் போக்குவரத்து அக்காலத்தில் பாதுகாப்பானதாகக் காணப்பட்டது. ஏனெனில் மெதுவான வேகம், குறைந்த தூரபயணம், குறைவான போக்குவரத்து ஆகியவையே. உலகில் மிகப்பரந்த ரயில் மார்க்கங்கள், ரயில் விபத்துக்களை பன்மடங்கு அதிகரிக்கச் செய்துள்ளது. மிகச் சாதாரண வகையான ரயில் விபத்துக்கள் தடம் புரளுதலால் ஏற்படுபவையாக உள்ளன. சரியான பராமரிப்பின்மை, மனிததவறுகள் அல்லது நாசவேலை ஆகிய காரணங்களால் இவ்வகையான ரயில் விபத்துக்கள் நிகழ்கின்றன. பெருத்த உயிரிழப்பிற்கும், பலர் காயமடைவதற்கும், மேலும் பலர் உடல் ஊனமுறவும் இது காரணமாகிறது. எளிதில் தீபற்றக்கூடிய நிலக்கரி, எண்ணெய் வகைகள் ஆகியவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கொண்டுச்செல்வதும் விபத்துக்கள் நேரிட வழிவகுக்கிறது.

மோசமான பராமரிப்பு காரணத்தால் பீகாரில் பகல்பூர் மாவட்டத்தில் 150ஆண்டுகால பழமையான சிதலமடைந்த உல்டாபூர் மேம்பாலமானது, அதன்கீழே சென்றுக்கொண்டிருந்த ஹவுரா-ஜமல்பூர் அதிவேக விரைவு பயணிகள் ரயில் மீது இடிந்து விழுந்தது. 2006 டிசம்பர் 1ந்தேதி சனிக்கிழமை காலை நடைபெற்ற இச்சம்பவத்தில் குறைந்தது 35பேர் கொல்லப்பட்டனர்.

இத்தகைய அதிர்ச்சியூட்டக்கூடிய உண்மை சம்பவங்களை அவ்வப்பொழுது நாம் கேள்விப்படுகிறோம். இத்தகைய கோரவிபத்துக்களைக் குறைக்க, எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் அடையாளம் காண முயற்சிப்போம்.




படம் 23.1: ரயில் விபத்துக்கள்

## செய்யக்கூடியவை

- ரயில் தண்டவாளத்தை கடக்குமிடங்களில் சிக்னலையும் தடுப்பையும் கவனிக்கவும்.

- ஆளில்லா கடக்குமிடங்களாக இருந்தால், பாதையைக் கடக்கும் முன்பு வாகனத்தை விட்டு கீழே இறங்கி பாதையின் இருபுறமும் கவனிக்கவும்.

TELANGANA

### செய்யக்கூடாதவை

- சிக்னல் தடுப்புகளுக்கு கீழே குனிந்துச் சென்று ரயில் தண்டவாளத்தை கடக்காதே.
- பாலத்தின் மீதோ அல்லது குகைப் பாதையிலோ ரயிலை நிறுத்தாதே.
- தீ பிடிக்கும் பொருட்களை எடுத்துச் செல்லாதே.
- ஓடும் வண்டியில் கதவருகே நிற்காதே, எட்டிப்பார்க்காதே.
- வண்டி ஓடிக்கொண்டிருக்கும் போதோ அல்லது நின்றுக்கொண்டிருக்கும் போதோ உனது உடல் உறுப்புகளை வெளியே நீட்டாதே
- வண்டியின் உள்ளே புகைப்பிடிக்காதே. வேறு யாரேனும் புகைத்துக் கொண்டிருந்தால் அவர்களை அவ்வாறு செய்ய வேண்டாமென கேட்டுக்கொள்ளலாம்.
- ரயில் பாதைகளுக்கு குறுக்காக செல்லாதே. நடைமேடைகளுக்கு மாறிச் செல்ல நடைமேம்பாலத்தை பயன்படுத்திக்கொள்.
- சந்தேகத்திற்கிடமான பொருட்களைத் தொடாதே, ரயில் பாதையின்மீது அல்லது ரயில்கள் நிறுத்தி வைக்குமிடங்களில் எப்போதும் விளையாடாதே. சரக்கு ரயில் வண்டி திடீரென எதிர்பாராத விதமாக நகர்ந்து செல்லக்கூடும்.
- வண்டியின் மீது எதையும் வீசி எறியாதே. அவ்வாறு வண்டியின் மீது வீசியெறிந்த பொருட்களால் பலத்தகாயம் மற்றும் மரணங்கள் கூட ஏற்பட்டுள்ளன.

### விமான விபத்துக்கள்

ஏர் இந்தியா விமானம் 182 எண் கொண்ட கனிஷ்கா, 1985 ஜூன் 23 அன்று ஒரு வெடிகுண்டால் நடுவழியில் வெடித்து சிதறியது. மாண்ட்ரீல்-லண்டன்-டில்லி-பம்பாய் (மும்பாய்) ஆகிய நகரங்களை இணைக்கும் இந்த விமானமானது தனது முதல் எடுப்பிலேயே அயர்லாந்து கடற்கரைக்கு அப்பால் சென்றுக் கொண்டிருக்கும் போது பெரும் சத்தத்துடன் வெடித்து சிதறியது. இந்த விமானம் அட்லாண்டிக் பெருங்கடலில் நொறுங்கி விழுந்தது. அதில் இருந்த 307 பயணிகளும் 22 பணியாட்களும் இறந்து போயினர்.

இந்தியா உட்பட உலகம் முழுவதும் விமான விபத்துக்கள் அடிக்கடி நடந்துக் கொண்டிருக்கின்றன. விமானங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு, தொழில்நுட்ப பிரச்சனைகள், தீ, தரையிறங்குதல் மற்றும் மேலெழுவதற்கேற்ற நிலைமை, விமானம் பறப்பதற்கேற்ற சுற்றுச்சூழல் (மலைத்தொடர் பிரதேசங்கள், அடிக்கடி ஏற்படும் புயல்கள்), விமானக்கடத்தல், வெடிகுண்டு தாக்குதல் போன்ற காரணிகள் விமானங்களில் செல்லும் பயணிகளின் பாதுகாப்பை நிர்ணயிக்கும் பல காரணிகளாகும்.

கீழ்வருவன நாம் எடுக்கக்கூடிய சில பாதுகாப்பு நடவடிக்கைகளாகும் :

விமானத்தில் ஏறும் போது நீ மனதில் கொள்ளவேண்டியவைகள்:

- விமான பணியாட்கள் செய்துகாண்பிக்கும் பாதுகாப்பைக் குறித்த செயல்முறை விளக்கத்தை கூர்ந்து கவனி.
- இருக்கைப்பையில் வைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு விளக்க அட்டையை கவனமாக படி.



படம் 23.2: விமான விபத்து

SCERT TELANGANA

- பாதுகாப்புக்கான அவசரக்கால வெளியேறும் வழி எங்கே அமைந்துள்ளதென்பதையும், அவசரக்காலத்தில் அதைத்திறப்பது எவ்வாறு என்பதையும் அறிந்துக்கொள்.
- நீ இருக்கையில் இருக்கும் போது எப்போதும் இருக்கை பெல்டை கட்டிவைத்தப்படி இரு.

**விமான விபத்தில் நீ சிக்கிக்கொள்ள நேர்ந்தால், கிழ்கண்டவற்றை நினைவில் கொள்ளவேண்டும்:**

- அமைதியாய் இரு. விமான பணியாட்கள் கூறுவதைக் கேட்டு அதன்படி நடந்துகொள். விமான பணியாட்களின் முக்கிய வேலை உனக்கு உதவிபுரிவதே.
- அவசரக்கால வெளியேறும் வழியை நீ திறக்க முற்படுவதற்கு முன், ஜன்னலுக்கு வெளியே கூர்ந்துப்பார். கதவுக்கு வெளியே தீயை கண்டால், நீ அதைத்திறக்காதே. ஏனெனில் தீ விமானத்தின் அறைக்குள்ளே பரவிவிடும். வேறொரு வெளியேறும் வழியை உபயோகிக்க முயற்சிசெய்.
- புகை மேலே செல்லும் நினைவில் கொள். ஆகவே, விமானத்தின் அறைக்குள்ளே புகை இருப்பின் கீழே இறங்க முயற்சி செய். தரையில் பதிக்கப்பட்டுள்ள அவசரக்கால விளக்குகளின் பாதையைப் பின்பற்றிச்செல். அவை வெளியேறும் வழிக்கு இட்டுச்செல்லும். உன்னிடம் சிறிய துணி இருந்தால், அதைக்கொண்டு உனது மூக்கையும், வாயையும் பொத்திக்கொள்.

## தீ விபத்து

தமிழ்நாட்டைச் சேர்ந்த கும்பகோணத்தில் ஒரு பள்ளியில் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்தானது, நாட்டிலுள்ள பள்ளிகளின் பாதுகாப்பைக் குறித்து வாதங்களும், விவாதங்களும் அனல பறக்கச்செய்தது. 93 அப்பாவி குழந்தைகள் உடல்கருகி இறந்தன. இத்தீவிபத்திற்கு முக்கிய காரணங்கள், தீவிபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டுமென்ற விழிப்புணர்வு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே இல்லாமை, தயார்நிலையில் இல்லாமை, வகுப்பறைக்கு அருகில் சமையற்கூடம் இருந்தமை ஆகியவையே. எது எப்படியிருப்பினும் இது போன்ற நிகழ்வுகள் ஒன்றும் புதியவை அல்ல.

மனிதனின் அலட்சியத்தினாலும், விழிப்புணர்வு இல்லாமையாலும் உயிர் மற்றும் உடைமைகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறதென்பதையே இத்தகைய நிகழ்வுகள் காட்டுகின்றன.



படம் 23.3: தீ விபத்து

தீ என்பது செந்தணல் அல்லது புகையுடன் கூடிய ஜுவாலை வடிவில் தீவிரமான வெப்பத்துடனும், ஒளியுடனும் பிரகாசமாக கொழுந்து விட்டெரியும் ஒரு விசித்திர காட்சியாகும். ஆண்டுதோறும் தீ விபத்து சம்பந்தப்பட்ட நிகழ்வுகளால் ஏறக்குறைய 30000 விலைமதிப்பற்ற உயிர்களை இழந்துவிடுகிறோம். வெப்பம், எரிபொருள் மற்றும பிராணவாயு ஆகிய மூன்று பொருட்களின் கூட்டே தீ ஏற்பட காரணமாகிறது. இவற்றில் ஏதேனும் ஒன்றை கிடைப்பதை துண்டிப்பதின் மூலம் நாம் தீயை கட்டுப்படுத்தலாம்.

### தீவிபத்து ஏற்படாமலிருக்க செய்யவேண்டியவை, செய்யக்கூடாதவை.

#### செய்யக்கூடியவை

- புகையையோ அல்லது ஜுவாலையையோ நீ கண்டால் உடனே அபாயக்குரலை எழுப்பு
- எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு விரைவாக கட்டிடத்தை விட்டு வெளியேறு. முடிந்தால் உன் உடல் முழுவதையும் போர்த்தி மூடிக்கொள். நீ தப்பிச்செல்லும் நடைபாதை வழிகள் தடையின்றியிருக்குமாறு பார்த்துக்கொள்.
- தொலைப்பேசியை எடுத்து 101 எண்ணிற்கு பேசி தீயணைக்கும் படையினரை அழைக்கவும் அவர்கள் உன் இடத்தை சீக்கிரம் அடைய, உன் முகவரியை பதற்றமின்றி மெதுவாக தெளிவாக சொல்.
- புகை சூழ்ந்திருப்பின், தரையில் தவழவும், ஏனெனில் அங்குதான் காற்று சுத்தமாய் இருக்கும். வெப்பக்காற்று மேலெழும். நீதப்பிக்கும் வழியானது தடைப்பட்டிருந்தால், ஜன்னல் உள்ள ஒரு அறையினுள்ளேச் சென்று புகை உள்ளே நுழையாதவாறு கதவைமூடி, வெளிப்புற ஜன்னலை திறந்து உதவிக்கு அழைக்கவும்.
- மூடியக்கதவு தீ பரவுவதை கட்டுப்படுத்தும்,காலி செய்யும் சமயத்தில் நாம் கதவுகளை மூடிவிடவேண்டியது அவசியம்.
- மின்சாதனங்கள் அனைத்தையும் அணைத்துவிடு. முக்கிய மின் பொத்தானை அணைத்துவிடுவது சாலச்சிறந்தது.
- தேய்ந்துபோன அல்லது நாடா சுற்றிய மின்ஒயர்களை சரிப்பார்க்கவும். ஏனெனில் இவை அபாயகரமானவை. அவற்றை நீ மாற்றவேண்டும். மின்கம்பிகள் சொருகுமிடங்கள் (பிளக்பாயிண்டுகள்) மிகத் தாழ்வாக அமைக்கபட்டிருந்தால் அவற்றை நாடா (டேப்) கொண்டுமூடவேண்டும் குறிப்பாக ஆரம்பப்பள்ளிகளில் செய்ய வேண்டும். ஏனெனில் பள்ளிக்குழந்தைகள் அவற்றில் விரல்களை நுழைத்து, அதுவிபத்தில் கொண்டுபோய் விடும்.
- பள்ளிகளில் ஆபத்தான மின்சார ஒயர்களின்அமைப்பை விழிப்புடன் கண்காணித்திரு. நனையக்கூடிய சுவர்கள் இருப்பின் அவற்றைஉடனடியாக பழுதுபார்த்து ஒயர்களை மாற்ற வேண்டும்.

#### செய்யக்கூடாதவை

- நீ விளையாட்டு பொம்மைகளுக்காகவோ நீ அல்லது செல்லப்பிராணிகளுக்காகவோ எரியும் கட்டிடத்துள்ளே செல்லாதே. தீயை அணைப்பவர்கள் உன்னை விட மிக விரைவாக வீட்டில் உள்ள பொருட்களை தேடி கொடுப்பர்.
- அலமாரியிலோ அல்லது கட்டிலுக்கு அடியிலோ எப்பொழுதும் மறைந்துகொள்ளாதே. ஏனெனில் நீ அபாயக் குரலை எழுப்பி வெளியேற வேண்டும்.
- மின்சார ஒயர்களை தரைவிரிப்புகளுக்கு அல்லது மேஜை விரிப்புகளுக்கு அடியில் அமைக்கக்கூடாது, ஏனெனில் அங்கே அவை தேய்ந்து போகக்கூடும். இவற்றை அதிகமாக பள்ளியின் நிர்வாகப்பகுதியில் காணலாம்.
- திரைச்சீலைகள் மற்றும் எளிதில் தீபற்றும் பொருட்களுக்கு அருகில் மின் விளக்குகள் அமைக்கப்படக்கூடாது.
- பரிசோதனைக்கூடங்களில் எளிதில் தீப்பற்றும் பொருட்களான கரைசல்களை (வஜ்ஜிரம், எரோசால்ஸ் போன்றவை) அல்லது பாரபின் மெழுகு ஆகியவற்றை நேரடி சூரிய ஒளியிலோ அல்லது வெப்பப்பகுதியிலோ வைக்காதே. தீப்பற்றும் பொருட்களை நீ பயன்படுத்த நேர்ந்தால், அந்த அறையானது நல்ல காற்றோட்ட வசதியுடையது என்பதை உறுதிப்படுத்திக்கொள், மேலும் அதன் அருகாமையில் தீ பற்றவைக்காதே. தீப்பற்றும் திரவங்களை அகற்றிவிடு. குப்பைகூளங்களை தினமும், தகுந்த முறையில் அகற்றிவிடு.

SCERT TELANGANA

## செயல்

அருகாமையிலுள்ள தீயணைப்பு நிலையங்களிலிருந்து தீவிபத்துக்களைக் குறைக்க நீ பின்பற்றக்கூடிய செய்யவேண்டியவை **செய்யக்கூடாதவை** குறித்தும், விழிப்புணர்வைக் குறித்தும் அறிந்துக்கொள்.

### தீவிரவாத அச்சுறுத்தல்

மக்களுக்கிடையே, சமூகங்களுக்கிடையே அல்லது நாடுகளுக்கிடையேயான பிரச்சனைகளின் அமைதி தீர்வுக்கு, அகிம்சை அல்லது வன்முறையின்மையும் உண்மையும் சிறந்த கருவிகளென்று மகாத்மா காந்தியடிகள் போதித்தார். இத்தனை வருடங்களாக அறிவியலும், தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்ததற்கேற்ப, அதிகாரம் மற்றும் செல்வம் ஆகியவற்றின் மீது மனிதனுக்கிருக்கும் இயற்கையான பேராசையும், அத்துடன் உலகின் பல்வேறு பிரிவு மக்களிடையே பகைமையும் அதிகரித்தன. உலகம் முழுவதும் உள்ள மக்கள் ஒன்றாக இணைந்து ஒருவர்க்கொருவர் இசைந்து வாழும் உலகளாவிய சமூகம் என்பது வளர்ச்சியின் விளைவாக ஏற்படுமென்று எதிர்ப்பார்த்ததற்கு மாறாக, போரும், உள்நாட்டுகுழப்பங்களும் இவ்வுலகை பிடித்திருக்கின்றன. இது அதிக அளவிலான மக்களின் பெருந்துன்பத்திற்கு காரணமாயுள்ளது.



*படம் 23.4: மும்பை தாஜ் ஓட்டலின் மீது தீவிரவாதிகளின் தாக்குதல்*

இந்தியா உட்பட உலகின் சில குறிப்பிட்ட பகுதிகளில் தீவிரவாதம் என்பது சாதாரணமான ஒன்றாகிவிட்டது. இப்பகுதிகளில் உள்ள குழந்தைகள், தாக்குதல் மற்றும் வன்முறைக்குறித்து நிரந்தர பயத்தில் வாழ்கின்றனர். பலசமயங்களில் அவர்கள் பள்ளிக்கு செல்வதில்லை. மேலும் அவர்கள் இயல்பு வாழ்வை மேற்கொள்ள இயலவில்லை.

தீவிரவாதிகள் உனது பகுதியைத் தாக்கினால், நீ செய்யவேண்டியவைகள் இங்கே தரப்பட்டுள்ளன.

- முதலில் அமைதியுடனும், நிதானத்துடனும் இரு. பொறுமையுடன் இரு.
- உள்ளூர் அவசரக்கால அரசு அதிகாரிகளின் அறிவுரையை பின்பற்று.
- செய்திகளுக்காகவும், அரசு உத்தரவுகளுக்காகவும் வானொலியையோ அல்லது தொலைக்காட்சியையோ கவனமாய் கேள்.
- பேரிடர் உனக்கு அருகாமையில் நடந்தால், காயமுற்றோரை காப்பாற்ற முயலவும். பலத்த காயமடைந்தவர்களுக்கு முதலுதவி அளித்து உதவி கிடைக்க வழிசெய்.
- தீங்கான பயன்பாடுகளை உடனே தடுத்து நிறுத்து.



படம் 23.5: ஐதராபாத்தில் உள்ள தில்சுக் நகர் குண்டு வெடிப்பு - 2013

- உனக்கு வேண்டியவர்களை (அ) வேண்டியவைகளை பத்திரப்படுத்திக்கொள்.
- உன் குடும்பத்தாருடன் தொடர்பு கொள். உயிருக்கு அச்சுறுத்தல் போன்ற அவசர சமயமாயிருந்தால் தவிர தொலைபேசியை மீண்டும் மீண்டும் உபயோகிக்காதே.
- உனது அண்டைவீட்டுக்காரர்களை குறிப்பாக வயதானவர்களையும், உடல் ஊனமுற்றோரையும் கவனத்தில் கொள்.

## செயல்

இந்தியாவில் சமீபத்தில் நடந்த தீவிரவாத செயல்களை அடையாளம் காண். இத்தகைய செயல்கள் குழந்தைகள் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடுமென்பதைக் குறித்து விவாதி.

**எச்சரிக்கையாய் இரு, விழிப்பாக இரு, மற்றும் பாதுகாப்பாக இரு.....**

1. சந்தேகப்படும்படி கிடக்கும் பைகள், கைப்பெட்டிகள் போன்றவைகளை பொது இடங்களிலோ அல்லது பொது போக்குவரத்து வாகனங்களிலோ நீ கண்டாய் எனில் காவல்துறைக்குத் தெரியப்படுத்து. ஏனெனில் அவை வெடிக்கும் உபாயத்தைக் கொண்டிருக்கலாம்.
2. தொலைபேசி எண் 100ல் காவல்துறைக்கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்புக்கொண்டு, அவர்களை அழைக்கவும், ஒவ்வொரு குடிமகனுக்கும் அவ்வாறு அழைக்க உரிமையுள்ளது.
3. காவல்துறைக்கு தகவல் அளித்தப்பிறகு, சந்தேகத்திற்கிடமான அப்பொருளின் மீது கவனம் வை, அதனின்று விலகி இருக்குமாறு மற்றவர்களுக்கும் எச்சரிக்கைச்செய்.
4. சந்தேகத்திற்குரிய நடத்தை கொண்டோரிடமும், நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனத்தைக்குறித்தும் விழிப்புடன் இரு.

எல்லாவற்றையும் காட்டிலும் அக்கறை கொள்ள வேண்டியது குடிமகனின் பாதுகாப்பையே. பாதுகாப்பைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு காவல் அமைப்புகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. காவல்துறையானது சில வகையான சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளது. அவை தீவிரவாதத்தை எதிர்த்து போராட நமக்கு உதவுகிறது. பாதுகாப்பான வாழ்க்கையை வாழ நமக்கு உதவிபுரிகிறது. அவற்றை கவனமுடன் படித்தறிந்து அதிலுள்ள தகவல்கள் மற்றும் வழிக்காட்டுதல்களை உன் வாழ்வில் பின்பற்றி நடக்க முயற்சிசெய்.

SCERT TELANGANA

## பெற்றோர்கள் கவனத்திற்கு

- அபாயகரமான நிகழ்ச்சிக்குப்பிறகு ஏற்படும் பின்விளைவுகளைப்பற்றி பெரியோர்கள், குழந்தைகளுக்கு கூறுவது அவசியம்.
- தீவிரவாதத்தைப்பற்றிய உண்மை மற்றும் பொய் பற்றி குழந்தைகளுக்கு தெரியப்படுத்துங்கள்.
- குழந்தைகள் மிகைப்படுத்தப்பட்ட செய்திகளை அறியாமல் உண்மையை மட்டும் அறிய பெரியோர்கள் உதவவேண்டும்.

## முக்கியச்சொற்கள்

1. உலகச்சமுதாயம்
2. தீவிரவாதம்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. இயற்கை ஆபத்துகள் பேரிடராக எவ்வாறு மாறுகிறதென்பதை விளக்குக.(AS1)
2. தீவிரவாதம் என்றால் என்ன? தீவிரவாதிகளின் நோக்கங்கள் யாவை?(AS1)
3. தீவிபத்துக்களைத் தவிர்க்க பின்பற்றப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவை?(AS1)
4. சாலை விபத்துக்களுக்கான முக்கிய காரணங்கள் யாவை? சாலை விபத்துக்களை நாம் எவ்வாறு குறைக்கலாம்?(AS1)
5. தீவிரவாத தாக்குதல்களால் சொத்துக்கள், உயிர்களின் இழப்பு ஏற்படுகிறது. தீவிரவாத செயல்களை முடிவுக்கு கொண்டுவர மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?(AS4)
6. ரயில் விபத்துக்களுக்கான காரணங்களை அடையாளம் காண்?(AS1)
7. உனது வீட்டிலும், பள்ளியிலும், கிராமத்திலும் அபாயத்தை ஏற்படுத்த கூடியவற்றை அடையாளம் காணுங்கள்.(AS4)
8. இந்திய வரைபடத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளான கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.(AS5)
   (அ) மும்பை (ஆ) ஐதராபாத் (இ) பாகில்பூர் (ஈ) கும்பகோணம் (உ) பெங்களூர்
9. உங்களுக்கு தெரிந்த விபத்து தொடர்பான பேரிடரை குறித்து எழுதுக.(AS6)
10. பக்கம் 275ல் உள்ள தீ விபத்து தலைப்பில் உள்ள பத்தியை படித்து உன் கருத்தை கூறுக.(AS2)

**நேர்காணல் :** சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவரை உன் வகுப்பறைக்கு வரவழைத்து அவர் விபத்தினால் அடைந்த பாதிப்புகள் மற்றும் அவர் மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகளையும் நேர்காணல் செய்.

## செயல்திட்டம்

1. உனது மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட மனிதன் உருவாக்கிய பேரிடர்களைக் குறித்து செய்தித்தாள்களிலிருந்தும் மற்றும் பத்திரிக்கைகளிலிருந்தும் தகவல்களை சேகரிக்கவும். இவ்வகை பேரிடர்களை தடுக்க நீ மேற்கொள்ளும் நடவடிக்கைகளைபட்டியலிடு.
2. தீவிரவாதத்தால் ஏற்பட்ட பல்வேறு இழப்புகளை பட்டியலிடவும்.

SCERT TELANGANA

பாடம்

# 22 போக்குவரத்து கல்வி

சந்ததேகமின்றி சக்கரத்தின் கண்டுபிடிப்பு பொருட்களைப் போலவே மக்களின் போக்குவரத்திலும் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கியது. மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், தொழில்மயமாக்கலாலும், நகரமயமாதலாலும், உலகமயமாதலாலும் வாகனப் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகரித்தது. எனவே நெரிசலை தவிர்த்து வாகனங்களை செல்லவிட முறையான ஒழுங்கமைப்பு தேவைப்படுகிறது. ஒழுங்குபடுத்துதல் என்பது சாலையைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றும்படிச் செய்ய வைத்தலாகும்.

### போக்குவரத்து என்றால் என்ன?

மின் கம்பியில் மின்சாரம் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதைப் போல சாலையில் ஏதேனும் ஒரு வாகனம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதை சாலைப் போக்குவரத்து என்பர்.

### போக்குவரத்துக் கல்வி என்றால் என்ன?

போக்குவரத்துக் சட்டங்களையும் விதிமுறைகளையும் தெளிவான மற்றும் எளிய முறையில் விவரிக்கும் கல்வியே போக்குவரத்துக் கல்வி. சாலையின் மீது விபத்தினை எப்போதாவது நீ பார்த்திருக்கிறாயா? அப்படியானால், அவர்கள் எவ்வாறு காயமடைந்தனர்? விபத்து ஏன் நிகழ்ந்தது என்பதைச் சிந்தித்துக்கூறு.

**விபத்தில் பலியானவர்கள் – வயது**

| வயது | உயிரிழப்புகள் | வயது | உயிரிழப்புகள் |
|---|---|---|---|
| 00-05 | 24 | 50-55 | 207 |
| 05-10 | 58 | 55-60 | 138 |
| 10-15 | 40 | 60-65 | 113 |
| 15-20 | 152 | 65-70 | 57 |
| 20-25 | 345 | 70-75 | 49 |
| 25-30 | 380 | 75-80 | 13 |
| 30-35 | 254 | 80-85 | 12 |
| 35-40 | 294 | 85-90 | 0 |
| 40-45 | 226 | 90-95 | 0 |
| 45-50 | 215 | 95-100 | 0 |

- எந்த வயதுக் குழுவில் அதிக **உயிரிழப்பு**களை நீ காண்கிறாய்? உன்னால் கூறமுடியுமா?
- 20-25 மற்றும் 25-30 வயதுக்குழுவில் எத்தனை **உயிரிழப்புகள்** நிகழ்ந்துள்ளன?

### போக்குவரத்துக் கல்வியின் தேவையும் முக்கியத்துவமும்


வாலிப வயது மக்கள் மிகவும் சுதந்திரமாக செயல்படுவதால் அவர்கள் அதிக பயணங்களை மேற்கொள்கின்றனர். குறிப்பாக குமரப்பருவத்தினர் சாலையை பயன்படுத்தும ஒரு முக்கிய குழுவினராவர். சாலை நிகழ்வுகள் தீவிரமான விபத்துகளுக்கும் இறப்புகளுக்கும் பெரிய காரணமாக உள்ளதை பலர் அறிவதில்லை. அனைத்து சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தெளிவாக கற்பிப்பது விபத்துகளை தவிர்ப்பதற்கு மிகவும் அவசியமாகும்.

SCERT TELANGANA

## போக்குவரத்து இடையூறுகள்

நீங்கள் காலையில் பள்ளிக்குச் செல்ல வேண்டும். நீங்கள் தாமதமாகச் சென்றால் வகுப்புகளை இழப்பீர்கள் மேலும் உங்கள் ஆசிரியரால் தண்டிக்கப்படுவீர்கள். நீங்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டால் என்ன செய்வீர்கள்.

**ஐதராபாத் மாநகரம் விபத்துக்குள்ளான வாகனங்கள்**




**மொத்த விபத்துகள் 2577**

போக்குவரத்து நெரிசலால் மாணவர்கள், ஊழியர்கள், கூலியாட்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். நடைபாதைகள் பாதசாரிகளுக்கு ஒரு வரமாகக் கருதப்படுகிறது. சில நேரங்களில் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் இவ்வழிகளில் தங்கள் வாகனங்களை ஓட்டுகின்றனர். வழி தவறிய விலங்குகள், பழங்கள் மற்றும் காய்கறிகளை விற்பவர்கள், தனியார் வாகனங்களான கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் போன்றவை வாகனங்களை நிறுத்தக் கூடாத பகுதிகளில் நிறுத்துதல் போன்றவை போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களாகும். மக்கள் தொகை அதிகரித்தாலும் வாகனங்களை அதிக அளவில் பயன்படுத்துவதாலும் சாலைகளில் போக்குவரத்தின் அளவு மிகவும் அதிகரித்துள்ளது. விபத்துகளை தவிர்க்க வேண்டுமெனில், ஒவ்வொருவரும் போக்குவரத்துச் சட்டங்களையும் விதிமுறைகளையும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

- உன் வகுப்பறையில் உள்ள நண்பர்களுடன் விபத்துக்குக் காரணமான வாகனங்களைப் பற்றி கலந்துரையாடு
- எவ்வகையான வாகனங்கள் விபத்துக்கு காரணமாக உள்ளனவென்று குற்றம் சுமத்தப்படுகின்றன? ஏன் என்று உன்னால் கூற முடியுமா?

## ஓட்டுநர் உரிமத்தின் தேவை

ஓட்டுநர் உரிமம் வைத்திருக்காத எந்த ஒரு ஆண்/பெண் மோட்டார் வாகனத்தை ஓட்டக்கூடாது.

## ஓட்டுநர் உரிமங்களின் வகைகள்

**1. வாகனம் ஓட்ட பயில்வோர் உரிமம் :** மோட்டார் வாகனங்களை ஓட்ட கற்றுக்கொள்ளும் போது வழங்கப்படும் 6 மாத காலம் வரை செல்லுபடியாகும் தற்காலிக உரிமம் இது.

**2. நிரந்தர ஓட்டுநர் உரிமம் :** கற்றுக்கொள்பவரின் உரிமம் பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிறகு, ஒருவர் நிலையான உரிமம் பெற தகுதிபெற்றவராகிறார்.

**வாகனம் ஓட்ட பயில்வோர் உரிமம் பெறத் தேவையான ஆவணங்கள்.**

- வாழ்விட ஆதாரம் (கீழ்கண்டவற்றின் கையொப்பமிட்ட நகல்கள்) குடும்ப/நியாயவிலைக் கடை அட்டை/பாஸ்போர்ட்/ஆதார் அட்டை/மின்கட்டண ரசீது/வரி ரசீது/ஆயுள் காப்பீட்டு திட்டம்.
- வயது ஆதாரம் (கீழ்கண்டவற்றின் சான்றொப்பமிட்ட நகல்கள்) பள்ளிச் சான்றிதழ்/பாஸ்போர்ட்/பிறப்பு சான்றிதழ்/ஆதார் அட்டை/வருமானவரியின் நிலையான கணக்கு எண் அட்டை

**சில முக்கியமான சட்டங்கள்:**

ஓட்டுநர் உரிமம் இன்றி வாகனத்தை ஓட்டுதல் ஒரு குற்றமாகும்.



SCERT TELANGANA

- 50 CCக்கு மேல் மோட்டார் வாகனங்களுக்கான வயது வரம்பு 18ஆண்டுகள்.
- நான்கு சக்கர வாகனங்களுக்கான வயது வரம்பு 25 ஆண்டுகள்.
- **ஒப்படைக்க வேண்டிய படிவங்கள் :** படிவம் 1, 1A, 2 மற்றும் 3 ஆகியவை குறிப்பிடப்பட்ட விவரங்களுடனும் பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களையும் ஒப்படைக்க வேண்டும். குறிப்பிட்ட தேர்வுகளில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரருக்கு வாகன பயில்வோர் உரிமம் வழங்கப்படுகிறது.

**நிரந்தர உரிமம் :** வாகனம் பயில்வோர் உரிமம் பெற்ற பிறகு மட்டுமே நிலையான உரிமம் வழங்கப்படும். ஒருவர் கற்றுக்கொள்பவரின் உரிமம் பெற்ற 30 நாட்களுக்குப் பிறகு நிலையான உரிமத்திற்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அவருக்கு வாகன பயில்வோர் உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 180 நாட்களுக்குள் நிலையான உரிமம் வழங்கப்படும். மிகவும் முக்கியமான விஷயம் என்னவென்றால் ஒருவர் போக்குவரத்துச் சட்டங்களையும் விதிமுறைகளையும் நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

- ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பது ஏன் கட்டாயமாக்கப்பட்டுள்ளது?

## குடித்துவிட்டு ஓட்டுதல் :

இருபத்தெட்டு வயதான முகேஷ் மதுபானம் அருந்தும் நண்பர் குழுவுடன் வார இறுதியில் மதுபானக் கடைக்குச் சென்று விருந்தில் கலந்து கொள்வது வழக்கம். ஆனால் விருந்து முடிந்தபின், வீட்டிற்குத் திரும்புவதைப் பற்றி கவலைப்படுவார். தெரு மூலைகளில் போக்குவரத்துக் காவலர்களைக் கண்டவுடனே பயத்தால் குலைநடுங்கிப் போவார். இவ்வாறு நடுங்குவது முகேஷ் மட்டுமல்ல. பல குடிகாரர்களும் மதுவிருந்துக்குச் செல்லும் முன் இரண்டுதரம் யோசிக்கத் தொடங்கியுள்ளனர்.

**'சுவாச ஆய்வுக் கருவி' வேலை செய்யும் விதம் :** ஒரு நபர் மதுவைக் குடிக்கும் போது அது இரத்தத்தில் கலந்துவிடுகிறது. மேலும் அது உடல் முழுவதும் பரவுகிறது. மது கலந்த இரத்தம் நுரையீரலை அடையும்போது, நாம் வெளியிடும் மூச்சுக்காற்றில் மதுவின் வாசனை எடுத்துச் செல்லப்படுகின்றது. இதை சுவாசப் ஆய்வுக் கருவி அளக்கிறது. ஒரு வகையில் வெளி மூச்சுக் காற்றில் கார்பன்-டை-ஆக்சைடுடன் மதுவின் அடையாளங்களும் காணப்படும். சிறிதளவு மது இருந்தால் கூட இந்தக் கருவிகள் அதை அடையாளம் காட்டிவிடும். சுவாச ஆய்வுக் கருவியில் பதிவு செய்யப்பட்டதை அழித்துவிட்டு குடிகாரர்களுக்கு காவலர் உதவ நினைத்தாலும் முடியாது.




*படம் 22. காவலர்கள் என்ன செய்கின்றனர்?*

## குடித்துவிட்டு ஓட்டுவதற்கு தண்டனை

- குடித்தவரின் வாகனத்தை அலுவலர்கள் பறிக்கமுடியும்.
- ஓட்டுனர் நீதிமன்றத்திற்குச் சென்று விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தவேண்டும்.

## ஓட்டும் உரிமங்களை ரத்துசெய்தல்

- வட்டாரப் போக்குவரத்து ஆணையம் கீழ்கண்ட காரணங்களுகக்காக, ஓட்டுநர் உரிமத்தை தகுதியற்றதாகச் செய்யலாம் அல்லது அவர்களின் உரிமத்தை ரத்து செய்யலாம்.

    அ) ஒரு நபர் அல்லது பழக்கப்பட்ட குற்றவாளி அல்லது குடிகாரராக இருந்தால்,

SCERT TELANGANA

ஆ) ஏதேனும் மயக்க மருந்திற்கு அடிமையானவராக இருந்தால்

இ) வெளிப்படையான குற்றக்குழுவில் உள்ள வாகனங்களைப் பயன்படுத்துதல்

ஈ) அபாயகரமாக வண்டி ஓட்டுதல்

உ) வாகனங்களை பதிவு செய்யாமல் பயன்படுத்துதல்

ஊ) காவலர்களுக்குத் தேவையான ஏதேனும் தகவலை தராமல் இருத்தல்

எ) தன் வாகனத்தின் மூலம் விபத்திற்குள்ளானவர்களை அருகிலுள்ள மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லாமல் போதல்.

ஏ) காவலர்களால் கேட்கப்படும் கீழ்கண்ட சான்றிதழ்களை சமர்பிக்காவிட்டால்

- காப்பீட்டுச் சான்றிதழ்
- பதிவுச் சான்றிதழ்
- ஓட்டுநர் உரிமம்
- மாசுக்கட்டுப்பாட்டுச் சான்றிதழ் போன்றவை.

## போக்குவரத்துக் குறியீடுகள்


**1. கட்டளைக் குறியீடுகள் 2. தகவல் குறியீடுகள் 3. எச்சரிக்கைக் குறியீடுகள்**

**கட்டளைக் குறியீடுகள்-சிவப்பு வட்டம், செய்யக் கூடாததை அறிவுறுத்துகிறது**



நேராகச் செல்வது தடை செய்யப்பட்டது அல்லது உள்ளே நுழையக்கூடாது | ஒருவழிக்குறியீடுகள்-வாகனங்கள் ஒருதிசையில் தடைசெய்யப்பட்டுள்ளது | வாகனங்கள் இரண்டு திசைகளிலும் தடைசெய்யப்பட்டுள்ளது | அனைத்து வாகனங்களும் தடைசெய்யப்பட்டுள்ளது

**தகவல் குறியீடுகள் – நீலச் செவ்வகத்தில் உள்ள குறியீடு, தகவலைத் தெரிவிக்கிறது**




முதலுதவிப்பெட்டி | பொதுத் தொலைபேசி | பெட்ரோல் நிரப்பும் நிலையம் | மருத்துவமனை | ஓய்வெடுக்கும் இடம்

**எச்சரிக்கை குறியீடுகள் – முக்கோணங்களில் உள்ள குறியீடுகள் எச்சரிக்கை செய்கின்றன.**



வலப்புற வளைவு | இடப்புற வளைவு | கொண்டை ஊசி வலப்புற வளைவு | கொண்டை ஊசி இடப்புற வளைவு | வலது திருப்பு வளைவு

SCERT TELANGANA

ஒவ்வொரு வகையிலும் சில குறியீடுகள் மேலே தரப்பட்டுள்ளன. உங்கள் ஆசிரியரின் உதவியுடன் மீதமுள்ள குறியீடுகளை RTA அலுவலகத்திலிருந்தும், போக்குவரத்துக் காவலரிடமிருந்தும் சேகரித்து வகுப்பறையில் காட்சிக்கு வைக்கவும்.

## ஓட்டுநர்களுக்கு அறிவுரைகள்

- வேகமாக வரும் வாகனங்களுக்கு வலது புறத்தை விட்டுவிடவேண்டும். நாம் இடதுபுறம் செல்லவேண்டும்.
- முன்செல்லும் வாகனங்கள் இடப்பக்கமாக முந்திச் செல்லக்கூடாது.
- பாதுகாப்பான பயணத்திற்கு தலைக் கவசத்தை அணிய வேண்டும்
- கார்பன் மோனாக்ஸைடு வாயுவை குறைந்த அளவில் வெளியிடும் வாகனங்களை மட்டும் பயன்படுத்தவேண்டும்.
- தேவைப்படாத நேரத்தில் வாகனத்தில் உள்ள ஒலியைப் பயன்படுத்தக்கூடாது.
- கனரக வாகனங்களைப் பயன்படுத்துவோர் எப்போதும் இருக்கை வாரை பயன்படுத்தவேண்டும்.
- போக்குவரத்துக் குறியீடுகளை மீறக்கூடாது
- வாகனங்களை எப்போதும் நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

குமாரி என்னும் மாணவி 95% மதிப்பெண்களுடன் மேல்நிலைக்கல்வியில் தேர்ச்சி பெற்றுள்ளார். அவளுடைய தந்தை அவளுக்கு இருசக்கர வாகனத்தை பரிசாக வழங்க விரும்பினார். அவர் உள்ளூர் சாலைப்போக்குவரத்து ஆணைய அலுவலகத்திற்கு (RTA Office) வாகனப்பதிவு மற்றும் ஓட்டுநர் உரிமத்தைக் குறித்த தகவலைப் பெறச் சென்றார். அதிகாரிகளால் அறிவுறுத்தியபடி அவளுடைய தந்தை அவளை மோட்டார் ஓட்டும் பயிற்சியளிக்கும் பள்ளி ஒன்றில் சேர்த்தார். நாம் முன்பு விவரித்த தேவையான ஆவணங்களைத் தந்து அவள் முதலில் தற்காலிக உரிமத்தைப் பெற்று, அதன்பின் நிலையான உரிமத்தைப் பெற்றாள். RTA அலுவலர் முதலில் வாகனத்தை தற்காலிகமாக எவ்வாறு பதிவு செய்வது என்பதையும், அதன் பின் நிலையான பதிவினை எவ்வாறு செய்வது என்பதையும் அவளுடைய தந்தைக்கு விளக்கினார்.

## பதிவு செய்யத் தேவையானவை

எந்த ஒரு நபரும் பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனத்தை ஓட்டக்கூடாது.

## பதிவு எவ்வாறு செய்யப்படுகிறது

தற்காலிகப் பதிவு : கீழ்காணும் ஆவணங்கள் பதிவு செய்யத் தேவைப்படுகின்றன.

1. விற்பனைச் சான்றிதழ் நகல்
2. சாலைப் பயன்பாட்டுச் சான்றிதழ் நகல்
3. மதிப்புள்ள காப்பீட்டுச் சான்றிதழ் நகல்
4. மாசுக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ்
5. முகவரி ஆதாரத்திற்கான நகல்

**நிலையான பதிவு : மோட்டார் வாகனத்தை பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் தற்காலிகப் பதிவு செய்யப்படும்போது ஒப்படைக்கப்படும் சான்றிதழ்களை பதிவு செய்யும் அதிகாரிகளிடம் ஒரு மாத காலத்திற்குள் செய்து கொள்ளலாம்.**

## சாலையின் மீது குறியீடுகள்

**சாலை புறப்பரப்பின் அடையாளங்களை வழிகாட்டுதல் மற்றும் தகவல்கள் ஓட்டுநருக்காகவும் பாதசாரிகளுக்காகவும் வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகின்றன. அடையாளங்களின் சீரமைப்பு, குழப்பம் மற்றும் நிச்சயமின்மையை குறைக்க மிகவும் முக்கியமாகும்.**



SCERT TELANGANA

உங்கள் ஆசிரியரின் உதவியுடன் RTA போக்குவரத்துக் காவலர்களிடமிருந்து சாலைப் புறப்பரப்பு அடையாளங்களைச் சேகரித்து அவற்றின் பயன்களைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடு.

### சாலைகளின் பிரிவுகள்

1. நடைபாதை : நடந்துசெல்பவர்களின் பயன்பாட்டிற்காக சாலையின் இரு புறங்களிலும் போடப்படுகிறது. இது 2 மீ அகலத்தில் அமைக்கப்படுகிறது.

2. சாலை பிரிப்பான் : சிமெண்ட் பலகைகளால் சாலை இரண்டு பாதிகளாக பிரிக்கப்படுகிறது.

3. வரிக்குதிரை பட்டை : நடந்துசெல்பவர்கள் சாலையைக் கடக்கும் இடமே வரிக்குதிரைக் பட்டை ஆகும். போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள இடங்களில் இவை போடப்படுகின்றன.

### போக்குவரத்து சைகைகள்

போக்குவரத்து விளக்கு, போக்குவரத்து குறிகாட்டி, அல்லது நிறுத்துவிளக்கு என்பது ஒரு அடையாளம் காட்டும் கருவி அமைப்பு. இது சாலைகளில் பாதுகாப்பாக வாகனங்களை ஓட்ட சாலை சந்திப்பில் அமைக்கப்பட்ட போக்குவரத்து சைகைகளாகும். சாலை இணைப்புகளில் போக்குவரத்துக் குறிகாட்டிகளை பின்பற்றுங்கள். அதாவது

சிவப்பு விளக்கு : கோட்டின் முன் நிற்கவும்

ஆரஞ்சு, மஞ்சள் விளக்கு : புறப்படத் தயாராக இரு

பச்சை விளக்கு : புறப்பட்டுச் செல்



### சாலைப் பாதுகாப்பு :

உலகிலேயே மிகப்பெரிய சாலை வசதிகளில் இந்தியா இரண்டாவது இடம் வகிக்கிறது. சாலையைப் பயன்படுத்தபவர்களுக்கு போக்குவரத்து சட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் அதிகமானபேர் சாலை விபத்துகளில் மரணமடைகின்றனர்.

சாலைப் பாதுகாப்பிற்குத் தடையாக இருப்பவை :

1. ஓட்டுநர்கள் மற்றும் மக்களின் அலட்சியம்
2. சாலைகளின் பழுதடைந்த நிலை
3. பாதுகாப்பற்ற வாகன வடிவமைப்பு
4. சாலைப் பாதுகாப்பு முறைகளின் குறைபாடு
5. சட்டங்களை தகுந்த முறையில் நடைமுறைப்படுத்தாமை
6. அவசர சேவைப் பிரிவுகள் இல்லாமை

**முழக்கங்கள்**

▲ வாழு, வாழவிடு, போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்று.

▲ சாலைப் பாதுகாப்பை உறுதிபடுத்து, போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்று.

### சாலையில் நடந்து செல்பவர்களுக்கான விதிமுறைகள்:

1. நடைபாதை இல்லாவிட்டால் சாலையின் ஓரத்தில் நடந்து செல்லவும். சாலை குறுகலாக இருந்தால் எதிரே வரும் வாகனங்களை கவனித்து சாலையின் இடதுபுறத்தில் நடக்கவும்.
2. நடைபாதை இல்லையெனில் சாலையின் இடது புறத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அருகில் நடக்க வேண்டும். (எதிரே வரும் வாகனங்களை கவனித்து)
3. வீடுகள் உள்ள பகுதிகளுக்கு வெளியே நடக்கும் போது இரவில் எதிரொளிக்கும் ஆடைகளை பயன்படுத்த வேண்டும்.
4. இரவு நேரத்தில் நடக்கும்போது கைவிளக்கை எப்போதும் எடுத்துச்செல்லவும்.
5. பாதுகாப்பான இடத்தைப் பார்த்து சாலையைக் கடக்கவும் மற்றும் வாகனங்களின் ஒலியைக் கேட்டு வலது அல்லது இடது பக்கம் பார்த்துச் செல்லவும்.
6. ஏதேனும் வாகனங்கள் இருபுறங்களிலும் வருகின்றனவா என்று பார்க்கவும்.
7. சாலையில் எந்த போக்குவரத்துமின்றி தெளிவாக இருக்கும்போது சுறுசுறுப்பாக நேராக சாலையை கடக்கவும் மற்றும் நடப்பதற்கு தொடர்ந்து வாகனங்களின் வருகையை கவனிப்பது மற்றும் அவற்றின் ஒலியைக் கேட்பது அவசியம்.
8. சாலைகளைக் கடக்க வரிக்குதிரைப் பட்டைகள் உள்ள பகுதியை பயன்படுத்தவும்.
9. சாலையைக் கடக்கும் போது கைப்பேசியை எந்தவகையிலும் அதாவது பாடல்களைக் கேட்பது, பேசுவது போன்றவற்றிற்காக பயன்படுத்துதல் கூடாது.

SCERT TELANGANA



படம் 23.2 : ஆபத்தான பயணம்

**10. சாலையைக் கடக்கும்போது போக்குவரத்து காவலர்களின் உதவியை பெற்றுக்கொள்ளவும்.**

## மோட்டார் சைக்கிள்களுக்கான விதிமுறைகள்

**தற்போதைய ஓட்டுநர் உரிமம் வைத்திருத்தல் வேண்டும். ஒரு பொதுச் சாலையில் இருசக்கர வாகனத்தை அல்லது மோட்டார் சைக்கிளை பயன்படுத்தவதற்கு முன் காப்பீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சவாரி செய்பவர்கள் நன்கு பொருத்தமான மற்றும் பாதுகாப்பான தலைக்கவசங்களை அணிதல் வேண்டும். மோட்டார் சைக்கிளில் உள்ள மற்றொரு இருக்கையில் தகுந்தமுறையில் உட்காருபவரை கூட்டிச் செல்ல வேண்டும்.**

## முக்கியச் சொற்கள்

1. வாகனப்பதிவு 2. சுவாச ஆய்வுக் கருவி 3. கட்டளைக் குறியீடுகள் 4. போக்குவரத்துக் கல்வி

## உனது கற்றலை மேம்படுத்துக

1. வாகனத்தை ஓட்டும்போது, ஓட்டுநர் எடுத்துச் செல்லவேண்டிய ஆவணங்கள் யாவை? பாதுகாப்பாக வண்டியை ஓட்டுவதற்கு என்ன திறன்கள் தேவைப்படுகின்றன?(AS1)
2. யாரேனும் ஒருவர் போக்குவரத்து குறிகாட்டிகளை மீறினால் என்ன நேரும்?(AS1)
3. சாலைப் பாதுகாப்பிற்கு உங்கள் பகுதியில் பின்பற்றப்படும் நடவடிக்கைகளை கூறுக.(AS4)
4. கட்டளை, எச்சரிக்கை மற்றும் தகவல் போக்குவரத்து குறியீடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரி?(AS1)
5. கமலா ஒரு புதிய வாகனத்தை வாங்க விரும்புகிறாள். அதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஒரு வாகனத்தைப் பதிவுசெய்ய என்ன ஆவணங்களை ஒப்படைக்க வேண்டும் என்பதையும் விவரி?(AS1)
6. ராமு தன் வாகன எண்ணை மற்றொரு வாகனத்திற்கு மாற்றிக் கொள்ள விரும்புகிறார். அது சரியா? தவறா? ஏன் என்று விவரி?(AS6)
7. சாலைப் பாதுகாப்பின் தேவையை விவரி.(AS1)
8. பக்கம் 280ல் விபத்தில் ப-யானவர்கள் வயது பட்டியலை படித்து மிக அதிகமான வழக்குகள் பதிவான வயதுடையோரை கண்டறிந்து கோட்டு வரைபடம் வரைக.(AS3)
9. பக்கம் 281ல் உள்ள போக்குவரத்து இடையூறுகள் தலைப்பில் உள்ள பத்தியை படித்து உன் கருத்தை கூறுக.(AS2)

## செயல்திட்டம்

உங்கள் பகுதியில் உள்ள போக்குவரத்துக் காவலர்/சாலைப் போக்குவரத்து அதிகாரி (R.T.A)யைக் கேட்டு கீழ்காணும் தகவல்களை சேகரிக்கவும். மாதம் கிராமம்/நகரத்தின் பெயர் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை.

| தலைக்கவசமின்றி வாகனத்தை ஓட்டுபவர்கள் | ஓட்டும் உரிமம் இல்லாதவர்கள் | வாகனப் பதிவு இல்லாதவர்கள் | சாலை விதிகளை பின்பற்றாதவர்கள் | விபத்துக்குள்ளான வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | | | |

இத்தகவல்களின் அடிப்படையில் உங்கள் பகுதியிலுள்ள சாலைப் போக்குவரத்து நிலைமைகளை உங்கள் வகுப்பறையில் கலந்துரையாடவும்

SCERT TELANGANA

# Appendix

This additional information and the maps are to be used wherever necessary.

World Political Map





SCERT TELANGANA

# Asia Political Map




SCERT TELANGANA




SCERT TELANGANA

# Africa Political Map








SCERT TELANGANA

# World Outline Map





SCERT TELANGANA

# India Political Map




SCERT TELANGANA

## Telangana Outline Political Map



SCERT TELANGANA

# The new 200 rupee note

Obverse (Front)




Reverse (Back)




The Reserve Bank of India is introducing new design banknotes in the denomination of ₹200 as part of **Mahatma Gandhi(New) Series.** The new denomination has motif of the *Sanchi Stupa* on the reverse, representing the cultural diversity of India.

The base colour of the note is yellowish orange. The note has other designs, geometric patterns aligning with the overall colour scheme, both on the obverse and the reverse. The size of the new note is 66mm x 146mm.

भारतीय रिज़र्व बैंक
**Reserve Bank of India**
India's Central Bank

SCERT TELANGANA